1998

217982

# தமிழரசு



ஏப்ரல் 1-15, 1998 ரூ.3







**நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.**

**அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.**

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள். பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98


# இந்த இதழில்.


| | | |
|---|---|---|
| புத்தாண்டில் புகழ் தொடுப்போம் - கலைஞர் | .... | 2 |
| 1997-98ஆம் ஆண்டிற்குத் துணை மானியம்: சட்டப் பேரவையில் முதலமைச்சர் கலைஞர் | .... | 3 |
| விவசாயிகளுக்கு நடப்பாண்டில் நிலவரி ரத்து: நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு | .... | 4 |
| ஆவண மகாத்மியம் - எம்.எஸ்.பாண்டியன் | .... | 10 |
| நாம் என்னும் அறம் - கவிஞர். எழிற்பித்தன் | .... | 16 |
| முரசொலி - பி.எல்.ராஜேந்திரன் | .... | 18 |
| தொழில் முனைவோர் திட்டம் - ந.முருகன், இ.ஆ.ப., | .... | 24 |
| பொருளாதாரப் பின்னணியில் பெண்கள் | ..... | 27 |
| நூலகமும் எழுத்துலகமும் - மூவேந்தர் முத்து | ..... | 33 |
| எங்கள் ஊர்ப் பிரச்சினை | ..... | 36 |
| தொழுநோயற்ற உலகை உருவாக்குவோம் | ..... | 39 |
| அமானுடன் - பிரபஞ்சன் | ..... | 43 |


Verified By


**தமிழரசு**
திருவள்ளுவர் ஆண்டு 2029
பங்குனி - சித்திரை
ஏப்ரல் 1-15, 1998
மலர் - 28, இதழ் 19
விலை ரூ.3.


### திருக்குறள் - 1

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

அகரம் எழுத்துக்களுக்கு முதன்மை; ஆதிபகவன், உலகில் வாழும் உயிர்களுக்கு முதன்மை.

(கலைஞர் உரையிலிருந்து)



சமதர்மச் சமுதாயம் தழைத்திட

# இந்தத் தமிழ்ப் புத்தாண்டு இனிய துணையாக இலங்கட்டும்

## முதலமைச்சர் கலைஞர் வாழ்த்து



14.4.98 தமிழ்ப்புத்தாண்டு திருநாள். உற்றார் உறவினர் சூழ - உவகை மிகுதியுடன் - தமிழ்ச் சமுதாய மக்கள் அனைவரும் இணைந்து கொண்டாடி மகிழும் இனிய திருநாள், இந்நாள். இந்நன்னாளில் - பரிதியொளி போலப் பார்முழுதும் பரவி வாழும் தமிழ் மக்கள் அனைவருக்கும், தமிழக அரசின் சார்பில் என் இதயங்கனிந்த தமிழ்ப்புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைகிறேன்.

புத்தாண்டு பிறக்கிறது என்றால், அத் திருநாளில், கடந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகளை நினைத்துப் பார்த்துக் கணக்கிட்டு - அடைந்த வளர்ச்சியை மதிப்பிட்டு - பிறக்கும் புத்தாண்டில் அடையவேண்டிய இலக்குகளைக் கருதி ஆற்ற வேண்டிய பணிகளைத் திட்டமிடுவது - குடி மக்களின் நலன்நாடும் அரசுக்கு உரிய இன்றியமையாத கடமை ஆகும்.

அந்த வகையில், தமிழ்நாடு அரசு தமிழகத்தின் மேம்பாட்டிற்காக முந்தைய ஆண்டுகளைப் போலவே பலரும் பாராட்டும் வகையில், இந்த ஆண்டிலும் பல்வேறு திட்டங்களை வகுத்து, அவற்றைத் தீவிரமாகச் செயல்படுத்திட முனைந்துள்ளது. அத்திட்டங்கள் அனைத்தும், கடந்த ஆண்டுகளைப் போல இயற்கைச் சீற்றங்களால் இன்னல் படாமல் - சூதுமதியாளர்கள் உருவாக்கும் செயற்கைச் சீற்றங்களால் சிதைவுபடாமல் - எண்ணிய எண்ணியாங்கு இயற்றப்படுவதன் மூலம் - இலக்குகள் முழுவதுமாய் எய்திடப் பெற்று,

தமிழக மக்கள் மேன்மை பெற,

தமிழகம் இந்திய மாநிலங்களில் முதன்மைபெற

சாதி, மத, மொழி, இன வேறுபாடுகளின்றி - குறிப்பாக மதவெறி உணர்வுகள் மங்கி - சமத்துவ நெறிகள் தழைத்து - சமதர்மச் சமுதாயம் மலர்ந்திட - தமிழக மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கும் உன்னத நிலை தொடர்ந்திட இந்தத் தமிழ்ப் புத்தாண்டு - இனிய துணைவனாய் நமக்கு இலங்கட்டும்

### முதலாம் பக்க அட்டையில் ...

மத்தியில் புதிய அரசு அமைந்தபின் - மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களையும் மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு. அத்வானி அவர்களையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 7.4.98 அன்று நேரில் சந்தித்து உரையாடினார்.

புதுடில்லியில் நடைபெற்ற இச் சந்திப்பின் போது -

- காவிரிப் பிரச்சினை குறித்து மத்திய அரசு தயாரித்த செயல் திட்டத்தை அரசிதழில் வெளியிட்டு, நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்த வகை செய்ய வேண்டும்.
- தமிழகத்தில் அமலில் உள்ள 69 சதவிகித இடஒதுக்கீட்டிற்குக் குடியரசுத் தலைவரும் ஒப்புதல் அளித்திருந்தும் - அதை எதிர்த்துத் தாக்கல் செய்யப் பட்டுள்ள வழக்குகளில் மத்திய அரசு தீவிரமாக வாதிட வேண்டும்.
- கச்சத்தீவு விவகாரத்தில் இந்திய மீனவர்களுக்கு இருந்த பாரம்பரிய உரிமையைக் காக்கவேண்டும்.
- தமிழகத்தில் கூடுதலாக 2,307 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய உதவ வேண்டும். சென்னையை அடுத்த செய்யூரில் தொடங்கப்பட உள்ள மின் உற்பத்தி நிலையத்தை நிறுவ உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். கிழக்கு மின் தொகுப்பிலிருந்து உபரி மின்சாரத்தைக் கடப்பை வழியே திருப்பெரும்புதூருக்குக் கொண்டு போக உதவ வேண்டும்.
- சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். - என்றெல்லாம் பிரதமரிடம் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

### கடைசிப்பக்க அட்டையில் ...

நாட்டு நலப் பணிகளில் கலைஞர் அரசுக்குள்ள அக்கறையைச் சித்தரிக்கும் படம்.



# 1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.1242.71 கோடிக்குத் துணை மானியம்: சட்டப்பேரவையில் முதலமைச்சர் தாக்கல் செய்தார்

1997-98ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையை ரூ.1242 கோடியே 71 இலட்சத்துக்குச் சட்டப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.3.98 அன்று தாக்கல் செய்து உரையாற்றினார்.

1997 98ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளைச் சட்டப் பேரவையில் நேற்றுத் தாக்கல் செய்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு:-.

"1997-98ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை மன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூபாய் 1242 கோடியே 71 இலட்சம் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில், ரூபாய் 913 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூ329 கோடியே 71 இலட்சம் மூலதனம் மற்றும் கடன் கணக்குகளில் அடங்கும்.

இந்த மானியக் கோரிக்கைகளில் இடம்பெறுகின்ற சில முக்கியமான திட்டங்கள், திட்டப்பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

"மானியக் கோரிக்கை 8 - தேர்தல்கள்" என்பதன் கீழ் நாடாளுமன்றத் தேர்தல் குறித்த செலவுக்குக் கூடுதலாக ரூபாய் 51 கோடியே 60 இலட்சம் இந்தத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

### காவல்துறைக்குக் கூடுதல் நிதி

"மானியக் கோரிக்கை 15-காவல் துறை" என்பதன் கீழ் சிவகாசியில் தமிழ்நாடு சிறப்புக் காவல்படையின் புதிய பிரிவை ஏற்படுத்தவும், 12 புறக்காவல் நிலையங்களை, முழுநிலைக் காவல் நிலையங்களாக நிலை உயர்த்தவும் ரூபாய் 16 கோடியே 81 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கம் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

"மானியக்கோரிக்கை 18-மருத்துவம்" என்பதன் கீழ் மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் வரும் அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் நிறுவனத்தின் மூலம் மருந்துகள் மற்றும் அறுவைச் சிகிச்சைப் பொருட்கள் வழங்க ரூபாய் 7 கோடியே 1 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சில அரசு மருத்துவ மனைகளில் "கோபால்ட்" முறை மருத்துவப் பிரிவு சாதனங்கள் வாங்குவதற்காக ரூபாய் 3 கோடியே 49 இலட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)




217982

V2 N7 A 1178 22 17-24

# விவசாயிகளுக்கு நடப்பாண்டில் நிலவரி ரத்து செய்யப்படுகிறது

## நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து முதலமைச்சர் - கலைஞர் அறிவிப்பு

சட்டப்பேரவையில் 6.4.98 அன்று நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை நிகழ்த்தினார். கலைஞர் அவர்கள் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதி வருமாறு :-

சமூகநீதி - இந்த ஆண்டு சுதந்திரப் பொன்விழா ஆண்டு என்ற காரணத்தினாலும் மொழிக் காவலர்கள் - தேசத் தியாகிகள் இவர்களையெல்லாம் கௌரவிப்பதற்காக அவர்களுக்கு ஓய்வூதியத் தொகையை ரூ.3,000 என்றும் அவர்களுடைய வாரிசுகளுக்கு ரூ.1,500 என்றும் ஆக்கியுள்ளதையொட்டி - சமூக நீதிக்காகப் போராடியவர்களுக்கும் அவர்களுக்குரிய மரியாதையை சமூகநீதி அரசான திராவிட முன்னேற்றக் கழக அரசு தரும் என்பதற்கு அடையாளமாகத்தான் அவர்களுக்கு 1 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தேன்.




### சமூகநீதிக் காவலர்களுக்கான தொகை உயர்வு

1987ஆம் ஆண்டு அவர்கள் இந்தப் போராட்டத்திலே தங்களுடைய உயிரைத் தந்தார்கள். அதற்குப்பிறகு அவர்களுக்கு அந்தத் தொகை கிடைக்காத காரணத்தால் அந்தத் தொகை வரவேண்டும் என்பதற்காக ஒரு சிலர் வழக்குப் போட்டிருக்கிறார்கள். நான் இதை இங்கே அறிவிக்கும்போது எனக்கே அந்தத் தகவல் தெரியாது. அந்த வழக்கு நீதிமன்றத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது வேறு விவகாரம். இருந்தாலும் நான் அறிவித்தபிறகு அதிகாரிகளைக் கூப்பிட்டு உடனடியாக ஆணை பிறப்பித்து அந்தத் தொகையை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது ஒரு கோப்பு வந்தது.



அந்தக் கோப்பில், அந்த வழக்கு விவரங்கள் எல்லாம் இருந்தன. "அவர்கள் வழக்குப் போட்டுத்தானா பணம் பெறவேண்டும்? அந்த வழக்கை எதிர்த்து இன்னொரு வழக்காடுவதா?" என்றெல்லாம் கேட்டுவிட்டு, அவர்களுக்கு 1 இலட்சம் ரூபாய் என்று இருப்பதை - இதுவரையில் எனக்குக் கிடைத்த பட்டியலில் ஒரு இருபது பேர்களுடைய பெயர்கள்தான் வந்திருக்கிறது. மற்ற பெயர்களையெல்லாம் நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய எம்.எல்.ஏ.க்கள் - I, II இரு எம்.எல்.ஏ.க்களும் இதில் ஒன்றாக இருந்து - இரண்டும் ஒன்றாக இருந்து அந்தப் பெயர்களையெல்லாம் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனவே, மொழிக் காவலர்கள் - தேசத் தியாகிகள் என்ற பட்டியலில் இந்த சமூகநீதிக் காவலர்களும் சேர்க்கப்பட்டு அவர்களுடைய குடும்பத்திற்குத் தலா 3 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்துக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல; இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டு இன்னுயிர் ஈந்த தியாகிகளின் வாரிசுதாரர்களுக்குச் சுதந்திரப் போராட்ட தியாகிகளைப் போலவும், மொழிப்போர்த் தியாகிகளைப் போலவும், சமநிலையிலே கருதி குடும்ப ஓய்வு நிதியாக மாதம் ரூ.1,500 வழங்குவதென்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் தொகை - 98-99ஆம் ஆண்டில் முதன்முதல் இந்தத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காகச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளுக்கு ரூ.25 இலட்சம் வீதம் ஒதுக்கப்பட்ட தொகை 58.75 கோடி ரூபாயாகும். நிதிநிலை அறிக்கையின்பொழுது இத் தொகையினைப் பல உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க தொகுதிக்கு 25 இலட்சம் என்பதை 30 இலட்ச ரூபாயாக உயர்த்தி அறிவித்தேன். ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையிலே 526 கோடி ரூபாய் இறுதிப் பற்றாக்குறையாக இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறேன்,



### சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுக்கான நிதி உயர்வு

"இவ்வளவு பற்றாக்குறை; இவ்வளவு பற்றாக்குறை" என்று திருநாவுக்கரசிலிருந்து, சுப்பராயனிலிருந்து, பழனிச்சாமியிலிருந்து, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரிலிருந்து அவ்வளவு பேரும் பற்றாக்குறை; பற்றாக்குறை என்று தங்களுடைய கவலையைத் தெரிவித்திருக்கின்றீர்கள். ஆனால் உங்களுக்கு வேண்டு மென்கிறபோது மாத்திரம் எல்லோரும் சேர்ந்து கைதட்டுகிறீர்கள்.

இதிலே, "சென்னையிலே தொகுதிக்கு நான் 36 இலட்சம் ரூபாய் கொடுக்கிறேன். நான் 36 இலட்சம் கொடுத்தால் முதலமைச்சர் எவ்வளவு கொடுக்க வேண்டும்?" என்று மேயர் ஸ்டாலின் கேட்டார்.



ஏற்கெனவே நாடாளுமன்றத்திற்கு 1 கோடி ரூபாய் தரப்படுகிறது. அஃதன்னியில், சட்டமன்றம் சார்பாக நாம் தருகிறோம். இரண்டையும் நீங்கள் கூட்டிப் பார்க்கவேண்டும். சென்னைக்கு இவ்வளவு கொடுப்பதால் சென்னைக்கு நாம் தொகையை ஒதுக்கலாமா - வேண்டாமா? என்கிற எண்ணம்கூட எனக்கு ஏற்பட்டிருக்கிறது, சென்னைக்குத் தாராளமாக வழங்கப்படுகிற காரணத்தால்!

இருந்தாலும்கூட அதை மன்னித்து வேறு வழியில்லாத காரணத்தால் - நீங்களும் கேட்டுவிட்ட காரணத்தால் - 30 இலட்ச ரூபாய் என்பதை 35 இலட்ச ரூபாய் என்று வழங்குகிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

என் நிலைக்கு இறங்கி - கருணாநிதி நிலைக்கு இறங்கி அல்ல; நிதிநிலைக்காக இறங்கி இதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.



வரிகள் குறைக்கப்பட்டிருப்பது பற்றியும் - வரிகள் விலக்கப்பட்டதைப் பற்றியும் அனைவரும் பேசியிருக்கிறீர்கள். நம்முடைய சி.பி.எம்.கட்சியினுடைய உறுப்பினர் மணி அவர்கள் அதைப் பெரிதும் பாராட்டிவிட்டு - ஏழை எளிய மக்களுக்காகச் செய்த நல்ல காரியங்களையெல்லாம் பாராட்டிவிட்டு ஆக்கபூர்வமான பல கருத்துக்களை எடுத்துவைத்தார். அவரைப்போலவே இங்கு உரையாற்றிய அத்தனைப் பேரும் - தங்களுடைய தொகுதிகளின் குறைகளை அக்காள் (உறுப்பினர் ஏ.எஸ்.பொன்னம்மாள்) போன்றவர்கள் எடுத்துக்காட்டினாலும்கூட, அதே நேரத்தில் அவ்வளவு பேரும் இன்னும் சில வரிகளைக் குறைக்க வேண்டும் என்ற கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

### செயற்கை இழை நூலுக்கான விற்பனைவரி குறைப்பு

அதிலும் குறிப்பாக, நிதிநிலை அறிக்கையிலே செயற்கை இழை நூலுக்கும் மற்றும் செயற்கை இழைக்கும் (Manmade fibre and yarn) விற்பனை வரி எட்டு சதவிகிதத்திலிருந்து இரண்டு சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது என்றும், ஆனால் கடந்த ஆண்டு எதிர்பார்த்ததற்கு மாறாக வரி வசூல் குறைந்துவிட்ட காரணத்தால் - விற்பனை வரி மீண்டும் 8 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது என்றும் அறிவித்தேன்.

இதை அறிவித்த உடனேயே நம்முடைய சொக்கர் அவர்கள் அவை முடிந்து வெளியே செல்லும் நேரத்திலேயே - நீங்கள் சரியாகக் கணக்குப் பார்க்கவில்லை என்று தெரிகிறது, சரியாகப் பேசுங்கள் என்றார்; தொடர்ந்து சுதர்சனம் எம்.எல்.ஏ. பேசும்போதும் - ஜி.பழனிச்சாமி பேசும்போதும் . ஐ.கணேசன் பேசும்போதும் - சுப்புலட்சுமி ஜெகதீசன் ஒரு கடிதம் மூலமாகவும் இந்த விவரங்களை எனக்குத் தெரிவித்து அதனடிப்படையில் இதை ஆராய்ந்த வகையில் இந்த விளக்கத்தைத் தர விரும்புகின்றேன்.

1997-98ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டம் ஆகிய இரண்டையும் சேர்த்துப் பார்க்கும்போது - இதில் முந்தைய ஆண்டைவிட, ஐம்பது இலட்சம் ரூபாய் குறைவாக இருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

ஆனால் - மாநிலங்களுக்கிடையேயான விற்பனைத் தொகை கணிசமாக உயர்ந்துள்ளது.

இந்தப் பிரிவிலே அதிகமாக வரி செலுத்தும் நிறுவனமாகிய - சவுத் இந்தியா விஸ்கோஸ் - 97-98ஆம் ஆண்டில் பெரும்பகுதி உற்பத்தி மேற்கொள்ளாத காரணத்தால் - விற்பனை வரியில் முழு அளவு எய்தவில்லை என்றும் அறியப்படுகிறது.

மேலும் இந்த ஆண்டு உற்பத்தி தொடர்பாக உச்சநீதி மன்றம் அனுமதி அளித்துள்ள காரணத்தினால், இந்தப் பிரிவில் கூடுதல் வரி வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது.

எனவே, முன்னர் இருந்த வருவாய் நிலையை எட்ட இந்த ஆண்டு வாய்ப்பு இருப்பதால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இரண்டு சதவிகித

வரியையே மேலும் ஒரு ஆண்டிற்குத் தொடர்ந்து அமல் செய்ய இந்த அரசு முடிவு எடுத்துள்ளது.

**கொப்பரையுடன் தேங்காய்க்கும் வரிக்குறைப்பு!**

தேங்காய் - கொப்பரை இதிலே ஒரு குழப்பம். தேங்காய்க்கும், கொப்பரைக்கும் இரண்டுக்குமா? அல்லது கொப்பரைக்கு மாத்திரமா என்று. ஆங்கிலத்திலே கொப்பரை என்று மாத்திரம் அச்சடித்துவிட்டார்கள். ஆனால் தேங்காய் இல்லையா என்று ஒரு சந்தேகம் வந்தது. எனவே தேங்காய்க்கும் உண்டு - கொப்பரைக்கும் உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே தேங்காய் என்பதற்கு பக்கத்திலே 'கமா' இல்லாததாலும் நான் சொன்னதுபோலவே ஆங்கிலத்திலேயே கொப்பரை என்று மாத்திரம் இருந்ததாலும் இந்த வரிக் குறைப்பு கொப்பரைக்கு மட்டுமா? தேங்காய்க்கும் பொருந்துமா? என்ற சந்தேகத்தைப் போக்கும் வகையில், இந்த வரிக்குறைப்பு கொப்பரைக்கு மட்டுமல்லாமல், தேங்காய்க்கும் உண்டு என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

மேலும் நிதிநிலை அறிக்கையிலே - நம் மாநிலத்திலேயே விற்பனை செய்யும் தேங்காய் மற்றும் கொப்பரைக்குத்தான் வணிக வரி 1 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து - தேங்காய் வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்களின் கோரிக்கையின் அடிப்படையில் வெளிமாநிலங்களுக்கு விற்கப்படும் தேங்காய் கொப்பரை வரி விகிதமும் 2 சதவிகிதத்திலிருந்து ஒரு சதவிகிதமாகக் குறைக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவரும் மற்றவர்களும் வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கும் எண்ணெயோடு பருத்தி எண்ணெயும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்று கேட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜி.சம்பத், சொக்கர், ராஜ்குமார் மன்றாடியார் போன்றவர்களெல்லாம் இதை வலியுறுத்தி எனக்குக் கடிதங்கள்கூடக் கொடுத்திருக்கிறார்கள்.

**பாமாயிலுக்கும் வரிவிலக்கு**

சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் இதோடு பாமாயிலும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இதை அரசாணையில் விட்டுவிட்டதாக எனக்குத் தகவல். பாமாயிலும் சேர்த்துக் கொள்ளப்படலாம்; மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்








அனைத்திற்கும் வரி விலக்கு அளிக்கப்படுகிறது என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருந்தேன்.

இந்த வரி விலக்கானது இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இதுவரை அளிக்கப்படாத சலுகையாகும்.

இதைக் கண்டித்துத்தான் தாமரைக்கனி போன்றவர்கள் பட்ஜெட் கண்டனக் கூட்டம் நடத்தப்போகிறார்கள் என்று நினைக்கிறேன்.

இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் - சமையல் எண்ணெய்க்குக் கர்நாடகாவில் 5 சதவிகித வரியும், கேரளாவிலும் ஆந்திராவிலும் 9 சதவிகித வரியும் தற்போது வசூலிக்கப்படுகிறது.

பருத்திக் கொட்டையிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய், அரிசி தவிட்டிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் ஆகியவைகளுக்கும் வரி விலக்கு அளிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, அந்த இரண்டு எண்ணெய்களுக்கும் முழுவிலக்கு அளிக்கப்படுகிறது.

நிதிநிலை அறிக்கையில் - வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கு வரி 16 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும் - முத்திரைச் சின்னம் இடப்பட்ட பிற மசாலாப் பொடிகளுக்கு 16 சதவிகிதத்திலிருந்து 11 சதவிகிதமாகவும் வரி குறைக்கப்படும் என்று அறிவித்திருந்தேன்.

மசாலாப் பொடிகள் சிறு தயாரிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் வெளியிட்ட விளம்பரத்தில் - சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலே 91ஆம் ஆண்டிலிருந்து தாங்கள் வரி கட்டவில்லை என்று குறிப்பிட்டு இருக்கின்றார்கள்.

இதற்குப் பரிந்துரை செய்தவர்கள் - டி.சுதர்சனம், ஆர்.ஆர்.சேகரன், எஸ்.என்.பாலசுப்பிரமணியம், ஞானசேகரன், ராஜ்குமார் மன்றாடியார், ஈஸ்வரன் மற்றும் பேராசிரியர் தீரன் ஆகியோர்களெல்லாம் பரிந்துரை செய்து பேசியிருக்கிறார்கள்.

ஆனால், கடந்த 97ஆம் ஆண்டு உயர்நீதி மன்றம் பிறப்பித்திருக்கின்ற ஆணையில் முத்திரைச் சின்னம் உள்ள மசாலாப் பொடிகளுக்கு 16 சதவிகிதம் வரி செலுத்த வேண்டுமென்று தெரிவித்து இருக்கின்றது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த 16 சதவிகித வரியைத்தான் நிதிநிலை அறிக்கையிலே 11 சதவிகிதமாகக் குறைத்து நான் அறிவித்திருந்தேன்.

**மசாலாப் பொடிகளுக்கு வரிக்குறைப்பு**

எனினும், இந்த மசாலாப் பொடிகளுக்கு வரியைக் குறைக்க வேண்டுமென்று உறுப்பினர்கள் பலரும், அதன் உற்பத்தியாளர்களும், பொதுமக்களும் வைத்த கோரிக்கையை ஏற்று - வணிகச் சின்னம் உள்ள மசாலாப் பொடிகளுக்கு 4 சதவிகிதம் என்றும் - வணிகச் சின்னம் இல்லா மசாலாப் பொடிகளுக்கு 2 சதவிகிதம் என்றும் வரிக் குறைப்பு செய்யப்படுகின்றது.

**சொட்டு நீலம் - சலவை வெளுப்பான்: வரிக்குறைப்பு**

சலவைக்குப் பயன்படுத்தப்படும் - கையினால் செய்யப்படும் சொட்டு நீலத்திற்கும், வணிகச் சின்னம் கொண்டுள்ள பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சொட்டு நீலத்திற்கும் ஒரே விற்பனை வரி விதிக்கப்படுகிறது.

இதுகுறித்து பேராசிரியர் தீரன், செங்கை சிவம் ஆகியோர் இந்த அவையிலே கோரிக்கை எழுப்பினார்கள். கோரிக்கையை ஏற்று சலவைத் தொழிலாளர்கள் பயன்படுத்தும், கையினால் செய்யப்படும் சொட்டு நீலம் உட்பட சலவை வெளுப்பானுக்கு (Handmade Laundry Brightner) வரி 16 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பொட்டு விஷயம் -

நிதிநிலை அறிக்கை வெளியிட்ட பிறகு பொதுவாக விமர்சித்த கட்சிகளின் தலைவர்கள் சிலரும் மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரும் விவசாயிகள் பிரச்சினைபற்றிச் சொல்லவேயில்லை என்றார்கள். எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. இந்த 49 பக்க நிதிநிலை அறிக்கையில் ஏறத்தாழ 25 பக்கங்களாவது விவசாயிகளை அடிப்படையாகக் கொண்டுதான் பல திட்டங்கள் தீட்டப் பட்டிருக்கின்றன.

**விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியது கழக ஆட்சி**

இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயே முதன்முதலாக இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்குகின்ற ஒரேயொரு ஆட்சி அதை அறிமுகம் செய்த ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். அதையெல்லாம் சொல்லிவிட்டு - இதையெல்லாம் செய்யவில்லையே என்று சொல்லியிருக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு - விவசாயிகளுக்கு ஒன்றுமே இல்லை.






விவசாயிகளைக் கைவிட்டுவிட்டார்கள் என்று சிலர் பேசியது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. வேதனையாகவும் இருந்தது.

மத்திய அரசு நிர்ணயித்துள்ள நெல்விலைக்கு மேல் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.35 இடைநிரப்புத் தொகையாக விவசாயிகளுக்குத் தமிழகத்திலே வழங்கப்படுகின்றது. அந்தக் காலத்தில் இதைப் போனசாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள் - அப்போது ஜெகஜீவன்ராம் மத்திய உணவு அமைச்சராக இருந்தபோது - நான் அவரிடம் சென்று கேட்டேன் - "அதிக விலை கொடுக்க வேண்டும்" என்று, அதற்கு அவர் "அப்படி கொடுக்க இடமில்லை" என்று கண்டிப்பாகத் தெரிவித்தார். பிறகு நான் அவரிடம் கட்டாயமாகத் தமிழகத்திற்கு தந்துதான் ஆகவேண்டும் என்று வலியுறுத்தியபோதுதான், அவர் எனக்கு வழிசொல்லிக் கொடுத்தார். அந்த வழிதான் இது. "நீ போனஸ் என்று கொடுக்காதே; வண்டி சத்தம், வாடகை என்று சொல்லி கொஞ்சம் அதிகத் தொகையை உயர்த்திக் கொடு பிரச்சினை வராது" என்று சொன்னார். அப்போது ஆரம்பித்ததுதான் இது - திமுக.ஆட்சியில்.

அந்த அடிப்படையில் இன்றைக்கு குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாய் வழங்கப்படுகிறது.

விவசாயிகளின் நலன் கருதி நெல்லைக் கொள்முதல் செய்யும்போது - தரக்கட்டுப்பாடு 15 ரூபாயிலிருந்து 5 ரூபாயாக - குவிண்டால் ஒன்றுக்குக்குறைக்கப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

**நெல் கொள்முதலிலும் சிறப்புச் சலுகை**

நெல்லைக் கொள்முதல் செய்யும்போது இதுவரை 18 சதவிகிதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லை மட்டுமே கொள்முதல் செய்யலாம் என்று இருந்தது. விவசாயிகளின் நெல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு 20 சதவிகிதம் ஈரப்பதம் இருந்தாலும் அதனைக் கொள்முதல் செய்யலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

விவசாயிகள் விளைபொருளை விற்பனை செய்வதில் பாதிப்புக்கு ஆளாகாமல் இருக்க வேண்டுமென்பதற்காக 926 நேரடி கொள்முதல் நிலையங்கள் இந்த ஆண்டு ஏற்படுத்தினோம். எந்த ஆண்டுமே இவ்வளவு கிடையாது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

உலக வங்கி நிதிஉதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கு வரும் ஆண்டில் ரூ.82 கோடியும், வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.9.85 கோடியும் வரும் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

டிசம்பர் 96-இல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது 10,05,166 விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு, 47 கோடியே 98 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் விளைபொருள் இழப்பீட்டுத் தொகையாகத் தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.



நவம்பர் 1997-இல் ஏற்பட்ட வெள்ளச் சேதாரங்களுக்கான நிவாரண நிதியாக 58.95 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

இரண்டரை இலட்சம் கரும்பு விவசாயிகள் பயனடையும் வகையில், குறைந்தபட்ச விலையாக ஒரு டன் கரும்பிற்கு ரூ.660 எனவும், சர்க்கரை ஆலைகளால் வழங்கப்படும் ரசமானியம், வாகன வாடகை மானியம் ரூபாய் 35யையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், கரும்பு விவசாயிகளுக்கு ஒரு டன்னுக்குக் குறைந்தபட்சம் ரூ.695-ம், அதிகபட்சம் ரூ.881-ம் ஆக சராசரியாக ரூ.765-ம் கிடைத்திட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.



ஆயிரம் ரூபாய் என்று சொன்னீர்களே என்று கேட்டால், ஐந்து ஆண்டுகள் இன்னும் முடியவில்லையே! திமுக ஆட்சியில் கரும்புக்கு விலை ஆயிரம் ரூபாய் தருவோம் என்று சொன்னோம். ஆயிரம் ரூபாய் வேண்டுமென்றால் ஐந்து ஆண்டுகள் முடியட்டும். முடிய விடுங்கள்.

காவிரி டெல்டா பகுதிகளில் - குறிப்பாக தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் பாசன வாய்க்கால்களில் நீர்ப்போக்கிற்கு இடையூறாக உள்ள காட்டாமணிச் செடியினை அகற்ற 2,384 ஹெக்டேர் பரப்பில் களைக்கொல்லி தெளித்து காய்ந்த இலைகளை அகற்றி எரிக்கப்பட்டது. இதற்காக ரூ.102.13 இலட்சம் செலவிடப்பட்டது.

**காவிரிப் பாசன வாய்க்கால்களைத் தூர்வார 20 கோடி ரூபாய்**

நீண்ட காலமாகக் கிடப்பிலே போடப்பட்டிருந்த காவிரி பாசன வாய்க்கால்கள் தூர் வாரும் பணிகள் நடப்பாண்டில் பத்து கோடி ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் மிக நேர்த்தியாக நடைபெற்றுள்ளன. வரும் ஆண்டிலும் அதற்காக இருபது கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு மேட்டூர் அணையிலிருந்து நீர் திறந்துவிடப்படுவதற்கு முன்னர் பணிகள் முடிக்கப்படவுள்ளன. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

சென்னை, மதுரை, பொள்ளாச்சி மற்றும் திருச்சி ஆகிய நான்கு மண்டலங்களிலுள்ள 200 ஏரிகளில் தூர்வார 19.91 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, முதுகுளத்தூர் ஆகிய பகுதிகளில் ஆண்டாண்டுகளாக வறண்டு கிடந்த 22 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெற ரூ.7½ கோடி நிதி ஒதுக்கி ஆணையிடப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

**விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலி அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது**

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வயதின் அடிப்படையில் வழங்கப்படும் ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

சரி - போதாது பழனிச்சாமி அவர்களுக்கு - இன்னும் என்ன என்று கேட்கிறார்கள். அது தெரிந்துதான் இதைச் சொல்ல விரும்புகிறேன், இருக்கின்ற கஷ்டங்களுக்கிடையே!



கடந்த பருவகாலத்தில் பெருமழை பெய்ததால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனைக் கருத்திலே கொண்டு - அவர்களுக்கு நிவாரணமாக இந்த ஆண்டுக்கான நிலவரி முழுவதும் ரத்து செய்யப்படுகின்றது. இது தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்குப் பொருந்தும்.

இதனால் இந்த ஆண்டு அரசுக்கு இழப்பு 43 கோடியே 33 இலட்சம் ரூபாய். சிலபேர் ஏமாந்துபோய் நிலவரியைச் செலுத்திருக்கிறார்கள்.

அப்படி ஏற்கெனவே இந்த ஆண்டுக்குரிய நிலவரியைச் செலுத்தியவர்களுக்கு - அவர்கள் செலுத்திய தொகை பற்றுவைக்கப்பட்டு, அவர்கள் அடுத்த ஆண்டு செலுத்த வேண்டிய நிலவரிக்காக ஈடுசெய்யப்படும்.

**நபார்டு வங்கியுடன் முந்தைய அரசு செய்த ஒப்பந்தம்**

இதைத்தவிர, கூட்டுறவு வங்கிக்கடன் - (எதிர்பார்க்க வேண்டாம். இயலாமையைச் சொல்லப்போகிறேன்) விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் தாங்கள் பெற்றுள்ள கடன்களின் மீதான இந்த ஆண்டுக்கான வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதனை அரசு பரிசீலித்தது.

1994-ஆம் ஆண்டு - கடந்த ஆட்சியிலே மாநில அரசு நபார்டு வங்கியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி இத்தகைய வட்டியைத் தள்ளுபடி செய்ய வழியில்லை. அப்படி 94-ல் நபார்டு வங்கியுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அப்படி நபார்டு வங்கியின் ஒப்பந்தத்தை மீறி வட்டியை நாம் தள்ளுபடி செய்தால், நபார்டு வங்கி வரும் ஆண்டிலிருந்து எந்த நிதி உதவியையும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும் அளிக்காது. இதுதான் ஒப்பந்த ஷரத்து.



நான் நேற்று முன்தினம் இங்கே முதலமைச்சர் அறையிலே உட்கார்ந்து கொண்டு இங்கிருந்து நபார்டு நிறுவனத்திற்குப் பலமுறை அதிகாரிகள் மூலமாக போன் செய்து தொடர்பு கொண்டோம். அமைச்சர்கள் எல்லாம் உட்கார்ந்து - நான், தலைமைச் செயலாளர், உணவுத்துறை செயலாளர், வேளாண்மைத்துறை அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர், உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் இவ்வளவு பேரும் உட்கார்ந்துகொண்டு பலமுறை போன்செய்து அவர்களிடம் தொடர்பு கொண்டபோது நிச்சயமாக முடியாது என்று அவர்கள் மறுத்துவிட்டார்கள். அதை மீறி வட்டியைத் தள்ளுபடி செய்தால் நபார்டு வங்கி வரும் ஆண்டிலே எந்த நிதி உதவியும் மாநில கூட்டுறவு வங்கிகளுக்குத் தராது. இது 94ஆம் ஆண்டு போட்ட ஒப்பந்தத்தின் ஷரத்து.

**குறுகியகாலக் கடன்கள் மத்தியகாலக் கடன்களாகிறது**

இந்த ஆண்டு வட்டியை மாத்திரம் தள்ளுபடி செய்ய அனுமதிக்க வேண்டும் என்று வங்கித் தலைவருடன் தமிழக அரசின் மூத்த அதிகாரிகளை விட்டுப் பேசச் செய்தேன். எனினும் அவர்கள் இசையவில்லை. எனவே, வேறுவழியின்றி - தமிழக அரசின் அதிகக்கேற்ற வகையில், விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாகவும், மத்திய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாகவும் மாற்றி அமைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

நீண்டகாலக் கடன்களுக்கும் இதுபோன்ற கால நீட்டிப்பு வழங்கப்படும். இதனால் விவசாயிகள் அபராத வட்டி சுமார் ஐம்பது கோடி ரூபாய் செலுத்தவேண்டிய அவசியம் ஏற்படாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று - அன்றைக்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.திருவேங்கடம் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்; சர்க்கரை ஆலைகள் விவசாயிகளிடம் இருந்து கரும்பை எடுக்காத காலகட்டத்தில் - விவசாயிகளே தாங்கள் விளைவித்த கரும்பினை அரவை செய்வதற்கு - தங்களுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பினைப் பயன்படுத்துகிறார்கள். இதற்காக மின் இணைப்பு வைப்புத் தொகையாக ரூபாய் ஐந்தாயிரமும் - ஒரு யூனிட் மின்சாரத்திற்கு ஐந்து ரூபாய் என்றும், கரும்பு விவசாயிகளிடம் தற்போது வசூலிக்கப்பட்டு வருவதாக அவையிலே உறுப்பினர் கலசப்பாக்கம் பெ.சு.திருவேங்கடம் தெரிவித்தார். இந்தக் கோரிக்கை மேலும் பல விவசாயிகளிடம் இருந்து அரசுக்கு வந்துள்ளது.

**மின் இணைப்பு வைப்புத்தொகை குறைப்பு**



இந்தக் கோரிக்கையினை ஏற்று - கரும்பு விவசாயிகளின் நலன் கருதி, இனி இதற்கான மின் இணைப்பு வைப்புத் தொகையை ரூபாய் ஐந்தாயிரத்தில் இருந்து ஐநூறு ரூபாயாகக் குறைத்து - ஒரு யூனிட் மின்சாரத்திற்குத் தற்போது வசூலிக்கப்படும் ஐந்து ரூபாய் என்பதை 1.25 ரூபாய் என்றும் குறைத்து வசூலிக்க இந்த அரசு முடிவெடுத்துள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாதவரம் தொழிலாளர் பிரச்சினைபற்றி சுப்பராயன் இங்கே கேட்கிறார். அதைப்பற்றிப் பேசிவிட்டால் தொழிலாளர் மானியத்திலே பேச பிரச்சினை எதுவும் இல்லாமல் போய்விடும். எனவே, அப்போது இதைப்பற்றி அனைவரும் மகிழத்தக்க முடிவை அறிவிப்பேன் என்று கூறி, இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

- இவ்வாறு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதில் அளித்துச் சட்டமன்றப் பேரவையில் உரை நிகழ்த்தினார்.

★★★

# ஆவண மகாத்மியம்

## எம். எஸ். பாண்டியன்

உலகெங்கும் சிற்சில ஆவணங்கள் குறித்த உண்மைகள் பேசப்படுவதைக் காணலாம். ஆவணங்கள் என்றால் என்ன? அவை எவ்வாறு உருவாகின்றன.? அதன் பழமை, வளர்ச்சி, தன்மை, பயன்பாடு பற்றி ஆய்வதேயாகும். டாக்டர். பாலிகா என்பவர், 'கடந்த காலம் என்று ஒன்று இருந்ததை ஆதாரபூர்வமாகக் காட்டவல்லதுதான் ஆவணங்கள்' என்றார். இதையே ஆங்கிலத்தில் —

``It is an undeniable fact that the archives of a Government Constitute the authentic Survival of past Administration. It is equally an undeniable fact that a proper study of these archives alone can enable us to comprehend and assess correctly the motives and secrets of past action and policy that without such a proper study all criticisms are bound to create nothing but confusion and misrepresentation'' என்று கூறினார்.

### ஆவண வகைகள்:

ஆவணங்களுக்கு ஒரு மேலான சக்தி இருப்பதாகவே நம்பப்படுகிறது. அப்படிப்பட்ட சக்தி அதற்குண்டாக வேண்டுமெனில் அவைகள், உருவாகும் உலைக்கூடம் எங்குள்ளது என்பதை ஒரு வினாவாகப் போட்டுக் கேட்டால், அதற்குப் பதிலாக வருபவை :

1) அரசினால் உருவாக்கப்படுபவை - அரசு ஆவணங்கள்; அதாவது பொது ஆவணங்கள்.

2) தனியாரிடம் உள்ளவைகள் - இது தனி நபர்கள் மீதான ஆவணம் - அல்லது அவர்கள் உருவாக்கிய ஆவணங்கள். தனியார் நிறுவனங்கள் பற்றியோ அவற்றைச் சார்ந்தவைகளைப் பற்றியோ உள்ளவைகூட இதில் அடங்கும்.

### ஆவணங்களின் பரிணாமம் - பொது ஆவணம்:

அரசு ஆவணங்களைப் பொது ஆவணங்கள் என்று அழைப்பதன் தாத்பரியம் என்ன? நவீன யுகத்தில் பொது நல அரசுகள் ஏற்பட்ட பிறகு உருவாக்கப்பட்டவைகள், அத்தகைய பெயரைச் சூடிக் கொள்கின்றன. இந்தப் பொது ஆவணங்கள் எப்படி பரிணாமம் பெறுகின்றன. தற்கால ஆவணங்கள் அதாவது அரசு சார்பானவைகள் யாவும் எங்காவது உள்ள ஒரு குட்டி அலுவலகம் முதல் அரசு தலைமைச் செயலகத்தில் உள்ள உயர்மட்ட அலுவலர் மற்றும் அமைச்சர் பெருமக்கள்வரை - அவர்களால் அவைகள் உருவாக்கப்படுகின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. எப்படி ?

ஒரு அரைத்தாளில் அமைச்சர் சிறுகுறிப்பு ஒன்றை எழுதி, தமது செயலரிடம் கொடுக்கிறார் - அதைச் செயலர் உரிய துறைக்கு அனுப்புகிறார். துறைசார்ந்த அலுவலர் அந்தக் குறிப்பில் உள்ளவற்றை வைத்துக் காரியமாக்குகின்றார். அதன்படி ஒரு பூதாகரமான தொழிற்கூடம் ஏற்பட்டுவிடுகிறது. அதில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைக்குச் சேர்கிறார்கள். இது ஒரு துண்டுக் கடிதாசியின் வேலை என்பதை நீங்கள் சற்று எண்ணிப் பார்க்கவேண்டும். இவ்வளவு பெரிய காரியங்களைச் செயல்படுத்திய அந்தச் சிறு குறிப்பு ஒரு கோப்பில் (File)


Fort St. George 21st October, 1836

இராயவேலூர்ப் பகுதி மீனவர்கள் எத்தனைப் படகு வைத்துக் கொள்ளலாம் - எப்படி மீன் பிடிக்கலாம் என 1836ல் வெளியிடப்பட்ட அரசு ஆணை.



இணைக்கப்பட்டு, ஆவணக்காப்பகத்துக்குப் போய் அடைக்கலமாகிறது. அதுவே ஒரு தலைமுறை கழிந்து ஆராய்ச்சிக்குரிய கோப்பாகிறது. அதற்கு நூற்றுக்கணக்கான துணைக்கோப்புகள் உருவாகிவிடுகின்றன. இதுதான் ஒரு பொது ஆவணத்தின் பரிணாமம்.


டாக்டர் பி.எஸ். பாலிகா

இரண்டாவதாக, தனியார் ஆவணங்கள் என்பன ஒரு தனி நபரால் உருவாக்கப்பட்டவைகளாக இருக்கும் அல்லது அவர் தம் குடும்பம், அவர் தம் தொழில், அவர் தம் திறமை, அவர் தம் புலமை, அவர் தம் தொண்டு, அவர் தம் பொதுச்சேவை இவைகளைப் பற்றியெல்லாம் குறிப்புகள் எழுதி வைத்திருந்து மாண்டுவிட்டாலோ, அல்லது தம் காலத்திலேயே அது குறித்து பிரச்சினைகள் உருவானாலோ அவர் தமது ஆவணங்களை வெளிப்படுத்துவார். அப்போது அந்த ஆவணங்கள் காலூன்றி நடக்கத் தொடங்கிவிடும். இத்தகைய ஆவணங்கள் உலகெங்கும் பல்வேறு நூலகங்களிலும், ஆவணக் காப்பகங்களிலும், பொருட்காட்சியகங்களிலும் இடம் பெற்றுவிடுகின்றன.

### பத்திரிகைகள் - ஆவணங்களாகும் பரிணாமம் :

பத்திரிகைகள் யாவும் (News Paper) பொது ஆவணக்காப்பகம் அல்லது நூலகங்களில் ஆவணங்களாகக் கருதப்பட மாட்டா. அவைகள் பத்திரிகை அலுவலகத்தின் ஆவணங்கள்தாம் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஒரு பத்திரிக்கைச் செய்தி பொது ஆவணமாகி விடுவதுண்டு.

பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் திடீரென்று காலைப் பத்திரிகை ஒன்றில் சிறையில் பெரியாரின் எடை 14 பவுண்டுகள் குறைந்துவிட்டது என்று செய்திகள் வெளியாயின. இதைப் பார்த்த அன்றைய முதலமைச்சர் இராஜாஜி அச்செய்தியின் பத்திரிக்கைத் துணுக்கை உள்துறை அதிகாரிகளுக்கு அனுப்பி, அதுகுறித்து ஆய்ந்து அறிக்கை தரவேண்டும் என்று ஆணையிட்டார். ஒரு பத்திரிகையின் துண்டு வெளியீடு இப்போது பொது ஆவணமாகிவிட்டது. இப்படிப் பத்திரிகைச் செய்திகளும் பொது ஆவணமாகிவிடுவது ஒரு வாலாயமான உண்மை.

### பயணச்சீட்டும் ஒரு ஆவணமே!

ஆவணங்கள் இன்றியமையாதன என்பதை நாம் அறிவோம்; ஆனால் அது பற்றி நாம் அடிக்கடி சிந்திப்பதில்லை. ஆவணங்கள் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் இடம் பெறுகின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இரயிலிலோ, பேருந்துகளிலோ, விமானத்திலோ பயணம் செய்யும் ஒரு நபர் அந்தப் பயணத்தை அவர் தொடர்ந்து நீடிக்கவும், தாம் போய்ச் சேரவேண்டிய இடத்தை அடையவும், அவரால் பெறப்பட்ட பயணச்சீட்டைக் கட்டாயமாக வைத்திருக்கவேண்டும். பயணச்சீட்டும் ஒரு ஆவணமே.


அழகுமுத்து சேர்வைக்குப் பாண்டிய மன்னன் கொடுத்த பட்டயம் பற்றிய கல்வெட்டு

### வழக்குகளும் ஆவணங்களும்:

நீதி மன்றங்களில் வழக்குகள் உருவாகின்றன என்றால், அவைகளுக்குக் காரணம் பொது மக்களோ அல்லது அதிகாரிகளோ காரணமாவார். அவர்கள் தொடுக்கும் வழக்குகளுக்கும், போலீஸ் தொடரும் பொதுநலம் சார்ந்த வழக்குகளுக்கும் அடிப்படைத் தேவை ஆவணங்களே.

பல்வேறு வழக்குகளுக்கு முதல் தகவல் அறிக்கை (FIR) என்பது எவ்வளவு முக்கியம் என்பதை நாம் அறிவோம். அதுவே வழக்கின் அடிப்படை ஆவணமாகிறது. சில வழக்குகள் தொடர ஆவணங்கள் கிடைக்காமல், நீதியைப் பெறமுடியாமல் வக்கீல்களும் பொதுமக்களும்- ஏன் நீதிபதிகளும் ஆதங்கப்படும் நிலைகளும் உண்டு.

ஒரு சில நேரங்களில் நீதிபதிகள் அதிர்ச்சி அடையும் வகையில் முக்கிய வழக்குகளில் திடீரென ஆவணங்கள் கிடைத்து, வழக்கின் உச்சகட்டத்தை ஏற்படுத்துகின்றன. அல்லது யாராவது ஒருவர் வந்து தன்னிடம் ஆதாரம் இருப்பதாகக் கூறி ஆவணங்கள் சிலவற்றை நேரிலோ, வக்கீல் மூலமாகவோ அளித்து வழக்கைத் திசைதிருப்பி எல்லோரையும் பிரமிக்கச் செய்து விடுவதும் உண்டு. சில நேரங்களில் நீதிபதிகளுக்கு அஞ்சலில் ஒரு தகவல் வந்ததாகத் தெரிவித்து, அதை ஒரு ஆவணமாக்கக் கருதி அதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு அதன் மூலம் தீர்ப்புகள் உருவாவதும் உண்டு. இப்படி உருவாகும் பல்வேறு நீதிமன்ற ஆவணங்கள் அந்தந்தக் காலகட்டங்களில் உள்ள மக்களின் சமூக வாழ்க்கையினைப் பிரதிபலிக்கின்றன.

### ஆவணங்களில் இந்தியக் கலாசார அடிப்படைகள்

இந்தியக் கலாச்சாரத் தொன்மைபற்றிய ஆய்வுகள் யாவும் இன்றும் நடந்துகொண்டே இருக்கின்றன. அதற்கான ஆவணங்கள்/தகவல்கள் யாவும் புதை பொருட்களிலிருந்தும், கல்வெட்டுகளிலிருந்தும், பழங்காலக் குகை ஓவியங்கள், நாணயங்கள் போன்றவற்றிலிருந்தும் ஆதாரங்களைச் சேகரித்த வண்ணமாகவே இருக்கிறோம். இது முடிவடையாத ஒன்று. நமது இந்தியக் கலாச்சாரம் சிந்து சமவெளி



சென்னையில் இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைந்துள்ள இடம் (1822) பற்றிய புகைப்பட ஆவணம்

நாகரீகத்தை மையமாக வைத்தே பேசப்படுகின்றது. அதையே ஆதாரமாக வைத்து எழுதிவருகிறோம். வரலாற்று அறிஞர்கள் இதற்கான ஆவணங்களை வடஇந்திய நகரங்களிலிருந்து இன்னும் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இங்கே தெற்கேயிருந்து மனித இன வரலாறு தொடங்கியுள்ளது என்பதை யாரும் சிந்திக்கவில்லை. லெமூரியாதான் (நாவலந் தீவு) உலக நாகரீகத் தொட்டில் என்று கூறத்தக்க அளவில் பல அறிஞர்கள் எழுதியும் கூட, முறையான ஆவணங்கள் தேடும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. நமது பண்டைய வரலாற்றை அறிய இன்னும் எத்தனையோ மைல்கற்கள் பயணம் செய்தாக வேண்டும். ஆயினும் தற்கால வரலாறு பற்றிய விழிப்புணர்வு கொள்ள, அது பற்றிய உண்மைகளை நாம் அறியவேண்டியது நமது கடமையாகும்.

**ஐரோப்பியரும் - தற்கால ஆவணங்களும்:**

இந்தியாவில் ஐரோப்பியர் வியாபார ரீதியில் இடம் பிடித்துத் தொழில் துவங்கி ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் நடத்தி, அவர்கள் தங்களது நாட்டுக்கும் இந்தியாவுக்கும் பூகோள ரீதியாகவும், வர்த்தக ரீதியாகவும், ஆக்கப்பணிகள் நிறையவே செய்தனர். இத்தொடர்பும் பிற்காலத்தில் அரசியல் தொடர்பாக மாறி நாம் அரசியலில் வீழ்ச்சியடைந்தோம். அவர்களே ஆட்சியாளர்களாகி அதிகாரத்தை தக்கவைத்துக் கொண்டனர். நாம் சுயாதீனம் இழந்தோம். இதில் கிழக்கிந்தியக் கம்பெனி என்ற தனியார் அமைப்பு மிகமுக்கியப் பங்கு வகித்தது. அவர்கள் தங்கள் நிர்வாகத்தை நடத்த உருவாக்கிய ஆவணங்களே ஏராளம்! அவைகளே நமது நாட்டில் உள்ள முக்கிய ஆவணக் காப்பகங்களில் நிறைந்து கிடக்கின்றன.

குறிப்பாகச் சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய தலைநகர்களில் ஐரோப்பியர்கள் காலூன்றிய 15-16ஆம் நூற்றாண்டு தொடங்கி, அவர்கள் இந்தியாவை விடுத்துச் சென்ற அண்மைக் காலம் வரையிலான ஆவணங்கள் அந்தந்த மாகாணங்களில் அவர்கள் கண்ட நிர்வாகம், சமுதாய வாழ்க்கை முதலிய பல்வேறு அம்சங்களையும் விளக்கக்கூடிய வகையில் உள்ளன. **சென்னை-எழும்பூரில் உள்ள ஆவணக் காப்பகத்தை ஆவணச் சுரங்கம்** என்பார்கள். இதுவே இந்தியாவில் உள்ள ஏனைய ஆவணக்காப்பகங்களுக்கு முன்னோடியானது.

ஆவணங்கள் என்பதைப் பகுத்துணர்ந்தால், கல்வெட்டுகளும், தாள் ஆவணங்களும், தோல் ஆவணங்களும், மரத்தில் செதுக்கியவைகளும், செப்புப் பட்டயங்களும், நாணயங்களும் ஓலைச் சுவடிகளும், ஆவணங்களின் பல்வேறு வடிவங்களே. இவைகள் எல்லாவற்றிற்கும் இருப்பிடங்கள் எங்கே? தனித்தனி அமைப்புகளாக உள்ளன. அவை ஆவணக் காப்பகங்கள், பொருட்காட்சியகங்கள், தொல்பொருள் கூடங்கள், நூலகங்கள், ஆய்வகங்கள் என்று பல்வேறு பீடங்களில் இவைகள் வைக்கப்பட்டுள்ளன.

இது சரியா? ஆவணக் காப்பகத்தில் செப்புப் பட்டயமும், நாணயங்களும், அரும்பொருட்காட்சியகத்தில் பாரதியார் கவிதைகளும், நூலகத்தில் ஓலைச் சுவடிகளும், ஓரியண்டல் நூலகத்தில் ஏட்டுச் சுவடிகளுடன், தாள் மூலகங்களும் வைக்கப்பட்டுள்ளன. இது முரண்பாடாகத் தோன்றலாம். இந்தப் பழைய ஏற்பாடுகளைச் சீர்திருத்தம் செய்யாமல் அப்படியே விட்டுவிட்டார்கள். இதனால், பின் வந்த நிர்வாகிகள் தங்களின் உடைமைகள் மீது ஆர்வம் மீதூற, அந்தந்த ஆவணங்கள் தங்கள் பீடத்திலேயே இருக்கவேண்டும் என்று கூறி, எந்த ஒரு மாற்றத்தையும் விரும்பாமல் பண்டைய அமைப்பாய் அப்படியே உள்ளன.

பழங்காலக் கல்வெட்டுகளில் காணும் செய்திகளுக்கும், தற்காலத் தாள் மற்றும் ஓலைச் சுவடிகளில் காணும் செய்திகளுக்கும் பொருளார்ந்த தொடர்பு உண்டா? அவ்வாறு தொடர்பு உண்டு என்பதை நாம் ஆய்ந்தால், புலனாகும். நிலமான்யங்கள் மற்றும் சமூகப் பழக்கவழக்கங்கள் பற்றிய கலாச்சாரக் குறிப்புகள் இவை இரண்டிலும் சிதைவின்றி இருக்க வாய்ப்புண்டு.

கடல்வழிப்போக்குவரத்து மற்றும் தரைவழி மார்க்கங்கள் குறித்து, பண்டைய குறிப்புகளுக்கும் தற்காலத்தில் ஐரோப்பியர்களால் கைக்கொள்ளப்பட்ட மார்க்கங்களுக்கும் ஆவண ரீதியான தொடர்புகள் இருந்துள்ளன. பண்டைய துறைமுகங்கள் பலவற்றை வெள்ளையர் ஆட்சியில் பயன்படுத்தினார்கள். ஆனால் அவைகளில் பல இன்று காணாமல் போய்விட்டன. நம் பண்டைய இசைக் கலை பற்றிய தொடர் ஆய்வுகள் செய்வதென்றால் இசை மூவரில் ஒருவரான தியாகய்யர் கீர்த்தனைகளின் மூலச் சுவடிகள் உள்ளனவா என்ற கேள்விக்கு உரிய விடை கிடைக்க மதுரையிலுள்ள சௌராஷ்டிர நூலகத்திற்குச் செல்லவேண்டும்.

இலண்டனில் காமன்வெல்த் ஆவணத் தொகுப்பில் கிழக்கிந்தியக் கம்பெனி ஆவணங்கள் உள்ளன. அவைகளை இந்திய ஆபீஸ் ரெக்கார்ட் இந்திய ஆபீஸ் நூலகம் என்று இன்றும் அழைக்கிறோம்.

**வரலாற்று நோக்கில் ஆவணங்கள் :**

பொது ஆவணங்கள் மட்டுமல்ல, தனியார் ஆவணங்களும் ஒரு நாட்டின் சமூக வாழ்க்கை மற்றும் பொருளாதாரம், அரசியல் போன்ற பல்வேறு அம்சங்களையும் எடுத்துக்காட்டுவன. அவைகளைக் கொண்டே வரலாறு எழுதலாம். ஆவணங்களில் கண்டுள்ளவைகள் எல்லாம் உண்மையான செய்திகளா என்ற ஐயம் எழுகிறது. குறிப்பாக நெப்போலியன் போரில் தோற்றதை - தாம் வெற்றி பெற்றதாக எழுதிப் பாரிசுக்குச் செய்தி அனுப்பிவிட்டான். இதை எப்படி எடுத்துக் கொள்வது?



1857இல் நடந்ததை இந்திய சுதந்திரப் போரே அல்ல. இது வெறும் இராணுவ எழுச்சியே என்று வெள்ளையர்கள் குறிப்பிட்டனர். இது சரியா? நம் தமிழக ஆவணங்களில் ஒரு சமூகத்தினரை ஆங்கிலேயர்கள் 'கிரிமினல்ஸ்' என்று குறிப்பிட்டார்கள். இது சரியா? இவைகளுக்கு எல்லாம் உண்மை கண்டு தெளிதல்வேண்டும். அதற்கு ஆவணங்களே உதவ முடியும். இன்றைய செய்தி நாளைய வரலாறு என்பார்கள். இன்றைய செய்திகள் நாளைய வராலாறு ஆகலாம். ஆவணக் காப்பகத்தில் ஏட்டுச் செய்திகளை வைத்து ஆய்வுகள் நடத்தி புதிய வரலாறுகளையும் புதிய ஆவணங்களையும் உருவாக்கலாம்.

ரஷ்ய ஆவணக்காப்பக ஆய்வு முறைகள் இதை மெய்ப்பிக்கின்றன. எங்கோ சைபீரியாவின் பனிப்பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தில் குழந்தை ஒன்று பிறந்த குறிப்பை வைத்துக்கொண்டு அந்தக் குழந்தை எங்கே எப்படி வளர்ந்தது, வாழ்ந்தது என்ற வினாக்கள் தொடுத்து அந்தக் குழந்தையின் பிற்காலத்திய தனி மனித வாழ்க்கையை அப்படியே படம் பிடித்தாற்போல எழுதி ஆவணமாக்கி விடுகிறார்கள். இது எப்படி என்றால் ஒரு ஆவணம் பிறிதொரு ஆவணத்தை உருவாக்கி அதன் வழியாகத் தனி மனித வரலாற்றையும் சமுதாய உடைமையாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது எனலாம். 1783 இல் பிரஞ்சுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் கடலூரில் நடந்த சண்டையில் பங்கேற்ற ஒரு சாதாரண சிப்பாய் பர்னதத்தா (Bernadatta) தாம் இந்நாளைய சுவீடனின் அரசாட்சி மரபை ஏற்படுத்தினான் என்ற செய்தி கிழக்கிந்தியக் கம்பெனி ஆவணங்களில் கிடைத்தன. இது ஒரு மரபியல் வரலாற்றின் மூலத்தை அல்லவா கண்டு தந்துள்ளது!

**நிர்வாக நோக்கில் ஆவணங்கள்**

தற்காலத்தில் நமது பொது நல அரசுகள் - குறிப்பாகத் தமிழ்நாடு அரசு பழைய ஆவணங்களைக் கையாளுகின்றனரா? அவற்றை அன்றாட நிர்வாகத்திற்கு அரசினர் பயன்படுத்துகிறார்களா? இது சரியான கேள்விதான். 50களிலும் அதற்கு முன்பும் ஆண்டுக்குச் சராசரி 4000 ஆவணங்களை ஆவணக் காப்பகத்திலிருந்து அரசு பெற்றுள்ளது.

ஆனால், இன்றைய காலக்கட்டங்களில் ஆண்டுக்கு 400 பழைய கோப்புகள்கூட கேட்டுப் பெறுவதில்லை. இது எவ்வளவு பிற்போக்கு என்பதைக் காட்டுகிறது. ஆவணங்கள் காலத்தின் கண்ணாடி என்றால் மிகையாகாது. நிர்வாகிகள் ஒரு விஷயத்தைப் பற்றிய தீர்மானம் எடுக்கும் முன்பு, அது போன்ற பழைய தகவல்கள் இருந்துள்ளனவா என்பதை அறிய முயற்சிகள் கொள்ளாதது அந்த விஷயத்தின் உண்மை நிலைகளை மறைத்து விடுவதற்கு ஒப்பாகும்.

அதிகாரிகள் தங்களுக்கு அது பற்றிய முழு தெளிந்த அறிவும் இருப்பதாகக் கருதிக்கொள்ளக் கூடாது. மாறாக, இது குறித்துக் கேள்விகள் எழுப்பவேண்டும். நாம் புதிதாகத் தொடங்கும் திட்டங்கள் பற்றிய முன் தகவல்கள் உள்ளனவா என்று கேட்டு, அதன் முன்தகவல்கள் பெறுவதில் அக்கறை காட்ட வேண்டும். இதனால் திட்டம் நிறைவேற்றுவதில் உள்ள அடிப்படைக் கூறுகள் எளிதில் புலப்படும். ஆங்கிலேயர்கள் 'ஆக்ட்' மற்றும் 'ரெகுலேஷன்ஸ்' என்பவைகளை உருவாக்கி ஆட்சி நடத்திய காலத்தில், சட்டத்திற்குக் கட்டுப்படாத பயங்கரவாதிகள் அக்காலத்தில் இருந்திருக்கிறார்கள். அவர்கள் இன்றைய பயங்கரவாதிகளைவிட மோசமானவர்களா? இல்லையா? அவர்களை எப்படி நிர்வாகம் சமாளித்தது என்பதையெல்லாம் கண்ணாடி போல் காட்டப் பழைய ஆவணம் இருக்கிறது.

உதாரணத்திற்குச் சொன்னால், 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த ஒரு ஜமீன்தார் வெள்ளையரின் போலீஸ், கோர்ட்டுகள், கஜானாக்கள் எதையுமே நடைபெறவிடாமல் பயங்கரவாதம் செய்துகொண்டிருந்தார். அவரையே கூட கைது செய்ய அஞ்சினார்கள். குற்றவாளிகளாகக் கருதப்பட்டவர்கள் எல்லாம் அவரது ஜமீனில் அடைக்கலம் தேடிக்கொண்டனர். இவரை எப்படி நிர்வாகம் சமாளித்தது போன்ற தகவல்கள் ஆவணங்களில் உள்ளன.

தற்காலத்தில் தொழில் பயிற்சிக்கு Apprentice Act என்று போட்டு, அதன்மூலம் செயல்படுத்தினார்கள். இதை எந்தச் சட்டமும் போடாமல் 1854ல் ஒவ்வொரு மாவட்ட சிவில் என்ஜினியர்களிடமும் 6 அப்பரண்டிஸ் வீதம் நியமித்து, மாதம் தலா ரூ.7/- ஊதியம் தந்து பயிற்சி கொடுத்துள்ளார்கள். இதற்கெல்லாம் சாதாரண விதிமுறைகளே போதும். சட்டம் இயற்றித்தான் செயல்பட வேண்டுமா?

காவிரி நீர் பற்றித் தமிழகத்தின் ஆதிபத்ய உரிமையை மறுக்கின்ற, மறைக்கின்ற நிலையில், இன்றைய சிந்தனைகளும், எண்ணங்களும், சூழ்ச்சியின்பாலும், சுயநல எண்ணங்களுக்கும் அடிமையாகிவிட்டதையே ஆங்காங்கே காண்கின்றோம். இவைகள்


Fort Saint George 3rd May 1854

stated, and Mr. Franz informed through the Authorities at Madras that the appeal against the Amount Recommended cannot be considered.

Bombay — I have the honor to be, &c.
19th April 1854 — (Signed) G. J. Jameson, Lieut. Col.
Military Auditor General.
(True Copy)
(Signed) J. Maughan, Lieut. Colonel
Secretary to Government.

No. 6
Resolution

No. 118.
Ordered that Mr. Franz be informed that the Government of Bombay have decided that his appeal against the amount allowed him as Donation Batta for Burmah cannot be considered.

From J. J. Franklin Esqr.
Secretary, Marine Board, late
in Charge of Manaar survey
To Sir H. C. Montgomery Bart.
Chief Secretary to Government
Fort Saint George
Sir,
I have the honor to ...

பாம்பன் கால்வாய் பற்றிய அரசு ஆவணம் (1854).

தேசதுரோகக் குற்றமாகும். நீர்ப்பங்கீட்டுக் கோளாறுகள் பண்டைக் காலத்திலும் வெள்ளையர் ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்து இருந்திருக்கின்றன.

உதாரணமாகப் பேரணை சூட் (Peranai Dam Suit), வம்சதாரா நதி (Vamsadhara-Urlam) ஊளம் தீர்மனம் இவைகள் அன்றைய ஜமீன்தார்களுக்கும் ஆங்கில ஆட்சிக்கும் நடைபெற்ற தாவாக்களே. அவற்றில் ஆதிபத்ய உரிமைகளின் விளக்கங்கள், கொள்கைகள், பங்கு, உரிமை புற்றித்தெரிந்த கருத்துக்கள், நதிகள் அரசுக்குச் சொந்தமல்ல என்பது போன்ற சட்ட ரீதியான உண்மை நிலை விளக்கங்கள் - இன்றைய அரசின் உரிமை குறித்து வாதிட வல்ல கருத்துக்கள் - பல்வேறு பழைய தீர்ப்புகள் ஆவணங்களில் உள்ளன. இவைகளை இன்றைய உயர் அதிகாரிகள் படித்துப் பார்த்துச் செயல்படலாம்.

**பயனற்ற ஆவணங்களும் - சில உண்மைகளும்:**

நாளுக்கு நாள் ஆவணங்கள் பெருகிக்கொண்டே போகின்றன. ஆயினும் நாம் ஆவணங்களை ஓரளவுக்குத்தான் பாதுகாத்து வைக்கமுடியும். அளவுக்கு மீறி ஆவணங்களைச்சேகரித்து வைக்கமுடியாது. அன்றாட அரசு நிருவாகத்தில் உருவாக்கப்பட்ட அனைத்துமே ஆவணக் காப்பகங்களுக்கு வந்துவிடாது. முக்கிய ஆவணங்களே வருகின்றன. அவற்றையும் உரசிப் பார்த்து அழிப்பனவற்றை அழிக்கவும், காப்பாற்றுவனவற்றைக் காப்பாற்றவும் வேண்டும்.

அமெரிக்கா, பிரிட்டிஷ், பிரான்ஸ், ஜெர்மன் போன்ற நாடுகளில் நூற்றுக்கணக்கான மைல் நீளக் கணக்கில் ஆவணங்கள் உருவாக்கப்பட்டு, காப்பற்றப்பட்டு வருகின்றன. ஆவணக்காப்பகங்களில் பொதுநல அரசு ஆவணங்களை மதிப்பீடு செய்யும் பணிகள் நாளாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணி மிகவும் முக்கியமான பணி என்று நிர்வாகிகளும், வரலாற்று ஆசிரியர்களும், ஆவணக்காப்பியல் வல்லுனர்களும் கூறிவருகின்றனர். வரலாற்று நோக்கு, நிர்வாக நோக்கு, ஆவணக்காப்பியல் நோக்கு என்ற முக்கோணப்பரிமாணத்தில் ஆவணங்களை மதிப்பீடு செய்தல் வேண்டும். கொஞ்சம் சிரமமான காரியம்.

ஆனந்தரங்கபிள்ளை நாட்குறிப்பு



ஒரு நிர்வாகி வேண்டாம் என்று ஒதுக்கிய ஆவணங்கள் ஒரு வரலாற்று ஆசிரியனுக்கு தேவைப்படலாம். அல்லது வரலாற்றுக்காரர் வேண்டாதவை என்றதை நிர்வகிக்கும், ஆவணக்காப்பியலார்க்கும் தேவை என்று தோன்றலாம். எனவே, எடுக்கும்முடிவு ஆவணச் சிதைவைத் தடுத்தாக வேண்டும். இதை அறிஞர் பாலிகா ``It is fundamental principle in archivism that the authenticity of a document depends solely upon unbroken official custody'' என்று கூறினார்.

**ஆவணக் காப்பகச் சட்டம்:**

ஆட்சிமொழி தமிழ் என்று 1956-இல் தமிழ்நாட்டரசு ஒரு சட்டமே இயற்றியிருக்கிறது. ஆனால், ஆட்சிமொழித் தமிழில் சில அரசு அதிகாரிகள் ஏனோ இன்னும் தங்கள் கோப்புகளை எழுதுவதில்லை. அந்தச் சட்டத்தினால் யாரையும் தண்டிக்கும் விதிகள் இல்லை என்றே கருதவேண்டும். தண்டிக்கவேண்டுமானால் சில சட்டத் திருத்தங்கள் அரசினால் கொண்டுவரப்பட வேண்டும். அந்தத் துறை அதிகாரிகள் எச்சரிக்கைகள் மட்டும் விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், 19-ஆம் நூற்றாண்டில் தமிழில் கடிதப் போக்குவரத்து நடத்தப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக உத்தரவுகள் கண்டிப்புடன் பிறப்பித்திருக்கிறார்கள். அந்த நாட்களில் பொதுப்பணித் துறையினால் அனுப்பப்படும் வேலை மதிப்பீடுகள் (Work Estimates) யாவும் "தமிழ் மதிப்பீடு" என்றே அனுப்பப்பட்டிருக்கிறது. அன்று கலெக்டர்களும், சிவில் பொறியாளர்களும், சர்வேயர்களும் ஆங்கிலேயர்களாக இருந்தும் கூட, தமிழில்தான் மதிப்பீடுகள் தயாரித்து அனுப்பப்பட்டு, சென்னை ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளித்தபிறகு, மராமத்துப் பணிகள் நடத்தப்பட்டுள்ளன என்பதற்குப் பழைய ஆவணங்களே சாட்சி. மேற்குறிப்பிட்ட அந்தச் 'சில அதிகாரிகள்' இதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஆவணக் காப்பகங்கள் அல்லது ஆவணச்சட்டம் இயற்ற இந்திய அரசு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து முயன்று வந்தது - ஆயினும் 80-களில்தான் சட்டம் இயற்றுவதற்கு முன்னோடியாக Archival Policy Resolution என்ற போர்வையில் இந்திய ஆவணக்காப்பகங்கள் இயக்கப்பட்டு வந்தன. கடைசியில் 1993இல் தாம் இந்திய ஆவணக் காப்பகச் சட்டம் ஒன்றை இந்திய யூனியனின் இரு சபைகளும் நிறைவேற்றின. அவற்றில் பல ஷரத்துக்கள் உள்ளன. ஆவணங்கள் கடத்தப்படுவதும், வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்வதும் தடை செய்யப்பட்டு, தண்டனைகளுக்கும் வழிவகை கண்டுள்ளனர்.

டெல்லி தேசீய ஆவணக்காப்பகம் இச்சட்டத்தினை நிறைவேற்றும் அதிகர்ரம் கொண்டுள்ளது. ஆயினும், தமிழ்நாடு அரசு அத்தகைய சட்டத்தை இதுவரை இயற்றவில்லை. 1993-ஆம் ஆண்டைய இந்திய அரசின் ஆவணச் சட்டத்தைத் தமிழக அரசும் நிறைவேற்றலாம். இதனால் ஆவணப் பாதுகாப்புக்கு மிகுந்த பயனுடையதாக இருக்கும்.

வான மண்டலத்துக்குக் கீழே நடக்கும் அனைத்துக் காரியங்கள் குறித்தும் ஆவணக்காப்பகத்தில் செய்திகள் உள்ளன. எனவே, யாரும் இத்துறைப் பணியினை மிகச் சாரணமாகக் கருதிவிடக் கூடாது.






ஒருகணம் எண்ணிப் பார்மனிதா! - நீ
உள்ளே இழுக்கும் ஒவ்வொரு மூச்சும்
உண்மையில் மாசு! அணுக்கதிர் வீச்சு!

சுற்றுப் புறத்தைச் சற்றுப் பார்நீ!
தூய்மைக் கேட்டை உற்றுப் பார்நீ!
கட்டிட மாகவே நிலங்கள் ஆனால்
காற்றுத் தேவன் எப்படி வருவான்?

மரங்களை அழித்தோம்! மனிதம் மரித்தது!
மகத்துவ மான மழையும் குறைந்தது!
உரங்களை வேண்டிப் பயிர்களை இழந்தால்
உலகம் நம்மைக் கேலிசெய் யாதா!

அறிவியல் என்னும் அதிசயச் சிறகால்
ஆகா யத்தில் நாம்பறக் கின்றோம்!
ஆனால் தினமும் அழுக்குகள் நிறையும்
அசிங்கத்தி லன்றோ குடியிருக் கின்றோம்!

ஆலைப் புகையும் வாகனப் புகையும்
அணுஅணு வாக உள்ளே சென்றால்
நாளை புகையும் நம்நுரை யீரல்!
நச்சு விதைகளா நாகரீ கங்கள்!

'போபால் சம்பவம்' பொழுதெலாம் நடக்கும்
போக்கை இன்றே நீக்கிட முயல்வோம்!
'ஓசோன் படல' மாசை அகற்றுவோம்!
உன்னதக் காற்றை ஊட்டப் படுத்துவோம்!

# ‘நாம்’ என்னும் அறம்

- கவிஞர் எழிற்பித்தன்

❑ ‘நான்’ என்றுமே ஒட்டாது
‘நாம்’ என்றாலே ஒட்டும்.
உதடுகளும் உண்மையினை
உரைப்பதனால் “நாமா”வோம்!

❑ நான் என்ற தன்னலத்தால்
நடப்பதில்லை இவ்வுலகம்
நாம் என்ற பொதுநலத்தால்
வருவதில்லை ஒருகேடும்!

❑ ஒப்புரவினால் தானேஇவ்
உலகம் நடக்கிறது
ஒத்தது அறியாமல்
உயிரெங்கே இருக்கிறது?

❑ உப்பான ஆழ்கடலும்
ஒப்பில்லா ஆதவனும்
தப்பாமல் உணவளிக்கும்
ஒப்புரவை உச்சரிக்கும்!

❑ உச்சத்து அறிவாலே
உருவாகும் புதுமைகளை
அச்சாக வார்த்தெடுக்க
அமைந்ததிந்த ‘நாம்’ ஆகும்!

❑ கச்சிதமாய் நாமிங்கே
கலக்காமல் ஒருபோதும்
மெச்சுகின்ற ‘நான்’ இல்லை
மேன்மையறம் ‘நாம்’
ஆவோம்!



## மூலிகை மருத்துவம்

மூலிகை மருத்துவர், தேவூர் மணிவாசகன்



### ஞாபகசக்தி பெருக

அரசமரக் காற்றை சுவாசிக்க, மூளை செல்கள் வலுப்பெற்று ஞாபகசக்தி பெருகும்.



### சொறி சிரங்குக்கு

பூவரசு பழுப்பு இலைகள் ஐந்துடன், வசம்பு ஒரு துண்டு சேர்த்து, அரைத்து சொறி, சிரங்கு, படையில் தடவி பதினைந்து நிமிடங்கள் சென்றதும் அரப்புத் தூள் போட்டுக் கழுவ, படை குணமாகும்.

### சளி இழுப்புக்கு

வெற்றிலை இரண்டுடன் ஆடாதொடைக் கொழுந்து ஐந்து, மிளகு ஒன்று சேர்த்து மென்று காலை, மாலை வெறும் வயிற்றில் தொடர்ந்து சாப்பிட சளி, இழுப்பு சரியாகும். ஆடுதீண்டாப் பாளையால் கரும்படை அழியும். ஆடாதொடையால் சளி இழுப்பு ஒழியும்.

### தும்மலுக்கு

முள் நீக்கிய தூதுவளை இலைகள் ஐந்துடன் மிளகு ஒன்று சேர்த்து மென்று, காலை, மாலை வெறும் வயிற்றில் தொடர்ந்து சாப்பிட தும்மல் குணமாகும். அடங்கா பொடுக்கு, பொடுதலை, அடுக்குத் தும்மலுக்கு தூதுவளை ஆகும்.



# சிலுவை சுமக்கும் சிற்றெறும்புகள்!

- இந்தியத்
  திருநாட்டின்
  இதோ சில
  தொழிலாளர்கள் !

- இச் சிறார்கள்
  சிறகொடிந்த
  சின்னப் பறவைகள் !

- வீட்டின்
  சுமையைத் தாங்கும்
  வித்தியாசமான
  சுமை தாங்கிகள் !

- அன்னைத் தமிழின்
  அமுதத்தைப்
  பருக வேண்டிய
  இவர்கள்
  அதன்
  அறிமுகத்தை
  அறியக்கூட
  ஆர்வப்படவில்லையே !

- அறிவியலைப் பற்றி
  ஆராய வேண்டிய
  இவர்கள்
  அடுத்த வேளை
  ஆகாரத்திற்கு
  அல்லவா
  அல்லல்பட
  நேர்கிறது !

- வாய்ப்பாட்டை
  மனனம்
  செய்யவேண்டிய
  இவர்கள்
  மனமோ,
  தங்கள்
  வயிற்றுப்பாட்டை
  நினைத்தே
  வற்றிப்போய்
  விடுகிறது !

- புலவர்
செ.கிருஷ்ணமூர்த்தி

- வரலாற்றைப்
  புரட்டவேண்டிய
  கைகள்
  வாரச்சம்பளத்தை
  மட்டுமே
  புரட்டிப் பார்க்கிறது !

- புத்தகப் பை
  சுமக்க வேண்டிய
  இவர்கள்
  தோள்கள்
  சுமப்பதோ
  வாழ்க்கைச் சிலுவை !

- ஆம் !
  இந்தச் சிறார்த்
  தொழிலாளர்கள்
  இந்தியத்
  திருநாட்டில்
  சிலுவை
  சுமக்கும்
  சிற்றெறும்புகள் !



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறை,
டாக்டர் மா.இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம்
ஆகியவை இணைந்து நடத்திய 'திராவிட இயக்க ஏடுகள்'
கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை; சென்ற இதழ்த் தொடர்ச்சி.

# முரசொலி வார இதழ்

ஆசிரியர்... மு.கருணாநிதி

**'த**ள்ளாடும் - தத்தி நடக்கும் - தணலை மிதிக்கும் - விழும், எழும்! ஆனாலும் எந்த நிலையிலும் கொண்ட கொள்கையை மண்டியிட வைத்ததில்லை; முன்வைத்த காலைப் பின்வைக்க நினைத்தது மில்லை!

'முரசொலி நான் பெற்ற முதல் குழந்தை! ஆம்; அந்த முதற் பிள்ளைதான் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியனைப் போலக் கிண்கிணி அணிந்த கால்களுடன், பகைவர்கள் பலரைக் களத்தில் சந்திக்கச் 'சென்று வா மகனே, செருமுனை நோக்கி!' என அனுப்பிவைக்கப்பட்ட அன்புப் பிள்ளை!'

- முரசொலி 11.3.1984 ஏட்டில், மரியாதைக்குரிய கலைஞர் அவர்களே தமது ஏடுபற்றி இவ்வாறு மிகவும் பெருமிதத்தோடு குறிப்பிட்டிருக்கிறார்.' இத்தகைய சிறப்பினுக்குரிய 'முரசொலி'யின் தொடக்ககாலத் தோற்றமான வார ஏடு பற்றித்தான். ஆம்; 'இன்றைய செய்தி நாளைய வரலாறு' என்கிற முத்தாய்ப்போடு வெளிவரும் 'முரசொலி' பற்றித்தான். இங்கே அந்த வரலாறு தொடர்கிறது!

## கவிதையும், கடிதங்களும்

முரசொலி வார ஏட்டின் 4வது வாரம் (4.2.1948). அதன் முதல் பக்கம் - மேலே பாரதிதாசன் படம். அதன் கீழே, முரசு, ஒலி, நாள், ஆண்டு இத்யாதி. அதன் கீழே, கும்பிட்டுக்கொண்டிருக்கும் காந்தியார் படம் - அதற்கும் கீழே - காந்தியடிகளைக் கொன்றவனைப் பற்றிய விளக்கம், திருக்குறளைப் போல இரண்டு மூன்று வரிகளில் - முழுப்பக்கமுமே இதுதான் சங்கதி.

அந்த இதழில், 6ஆம் பக்கம் இடம் பெற்றுள்ள ஒரு புதிய பகுதி - இப்போதெல்லாம் 'வாசகர் இதயம்', 'ஆசிரியருக்குக் கடிதம்' என்றெல்லாம் போடுகிறோமே, அந்தப் பகுதி - அவ்விதழில் 'வெற்றி எட்டுத் திக்குமெட்ட கொட்டு முரசே!' என்ற தலைப்பில் போடப்பட்டுள்ளது. அதில் - மூவலூர் ஆ.இராமாமிர்தத்தம்மாள், 'பொன்னி' ஆசிரியர் முருகு சுப்பிரமணியன், புதுவை க.மன்னர் மன்னன், இராம.அரங்கண்ணல், 'அறம்', புலவர் மணியம், குளிக்கரை கே.எஸ். பிச்சையப்பா, புலவர் குழந்தையா ஆகியோர் எழுதிய கடிதங்கள் இடம் பெற்றுள்ளன.

'முரசொலிட முரசொலிட முரசொலி' - என்ற தலைப்பில் கவி.கா.மு.ஷெரீப் எழுதிய கவிதையொன்று,

*'அரசனென்றும் ஆண்டியென்றும்*
*அவதியுறும் மக்களை*
*அல்லல் நீக்கி ஒன்று சேர்க்க*
*ஆர்த்தெழுந்தே முரசொலி ட'*

- என்ற ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டாக எழுதப்பட்டிருக்கிறது.

அப்போது 'விடுதலை' துணை ஆசிரியராக இருந்த இராம. அரங்கண்ணல் (ஆரூரன்), டி.கே.சீனிவாசன் முதல் - என்.எஸ். இளங்கோ, தில்லைவில்லாளன், நா.பாண்டுரங்கன், நாராநாச்சியப்பன், வா.கோ.சண்முகம்(மா வெண்கோ), எம்.சிங்காரவேலு, கரந்தை என்.எஸ்.சண்முக வடிவேலு ஆகியவர்களும் மணியொலி, ரவி, மன்னன், தில்லை குழுக்கோ போன்றவர்களும், 'முரசொலி' வார ஏட்டில் எழுதிவந்துள்ளனர்.

'குடியரசு' ஏட்டில், அப்போதே 'விமானி' என்கிற பெயரில் தொடர்ந்து கலைஞர் அவர்கள் பல கட்டுரைகளும் எழுதி வந்தார். அப்படி அவர் அதில் எழுதிய - 'அண்ணாமலைக்கு அரோகரா', 'ஏகாதசி', 'தீட்டாயிடுத்து', 'மானங்காக்க', 'துடிக்கும் இளமை', 'கங்கையின் காதல்' போன்ற எழுத்தோவியங்கள் கலைஞரின் எழுச்சிமிகு எழுத்தாற்றலை உணர்த்து பவைகளாக இருந்தன.

13ஆம் வாரம் 'முரசொலி'யிலிருந்து ஒரு இதழின் விலை 1½ அணாவாகவும், ஆண்டுத்தொகை ரூ.5 என்றும் ஆக்கப்பட்டிருக்கிறது. 2 பக்கம் கூட்டப்பட்டு 10 பக்கம் ஆகியிருக்கிறது. ஓவியங்கள், புகைப்படமெல்லாம் இடம்பெறத் தொடங்கியிருக்கிறது.

## வைர வரிகள்

*"ஏம்பா, மழையில்லாதபோது வர்ணஜபம் செய்தார்களே. அப்பொழுது மழை பெய்யாமல் பிறகு இரண்டு மாதம் கழித்து மழை கொட்டுச்சே? ஏன்?"*

*"அதுவா... பூலோகத்திலிருந்து செய்த ஜெபம், வருணலோகத்துக்கு எட்ட அவ்வளவு நாட்களாயிற்றுப் போலும்!"*

*- எழில்*

- என்பது போன்ற துணுக்குச் செய்திகளும் 'முரசொலி' வார ஏட்டில் அவ்வப்போது இடம் பெற்றிருக்கின்றன.

*'விற்பனையாளர் இல்லாத ஊருக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை'.*

*'பட்டியல் கிடைத்த ஒரு வாரத்திற்குள் பணம் அனுப்பாவிடில் பத்திரிக்கை அனுப்புவது நிறுத்தப்படும்'*

- என்பது போன்ற அறிவிப்புகள்.

"நேற்று வரையில்" என்கிற தலைப்பில், உலக நாடுகளின் நிகழ்வுகள் குறித்த செய்தித் துணுக்குகள் - எல்லாம் ஒரு நாளேட்டுக்கு உரியது போல, அப்போதே அந்த வார ஏட்டில் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன.



வாரந்தோறும் 'புதன்கிழமை' வெளிவந்த 'முரசொலி'யின் 17.3.48ஆம் தேதிய இதழில் ஒரு புதுமை; ஒவ்வொரு பக்கத்தின் முடிவிலும், நறுக்குத் தெறித்தாற்போன்ற வைர வரிகள்- *'எறும்புகளுக்குக் கூட இன உணர்ச்சி உண்டு! ஆனால்...!' 'திரு இடமே திராவிடம்', 'திராவிடம் தமிழ்ச் சொல்லே!', 'ஏர் ஓட்டும் மக்கள் எல்லாம் ஏங்கித் தவிக்கையிலே, தேரோட்டம் ஏன் உனக்கு தியாகராசா!', 'கறுப்புச் சட்டையே நமது களங்கம் போக்கும்'* - என்பது போலக் காணப்படுகின்றன.

- ★ *பாரதிதாசன் 'குயில்' - கவிதை இதழ், மாத வெளியீடு.*
  *கவிஞரின் தேனூறும் கவிதைகள்-இனிய உரைநடைகள்!*
  *இளம் எழுத்தாளர்க்கு-இலக்கியப் போட்டிப் பரிசு.*
  *இன்ன பிற சுவைமிகு பகுதிகள் உண்டு.*
  *விலை 6 அணா.*
  *குயில், பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி.*
- ★ *சிதம்பரம் ஜெயராம் 1.நல்லதம்பி, 2.கிருஷ்ணவிஜயம், 3.விஜயகுமார், 4.அந்தமான் கைதி, 5.கிருஷ்ணபக்தி, 6.வேலைக்காரியில்(சில பகுதி), 7.முள்ளில் ரோஜா-ஆகிய படங்களின் இசையமைப்பில் (மியூஸிக் டைரக்ஷன்) வெகுமும்முரமாக ஈடுபட்டுள்ளார்.*
- ★ *பகுத்தறிவுப் புயல் ஆண்டவனைப் பற்றிய வாதங்களுக்கு ஆராய்ச்சி பூர்வமாக, தர்க்க ரீதியாகத் தணலன் எழுதிய நூல், 'கடவுள் முளைத்தார்!'. விலை அனா14, வியாபாரிகட்கு 25%கழிவு உண்டு. எரிமலைப் பதிப்பகம், துறையூர், திருச்சி.*



- ★ *விதவைப்பெண் தேவை. ஆயிரம் ரூபாய் சொத்துடையவரும், மாதம் ரூ.50 வருமானம் உடையவரும், 25 வயதும் உடைய மருத்துவ வகுப்புத் தோழருக்கு விதவைப் பெண் தேவை. விவரத்திற்கு: - ச.பரசுராமன், பார்பர் ஷாப், விஜயபுரம்.*
- ★ *1.3.48 திங்கட்கிழமை முதல் திருவாரூர் பிரபாத்தில், 'கன்னிகா'.*
- ★ *'பொன்னி' - மே 1 முதல் மாதம் இருமுறை - விலை அணா 5.*
- ★ *சுவைமிகு சிற்றுண்டிகளுக்கு விஜயபுரம் பீமவிலாஸ்.*

- என்பனபோன்ற விளம்பரங்களும் அவ்வப்போது 'முரசொலி' வார ஏடுகளில் இடம் பெற்றிருக்கின்றன.

'முரசொலி' பற்றிய விளம்பரம் புரட்சிக் கவிஞரின் 'குயில்' ஏட்டில் 1.4.1948ல் இவ்வாறு இடம் பெற்றிருந்தது :

★ *முன்னேறும் திராவிடத்தின்*
*வெற்றி முழக்கம்*
*'முரசொலி'!*
*ஆசிரியர்: மு.கருணாநிதி*
*அச்சமற்ற கண்டனங்கள்..*
*ஆணித்தரமான கட்டுரைகள்..*
*அறிவு நல்கும் கற்பனைகள்..*
*தனிப்பிரதி அணா ஒன்று*
*ஆண்டுக் கட்டணம் ரூ.3-4-0*
*விவரங்கட்கு:*
*நிர்வாகி - முரசொலி - திருவாரூர்.*

- இதே வகையில் நாவலர் நடத்திய மன்றம் (1.3.1948), பேராசிரியர் நடத்திய 'புதுவாழ்வு' (15.2.1948) ஆகியவற்றில் மதிப்புரைகளும் 'முரசொலி' பற்றி வெளிவந்தன.

"சுவைத்ததில்!..." என்பது முரசொலி வார ஏட்டில் இடம்பெற்ற புத்தக விமர்சனப் பகுதியாகும். இதில், ஏவிபிஆசைத்தம்பி அவர்கள் விருதுநகரிலிருந்து நடத்திய *'தனி அரசு'*, இரா.நெடுஞ்செழியன் அவர்கள் சென்னையிலிருந்து நடத்திய *'மன்றம்'*, க.அன்பழகன் அவர்களின் *'புது வாழ்வு'*, டி.நாராயணனின் *'வாழ்வு'*, டி.எஸ்.இராசலட்சுமியின் *'வெண்மதி'*, கே.ஏ.புன்னைமுத்துவின் *'வழிகாட்டி'*, ஆ.இரத்தினத்தின் *'உரிமை'*, ஏ.கே.வேலனின் *'இராவணன்'*, நாக.முத்தையாவின் *'மீண்ட இன்பம்'*, குமாபாலசுப்பிரமணியத்தின் *'இன்பத்துளி'* போன்ற ஏடுகளும், நூல்களும் சில வரிகளில் இப்பகுதியில் சுவைபட விமர்சிக்கப்பட்டிருக்கின்றன.

'மு.கருணாநிதி' என்ற பெயரை 'ஆசிரியர்' என்கிற சொல்லுக்குப் பின், முதல் பக்கத்திலும்-'ஆசிரியரும் வெளியிடுபவரும்' என்ற கடைசிப் பக்க வரிகளின் பின்னும்தான் இவ்விதழில் காணமுடிகிறது. எனினும்-'முரசொலி' வார ஏடுகளின் தலையங்கங்களை எல்லாம், தனக்கே உரிய தனி நடையில் எழுதியுள்ளார் கலைஞர் அவர்கள்.

## இரத்தக்கறை படிந்த நாள்

உதாரணத்திற்கு இதோ ஒன்று - 4.2.48ஆம் நாள் வெளியான 'முரசொலி' வார ஏட்டின் தலையங்கத்தின் தலைப்பு '30.1.1948' என்பது மட்டுமே! இதோ, அதில் சில வரிகள்:

*'இந்திய உபகண்டத்தின் வரலாற்றில் இரத்தக்கறை படிந்த நாள். மக்கள் உகுத்த இரத்தக் கண்ணீர் அருவியென ஓடி அரபிக்கடலிலே கலந்து... வங்காளக்குடாக் கடலில் வழிந்தோட... "காந்தி மாண்டாரா?" என்ற கேள்விக்கு முன் கிளம்பிய பெருமூச்சு இமயத்தை அசைக்க - இப்படி ஒரு சோக பூகம்பம் 30.1.48ல்!*

*'திரு. காந்தியார் சுடப்பட்டார்! மும்முறை சுடப்பட்டார்! ஐயகோ! சுடப்பட்டர்! பிரார்த்தனைக்குத் தான் வந்தாராம்... வேலும் வாளும் ஏந்தி 'வேற்றார் படை எங்கே?' என்று அவர் அதட்டலாகக் கேட்ட நேரத்திலே அல்ல; அன்பு தவழும் மொழிகளில் "பிரார்த்தனைக்கு மக்கள் வந்துவிட்டனரா" என்று வினவிய நேரத்தில்... சுடப்பட்டார்! கனல் கக்கும் கண்களோடு 'கட்டாரியை எரிந்து காட்டானையைப் போல் எதிரியின் மேல் மோதிய வேளையில் அல்ல; கருணை பொங்கும் கண்களால் தன் உபதேசம் கேட்க வந்திருந்த மக்களைக் கண்டானந்தித்த வேளையில் சுடப்பட்டார்! சுடப்பட்டார்! சுக்கு நூறாக்கப்பட்டார்!...'*

- என்று தொடங்கி ஒன்றரைப்பக்க அளவில் - *'30.1.1948!... ஆமாம்.. வரலாற்றை வீணாக்கிய நாள்!'* என்று முடிகிறது அந்தத் தலையங்கம்.

இதற்கு முந்திய இதழில், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் எழுதியிருந்த வாழ்த்துக் கவிதை இது:

'திரைகடல் மீது
பரிதி எழுந்தே
அரசுவீற் றிருந்தான்
அழகொளி வீசி!
வாழிய பரிதி,
வண்மைத் திருநாள்!

இந்நாள் பொங்கல்
இட்டு மகிழும்
தென்னாட்டு மக்களின்
திருவென ஓங்கி
'முரசொலி' நாளும்
முன்னேற்றம் எய்திட

என்மன மார
யான்வாழ்த்து கின்றேன்;
என்றும் முரசொலி
இனிது வாழியவே!

வீழிய பகைவர்!
நாளும்
வாழிய திராவிட
மக்கள் நன்றே!'

**- பாரதிதாசன்**

இவ்வாறு திருவாரூரிலிருந்து 1948களில் வெளிவந்த 'முரசொலி' வார இதழ்களிலே இடம்பெற்ற தலையங்கங்களிலே மட்டுமல்ல; இட நிரப்புச் செய்திகளிலே (Space Filler) கூட கலைஞரின் கனல் தெரிப்பது போன்ற சூடான, கட்டிவெல்லம் போன்ற இனிப்பான, தென்றல் தவழ்வது போன்று இதமான, புயல் வீசுவது போன்று வேகமான தமிழ் நடையினை நம்மால் காணமுடிகிறது.



**கல்வி என்பது
ஒரு மனிதனுக்குக்
கற்பிக்கப்பட வேண்டிய
அவசியமெல்லாம்,
ஒருவன் தனது வாழ்நாளில்
சுதந்திரத்தோடு
வாழ்வதற்கு அவனைத்
தகுதிப்படுத்துவது
என்பதேயாகும்.**

**- தந்தை பெரியார்**

ஆனால் - காகிதம் வாங்க, அச்சிட, 'பார்சல்' அனுப்ப, அஞ்சல் தலை ஒட்ட என்று எல்லாவற்றுக்கும் பணம் அவ்வப்போது திரட்டவேண்டிய நிலை. இந்தச் சிரமம் தொடர்ந்து இருந்துகொண்டே இருந்தது; இதன் காரணமாகக் கலைஞரின் வீட்டிலிருந்த நகை, பாத்திர மெல்லாம் கூட அடகுக்கும் விலைக்கும் போக வேண்டிய சிரமம்; *படமுடியாதினித்துயரம் பட்டதெல்லாம் போதும்* என்கிற வடலூராரின் நிலைக்கே வரச் செய்தது கலைஞரை.

அச்சான 'முரசொலி'யை மடிப்பதில், கட்டிய பார்சலைத் தலையில் சுமந்து கொண்டு திருவாரூர் ஓடம்போக்கி ஆற்று மூங்கில் பாலத்தின் வழியே அஞ்சலகம் செல்லுவதில் எல்லாம் கலைஞர் அவர்கள் அயராது பாடுபட்டார்.

வெறுங்கையாலா முழம் போடமுடியும்? "அந்த 'முரசொலி' வார இதழும், ஏறத்தாழ 25 இதழ்கள் வெளிவந்ததோடு திராவிட இயக்க இளைஞர்களிடையே எழுச்சியூட்டி வந்த தன் பயணத்தை நிறுத்திக்கொண்டது" என்கிறார், கலைஞரின் நிழல்போலிருந்த செயலாளர் திரு கு.தென்னன் அவர்கள்.

பள்ளி மாணவப் பருவந்தொட்டே இவ்வாறு கலைஞர் அவர்களுக்கு ஏற்பட்ட தமிழ்க்காதல்தான், இன்றைக்கு அவரை இந்த அளவிற்கு, உயர்த்தி தமிழ்ச் சமுதாயத்தின் உதயசூரியனாக ஒளிமுகம் காட்டச் செய்திருக்கிறது; குன்றின் மேலிட்ட விளக்காக்கி சுடர்விடச் செய்திருக்கிறது என்பதே உண்மை.

### கலையுலகில் கலைஞர்

திருவாரூரிலிருந்த கலைஞர் அவர்கள், கலைத்தாயின் கடைக்கண் பார்வைக்கு ஆளாகி - திரையுலகினரால் அழைக்கப்படவே, சேலம் மாடர்ன் தியேட்டர்சில் சில காலம் பணியாற்றிவிட்டுச் சென்னைக்கு வந்து சேர்ந்தார். 8.3.1954ல் கலைஞரின் கனல் தெறிக்கும் வசனத்தோடு *'மனோகரா'* திரைப்படம் வெளிவந்தது.

இதற்குச் சற்று முன்னாலிருந்தே-சென்னையிலிருந்து 'முரசொலி' வார ஏடு வெளியிடும் எண்ணம் வலுப் பெற்றிருந்தது. ***2.4.1954ல் அந்த எண்ணம் ஒரு வழியாக ஈடேறி-சென்னையிலிருந்து முதலாவது 'முரசொலி' வார ஏடு அச்சில் வெளிவந்தது - 8 பக்கங்கள்.***

பெரும் சிக்கலுக்குப் பின், சென்னை-சூளையில் உள்ள பாரதி அச்சகத்தில்தான் முதல் இதழ் அச்சிடப்பட்டது.

'மனோகரா' திரைப்படக் கதை-வசனத்தைப் புத்தகமாக வெளியிட விரும்பினார் கலைஞர்; அண்ணா சாலையில் இருந்த பாரத தேவி அச்சகத்தில் அச்சிட்டு அது வெளியிடப்பட்டது; பல்லாயிரக் கணக்கில் விற்பனையான அந்தப் புத்தகத்தால் வந்த பணமும் 'முரசொலி' வார வெளியீடு தடையின்றி வெளிவரத் தக்க பலம் சேர்ந்தது.

சென்னை-இராயப்பட்டை பகுதியில் சீனிவாசப் பெருமாள் சந்நிதி தெருவில் 'முரசொலி' அலுவலகம் அமைந்தது; ரூ.35 வாடகை; சி.டி.எம். (C.D.M.) எனச் சுருக்கமாகக் கூறப்படும் சி.தெட்சணாமூர்த்தி என்கிற கலைஞரின் நண்பர்தான் அலுவலக நிர்வாகியாக அப்போதிருந்தார்.

### சொந்தக் கட்டடம்

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பார்களே? அதைப்போல-முதல் முரசொலி இதழே 3000 படிகள் அச்சிடப்பட்டன. இரண்டாவது இதழ் 10,000, மூன்றாவது இதழ் 20,000, நான்காவது இதழ் 25,000 என்று 'முரசொலி'யின் விற்பனை எண்ணிக்கை நாளொருமேனி பொழுதொரு வண்ணம் உயர்ந்துகொண்டே சென்றது. சில மாதங்களிலேயே அந்த எண்ணிக்கை 40,000-த்தைத் தாண்டியபோது, இந்த அலுவலகம் போதாது என்கிற நிலையிலேதான் ஆயிரம் விளக்குப் பகுதியில் அண்ணா சாலையிலேயே, அப்துல் காதர் என்பாரின் கட்டிடமொன்று 'முரசொலி' அலுவலகத்திற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்டது. பெருமுயற்சிக்குப்பின், நாளடைவில் அது சொந்தக் கட்டடம் ஆகியது. சொந்தமாக மிஷின் வாங்கப்பட்டது. ஆயிரம் விளக்கில் இப்போது 'ஸ்டேட் பேங்க்'கின் கிளை அலுவலகம் இருக்கிறதே? அதே இடத்தில்தான் அந்தக் கட்டிடம் அமைந்திருந்தது.

**1942ல் கலைஞரின் கையெழுத்து**




**1962ல் கலைஞரின் கையெழுத்து**



சென்னையிலிருந்து 2.4.1954 வெள்ளியன்று வெளியிடப்பட்ட முதல் 'முரசொலி' வார ஏட்டின் முன் பக்கம் தலைப்பில், *'முரசொலி' வார இதழ் - 2 அணா - ஆசிரியர் மு.கருணாநிதி - முரசு 1 - ஒலி 1* என்ற விவரங்கள் இடம் பெற்றிருந்தன.

தாம் சட்டமன்ற உறுப்பினர் ஆவதற்கு முன்பே - 6.4.1956ல், சென்னை ராஜ்யத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிட வேண்டும் என்று 'முரசொலி' வார ஏட்டில் எழுதிய தனிச்சிறப்பும் கலைஞருக்கு உண்டு.

திருவாரூரிலிருந்து வெளியான 'முரசொலி' துண்டுப் பிரசுரத்தின் அளவு 1/8 டெம்மி அளவு; சென்னையிலிருந்து அச்சியற்றி வெளியிடப்பட்ட முரசொலி வார ஏட்டின் அளவு 'கிரவுன்' சைஸ் ஆகும்.

*'கடமை தீர்த்தது வங்கம் - காத்திருக்கிறது திராவிடம்'* - என்பதே அந்த முதல் ஏட்டின் முதல் பக்கக் கட்டுரை. எழுதியவர் ஆசிரியரே. 'மு.க.' என்று மட்டும் பெயர் போடப்பட்டிருந்தது.

*'மூனா கானா', 'மாலுமி', 'எழுத்தாணி', மூக்காஜி'* - போன்ற பெயர்களிலும் அவர் சிறுகதை, தொடர்கதை, கட்டுரை, கவிதை, நாடகம், இலக்கியத் தொடர்களையெல்லாம் எழுதி வந்தார். *'கடைசிப் பக்கம்', 'சுழல் விளக்கு', 'பொன்முடிக்குக் கடிதம்'* ஆகிய சிறப்புப் பகுதிகளில் கலைஞரின் கைவண்ணங்கள் இடம் பெற்றன. அதைத்தொடர்ந்து 'நீட்டோலை', 'உடன்பிறப்பே' கடிதங்கள் வெளிவரலாயின.

(1976ல் முரசொலி நாளேட்டில், கரிகாலன் பதில்கள்• வினா-விடைப் பகுதி தொடங்கப்பட்டது).

அறிஞர் அண்ணா அவர்களும் மற்ற கழகத் தலைவர்களும் அறிவகத்தை அடுத்து அடிக்கடி வந்து 'செல்ல ஏற்ற இடமாகியது 'முரசொலி' வார ஏட்டு அலுவலகம். 1960 ஜூலை வரை இந்த வார ஏட்டின் பயணம் தொடர்ந்தது.

'முரசொலி' வார ஏட்டிலேதான் கலைஞர் தமது *புதையல், வெள்ளிக்கிழமை, சுருளிமலை, ரோமாபுரிப் பாண்டியன்* ஆகிய தொடரோவியங்களை எழுதினார்.

இப்படியெல்லாம் அரும்பாடுபட்டுத் தொடங்கி நடத்தப்பட்ட முரசொலி, பின்னர் *17.09.1960 முதல் நாள் ஏடாகவும்* வளர்ச்சி பெற்றதை நாடறியும். இவ்வாறெல்லாம் வளர்ந்த 'முரசொலி'தான் - திருவாளர்கள் மாறன், கவிஞர் கருணானந்தம், கே.சொர்ணம், அமிர்தம், பி.சி.கணேசன், அடியார், ஏ.கே.வில்வம், சிவ.இளங்கோ, எஸ்.எஸ்.தென்னரசு, நாஞ்சில் மனோகரன், செல்வம், பா.ஜெயப்பிரகாசம், மாமூலன், பி.எல்.ராஜேந்திரன், என்.வி.கலைமணி, மா.பாண்டியன், கோ.தினகரன், விசுவலிங்கம், பெரியவர் ஆசங்கரையா, அதியமான், இருகூரான், மணிமொழி, சீனிவாச மூர்த்தி, நா.கிருஷ்ணமூர்த்தி, ஓவியர் செல்லப்பன், முருகேசன் ஆகியவர்களையெல்லாம் அரசியல் விற்பன்னர் களாக, திரைப்படத்துறை வசனகர்த்தாக்களாக, கதாசிரியர் களாக, எழுத்தாளர்களாக, கட்டுரையாளர்களாக, ஓவியர்களாக, பத்திரிகையாளர்களாகவெல்லாம் தமிழகத்திலே நிலையுயர்த்தி நிமிர்ந்து நடைபோடச் செய்தது.

கனகசுந்தரம், சிடிஎம்., கரந்தை சண்முக வடிவேலு, 'பாய்' எனச் செல்லமாக அழைக்கப்பட்ட மோகன்தாஸ், மல்லிகார்ஜுணன், செல்வம் போன்ற நல்ல பத்திரிகை அலுவலக நிர்வாகிகள் உருவாகச் செய்தது.



**மகிழ்ச்சி இல்லாத இல்லம் ஓர் இருண்ட வீடு.**

**அங்கே இடரும் இன்னலுமே அதிகரிக்கும்.**

**தந்தி தளர்ந்த வீணையிலிருந்து**

**இனிய நாதம் எங்ஙனம் கிளம்ப முடியும் ?**

**- அறிஞர் அண்ணா**

### 'முரசொலி' மாறன்

'முரசொலி' வார ஏட்டிலும், நாள் ஏட்டிலும் கலைஞர் எழுதிய கடிதங்களை வகையுறத் தொகுத்து, திரு.பனையப்பன் என்பாரின் 'அபிராமி பதிப்பகம்' மூலம் புத்தகங்களாகப் பத்துத் தொகுதிகள் வெளியிடச் செய்த சிறப்பு, என்னுடைய கரங்களுக்கு உண்டு.

'முரசொலி' வார ஏட்டில் கார்ட்டுன்களும், நகைச்சுவைத் துணுக்குகளும் தொடர்ந்து வெளிவரலாயின.

'மயிலே மயிலே சிறகு போடு' என்றால் போடாது; எப்போதாவதுதான் போடும்' என்று *உவமைக் கவிஞர் சுரதா* பற்றி, அறிஞர் அண்ணா கூறியதுண்டு; அப்படிப்பட்ட சுரதாவிடமிருந்தே 'முரசொலி' வார ஏடு தொடர்ந்து கவிதைகளை எழுதி வாங்கி வெளியிட்டு வந்தது.

வார ஏடான 'முரசொலி' ஆசிரியராக இருந்து, பிற்காலத்தில் மத்திய தொழிலமைச்சராகப் புகழ்பெற்றுத் திகழ்ந்த திரு.முரசொலி மாறன் அவர்கள், தமது முதல் சிறுகதையான 'காட்டுப்பூனை'யை அந்த ஏட்டில்தான் எழுதினார். 'கிரேக்கப் புராணம்', 'கலைத்தோட்டம்' ஆகிய தொடர் கட்டுரைகளையும், வேறுபல எழுத்தோவியங்களையும் தம் திறம் பளிச்சிடுமாறு தொடர்ந்து எழுதிடலானார்; பெரும்பாலானவற்றில் அவர் ஏனோ தமது பெயர் போட்டுக்கொண்டதில்லை!

'பிறைவானம்' என்ற சிறுவர் பகுதியைத் திரு.கே.சொர்ணம் தொடர்ந்து எழுதிவந்தார்.

வாசகர் கடிதங்கள் *'உங்கள் பார்வை'* என்ற பெயரிலும், கலையுலகச் செய்திகள் 'இயல் இசை கூத்து'ப் பகுதியிலும் இடம்பெற்றன. *'நில் நண்பா! எங்கே ஓடுகிறாய்?'*, 'அந்துமணி' ஆகிய பகுதிகளும் இடம்பெறலாயின.

'முரசொலி' வாரஏட்டைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிடத்தக்க சம்பவம் என்னவென்றால் 1948 தூத்துக்குடி மாநாட்டில், அண்ணாவைப் பற்றி எம்.ஆர்.ராதா அவதூறாகப் பேசிவிட்டார். அதைக் கண்டித்து-'**நடிகவேள் மாநாட்டில் நஞ்சு கலந்தார்**' என்று கலைஞர் எழுதி, தடம்புரளும் தன்மை அண்ணாவுக்கில்லை என்பதை விளக்கி எழுதினார். அதன் மூலம் அண்ணா பெற்ற மக்கள்சக்தி அளவற்றதாகும்.

இன்னொரு முக்கியச் சிறப்பு '**கலைஞரின் குறளோவியம்**' முதன்முதல் வார ஏடு முரசொலியின்தான் இடம் பெற்றது.

'முரசொலி' பத்திரிகை வாரஏடாக இருந்த போதும் சரி: நாளேடான பிறகும் சரி: குறித்த நேரத்திற்கு வந்தாக வேண்டும். வெளியூரிலெல்லாம் குறித்த காலத்தில் கிடைத்தாக வேண்டும். பிழையின்றி வந்தாக வேண்டும் என்பது கலைஞர் அவர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது; இருந்துவருகிறது.

இதழானது ஏதாவது பிழையோடு வந்துவிட்டால் - அல்லது காலம் கடந்து வந்துவிட்டால் - அதன் காரணமாக நாங்களெல்லாம் வாங்கிக் கட்டிகொண்டதை இங்கே எழுதிக் காட்டமுடியாது. அப்படியெல்லாம் 'திமிசு' போடப்பட்டதாலேதான், இன்றைக்கும் பொது வாழ்வில் ஓரளவிற்கேனும் திடகாத்திரமாக நாங்களெல்லாம் இருக்கிறோம் என்பது முழுக்க முழுக்க உண்மை.

### கலைஞரின் கண்டிப்பு

கலைஞருக்கு அவ்வாறு வரும் கோபத்தால் சில நேரங்களில் அலுவலகத்தையே இழுத்துப் பூட்டிவிட்டு, அவரே சாவியை எடுத்துக் கொண்டு போய்விட்டதும் உண்டு; அவரோடு வெளியே வந்தவர்கள் வந்தவர்கள்தான்; உள்ளே சிக்கியோர் சிக்கியோர்தான்! பிறகு யாராவது போய், பாட்டியாரிடம் (கலைஞரின் தாயார் அஞ்சுகத்தம்மையார்) அழுது புலம்பி சாவியை வாங்கிவருவோம்.

கழகப் பணி காரணமாக எந்த ஊருக்குச் சென்றாலும் சரி; எதிர்ப்படும் தோழர்களிடம் *'முரசொலி குறித்த நாளில் வருகிறதா?... படிக்கிறீர்களா?... எப்படியிருக்கிறது?'* என்றெல்லாம் கேட்பது கலைஞர் வழக்கம். முதலமைச்சராக உள்ள இப்போதும்கூட அப்படித்தான் - 'முரசொலி' மீது தனிக்கவனம்! ஆசிரியர் கலைஞரை அன்றும் சரி; இன்றும் சரி; - ஆசிரியர் என்றுதான் நாங்கள் குறிப்பிடுவோம்.

1962ஆம் ஆண்டில், 'முரசொலி' தினசரியான பிறகு ஒருமுறை, தம் சொந்த ஊரான திருவாரூருக்குச் சென்றிருந்த அவர், அதேபோல் ஒரு தோழரிடம் விசாரிக்கப்போய், விஷயம் விபரீதமாகிவிட்டது. வந்த மனிதர், "நேற்றைய முரசொலிதான் இன்று வந்தது" என்று கூறிவிட்டார்; போதாக்குறைக்குத் தம் கையிலிருந்த அந்த ஏட்டினையும் அவரிடம் கொடுத்து விட்டிருக்கிறார்.

அவ்வளவுதான், அஞ்சலட்டை ஒன்று வாங்கி, உடனே 'முரசொலி' நிர்வாகியாக அப்போது இருந்த திரு.மல்லிகார்ஜுணனுக்கு, ஒரு கடிதத்தைக் கோபமும், கிண்டலும் குழைத்து எழுதிப்போட்டுவிட்டார் கலைஞர்.

***ஒருவன் தவறு செய்திருந்தால்,***
***மற்றவன் அதைப் படிப்பினையாக***
***எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர,***
***'நீ தவறு செய்தாய், ஆகவே நானும்***
***அதைச் செய்கிறேன்' என்று***
***சொல்லுவது அதற்குப் பரிகாரம் ஆகாது.***

**- கலைஞர்**

அந்தக் கடித நகல் நமக்குக் கிடைத்தது; 'யாம் பெற்ற இன்பம், மற்றவருக்குத் துன்பம் என்றால் நமக்கு இன்பம்தானே ?' அந்த வகையில், இதோ அந்தக் கடிதத்தைக் காட்டுகிறேன்.

'**மு. கருணாநிதி** — திருவாரூர் 25.8.62

**அன்புள்ள மல்லிகார்ச்சுனன் அவர்கட்கு,**

நேற்று 24ந் தேதி முரசொலி வரவில்லை. இன்றுதான் வந்தது. இன்று வரவேண்டிய 25ந்தேதி முரசொலி நாளைக்கு வரும் போலும்! இப்படி மானக்கேடாக, பொறுப்பற்ற முறையில் பத்திரிகை நடத்துவதைவிட, உங்கள் அபாரத் திறமையைப் பயன்படுத்தி அலுவலகத்தை இழுத்து மூடிவிடுங்கள்; பலரது குறிக்கோள் உங்கள் மூலம் நிறைவேறட்டும்.

- மு.கருணாநிதி'

– இதுதான் அந்தக் கடிதம்!

எதிலும் ஒழுங்குமுறை வேண்டும் என்ற அவருடைய அழுத்தமான அக்கறைதான் இதற்கெல்லாம் காரணமே தவிர வேறல்ல என்பதனை நீங்கள் உணரவேண்டும். இக்கடிதத்தின் கடைசியில்தான் எவ்வளவு கேலியும் கிண்டலும் தொனிக்கிறது பார்த்தீர்களா ?

### பெரியார், அண்ணா, கலைஞர்

அயராத அரசியல் பணி, கலையுலகத் தொண்டு, முதலமைச்சர் பொறுப்பு போன்ற ஒய்வற்ற பலவித உழைப்புகளுக்கு நடுவே இன்றைக்கும் கலைஞர் அவர்கள் 'முரசொலி'யின் ஒலி ஓங்கி ஒலிக்கச் செய்வதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்; இதற்கு முழுமுதல் காரணமே அவர் அதைத் தன் முதல் ஏடாக மட்டுமல்ல - முதல் குழந்தைபோலவே கருதிப் பேணிக் காத்துப் பராமரித்து வருகிறார் என்பதை முன்னரே பார்த்தோம்!

அந்தக் காலத்தில் - அதாவது 1930-40ஆம் ஆண்டுகளில், தந்தை பெரியார் அவர்களின் பச்சை அட்டைக் 'குடிஅரசு' ஏடும், 1940-50களில் அறிஞர் அண்ணாவின் 'திராவிட நாடு'ம் எப்படி இளைஞர்தம் உள்ளங்களில் தனியாட்சி நடத்தி வந்தனவோ, அதைப்போலவே 'முரசொலி'யும் இளைஞர்தம் உள்ளத்தையெல்லாம் உணர்ச்சி ததும்பும் நடையில், கிளர்ச்சியூட்டும் கருத்துக்களை மாற்றுக் கட்சியினரின் நெஞ்சங்களிலும் பண்படுத்தி விதைக்கும் அளவில் தாங்கி விளங்கிய—விளங்கி வருகிற தன்னிகரற்ற ஏடுதான் முரசொலி! இதில் இரண்டு விதக் கருத்துகளுக்கு இடமே இல்லை; இதை யாராலும் மறக்கவும் முடியாது—மறுக்கவும் இயலாது.

ககலைஞரின் 'சிங்க நடையும் சிங்காரத் தென்றல் நடையும், பொங்கு கடல் நடையும், புரட்சிக் கவிநடையும்' இப்போதும் அதில் இடம் பெறுகிறது.

எனவே, முரசொலியின் வளர்ச்சி தமிழின் வளர்ச்சி; தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சி நமது இன மான முன்னேற்றத்திற்கான மைல் கல்; முரசொலியின் பணி, தமிழ் அன்னைக்குப் புதிய பல அணிமணிகளைப் பூட்டி மகிழ்ந்திடச் செய்த பெரும் பணி-அரும்பணி; கண்மூடிக் கருத்துக்களெல்லாம் மண்மூடச் செய்து, மூடநம்பிக்கையாம் முடைநாற்றம் வீசும் சூழலிலிருந்து கைதூக்கிவிட்டு நமக்கெல்லாம் நிம்மதியும், நீங்கா மகிழ்ச்சியும், எழுச்சியும் தரும்பணியாகும் என்பது உண்மை, வெறும் புகழ்ச்சியல்ல! ●

# தொழில் முனைவோர் திட்டம் மகளிர் முன்னேற்றத்திற்கொரு கலங்கரை விளக்கம்



மகளிர் தினமாக மார்ச் மாதம் 8 ஆம் நாள் உலகமெங்கும் கொண்டாடப்பட்டது. ஒரு சமுதாயத்தின் முன்னேற்றம், அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மகளிர் முன்னேற்றத்தைப் பொறுத்து அமைகிறது. இருளை, விலக்க வெளிச்சம் தேவைப்படுவது போல் சமுதாயத்திலுள்ள வறுமையைப்போக்க, பொருளாதார முன்னேற்றம் அவசியமாகிறது. தமிழ்நாடு அரசு தொழில் வணிகத் துறை இதனை உணர்ந்து, பெண்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்காகத் திட்டங்கள் வகுத்துச் செயல்பட்டு வருகிறது.

## மகளிர் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம்

மகளிர் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தொழில் தொடங்குவதற்குரிய ஓர் பயிற்சித் திட்டத்தைத் தமிழக அரசு அறிவித்துள்ளது. அத்திட்டம் பெண்களின் சமூகப் பொருளாதாரத் தரத்தினை மேம்படுத்தப் பெரிதும் பயன்படுகிறது.

ஆண்டுக்கு ஆயிரம் பெண்களுக்குத் தொழில் முனைவோர்களுக்கான பயிற்சி அளிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன், இத்திட்டம் 1990ஆம் ஆண்டு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டு, 1991ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் உணவு பக்குவப்படுத்துதல், ஆயத்த ஆடைகள் தயாரித்தல்,தோல் ஆடைகள் தயாரித்தல், பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்தல், அழகுப் பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் தயாரித்தல் போன்ற தொழில்களை வகைப்படுத்தி, இதுபோன்ற தொழிலில் உற்சாகமுள்ள மகளிர் தொழில் முனைவோர் களைக் கண்டறிந்து, தக்க பயிற்சி அளிக்கப்படுகிறது.

## அடிப்படைத் தகுதிகள்

தொழில் முனைய விருப்பமுள்ள பெண்கள், குறைந்தபட்சம் 10 - வது வகுப்பு வரை படித்திருக்க வேண்டும். 18 வயது நிறைவடைந்திருக்கவேண்டும். தொழிலைத் தொடங்கி அதனைத் திறம்பட







நடத்துவதற்கான தன்னம்பிக்கை இருக்கப்பெற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்களாக வரவேற்கப்படுகிறார்கள்.

## உதவி செய்யும் அலுவலகம்

தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத் தொழில் மையங்கள் உள்ளன. மகளிர் தொழில் முனைவோர் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவரோ, அந்த மாவட்டத்திலுள்ள மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளரை அணுகி, தொழில் முனைவோர்களுக்கான விதிமுறைகளைக் கண்டறிந்து மேற்கொள்ளலாம். சென்னை மாநகரத்தைச் சேர்ந்த தொழில் முனைவோர், அண்ணா சாலையிலுள்ள மண்டலத் தொழில் வணிக இணை இயக்குநர் அலுவலகத்தை அணுகிப் பயன் பெறலாம். மேற்கண்ட மாவட்டத் தொழில் மையங்கள் மற்றும் சென்னையிலுள்ள மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், மகளிர் தொழில் முனைவோர் எந்தத் தொழிலில் அதிக ஈடுபாடு காட்டுகிறாரோ அதனைக் கண்டறிந்து அதற்குரிய பயிற்சிகளை வழங்குவது மற்றும் அந்தத் தொழில் தொடங்குவதற்குரிய உதவிகள் போன்றவற்றை அளிக்கின்றன. மகளிர் தொழில் முனைவோர்கள் தேர்வு செய்யப்பட்டவுடன் அவர்களுக்கு ஒரு மாதம் மேலாண்மைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து, பல்வேறு தொழிற்சாலைகளைக் கண்டறிந்து அவர் தாம் உற்பத்தி செய்யும் பொருட்கள் எந்த அளவுக்கு விற்பனை ஆகும் என்பதை அறியும் சந்தை ஆய்வு மற்றும் திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் போன்றவைகளில் தக்க நிபுணர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சிபெறும் பயிற்சியாளருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.300/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும் இத்திட்டதின் கீழ் பயிற்சி பெற்ற மகளிர் தொழில் முனைவோர்களுக்குத் தொழில் தொடங்குவதற்குத் தேவைப்படும் மூலதன விளிம்புத் தொகையைத் (Marginal Money) திரட்ட முடியமால் பல பெண்கள் அல்லல் படுவதைக் கண்டறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கருணை உள்ளத்தோடு பயிற்சி பெற்ற அந்தப் பெண்களுக்குத் தேவைப்படும் மூலதன விளிம்புத் தொகையினை மானியமாகவே மூலதனத்தில் 10 விழுக்காடு தொகையை அரசே வழங்கும் என்று அறிவித்துள்ளார். இத்தொகையின் அதிகபட்ச அளவு 50,000 ரூபாய் வரை இருக்கிறது. இந்த உதவி உண்மையிலேயே தொழில் முனைவோருக்கொரு புதுத் தெம்பினை உண்டாக்கி யிருக்கிறது.

| ஆண்டு | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை | பயிற்சி பெற்றவர்களில் தொழில் தொடங்கியோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1991 - 92 | 765 | 519 |
| 1992 - 93 | 700 | 667 |
| 1993 - 94 | 745 | 531 |
| 1994 - 95 | 986 | 681 |
| 1995 - 96 | 1000 | 546 |
| 1996 - 97 | 1250 | 397 |
| 1997 - 98 | 1250 | ★ |

★ 1997 - 98ல் அனைத்து மாவட்டத் தொழில் மையங்களிலும் பயிற்சி முடிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்றவர்களுக்கு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி கிடைப்பதற்குத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொழில் தொடங்குவதற்குத் தேவையான முதலீட்டைப் பெறுவற்குத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து குறைந்த வட்டியில் கடன் பெறுவதற்கு உதவியளிக்கப் படுகிறது. இதைத் தவிர உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்யவும், மற்றும் மூலப் பொருள்களைத் தட்டுப்பாடின்றிப் பெறுவதற்கும் அரசு தக்க



ஆலோசனைகளும் உதவிகளும் அளிக்கிறது. எனவே, ஊரகப் பகுதிகளிலும் நகரப் பகுதிகளிலும் படித்து வேலைதேடி அலைகின்ற பெண்கள், தாங்களாகவே சொந்தமாக ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்து தொழிலதிபர்கள் ஆவதற்கும், மேலும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும் மகளிர் தொழில் முனைவோர் திட்டம் மிகவும் உதவியாக இருக்கின்றதென்றால் அது மிகையாகாது.

### தொழில் முனைவோர் பயிற்சி மையம்

நடப்பாண்டில் அரசு தொழில் முனைவோர் பயிற்சி மையம் ஒன்றைச் சென்னை கிண்டியில் ரூபாய் 5 இலட்சம் செலவில் அமைத்து வருகிறது. இதில் பெண்களுக்காக வாரத்தில் 2 நாட்களுக்குத் தொழில் ப்யிற்சி உதவித் தொகையான 500 ரூபாயும் அவர்கள் வேலை செய்யும் நிறுவனத்திடமிருந்து 500 ரூபாயும் ஆக மொத்தம் மாதம் ஒன்றுக்கு 1000 ரூபாய் பயிற்சி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் 30 விழுக்காட்டிற்கு மேல் பெண் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ள தொழில் நிறுவனங்களுக்கு முதலீட்டு மானியத்தில் கூடுதலாக 5 விழுக்காடு சலுகை வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

பெண்களை உயர்த்தும் தொழில் முனைவோர் திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டம் பொருளாதார முன்னேற்றத்தை அளிப்பதோடு நிறைய வேலைவாய்ப்பையும் உருவாக்குகிறது. எனவே, படித்த கிராமப்புறப் பெண்கள் இத்திட்டத்தைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளத் தொழில் வணிகத் துறை இருகரம் கூப்பி அழைக்கிறது.

**ந. முருகன் இ.ஆ.ப,**
தொழில் ஆணையர் மற்றும்
தொழில் வணிக இயக்குநர்.

---



### முகங்களைத் தேடுகிறேன்!

முகங்களைத் தேடுகிறேன்
வார்த்தைகளைவிடவும் உண்மையான -
ரசிக்கத்தக்கதில்லையெனினும் சொருபமான -
வேஷங்களைக் கலைத்துவிடும் நிர்பந்தங்கொண்ட
மாறும் பாவங்களில் நேர்மை நிறைந்த
யதார்த்தங்களுடனான
அன்பின் குளுமையை உணர வைக்கிற
முகங்களைத் தேடுகிறேன்;
என் முகத்தையும் அவ்வப்போது
கண்ணாடியில் பார்த்துக் கொண்டே!....

- ரவி சுப்பிரமணியன்



# பொருளாதாரப் பின்னணியில் பெண்

**வா**ழ்க்கை இயற்கையைப் போலச் சிக்கலானது. அதுவும் பிற விலங்குகளின் வாழ்க்கையில் இல்லாத புதிய ஒரு பரிமாணத்தோடு கூடிய சிக்கல் வாய்ந்தது. இந்த மனித விலங்கு வாழ்க்கை; அதுதான் ஆண் / பெண் உறவு; மானுடப் பிரச்சினை வரலாற்றின் அடிப்படை அலகாகக் கொள்ளத்தக்கது இந்த ஆண்/பெண் உறவுமுறைதான், மற்ற விலங்குகளின் வாழ்வில் இந்த ஆண்/பெண் உறவுமுறை மறு உற்பத்திக்கான இயற்கையின் தேவையை நிறைவேற்றுவதாக மட்டுமே அமைந்திருக்கிறது. குறிப்பிடப்பட்ட பருவ எல்லைக்குள் இயங்குவதாக மட்டுமே அமைந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், மனித வாழ்வில் அமைந்துள்ளது போல, இந்த அளவிற்கு, ஆண்/பெண் என்ற மனோபாவம் கூட அமைந்திருக்குமா என்பது சந்தேகமே. இவ்வாறு மனிதனின் ஆண் / பெண் உறவுமுறை சிக்கலாக அமைவதற்குக் காரணம், இவன் இயற்கையை எதிர்கொள்ள அமைத்துக் கொண்ட மொழிவழிப்பட்ட சமூகப் பண்பாடு என்கிற கட்டுமானமே ஆகும். இந்தச் சமூகப் பண்பாட்டை வடிவமைப்பதில் பொருளாதாரச் சூழல் எத்தகைய செல்வாக்குச் செலுத்துகிறது. குறிப்பாக ஆண் / பெண் உறவில் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குவதற்கு இக்கட்டுரையில் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

மனிதனது அனைத்து முயற்சிகளுக்கும் முதன்மையான காரணம், அவனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதே ஆகும். ஆனால் மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் முதலியவை திரும்பத் திரும்ப ஏற்படக் கூடியவை! எல்லைக்குள் அடங்காதவை! ஆனால் இவனுடைய உழைப்புச் சக்தியும், உற்பத்திக்கான காரணிகளும் எல்லைக்கு உட்பட்டவை! மேலும் இக்காரணிகள் ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களின் உற்பத்திக்கு பயன்படக்கூடியவை! அன்றியும், ஒரு காரணியை ஒரு பொருளின் உற்பத்திக்குப் பயன்படுத்தினால், வேறொன்றுக்கு அது பயன்படாமல் போய்விடும். இத்தகைய நெருக்கடியான சூழலில், மனிதன்பால் "தேர்ந்தெடுத்தல்" என்ற கடினமான பணிவந்து விழுகிறது! இவ்வாறு காரணிகள் குறைவாக இருப்பதால், (எல்லைக்கு உட்பட்டதாக இருப்பதால்) எந்தெந்த தேவைகளுக்கு முதலிடம் அளிப்பது, அதையும் எதுவரையில் பூர்த்தி செய்து கொள்ள முடியும்? காரணிகளின் தன்மை என்ன, என்றெல்லாம் தீர்மானித்தே ஆகவேண்டிய நெருக்கடிக்குள் மனிதன் தள்ளப்படுகிறான். இத்தகைய சிக்கலான தேர்வுகளை மேற்கொள்ள மனிதன் எடுக்கின்ற நடவடிக்கையைப் பற்றிப் படிப்பதே "பொருளாதாரயியல்" எனப்படுகிறது.

மேற்கண்ட "தேர்வுகளை" நிர்ணயிப்பதில் 'பண்பாடு' எனப்படும் மனித வாழ்வின் மற்றொரு பரிணாம வளர்ச்சி பெரும்பங்கு வகிக்கிறது. ஒவ்வொரு பண்பாடும் பொதுவான சில கருத்தாக்கங்களை, மதிப்பீடுகளைக் கொண்டு விளங்குகின்றது! இந்த மதிப்பீடுகளின் அடிப்படையில்தான் ஒவ்வொரு மனிதனும் தன் தேவைகளைத் தீர்மானிக்கிறான்! எனவே, பண்பாடு என்பது மேற்கண்ட பொருளாதார நடவடிக்கையில் பெரும்பங்கு வகிக்கிறது என்பது தெரிகிறது! அதே நேரத்தில் இந்தப் பண்பாட்டை வடிவமைப்பதில் பெரிதும் ஆதிக்கம் செலுத்துவது, அடிப்படையில் ஆண்/பெண் உறவு முறையாக இருக்கிறது! ஆக, இறுதியில் அப்படியும் இப்படியுமாகப் பொருளாதாரக் காரணிகளில் செல்வாக்குக்கு உட்படுகிற ஒரு கூறாக ஆண்/பெண் உறவுமுறை வந்து சேர்கிறது! எனவேதான் சுதந்திர இந்தியாவில் ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார மாற்றங்கள், எந்த அளவிற்குப் பெண்களின் வாழ்நிலையில் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன. அவற்றின் தன்மை என்ன என்பதை விளக்குவதன் மூலம் ஒரு தந்தை வழிச் சமூகத்தில் பெண்ணின் நிலை என்ன என்பதை மேலும் ஆழமாக அறிந்து கொள்ளலாம் என நம்பப்படுகிறது!

### பொருளாதார வளர்ச்சியும் பெண்கள் மேம்பாடும்:

ஒரு நாட்டின் வளர்ச்சி நிலையைக் கணிக்கும் போது, பொதுவாக அந்நாட்டின் தனிநபர் வருமானத்தின் அளவு ஒரு குறியீடாக எடுத்துக் கொள்ளப்படும்! மேலும், ஒரு சமூகத்தில் நிலவும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் கணிப்பதற்கும், பல புதிய விவர உத்திகள் பொருளாதார நிபுணர்களால் வெற்றிகரமாகக் கையாளப்பட்டு வருகின்றன; ஆனால் சமூகப் பண்பாட்டு மாற்றங்களையும் வளர்ச்சிகளையும், கணிப்பதற்குச் சரியான புள்ளிவிவர முறைகள் திருப்திகரமாக இதுவரை அமையவில்லை; என்றாலும், பண்பாட்டு மாற்றத்தின் குறியீடாகப் பெண்களின் சமூக நிலையை எடுத்துக்கொண்டு ஆராய்ந்தால், பொருளாதார மாற்றத்திற்கும், பண்பாட்டு மாற்றத்திற்கும் இருக்கும் நெருங்கிய உறவை நன்கு வெளிக்கொணர முடியும்.

கிருஷ்ணா அஹூஜா படேல் உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெண்களின் மேம்பாட்டுக்கும் உள்ள உறவை ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். இவ்வாராய்ச்சிக்காகப் "பெண்கள் முன்னேற்றக் குறியீடு" என்றொரு புள்ளியியல் அட்டவணையைத் தயார் செய்துள்ளார். இப்புள்ளியியல் குறியீடு (1) பிரசவத்தின் போது இறந்து போகும் தாய்மார்களின் விகிதம் (2) பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம் (3) பெண்களின் வாழ்நாள் விகிதம் (4) பெண்களின் உயர்கல்வி விகிதம் (5) பெண்களின் வேலைப் பங்கேற்பு விகிதம் (6) பெண்களின் அரசியல் பங்கேற்பு விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது; இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள இப்புள்ளியியல் குறியீடு பெண்களின் உண்மை நிலையை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லைதான் என்று ஏற்றுக்கொள்ளும் படேல், மேலும் செம்மையாகக் கணக்கிட்டுத் தயாரிக்கப்படும் புள்ளியியல் குறியீடு வரும்வரை தன்னுடைய இந்தக் குறியீட்டு அட்டவணையைத் தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளலாம் என்றார்.

இந்தப் புள்ளியியல் ஆராய்ச்சியின்படி, இந்தியா பொருளாதார வளர்ச்சியில்

உலக நாடுகளின் 63-வது நாடாகவும், பெண்களின் முன்னேற்றக் குறியீட்டின்படி 76-வது நாடாகவும் உள்ளது என்கிறார் பட்டேல், மேலும் தன் ஆய்வில் கீழ்க்காணும் முடிவுகளையும் தருகிறார். அவற்றுள் குறிப்பிடத்தக்க சில வருமாறு:-

1. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அந்நாட்டுப் பெண்களின்



சமூகக் காரணங்கள் உள்ளன.

3. பெண்களுக்கெனத் தனியாகச் சமூகப் பொருளாதாரத் திட்டங்களை வகுத்துச் செம்மையாகச் செயல்படுத்தும் பின்தங்கிய நாடுகளில் முன்னேறிய நாடுகளின் நிலையை விடப் பெண்களின் நிலை மேம்பாடான முறையில் அமைந்துள்ளது.

பெண்களின் பின்தங்கிய நிலைக்கு முக்கியமான இரண்டு காரணங்களைப் படேல் முன் வைக்கிறார். (1) பொருளாதார வாழ்வில் பெண்கள் ஆண்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை. (2) இப்பொருளாதாரச் சார்பு அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ள பண்பாட்டுச் சூழல்! மேலும், ஒரு கருத்தைப் படேல் வலியுறுத்துகிறார். பெண்களுக்குப் பொருளாதார சுதந்திரம் கிடைத்தாலும் கூட, பழைய பண்பாட்டுச் சூழல் உடனடியாக மாற்றங்களுக்கு உட்படுவதில்லை, இந்நிலையில் பெண்களின் வாழ்க்கையைத் தீர்மானிப்பதில், நேரடியான பொருளாதாரக் காரணிகளைவிட அக்காரணிகளால் உருவாகிய பண்பாட்டுச் சூழல் பெரும்பங்கு வகிக்கிறது! எனவே பெண்கள் பொருளாதாரத்தில் சார்பற்ற நிலையை அடைவதுடன், ஆண்/பெண் சமத்துவத்திற்கு மனத்தைப் பக்குவப்படுத்தும் பண்பாட்டுச் சூழலையும் ஏற்படுத்த வேண்டும்! இதற்குப் பெண்களுக்கான பண்பாட்டுச் சூழல் எவ்வாறு அமைந்திருந்தது என்பதைச் சரியாகக் கணித்துக்கொள்வது நலம் பயக்கும்!

### பெண்ணும் சமயமும்:

இந்தியா மதச்சார்பற்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதால், இன்று உலகிலுள்ள பெரும்பாலான மதங்களும் இந்தியாவில் செழிப்புடன் - உரிமையுடன் - செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன! ஆனாலும் இந்திய மக்கள் தொகையில் 82% மக்கள் இந்துக்கள் ஆவர்! எனவே, பெரும்பான்மையான இந்திய மக்களின் மனோபாவத்தை வடிவமைப்பது இந்து சமயப் பண்புகளும் பழக்கவழக்கங்களுமே! பொதுவாகவே மானுடனின் மொழிக்குள் பெரும்பகுதியை மதக்கருத்துக்களே ஆக்ரமித்துள்ளதால், ஒவ்வொரு மனிதனும் மதத்தின் செல்வாக்கிற்கு அவனறியாமலேயே உள்ளாகி ஒரு மதவாதியாகவே வடிவமைக்கப்படுகிறான்! அதுவும் பெண்களைப் பொறுத்தவரை, அவர்களின் உளவியலை உருவாக்குவதில் மத நிறுவனங்களின் செல்வாக்கு அதிகமாகவே இருந்துவந்திருக்கிறது.

இந்து மதத்தில் பெண் தெய்வங்கள் மிகவும் சக்தி வாய்ந்ததாகக் காட்டப்படுகின்றன. 'சக்தி வழிபாடு' இந்து மதத்தின் பெரும்பிரிவாக விளங்குகிறது. துர்க்கை, ஆண் கடவுளால் அழிக்க முடியாத தீய சக்திகளை அழித்ததாகச் சமய நூல்கள் பலவாறு புனைந்து அவளைக் கொண்டாடுகின்றன. இவ்வாறு புராணங்களில் பெண் ஒருபக்கம் கொண்டாடப்பட்டாலும், மறுபக்கம், அவள் ஆணுக்கு அடங்கியிருக்கும் போதுதான் அவளது நற்குணங்களும் சக்தியும் அதிகரிப்பதாகவும் கூறப்படுகிறது. பெண், ஆணின் ஒரு பாதி என்கிறது இந்துமதத் தத்துவம்! அதே நேரத்தில் ஆண்-பெண் நிலைப்பாட்டை விளக்கும்போது, ஆண் 'விதை' என்றும், பெண் அதை ஏற்று விளைய வைக்கும் 'நிலம்' என்றும் அடையாளப்படுத்தப்படுகிறாள்! இத்தகைய அடையாளப்படுத்தல் மூலம், 'விதையே' விளைச்சலுக்கு மூலம் என்று ஆணாதிக்கத்தை நியாயப்படுத்த முயல்கிறது இந்துமதம்! மேலும், பல இந்து மதப் புராணங்களும், சடங்குகளும் ஆணுக்கு பெண் அடிமை என்ற கருத்தைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றன. (துபே,1988) இந்தக் கருத்தைத்தான் இன்றும் இந்தியத் தகவல் தொடர்புக் கருவிகள் மின்னணுவின் உதவியால் பல கோடி மடங்கு பெருகி விதைத்துக்கொண்டிருக்கின்றன.

### பெண்ணும் சமூகமும்!

இந்தியச் சமூகத்தில் பெண் என்பவள்; 'தாய்' (அ) 'மனைவி' என்ற நிலையில்தான் பெரும்பாலும் அடையாளப்படுத்தப் படுகிறாள்; எனவே, 'குடும்பம்' என்ற நிறுவனத்திலிருந்து பிரித்தறிய முடியாத ஒரு நிலையில்தான் அவளது வாழ்வு வடிவமைக்கப்பட்டுள்ளது; மேற்கத்திய நாடுகளில் கடந்த சில நூற்றாண்டுகளாகப் பின்பற்றப்படும் முதலாளித்துவப் பொருளாதார அரசியல் காரணமாக, அங்கே பெண்ணைத் 'தனியாக' ஒரு நபராகப் பார்க்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது; இன்று மேற்கத்திய நாடுகளில் பெண்களுக்கான விடுதலைக்குரல் ஓங்கி ஒலிப்பதற்கு இது ஓர் அடிப்படைக் காரணமாகும்!

இந்தியச் சமூகத்தில் 'பெண்' குழந்தை பிறந்த உடனேயே, 'வரப்போகிற ஒரு கணவனுக்காக வாழப்போகிற ஓர் அடிமை! அதற்காகத் தான் நாம் தயாரிக்கப்படுகிறோம்' என்ற மனோபாவத்தை அப்பெண் சிறுமியாக இருக்கும்போதே அடையும்படியாகக் குடும்பத்தின் நிர்வாக அமைப்புக்கள் அமைந்துள்ளன. எனவே, ஓர் இந்தியப் பெண் முன்பின் பழக்கமில்லா ஏதோ ஒரு ஆடவனுடன், திருமணத்தன்றே மனைவியாக, அடிமை வேலை செய்யத் தயாராகிவிடுகிறாள்! இந்த அடிமைப் பதவியும் அவளுக்குச் சாதாரணமாகக் கிடைத்துவிடுவதில்லை; 'வரதட்சணை' என்கிற கொடுமையை அவள் கடந்து வரவேண்டியுள்ளது. வரதட்சணைக் கொடுமைக்கு ஆளாகும் இந்தியப் பெண்களின் நிலைபற்றி அதிகம் கூறத்தேவையில்லை.



அண்மைக் காலங்களில், சேலத்தை அடுத்துள்ள கிராமங்களில் நடந்த பெண் சிசுக்கொலைகளைப் போன்ற நெஞ்சைப்பிளக்கும் சம்பவங்கள், இதற்கு ஓர் முக்கிய உதாரணம்.

இந்திய சமூகத்தில், பெரும் பகுதிகளில் தந்தைவழிச் சமூக அமைப்பே பின்பற்றப்படுகிறது. இத்தகைய குடும்ப அமைப்பில் பாலின வேறுபாட்டின் அடிப்படையில் வேலைப் பிரிவினைகள் அமைந்துள்ளன. வீட்டு வேலைக்குப் பெண்; வெளியில் வேலை செய்து பொருளைத் தேடுபவன் ஆண்! இதன் மூலம் ஆண் குடும்பத் தலைவன் என்றும், பெண் அவனைச் சார்ந்து அடங்கி நடக்க வேண்டியவள் என்றும், சமூகச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

தாய்வழிக் குடும்ப அமைப்பு நிலவும் சமூகங்களில் (கேரளாவில் நாயர் முதலிய சில சாதிகள், வடகிழக்கு மாநிலங்களில் வாழும் சில மலைச்சாதியினர்) பெண்களின் நிலை உயர்ந்துள்ளது என்று பல ஆய்வுகள் நிரூபிக்கின்றன. (கணேஷ் கமலா லார்லா ரிசிவோவ், 1993) எனவே, குடும்பத்தின் அதிகார அமைப்பு முறைக்கும், பெண் விடுலைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது தெரிகிறது; ஆகையால், பெண் விடுதலை என்பது குடும்பத்திலிருந்தே தொடங்கப்பட வேண்டிய ஒன்றாக நிலவுகிறது!



ஆண்-பெண் சமத்துவத்தை இந்திய அரசியல் சட்டம் வலியுறுத்துகிறது. பெண்களுக்கான உரிமையை வழங்க, பழைய பெண்ணடிமை முறையை ஒழிக்க (1) சதி ஒழிப்புச் சட்டம் (2) சிசுக்கொலைத் தடுப்புச் சட்டம் (3) தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் (4) விவாகரத்துச் சட்டம் (5) வரதட்சணைக்கு எதிரான சட்டம் (6) கருக்கலைப்புச் சட்டம் (7) சொத்துரிமைச் சட்டம் (8) பாலியல் வன்முறைக்கு எதிரான சட்டம் (9) பால்ய விவாக ஒழிப்புச்சட்டம் எனப் பலவிதமான சட்டங்களை இந்திய அரசாங்கம் இயற்றியுள்ளது. ஆனால் எளிதில் மாற மறுக்கும் பண்பாட்டுச் சூழலினால், இச்சட்டங்கள் எதிர்பார்த்த பயனைத் தரவில்லை.

இந்நிலையில் பெண்களுக்கான விடுதலையை வழங்குவதற்கேற்ற பண்பாட்டு மாற்றங்களை ஏற்படுத்த சிறந்த வழிமுறைகள் என்ன? பெண் கல்வியும், பெண்ணின் பொருளாதார விடுலையும்தான் என்று பலரும் ஒப்புக்கொள்கின்றனர். எனவே இவ்விரண்டிலும் சமகாலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இனிக் காணலாம்.

### பெண்ணும் கல்வியும்

கல்வி, கண்ணைத் திறக்கும் என்பது உண்மை! ஆனால் இந்தியாவின் கல்வி முறையும் பெண்ணை அடிமைப்படுத்தும் தந்தை வழியிலான சமூகப் போக்கை முன்னிலும் பல மடங்கு வலியுறுத்திப் போதிப்பதாகவே அமைந்துள்ளது; இந்தியாவில் இதுவரை கல்விக்காக அமைக்கப்பட்ட குழுக்கள் பலவும் இதே கருத்தை வலியுறுத்துகின்றன. சான்றாக-டாக்டர் இராதாகிருஷ்ணன் தலைமையிலான கல்விக்குழு தயாரித்து அளித்த அறிக்கையில், பெண்கல்வி, பெண்கள் வீட்டு வேலை செய்வதற்கான திறமைகளை வளர்க்கத் துணை செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகிறது. ஆனாலும் இத்தகைய இடர்ப்பாடுகளுக்கிடையிலேயும் பெண்கல்வி இந்தியாவில் ஓரளவிற்கு ஒப்பீட்டளவில் உயர்ந்துள்ளது எனலாம். அதனால் கல்வி தொடர்பான தேர்வுகளில் பெண்களின் தேர்வு விகிதம் அதிகரித்து வருவதைச் சான்றாகச் சொல்லலாம்; ஆனால் ஆண்களுடன் ஒப்பு நோக்கும்போது பெண் கல்வி போதுமானதாக இல்லை. மக்கள் தொகையில் 46.5% ஆக இருக்கும் பெண்களின் படிப்பறிவு விகிதம் 39.42% ஆகவும், ஆண்களின் படிப்பறிவு விகிதம் 63.38% ஆகவும் இருப்பதாக 1991-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு கூறுகிறது; பள்ளியில் இருந்து நின்றுவிடும் பெண்களின் விகிதம் 67.55%ஆகவும், ஆண்களின் விகிதம் 58.80% ஆகவும் இருப்பதாக 1987-88ஆம் ஆண்டு எடுத்த புள்ளிவிவரம் கூறுகிறது! கடந்த எண்பது ஆண்டுகளில் பெண்களின் கல்வி வளர்ச்சி 24% ஆகவும், ஆண்களின் கல்வி வளர்ச்சி 37% ஆகவும் இருக்கிறது.

பெண்களின் கல்வி வளர்ச்சியில் இந்நிலை நிலவுவதற்குப் பல காரணங்கள் உள! அவற்றில் பெரும்பங்கு வகிப்பது பண்பாட்டுக் காரணிகளே ஆகும்! ஆண் படித்தால் போதும் என்ற மனப்பான்மை; இளமைத் திருமணம் முதலியவை பெண் கல்வியின் தேக்க நிலைக்கு முக்கியக் காரணங்கள் ஆகும்! உண்மையில் உலக வங்கியின் ஓர் அறிக்கையின்படி, ஆண் கல்வியால் ஏற்படும் பொருளாதார விளைவுகளைவிடப் பெண் கல்வியினால் ஏற்படும் பொருளாதார விளைவு அதிகம் என்று தெரிய வருகிறது; ஒன்று, பெண்களின் வருவாய் ஈட்டும் திறன் அதிகரிக்கிறது; இரண்டு, கல்வியினால் ஏற்படும் சமூக நன்மையின் சான்றாகப் படித்த பெண்களிடையே அதிகரிக்கும் திருமண வயது; கருத்தடை, சிறிய குடும்பம் பற்றிய அறிவு முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

எனவே, பெண் விடுலைக்கான பெண் கல்வியின் வளர்ச்சி அளவு சார்ந்ததாகவும், பண்பு சார்ந்ததாகவும் இருக்கவேண்டும்; மேலும் பாலின

வேறுபாடு அற்ற, பொருளாதார மேம்பாட்டிற்கான கல்வித் திட்டம் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட வேண்டும்; இத்தகைய கல்வி முறையினால் பண்பாடு மாற்றங்களை எளிதாக நடத்திக்காட்ட முடியும்.

## பெண்ணும் பொருளாதார நிலையும்

பெண்ணின் சார்பு நிலையை விளக்க எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மிக முக்கியமான அடையாளக் குறியீடு அவளது பொருளாதார நிலையாகும்! பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு ஒன்று தயாரித்த அறிக்கை, உலகத் தொழிலாளர் தொகையில் மூன்றில் ஒரு பங்கு பெண்கள் என்றும், பெரும்பாலான சம்பளமில்லா வேலைகளைச் செய்பவர்கள் பெண்களே என்றும் கூறுகிறது. உலகில் இருபாலரும் செய்யும் சம்பளமில்லா வேலையின் அளவு 16 ட்ரில்லியன் டாலர். இதில் 11 ட்ரில்லியன் டாலர் அளவு பெண்ணினால் மட்டுமே செய்யப்படுகிறது. மேலும் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் பெண்களுக்கு உலக வருமானத்தில் 10% தான் போய்ச்சேருகிறது; உலகச் சொத்தில் 1% தான் அவர்களுக்கு உரிமையாய் இருக்கிறது என்றும் கூறுகிறது. (படேல் 1993) அன்றியும் உலகில் வறுமையில் வாடும் 13 மில்லியன் மக்களில் 70% பேர் பெண்களே.

இந்தியா போன்ற ஒரத்து நாடுகளோடு ஒப்பிடும்போது, வளர்ச்சியடைந்த நாட்டிலுள்ள பெண்கள் உயர்ந்த நிலையில் விளங்கினாலும், தங்கள் நாட்டிலுள்ள ஆண்களோடு ஒப்பிடும்போது தாழ்ந்த நிலையில்தான் காணப்படுகிறார்கள்.

இந்திய மக்கள் தொகையில் 46.5% ஆக இருக்கும் பெண்கள், தொழிலாளர் தொகையில் 25% தான் உள்ளனர். இந்தப் பெண் தொழிலாளர்களின் பொருளாதார நிலையினை அறிந்துகொள்ளப் பயன்படும் முக்கியக் குறியீடு, அவர்களின் 'வேலைப் பங்கேற்பு விகிதம்' ('வேலை பங்கேற்பு விகிதம்' என்பது மொத்த மக்கள் தொகையில் வேலை செய்யும் பெரியவர்கள் (15-60 வயது) எவ்வளவு சதவிகிதம் உள்ளனர் என்பதைக் குறிக்கும்.) பற்றிய அட்டவணை ஆகும். இக்குறியீட்டில் 'வேலை' என்பது வெளிப்படையாக வருவாயைத்தரும் வேலையை மட்டும் குறிக்கும்; அதாவது பெண்களின் வருவாய் இல்லாத வீட்டு வேலை கணக்கில் சேராது! இந்த அடிப்படையில் வேலைப் பங்கேற்பு விகிதம் பற்றிய புள்ளிவிவர அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### இந்தியாவில் வேலைப்பங்கேற்பு விகிதம் (1971-91)

| வருடம் | பிரிவு | நபர் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|---|
| 1971 | மொத்தம் | 34.2 | 52.7 | 14.2 |
| | கிராமம் | 35.3 | 53.8 | 15.9 |
| | நகரம் | 29.6 | 48.9 | 7.2 |
| 1981 | மொத்தம் | 36.7 | 52.6 | 19.67 |
| | கிராமம் | 38.8 | 53.8 | 23.1 |
| | நகரம் | 30.0 | 49.1 | 8.3 |
| 1991 | மொத்தம் | 37.7 | 51.6 | 22.7 |
| | கிராமம் | 40.2 | 52.5 | 27.2 |
| | நகரம் | 30.4 | 49.0 | 9.7 |

*மூலம்: டாத் ருட்தார் & கே.பி.எம்.சுந்தரம் (1994)*

இப்புள்ளி விவரப்படிப் பெண்களின் வேலைப் பங்கேற்பு விகிதம் 1971-இல் இருந்து அதிகரித்து வருகிறது; இது அண்மைக் காலத்தில் பெண்கள், ஆணாதிக்கத்தில் இருந்து வந்த தொழிலாளர் உலகில் தங்களுக்கான ஒரு இடத்தை ஏற்படுத்தி வருகின்றனர் என்பதைக் காட்டுகிறது. இவ்வட்டவணைப்படி, கிராமப்புறங்களில் பெண்களின் வேலைப்பங்கேற்பு விகிதம் அதிகரித்த அளவு, நகர்ப்புறங்களில் அதிகரிக்கவில்லை! காரணம், நவீன தொழில்நுட்பம் இயந்திரங்களைக் கொண்டு வேலை வாங்கிக் கொள்ளுகிறது: வேலைப் பங்கேற்பு விகிதம் கிராமங்களில் அதிகமாக இருந்தாலும், கிராமியப் பொருளாதாரம் சட்ட ஒழுங்குகளுக்கு உட்படாது இருப்பதால், பெண் தொழிலாளர்கள் அதிகமான சுரண்டலுக்கு உள்ளாகின்றனர்; இத்தகைய தடைகளை எல்லாம் தாண்டி, இதற்கு முந்திய காலங்களில் பெண்களின் வேலைப் பங்கேற்பு விகிதம் அதிகரித்துள்ள அளவிற்கு, வருங்காலத்தில் அதிகரிக்குமா என்பது சந்தேகத்திற்குரியது; ஏனெனில் 1985ல் இருந்து இந்தியா பின்பற்றிவரும் தாராளமயப் பொருளாதாரம், தனியார் மயம், இந்தியப் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்தோடு இணைத்தல் போன்ற கொள்கைகளினால் வேலை வாய்ப்புகள் குறைந்துகொண்டே வருகின்றன. இவ்வாறு வேலை வாய்ப்புகள் குறையும் போது, பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் பெண்களே! ஏனென்றால், பெண்கள் பொருளாதார சுதந்திரம் அடையவேண்டும் என்றால், நாட்டில் வேலை வாய்ப்புகள் குறையாமல் பெருகிக்கொண்டே இருக்கவேண்டும்; பெண்களுக்குச் சட்ட ரீதியாகச் சொத்துரிமை இருந்தாலும், அதைத் தன்னிச்சையாகப் பயன்படுத்தக்கூடிய உரிமையைப் பண்பாட்டுச் சூழல் இன்னும் அவர்களுக்கு வழங்கவில்லை; இந்நிலையில் பெண்களின் வேலை வாய்ப்புக் குறைந்தால், அவர்கள் விடுதலை அடைவதற்கு முக்கியமான ஒரு காரணி இல்லாமல் போய்விடும். மேலும் வேலைவாய்ப்புக் குறைவினால் வறுமை அதிகரிக்கும், வறுமையினால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறவர்கள் பெண்களே! மேலும் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையினால், அரசு சமூக நலனுக்காகச் செலவிடும் தொகையின் அளவு குறைந்துகொண்டே வருகிறது. இதுவும் பெண்களைத்தான் அதிகமாகப் பாதிக்கும்.

மற்றொன்றையும் எண்ணிப் பார்க்க வேண்டும்; நகர்ப்புறங்களில் மேல்தட்டு மற்றும் நடுத்தர வர்க்கப் பெண்களின் பொருளாதார நிலையில்தான் சிறிது மாற்றம் ஏற்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் இன்றும் பெண்கள் குறைந்த பொருளாதார வாழ்வில் கிடந்து,



தொடர்ச்சியான சுரண்டலுக்கும் கொடுமைகளுக்கும் ஆட்பட்டுக் கொண்டுதான் வாழ்ந்து வருகின்றனர்.

## பெண்ணும் வீட்டு வேலையும்

இந்தியாவில் கணவன்-மனைவி இருவருக்கும் வெளியே வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் உள்ள 'குடும்ப



வேலைகள்' பற்றியும் 'குடும்ப அதிகாரி அமைப்பு முறை' பற்றியும் நடந்த பல ஆராய்ச்சிகளின்படி, பெண்கள் ஆண்களுக்குச் சமமாக வெளியே வேலைக்குச் சென்று பொருள் திரட்டி வந்தாலும், தங்களுக்கான உரிமையைப் பெறுவதில் போதுமான அளவு வெற்றிபெறவில்லை என்றுதான் தெரியவருகிறது. இதற்கு முக்கியக் காரணம் ஆண்கள், தங்களின் அதிகாரங்களை, இது நாள்வரைத் தங்களுக்கு அடிமைப்பட்டிருந்த பெண்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்பவில்லை. பழைய பண்பாட்டுச் சூழல் இடந்தரவில்லை (இராமு, ஜி.என். 1989) பெண்களும் பாரம்பரியமாகக் காக்கப்பட்டுவரும் குடும்ப அமைப்புடன் ஒத்துப்போகவே விரும்புகின்றனர். மீறினால் குடும்பம் பிளவுபடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் பல பெண்கள் ஆணுக்குக் கட்டுப்பட்டே வாழப் பழகிக் கொள்கின்றனர், வேலைக்குப் போகும் பெண்களின் நிலையே இது என்றால், குடும்பத்தில் இருக்கும் வேலைகளை மட்டும் செய்து கொண்டு வரும் பெண்களின் நிலையைச் சொல்லவே தேவையில்லை.

ஆனால் அண்மைக் காலத்தில், பெண்கள் செய்யும் குடும்ப வேலைகளும் பொருளாதாரத்தைச் சார்ந்தவைதான் என்பதை நிரூபிக்க ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. உதாரணமாக சமையல், விறகு, தண்ணீர் முதலியவற்றைச் சேகரிப்பது ஆகிய வீட்டு வேலைகளுக்குப் பொருளாதார மதிப்புப் போட்டுப்பார்த்தால், பெண்களின் 'வேலைப் பங்கேற்பு விகிதம்' தற்போதைய நிலையை விடப் பன்மடங்கு அதிகமாகவே இருக்கும் என ஆராய்ந்து கூறுகின்றனர்.

இத்தகைய வீட்டு வேலைகள் மூலம், ஏற்படும் பொருளாதாரப் பங்களிப்பை மதிப்பிடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அமெரிக்காவின் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பெக்கர், ஷில்ஸ் ஆகியோர் 'புதிய வீட்டுப் பொருளாதாரம்' என்றபெயரில் ஒரு கோட்பாட்டை உருவாக்கியுள்ளனர். மரபான பழைய பொருளியலில் மனிதனின் நேரத்தை (செயலை) இரண்டு வகையாகப் பிரிப்பர். (1) உழைப்பு நேரம், (2) ஓய்வு நேரம், அதாவது நேரடியாக வருவாய் ஈட்டாத வேலைகள் யாவும் ஓய்வு நேரமாக எடுத்துக் கொள்ளப்படும். இப்பழைய கோட்பாட்டின்படி, வீட்டு வேலை செய்யும் பெண்களின் நேரம் யாவும் பொருளியல் ஓய்வு நேரமாக எடுத்துக்கொள்ளப்படும்: ஆனால் புதிய வீட்டுப் பொருளாதாரக் கோட்பாட்டின்படி, ஓய்வு நேரம் (குறிப்பாகப் பெண்களின் ஓய்வு நேரம்) (1) வீட்டு உற்பத்தி வேலை, (2) ஓய்வு நேரம் என்று இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும். இக்கோட்பாட்டின்படி, பெண்களின் வீட்டு வேலைக்கான பொருளாதார மதிப்பைக் கணக்கிட முடியும். இந்தியாவிலும் ஆங்காங்கே இத்தகைய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இம்முயற்சிகளின் பயனாக, பாலின அடிப்படையில் குடும்ப வேலைப் பிரிவினை இருந்தாலும், ஆண்களுக்கு நிகராகக் குடும்பப் பெண்களும் குடும்பப் பொருளாதாரச் சேகரிப்பில் ஈடுபடுகின்றனர் என்ற புதிய மனநிலையை ஆண்களிடம் உருவாக்க முடியும். இதனால் ஆண்-பெண் சமத்துவத்திற்கு, ஆண்கள் செய்யும் அனைத்து வேலைகளையும் பெண்களும் செய்யவேண்டும் என்கிற பார்வையை மாற்றி அமைக்க முடியும்.

### முடிவுரை:

பொருளாதார மாற்றத்திற்கும் பண்பாட்டு மாற்றத்திற்கும் இடையே உள்ள உறவு நிலைகளும், இவைகள் இரண்டும் எப்படிப் பெண்களின் வாழ்வு நிலையைத் தீர்மானிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன [illegible] பல புள்ளி விவரங்களோடு இங்கே எடுத்துக்காட்டப்பட்டன. சுதந்திர இந்தியாவில் அரை நூற்றாண்டாகப் பெண் விடுதலைக்காக மேற்கொண்ட முயற்சிகள் யாவும் முழுமையான பயனை அளிக்கவில்லை. பெண்கள் மேல் இழைக்கப்படும் வன்முறைகளும் கொடுமைகளும் அதிகரித்துக்கொண்டே போவது மட்டுமல்லாமல், பலவிதமான வடிவங்களும் எடுத்துள்ளன. ஆனாலும் ஆணாதிக்கச் சமூக அமைப்பும், அதன் பண்பாட்டுக் குணமும், கல்வி மற்றும் பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் பெரிதும் விசாரணைக்கு உள்ளாகிக்கொண்டு வருகின்றன. எனவே இவற்றின் தொடர்ச்சியாக ஆண்-பெண் சமத்துவம் எதிர்காலத்தில் உலகமெங்கும் உருவாக வாய்ப்பு இருக்கிறது என நம்பலாம்.

---

1. இரா. *சீனிவாசன்*, விரிவுரையாளர், பொருளாதாரத்துறை,
பாரதிதாசன் பெண்கள் கல்லூரி, புதுச்சேரி-3

2. டாக்டர் க.பஞ்சாங்கம், தமிழ்த்துறை,
காஞ்சி மாமுனிவர் உயர்கல்வி மையம், புதுச்சேரி-8.

# வாசகர் இதயம்

**தா**ங்கள் வெளியிட்டிருந்த 'உலகம் இனியது' என்ற கட்டுரை இளைஞர்களுக்கு நல்ல வழிகட்டுவதாக அமைந்திருந்தது; மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பதை எடுத்துக்காட்டியது; இப்படித்தான் வாழவேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தியது.

- கே. பிரஷ்னேவ்
பாக்கம் கோட்டூர்

★ ★ ★

'**பா**ரத ரத்னா' விருது பெற்ற அப்துல் கலாம் கட்டுரை வெறும் வாழ்க்கைக் குறிப்பாக மட்டும் இல்லாமல், அவருக்குப் பிடித்ததும் பிடிக்காததும் பற்றிய பல செய்திகளின் தொகுப்பாகவும் இருந்தது நன்றாக இருந்தது.

- பி.இராசலிங்கம்,
அரசம்பட்டு.

★ ★ ★

**ம**ருத்துவப் பகுதியில், காசநோய் எப்படி ஏற்படுகிறது ? அதன் அறிகுறி என்ன ? அந்நோய் வராமல் தடுப்பது எப்படி என்றெல்லாம் சிறப்பாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. வளர்க தமிழரசு.

- மு. வேதபுரி,
கோட்டுப்பாக்கம்.

★ ★ ★

**மூ**ன்று பேருக்குப் பாரத ரத்னா விருது கிடைத்தது பற்றித் தாங்கள் வெளியிட்டிருந்த கட்டுரைகள மூன்றுமே நன்றாயிருந்தது; அந்த மூவரின் முகவரிகளையும் வெளியிட்டிருந்தால், நாங்களும் தனிப்பட வாழ்த்துத் தெரிவிக்க வசதியாக இருந்திருக்குமே!

- அ. கந்தசுவாமி,
திருப்பூர்.

★ ★ ★

**தா**ங்கள் போட்டிருந்த எம்.எஸ்.சுப்புலட்சுமி பற்றிய கட்டுரை மூலம்தான், அவர் வெறும் இசைமேதை மட்டு மல்ல; வேறு பல திறமைகளும் பெற்றவர் என அறிந்தோம். அவசியம் படித்துப் பயன்பெற வேண்டிய இதழ் தமிழரசு என்பதை இதழுக்கு இதழ் நிரூபித்து வருகிறீர்கள். நல்வாழ்த்து.

- எஸ்.பி. வேலுசாமி,
கே.பி.சத்திரம்.

★ ★ ★

**மூ**ன்று பாரத ரத்தினங்களையும் கொண்டிருந்த அட்டைப் படம் அற்புதம்.

- கா. இராஜசேகர்,
மங்களபுரம்.

★ ★ ★

**டா**க்டர் வரதராசுலு அவர்கள் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் ஆற்றிய அருந்தொண்டு பற்றி அருமையான கட்டுரை வெளியிட்டிருந்தீர்கள். நன்றி.

- பி.ஏ.வதூத்,
மேட்டுப்பாளையம்.

★ ★ ★



ஒருநாள் ஆற்றிலே குளித்து விட்டு இராமானுஜர் வீதி வழியாக வரும்போது உறங்காவல்லி தாசருடைய கரங்களைப் பிடித்துக் கொண்டு வந்தார். அதைப் பார்த்த அந்தணர்கள் வெகுண்டெழுந் தார்கள். அவர்களைப் பார்த்த இராமனுஜர் சொன்னார். - ஒருவனுக்கு கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு, சாதிச் செருக்கு இந்த மூன்றும் கூடாது; உங்களிடத்திலே கல்விச் செருக்கு இல்லை; உங்களிடத்திலே செல்வச் செருக்கில்லை. ஆனால், சாதிச் செருக்கு இருக்கிறது என்று சுட்டிக்காட்டாமல், அவர் மிகுந்த சாதுர்யமாகச் சொன்னார் - "நான் அழைத்து வருகிறேனே, இந்த உறங்கவல்லிதாசன் - வேடன்தான்; சாதாரண குலத்தில் பிறந்தவன் தான். அவனிடத்திலே கல்விச் செருக்கு இல்லை; செல்வம் இல்லை. ஆகவே அந்த செல்வச் செருக்கும் இல்லை; அவனிடம் சாதிச் செருக்கும் இல்லை. காரணம் அவன் உயர்ந்த சாதிக்காரன் அல்ல; எனவே சாதிச் செருக்கும் இல்லை" என்று சொன்னார். சொன்னவுடனே அந்தணர்களுக்கெல்லாம் அது புரிந்தது. தங்களைத் திருத்திக் கொண்டார்கள் என்பது இராமனு சருடைய வாழ்க்கை வரலாற்றிலே ஒரு பகுதி. இதில் உள்ள உண்மையை நாம் உணர வேண்டும்.

- கலைஞர்

(திருமகள் நிலையம் வெளியிட்டுள்ள 'வழிமேல் விழி வைத்து' நூலிலிருந்து)



# நூலகமும் எழுத்துலகமும்

மேவேந்தர் முத்து

இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டில்தான் நூலகச் சட்டம் இயற்றப்பட்டு, 1-4-1950 முதல் அமலுக்கு வந்தது. இது ஒரு பெருமைக்குரிய வரலாற்று நிகழ்ச்சியாகும். தற்போது 1,500க்கு மேலான நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் பல நூலகங்கள் திறக்கப்பட அரசு முடிவு செய்துள்ளது.

1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி சுமார் 650 கிராமங்களில் நூலகங்கள் திறக்கப்பட வேண்டும் என்பது அப்போதைய மதிப்பீடு. 1991-ஆம் ஆண்டின் மக்கள் தொகை, கணக்கின்படி 650 என்ற எண்ணிக்கை 1,000-க்கு உயர்ந்திருக்க வேண்டும். 1998-இல் இன்னும் அதிகமான நூலகங்களைத் திறக்க வேண்டிய நிலை வளர்ந்துள்ளது.

எனவே, இந்த நூற்றாண்டு முடிவதற்குள் 5,000 மக்கள்தொகை கொண்ட எல்லாக் கிராமங்களிலும், நூலகங்கள் தோற்றுவிக்கவும், தமிழ்நாட்டில் பதிப்பிக்கப்படும் அனைத்துத் தமிழ் நூல்கள், நாளேடுகள், பருவ ஏடுகள் ஆகியவற்றை வாங்கி மக்கள் பயன் பெறவும் வழிவகை செய்யலாம்.

1950-ஆம் ஆண்டு முதல் வீட்டு வரியோடு நூலக வரி ரூபாய்க்கு 3 காசு வீதம் வசூலித்து வந்ததை, 1-4-1972 முதல் ரூபாய்க்கு 5 காசாக உயர்த்தியும், 1992 முதல் ரூபாய்க்கு 10 காசாக உயர்த்தியும் வசூலிக்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசு ஒவ்வோராண்டும் பலகோடி ரூபாய் கல்விக்காகச் செலவிட்டு வருகிறது. இதில் 2 சதவீதம் நூலக வளர்ச்சிக்காக நிதி ஒதுக்கி, அதிகபட்ச நூல்கள் வாங்கி, மக்கள் படித்துப் பயனடையச் செய்யலாம்.

## அரசின் பெருமை

தற்போது, ஆண்டு ஒன்றுக்கு, சுமார் பதின்மூன்று கோடி ரூபாய்க்கு மேல் நூலக வளர்ச்சிகளுக்குத் தாராளமாக வழங்கப்படுகிறது. நூல்கள் வாங்குவது ஒன்றேமுக்கால் கோடிக்குத்தான் என்று கணக்கிடப்படுகிறது. இந்தத் தொகையை உயர்த்தினால் நூல்கள் அதிகமாக வாங்கலாம்.

மதிப்பிற்குரிய முதல்வர் கலைஞர் தலைமையிலான தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபின், 1996 ஆம் ஆண்டு முதல் - 'கிரவுன் சைஸ்' புத்தகத்தின் 1 பாரத்திற்கு (16 பக்கம்) ரூ.1.90 என இருந்த தொகை அளவை ரூ.2.10 என்று உயர்த்தி யுள்ளது; அதேபோல் 'டெம்மி சைஸ்' புத்தக விலையும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

இதைவிட முக்கியமாகக் கழிவுத் தொகை தருவது அடியோடு தவிர்க்கப் பட்டுள்ளது. இதெல்லாம் பதிப்பகத் துறையினருக்குப் பெரிதும் பலம் சேர்த்திடக் கூடிய செய்திகளாகும்.

இந்திய நாட்டில் முதன்முதலாக நூலகங்களுக்கு 600 படிகள் மொத்தமாக வாங்கும் திட்டம் தமிழ்நாட்டில்தான் ஏற்படுத்தப்பட்டது. இப்பெருமை தமிழக அரசையே சாரும். கல்கத்தா இராஜாராம் மோகன்ராய் நூலக ஆதரவுடன் மேலும் 200 படிகள் வாங்கிப் பெருமை சேர்த்ததும் நம் தமிழக அரசுதான். அது மட்டுமல்லாமல் 1985-இல் 25 சதவீதம் கழிவுத் தொகையை 15 சதவீதம் ஆகக் குறைத்து, எழுத்தாளர் களுக்கும், பதிப்பாளர்களுக்கும் பேருதவி புரிந்த பெருமையும் நம் அரசையே சாரும்.

இதனால், நூல்கள் அதிக அளவில் வெளிவரத் தொடங்கின. 1950 காலகட்டங்களில் ஆண்டு ஒன்றுக்கு 500 புத்தகங்களே வெளியிட்டார்கள். ஆனால் இப்போது ஆண்டுக்கு 3,000-க்கும் மேற்பட்ட புத்தகங்கள் வெளிவருகின்றன. அரசின் ஆதரவால் நிறைய எழுத்தாளர்கள் உருவாகி யுள்ளார்கள். பதிப்பகங்களின் எண்ணிக்கையும் கூடியுள்ளன. பதிப்பாளர்கள் சில ஆசிரியர்களின் நூல்களை மட்டுமே வெளியிடும் நிலை உள்ளது. அதனால் எழுத்தாளர்கள் சொந்தமாகவே வெளியிட்டுப் பயன் அடைகிறார்கள். பல்துறையிலும் புதிய நூல்கள் வெளிவருகின்றன. புதிய எழுத்தாளர்களின் திறன்மிகு சாதனைகள் இதன்மூலம் பளிச்சிடுகின்றன.

அரசு பொது நூலகங்கள் மூலம் நூல்கள் வாங்குவதால், மக்கள் பெரிதும் நூலகங்களில் நிறையப் படிக்கிறார்கள். அறிவு வளர்ச்சி பெறுகிறார்கள். வீணே பொழுதைப் போக்காமல் கட்டுப்பாடான சமுதாயத்தை உருவாக்குகிறார்கள். குறிப்பாக, கிராமங்களில் பெண்கள் நன்றாகப் படிக்கிறார்கள்.

அரசு நூல்கள் வாங்குவதால், புத்தகம் வெளியிடும் தொழிலுக்குப் பின்னால் பல தொழில்கள் பயனடைகின்றன. ஏராளமானோர் வேலைவாய்ப்புப் பெறுகிறார் கள். இதன் மூலம் அரசு மறைமுகமான வேலைவாய்ப்புத் தருகிறது என்றுதான் சொல்லவேண்டும். அது உண்மையுங்கூட.



முதலில், எழுத்தாளர்கள் அதிகமாக உருவாகிறார்கள். சோர்வில்லாமல் எழுதுகிறார்கள். எழுதிய நூல்களை அவர்களே பதிப்பித்தும் பயன் பெறுகிறார்கள். நூல்கள் ஆயிரக்கணக்கில் வெளிவருகின்றன.

## பெண்களின் ஈடுபாடு

கையால் அச்சுக் கோக்கும் அச்சகங்களில் நாற்பது ஆண்டுக் காலமாகப் பெரும்பாலும் பெண்களே அந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். நடுத்தரக் குடும்பங்களில், மேலே படிக்க முடியாமலும், படித்துவிட்டு வேலைக்குப் போகமுடியாமலும், திருமணம் செய்ய முடியாத நிலையிலுமுள்ள பெண்களுக்கு இந்தத் தொழில் மிகவும் கைகொடுத்து, அவர்கள் வாழ்க்கையை ஒளிமிகுந்ததாகச் செய்தது. புள்ளி வைத்துக் கோலம் போடுவது போல் அச்சு எழுத்துக்களை

அடுக்கினார்கள். கட்டமைப்பு என்னும் டைண்டிங் வேலையிலும் பெண்கள் பயிற்சி பெற்றுத் தொழில் செய்தார்கள். இயந்திரம் உள்ள பகுதிகளில் முதலில் பெண்கள் வந்து பணியாற்றியதைப் பெரிதும் பாராட்டலாம். வீட்டில் அடைந்து கிடந்த பெண்கள், தனியாக ஒரு வருமானத்தையும் உருவாக்கிக் கொண்டு குடும்பத்தை இதன் மூலமான வருவாய் மூலம் செழிக்கச் செய்தார்கள். கண்ணியமான தொழில் என்று விரும்பிச் செய்தார்கள்.

தாள், புத்தகங்கள் அச்சிடுவதற்கு முக்கியமான பொருளாகும். தாள் வியாபாரம் இப்போது முன்னணியில் நிற்கிறது. தாள் தயாரிக்கும் ஆலைகள் (Paper Mills) நிறைய உள்ளன. தாள் வணிகத் தொழில் மூலம் ஆயிரக்கணக்கானோர் வேலைவாய்ப்பும் பெறுகிறார்கள்.

அச்சவார்க்கும் டைப் பவுண்டரி, ஓவியர்கள், பிளாக் தயாரிப்பவர்கள், மை தயாரிப்பவர்கள், லாமினேஷன் போடுபவர்கள், பிழைதிருத்து பவர்கள் என்று நிறையத் தொழில்கள் பின்புலமாக இருக்கின்றன. புத்தகங்கள் அச்சிடுவதில் மேற்கண்ட தொழில்கள் அனைத்தும் பயன்பெறுகின்றன. அதிகமான அளவில் ஆண்களும் பெண்களும் வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள்.

இப்படிப்பட்ட அச்சுத் தொழிலின் வளர்ச்சியையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

அச்சு எழுத்துக்கள், முதன் முதலில் கி.பி.1041-ல் சீனாவில் களிமண்ணால் செய்து, சுட்டு, செப்பம் செய்து, பின்பு தகரத்தில் அச்சிட்டுப் பயன் படுத்தினர்.

ஜான் கூட்டன்பர்க் என்னும் ஜெர்மானியர் 1439-ல் புதுவிதமான முறையில் அச்சு எழுத்துக்களைத் தயாரித்தார். இவரே அச்சுக் கலையின் தந்தை எனலாம்.

அவரது ஆராய்ச்சியின் விளைவே இன்றைய அச்சுக் கலையின் வளர்ச்சி. அச்சு எழுத்துகளை மரத்தினால் தலைகீழாகச் செய்து பயன் படுத்தினார். பிறகு காரீயத்தில் எழுத்துக்களை வார்த்தனர்.

## தமிழில் முதல் நூல்

அச்சுத் தொழில் இந்தியாவில் 6-9-1556-ல்தான் அறிமுகமாகியது. அன்று தொடங்கிய அந்த முறை - இன்று வளர்ந்துள்ள நிலை வானளாவிய அறிவியல் உலகின் சாதனையாகும்.

ஆனாலும் மேல்நாட்டினருக்கு நாம் 60 ஆண்டுகள் பின்னாலேயே இருக்கிறோம்.

20.12.1557-ல் 'தம்பிரான் வணக்கம்' என்ற தமிழ் நூல் 16 பக்கத்தில் கொல்லத்தில் அச்சிடப்பட்டது. இதுவே தமிழில் - இந்தியாவில் அச்சிடப்பட்ட முதல் நூலாகும்.

இந்தியாவில் அச்சு வேலை தொடங்குவதற்கு முன்பே போர்ச்சுகலின் தலைநகரான லிஸ்பனில் 1554இல், 'நூசோ தமிழ்ச் சமய வினா-விடை' நூல். தமிழில் இரு வண்ணத்தில் அச்சிட்டுள்ளார்கள்.

> ஒருவன், தான் விரும்பும் நலன்கள் அனைத்தும், பிறருக்கும் உண்டாகச் செய்வதுதான் நாகரிகம்; அதற்கேற்ற வகையில் நமது உழைப்பு பயன்பட வேண்டும்.
>
> - தந்தை பெரியார்

1712-இல், தென் நாட்டில் தரங்கம் பாடியில், சீகன் பால்கு என்பவர் முதன் முதலில் அச்சகம் ஆரம்பித்தார். அப்போதெல்லாம் அச்சகம் 'அச்சுக்கூடம்' என்றே வழங்கப்பட்டது. அது முதல் நூல்கள் அச்சிடும் வேலையும் தொடங்கியது.

மேல்நாட்டிலிருந்து சமயத்தைப் பரப்ப அனுப்பப்பட்ட இவர், தமிழையும் கற்றார். அச்சுத் தொழிலை ஆரம்பித்தார். காகித ஆலையையும் நிறுவினார்.

அச்சுத் தொழில் அச்சுக் கலையாகியது. வண்ண வண்ண அச்சுக் கலைகள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. இன்று அக் கலை நமக்கு வாழ்வில் ஓர் அங்கமாக அமைந்துவிட்டது.

தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளில் சிறந்த புத்தகங்களுக்குப் பரிசு அளித்துப் பெருமைப் படுத்துகிறார்கள். இப்போது முதற்பரிசு பெற்ற நூல்களும், இரண்டாம் பரிசு பெற்ற நூல்களும் பொது நூலகத் துறையின் மூலம் அதிகம் வாங்கப்படுகின்றன. முதற்பரிசு பெறும் நூல்களை இன்னும் அதிக அளவில் வாங்கி, எல்லா நூலகங்களிலும் இடம் பெறுமாறு செய்யலாம்.

வீட்டிற்கு ஒரு நூலகம் இருக்க வேண்டும் என்று **பேரறிஞர் அண்ணா** வற்புறுத்தினார். கர்மவீரர் காமராஜர் அவர்களும் அறிஞர் அண்ணா அவர்களும் எல்லோரும் படிக்க வேண்டும் என்று பல சலுகைகளை அளித்தார்கள். கூட்டங்கள் வாயிலாக வேண்டுகோளும் விடுத்தார்கள். நம்மவர்களும் படிக்க ஆரம்பித்தார்கள்.

## படித்தால் போதுமா ?

ஆனால், படித்தவர்கள் அனைவரும் வேலைக்கு மட்டுமே படித்தார்கள் - படித்துவிட்டு வேலை கிடைக்கவில்லையே என்று வருத்தப் படுகிறார்கள். எல்லாருக்குமே அரசாங்க வேலை கிடைக்குமா ? படித்து விவரம் அறிந்து தொழில், வியாபாரம் எதிலும் தாங்கள் படித்த படிப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று, எல்லோரும் எழுத்தாளர்களாக வரவேண்டு மென்று எழுதுகிறார்கள். வரவேற்க வேண்டியதுதான். எழுதுவது என்பது எல்லோருக்கும் வாய்த்துவிடாது. அது ஒரு பிறவியின் பேறு (GIFT) என்றே கூறுவார்கள். அந்த எழுத்து நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுடையதாக இருக்க வேண்டும். அந்தப் புத்தகத்தைப் படித்துவிட்டு, சிந்தித்துப் பயன் பெறுவதாகவும், அறிவை வளர்த்துக் கொள்வதாகவும் இருக்க வேண்டும்.

முன்பெல்லாம், இவரால் எழுதப்பட்டு, இன்னாரால் சரிபார்க்கப்பட்டு, இந்தப் புலவரால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இந்த அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்டு, இந்தப் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது என்று நூலின் முதற்பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கும். எழுதிய எழுத்தும், வெளிவந்த புத்தகங்களும் பாராட்டும்படி இருக்கும். படித்துவிட்டுப் பாதுகாத்து வைக்க வேண்டும் என்ற எண்ணமும் தோன்றும். ஆனால் இன்று?... எல்லோரும் சிந்திக்கவேண்டும்.

இப்போதெல்லாம் சில எழுத்தாளர்கள் எதை வேண்டுமனாலும் எழுதி அச்சுக்குக் கொடுத்து, வெளியிட்டு விடுகிறார்கள். பிழை நிறைந்தும், ஒற்று எழுத்து இல்லாமலும், சில இடங்களில் ஒற்று எழுத்து மிகுந்தும் தமிழைக் கொலை செய்கிறார்கள். பாரதி மட்டும் இன்றிருந்தால் வெகுண்டு எழுந்து கொக்கரித்துக் குரல் கொடுத்திருப்பார்.

1914ஆம் ஆண்டு 'சுதேசமித்திரன்' நாளிதழில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். அதைப் படிப்பதோடு நாம் மறந்துவிடுகிறோம். "அச்சகத்துக்குக் கைப்பிரதி கொடுக்கும்போது, தெளிவான எழுத்துக்கள் எழுதவேண்டும். பிழையின்றி எழுத வேண்டும். ஒவ்வொரு சொல்லுக்கும் இடைவெளி விட்டு எழுத வேண்டும். நாம் புலவர்கள்; தமிழை நிறையப் படித்தவர்கள். ஆனால் அச்சுக் கோக்கும் பணியாளர்கள் புலமை பெற்றவர்கள் அல்ல" என்று அறிவுரை வழங்கியுள்ளார். ஆனால்



இன்றளவும் என்ன நிலை என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

நன்றாக எழுதி வெளியிடும் புத்தகங்கள் நல்ல வரவேற்பைப் பெறுகின்றன. இல்லாவிடில் மக்கள் மத்தியில் கண்டனத்துக்குரியனவாகவே தேங்கும். அச்சுக்குக் கொடுக்கும் முன்னரே விவரம் தெரிந்தவர்களிடம் காட்டி, பிழை திருத்தி, புத்தகம் அச்சிட வேண்டும். தவறுகள், பிழைகள் இருந்தாலும் அந்த நால்வர்க்குள்ளேயே சரிப்படுத்தப்படும். இல்லாவிடில் புத்தகமாக வெளியிட்டு எல்லோரும் படித்து, இந்த எழுத்தாளர் இப்படி எழுதியுள்ளாரே என்று எள்ளி நகையாடுவர். இப்படிப்பட்ட தவறுகள் அச்சிடும் அச்சகத்தாரையே சாரும். அதனால் எழுத்தாளரும் பிழைதிருத்துபவரும் கவனமாக இருக்கவேண்டும்.

## எப்படி அச்சிடுவது ?

"டாக்டர்கள் தவறு சவக்குழிக்குள் புதைந்து விடுகிறது; வழக்குரைஞர்களின் தவறு தண்டனைக்குள் ஒளிந்து கொள்கிறது; ஆனால் அச்சகத்தாரின் தவறோ அம்பலத்துக்கு வந்துவிடுகிறது." **''A Doctor's mistake is burried. A Lawyer's mistake is Jailed. But A Printer's mistake is Published."**

அதனால், அச்சகத்தில் எப்படி அச்சிட வேண்டும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். புத்தகத் தயாரிப்பு கூட்டு முயற்சி. எல்லோருக்கும் பயன்படும் வகையில் பணியாற்ற வேண்டும்.

நம் காலத்தில் வாழ்ந்தவர்கள், வாழ்ந்துவரும், சான்றோர்கள், அவர்கள் எழுதிய நூல்களை அவர்களே பிழை திருத்தம் செய்தார்கள் என்பதை நாம் அறியவேண்டும். தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, பேரறிஞர் அண்ணா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம், பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார், முதல் தொடர்கதை நாவலாசிரியர் கல்கி, மே.வி.வேணுகோபால் பிள்ளை, நா.பாண்டுரங்கன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். நமது மாண்புமிகு முதல்வர் **கலைஞர்** அவர்களும், அவர் எழுதிய புத்தகங்கள் அனைத்தையும் அவரேதான் பிழைதிருத்துவார். தவறு வராமல் மிகவும் கண்டிப்பாக இருப்பார். ஒரு முறை 'நெடிய' என்பது 'கெடிய' என்று அச்சாகி இருந்ததைச் சொல்லி விளக்கம் கொடுத்தார். மாண்புமிகு கல்வி அமைச்சர் **பேராசிரியர் அன்பழகனார்** அவர்களும் பிழை திருத்துவதில் வல்லவர்.

வெளிநாட்டில் வாழும் தமிழ் எழுத்தாளர்கள் எழுதி வெளியிடும் தமிழ் நூல்களுக்கும் தமிழ்நாடு அரசு முன்னுரிமை வழங்குகிறது. அவர்களை ஊக்குவிக்கவும் அரசு முன்னுரிமை வழங்கி போற்றப் படுகின்றது. ஆனால், உள்நாட்டு முகவரி கொடுத்துப் பதிப்பிக்க வேண்டும். ஆசிரியருடைய வெளி நாட்டு முகவரி இரண்டாம் பக்கத்தில் இருக்கலாம்.

## சீர்திருத்த எழுத்து

ஓலைச்சுவடிகளில் எழுதும்போது 'ல' போட்டு னை, ணை, லை, ளை என எழுதினால், 'ன'கரமா, 'ண'கரமா, 'ல'கரமா, 'ள'கரமா என்று புரிந்துகொள்ள முடியாது என்பதால்தான், மேலே 'ஐ'காரத்தின் கொக்கியைப் போட்டு எழுதினார்கள். அதே போல் 'றா'வையும், 'ஆ'வைச் சுழிப்பது போல் 'ழு', 'ளு', 'ணு' என்று இழுத்துச் சுழித்தார்கள். அச்சு வடிவத்திலும் அதே நிலை நீடித்தது. அதைத்தான் தந்தை பெரியார் அவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். ஆனால், நம்மவர்கள் சாதாரணமான இந்த முறையைக்கூட

> சமுதாயத்திற்கு வருகின்ற வேதனையைத் தனியொருவர் தாங்கிக் கொள்ளுகின்ற மனப்பக்குவத்தைப் பெற்றாக வேண்டும்; அதுதான் உண்மையான பொது வாழ்விற்குப் பொருள். அழகு!
>
> - கலைஞர்

ஏற்றுக் கொள்ளாமல் இன்றும் பழைய எழுத்திலேயே திருமண அழைப்பிதழ் முதல் புத்தகங்கள் வரை அச்சிட்டு வருகிறார்கள்.

நம் குழந்தைகள் கூடப் படிக்கும்போது, "ஏன், 'க'வுக்கு 'ை' போட்டு 'கை', 'மை', 'சை' என்று எழுதுகிறோம். ல, ள, ன, ண-வுக்கு மட்டும் ஏன் 'ை'காரம் போடாமல் மேலே சுழிக்கிறோம்? இது தப்பில்லையோ, வஞ்சனையில்லையா" என்று கேட்டிருக்கிறார்கள். அதே போல் எல்லா எழுத்துக்களுக்கும் 'ா' போட்டுவிட்டு ழு, ளு, ணு-வுக்கு மட்டும் ஏன் கால் போடவில்லை என்றும் கேட்டுச் சிரிப்பார்கள். ஆனால் நம்மவர்களில் விவரம் புரிந்தவர்கள் கூட, திருத்திய எழுத்துச் சீர்திருத்தம் வந்தபோது நடை முறைப்படுத்த விரும்பவில்லை. புத்தகங்கள் பெரும்பாலும் பழைய எழுத்திலேயே வந்தன. திருந்திய எழுத்தில் அச்சிடும், வெளியிடும் புத்தகங்கள் மட்டுமே நூலகங்களுக்கு வாங்கப்படும் என்று அறிவித்தவுடனே - அறிவிக்க வேண்டிய நிலை வந்தவுடனேயே நிலைமை மாறியது. இப்போது நூல்கள் அனைத்தும் திருத்திய தமிழ் எழுத்திலேயே வெளியிடப் படுகின்றன.

'பம்பாய்' என்பதை 'மும்பை' என்று மாற்றியதும் அம் மக்கள் அனைவரும் ஏகோபித்த வரவேற்போடு நடை முறைப்படுத்துகிறார்கள். இங்கே நம்மவர்கள் எழுத்துச் சீர்திருத்தம் சாதாரணமானதுதான். அதையும் செய்யத் தயங்குகிறோம். 'மெட்ராஸ்' என்பதை 'சென்னை' என்று மாற்றினாலும் தயங்குகிறோம். அதேபோல் 'அண்ணா சாலை'யை மவுண்ட் ரோடு என்றே எழுதுவார்கள். விளம்பரப் பலகைகளிலும் பெயர்ப் பலகைகளிலும் பழைய நடை முறையையே கையாள்கிறோம். பழைமையில்தான் நம தமிழர்களுக்கு எவ்வளவு ஈடுபாடு? இந்த நிலைமைகள் மாறியே ஆகவேண்டும்.

## வீரமாமுனிவர் பெருமை

வீரமாமுனிவர் / காலத்தில்தான் மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளி வைக்கும் முறை கொண்டுவரப் பட்டது. அதேபோல ஈ, ஏ, ஓ போன்ற எழுத்துக்களும் கூட்டப்பட்டன. காரணம் ஓலைச்சுவடியில் எழுதும் போது புள்ளி வைத்தால், ஓலை பொத்தலாகிவிடும். காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி, குறிகள் கூட அவர் காலத்தில்தான் கையாளப் பட்டன. தமிழுக்கு வாழ்வளித்த வீரமாமுனிவருக்குச் சிலை அமைத்தவர் **பேரறிஞர் அண்ணா** அவர்களே யாவார்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மெய்யெழுத்து அனைத்துக்கும் முறையாகப் புள்ளி வைக்கிறோம். ஆனால், 'ர' எழுத்துக்கு மேலே புள்ளிவைத்து 'ர்' என்று எழுதுகிறோம் - அச்சிடுகிறோம். ஆனால், முறையாக 'ர' என்னும் மெய்யெழுத்துக்கு மேலேதானே 'ர்' என்று புள்ளி வைக்க வேண்டும். புத்தகங்கள் அனைத்தும் தவறாகவே அச்சிட்டு வெளிவருகின்றன. எழுத்து தயாரிக்கும் டைப் பவுண்டரிகள் - வார்த்த எழுத்தை உபயோகித்தோமே அன்றி மாற்றம் செய்யவில்லை. அதேமுறை லேசர் முறையிலும், கணினியிலும் கையாளப்படுகிறது. ஒரு சிலரிடம் சொன்னால், லேசர் என்னும் ஒளி அச்சுக்கோர்வையாளர்கள் வியப்புறுகிறார்கள். இதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒற்று எழுத்தான 'ர' நெடிலாக இருப்பது போய் 'ர' 'ர்'ஆக மாறியது விந்தை தானே!

பயன்மிகு புத்தகங்கள் பல நல்ல முறையில் வெளியிட்டுப் பொது நூலகத் துறை மூலம் அதிகமான பலன் பெறலாம். நமது அரசு தமிழ் வளர்ச்சிக்கென்று தனித்துறை அமைத்துள்ளது வரலாற்றுப் பெருமை மிக்க நிகழ்ச்சியாகும்.

★

# எங்கள் ஊர் பிரச்சினை

பிரச்சினை :

ஈரோடு மாவட்டம் ஈரோடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலமாகப் பெரிய சேமூர் வீட்டு மனைத் திட்டத்தின் கீழ் எண். 6ன் படி லேக்வியூ ரிசார்ட் காலனியில் வீட்டுமனை எண்.167 கடந்த 11.8.95ல் எனக்கு ஒதுக்கப்பட்டது. அன்று சதுர அடி ரூ.65 வீதம் 1950 ச. அடி காலி மனையினை 1,26,750 செலுத்தி 22.3.96 அன்று பத்திரப்பதிவு செய்துகொண்டேன். அங்கத்தினர் எண்.11630 பத்திரம் எண். 635

2. எனக்குப் பதிவு செய்த தனி அலுவலர் திரு. பி.துரைசாமி அவர்களே 4.4.96 அன்று தீர்மானம் நிறைவேற்றி அதே வீட்டு மனைத் திட்டத்தில் ச.அடிக்கு 55 வீதம் (அதாவது சதுர அடிக்கு ரூ.10 குறைவாக) கீழ்க்கண்ட நபர்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளார்.

3. பார்வை எண். க.அ.ந.க. 06-1996-97 மனை எண் ஒதுக்கீடு விவரம்:

   1. திரு. ஏ.சி. ராஜீ க/பெ, திரு. ஏ.சி. ராஜீ அய்யம் பாளையம் பவரினி ம.எண். 161
   2. திருமதி. ஏ. ராஜேஸ்வரி க/பெ. திரு. எம் அய்யாமுத்து கோபிசெட்டிபாளையம் எண். 162
   3. திருமதி. எம். பத்மாவதி க/பெ. திரு. எட்டிமுருகன் கவுந்தப்பாடி பவானி ம.எண். 233

மேற்கண்ட செயலால் எனக்கு ரூ.49,500 நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பாதிப்பிற்குத் தமிழரசு மூலமாவது நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் தங்களுக்கு எழுதுகிறேன்.

*- எல். விஸ்வநாதன்*
*1132, பேப்பர்மில் காலனி*
*ஈரோடு, நாமக்கல் மாவட்டம்.*

தீர்வு :

*ஈரோடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் பெரிய சேமூர் மனைப்பிரிவில் மனை எண். 167 திரு. எல். விஸ்வநாதன் (உ.எண். 11630) என்பவருக்குத் தனி அலுவலரின் உத்திரவு நாள் 11/8/95ன் படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதில் சதுர அடி ஒன்றுக்கு ரூ.65 வீதம் விலை நிர்ணயம் செய்யப் பட்டு, 1950 சதுர அடிக்குக் கிரையத்தொகை ரூ.1,26,750 பெறப்பட்டுள்ளது.*

*மனுதாரர் குறிப்பிட்டுள்ளதுபோல் மனைத் திட்டத்தின் மூலம் மனை பெற்ற 3 உறுப்பினர்களுக்குச் சதுர அடிக்கு ரூ.10 குறைத்து வழங்கப்பட்டதாகச் சங்கத் தனி அலுவலரின் மீது எழுப்பப்பட்ட புகாரின் அடிப்படையில் அதனை அன்னாரிடமிருந்து வசூலிக்கவும், காரணமானவர்கள் மீது நடவடிக்கையும் துறை அளவில் எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*எனவே, ஈரோடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் பெரியசேமூர் மனைப்பிரிவில் சதுர அடி ரூ.65 என்று நிர்ணயம் செய்யப்பட்ட விலையில்தான் உறுப்பினர் திரு. எல். விஸ்வநாதன் கிரையம் பெற்றுள்ளார்.*

*மற்றபடி சதுர அடி விலை குறைத்து மூன்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கிரயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதனால் இவ்வினத்தில் திரு.எல்.விஸ்வநாதனுக்கு இதன் மூலம் நட்டம் ஏற்பட்டது என்பதற்கு இடமில்லை என்பதால் அவருக்குத் தொகை திருப்பி வழங்க இயலாது. இவ்விவரம் திரு. எல். விஸ்வநாதனுக்கு, துணைப் பதிவாளர் (வீட்டுவசதி) சேலம் கடிதம் ந.க.1720/97/உ நாள் : 24.10.97ன் மூலம் நேரிடையாகத் தெரிவிக்கப் பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*- பதிவாளர் (வீட்டுவசதி)*
*79, 4-வது பிரதான சாலை, காந்தி நகர்*
*அடையாறு, சென்னை - 20.*



பிரச்சினை :

விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம் ஒன்றியம் அனுமனந்தல் ஊராட்சிக்கு அனுமனந்தல் கிராமத்தில் ஊராட்சி மன்றக் கட்டட நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிக்குச் சொந்தமான இடத்தில் கட்டாமல் விநாயகர் கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் அலுவலகக் கட்டிடம் கட்ட கடகால் எடுத்துள்ளார்கள். இந்த இடத்தில் அலுவலகக் கட்டிடம் கட்டினால், திருவிழாக் காலங்களில் பொது மக்களுக்கு



இடைஞ்சலாக இருக்கும். எனவே, ஊராட்சிக்குச் சொந்தமான தொலைக்காட்சிப் பெட்டி இருக்கும் கட்டிடத்திற்கு அருகில் அலுவலகம் கட்டினால் நன்றாக இருக்கும். எனவே, கோவிலுக்கு இடைஞ்சல் இல்லாமல் ஊராட்சிக்குச் சொந்தமான இடத்தில் கட்ட ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தீர்வு :

*1997 - 98ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அனுமனந்தல் ஊராட்சியில் ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்றக் கட்டிடம் கட்டுவதற்குப் பார்வை 1-ல் காணும் திட்ட அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள் மூலம் நிர்வாக அனுமதி அளிக்கப் பட்டு மேற்படி கட்டிடத்தினை அனுமனந்தல் ஊராட்சியின் தலைமையிடத்தில் மட்டுமே கட்டப்பட வேண்டுமெனவும் அனுமனந்தல் ஊராட்சியின் மதுரா கிராமத்தில் கட்டக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டது.*

*மேற்படி திட்ட அலுவலர் அவர்களின் அறிவுரைக ளுக்கு இணங்க அனுமனந்தல் ஊராட்சியின் தலைமை யிடத்தில் தான் ஊராட்சி மன்றக் கட்டிடம் கட்டப்பட்டு வருகின்றது எனவும் புகார் மனுவில் தெரிவித்ததுபோல் விநாயகர் கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் கட்டப் படவில்லை என்பதனைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*திரு. அ. தங்கசாமி*
*கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்,*
*சின்னசேலம்.*



பிரச்சினை :

வ.உ.சி. நகர் என்.ஜி.ஓ. காலனி மேற்கில் குறைந்தது சுமார் 500 குடியிருப்புகளிலும் 2,000 மக்கள் தொகை உள்ளது. இருந்தும், கடந்த 10 ஆண்டுகளாகக் குடிநீர் இல்லாமல் மிகவும் துன்பப்பட்டு வருகின்றோம். எங்கள் பகுதியில் நிலத்தடி நீர் மிகவும் மோசமான நிலையில் (குடிக்க முடியாது) உள்ளது. குடிநீரை 3 கி.மீ. தூரத்திலுள்ள சத்திரரெட்டியாப்பட்டி பஞ்சாயத்துக்குட்பட்ட இடத்திற்குச் சென்று சில பெண்கள் தலையில் சுமந்துவருகிறார்கள். மற்ற உபயோகத்திற்கு மதுரைக்குப் போகும் தேசிய நெடுஞ்சாலையைக் கடந்து உள்ள என்.ஜி.ஓ. காலனி கிழக்குப் பகுதியில் நல்ல தண்ணீர் உள்ள ஒரு கைப் பம்பில் எடுத்து வருகிறார்கள். வெளியே சென்று குடிநீர் எடுத்துவர இயலாதவர்கள் வ.உ.சி. நகரில் கிடைக்கும் சொற்ப நீரை உபயோகப்படுத்துவதால் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை சிறுநீரகக் குழாயில் கல்லடைப்பும் மற்றும் பல வியாதிகளிலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதிகாரிகளுக்குப் பல மனுக்கள் அனுப்பியதன் பலனாகத் தற்பொழுது மாண்புமிகு முதல்வர் **கலைஞர்** ஆட்சியில் வாரியத்தினால் குடிநீர்த் திட்டத்திற்கு அனுமதி தரப்பட்டு வேலையும் தொடங்கப்பட்டது.

தற்பொழுது குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் (என்.ஜி.ஓ. காலனி மேற்கு) எங்கள் பகுதியில் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்கவும் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு கடந்த 15.5.97 அன்று வேலை தொடங்கப்பட்டது. 26.5.97 அன்று குடிநீர் ஆதாரம் அமைந்துள்ள இடத்தில் மோட்டார் பம்பு அறை கட்டுவதற்காக 5½ அடி குழி தோண்டப்பட்டது. இப்பகுதி மதுரை ரோட்டிலுள்ள உசிலம்பட்டி கிராமத்திற்கு வெளியே சுமார் 3 பர்லாங் தூரத்தில் (மயானத்திற்கு அருகில்) அமைந்துள்ளது.

உசிலம்பட்டியில் இருக்கும் மக்கள்தொகை 600 பேருக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத்தொட்டி 2 மோட்டார் பம்பு அறைகள், 4 கைப்பம்புகள் இருந்தும், ஒரு சிலரின் தூண்டுதலால் சில குழுவினர் 27.5.97 அன்று வ.உ.சி.நகர் என்.ஜி.ஓ. காலனி மக்களுக்குக் குடிநீர் தரமாட்டோம் என்று கூறி மோட்டார் பம்பு அறைக்குத் தோண்டிய குழியை மூடி மிகப் பெரிய பிரச்சினையை உருவாக்கிவிட்டார்கள். மேலும், எங்கள் என்.ஜி.ஓ. காலனி (மேற்கு) பகுதியில் மேல்நிலைத் தொட்டி கட்டுவதற்குரிய வேலைகள் பாதியில் நின்றுவிட்டது. இதைப் பற்றிப் பல மனுக்கள் அனுப்பியும் எவ்விதப் பலனுமில்லை. எங்கள் குடிநீர்ப் பிரச்சினை தீர, தாங்கள்தான் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

- பொது மக்கள், வ.உ.சி. நகர்
என்.ஜி.ஓ. காலனி (மேற்கு)
விருதுநகர்

தீர்வு :

*விருதுநகர் மாவட்டம், விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த என்.ஜி.ஓ. காலனி (மேற்கு)க்கு குடிநீர்த் திட்டப் பணி தற்போது 30,000 லிட்டர் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி முடிவடைந்துவிட்டது. பகிர்மானக்குழாய் பதிக்கும் பணி 700 மீட்டர் நீளத்திற்கு 150 மீட்டர் பதிக்கப்பட்டுள்ளது. மீதம் குழாய் பதிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் நீரேற்றுக் குழாய் பதிக்கும் பணி தேசிய நெடுஞ்சாலையைக் கடக்க வேண்டியிருப்பதால் கோட்டப் பொறியாளர் தேசிய நெடுஞ்சாலைத் துறையின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.*

மேலும், மேற்கண்ட குடிநீர்த் திட்டத்தில் நீரேற்று நிலையம் (பம்பு ரூம்) கட்டும் பணி, கட்டுமிடத்தில் தேங்கியுள்ள நீர் வற்றியதும் விரைவில் பணி ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

- ச. கிருஷ்ணன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
விருதுநகர் மாவட்டம்.

பிரச்சினை :

எங்கள் மாவட்டமாகிய திருவண்ணாமலை மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாவட்டம். சமீபத்தில் அரசு இடைநிலை ஆசிரியர்களை சீனியாரிட்டி அடிப்படையில் நியமித்தது. அப்போது நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கேர் ஆப் அட்ரஸ் கொடுத்து, எங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குத் தங்களின் பதிவை டிரான்ஸ்பர் செய்து கொண்டனர். அந்த 'கேர் ஆப் அட்ரஸில்' அவர்கள் உள்ளார்களா என அதிகாரிகள் சோதனை செய்தபோது இந்த விலாசங்கள் அனைத்தும் போலியானவை எனக் கண்டுபிடித்தனர். இவர்கள் அனைவருக்கும் அரசு வேலை கொடுத்துவிட்டது. இனி, 'நேடிவ் சர்டிபிகேட்' இல்லாமல் 'டிரான்ஸ்பர்' செய்ய முடியாது என அரசு உத்தரவு ஒன்று பிறப்பித்தது.

இதனால் எங்களின் பதிவு பின்னுக்குத் தள்ளப்பட்டது. வரும் 1998 - 99ம் கல்வி ஆண்டில், எங்களில் பலருக்கு வேலை கிடைக்காமல் போனால் அரசு நியமனம் செய்துள்ள வேலைக்கான நியமன வயது எங்களுக்குத் தாண்டிவிடுகிறது. ஆதலால் இதில் கல்வித்துறை தலையிட்டு, எங்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி தங்களைத் தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

- வேலையில்லா இடைநிலை ஆசிரியர்கள்,
திருவண்ணாமலை மாவட்டம்.

தீர்வு :

1997-ம் ஆண்டில் திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தால் இடைநிலை ஆசிரியர்கள் பணிக் காலியிடங்களுக்காகப் பரிந்துரைக்கப்பட்டவர்களில் பிற மாவட்டங்களிலிருந்து திருவண்ணாமலை மாவட்டத்திற்குப் பதிவு மாற்றங்கள் மேற்கொண்டிருந்த முப்பது மனுதாரர்களின் நேர்வுகளில், அவர்கள் அளித்துள்ள முகவரியில் வசிக்காமல் பாதுகாவலர் முகவரிகளில் பதிவு செய்திருந்ததாகக் காணப்பட்டது. இந்த முப்பது நபர்களில் இருபத்தியேழு நபர்கள் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் வசித்து வருவதை, உறுதி செய்வதன் பொருட்டு, வட்டாட்சியர்கள் அளவில் வழங்கப்பட்ட இருப்பிடச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்தால், இதர விதிமுறைகளுக்குட்பட்டு அவர்களைப் பணி நியமனத்திற்குப் பரிசீலிக்கலாம் என இத்துறை, கல்வித் துறைக்கு ஆலோசனை வழங்கியது. எஞ்சிய மூன்று மனுதாரர்கள் இருப்பிடச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்காததால், அவர்களைப் பணி நியமனத்திற்குப் பரிசீலிக்க வேண்டாம் என இத்துறை கல்வித்துறையைக் கேட்டுக் கொண்டது.

தற்போது, பதிவு மாற்றம் கோரும் மனுதாரர்களிடம் வட்டாட்சியர்களால் வழங்கப்படும் இருப்பிடச் சான்றிதழ்களைப் பெற்ற பின்னரே, பதிவு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில், இவ்வாறான முறைகேடுகள் இனிமேல் எழ வாய்ப்பில்லை.

- இரா. சம்பத், இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை.




பிரச்சினை :

எங்கள் ஊர் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், உள்ளிக்கோட்டை ஆகும். எங்கள் ஊரில் ஊர்ப்புற நூலகம் திறப்பதற்கு 1996 . ஆம் ஆண்டு மாவட்ட நூலக அலுவலர் மூலம் அரசு ஆணை பெறப்பட்டு உடன் எங்கள் ஊர் கிராமக் கமிட்டி மூலமாக 10 சென்ட் நிலம், 200 உறுப்பினர்கள், ரூ.20,000/- புரவலர்களுக்காகவும் செலுத்தப்பட்டு ரூ.10,000/- அளவில் தளவாடங்கள் நன்கொடையாகப் பெற்று வாடகை இல்லாது இலவசக் கட்டிடத்தில் ஓர் ஆண்டாகத் தளவாடப் பொருள் வீணாகிக் கொண்டு இருக்கிறது.

உடன் நூலகம் திறப்பதற்குச் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஆவன செய்ய வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

- பொதுமக்கள் சார்பாக த. மோகன், எம்.ஏ.,
உள்ளிக்கோட்டை மற்றும் அஞ்சல்,
மன்னார்குடி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

தீர்வு :

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், உள்ளிக்கோட்டை கிராமத்தில் ஊர்ப்புற நூலகம் திறக்க விரைவு நடவடிக்கை மேற்கொள்ளும்படி திருவாரூர் மாவட்ட நூலக அலுவலருக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. ஊர்ப்புற நூலகம் விரைவில் திறக்க ஆவன செய்யப்படும் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- இரா. கண்ணன்,
பொது நூலக இயக்குநர், சென்னை.



# தொழுநோயற்ற உலகை உருவாக்குவோம்

கே.வி. புருஷோத்தமன்

அரசாங்கத்தின் திட்டங்களும், செயல்பாடுகளும் ஒரு குறிப்பிட்ட கால அளவீட்டில் செய்து முடிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அந்தத் திட்டங்களின் முக்கியத்துவம், செயல்பாடுகளின் வேகம் இரண்டும் மிகச் சரியாக மக்களைச் சென்றடையும். திட்டங்களின் முழுப்பலன்களும் மக்களுக்குக் கிடைக்கும்.

"தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்" என்பது ஒரு கால எல்லையை முன்னதாகவே நிர்ணயம் செய்துகொண்டு, அரசு செயல்படுத்திவரும் திட்டமாகும். கி.பி. 2000-மாவது ஆண்டுக்குள் தொழுநோய் முழுமையாக நமது நாட்டிலிருந்து ஒழிக்கப்பட வேண்டும் என்ற இலக்கோடு, மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் இணைந்து பல வழிகளிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன.

முதலில் தொழுநோய் எதனால் வருகிறது என்ற உண்மையை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

தொழுநோய் சாபத்தால் வருவது என்ற அச்சமும் நீங்கிவிட்டது!

தொழுநோய் ஒரு கர்மவியாதி என்ற வேதாந்தமும் தவறு என மாற்றி எழுதப்பட்டுவிட்டது.

தொழுநோய் ஒரு பரம்பரை வியாதி என்ற மூட நம்பிக்கையும் ஒழிந்துவிட்டது.

எப்படி பெனில் :-

தொழுநோய் "மைக்கோ பேக்டீரியம் லெப்ரே" என்ற நுண்கிருமியால்தான் உண்டாகிறது என்ற விஞ்ஞான உண்மை கண்டுபிடிக்கப்பட்டது, அதானல்.

தொழுநோயும் மற்ற வியாதிகளைப் போல முழுமையாகக் குணப்படுத்த முடிகிற வியாதிதான் என நிரூபிக்கப்பட்டதே அதனால்!

நார்வே நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஹேன்சன் என்பவர் 1873-ஆம் ஆண்டு தமது விஞ்ஞானக்கூட ஆய்வுகள் மூலம் தொழுநோய் "மைக்ரோ பேக்டீரியம் லெப்ரே" என்ற கிருமியால் உண்டாகிறது எனக் கண்டுபிடித்து உலகிற்குத் தெரியப்படுத்தினார்.

தொழுநோய் எப்படி இருக்கும்? தொழுநோயின் அறிகுறிகள் எவை? இந்த வினாக்களுக்கு முன்பெல்லாம் விடையாக உடல் ஊனமுற்ற தொழுநோயாளிகளையே சுட்டிக்காட்டி வந்தனர். ஆனால், அது மட்டுமே உண்மையல்ல.

ஒருவருடைய உடலில் தேமல் என்று சொல்லப்படும் படை, அதாவது PATCHES இருக்க வேண்டும். அந்தத் தேமல் மீது தொடும்போது உணர்ச்சியில்லாமல் இருந்தால், அவர் தொழுநோயாளி என்று கூறப்படுவார். அதாவது, அந்தத் தேமலை உடையவர் தொழுநோயின் அறிகுறி உடையவர் என்று மருத்துவர்களால் உறுதி செய்யப்படுகிறார்.

இந்த உணர்ச்சியற்ற தேமலில் அரிப்பும் இருக்காது. இந்தத் தேமல்கள் சிவந்த நிறத்தில் இருக்கும். சிலருக்கு வெளிறிய நிறத்தில் இருக்கும்.

தொழுநோய் ஆண், பெண் என்ற இருபாலருக்கும் வருகிறது. சுமார் இரண்டு வயதுடைய குழந்தைகள் முதல், எந்த வயதினருக்கும் இந்த வியாதி வருவது கண்டறியப்பட்டுள்ளது.

தொழுநோய்க் கிருமிகள் காற்றின் மூலம் பரவுவதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொழுநோய்க்குச் சிகிச்சை முறைகள் என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

தொழுநோயைக் குணப்படுத்த "டேப்சூன்" என்ற ஒரு மாத்திரை சிகிச்சை முறை (MONO TREATMENT) இருந்து வந்தது. இந்த ஒரு மருந்து சிகிச்சை நோயைக் குணப்படுத்தப் பல ஆண்டுகள் ஆனது. இதன் காரணமாக, நோயுற்றவர்கள் தொடர்ந்து மருந்து பெற்றுப் பயன்படுத்தச் சலிப்படைந்தனர்.

அப்போது நோயைக் குணப்படுத்த விரைவான சிகிச்சை முறையைக் கண்டறிய ஆராய்ச்சிகள்

மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆராய்ச்சிகளின் பயனாகக் கூட்டு மருந்து சிகிச்சை முறை கண்டறியப்பட்டது. கூட்டு மருந்து சிகிச்சை ஆறே மாதங்களில் தொழுநோயை முழுவதுமாகக் குணப்படுத்தியது. இந்தக் கூட்டு மருந்து சிகிச்சை முறை இந்தியாவில் 1980-ஆம் ஆண்டு முதல் தரப்பட்டு வருகிறது.

நோயைப் பரப்பும் தன்மை உடைய நோயாளிகளுக்கு - லேம்பரீன், ரிபாம்பிசின், டேப்சூன் என்ற மூன்று வகை மாத்திரைகளும் ஒரே நேரத்தில் பயன்படுத்தப்படும்.

நோயைப் பரப்ப இயலாத தன்மை உடைய நோயாளிகளுக்கு ரிபாம்பிசின், டேப்சூன் ஆகிய இரண்டு மாத்திரைகள் மட்டுமே தரப்படும்.

இந்த வகை சிகிச்சை முறையால் தமிழகத்தில் பல்லாயிரம் நோயாளிகள் மிக விரைவாகவும், முழுமையாகவும் குணமடைந்து விட்டனர். அதனால் **முன்பு ஆயிரம் பேருக்கு 12 நோயாளிகள் என்று இருந்த நோயாளிகள் கணக்கு, இப்போது ஆயிரம் பேருக்கு ஒரு நோயாளி என்ற அளவில் நிலைமை** மிக வெகுவாக முன்னேற்றம் கண்டுள்ளது.

தொழுநோய், மக்களில் யாருக்கு உள்ளது என எப்படி அரசாங்கம் கண்டுபிடிக்கிறது என்பவைகளை மக்கள் அறிந்துகொண்டு பயன்பெற முன்வரவேண்டும்.

குடிசைப் பகுதிகளிலும், நடுத்தர மக்கள் வாழும் இடங்களிலும், "தொழுநோய் கணக்கெடுப்புப் பணி" என்பதைச் சுகாதார ஆய்வாளர்கள் செய்துவருகிறார்கள்.

கல்வி நிலையங்களில் ஆண்டுக் கொருமுறை மாணவ, மாணவிகளுக்குத் தொழுநோய் அறியும் சோதனை என்று நடத்தப்பட்டு வருகிறது.

அடுக்கு மாடி வீடுகளிலும், உயர்ந்த வருவாயுள்ள குடியிருப்புப் பகுதிகளிலும் படக்காட்சி காண்பித்தல், நலக்கல்விப் பிரச்சாரம் செய்தல் என்ற பணிகள் மூலம் தொழுநோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

மாணவர்கள் மூலம் விழிப்புணர்வு ஊர்வலங்கள், பொதுமக்கள், இளைஞர்கள் உதவியுடன் மிதிவண்டிப் பிரச்சார இயக்கங்கள், ஆங்காங்கு தோல்நோய் மற்றும் தொழுநோய் அறியும் சோதனை முகாம்கள் என்பன நடத்தப்படுகின்றன. இவைகள் மூலமாகத் தொழுநோய் பற்றிய அறிவியல் உண்மைகள் மக்களுக்குத் தெளிவாக்கப்படுகின்றன.

பள்ளி ஆசிரியர்களுக்குத் "தொழுநோய் ஒழிப்புக் கல்விப் பயிற்சி முகாம்கள்" நடத்தப்படுகின்றன. இதன் மூலம் மாணவர்களுக்குத் தேமல் ஏதும் இருப்பின் அந்தப் பகுதிக்குரிய சுகாதார ஆய்வாளருடன் தொடர்பு கொண்டு உடனடியாக மருத்துவம் பெற வழி கிடைக்கிறது.

பலவகையான வழிகளில் தொழுநோய் ஆய்வுகள் மூலம் அறியப்படும் தொழுநோய் உள்ளவர்களுக்கு உடனடியாகக் கூட்டுமருந்து சிகிச்சை தரப்படுகிறது. இந்த ஆய்வுகளும், மருத்துவமும் அரசாங்கத்தால் முழுஅளவில் இலவசமாகவே செய்யப்பட்டு வருகிறது.

தொழுநோய்க் கணக்கொடுப்புச் செல்லுகிறபோது - பெண்கள், விதவைத் தாய்மார்கள், பூப்படைந்த பெண்கள் ஆகியோர் கூச்சத்தின் காரணமாகவும், அச்சத்தின் காரணமாகவும் தங்களைப் பரிசோதித்துக் கொள்ள முன்வருவதில்லை. அவர்களும் தங்கள் நலனை முன்னிட்டும், சமூக நலனைக் கருத்தில் கொண்டும் தொழுநோய் ஆய்வுக்கு உட்படுத்திக் கொள்ளுதல் நன்மை தருவதாகும்.

தொழுநோய் ஒழிப்புத் திட்டம் என்பது முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நமது நாட்டில் அரசால்



செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆறே மாதங்களில் தொழுநோய் குணமாகி விடுகிறது என்பதும் நிரூபணம் ஆகிவிட்டது. ஆனாலும் கூட, பொதுமக்களில் ஒரு பகுதியினர் தொழுநோய் பற்றிய அச்ச உணர்வை, அதாவது STIGMA என்று சொல்லப்படுகிற உணர்வை உடையவர்களாகவே இருக்கிறார்கள்.

நோயின் உண்மைக் காரணங்களை ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறார்கள். இதன் காரணமாக, முதலில் தங்களுக்குள்ள நோயை மறைத்துவிடுகிறார்கள்.

பின்பு நோய் முற்றி உடல் ஊனங்கள் வருகிறபோது துன்பப்படுகிறார்கள். இவைகளில் இருந்து மக்கள் விடுபட்டே ஆகவேண்டும். அதற்கு அவர்கள் தொழ்நோய் பற்றிய விழிப்புணர்வைப் பெறவேண்டும். ஆனாலும், நல்ல மாற்றங்கள் வந்துகொண்டுதான இருக்கிறது.





தொழுநோய் வந்து திருமணமாகாத பெண்கள் நோயை மறைத்த காலம் அன்று; அதனால் திருமணமாகாத நிலையும் இருந்தது. ஆனால் மருந்து பெறுவதும், நோயும் குணமாகித் திருமணம் நடைபெறுவதும் இன்று.

ஒரு குடும்பத்தில் திருமணமானபின், கணவனுக்கு அல்லது மனைவிக்குத் தொழுநோய் இருந்தால், இருவரும் பிரிந்து வாழ்ந்த நிலை அன்று; ஆனால் தொழுநோய் பற்றிய உண்மைகளை அறிந்ததால் கணவனே தன் மனைவியை அழைத்துச் சென்று மருந்து பெறவைப்பதும், நோய் குணமாகி மகிழ்வதும் இன்று.

விதைவைப் பெண்கள் வெளியே வராத காலம் அன்று; அவர்களுக்கு நோய் இருந்தாலும் அறிய வாய்ப்பில்லை அன்று; அவர்கள் மருத்துவமும் பெற முடியாத சூழல் அன்று; ஆனால் அவர்களும் விழிப்புணர்வு பெற்று, அவர்கள் வீட்டிலுள்ளோரும் விழிப்புணர்வு பெற்று, அவர்கள் அனைவருமே தங்களைச் சோதித்துக் கொள்வதும், நோயிருந்தால் மருத்துவம் பெற்று முழுகுணமடைவதும் சாதாரணமாகிவிட்டது இன்று.

## இவைகள் எல்லாம் எவ்வாறு ஏற்பட்டன?

தொழுநோய் பற்றிய உண்மைகளை வானொலி வளமாக வழங்கி மக்களைத் தெளிவு பெறவைத்தது; அதனால்!

தொழுநோய் பற்றிய விஞ்ஞானக் கருத்துக்களைத் தொலைக்காட்சித் தொகுப்பாகக் காண்பித்து மக்களின் விழிப்புணர்வை வளரச் செய்தது அதனால்!

மாத இதழ்களும், நாளிதழ்களும் பல்வேறு கட்டுரைகள், பேட்டிகள் மூலம் படிக்கின்ற வாசகர்கள் தொழுநோய் பற்றித் தெரிந்து கொள்ள வழி செய்தன என்பதால், என நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

தொழுநோய் வந்தவர்களிடையே உள்ள ஒரு முக்கியப் பிரச்சினை "உடல் ஊனம்" அவர்களுக்கு ஏற்படுவதுதான். சமூகத்தில் தொழுநோய் வந்தவர்கள் மீது அருவருப்பு ஏற்படவும் உடல் ஊனமே காரணமாகிறது. தொழுநோயாளிகளுக்கு உடல் ஊனம் எப்பபடி ஏற்படுகிறது? அதைத் தடுப்பது எப்படி? என்பனவற்றை முக்கியமாகப் புரியவைக்க வேண்டும்.

தொழுநோயாளிகளுக்கு ஊனங்கள் நோயின் காரணமாக நேரடியாக ஏற்படுவது குறைவே. ஆனால் அவர்களுக்கு உணர்ச்சி இல்லாத கை, கால், பகுதிகளைச் சரியாகப் பராமரித்துக் கொள்ளத் தெரியாததால்தான் நிறைய அளவில் ஊனம் ஏற்படுகிறது.

நெருப்பின் அருகில் இருக்கும்போது கை, கால்களைக் கவனமாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். கடினமான வேலை செய்யும் போது கை, கால்களில் அடிபடாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். கால்களில் செருப்பு இல்லாமல் நடக்கக் கூடாது.

முகத்தில் மூக்கு, கண் ஆகிய இடங்களிலும் ஊனங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து, கூட்டு மருந்து சிகிச்சையைக் கொடுத்தால் ஊனம் உண்டாவதில்லை. இப்போது தமிழ்நாடு அரசு ஊனத் தடுப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து, குழு அமைத்து, நோயாளிகளுக்கு ஊனங்கள் ஏற்படாவண்ணம் கவனித்து வருகிறது.

ஊனம் ஏற்பட்ட நோயாளிகளுக்கும் உரிய மருத்துவம் பெற்றதும் நோய் குணமடைகிறது. அவர்களில் முதல்நிலையில், ஊனங்கள் பயிற்சிகள் மூலம் சரி செய்யப்படுகிறது. இரண்டாவது நிலையில், ஸ்பிலின்ட்ஐப் பயன்படுத்தியும் ஊனம் தடுக்கப்படுகிறது. இந்த இரண்டு நிலைகளையும் தாண்டியவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து ஊனங்கள் முற்றிலும் சரிசெய்யப்படுகிறது.

தொழுநோய் உடையவர்களுடைய வீட்டில் வசிப்போரும் அவ்வப்போது சோதிக்கப்படுகிறார்கள். தொழுநோய்க்குத் தடுப்பூசி கண்டுபிடிக்கும் ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**1997 பிப்ரவரி மாதம் 21 ஆம் தேதி முதல் 28 வரையிலான நாட்களில் தமிழ்நாடு முழுவதும் தொழுநோய் தீவிரக் கண்டுபிடிப்பு இயக்கம் நடைபெற்றது. இதில் பல லட்சம் மக்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டார்கள். இதன் மூலமாகத் தமிழ்நாட்டில் தொழுநோய் மிகவும் குறைவான அளவே மக்களிடையே இருக்கிறது என அறியப்பட்டது. எனவே, 1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் தேதியில் இருந்து, தொழுநோய் ஒழிப்புத்துறையானது பொதுச்சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துகள் துறையோடு ஒருங்கிணைப்பு செய்யப்பட்டது.**

**தொழுநோய் ஆய்வாளர்கள் தற்போது சுகாதார ஆய்வாளர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். தொழுநோய் ஆய்வுடன் காசநோய், மலேரியா போன்ற ஆய்வுகளையும் சேர்த்துச் செய்து வர பயிற்சிகள் தரப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் செயல்பாடும், மக்களின் ஒத்துழைப்பும் பணியாளர்களின் ஈடுபாடும் சேர்ந்து ஒன்றாகும் போது, எதிர்காலத்தில் தொழுநோயுள்ளவராக எவரும் இருக்க வாய்ப்பில்லை. அந்தத் தொழுநோயற்ற உலகைக் காண ஒன்றுபட்டு நாமெல்லாம் அரசின் ஒத்துழைப்போடு மேலும் உழைப்போம்.** ●

(3-ம் பக்க தொடர்ச்சி)

எய்ட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு ரூபாய் 14 கோடியே 36 இலட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இவை, இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

### இலவச மின்சாரம்: கூடுதல் மான்யம்

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதற்காக அரசுக்குச் சேர வேண்டிய வழிவகை முன்பணம், வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையிலிருந்து ரூபாய் 228 கோடியே 21 இலட்சம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அளிக்க வேண்டிய கூடுதல் மானியமாகக் கருதப்படவேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. இத்தொகை, இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 20 - வேளாண்மை" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

"மானியக் கோரிக்கை 25 - கைத்தறியும் துணித் தொழிலும்" என்பதன் கீழ் இலவச சேலை, வேட்டிகள் வழங்கும் திட்டத்திற்கும், விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்திற்கும் கூடுதலாக ரூபாய் 7 கோடியே 79 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கம், இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

### இந்திரா வீட்டுவசதித் திட்டம்

"மானியக் கோரிக்கை 26-கதர்-கிராமத் தொழில்கள்" என்பதன் கீழ் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்குக் கதர்த்துணி விற்பனை குறித்த நிலுவையாக உள்ள தள்ளுபடிக்காக (Rebate) ரூபாய் 9 கோடியே 42 இலட்சம் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

"மானியக் கோரிக்கை 27 - ஊரக வளர்ச்சி" என்பதன் கீழ் நடப்பாண்டிற்கு "இந்திரா வீட்டு வசதி"த் திட்டத்திற்கு ரூபாய் 45 கோடியே 40 இலட்சம் கூடுதலாக அரசு அனுமதித்துள்ளது. இதற்காக, இறுதித் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 2 கோடியே 21 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணப் பணிகள் மற்றும் பெரும் மழையினால் ஏற்பட்ட இழப்பீடுகள், சாலை பழுது பார்த்தல் போன்ற துயர் தணிப்புப் பணிகளுக்காகக் கூடுதல் ஒதுக்கீடு தேவைப்படுகிறது. இதற்காக, "மானியக் கோரிக்கை 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன் கீழ் இந்தத் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 97 கோடியே 86 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

"மானியக் கோரிக்கை 48-குடிநீர் வழங்கல்" என்பதன் கீழ் உவர்த்தன்மை நீக்கும் சிறு சாதனங்களை நிறுவுவதற்காகவும், சென்னை இரண்டாவது குடிநீர் வழங்கு திட்டத்திற்காகவும் ரூபாய் 19 கோடியே 10 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இதற்காக, இறுதித் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 7 கோடியே 71 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

### போக்குவரத்துக் கழகங்களின் நிதி இடர்ப்பாட்டைச் சமாளிக்க...

போக்குவரத்துக் கழகங்கள தங்களது நிதி இடர்ப்பாட்டைச் சமாளிக்க இயலும் வகையில் மாநில அரசுக்குச் சேரவேண்டிய கடன்கள் மற்றும் வழிவகை முன்பணங்களாக இருந்த ரூபாய் 150 கோடியே 53 இலட்சத்தைப் போக்குவரத்துக் கழகங்களின் சமபங்கு மூலதனமாகக் கருதவேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. இத்தொகை இறுதித் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 58 - சாலை போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்துக் குறித்த மூலதனச் செலவு" என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்வாரியத்திலிருந்து அரசுக்குச் சேரவேண்டிய கடனாக இருந்த ரூபாய் 87 கோடியே 34 இலட்சத்தை மாநில அரசின் சமபங்கு மூலதனமாக மாற்றவேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ரூபாய் 4 கோடியே 75 இலட்சம் மானியக் கோரிக்கை "61 பல்வகை மூலதனச் செலவு" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

இத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப் பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து நான் இங்கு மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும் மற்றும் ஏனைய இனங்கள் குறித்தும் உரிய முழு விவரங்கள் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம்பெற்றுள்ளன.

- இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இறுதித் துணை மதிப்பீடுகளைத் தாக்கல் செய்து உரையாற்றினார்.

★ ★ ★

### முதல்வர் கலைஞரை ஆசிரியர் சமுதாயம் என்றும் மறவாது!

இதுவரை சென்னை நகரை ஏ-1 நகரமாக வகைப்படுத்துமாறு மத்திய அரசிடம் நாம் வைத்த கோரிக்கையை இன்று கலைஞர் அரசு நம்பக்கம் நின்று நிதிநிலை அறிக்கையில் மத்திய அரசிடம் வற்புறுத்தியிருப்பது இந்த அரசு ஆசிரியர், அரசு ஊழியர், தொழிலாளர் நல அரசு என்பதை மெய்ப்பிப்பதாக உள்ளதல்லவா ?

மதிய உணவுத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறும் மாணவர், மாணவிகளுக்கு மட்டுமே இலவச பாடப் புத்தகம் என்ற நிலையை மாற்றி, 1 முதல் 5-ஆம் வகுப்புவரை பயிலும் மாணவ மாணவியர் அனைவர்க்கும் இலவச பாடப்புத்தகம் வழங்கப்படும் என்ற கலைஞரின் அறிவிப்பு-புரட்சியும், புதுமையும் பொதுமையுமான அறிவிப்பல்லவா ?

தந்தை பெரியார் வழியில், பேரறிஞர் அண்ணா வழியில் அயராமல் நடைபோடும் முதல்வர் கலைஞர் அறிவாலயமாம் பள்ளிகள் இல்லாத குக்கிராமங்களே இருக்கக்கூடாது எனத் திட்டமிட்டு 700 தொடக்கப்பள்ளிகளை ஆரம்பிக்க இருப்பதையும், மேலும் 200 நடுநிலைப் பள்ளிகள், 80 உயர்நிலைப் பள்ளிகள், 40 மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றை உருவாக்க இருப்பதையும் நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளார்.

கேடில் விழுச் செல்வமாம் கல்விதான் மக்கட்கு வளமான - தரமான வாழ்க்கையைத் தரும் என உணர்ந்துள்ள கலைஞர் அவர்கள் இவ்வாண்டு கல்வித்துறைக்கு, சென்ற ஆண்டை விட ரூ.630 கோடியை கூடுதலாக்கி ரூ.3568 கோடியை ஒதுக்கி உள்ளார்.

பாரி வள்ளலாகி வாரி வழங்கியுள்ள முதல்வர் கலைஞரை ஆசிரியர், அரசு ஊழியர் சமுதாயம் காலகாலத்திற்கும் மறக்காது; நன்றி செய்யத் தவறாது என்பது உறுதி.

- க. மீனாட்சிசுந்தரம்
பொதுச்செயலாளர்,
தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்



சிறுகதை:

# அமானுடன்...

பிரபஞ்சன்

"தாழி... காலைலேந்து, காலை மரிச்சு மரிச்சுக்கிட்டு வந்து நிக்கிறான். என்னன்னும் சொல்லித் தொலைய மாட்டேங்கறான். ரொம்ப குசும்பனாயிட்டான் அவன்..." என்று தனக்குள் சொல்லிக் கொண்டார் முத்துப்பாண்டி.

நேர்வகிடு மாதிரி இருந்தது வரப்பு. வரப்பு வழி அவர் களத்து மேட்டில் ஏறி, தெற்குப் புளிய மரத்துப் பக்கமாக வந்து நின்றார். அவர், மாலைக் கடன்கழிக்க, குளக்கரைக்கு வந்தவர் அப்படியே, குளத்தில் ஒரு முங்கல். துவட்டிக்கொண்டு நீண்டு வளர்ந்திருந்த தலைமுடியை உலர வைத்துக்கொண்டு நின்றவர்க்கு, வயிறு கிள்ளியது. பேச்சி கடைக்குப் போய் ரெண்டு வடைகளைப் பிட்டுப் போட்டுக்கொண்டு, ஒரு டீயைக் குடித்தால் தேவலை என்று இருந்தது. துவைத்த வேஷ்டியை அகல விரித்து முதுகுப்புறமாகப் பிடித்துக்கொண்டு கோவணத்துடன் நடந்து களத்துமேட்டுவழி தெருவுக்கு வந்தார். பகல் நேரத்திலும் கூட, இருண்டு கிடக்கும் புளியஞ்சாலை. தெற்கு மரத்தண்டை அவர் வந்தபோது, திடுமென உடம்பு மயிர்க்கூச்செறிந்தது. லேசான மயக்கம்கூட வந்துவிட்டது அவருக்கு. கால் பின்னிக்கொண்டு தடுமாறியது. ஆவேசம் வந்துவிட்டது என்பது அவருக்குப் புரிந்தது.

"த்தூ.... சமயா சமயம் தெரியாமே, இப்படிக் காலைச் சுத்திக்கொண்டு நின்னா, எப்படிடா, பெரிய கருப்பா ?" என்று மர உச்சியைப் பார்த்துக்கொண்டு சொன்னார், முத்துப்பாண்டி. அந்த இடத்தில்தான் அவன் குடி இருக்கிறான் என்பதை நிச்சயமாக அறிந்தவர் அவர். அந்த இடத்திலேயே நின்று, அரைஞாண் கயிற்றில் கட்டித்தொங்கவிட்ட விபூதிப் பையிலிருந்து ஒரு சிட்டிகை திருநீறை எடுத்து நெற்றியில் 'சம்போ மகாதேவா' என்றபடி பூசிக்கொண்டார்.

'காத்து மாத்து அண்டாமே, காடன் மாடன் அணுகாமே காத்து ரட்சியும், கருப்பசாமி... காட்டுக் கரம்பு வேல்சாமி..." என்று முணுமுணுத்துக் கொண்டார். ஆவேசம் நீங்கியது மாதிரி இருந்தது. தன் இடப்பக்கமாகப் பார்த்தார். அவன் நின்று கொண்டிருந்தான். ஒரு பனைமரம் உயரத்துக்கு. அப்புறம் குள்ளக் கத்திரிக்காய் உருவம் எடுத்துக்கொண்டான் அவன்.

"தாழி.... வரியா.... வா.... பேச்சிப் பய கடைக்குத்தான் போறேன். வா பேசிட்டே போவோம். நீயும்தான் என்ன செய்வே..." என்றபடி மறுபடியும், தோளில் போட்ட வேஷ்டியைப் பிரித்துக் காயப்போட்டபடி நடந்தார். அவருடன் அவன் பேரக்குழந்தை, தாத்தாவோடு நடப்பது மாதிரி நடந்து வந்தான்.

மண், குளிர்ந்திருந்தது. இருட்டத் தொடங்கி இருந்தது. தெருவில் இருபுறமும் ஆங்காங்கே தென்னை ஓலை வேய்ந்த ஓடுகள். உரலில் கட்டின ஆடுகள், இவர்களைப் பார்த்ததும், ஆவேசமாகக் கத்தின. கயிறை அறுத்துக்கொண்டு போக முயல்வன மாதிரியாக அலைந்தன.

"பார்த்தியா... ஆட்டுக் கண்களுக்கு உன்னைத் தெரியுதுடா கருப்பா" என்றார்.

"மங்" என்று அவர் சொன்னதை ஒப்புக்கொண்டான், கருப்பு. தொடர்ந்து அவனே சொன்னான்.

"பாம்பும் ஆட்டுக் கிடாவும், நாயும் அறியும்; மனுசங்கத்தான் என்ன அறியமாட்டாங்க.."

என்று அவன் சொன்னதை ஒப்புக்கொண்டார் அவர்.

திடுமென, ஆள்அரவமற்ற அந்த இடத்தில் சுருட்டு வாசம் வீசியது. இடப்பக்கம் பார்த்தார். அவன், ஒரு அடி நீளத்துக்கு ஒரு சுருட்டைப் புகைத்துக்கொண்டு வருவது தெரிந்தது. கருப்பு சுருட்டுப் பிடிப்பான். கூடவே சாராயமும் குடிப்பான். அது அவன் வழக்கம். கொடை நடக்கிறது என்றால், சாராயம், தெருவை நனைக்குமே. தண்ணீர்பட்ட பாடாய் ஓடும். அது ஒரு காலம். தாழிகள் இப்போதெல்லாம் எவன் கொடை கொடுக்கிறான். பூசை வைக்கிறான்? எல்லாம் கலி காலம். சாமியாவது பூதமாவது என்று பேசத் தொடங்கிவிட்டார்கள். நகரத்துக்குப்போய் படித்துவிட்டு வருகிற தாழிகள் ஒருத்தருக்கும் கருப்பு, சின்னக் கருப்பு, மாடன், தலையன், மம்பட்டியான் என்று கொஞ்சமாவது பயம் இருந்தால்தானே? என்னப் படிப்பு படிக்கிறாங்களுங்க...

"அது சரிதான். எல்லாம் குறைஞ்சு போச்சு" என்றான் கருப்பன். அவர் நினைப்பதைப் புரிந்து கொண்டவனாக.

"அதுல பாரு கருப்பா... ஊர்க்கவுண்டர் வீட்டுல பொண்ணுக்கு, கல்யாணம் குதிர்ந்துச்சுதே... அவர் எப்படியாக்கொத்த மனுஷர். அவர் கொடை போடுவார். ஒரு ஆடாவது அடிப்பார்னு இருந்தேன். என் வாயிலே மண்ணைத்தான் போட்டார்..."

“ஆமா... நானகூட எதிர்ப்பாாததுகிட்டுதான இருநதேன. ஆசாமி ஏமாத்திபூட்டாா.”

“கவுண்டர் நல்ல மாதிரிதான். சாமி, பூதம்னா பயந்துக்குவாா.. அவா மகன் இருக்கானே, பிரசெண்டு, அந்தத் தாழிதான் வேண்டாம்னுட்டாா. சிலை தெய்வம்லாம் வேணாமாம். என் முன்னாலேயே சொன்னான்னா பாரேன். எவ்ளோ கொழுப்பு இருக்குன்னு.... தி.... தாழி.... கொஞ்சமும் உன் ‘பவரை’ காட்டினாத்தானே? ராத்திரியில, இந்தப் பக்கமாதானே வீடு திரும்பறான். பயலை, ஒரு அறை அறையேன். வழிக்கு வந்துருவானே... காலம் மாறிப்போச்சு, கருப்பா... உயிரோடதான் இருக்கோம்னு அடிக்கடி தாழிகளுக்கு நிருபிச்சுக்கிட்டே இருக்க்னும்... இல்லேன்னா, செத்துட்டாமனு கொண்டு போயி புதைச்சுப்போடுவாங்கோ... நீ, என்னடான்னா... அநியாயத்துக்கு அடங்கிப் போயிட்டியே கருப்பா.. கிழவன் கைத்தடி மாதிரி. கொஞ்சம் விருட்டும் முரட்டும் வேணுமப்பா. நீயே ஒரு காலத்துல எப்படி இருந்தே... இந்த ஏரியாவிலே மனுஷன் நடக்க முடியுமா? நடக்க விட்டியா! உறுமை வேளையிலே நடந்தான்னு புள்ளதாச்சியை அறைஞ்சி, தாய் வேற, புள்ளை வேறயா ஆக்கினேயே... எத்தனைப் பயல்களை அறஞ்சி ஒழுங்கு பண்ணி இருக்கே... எனக்கே கூட, எத்தினி பயம் உன் மேலே என்னயே அலமந்து பண்ணிட்டயே. அப்படியாக் கொண்ட உனக்கு என்ன வந்துச்சு? இப்படி, வாலாட்டுற நாய் ஆயிட்டயே. இப்பம், ஒன்னும் ஆயிடலை. ரெண்டு வாட்டி, உன் விசுவரூபத்தை எடுத்து நில்லு. நாலு பேரை ரத்தம் கக்க வையி.... கொஞ்சம் பேரை, வயிறு நோக வையி... அப்போதான் தாழிங்க மனசுல கொஞ்சமாவது பயம் வைக்குமப்பா.. இல்லேன்னா சோத்துக்குப் பறக்கிற நாய்கள்கூட, குண்டிக்குத் தண்ணி கொண்டு வரச் சொல்லுவாங்க... உன்னியே.... என்னமோ போ”...

மிகக் கவனமாக அவர் சொல்றதைக் கேட்டுக்கொண்டு நடந்து வந்தான் கருப்பன். “ஆமாம்”, ‘அவர் சொல்வதெல்லாம் உண்மை’ என்கிறாற்போல, தலையை அசைத்துக்கொண்டான் அடிக்கடி.

டீக்கடை பெட்ரோமாக்ஸ் வெளிச்சம் தெரிந்தது.

“நான் டீக்குடிக்கப் போறேன். உனக்கும் ஒரு சிறட்டையில, வாங்கித்தரவா? கடைக்குப் பின்னாலே வா்றியா!”

“வேணாம்”.

முத்துப்பாண்டி யோசித்துக்கொண்டு நின்றார். அப்புறம் சொன்னார்.

“ஒரு கில்லாடித்தனம் பண்ணுவோமா? நீ சரின்னா. நம்ம ரெண்டு பேருக்கும் நல்லது.”

“சொல்லுமே ?”

“டீக்கடைககாரன் இருக்கானே, அதான் பேச்சிப்பய கொஞ்சம் ‘சல்லு புல்லுன்னு’ நாலு காசு பண்ணி இருககான். ஆள், நம் வளைப்புக்கு வளைவான். அவன் மக ஒருத்தி இருக்கா... விடை குட்டி. நீ அவளைப் பிடியேன். பள்ளிக்கூடம் விட்டு, இந்த வழியாத்தானே வருவா.. பக்குன்னு பிடி. சேஷ்டை பண்ணு... ஆள் பேயோட்ட என்கிட்டதானே வரனும்”.



“ஆனா, இங்க நான்பிடிச்சுடுவேன். ஆனா, அந்த இடம் மாடசாமிக்கு அதிகாரம் உள்ள இடம். அங்கனே வந்து, நான் திங்கவோ, குடிக்கவோ முடியாதே ...”

“அப்படியும் வேற இருக்கா?”

“ஆமாம்... சிவனார் எங்களுக்கு அதிகார எல்லை பிரிச்சுக் கொடுத்திருக்கிறாா.”

“எனக்கு வேண்டியது காசு. உனக்குக் கோழியும் சாராயமும். இப்படி பண்ணினா என்ன ?”.

“சொல்லும்.”

“பூசை முடிச்சு கோழியையும் சாராயத்தையும் இங்க கொண்டு வந்துடறேன்”.

“ரொம்ப சரி.”

“எப்படி நம்ப டுபாக்கூர் வேலை ?”

“ஆங்.. என்ன வேலை ?”

“டுபாக்கூர் வேலை, அப்படின்னா, பேத்து மாத்து வேலை. என்ன கருப்பா, தமிழே தெரியலயே உனக்கு? சரி பசிக்குது. நான் கிளம்பறேன்.. நாளைக்கே பிடிச்சுக் கிடனும், பேச்சி மவளை, சரியா ?”

“சரி நான் புறப்படறேன்.”

“சரி புறப்படு. எங்கனே இப்போ...”

“மரத்துக்குதான்” என்று களைப்புடன் சொன்னான் கருப்பன்.

“சரி நானும் மேலும் நாலு இடத்துல முயற்சி பண்ணறேன். நாலு கொடை, ரெண்டு கடா வெட்டு, ரெண்டு பேய் விரட்டுன்னு நடந்தா தானே நமக்கும் நல்லது, ஊருக்கும் நல்லது.”

டீக்கடை, கூத்து முடிந்த மைதானம் மாதிரி வெறுமையாகக் கிடந்தது. பேச்சி, தன் மனைவியுடன், சாவகாசமாகப் பேசிக் கொண்டிருந்தான். ஆம்பிளையைக் கண்டதும் பேச்சியின் மனைவி எழுந்து, சாக்குப் படுதாவை விலக்கி, அந்தப்புரத்துக்குப் போனாள். வந்தவர், கோவணத்துடன் வேறு இருந்தாரே ?

“வாங்க, மந்திரக்காரரே. குளியல் ஆச்சாக்கும ....”

“ஸ்நானம் ஆச்சி..” என்றார் முத்துப்பாண்டி. அப்படிச் சொல்வதில், ஒரு மரியாதை, மேலான பண்பு மிளா்வதை அவர் உணா்ந்து இருந்தாா். வேஷ்டியை உதறி, இடுப்பில் சுற்றிக்கொண்டாா். மூதாட்டிகள் மாா்பு மாதிரி நீண்டு தொங்கின விபூதிப்பையிலிருந்து, திருநீற்றை எடுத்துப் பூசிக்கொண்டாா். அவர் நின்ற இடம், கல்லாவுக்கு எதிரே. அங்குதான் முருகன் தன் மனைவிமாா்களுடன் காட்சியளித்துக் கொண்டிருந்தாா். கண்ணை மூடிக் கொண்டு சில நிமிஷங்கள், மந்திரம் போல சில வாா்த்தைகளை முணுமுணுத்தாா்.

பேச்சி அவரைப் பார்த்துக்கொண்டிருந்தவன், அவனையும் அறியாமல் எழுந்து நின்றான். இயல்பாகவே தன் கைககளைக் கட்டிக் கொண்டான்.

“மூட்டு வினையெல்லாம் தீர்த்துவிடு முருகா...

ஏவல் பில்லி சூனியம் எடுத்துவிடு கருப்பா...

கண்ணேறு, கருப்பு, கழித்துவிடு பெரிய கருப்பா...

பெண்ணை விட்டுப் போயிடுவாய்... பிள்ளை மேல் வாராதே.... கண்ணைப்போல பாதுகாரு பச்சைமரக் கருப்பு தேவா...” என்று சொல்லிக்கொண்டே வந்தவர், பல்லை “நறநற”வெனக் கடித்துக் கொண்டு, “ம்”.. ‘சே’... ‘தாழி’ என்று ஒலிக்குறிப்புகளை எழுப்பிக்கொண்டு நின்றார். பேச்சிக்குப் பயம் பிடித்துக்கொண்டது.

“மந்திரக்காரரே... மந்திரக்காரரே...” என்றார் இரண்டு முறை பேச்சி.

முத்துப்பாண்டி கண்விழித்தார். தன் சுற்றுச்சூழலை ஆச்சா்யமுடன் ஏதோ அயல் கிரகத்தில் இருந்து வந்தவர் போன்று ஒரு முறை பாா்த்துக்கொண்டாா். உடம்மை உதறிக் கொண்டாா்.

“ம்! அப்படியா சங்கதி ?” என்று கூரையைப் பாா்த்துச் சொன்னாா். விசுப்பலகையில் அமா்ந்தாா்.

“என்ன, மந்திரக்காரரே!” என்றார் பேச்சி...

“என்னவோ மாதிரி, உடம்பை முறிச்சுப் போடறாம்பா... அவன்”

“யாரு ?”

“வேற யாரு.... கருப்பன்தான்... பெரியவன்.”

“யாா் யாரு சொன்னிய ?”

“பெரிய கருப்பு. எத்தனைவாட்டி சொல்றது ? அவன்தானே என்கிட்டே ஒண்டிக்கிட்டு என்வாக்குல வா்றது! நான் சொல்றது எல்லாம் பலிக்குன்னா, சங்கதி அதுவாம் இல்லை? பய, என் கைப்பிடியில அடக்கம் வா ?”

“என்ன சாப்பிடறிய...” என்ற படி ஒரு காய்ந்த வாழை இலைத்துண்டை எடுத்து, அழுக்கு வேஷ்டியில் துடைத்து, அதில் இரண்டு வடையை வைத்து அவா் முன் வைத்தான் பேச்சி.

“எதுக்கு இந்த இழவு!”

“தின்னுங்க..” என்று வேண்டினான் பேச்சி.

வேண்டா வெறுப்பாக வடையைப் பிட்டு வாயில் போட்டுக் கொண்டாா் அவா். இஞ்சி, தட்டுப்பட வடை நன்றாகவே இருந்தது. பேச்சி, டீ போட்டுக்கொண்டு கேட்டாா்.

“கூரையைப் பாா்த்துட்டு என்னவோ சொன்னிய, என்னன்னு விளங்கலையே.”

“அவன்தான் என்னமோ சொன்னான்... ஏதோ சொன்னதைச் செய்யாத சொங்கிப்பயன்னு, உன்னைத்தான். என்னமாவது வேண்டுதலை செய்துக்கிட்டு, அதை நிறைவேற்றலையோ? வீட்டுல யாருக்காச்சும் சுகவீனமோ, எல்லாம் கருப்பன் வேலை”.

டீயை ஆற்றிக் கொண்டு இருந்தவன் கை படக்கென்று நின்றது.

“ஆமாங்க.. இந்தப் பொம்பளை உடம்பு சுகவீனமா இருந்தப்போ கோழி போடறேன்னு சொன்னேன். எங்கே பண்றது ? சனி, சம்சாரத்தோடு வந்த மாதிரி, வந்து போனா ஒரு வில்லங்கம். என்ன பண்றச் சொல்றிய... அதை ஞாபகத்துல வச்சிக்கிட்டு கேக்குதாக்கும் ?”

“பொல்லாத பயன்னா அவன்? ஒரு வாா்த்தைய விட்டுட்டா, பிடுச்சுக்கிடுவானே! இங்கனே சுத்திச் சுத்தித் திரிவான் வீட்டுல, யாருக்காச்சும் உடம்பு சுகவீனமா இருக்கனுமே”.

“சரியாச் சொன்னிய... பொட்டைக் குட்டிக்கு நேத்திலேந்து சாயங்காலம் ஆனா அனல் காயுது. உடம்பு சுடுது! என்னடான்னு பாா்த்தேன். இதுதான் சங்கதியா ?”

“பின்னே வேற! நான் வா்றச்சே பாா்த்தேனே. அந்த தண்ணி அண்டாவுக்குப் பக்கத்துல குந்திக்கிட்டு இருந்தான்...”

“அதா ?”

“ஆமாம். வேற யாரு ? தாழி அவன்தான்.”

பேச்சியின் முகம் வெளிறிப் போயிற்று. பித்தளை அண்டாவையே பாா்த்துக்கொண்டு இருந்தான். அண்டாவுக்குப் பக்கத்தில் இடம் இருந்தது.

“மந்திரக்காரரே.. பூசை போட்டுருவம். என்ன ஆகும் ?”

டீயைக் குடித்துக்கொண்டு முத்துப்பாண்டி சொன்னாா்.

“பொன்னு, அந்தி நேரத்துல யாரோ அறுத்துப் போட்ட கோழிக் காலை மிதிச்சு இருக்கா..”

“தாழி மவ செய்தாலும் செய்திருப்பா.. என்ன பண்றது. மந்திரக்காரரே ?...”

“பாிகாரம்தான். பயலுக்குப் பூசை போட்டுருவம். ஒரு இருநூறு ரூபாயாவது வேணும். இப்படியே விட்டா, பொண்ணுக்கு வயிறு வீங்கி வயித்தாலே போயி, அப்புறம்...”

“வேணாம். உங்க வாயாலே அதைச் சொல்ல வேணாம்...”

“பின்னே ? தாழி, கோழி கெட்ட கேடு, என்ன விலை விக்குது. யோசிச்சு பாா்க்கனும். இதையே, ஐம்பது ரூபாயிலும் பண்ணலாம். ஆனா எதுக்குப் பண்ணறோம். கருப்பு சந்தோஷப்பட வேணாமா ? ஏதோ பண்ணோம்னு பண்ணா, என்ன பிரயோசனம். எனக்கென்ன போச்சு ? ஒத்தை ருவா கொடு பண்ணி வைக்கிறேன்.”

“வேணாம். வேணாம் மந்திரக்காரரே. சாமிக்குப் பண்றதுலே குறை வைக்கப்படாது. நூத்து அம்பது கொடுத்துடறேன். நிறைவா பண்ணி வையுங்கோ. வயசுப்

பொண்ணு படுத்துக்கிட்டா மனசு கேக்கவா செய்யுது... ?"

கல்லாவைத் திறந்து, பத்து, இருபது, அஞ்சு, இரண்டு, அழுக்கு ஒற்றை ரூபாய் நோட்டுகளையெல்லாம் சேர்த்து, ஒரு வழியாக நூற்று ஐம்பதைத் தயார் செய்து, அவரிடம் தந்தார் பேசசி.

"அப்ப சரி... நாளை வெள்ளி, ராத்திரிக்குப் பூசை வச்சுக்குவோம். வடை, டீக்கு என்ன காசு ?"

"சும்மா இருக்கட்டும். போங்க.... இதெல்லாம் ஒரு சங்கதியாட்டும் ?"

கையில் சில்லறை புழங்கியது. வேலையும் ஒன்று வந்திருக்கிறது. மிகுந்த உற்சாகம் கொண்டவராக ஆனார் முத்துப்பாண்டி.... தென்னஞ்சோலை சாராயக் கடைக்கு போய் குடித்தார். சாராயம் கூட இனிப்பாக இருப்பது மாதிரி தென்பட்டது. அவருக்கு.

"வியஞ்சனம் என்ன வேணும்யா ? ஊறுகாய் தரட்டுமா !" என்றான் கடைக்காரன்.

"தாழி... ஊறுகாயா ? என்ன இருக்கு உன் கடையில !"

"கறி இருக்கு. தலைக்கறி. நண்டுப்பொறியல், எறா எல்லாமும்தான் இருக்கு. உனக்கு என்னையா வேணும் ?..."

"உனக்கு எதுக்கடா இந்தச் சங்கதியெல்லாம்" என்கிற தொனி, அவன் வார்த்தையில் இருக்கிறதை அவர் உணர்ந்தார். சொன்னார்.

"நண்டும், எறாவும் கொண்டா"...

கடைக்காரன் அவரை ஆச்சர்யமுடன் பார்த்துச் சொன்னான்.

"உக்காருங்க அண்ணாச்சி..."

முத்துப்பாண்டி தனக்குள் சொல்லிக்கொண்டார்.
"காசில்லா ஆம்பிளையக் கட்டியவள் வேண்டாள்
வேசியும் விரும்பாள் உறவுகளும் விலகிடுமே..."

நிறையவே குடிக்க முடிந்தது அவரால். ஆனாலும் நிலை தடுமாறுவது என்பது அவர் அளவில் இல்லை. அவிழ்ந்து தோளில் புரளும் கூந்தலை அள்ளிக் கொண்டையாக முடிந்து கொண்டார். வேஷ்டியை இறுக்கிக் கட்டிக்கொண்டு தோப்புக்கு அந்தப்புறமாக இருந்த வெள்ளச்சி வீட்டுப்பக்கம் நடந்தார். ஒரு கையில் பாட்டிலில், அவரின் பிரியமானவளான வெள்ளச்சி குடிக்க என்று சாராயம் வாங்கி இருந்தார். கடை திருப்பத்தில், வெற்றிலை பாக்குக் கடையில், நல்ல கைச் சுருட்டாக நாலு வாங்கி முடித்துக் கொண்டார். வெள்ளச்சிக்குச் சுருட்டு பிடிக்கும். தோப்புக்கு வடக்காக, வடகரை போகிற ரஸ்தாவில் அரைமைல் நடந்தால், வடக்கு வாசல் விழும். அங்குதான், சவுக்குத் தோப்புக்குள் குடிசை போட்டுக் குடி இருந்தாள் வெள்ளச்சி.

வெள்ளச்சியோடு அவருக்கு அண்மைக் காலத்துப் பழக்கம்தான். சுமார் நாலைஞ்சு வருஷத்து உறவு. வெள்ளச்சியின் பட்டியலில் அடிக்கடி சில பேர் ஏறும். சில பெயர்கள் விழும். சமீப காலங்களில், மேலத்தெரு பால்கார பத்மநாபன், அவளைக் கொண்டிருந்தார். என்றாலும், முத்துப்பாண்டியையும் அவள் கைவிட விரும்பவில்லை. 'தாய்க்கு நாலு குழந்தைகள் இருந்தால், நாலையுமே அவள் விரும்புவது இல்லையா' என்று கேட்பார். யாருக்குத்தான் தத்துவம், மெய்ஞானம் லயிக்காது ?



தோப்புக்கு வெளியே நின்று, ஜாக்கிரதையாக பால்காரன் வில் வண்டி நிற்கிறதா என்று கண்காணித்தார். இல்லை. ஆக அவர் தைரியமாகக் கதவைத் தட்டலாம். தட்டினார்.

"யாரு ?" உள்ளிருந்த குரல் கேட்டது.

"நான்தான் முத்துப்பாண்டி."

கொஞ்சம் அமைதி. எண்ணெய் காணாத கதவு, நரநரவென்று சப்தத்துடன் திறந்துகொண்டது.

வெள்ளச்சி, கசங்கிய புடவையுடனும், கலைந்த கூந்தலுடனும் நின்றிருந்தாள்.

"இப்பத்தான் வழி தெரிஞ்சதாக்கும் !" என்றாள் வெள்ளச்சி. கலைந்த கூந்தலை முடிந்துகொண்டாள். "என்ன பண்றது வெள்ளை. தாழி நம்ம பிழைப்பு நாறிப் போச்சே... இந்தா.."

"என்னது !"

"உனக்குப் பிடிச்சதுதான்..."

பாயில் அமர்ந்தார்கள் இருவரும். நகர்ந்து சுவரில் சாய்ந்து அமர்ந்துகொண்டார் அவர். இரண்டு அலுமினிய டம்ளர்களை எடுத்தாள் வெள்ளை.

"எனக்கு வேணாம்..."

"நிறைய போட்டுக்கினியோ ! பதார்த்தம் ஒன்னும் வாங்கியாரல்லையா ?"

"மறந்துட்டேன்".

அவள் சாராயத்தில் தண்ணீர் கலந்து ஒரே 'தம்'மில் குடித்தாள்.

"எங்க ஊருலதானே இருக்கீரு ?"

"ஊருலதான். எங்க போறது, வேறே ? மனுஷங்க தாழி, தெய்வபயம் அத்துப் போயிட்டாங்க. தாழி ஊருல ஒருத்தனும் விளங்கப் போறது இல்லை..."

அவள் சிரித்தாள்.

"என்ன சிரிப்பு ?"

அவள், ஊறுகாய் மட்டை தேடி எடுத்து வந்தாள். உட்கார்ந்து, மீதியையும் குடித்து முடித்தாள். ஊறுகாயை வழித்து நாக்கில் தடவிக்கொண்டாள்.

"வயிற்றாலே விடுற சாபம் எல்லாம் பலிக்குமா ?"

"வயிற்றாலேயா ?"

"பின்ன என்ன ? நீரு கொடை, பலின்னு ஊரை ஏமாத்திக்கிட்டு இருப்பீரு. ஜனங்க, ஏமாந்தா அவங்க நல்லவங்க. ஏமாறலைன்னா, நீரு சாபம் கொடுப்பீரு. என்னையா, நியாயம் பேசறீரு ! வயிறு காஞ்சி சாபம் விட்டா அது பலிக்குமா !"

"நான் ஊரை ஏமாத்தறதா சொல்றே ? கருப்புகூட பட்டினி கிடக்கிறான். அவனைத் திருப்திப்படுத்தினா, நாலு நல்லது நடக்குமா, நடக்காதா ? நீயே சொல்லு"!

"யார் பட்டினி கிடக்கிறான்னு சொன்னே ?"

"நம்ம பெரிய கருப்புதான்..."

வெற்றிலையைத் துப்பிவிட்டுச் சிரித்தாள் வெள்ளச்சி.

"இந்த 'கப்சா'ல்லாம் என்கிட்டே வேணாம். பேய்கிட்டே நீ பேசினியாக்கும். ஆச்சு எனக்கும் நாற்பத்தி ஏழு. இதுவரைக்கும் ஒரு மூதிகூட என் கண்முன்னாலே வரல்லையே."

"தூஷணை பேசாதே... வெள்ளை, நேத்திக்குச் சாயங்காலம் கூட, கருப்பு என் கூட நடந்துவந்தான். பாவம், மெலிஞ்சு போய்க்கிடக்கான். சவரட்சணை இல்லை. அந்தக் காலத்துல, ஆடு, கோழின்னு நிறைய கிடைச்சது. இப்ப, தாழி, எல்லாப்பயலும் இங்கிலீஷ் படிச்சுட்டு சாமி பூதம் இல்லைங்கறான். அவனுக்காகவே நான் ஒரு ஏற்பாடு பண்ணி இருக்கேன்..."

"ஊரை ஏச்சுப் பிழைக்கிற பொழைப்பு எதுக்கு பண்ணீரு ? ஒழுங்கா ஏதானும் வேலையைப் பாரும்யா. வேணும்னா சொல்லு. பால்காரர் கிட்டே சொல்லி உனக்கு ஒரு வேலை போட்டுத் தரச் சொல்றேன். என்ன சொல்றீரு ?"

"அவன் கிட்டயா !"

"ஏன் ?"

அவள் பாயை உதறிப் போட்டு, போர்வையை அதன் மேல விரித்தாள்.

"இந்தா சுருட்டு ?"

வெள்ளச்சி, சுருட்டைப் பற்ற வைத்து, புகையை விட்டாள். பெண் சுருட்டுப் பிடிப்பதை அதன் அழகை ரசித்தார் முத்துப்பாண்டி.

"ஏன் அவர்கிட்டே வேலை பார்க்கக்கூடாது ?"

"அவன் பிரியாணிப் பொட்டலம் வாங்கி என்கிட்டயே உனக்குக் கொடுத்து அனுப்புவான். இது நமக்குத் தேவையா ? நம்மாலே மாமா வேலை பார்க்க முடியாது. மந்திரவாதியா, மாமாவா ? நீயே சொல்லு."

"உன் இஷ்டம்".

[illegible]

"பணம் ஏதாச்சும் இருக்கா ?"

"பேச்சி, தூது கொடுத்தான். கொடை போடணும் கோழி வாங்கணும்".

"ஏழு எட்டு ரூபாயை விட்டெறிஞ்சா கோழி கிடைக்குது நூறு ரூபாய் என்னத்துக்கு ? அம்பது கொடுத்துட்டுப் போம். விடிஞ்சா செலவு இருக்கு".

"அம்பது போதுமா ?"என்றபடி அதைக் கொடுத்தார்.

"பாவம் உமக்கும் வேணுமே வச்சிக்கிடும்..."

விநாயகா டாக்கிஸ், விளக்கு அணைந்து கிடந்தது. மணி, இரண்டுக்கும் மேலே என்று புரிந்தது. முத்துப்பாண்டிக்கு ஜனங்கள் ஒருத்தரும் நடைபாதையில் இல்லை. போதை சுத்தமாகப் போய் விட்டிருந்தது. அவருக்கு, 'வெள்ளச்சி.. வெள்ளச்சிதான்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டார். பேரன் பேத்தி எடுத்த இந்த வயசிலும், எப்படி ஒரு குதிரைத் தெம்பு ? இதுகள்ளாம் ஒருவன் வாய்ப்பு. இது மாதிரி தொழில் பண்ணி வாழறதுக்கு, அதுக்குத் தக்க உடம்பு வேண்டும்தானே, இல்லையென்றால் பால்காரன் என்னத்துக்கு அவள்மேல், அள்ளிக் கொட்டுகிறான். எல்லாம் சுழிதான். அண்டமாமுனிவர் எல்லாம் அடக்க ஸ்தலம். ஜனன வாயில். என்ன முரண் ?

ஓடை சலசலத்தது. இறங்கிக் கால் கை முகம் கழுவிக் கொண்டார். முகத்தில் இருந்த வெற்றிலை எச்சிலைத் துடைத்துக் கழுவினார். புளியஞ் சாலையை கடந்து,தெற்கு புளிய மரத்தண்டை வந்து சேர்ந்தார்.

உடம்பு நெட்டி முறித்தது. மயிர் குத்திட்டது. உடம்பு ஆவேசம் வந்ததுபோல் ஆயிற்று. சுருட்டு வாசனை கம்மென்று கமழ்ந்தது.

கருப்பு, அவர் எதிரில் நின்றான்.

"வா.... கருப்பா. உனக்கு நூறு வயசு. இப்பத்தான் உன்னையே நினைச்சேன்."

"நூறா? நான் இந்த இடத்துக்கு வந்து ஐநூறு வருஷமாய்ட்டு" என்றான் கருப்பு.

"ம்.... மனுஷனுக்குச் சொல்றதை உனக்குச் சொல்லிட்டேன்". ஒரு விஷயமில்லாமல் அவர்கள் களத்து மேட்டுப் பக்கம் நடந்தார்கள்.

"பேச்சிப் பயலை அமுக்கிட்டேன். பய, பணம் கறந்திருக்கான். நாளை ராத்திரி பலி, ஷோக்கான கோழி. எல்லாம் உனக்காகத்தான் ராசா. பாவம். நீயும் தான் எத்தனை நாள் பசியா கிடப்பே. நீயும் வேலையைக் கச்சிதமாய் பண்ணி இருக்கியே."

முத்துப்பாண்டி கருப்பன் முகத்தைப் பார்த்தார். அது சந்தோஷத்தில் இருந்ததாக அவருக்குப் பட்டது.

"எங்கேந்து வர்றீரு. கவிச்சை வாசனை வீசுதே ?"

"சரியான துர்வாசனைக்காரம்பா நீயி. வெள்ளச்சி வீட்டுல இருந்துதான்.. அதுக்கு உன்மேல நம்பிக்கையே இல்லைப்பா.."

"பயந்துக்கிறவனுக்குத்தான் நாங்க எல்லாம். அப்படித்தான் சிவனார் எங்களுக்கு வரம் கொடுத்திருக்கார். அவளே ஒரு பேய், நான் என்ன பண்ண முடியும், நீரே சொல்லும் ?"

"அது சரி, நம்பினவருக்குத்தானே நாராயணன். நாளை ராத்திரிக்கு சரியா இரண்டு மூன்று மணிக்குள்ளாற வந்துடறேன். கோழி ரத்தமும், சாராயமும், அவ்ளோதானே ?"

"அவ்ளோதான"

"சுருட்டு ?"

கருப்பன், திடுமென புகை விட்டது. எத்தனை பெரிய சுருட்டு.

"இது மாதிரி எவன் இப்போல்லாம் பண்றான் ? எல்லாம் விரல் நீளம்". கருப்பன் சிரித்தார்.

களத்துமேடு வந்தது.

"இதுக்கு மேலே நான் வர முடியாது. அது மாடசாமி தங்கி இருக்கிற இடம். இப்படியே நின்னுக்கிறேன்.

"நல்லது,நாளைக்கு வா்றேன்"

"சரி. மறக்க மாட்டீரே ?"

கொஞ்ச தூரம் போய், திரும்பிப் பார்த்தார் முத்துப்பாண்டி. தென்னை மரத்துக்கும் மேலே உயரமாக நின்றான் கருப்பன்.

பேச்சியின் மகள் மிரள மிரள விழித்தாள். 'ஹி... ஹி...' என்று குதிரை கனைப்பது மாதிரி சிரித்தாள். அப்புறம் "எங்கேடா கோழி" என்றாள். முத்துப்பாண்டியைப் பார்த்து, "வாடா என் மவனே, பேமானி" என்றாள் அவள்.

பெற்றோர்கள் மட்டுமல்ல. முத்துப்பாண்டியே கொஞ்சம் அதிரத்தான் செய்தார்.

"தாழி கருப்பன்தான். ரொம்ப 'ஸ்டாங்கா' பிடிச்சிருக்கான். தாழி... இன்னிக்கு அவனா, நானான்னு பார்க்கலைன்னா, நான் முத்துசாமி மகன் இல்லேப்பா !"

"புடுங்கக்கூட முடியாது."

அம்மாக்காரியும் பேச்சியும் திடுக்கிட்டார்கள்.

"வண்ட வண்டயா பேசுது பாருங்க, இம்மாம் பொண்ணு".

"இவளா பேசறாள் ? அந்தத் தாழில்லே பேசறான் இன்னும் அரை 'அவர்லே' பாரு..."

முத்துப்பாண்டி கோலமாவு வாங்கி, சக்கரம் வரைந்தார். பதினாறு மூலை கொண்ட சக்கரம். அதன் மேல் மந்திர எழுத்துக்கள் எழுதினார். அதன் மேல் பலகை போட்டு, பெண்ணை அமர வைத்தார்கள்.பெண், தலையை விரித்துப் போட்டுக் கொண்டு பயங்கரியாக அமர்ந்திருந்தாள்.

வேப்பிலைக் கொத்தை எடுத்துக்கொண்டு, முத்துப்பாண்டி கேட்டார்.

"கோழி ரெடியா !"

"ரெடி சாமி."

"சாராயம் ?"

"ரெடி."

"சுருட்டு ?"

"வைக்கப்பட்டிருக்கு."

"என்ன சமையல் ?"

"நீங்க சொன்ன மாதிரிதான். கோழிக் குழம்பு, மீன் குழம்பு, கருவாட்டுக் குழம்பு."

"போட்டு பிசந்திட வேணாம். தனித்தனியாவே இருக்கட்டும்". அவருக்குத் தனித்தனியாகச் சாப்பிடத்தான் பிடிக்கும்.

"நான சொன்ன மாதிரி மண் கலயங்கள் தயாரா ?"

"ஆகா."

முத்துப்பாண்டி, வாணிக்க ஆரம்பித்தார்.

"வாடா கருப்பா... வானத்தில் வாழ்வோனே...

தேடுவார்க்குத் தெம்பூட்டும் தென்னை மரககருப்பா...

கண்ணுக்குத் தெரியாமல் விசுவருபில் வாழ்வோனே..

மனசுக்குத் தெரியாமல் மண் மேல வாழ்வோனே...

கோழி ரத்தம் குடிச்சுவிட்டு குலமகளைக் காத்திடடா...

சாராயம் குடிச்சுப்போட்டு சரவிளக்கைக் காத்திடடா...

சுருட்டைக் குடிச்சுக்கிட்டு சுந்தரியைக் காத்திடடா...

இறைச்சிக்கறி தின்னு இளமகளைக் காத்திடடா...

பூசைகளை ஏற்று புத்திரியைக் காத்திடடா...

கொடையை ஏற்றி கொழுகொம்பைக் காத்திடடா... "

- ஒரு வழியாக நள்ளிரவு தாண்டி கருப்பன் போகச் சம்மதித்தான்.

"போறியா ?"

"போறேன்."

"எந்த வழியா போறே ?"

"வந்த வழியே போறேன்."

"திரும்பி வருவியா ?"

"திரும்பி வரமாட்டேன்."

"மீண்டும் வருவியா ?"

"எல்லைத் தாண்டி வரமாட்டேன்."

"சிவன் மேல சத்தியமா ?"

"சிவனார் மேலே சத்தியமா ?"

"சரி.. போ..."

"போறேன்..."

முத்துப்பாண்டி சொன்னபடியே, கலயங்களில் சோறு, கறி குழம்பு என்று வைத்துக் கொடுத்ததை எடுத்துக்கொண்டார். பையில் சாராயமும், தோளில் கால்கட்டிய கோழி பாதி உயிரை வைத்துக் கொண்டு 'கீகீ' என்று குரல் எழுப்ப, முத்துப்பாண்டி, தட்சணைப் பணம் அம்பது ரூபாயுடன் நடந்தார். மனம், உற்சாகத்தில் குதி போட்டது. கருப்பன் காத்திருப்பான்.

புளியஞ்சாலைப் பக்கமாகத் திரும்ப இருந்தவர், ஒரு கணம் யோசித்தார். சவுக்குத்தோப்பு வழியாகத் திரும்பி நடந்தார். இன்றைக்கும் பால்காரன் வந்திருக்கக் கூடாது என்று கடவுளை வணங்கிக்கொண்டார். அவர் எதிர்பார்த்தபடி தான் நடந்தது. வெள்ளச்சி கதவைத் திறந்தாள்.

முத்துப்பாண்டிக்கு கருப்பன் நினைவு வரவே இல்லை. விடியும் வரை கருப்பன் மனிதனுக்காகக் காத்திருந்தது. ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906




ஏப்ரல் 16-30, 1998 ரூ.3



பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம்
தோற்றம் : 21.8.1907 மறைவு : 18.1.1963



புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்
தோற்றம் : 29.4.1891 மறைவு : 21.4.1964

## இந்த இதழில்...


★ ஜீவா மணிமண்டபம் திறப்புவிழா
- முதலமைச்சர் கலைஞர் உரை ... 2

★ பொதுவுடைமை வீரர் ஜீவானந்தம் ... 6

★ வீரன் சுந்தரலிங்கம் நினைவுக்கிராமம்
திறப்புவிழாவில் கலைஞர் சொற்பொழிவு ... 8

★ கல்வித்துறைச் சலுகைகள்: சட்டப்பேரவையில்
அமைச்சர் பேராசிரியர் அறிவிப்பு ... 12

★ பாவேந்தர் நோக்கில் பாரதி ... 17

வேளாண்மைத்துறை: சட்டப்பேரவையில்
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அறிவிப்புகள் ... 20

★ உயிர் காப்போம் (கவிதை) - ரஜியா பேகம் ... 26

★ மணமகள் தேவை (சிறுகதை)
- கி.ராஜநாராயணன் ... 30

★ மத்திய அரசுக்கு இணையாகத் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் ... 35

★ வருவாய்த்துறை : சட்டமன்றத்தில்
அமைச்சர் நாஞ்சிலார் அறிவிப்பு ... 41

★ மக்கள் நல்வாழ்வுத்துறை: சட்டமன்றத்தில்
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அறிவிப்பு ... 43



தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு : 2029
சித்திரை
ஏப்ரல் 16 - 30, 1998
மலர்:8 இதழ்:20
விலை ரூ.3


### திருக்குறள்

வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று.

- உலகத்தை வாழவைப்பது மழையாக அமைந்திருப்பதால், அதுவே அமிழ்தம் எனப்படுகிறது. (கலைஞர் உரையிலிருந்து).





# "ஜீவாவின் எளிமையான வாழ்க்கை, பொது வாழ்வில் ஈடுபட்டிருப்போருக்கு ஒரு பாடமாக அமைந்திடவேண்டும்!"

ஜீவா மணிமண்டபம் திறப்பு விழாவில் கலைஞர் அறிவுரை

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஜீவா மணிமண்டபத்தைத் திறந்து வைத்து மண்டபத்தினுள்ளே அமைக்கப் பட்டுள்ள ஜீவானந்தம் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மணிமண்டபம் அமைத்த, கலைஞர் அவர்களுக்கு ஜீவானந்தம் அவர்களின் குடும்பத்தினர் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

பின்னர், நாகர்கோயில் எஸ்.எல்.பி. அரசு மேனிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் - அரசின் பல்வேறு கட்டடங்களைத் திறந்து வைத்து, புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப பேருரையாற்றினார்.

விழாவிற்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. வடமுல்லைவேந்தன் அவர்கள் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சியர் திரு. விஸ்வநாத் ஷெகாவ்கர் வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு அமைச்சர் திரு. சுரேஷ்ராஜன், என்.டென்னிஸ் எம்.பி., டாக்டர் எம். மோசஸ், டாக்டர் வே.ஆல்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாண்புமிகு அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன், தா. கிருட்டினன், ஆலடி அருணா, சமயநல்லூர் செல்வராஜ், ரகுமான்கான், ஜெனிபர் சந்திரன் மற்றும் நகர்மன்றத் தலைவர் ஜமீலா ஜேம்ஸ், மனோ தங்கராஜ், சி.வேலாயுதன் எம்.எல்.ஏ., டி.மணி எம்.எல்.ஏ., குமாரதாஸ் எம்.எல்.ஏ., பென்னாட்டு எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இவ்விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு :

"இன்றைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ள அண்ணன் ஜீவானந்தம் அவர்கள் பெயரால் அமைந்துள்ள மணிமண்டபம் - எப்படியும் அமைந்திட வேண்டுமென்ற கோரிக்கையைப் பலமுறை சட்டமன்றத்திலும், என்னிடத்திலே தனிப்பட்ட முறையிலும் வலியுறுத்தியவர் இந்த மாவட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மணி ஆவார். அவருடைய பெரும் முயற்சியின் காரணமாகவும் அண்ணன் ஜீவானந்தம் மீது எனக்குள்ள அன்பின் காரணமாகவும் அவருடைய வாழ்க்கை இன்றைய இளைஞர்களுக்கும், எதிர்கால இளைஞர்களுக்கும் ஒரு பாடமாக அமைவதற்கு இது ஒரு நல்ல சின்னமாக அமைந்திடும் என்ற எண்ணத்தின் காரணமாகவும் அமைக்கப்பட்டு இன்றைக்குத் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நினைவு மண்டபத்திற்குப் பதினைந்து இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவு ஆகியிருக்கின்றது. அதே நேரத்தில் இந்த மாவட்டத்தில் ஏறத்தாழ 38 இலட்சம் ரூபாய் செலவில் கண் மருத்துவமனைக் கட்டடம் ஒன்றும் இன்றைக்குத் திறக்கப்படுகிறது. 10 இலட்சம் ரூபாய் செலவில் நகராட்சிப் படிப்பகம் திறந்து வைககப்படுகிறது. நாகர்கோவில் நகரில் குடிநீர் வினியோகத்திற்காக 49 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ள ஏழு ஊர்திகள் இயக்கி வைக்கப்படுகின்றன. ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டம் 91 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்படுகிறது. எனவே, இந்த வகையில் ஏறத்தாழ 2 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, தொடங்கி வைக்கப்படுகின்றன.

அஃதன்னியில் தொடங்கப்பட வேண்டிய திட்டங்களுக்காக அடிக்கல் நாட்டுகின்ற நிகழ்ச்சியில் மாவட்ட நெஞ்சக நோய்க் கட்டடம் 30 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டுவிழா இன்றைக்கு நடைபெற்றிருக்கிறது. 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட வேண்டிய மாவட்ட சித்த மருத்துவப் பிரிவு கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கீழ்மணக்குடி, மேலமணக்குடி இணைப்புப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப் படவுள்ள பிற்படுத்தப்பட்ட கல்லூரி மாணவர் நலவிடுதி கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ஏறத்தாழ 5 கோடி ரூபாய் மதிப்பில் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மூவலூர் இராமமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்திற்கு 360 பெண்களுக்கு 36 இலட்ச ரூபாய் நிதிஉதவி வழங்கப்படுகிறது. இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் 300 பயனாளிகளுக்கு 40 இலட்ச ரூபாய் செலவில் வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 37 பயனாளிகளுக்குச் சற்றொப்ப 4 இலட்ச ரூபாய் கடன் வழங்கப்படுகிறது. இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 25 பயனாளிகளுக்கு ஆறேமுக்கால் இலட்ச ரூபாயில் 25 தொகுப்பு வீடுகள் இன்று வழங்கப்படுகின்றன.

சிங்காரவேலர் நினைவு வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 77 இலட்சம் ரூபாயில் 240 வீடுகள் மீனவர்களுக்கு இன்று இலவசமாக வழங்கப்படுகின்றது. அதிக விளைச்சல் காட்டிய இரண்டு விவசாயிகளுக்கு ஊக்கப்பரிசுத் தொகையாக முதல் பரிசு எட்டாயிரம் ரூபாய், இரண்டாம் பரிசு நான்காயிரம் ரூபாய் மொத்தம் பனிரெண்டாயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் மூன்று சக்கர வண்டிகள் ஐந்து பயனாளிகளுக்குப் பதினைந்தாயிரம் ரூபாயில் வழங்கப்படுகிறது.

இப்படிப் பல்வேறு நலத்திட்டங்கள் ஏறத்தாழ ஒன்பது கோடி ரூபாய் மதிப்பில் இந்த மாவட்ட மக்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் வழங்கப்படுகின்றன. இவ்வளவு திட்டங்கள் இன்றைக்கு அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டாலும் கூட, இங்கே பேசிய பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் தங்கள் நாடாளுமன்ற மக்களவை அல்லது மாநிலங் களவையின் பிரதிநிதிகளாக இருந்தாலும், அல்லது சட்டப் பேரவையின்





பிரதிநிதிகளாக இருந்தாலும், அல்லது உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளாக இருந்தாலும் பல கோரிக்கைகளை இங்கே முன்வைத்திருக்கிறார்கள்.

சட்டமன்றம் நடைபெறும் பொழுது எந்தவொரு அறிவிப்பையும் வெளியில் செய்யக்கூடாது என்பது மரபு. இந்த மரபு தெரியாதவர்களா நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் என்று கேட்டால் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும்கூட உங்களுக்கு நேராகச் சில கோரிக்கைகளை வைத்து, பார்த்தீர்களா நான் சட்டமன்றத்திலே வாதாடவில்லை என்று சொன்னீர்களே, நான் வாதாடி அது பத்திரிகைகளில் வராமல் இருந்திருக்கலாம். வாதாடுவேன் என்பதை நிரூபிப்பதற்காகத்தான் இங்கு ஒருமுறை உங்கள் முன்னால் இந்தக் கோரிக்கைகளை வைக்கிறேன் என்ற வகையிலே பல கருத்துக்களை, பல கோரிக்கைகளை இங்கே எடுத்துவைத்திருக்கின்றார்கள்.

## கோரிக்கைகள் உரிய காலத்தில் நிறைவேற்றப்படும்

நான் அந்தக் கோரிக்கைகளை நிராகரிப்பவன் அல்ல. அவைகள் நிறைவேற்றப்படும் என்று மாத்திரம்தான் சொல்ல முடியுமே தவிர, என்றைக்கு நிறைவேற்றப்படும் என்றெல்லாம் அறிவித்தால் இவர்களே நாளைக்கு யாரையாவது சட்டமன்றத்தில் தூண்டிவிட்டு "சட்டசபை நடைபெறும்போது முதலமைச்சர் எப்படி வெளியே இவைகளை எல்லாம் அறிவித்தார் என்று கேளுங்கள்" என்று கேட்கச் செய்தாலும் செய்வார்கள். அந்த பயத்திலேதான் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேறுமா நிறைவேறாதா என்று திட்டவட்டமாக நான் இங்கே அறிவிக்கவில்லை. அறிவிக்கவில்லை என்றாலும்கூட, அவைகள் எல்லாம் நிச்சயமாக விரைவில், அதே நேரம் உரிய காலத்தில் நிறைவேற்றப்படும் என்பதைக் கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவக் கல்லூரியைப்பற்றி அனைவருமே பேசியிருக்கின்றார்கள். "இந்த ஆண்டே அறிவித்து விடுங்கள்" என்று வேலாயுதம் அவசரப்படுவதிலே அர்த்தம் இருக்கிறது. ஏனென்றால் அடுத்த ஆண்டு இவர்கள் ஆட்சியிலே இருப்பார்களோ, இல்லையோ என அதைக் கணிக்கக்கூடிய கட்சியிலே இருப்பவர் அவர். எனவே அவர், "இந்த ஆண்டே அறிவித்து விடுங்கள் அடுத்த ஆண்டு அறிவிக்க இயலாது" என்று சொல்வாரேயானால், ஒருவேளை அப்படி ஏதாவது ஏற்பட்டாலும் அடுத்த ஆண்டு வந்து நான்தான் அறிவிப்பேன் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மருத்துவக்கல்லூரிகள் இந்த ஆண்டு தூத்துக்குடி, வேலூர் ஆகிய இரண்டு இடங்களுக்கு அறிவிக்கப்பட்டபோதே சட்டமன்றத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி "மேலும் இரண்டு கல்லூரிகள்" என்று சொன்னதில் - அதில் நாகர்கோயிலையும் இணைத்துத்தான் சொல்லியிருக்கிறார்.

நாகர்கோயில் என்று சொல்லும் பொழுது "அது இந்த ஆண்டு வசதி இல்லாத காரணத்தால் அடுத்த ஆண்டு அறிவிக்கப்படும்" என்று குறிப்பிட்டிருக்கின்றார். அதற்குள் ஒருவேளை வசதி வந்து விடுமேயானால், இந்த ஆண்டிலே கூட, அதை அறிவிக்காமலேகூட தொடங்க முடியும் என்ற அந்த வாய்ப்பு இருப்பதை நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

## காமராசரிடம் உள்ள பற்று - மரியாதை

இன்னொன்று - ஒரு பொதுவான பிரச்சினை - தண்ணீர் பிரச்சினை. அணைக்கட்டுப் பிரச்சினை. இந்தப் பிரச்சினைகளை எல்லாம் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலங்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். நம்முடைய நண்பர் குமாரதாசும், நாடாளுமன்ற உறுப்பினர் டென்னிசும், மோசசும் மற்றும் உரையாற்றிய நமது நண்பர்கள் அனைவருமே பெருந்தலைவர் காமராசருடைய நினைவு மண்டபம் அவருடைய அஸ்தி கரைக்கப்பட்ட இடத்தில் கன்னியாகுமரியிலே கடற்கரைப் பகுதியிலே அமைவதுதான் சிறப்பு என்று எடுத்துரைத்திருக்கின்றார்கள்.

கடற்கரைப் பகுதியிலே அமைய வேண்டும் என்பதிலே எனக்கு இருவிதமான கருத்து இல்லை. ஒருமுறை அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் என்னிடத்திலும் சொன்னார். பொதுவாகவும் அறிவித்தார். "கடற்கரை ஓரத்தில், கடற்கரையை ஒட்டினாற்போல் அதிகமான கட்டடங்கள் இருத்தலாகாது" என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்குப் பிறகு உச்சநீதிமன்றத்திலேகூட, ஒரு கருத்து வெளிப்படுத்தப்பட்டு, "கடற்கரை ஓரத்திலே கட்டடங்கள் இருத்தலாகாது" என்பது ஒரு நியதியாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இருந்தாலும் பெருந்தலைவர் காமராஜரிடத்தில் பல்வேறு கொள்கை வேறுபாடு களுக்கிடையே நாம் வைத்துள்ள மரியாதை, பற்று இவைகளையெல்லாம் நீங்கள் அறியாதவர்கள் அல்ல.

உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். மறைந்தவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் நாட்டுக்காக, மொழிக்காக, இனத்துக்காக, சமுதாயத்துக்காக பாடுபட்டவர்கள் என்றால், பொதுநலவாதிகள் என்றால் அவர்களை நான் சார்ந்திருக்கின்ற கட்சி ஆனாலும் அல்லது என்னுடைய ஆட்சி ஆனாலும் என்றைக்கும் மறந்ததே கிடையாது.

1969ஆம் ஆண்டு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது முதல் தடவையாகத் தில்லையாடி வள்ளியம்மாளுக்கு - தென்னாப்பிரிக்காவிலே மகாத்மா காந்தியோடு சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட தில்லையாடி வள்ளியம்மாளுக்கு தஞ்சை மாவட்டம் - தில்லையாடியில், "தில்லையாடி வள்ளியம்மாள் நகர்" என்ற ஒரு நகரத்தை நிர்மாணித்தவன் நான்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அங்கே நாகப்பன், நாராயணசாமி என்ற இரண்டு ஆதித்திராவிட இளைஞர்களுடைய பெயரால் வீடுகளைக் கட்டித் தந்தவனும் நான்தான் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## சிதம்பரனார் இழுத்த செக்கு

நீங்கள் அறிவீர்கள், சிதம்பரனார் இந்த நாட்டினுடைய விடுதலைக்காக செக்கு இழுத்தார். சிறைப்பட்டார். சித்ரவதைகளை ஏற்றுக்கொண்டார் என்பதை எல்லாம் நீங்கள் படித்திருக்கிறீர்கள். அறிவீர்கள். ஆனால் நான் கேட்கிறேன். நண்பர் குமாரசாமி உள்பட

எல்லா தேசியவாதிகளையும் கேட்கிறேன். அவர் இழுத்த செக்கு எங்கே இருக்கிறது என்றாவது இருபது ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சியிலே தேடிப் பார்த்தீர்களா? இல்லை. இருபது ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் வெள்ளைக்காரர்கள் காலத்தில் சிதம்பரனார் இழுத்த செக்கு எங்கே இருக்கிறது என்று யாரும் தேடிப்பார்க்கவில்லை. அதைத் தேடிப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது இந்தக் கருணாநிதிக்குத்தான் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

நான்தான் அதைத்தேடி அலைந்து கோவைச் சிறைச்சாலையிலே அந்த செக்கு இருக்கிறது என்பதை அறிந்து உடனடியாக அதைக் கொண்டுவரச் சொல்லி, ராஜாஜி மண்டபத்திற்குப் பக்கத்திலே தனியாக அதற்கு ஒரு மண்டபம் எளிமையான முறையிலே கட்டச் செய்து அங்கே அந்த செக்கினை வைத்து - "சிதம்பரனார் இழுத்த செக்கு" என்று எழுதி அதை ஒரு கண்காட்சியாக ஆக்கிய அந்தச்செயல் தி.மு.கழக ஆட்சியிலே என்னால்தான் நிறைவேற்றப்பட்டது.

பெருந்தலைவர் காமராசருடைய நினைவு மண்டபம் சென்னையிலே - கிண்டியிலே இருக்கிறது - ராஜபவனுக்குப் பக்கத்திலே, ஏன் அங்கே வைக்கப்பட்டது என்றால், அங்கேதான் அவருடைய உடல் எரியூட்டப்பட்டது. அந்த இடத்திலே ஏன் எரியூட்டப்பட்டது என்றால், கிண்டியிலே அந்த ராஜபவனுக்குப் பக்கத்திலேதான் காந்திமண்டபம் இருக்கிறது. காந்திமண்டபத்திற்குப் பக்கத்திலே காமராசர் மண்டபம் இருப்பதுதான் சிறப்பு என்பதற்காகக் காமராசருடைய உடலை அங்கே தகனம் செய்து அந்த மண்டபத்தை அங்கே கட்டினோம். அந்த மண்டபத்தைக் கட்டி முடிக்கும்போது, மண்டப முகப்பிலே என்ன சின்னம் வைக்கலாம் என்ற பிரச்சினை எழுந்தபோது, "கைராட்டைச் சின்னம் வைக்கவேண்டும்" என்ற அந்தக் கருத்தை வழங்கியவனும் நான்தான். கைராட்டைச் சின்னத்தை வைத்துவிட்டு இரவு 12 மணிக்கு வீட்டுக்குத் திரும்பியவனும் நான்தான். மறுநாள் ஆட்சி கலைக்கப்பட்டது. அந்தச் செய்தியை அறிந்தவனும் நான்தான்.

*சீர்திருத்தங்கள் மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கவும், அறிவை விசாலப்படுத்தவும், உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், சமத்துவத்தையும், சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப்படுத்தவுமே அமைய வேண்டும்.*

**- தந்தை பெரியார்**

அந்தக் கைராட்டைச் சின்னத்தை என்னுடைய ஆட்சி கலைக்கப்பட்ட மறுநாளே கலைத்துவிட்டார்கள். ஏன் எடுத்துவிட்டார்கள் என்றால், அது காமராஜ் காங்கிரஸ் கட்சியினுடைய தேர்தல் சின்னமாக இருந்த காரணத்தால் கைராட்டைச் சின்னம் கூடாது என்று எடுத்துவிட்டார்கள். பிறகு ஜனதா ஆட்சி வந்தபிறகு அதற்காகக் குரல் கொடுத்து மீண்டும் அந்தக் கைராட்டைச் சின்னம் அங்கே வைக்கப்பட்டது.

காமராசருக்கும் எங்களுக்கும் எத்தனையோ கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் நாங்கள் ஏற்றுக்கொண்ட தியாகச் சுடர், தியாகச் செம்மல், பெருந்தலைவர் காமராசர், அவரை நாங்கள் பெருமைப் படுத்தினோம்; அவரைப் பெருமைப்படுத்துவது, நாம் நம்மைப் பெருமைப்படுத்திக் கொள்வது போலாகும் என்ற காரணத்திற்காக.

### ராஜாஜி நினைவு மண்டபத்தின் வரைபடம்

அதைப்போலவே மூதறிஞர் ராஜாஜி மறைந்தபோது, அவருக்காக ஒரு நினைவுச் சின்னம் எழுப்பவேண்டும் என்ற கோரிக்கை வந்தது. சில பேர் சொன்னார்கள்; "ஏற்கெனவே ராஜாஜி மண்டபம் பெரிய அளவில் இருக்கிறது" என்று. இருந்தாலும் அவருடைய மறைவுக்குப் பின்னர் ஒரு நினைவுச் சின்னம் வேண்டும் என்று அதையும் கிண்டியிலே காந்தி மண்டபத்திற்கு இன்னொரு பக்கத்திலே - ஒரு பக்கத்திலே காமராசர் மண்டபம், இன்னொரு பக்கத்திலே ராஜாஜி மண்டபத்தை எழுப்பியவனும் நான்தான். "அதற்கு என்ன சின்னம் வைக்கலாம்" என்று கேட்டபோது நான் சொன்னேன்; எனக்கும் ராமாயணத்துக்கும் எவ்வளவு தூரம் என்று உங்களுக்குத் தெரியும். இருந்தாலும்கூட, "ராஜாஜி இராமாயணத்திலே மிகுந்த பற்றுடையவர். 'சக்கரவர்த்தி திருமகன்' என்ற ஒரு தொடரோவியமே எழுதியவர். எனவே அந்த மண்டபத்தினுடைய முகப்பு ராமருடைய கிரீடம் போல் இருக்க வேண்டும்" - என்று அதற்கு வரைபடம் வரைந்து கொடுத்தவனே நான்தான் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படி தேசத்தியாகிகள் யாராக இருந்தாலும், அண்மையிலேகூட பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நினைவுமண்டபத்தை எழுப்பித் திறந்துவைத்தேன். இன்றைக்கு எப்படி ஜீவா அவர்களின் குடும்பத்தினர் கலந்துகொண்டிருக்கிறார்களோ, அதைப்போல பக்தவத்சலம் அவர்களுடைய குடும்பத்தாரும் அந்த விழாவிலே கலந்துகொண்டு நன்றிப் பெருக்குடன் நினைவுகூர்ந்தார்கள்; உரையாற்றினார்கள்.

பக்தவத்சலம் அவர்களுக்கும் எனக்கும் எந்த அளவிற்கு உறவு என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் அவர் ஆற்றிய தொண்டு, அவர் செய்த தியாகம், அவர் நாட்டு விடுதலைக்காகச் சிறைப்பட்ட அந்த நாட்கள் இவைகள் எல்லாம் மதிக்கத் தகுந்தவை, மரியாதைக்கு உகந்தவை என்பதால்தான் பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்பப்பட்டிருக்கின்றது.

### ஜீவானந்தத்தின் வாழ்க்கை

அண்ணன் ஜீவானந்தம் அவர்களை நான் இளமைக் காலம் தொட்டு அறிவேன். அவர்கள் தந்தை பெரியார் அவர்களுடைய வழியில் சுயமரியாதைக்காரராக விளங்கியவர். அவர் அரசியலிலே காங்கிரஸ் இயக்கத்திலே இருந்து, பின்னர் பொதுவுடைமை இயக்கத்திலே இருந்து பணியாற்றினார் என்றாலும்கூட, இறுதிக் காலம் வரையிலே சுயமரியாதைக் காரராக வாழ்ந்தவர்தான் அண்ணன் பஜீவானந்தம் அவர்கள். அவரோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பை நான் பெற்றவன். அறிஞர் அண்ணா அவர்கள் ஜீவானந்தம் அவர்களிடத்திலே பெருமதிப்புக் கொண்டவர்கள். இன்னும் சொல்ல வேண்டுமேயானால், அவருடைய எளிமையான வாழ்க்கை பொதுவாழ்வில் ஈடுபட்டிருக்கின்ற அரசியல்வாதிகள் அத்தனைப் பேருக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும்.

அவர் இறுதியாக மறைந்தபோது மருத்துவமனையில், பக்கத்திலே கூட யாரும் இல்லாத சூழ்நிலையில் இரவு அவர் மறைந்துவிட்டார். விடியற்காலையில் எனக்குச் செய்தி வந்தது. "ஜீவா மறைந்துவிட்டார். சென்னை மருத்துவமனையில் அவருடைய உடல் இருக்கிறது" என்ற செய்தி வந்தது. உடனே நான் அண்ணாவினுடைய வீட்டிற்குக் காரிலே சென்று, அண்ணாவை அழைத்துக் கொண்டு நானும், அண்ணாவும், என்.வி.நடராசனும் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று மருத்துவமனையிலே அந்த எளிய மனிதர், அந்த இரும்பு மனிதர், எழுச்சியுகம் காண்பதற்குப் 'புரட்சிக்' கீதங்களைப் பாடிய அந்தப் பெருமகன் ஜீவானந்தம் அவர்களுடைய உடல் மார்ச்சுவரியிலே (பிணக்கிடங்கு) வைக்கப்பட்டிருந்தது. மார்ச்சுவரியிலே வைக்கப்பட்டிருந்த உடலை வெளியே கொண்டுவந்ததைப் பார்த்து மாலை அணிவித்துவிட்டு அவருடைய உடலை அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளை எல்லாம் கவனித்துவிட்டு, கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்களுக்கெல்லாம் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தை அன்றைக்குத் தெரிவித்துக் கொண்டோம் என்றால், எந்த அளவிற்குப் பல்வேறு கருத்து வேறுபாடு களுக்கிடையிலும் அண்ணன் ஜீவானந்தம் அவர்களிடம் மதிப்புக் கொண்டிருந்தோம்; அன்பு வைத்திருந்தோம் என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

### மாற்றாரை மதிக்கும் மாண்பு

காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும், கம்யூனிஸ்ட்டாக இருந்தாலும், வேறு எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை மதிக்கக்கூடிய அந்த மாண்பினை, பண்பினைப் பெற்றுள்ளது இந்த இயக்கம். அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த இயக்கம்.

இன்னும் சொல்ல வேண்டுமானால், பச்சையாகச் சொல்லவேண்டு மானால் மற்றவர்களை மதிக்கக்கூடிய இயக்கம். ஆனால் பொதுவாக நமது சமுதாயத்தில் இந்தப் பண்பாடு ஒருவழிப் பாதையாக இருக்கக்கூடாது. இதை நான் எல்லாக் கட்சியிலேயும் உள்ள தலைவர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கும் காமராசருடைய பிறந்தநாளில், நினைவு நாளில் நாங்கள் சென்று மலர்வளையம் வைக்கின்றோம். மாலை அணிவிக்கின்றோம். இன்றைக்கும் மூதறிஞர் ராஜாஜியினுடைய நினைவு நாளில் நாங்கள் சென்று மலர் வளையம் வைக்கின்றோம். அவருடைய சிலைக்கு மாலை அணிவிக்கின்றோம். அம்பேத்காருக்கு அனைவரும் சென்று மாலை அணிவிக்கின்றோம். ஆனால் சில கட்சிக்காரர்கள் பெரியார் பிறந்தநாளில், பெரியார் மறைந்த நாளில் அவருடைய நினைவிடத்திற்குச் சென்று அல்லது அவருடைய சிலைக்கு மாலை அணிவிக்கின்ற அந்த மனஇயல்பைப் பெற்றிருக்கின்றார்களா என்றால் இல்லை. அதைப் போல அண்ணா பிறந்தநாளில், அண்ணா மறைந்த நாளில் அவரை நினைவுகூர்கின்ற, அல்லது அவருக்கு அஞ்சலி செலுத்துகின்ற, அல்லது அவருடைய சிலைக்கு மலர் மாலை அணிவிக்கின்ற அந்த ஒரு வழிமுறையைப் பின்பற்றுகிறார்களா என்றால் இல்லை.

### பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டும்

எனவேதான் சொல்லுகின்றேன் - சமுதாயத்திலே ஒருவர் மறைந்துவிடுவாரேயானால் கட்சிகளை மறந்துவிட்டு அவர் எல்லோருடைய மனதிலும் நிறைந்தவர் என்கின்ற உள்ளத்தோடு நம்முடைய பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டும். அது ஒருவழிப்பாதையாக இருந்துவிடக்கூடாது என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜீவானந்தம் அவர்களுடைய மணிமண்டபத்தைத் திறந்துவைக்கின்ற இந்த நேரத்தில் அவருடைய வாழ்க்கை இளைஞர்களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ள வாழ்க்கை. இளம் பிராயத்தில் அவர் பூதப் பாண்டியிலே உள்ள கிராமத்திலே சிறுவனாக, மாணவனாக இருந்தபோது, அந்த பூதப்பாண்டி கோயிலிலே சுண்டல் வழங்குவது வாடிக்கையாம். அப்படி வழங்குகின்ற சுண்டலைக்கூட அவர் தான்ஒருவரே தின்று மகிழாமல் பலரையும் அழைத்துவந்து பல மாணவர்களையும், சிறுவர்களையும், ஏழைச் சிறுமிகளையும் அழைத்துவந்து அந்தச் சுண்டலை அவர்களுக்கெல்லாம் பகிர்ந்து கொடுத்துத்தான் தின்பார் என்பது அவருடைய இளம்பிராய வாழ்க்கையிலேயே கோடிட்டுக் காட்டப்படுகின்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும்.

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"**

- என்றார் வள்ளுவர். அந்த வள்ளுவருக்குத்தான் குமரிமுனையிலே சிலை எடுத்துக்கொண்டிருக்கின்றோம். அந்த வள்ளுவரின் வழிநின்று தனக்குக் கிடைத்ததைப் பகிர்ந்து உண்ணுகின்ற அந்தப் பழக்கத்தை இளம் பிராயத்திலேயே அண்ணன் ஜீவா அவர்கள் பெற்ற காரணத்தால்தான் எல்லோருக்கும் சமத்துவம், சமதர்மம் வேண்டும் என்ற கொள்கை உடைய பொதுவுடைமை இயக்கத்தில் அவர் தன்னை இணைத்துக்கொள்ள முடிந்தது.

### பெரியாருடன் ஜீவானந்தம்

தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என்று இளம்பிராயத்திலேயே அவர் கொண்ட கொள்கையின் காரணமாகத்தான் வைக்கத்தில் தந்தை பெரியார் அவர்கள் தீண்டாமையை ஒழிப்பதற்காக நடத்திய போராட்டத்தில் அண்ணன் ஜீவானந்தமும் அன்றைக்கே கலந்துகொள்ள வேண்டிய நிலைமை இருந்தது.

இவைகள் எல்லாம் நம்முடைய சமுதாயத்திலே எதிர்கால மன்னர் களாக விளங்க வேண்டிய இளைஞர்கள் படித்துப் பின்பற்ற வேண்டிய கொள்கைகளாகும். இந்தக் கொள்கைகளை எல்லாம் இந்த மாவட்டத்திலே உள்ள மக்களுக்குப் புதிதாக நான் சொல்ல வேண்டியதில்லை; ஏனென்றால், கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் ஒரு சில மாவட்டங்களைப் போல அறிவில் சிறந்த மாவட்டம். எதையும் தெளிந்து தீர்க்கமாக முடிவெடுக்கக்கூடிய மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். அதனால்தான் இந்தத் தேர்தலிலே கூட ஒரு தீர்க்கமான முடிவைக் கன்னியாகுமரி மாவட்டம் எடுத்தது என்பதை எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். "அப்படிப்பட்ட மாவட்டத்திற்கு ஏதாவது செய் ஏதாவது செய்" என்று என்னை அடிக்கடி கேட்கிறீர்களே! நான் சொல்கிறேன்; காமராசர் மண்டபம் கட்டப்படும் என்று சொல்லிக் சொல்கிறேன். உங்கள் விருப்பப் படியே அவருடைய அஸ்தி கரைக்கப்பட்ட இடத்தில் கடற்கரையில் அந்த மண்டபம் கட்டப்படும் என்ற உறுதியை இங்கே அளிக்கின்றேன்.

"இது சட்ட சபையிலே அறிவிக்க வேண்டிய உறுதி அல்லவா?" என்று கேட்கத் தேவையில்லை. சட்டசபை நிகழ்ச்சிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. எனவே அந்த உறுதியை அளிக்கின்றேன்.

### திருவள்ளுவர் சிலை

திருவள்ளுவர் சிலை அங்கே அமைகிறது. 1975-ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக அன்றைக்கு இருந்தபோது அமைச்சரவைக் கூட்டத்திலே எடுத்த முடிவுதான் இங்கே திருவள்ளுவர் சிலை அமைக்க வேண்டும் என்பதாகும். அதற்குப் பிறகு அதன் பணி தொடங்குகின்ற விழா, நான் 1989-ஆம் ஆண்டு முதலமைச்சராக வந்த பிறகு, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை ஓரத்தில் நடைபெற்றது.

ஏறத்தாழ 20 அல்லது 25 ஆண்டு காலப் பணி அது. அதனால்தான் ஒரு கோடி ரூபாய், இரண்டு கோடி ரூபாய் செலவிலே முடிவடையக் கூடிய அந்தச் சிலை இன்றைக்கு 8 கோடியைத் தாண்டிச் செலவாகும் போல் தெரிகிறது. 8 கோடி ஆனாலும் எத்தனைக் கோடி ஆனாலும் அங்கே அமைக்கப்படுகின்ற சிலை, உலகத்து மக்களெல்லாம், சுற்றுலாப் பயணிகள் எல்லாம் வந்து காண்கின்ற ஒரு அற்புதமான சிலையாக அங்கே அமையும் என்ற அந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அந்த மகிழ்ச்சி எனக்கு இருக்கின்றது. அந்தச் சிலையினுடைய திறப்பு விழாவும் இந்த ஆண்டு இறுதியிலே அல்லது அடுத்த ஆண்டு தொடக்கத்திலே நிச்சயமாக நடைபெறும் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எடுத்துவைத்துள்ள இந்த மாவட்டத்தைச் சார்ந்த பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான பரிசீலனையில் இந்த அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, கோரிக்கைகள் வைத்த நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

* * *

*மனம் போன போக்கிலே மற்றவர்கள் பேசவும் எழுதவும், அதனைக் கண்டும் மனம் பதறாமல் பணியாற்றி வருவதே தூய தொண்டுக்கு அடையாளம்.*

**- அறிஞர் அண்ணா**

# பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம்

'ஜீவா ஜீவா' என்று தமிழக மக்களால் அன்புடன் அழைக்கப்படும் பொதுவுடைமை வீரர் திரு. ப.ஜீவானந்தம் அவர்களுக்கு, நாகர்கோவிலில் எழில்மிகு நினைவு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 18.4.98 அன்று அதைத் திறந்து வைத்திருக்கிறார்.

இதையொட்டி ஜீவா அவர்களின் வாழ்க்கையில் நடந்த சில முக்கியச் சம்பவங்களை இங்கே நினைவுகூர்வோம்.

அப்பழுக்கற்ற எளிய அரசியல் வாழ்க்கை அவருடையது; இன்றைய தலைமுறையினரும் தெரிந்துகொள்வதற்காக, அவற்றில் ஒருசிலவற்றை மட்டும் வாசகர்களுக்கு நினைவூட்டுகிறோம்.



கம்யூனிஸ்டு கட்சி பிளவுபடாமல் ஒரே கட்சியாக இருந்த காலத்திலேயே அதில் இருந்த முக்கியத் தலைவர்களில் ஒருவராக விளங்கினார் ஜீவா. உழைப்பைத் தோளிலும், உறுதியை மார்பிலும், துயரத்தை தன் மனதிலும் சுமந்து ஏழை, எளிய மக்களுக்காகத் தன்னலம் கருதாது பாடுபட்டார்.

குமரி மாவட்டத்தில் உள்ள நாகர்கோவிலுக்கு அருகே இருக்கும் பூதப்பாண்டி என்கிற இடத்தில் 1906-ஆம் ஆண்டு ஒரு ஏழை விவசாயக் குடும்பத்தில் பட்டன் பிள்ளைக்கும், உமையம்மாளுக்கும் மகனாகப் பிறந்தவர் பொதுவுடைமை வீரராம் ப.ஜீவானந்தம் அவர்கள்.

பள்ளிப் பருவத்திலேயே 'திருப்பணிச் சங்கம்' அமைத்து இந்த நாட்டின் ஏழை-எளிய மக்களின் அவல நிலைகளை எடுத்துக் கூறி, அவற்றைக் களைந்திட அரும் பாடுபட்டார். 11 வயதிலேயே தனது தாயாரை இழந்தார். ஈமச்சடங்கிற்கு வந்த உறவினர்கள் எல்லாம் ஜீவாவிற்குக் கைத்தறி ஆடை அணிவிக்க வந்தனர்.



11 வயது சிறுவனாயிருந்த அவரோ, கைத்தறி ஆடையை ஏற்றுக் கொள்ளவில்லை; "கதர் ஆடை எடுத்து வந்தாலே அணிவேன்" என்று கூறிவிட்டார். அவரது உறுதியைக் கண்டு வியந்துபோன உறவினர்கள்,கதர் ஆடை எடுத்துக்கொடுத்தே ஈமக்கிரியைகளை முடித்தார்கள்.

அவர் 6ஆம் வகுப்பு படிக்கும்போதுதான் விடுதலைச் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கதான ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்தது. அதை எண்ணி உள்ளம் குமுறினார். உடனடியாகப் பள்ளிப் படிப்பைத்துறந்த ஜீவா, அரசியலில் தீவிரமாகக் குதித்தார்.

பின்னர் தான், நேரடியாக மகாத்மா காந்தியின் கொள்கையில் ஈடுபாடு கொண்டார் அவர்; காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து பணியாற்றினார். கதர் ஆடையைத் தெருத்தெருவாகச் சுமந்து சென்று விற்றார். காரைக்குடிக்கு அருகே சிறாவயல் என்ற இடத்தில் காந்தி ஆசிரமத்தை அமைத்துப் பணியாற்றினார்.

ஒருநாள் காரைக்குடியில் நடைபெற்ற தீண்டாமை எதிர்ப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு கனல் தெறிக்கப் பேசினார். இதை, அப்பகுதியைச் சேர்ந்த சில உயர் ஜாதியினர் விரும்பவில்லை; போலீசாரைத் தூண்டிவிட்டனர்.

கூட்டம் நடந்துகொண்டிருந்தபோதே தடியுடன் கூட்டத்தில் நுழைந்த போலீஸ்காரர்கள், அங்கே கூடியிருந்த மக்களை அடித்து விரட்டினார்கள். மேடையில் இருந்தோர் உள்பட எல்லோரும் கலைந்து ஓடினார்கள். ஆனால், ஜீவானந்தம் தனது உரையை நிறுத்தவே இல்லை. போலீஸ்காரர்கள் மேடையில் ஏறி கோபாவேசத்தோடு கொடுமையாக, சாட்டையால் மாறிமாறி அடித்த போதும் ஜீவா அசைந்து கொடுக்கவில்லை. அவரது உள்ள உறுதியைக் கண்ட ஆங்கிலேய அதிகாரிகளே திகைத்துப் போய் விட்டார்கள்.

அவரது ஆசிரமத்திற்கு ஒருமுறை மகாத்மா காந்தி வந்திருந்தார். ஜீவாவிடம் "உங்களுக்கு என்ன சொத்தெல்லாம் உள்ளது?" என்று கேட்டார். அதற்கு ஜீவா, "இந்தியா ஒன்றுதான் எனது சொத்து" - என்று பதில் கூறினார். உடனே காந்தியார் பெருமையுடன், "இல்லை, நீங்கள் தான் இந்தியாவின் சொத்து" என்று கூறினார்.

அந்த அளவிற்கு மகாத்மாவின் உள்ளத்தில் ஜீவானந்தம் அவர்கள் இடம் பெற்றிருந்தார்.

காங்கிரஸ்காரராகத் தமது வாழ்க்கையைத் தொடங்கி, பின்னர் அதில் இருந்து பிரிந்து சுயமரியாதைக் கழகத்தில் தந்தை பெரியாருடன் பணியாற்றியவர் இவர்; இறுதியில் பொதுவுடைமைக் கட்சியிலே சேர்ந்து இந்த நாட்டு மக்களுக்காக இரவு பகலாக உழைத்தவரும் ஆவார்.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிலேயே இவர் வித்தியாசமானவர். அக்கட்சிக்காக இரவுபகலாக உழைத்தவர் ஜீவா.

கம்யூனிஸ்ட் என்றாலே, சோவியத் ரஷ்யா தான் என்று நினைக்கும்படி இருந்த நிலை மாறி, அக்கட்சியை மண்ணின் மணத்தோடு எங்கும் பரவச்செய்தவர் நம் ஜீவானந்தம் அவர்கள்.

கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டங்களில் முதல்முறையாகத் தமிழ் இலக்கியப் பெருமைகளைப் பேசி, தமிழ்க் கலாச்சாரத்தோடு கட்சியை வளர்த்தவர். அதுவரை இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியினர் என்றாலே பயங்கரவாதிகள் என்ற ஒரு பெயரே இருந்தது. அதை உடைத்தெறிந்தவர் தான் ஜீவா.

வள்ளுவன், கம்பன், பாரதி ஆகியோரின் இலக்கிய மணம் கமழ மேடையில் பேசும் அவர் சொற்பொழிவுப் பாங்கே அலாதியாக - நம்மைக் கவர்வதோடு இருக்கும்.

## ஜீவா நினைவு மண்டபம்

பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் நினைவாக நாகர்கோவிலில் உள்ள சி.பி.இராமசாமி பூங்காவின் மத்தியில் நூலகக் கட்டடத்தின் முன் 89.33 ச.மீட்டர் பரப்பில் 'ஜீவா நினைவு மண்டபம்' அமைக்கவும், நினைவு மண்டபத்தில் 'ஜீவாவின் மார்பளவுச் சிலை' அமைத்திடவும், 28.8.1996-ல் ஆணையிடப்பட்டு இதற்காக ரூ.15.50 இலட்சம் அரசு நிதி ஒப்பளிப்பு செய்து பொதுப்பணித்துறைக்கு வழங்கப்பட்டது.

பொதுப்பணித்துறைப் பொறியாளர்களின் சீரிய முயற்சியின் பயனாக, மிகக் குறைந்த காலக்கெடுவுக்குள், காண்பவர் கண்ணைக் கவரும் வண்ணம் மிகுந்த எழிலுடன், ஜீவா மணிமண்டபம் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் நினைவினைப் போற்றிடும் வகையில் தற்போது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அரசால் அமைக்கப்பட்டுள்ள நினைவு மண்டபத்தில் திரு.ப.ஜீவானந்தம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை விளக்கும் புகைப்படங்கள், நூல்கள் அமைக்கப்படும்.

சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சியோடு சேருவதை எதிர்த்ததால், பெரியாரோடு கருத்துவேறுபாடு கொண்டு, சுயமரியாதை இயக்கத்தை விட்டு வெளியேறினார். பஞ்சாப் தந்த மாற்றுக் குறையாத தங்கம் பகத்சிங் தூக்கு மேடை ஏறுவதற்கு முன்னால் பேசிய பேச்சை - ஜீவா அவர்கள் 'நான் ஏன் நாத்திகனானேன்?' என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்து புத்தகமாக வெளியிட்டார். இந்த ஒரே காரணத்திற்காக ஆங்கிலேயப் போலீசார் அவரைப் பொள்ளாச்சி நகர வீதிகளிலே மிருகத்தை சங்கிலியால் கட்டி இழுத்துச்செல்வது போல, இழுத்துச் சென்று சிறையிலே அடைத்தனர்.

நாடு சுதந்திரம் அடைந்தபோது, கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டதால், சில ஆண்டுகள் தலைமறைவாக வாழ்ந்தார். பின்னர், 1952-ல் நடந்த தேர்தலில் வண்ணார்பேட்டைத் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

1952-ல் இருந்து 56 வரை தமிழகச் சட்டமன்றத்தில் அவர் பேசியபேச்சுக்கள் எல்லாம் புகழ் பெற்றவை; மறக்கமுடியாதவை. சட்டமன்றத்தில் அவர் பேசுகிறார் என்றால், சட்டமன்றத்திற்கு வெளியே நிற்பவர்கள் எல்லாம் கூட அவரது பேச்சைக் கேட்க உள்ளே வருவார்கள்.

பொதுவுடைமைக் கருத்தை வலியுறுத்தி நாடக மேடையில் பாடப்பட்ட அவரது புரட்சிகரமான பாடல்கள், தமிழகமெங்கும் வலம்வந்தன. அவர் பாடிய பாடல் பட்டி தொட்டிகளில் எல்லாம் பொதுவுடைமைக் கட்சி மேடைகளிலெல்லாம் ஒலித்தது. சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து,உற்றார், உறவினர்களை எல்லாம் மறந்து ஏழை-எளிய மக்களுக்காக உழைத்து, கடைசி வரையிலே கறைபடாத கரத்திற்குச் சொந்தக்காரராக வாழ்ந்த, தூய அரசியல் வாழ்க்கை வாழ்ந்து காட்டிய பெருமையாளர்தான் பொதுவுடமை வீரர் திரு. ப. ஜீவானந்தம் அவர்கள் என்பதில் இரண்டுவிதக் கருத்துக்கும் இடமேயில்லை.

- தி. முருகேசன்

# “எல்லோரும் ஒரே குலம், ஓரின மக்கள் என்ற நிலை வரப் பாடுபடுவோம்!”

ஒட்டப்பிடாரம் ஒன்றியம் கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் நினைவுக்குடியிருப்புகளைத் திறந்துவைத்தும், நலத்திட்ட உதவிகளை வழங்கியும் 18.4.98 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:



“இதயத்திற்கு இதம் தருகின்ற விழா ஒன்று மிகுந்த சீரோடும் சிறப்போடும் எழுச்சியோடும் எழிலோடும் இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த வட்டாரத்தில் 1972-க்குப் பிறகு மணலி கந்தசாமி அவர்களோடும், சுப்பு அவர்களோடும் வந்து வீரபாண்டிய கட்டபொம்மன் விழாவை நடத்தி, அன்று வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்று வீரபாண்டிய கட்டபொம்மனுடைய - இடிந்து அழிந்து மண்மூடிப்போன பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைப் புதுப்பிப்பேன் என்று உறுதி அளித்து அந்த உறுதியை நிறைவேற்றுகின்ற வகையிலே கோட்டைக் கொத்தளத்தை அமைத்து வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு அன்றைக்குத் தோளோடு தோள் நின்று துணைபுரிந்து விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்ட தளபதிகளுக்கெல்லாம் நினைவுச் சின்னங்கள் அமைத்து அப்படி அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களிலே ஒன்றாக வீரன் சுந்தரலிங்கத்தின் தோரணவாயிலை அப்பொழுதே அமைத்தவன் நான் என்கின்ற முறையில் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

## நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.சார்பில் நின்றவர் டாக்டர் கிருஷ்ணசாமி

இங்கே நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் - முன்னிலை ஏற்றுள்ள டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சுந்தரலிங்கத்தை நான் எப்பொழுதெல்லாம் நினைவுபடுத்தியிருக்கிறேன் என்பதை எடுத்துச்சொன்னார். நான் எழுதிய நூலிலிருந்து அவர் எதை எடுத்து குறித்துக்கொண்டு வந்திருக்கிறாரோ அதையேதான் நானும் குறித்துக்கொண்டு வந்திருக்கிறேன். இதிலிருந்து எங்களுக்குள்ள ஒற்றுமையை நீங்கள் புரிந்துகொள்ளலாம். ஏனென்றால் 14 ஆண்டுகளுக்கு முன்பு கிருஷ்ணசாமி அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பொள்ளாச்சியில் நின்றவர் என்பதை ஞாபகப்படுத்தினால் இந்தக்கருத்து ஒற்றுமை எப்படி வந்தது என்பதை நீங்கள் எல்லாம் புரிந்துகொள்ளலாம்.

ஒரு 15 ஆண்டுக்கு முன்பு நான் ‘குங்குமம்’ இதழில் “பாயும்புலி பண்டாரக வன்னியன்”’ என்ற ஒரு தொடர் ஓவியத்தைத் தீட்டினேன். அந்தத் தொடர் ஓவியத்தினுடைய முதல் அத்தியாயமே வீரன் சுந்தரலிங்கத்தை அறிமுகப்படுத்துகின்ற அத்தியாயமாகத்தான் அமைந்திருக்கிறது. உங்களில் பலபேர் அதைப் படித்திருக்க முடியாது. ஆனால் 15 ஆண்டுகளுக்கு முன்பே நினைவூட்டியவன் நான் என்ற முறையில் அதை இப்பொழுது உங்களுக்கு நினைவுபடுத்துகின்றேன். அதைத்தான் இங்கே கிருஷ்ணசாமியும் உங்களுக்கு நினைவுபடுத்தினார். அதிலே குறிப்பிட்டிருக்கின்றேன். அதைக் கிருஷ்ணசாமி படிக்கும்பொழுது நீங்கள் சற்று அமைதியில்லாமல் ஆனந்தப் பரவசத்தில் உங்களையும் மறந்து உணர்ச்சி வசப்பட்டு முழக்கம் செய்துகொண்டிருந்த காரணத்தினால் - நான் என்ன எழுதினேன், அவர் என்ன படித்தார் என்பதை உங்களில் பலபேர் காது கொடுத்துக் கேட்கவில்லை. எனவே, நானே அதைப் படிக்கிறேன்.



வீரன் சுந்தரலிங்கம்

## பாஞ்சாலங்குறிச்சிச் சிங்கங்கள்

“வீரபாண்டிய கட்டபொம்மனின் அன்புக்குரிய தளபதி வெள்ளையத்தேவனுக்கு உற்ற நண்பனும் அவனையொத்த வீரனுமான சுந்தரலிங்கம் பாஞ்சாலங்குறிச்சி படைமுகத்துச் சிங்கங்களிலே ஒருவன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்து இந்தத் தமிழ் மண்ணை அந்நியர் ஆக்கிரமிக்கக் கூடாது என்பதற்காகத் தடந்தோள் தட்டிய பெருவீரன் சுந்தரலிங்கம்”.



- இது பாயும்புலி பண்டாரக வன்னியன் புத்தகத்தில் 13-வது பக்கத்திலே இடம் பெற்றிருக்கிறது.

மேலும் சொல்லுகின்றேன், “தேவர் குலத்தில் உதித்த வெள்ளைத்தேவனும், தேவேந்திரகுலத்தில் உதித்த இந்தச் சுந்தரலிங்கக் குடும்பனும் கூடப்பிறக்காத குறையொன்றே தவிர, இருவரும் இணைபிரியாத சகோதரர்கள்”.

- இதையும் 36-வது பக்கத்திலே பாயும்புலி பண்டாரக வன்னியன் புத்தகத்திலே குறிப்பிட்டிருக்கின்றேன்.

மேலும் “பாண்டிய மண்ணின் உரிமைக்காக வீரப்போரிட்ட வெட்டும் பெருமாளின் பரம்பரையில் வந்தவர் இந்தச் சுந்தரலிங்கக் குடும்பன்” என்பதையும் அந்த நூலின் 17-வது பக்கத்திலே நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

200 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில் வெள்ளையனை எதிர்த்த விடுதலைப் போராட்டத்தில் தளநாயகனாக, முன்னோடியாக விளங்கிய வீரன் சுந்தரலிங்கம். அவருடைய சொந்த ஊரைத் ‘தென்னகத்தின் ஜிப்ரால்டர்’ என்று வெள்ளையர்கள் வர்ணித்தார்கள். அத்தகைய பெருமைக்குரியவர்களிலே ஒருவர் சுந்தரலிங்கம். பாஞ்சாலங்குறிச்சி மன்னன் வீரபாண்டிய கட்டபொம்மனின் ஒற்றர்படைத் தளபதியாக அவர் பணியாற்றினார் என்று வரலாற்றுக் குறிப்புகள் சுட்டிக் காட்டிக்கொண்டிருக்கின்றன.

அந்தக் காலத்தில் அரசு கெஜட்டில் இந்த ஊரின் பெயர் ‘கெவுணகிரி’ என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எப்படி கவர்னகிரியாக மாறிற்று? என்பதை நான் ஆச்சரியத்தோடு பார்க்கவில்லை. இப்படிப் பல பெயர்கள் மொழி மாற்றம் - பெயர் மாற்றம் பெற்றிருக்கின்றன. வெள்ளைக்காரக் கவர்னர் வந்து அடிக்கடி தங்குகிற காரணத்தால் இது போகப்போகச் சில ஆண்டுகளுக்குப் பிறகு கவர்னகிரி என்று ஆகி, பிறகு பேச்சு வழக்கத்தில் கவர்னகிரி என்று ஆயிற்று. வேறொரு உதாரணம் கூறுகிறேன். சென்னை மாநகரத்தில் ஒரு வெள்ளைக்காரருடைய பெயரால் மயிலாப்பூர் பகுதியில் ஒரு பாலம்; அந்த பாலத்திற்குப் வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்தில் ஹேமில்டன் பிரிட்ஜ் என்று பெயர் இருந்தது. அந்த பிரிட்ஜின் பெயர் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து தேய்ந்து கடைசியாக “அம்பட்டன் பிரிட்ஜ்” (மன்னிக்க வேண்டும் அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்) என்றாகிவிட்டது. அந்த மாற்றம் எப்படி ஏற்பட்டது என்ற கொடுமையைச் சொல்வதற்காகச் சொல்கின்றேன். அம்பட்டன் பிரிட்ஜ் என்றாகி அதற்குச் சரியான மொழியொப்பாக அதை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து பார்பர்ஸ் பிரிட்ஜ் என்றே ஆக்கிவிட்டார்கள்.

ஹேமில்டன் என்ற வெள்ளைக்காரத் துரையின் பெயர் கடைசியாக பார்பர்ஸ் பிரிட்ஜ் என்கின்ற அளவுக்கு மாறிற்று. அதேபோல்தான் கவர்னர் அடிக்கடி தங்கிய காரணத்தினால் இது கவர்னகிரியாக இருந்து, காலப்போக்கில் கெவுணகிரியாக ஆயிற்று. இந்த கவர்னகிரியை சார்ந்த கட்டகருப்பன்-முத்து தம்பதியரின் மகன்தான் சுந்தரலிங்கம். இளம் வயதிலேயே வீரத்தின் விளைநிலமாய், எடுத்த காரியத்தை முடிக்கின்ற ஆற்றல் வாய்ந்தவனாய் விளங்கிய காரணத்தினால் கட்டபொம்மன் சுந்தரலிங்கத்தைத் தன்னுடைய ஒற்றர்படைத் தளபதியாகவே நியமித்துக்கொண்டார் என்று வரலாறு கூறுகிறது.

வெள்ளையருடைய ஆதிக்கம் மெல்லமெல்லப் பரவி கட்டபொம்மனுடைய வீரர்களையும் அவருடைய கோட்டையையும் அவர் குறிப்பிட்டதைப் போல இந்தப் பகுதி மக்களையும் சுற்றி வளைத்துக்கொண்டு அந்தக் கோட்டையையே கைப்பற்றுவது என்கின்ற முடிவெடுத்து அதற்கான ஆயத்தங்களை வெள்ளைக்கார துரைமார்கள் செய்துகொண்டிருந்த நேரத்தில் கட்டபொம்மனிடத்திலே இல்லாத ஆயுதங்கள் போர்க்கருவிகள், பீரங்கிகள் இவைகளையெல்லாம் கோட்டையைச் சுற்றிவளைத்து அதைப் பிடிப்பது என்ற இறுதியான முடிவுக்கு வந்த காலக்கட்டத்தில் அன்றைக்கு வெள்ளையத்தேவன் ஒரு திருமணத்திற்காக வெளியூர் சென்றிருக்க இப்படி வெள்ளைக்காரர்கள் கோட்டையை முற்றுகையிட்டு அதைத் தூள்தூளாகப் பிளக்கப் போகிறார்கள் என்ற செய்தி சுந்தரலிங்கத்தின் காதில் விழுகிறது.

## தியாகப் பிழம்பான சுந்தரலிங்கம் - வடிவு

சுந்தரலிங்கத்திற்கு ஒரு முறைப்பெண்; வடிவு என்று அந்தப் பெண்ணுக்குப் பெயர். இருவரும் எப்படி வெள்ளைக்காரர்களுடைய சூழ்ச்சியை முறியடிப்பது என்று திட்டமிட்டார்கள். இரண்டு பேருமே





ஆடுமேய்ப்பவர்களைப்போல வேடம் போட்டுக்கொண்டு வெள்ளைக்காரர்கள் பதுக்கி வைத்திருந்த வெடிமருந்துகளைக் கொண்டுதான் கட்டபொம்மன் கோட்டையைத் தகர்ப்பது என்று அன்றைக்கு அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள். அந்த வெடிமருந்துகளையே பயனற்றதாகச் செய்துவிட்டால் கோட்டை தப்பும் அல்லவா என்று எண்ணிய சுந்தரலிங்கத்தினுடைய முறைப்பெண் வடிவும் சுந்தரலிங்கமும் திட்டமிட்டு, இருவரும் அந்த வெடிமருந்துச் சாலைக்குள்ளேயே தீப்பந்தத்தை கட்டிக்கொண்டு உள்ளே சென்று அங்கிருந்த வெடிமருந்துகளை எல்லாம் வெடிக்கச் செய்து அழித்து முடித்து தாங்களும் அந்த வெடிமருந்துக்குள்ளே வெடிமருந்தாக மாறி மறைந்தார்கள், தியாகப் பிழம்புகளாக ஆனார்கள், சுந்தரலிங்கமும் வடிவு என்கின்ற அந்த முறைப்பெண்ணும். இப்படித்தங்களையே வெடிமருத்துக்கு தீக்கு இரையாக்கிக் கொண்டு அன்றைக்கே - இன்றைக்குச் சொல்வார்கள் தற்கொலைப்படை தற்கொலைப்படை என்று - அன்றைக்கே வெள்ளையர்களை எதிர்த்து வீரபாண்டிய கட்டபொம்மன் தலைமையில் தற்கொலைப்படையின் தளநாயகனாக விளங்கியவன் சுந்தரலிங்கம் என்பதை எண்ணுகிற நேரத்தில் நாம் பெருமை அடைகிறோம்.

ஆனால் இந்தத் தற்கொலைப் படை எல்லாம், இந்த வீரதீரச் செயல்கள் எல்லாம் அன்றைக்குத் தேவைப்பட்டது. வெள்ளைக்காரர் பீரங்கியோடு வந்த நேரத்திலே, அவன் படை எடுத்து வந்த நேரத்தில் எதிர்க்க இவைகள் எல்லாம் தேவைப்பட்டது. ஆனால் கால மாற்றத்தால் வெள்ளைக்காரனை எதிர்க்க உத்தமர் காந்தியடிகள் அகிம்சையையே தன் ஆயுதமாகக் கொண்டார். அகிம்சையையே தன் ஆயுதமாகக் கொண்டு குமரி முதல் இமயக்கோட்டம் வரையுள்ள இந்திய நாட்டின் மக்களையும் திரட்டி அவருடைய தலைமையிலே நடைபெற்ற அந்தச் சுதந்திரப் போராட்டத்தின் காரணமாகத்தான் வெள்ளையர்கள் வெளியேறினார்கள்.

**'மண்ணுக்குக் கிடைத்த சுதந்திரம்**
**மக்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை'**

வெள்ளையர்கள் வெளியேறினாலும்கூட,நாடு சுதந்திரம் பெற்றாலும்கூட,மண்ணுக்குத்தான் சுதந்திரம் கிடைத்ததே தவிர மக்களுக்கு முழுமையான சுதந்திரம் கிடைக்கவில்லை. அதை இன்றைக்கும் நாம் காண்கிறோம். அந்த சுதந்திரத்தைப் பெறத்தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, அண்ணல் அம்பேத்கர் போன்ற தலைவர்கள் எல்லாம் பாடுபட்டார்கள். இன்றைக்கும் அவர்கள் வழிநின்று நாம் பாடுபட்டுக்கொண்டு இருக்கிறோம்.

அப்படி பாடுபடுகின்ற நேரத்தில் இங்கே இன்றைக்குக் கட்டப்பட்டு இருக்கின்ற 200 வீடுகளை யாரும் பெரிதாக எண்ணிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனால், இன்றைக்குத் தமிழகத்திலே இதேபோன்ற வீடுகள் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும்,எந்தத்தொகுதிக்குச் சென்றாலும் 200, 300 வீடுகள் இருக்கின்றதென்றால் அதற்குக் காரணம் நான் பெருமிதத்தோடு சொல்லவில்லை - பெருமையோடு சொல்லவில்லை. இங்கே அமைச்சர் கோ.சி.மணி அவர்கள் குறிப்பிட்டது போல ஆதிதிராவிடர் பெருங்குடி மக்களுக்கு இலவசமாகக் காங்கிரீட் வீடுகளை, கட்டித்தரவேண்டும் என்ற திட்டத்தை முதன்முதலாக உருவாக்கியது - இந்தியாவிலேயே முதன்முதலாக நிறைவேற்றிக்காட்டியது, உங்கள் முன்னால் நின்றுகொண்டு இருக்கிற இந்தக் கருணாநிதிதான் என்பதை ஞாபகப்படுத்துகின்றேன்.

ஒருமுறை இப்படிப்பட்ட வீடுகள் திறப்பு விழாவில் அம்மையார் சத்தியவாணிமுத்து அவர்கள், அரிசனத்துறை அமைச்சராக அன்று இருந்தார்கள் - அப்போது எல்லாம் அந்தத் துறைக்கு அரிசன நலத்துறை என்று பெயர் - அந்தத் துறைக்கு அமைச்சராக இருந்தார்கள். இதுபோன்ற 100 வீடுகளை ஒரு இடத்திலேயே கட்டி முடித்து அதைத் திறந்துவைக்கும்பொழுது அவர் குறிப்பிட்டார். அவர்களும் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். இருந்தாலும் ஆதங்கத்தோடு சொன்னார்கள் - "நீங்கள் இந்த வீடுகளை எல்லாம் கட்டினீர்கள். எங்களுடைய மக்கள் நன்றியோடு இருப்பார்களா?" என்று கேட்டார்.

அப்பொழுது நான் பேசும்பொழுது சொன்னேன். 'அம்மா' நான் பெரியாருடைய தொண்டன்; பெரியாருடைய பொன்மொழி என்ன தெரியுமா? 'நன்றியை எதிர்பார்த்து கடமையைச் செய்யாதே. நன்றி வருகிறதோ இல்லையோ - நன்றி காட்டுகிறார்களோ இல்லையோ உன்னுடைய கடமையைச் செய்துகொண்டு இரு'. இதுதான் பெரியாருடைய பொன்மொழி. எனவே, எனது கடமையைச் செய்கிறேன். நீங்கள் நன்றி சொல்வார்களா என்று கேட்டீர்கள். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. சில இடங்களில் நான் கட்டித் தந்த வீடுகளில் 'கருணாநிதி வாழ்க' என்று எழுதுகிறார்கள்.



சில வீடுகளின் சுவர்களில் 'கருணாநிதி ஒழிக' என்று எழுதுகிறார்கள் என்று சொன்னீர்கள். பரவாயில்லை, ஒழிக என்று எழுதினாலும், வாழ்க என்று எழுதினாலும், என்னுடைய பெயரை மறக்காமல் கருணாநிதி என்று எழுதுகிறார்களே அதுபோதும் எனக்கு" என்று நான் சொன்னேன்.

எனவே, பிற்படுத்தப்பட்ட மக்களானாலும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களானாலும், தாழ்த்தப்பட்ட மக்களானாலும், இன்றைக்கு அடித்தளத்தில் இருக்கின்ற மக்களானாலும் அவர்கள் இன்றும் பல செய்திகளைப் புரிந்துகொள்ள முடியாத சூழ்நிலையில் இருளில் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ஒளி ஏற்றவேண்டும். அவர்களுடைய உள்ளத்திற்கு எல்லாம் வெளிச்சம் தரவேண்டும். நாம் யார் என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கும்பொழுது எல்லாம் ஒரே குலம்; எல்லோரும் ஓரின மக்கள்! என்ற உணர்வை நாம் ஏற்படுத்தி ஆகவேண்டும். அவர்கள் ஆதிக்கச் சமுதாயம் என்று நம்மால் அடையாளம் காட்டப்பட்டாலும் அல்லது அடித்தளத்து மக்கள் என்று நம்மால் அடையாளம் காட்டப்பட்டாலும் இருசாராரும், இரு பிரிவினரும் ஒருங்கிணைந்து ஒன்றாகத் தோள்மீது தோள் கைபோட்டுக் கொண்டு தோழர்களாக, சகோதரர்களாக வாழவேண்டும்.

இந்தச் சரித்திரம் என்ன சொல்கிறது. சுந்தரலிங்கத்தினுடைய வரலாறு என்ன சொல்கிறது. வெள்ளையத்தேவனும் சுந்தரலிங்கமும் ஒரே படையிலே கைகுலுக்கிக் கொண்டு ஒருவர் தோளில் ஒருவர் கைபோட்டுக் கொண்டு படை நடத்திய பெரும் வீரர்கள். ஏன் இன்றைக்கு அந்த நிலை மாறி இருக்கிறது? மாறிய நிலையை வரலாற்றுச் சான்றுகளோடு எடுத்துச் சொல்லி, மீண்டும் அந்த பழையநிலையைக் கொண்டுவரவேண்டும் என்பதுதான் நோக்கமே தவிர, வேறல்ல.

குறிப்பாக, பழைய வீரர்களை, பழைய காலத் தியாகிகளை நினைவுபடுத்துவது நம்முடைய மிகப்பெரும் பொறுப்பாகும். இங்கு கிருஷ்ணசாமி பேசும்பொழுது சொன்னார். "சுதந்திரம் பெற்ற 50 ஆண்டுகாலத்தில் இவர்களையெல்லம் யாராவது நினைத்தார்களா? என்றார். நினைத்தார்களா என்று கேட்டவர், "இவர் ஒருவர்தான் நினைத்து இருக்கிறார்" என்று என்னை சுட்டிக்காட்டுவார் என்று எண்ணினேன். சொல்லாமலே, நீங்களே தெரிந்துகொள்வீர்கள் என்பதற்காகச் சுட்டிக்காட்டாமல் விட்டுவிட்டார் என்று நான் புரிந்துகொள்கின்றேன்.

ஏனென்றால், நான் ஒரு காலத்திலே அவருக்குத் தலைவராக இருந்தவன்தான். அவரைப் பலமுறை தம்பி என்று அழைத்திருக்கின்றேன். இன்றைக்கும் அழைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தலைவராக இருந்தபொழுதுதான் அவர் பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக நின்றார். அவருக்காகப் பல கூட்டங்களில் பேசி வாக்குச் சேகரித்த அந்த வாய்ப்பையும் பெற்றவன் நான். எனவே இங்கே சீற்றத்தோடு பேசினார் என்றால், ஒரு புயல் போல உறுமினார் என்றால், ஒரு சிங்கம் போலக் கர்ச்சித்தார் என்றால், நான் எண்ணிக் கொள்கிறேன். இதற்கு எல்லாம் காரணம், அடித்தளம் தி.மு.கழகத்திலே அவர் இருந்ததினால் அல்லவா என்று எண்ணிப் பெருமை அடைகின்றேன். மகன் போர்க்களத்திலே புகழ் பெறுகிற நேரத்தில்தான் தாய் தன்னுடைய வயிற்றைத் தடவிப் பார்த்துக் கொள்வதைப் போல, நான் தடவிப் பார்த்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட ஒரு மகனைப் பெற்றோமே என்கிற அளவில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மகிழ்ச்சியிலே உங்களோடு நானும் பங்கு கொள்கிறேன்.

- இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

## திட்டத்தின் விவரம்

தமிழக முதல்வரின் கனவுத் திட்டம் என்ற அளவுக்கு உள்ள இத்திட்டத்திற்காக அகிலாண்டபுரம் பஞ்சாயத்திற்கு உள்பட்ட சுமார் 10 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு கடந்த 23.6.97ல் பணிகள் தொடங்கப்பட்டன. அப்போது அரசு முதல் கட்டமாக ரூ.59.6 இலட்சம் நிதியை ஒதுக்கியது. பின்னர் 27.8.97 - ல் ரூ.16 இலட்சத்தையும் 25.9.97ல் ரூ.28.84 இலட்சத்தையும் ஒதுக்கியது.

இது தவிர பள்ளிக்கட்டடம் கட்ட ரூ. 4 இலட்சத்தையும் தனியாக ஒதுக்கியது.

பதினோழும் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரலிங்கத்தின் வாரிசுகள் 200 பேருக்கும் வீடுகள் வழங்கப் படுகின்றன.

ஒவ்வொரு வீடும் ரூ.35,000 செலவில் மொத்தம் ரூ.70 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளன. இந்த வீடுகளுக்கு ரூ.4 இலட்சம் செலவில் 30,000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது.

மேலும் ரூ.7.30 இலட்சம் செலவில் 1,433 மீட்டர் நீளத்திற்கு கல் மற்றும் தார்ச் சாலை, 1,433 மீட்டர் நீளத்திற்கு பேவர் மற்றும் சரளைச் சாலை, ரூ.28 இலட்சம் செலவில் 4 குழாய் பாலங்கள், [illegible] இலட்சம் செலவில் வடிகால் [illegible], ரூ.30,000 செலவில் சிறுவர் விளையாட்டு பூங்கா, ரூ.75,000 செலவில் 20 தெரு விளக்குகள், ரூ. 4 இலட்சம் செலவில் இரண்டு வகுப்பறைகள் மற்றும் கழிப்பறை வசதியுடன் பள்ளிக் கட்டடம், ரூ. 3 இலட்சம் செலவில் படிப்பக அறை மற்றும் கழிப்பறை வசதியுடன் சமுதாயக்கூடம் என அனைத்து வசதிகளுடன் இந்தக் கிராமம் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கிராமத்தின் நுழைவு வாயிலில் சுந்தரலிங்கத்தின் பெயரைத் தாங்கி நிற்கும் தோரணவாயிலும் ரூ.1 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இங்கு வசிக்கும் மக்களுக்காக பயணிகள் நிழற் குடையும் அமைக்கப் பட்டுள்ளது. இது தவிர, தனி மின்மாற்றியும் உள்ளது.

பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுக் கோட்டையிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ள இந்த இடம் ஒரு நவீன கிராமம் போல் காட்சியளிக்கிறது. ★

## ★ 2000-ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் கல்வி
## ★ வரும் கல்வி ஆண்டில் 300 சிற்றூர்களில் புதிய தொடக்கப் பள்ளிகள்
## ★ 200 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்
## ★ அனைத்து ஓராசிரியர் பள்ளிகளிலும் குறைந்தது இரு ஆசிரியர்களை நியமிக்க அரசு முடிவு

### கல்வி மான்யக் கொள்கைக் குறிப்பில்
### மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்கள் அறிவிப்பு

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் 15.4.98. அன்று சட்டப் பேரவையில் தாக்கல் செய்த கல்வி மான்யக் கோரிக்கை வருமாறு:

தமிழகத்திலுள்ள 5.59 கோடி மக்களில் (1991 மக்கட் கணக்கெடுப்பு) 1.80 கோடி பேர் கல்வியறிவு பெறாதவர்கள். இவர்களுள் பெண்கள் 64 சதவிகிதத்தினர், ஆதிதிராவிடர் வகுப்பினரில் 65 சதவிகிதத்தினர் கல்வி அறிவு பெறாதவர். மலைவாழ் மக்களில் 79 சதவிகிதத்தினர் கல்வி கற்காதவர்கள். கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை விரைந்து பெருகச் செய்வது துறையின் தலையாய குறிக்கோள் ஆகும்.

அனைத்துப் பிரிவினருக்கும் அவரவர் நிலைமைக்கு ஏற்ற வழியில் கல்வி கற்பிக்கும் அமைப்பை உருவாக்கும் பணியில் இத்துறை ஈடுபட்டுள்ளது.

தற்போது தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரித்து, விடுபட்டுள்ள சிற்றூர்களில் அடிப்படைக் கல்வி வசதி ஏற்படுத்துவதும் - தமிழகத்தில் அமைந்துள்ள பல நிலையிலுள்ள கல்விச் சாலைகளிலும் அமைந்துள்ள உள்கட்டமைப்பையும் (infrastructure) சூழ்நிலையையும் மேம்படுத்தி, பள்ளி மாணவர்களுக்கு, கற்பதை விரும்பி ஏற்கும் இனிமையான பட்டறிவாக்கி, மேலும் தொடராது இடைநிற்றலைக் குறைப்பதும், ஏற்கெனவே உருவாக்கப் பட்ட கல்வி கட்டமைப்பில் கல்வி பெறாமல் விடுபட்ட மக்களிடையே கல்வியறிவை வளர்ப்பதும், இத்துறையின் தொலைநோக்குக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக இருக்கும்.

### 1998-99 ஆம் ஆண்டின் சிறப்புகள்

தொலைநோக்குக் கொள்கைக்கு வடிவம் கொடுக்கும் வகையில் 9-வது ஐந்தாண்டுத் திட்டம் இவ்வாண்டு தீட்டப்பட்டுள்ளது. அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டுமென்ற கொள்கையைச் செயல்படுத்த புதிய தொடக்கக் கல்விப் பள்ளிகள் தொடங்கவும், தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தவும் திட்டங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொலை நோக்குக் கொள்கையைச் செயல்படுத்த பல்வேறு இயல்பான நடவடிக்கைக்கு மேலாக, முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை முடிவுகளையும் நடவடிக்கைகளையும் இவ்வாண்டு இத்துறை மேற்கொண்டுள்ளது.

### புதிய பள்ளிகள்

அகில இந்தியக் கல்வி ஆய்வுப் புள்ளி விவர அடிப்படையில், தமிழகத்தில் சுமார் 700 கிராமங்களில்



இன்னமும் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் தொடக்கப் பள்ளிகள் வசதிகள் ஏற்படுத்தப் படவில்லையெனக் கணக்கிடப் பட்டுள்ளது. அதன்படி 1998-99ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 300 சிற்றூர்களில் புதிய ப்ள்ளிகள் தொடங்கப்படும்.

நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் கற்பிக்கும் திறனை உயர்த்த அறிவியல், கணிதம் போன்ற பாடங்களைக் கற்பிக்க பட்டதாரி ஆசிரியர்களைப் படிப்படியாக நியமிக்கவும் முடிவு செய்யப் பட்டுள்ளது.

### வகுப்பறைகள்

பள்ளிக் கல்வியைப் பொருத்த வரையில் சிறந்த முறையில் கற்பிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க போதிய வகுப்பறைகள் கட்டுதல், அறிவியல் கூடங்கள் கட்டுதல், குடிநீர் வசதி அளித்தல், குறிப்பாக மாணவிகளுக்குக் கழிப்பிடங்கள் அமைத்தல், விளையாட்டு மைதானங்கள் உருவாக்குதல், நூலக வசதி ஏற்படுத்தித் தருதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள இவ்வாண்டு கூடுதலான முயற்சிகள் எடுக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

பள்ளிக் கல்வியை முடித்துவிட்டு வெளியே வரும் மாணவர்கள் பயனுள்ள வகையில் வேலை வாய்ப்புகளைத் தேடிக்கொள்ளவும், சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்ளவும், அவர்களுடைய திறன்களை வளர்க்கத் தொழிற் கல்வித் திட்டத்தில் கருத்த முயற்சி எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பல வகைப்பட்ட தொழிற் திறன்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குத் திட்ட வரைவு





தயாரிக்கவும், கணினி பாடத் திட்டப் பயிற்சியை விரிவுபடுத்தவும் இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

### தொடக்கக் கல்வி

1997-98ஆம் கல்வியாண்டில் 168 புதிய தொடக்கப் பள்ளிகள் துவக்கவும், 41 தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தவும் அரசு இசைவளித்தது. இவை அனைத்தும் செயல்படத் தொடங்கியுள்ளன. இதன் தொடர்ச்சியாக, இளம் மாணவர்கள் பள்ளிக்கு எளிதில் சென்றடையும் வகையில் 1998-99ஆம் ஆண்டு 300 தொடக்கப் பள்ளிகள் துவக்கவும், 200 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தவும் அரசு தீர்மானித்துள்ளது.

தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் பிள்ளைகளின் நலனுக்காக, பள்ளிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர அரசு கீழ்க்காணும் திட்டங்களைச் செயற்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது.

### ஆசிரியர்கள் நியமனம்

தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்களை நியமிக்கப் புதிய நெறிமுறைகளை அரசு வகுத்துள்ளது. அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் குறைந்தது இரு ஆசிரியர் நியமிக்க அரசு முடிவெடுத்துள்ளது. இவ்வாண்டு முதல் இது செயல்படுத்தப்படும். இதனால் 1385 ஓராசிரியர் பள்ளிகளில் கூடுதல் ஆசிரியர் நியமிக்கப்படுவர்.

### இலவசப் பாடப் புத்தகங்கள்

பள்ளிகளில் தொடர்ந்து படிக்க ஊக்க உதவியாக முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தில் பயனடைவோருக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தை இவ்வாண்டு முதல், ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது. இப்புத்தகங்கள் கல்வியாண்டு தொடக்கத்திலேயே வழங்கப்படும்.

### கழிப்பிட வசதிகள்

கிராமப்புறத் துப்புரவுத் திட்டத்தின் கீழ், தொடக்க, நடுநிலைப்பள்ளிகளில் குறிப்பாகப் பெண்கள் பயிலும் பள்ளிகளில் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். இதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில், கல்வியின் தரத்தை மேம்படுத்த நான்கைந்து ஆண்டுகளாகக் காலியாக இருந்த 20544 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. மாவட்ட வேலைவாய்ப்பகப் பதிவு மூப்பின் அடிப்படையில் மட்டுமே இனவாரி சுழற்சி முறை கடைப் பிடிக்கப்பட்டு நியமனம் செய்யப் பட்டது. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்பெறும் பயிற்சியில் கலந்து வெற்றிபெறும் தகுதி வாய்ந்த பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர்கள் 173 பேரை இடைநிலை ஆசிரியர் ஊதிய விகிதத்தில் கொணர்ந்து ஆணையிடப் பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் பிரிவினைச் சேர்ந்த இடைநிலை ஆசிரியர் போதிய எண்ணிக்கையில் இல்லாத காரணத்தால் 1996-97ஆம் ஆண்டு நிரப்பப்படாத 1,340 பணியிடங்கள் பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பப்பட்டன். இவர்களுக்கு மழலையர்களுக்குப் பாடங்களைக் கற்பிப்பதற்காகச் சிறப்புப் பயிற்சியும், ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தால் அளிக்கப்பட்டது. இவ்வாறே 1997-98ஆம் ஆண்டும் 1152 பதவிகளை நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தொடக்கக் கல்வி நிர்வாகத்தை வலுப்படுத்தும் முக்கியப்படியாக உயர்நிலை வகுப்புகளுக்குரிய பட்டதாரி ஆசிரியர் தரத்தில் பணியாற்றி வந்த அனைத்து உதவிக் கல்வி அலுவலர் பணியிடங்களாக, மாற்றி ஏற்கெனவே பி.எட். தகுதியுடன் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமையாசிரியர்களை நியமனம் செய்துள்ளது.

முதல் - இரண்டாம் வகுப்புகளுக்கான மாணவர்களுக்கு முதன் முறையாகப் பயிற்சிப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை படிப் படியாக அனைத்து வகுப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

### ஆசிரியர்கள் கையேடுகள்

1998-99ஆம் ஆண்டு முதல்கட்ட மாவட்டங்களின் திட்டத்திற்காக ரூ.27.38 கோடியும், இரண்டாம் கட்ட மாவட்டங்களின் திட்டத்திற்காக ரூ.9.09 கோடியும் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்ட திட்டத்தில் பள்ளிகளுக்கு வசதிகள் மேம்படுத்தல், பயிற்சிப் புத்தகங்கள் - ஆசிரியர்கள் கையேடு தயாரித்தல் மற்றும் ஆசிரியர் பயிற்சி தொடரப் படும். பெரம்பலூர் மாவட்டத்தில் புதிய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களைப் போன்று இங்கும் ஆசிரியர் பயிற்சி தொடங்கும்.

### உயர்நிலைப் பள்ளிகள்

1998-99ஆம் ஆண்டில் 80 ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட உள்ளன. அரசு கொள்கையின்படி ஊரக வளர்ச்சியை முதன்மை நோக்கமாகக் கொண்டு கிராமப் புறங்களில் புதிய அரசு உயர்நிலைப் பள்ளிகள் திறக்க அனுமதி வழங்கப் படுகிறது. கிராமப் பகுதிகளில் 60 நடுநிலைப் பள்ளிகளும், நகர்ப் பகுதிகளில் 20 நடுநிலைப் பள்ளிகளும் நிலை உயர்த்தப்படும்.

### மேல்நிலைப் பள்ளிகள்

1998-99ஆம் ஆண்டில் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் 40 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கிராமப் புறங்களில் 30 உயர்நிலைப் பள்ளிகளும், நகர்ப் புறங்களில் 10 உயர்நிலைப் பள்ளிகளும் நிலை உயர்த்தப்படும்.

## அறிவியல் கல்வி முன்னேற்றம்

1998-99ஆம் ஆண்டிலும், இதேபோன்று 200 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 1998-99ஆம் ஆண்டில் நிலை உயர்த்தப்பட உள்ள 40 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ரூ.100 இலட்சம் செலவில் அறிவியல் உபகரணங்கள் வழங்கப்பட உள்ளது. இதேபோன்று, 119 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வகம் கட்டுவதற்காக 1997-98ஆம் ஆண்டில் அரசு ரூ.10 கோடி அனுமதித்துள்ளது. 1998-99ஆம் ஆண்டில் 250 பள்ளிகளுக்கும் ஆய்வகக் கட்டடங்கள் கட்டப்படும். இதற்கு ரூ.20 கோடிக்கு அனுமதி வழங்கப்படும்.

மாணவர்களின் இன்றையக் கல்வித் திட்டத்திற்கேற்ப மேம்படுத்திக் கொள்ளவும், கணிப்பொறித் துறையில் அதிகமாக வேலைவாய்ப்புகளைப் - பெறவும் முதற்கட்டமாக 1998-99ஆம் ஆண்டு 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.352.08 இலட்சம் செலவில் கணிப்பொறி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## பள்ளி நூலக வசதி

முதற்கட்டமாக 1998-99ஆம் ஆண்டில் 200 அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.25,000 வீதம் (அரசு பங்கு மட்டும்) ரூ.50 இலட்சம் செலவில் நூலகப் புத்தகங்கள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.50 இலட்சம் இணைமான்யமாகப் பொதுமக்கள் நன்கொடை மூலம் பெறப்பட்டு நூலகப் புத்தகங்கள் வாங்கப்படும்.

## மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகங்கள்

பள்ளிகளில் தரமான கல்வி அளிக்க வேண்டுமெனறால் ஆய்வு அலுவலர்கள் கட்டமைப்பை மேம்படுத்துவது மிகவும் இன்றியமை யாததாகும். இதைக் கருத்திற்கொண்டு 1997-98ஆம் ஆண்டில் கீழ்க்குறிப் பிட்டுள்ள நான்கு புதிய வருவாய் மாவட்டத் தலைமையிடங்களில், முதன்மைக் கல்வி அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் செயல்பாடுகளைத் திறன்படுத்த, இவ்வாண்டு 8 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கு அறிவியல் ஆய்வுக்கூடக் கருவிகள், நூலகப் புத்தகங்கள், விளையாட்டுக் கருவிகள் ஆகியன ரூ.4 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளது. கல்வித்தரத்தை மேம்படுத்துதல் சார்ந்து ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இவ்வாண்டு ரூ.1.10 இலட்சம் செலவில் பணியிடைப் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முழு எழுத்தறிவுத் திட்டம் மற்றும் அறிவொளி தொடர்கல்வித் திட்டத்தின் தொடர்ச்சியாகத் தொடர் கல்வி மையங்கள் தமிழகத்தில் 9 மாவட்டங்களில் செயல்பட இருக்கின்றன. அறிவொளி மற்றும் தொடர்கல்வி இயக்கங்களின் மூலம் எழுத்தறிவு பெற்றவர்கள் தொடர்ந்து கற்றதை நிலை நிறுத்திக்கொள்ள, கிராம நூலகங்கள், மூலம் சிறு சிறு நூல்கள் வார, மாத இதழ்கள், செய்தித்தாள்கள் ஆகியவற்றைப் படித்துப் பயன்பெற உதவும் திட்டமாகச் செயல்பட உள்ளது.

மாவட்டத்திலுள்ள 8 முதல் 10 தொடர் கல்வி மையங்களுக்கு ஒரு ஒருங்கிணைப்பாளர் மையம் செயல்பட இருக்கிறது. அதற்குப் பொறுப்பாளராக ஒரு தொடர்பாளர் இருப்பார். இப்பொறுப்பை ஊராட்சியில் நியமிக்கப்பட்ட மக்கள் நலப்பணியாளர் கவனிப்பார். இம்மையங்கள் மூலம் அமையும் கிராம நூலகங்கள் நன்கு செயல்பட அனைத்து நடவடிக்கைகளையும் மேற் கொள்வது இவரது பொறுப்பாகும். இத்திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுக்கான செலவினத்தை மைய அரசு முழுமையாக ஏற்றுக்கொள்ளும், பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு மாநில அரசும், மத்திய அரசும் செலவினத்தை 50:50 என்ற பங்கீடு முறையில் ஏற்றுக்கொள்ளும். இதற்குப்பிறகு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஆகிய அமைப்புகளிடம் நிரந்தரமாகச் செயல் படத்தக்க வகையில் ஒப்படைக் கப்படும். இத்திட்டம் படிப்படியாக மற்ற மாவட்டங்களில் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## திறந்தவெளிப் பள்ளித் திட்டம்

திறந்தவெளிப் பள்ளித் திட்டம், அனைவருக்கும் தொடர்கல்வி என்ற இலக்கினை அடைய வழிவகுக்கின்றது. இத்திட்டம் டிசம்பர் 1997 முதல் செயல்பட்டு வருகின்றது. பள்ளிப் படிப்பை இடையில் விட்டவர்களுக்கு 5ஆம் வகுப்பிற்கான தேர்ச்சியைத் திறந்த வெளிப் பள்ளித் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்றது. அறிவொளி இயக்கத்தின் மூலம் புதிதாகக் கற்றவர்களுக்கு 3ஆம் வகுப்பிற்கான தேர்ச்சியைத் திறந்த வெளிப்பள்ளி மையங்கள் மூலம் வகுக்கப்படுகின்றது. ஓராண்டு காலத்தை மூன்று பருவங்களாகப் பிரித்து ஒவ்வொரு பருவத்தின் முடிவிலும் தேர்வுகள் நடத்தப்படும். தேர்ச்சி பெற்றவர்கள் அடுத்த ஆண்டில் அடுத்த வகுப்பில் சேரத் தகுதியுடையவர்களாவர். புதுக் கோட்டை, இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்களிலும் புதிதாகக் கற்றவர் களுக்கான திறந்த வெளிப்பள்ளிகள் மாவட்டத்திற்கு 20 மையங்கள் வீதம் 40 மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. பள்ளிப் படிப்பை இடையில் விட்டவர்களுக்குப் பயிற்சி அளிக்க கடலூர், விழுப்புரம், திருவண்ணாம லை, தருமபுரி ஆகிய நான்கு மாவட்டத்திலும் 15 மையங்கள் வீதம் 60 மையங்கள் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 2,700 பேர் பயன் பெறுவார்கள்.

கல்வி மான்யக் கோரிக்கை 17 என்ற தலைப்பின் கீழ் மொத்த செலவினத் தொகை ரூ.3601.07 கோடியாகும். இதில் உயர்கல்வித் துறைக்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ.464.31 கோடியாகும். இத்தொகை மொத்த செலவினத்தில் 12.89 விழுக்காடாகும்.

## புதிய ஒற்றைச் சாளரமுறை அறிமுகம்

தமிழ்நாட்டில் பொறியியல் கல்லூரி களில் மாணவர்களைச் சேர்ப்பதற்குப்





## தமிழகத்தில் இசைக் கல்லூரி

தமிழ்நாட்டில், 29 மாவட்டங்களிலும் இசைப்பள்ளிகள் துவக்கப்படும்; சென்னை, கோவை, மதுரை ஆகிய ஊர்களில் ஏற்கெனவே இசைக் கல்லூரிகள் உள்ளன; திருவையாறில் துவக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு எல்லா மாவட்டங்களிலும் இசைக் கல்லூரிகள் திறக்கப்பட்டபின், இசைப் பல்கலைக்கழகம் பற்றிச் சிந்திக்கப்படும் என்று **மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. மு. தமிழ்க்குடிமகன்** அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

புதிய ஒற்றைச் சாளரமுறை நடப்பாண்டிலிருந்து அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இதனை மாணவர்களும், பெற்றோர்களும், பொதுமக்களும் நன்கு வரவேற்றுப் பாராட்டியுள்ளனர்.

இதன்படி தகுதியின் அடிப் படையிலும் அவர்கள் தெரிவிக்கும் அடிப்படையிலும்' அவர்கள் சேர்ந்து பயில விரும்பும் கல்லூரிகளில் சேர்ந்துகொள்ள அனுமதி வழங்கப் படுவதுடன் முதலாண்டிலேயே அவர் களுக்கான பாடப்பிரிவுகளும் ஒதுக்கப் படுகின்றன.

சுயநிதி பொறியியற் கல்லூரிகள் இரண்டாம் ஆண்டு தொடக்கத்தில் பாடப்பிரிவு ஒதுக்குவதை வணிகமாக்கியிருந்த இந்தப் புதிய முறை ஒருமுடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. 'ஒற்றைச் சாளரமுறை' வருமாண்டிலிருந்து தொழில்நுட்பப் பயிலகங்களிலும் அறிமுகப்படுத்தப் படும்.

## பகுதிநேர முதுகலைப் பாட வகுப்பு

சென்னை பல்கலைக் கழகத்தில் அரசியல் மற்றும் பொது மேலாண்மைத் துறையில் தமிழ் வழியில் பொது நிர்வாகம் என்ற பகுதி நேர முதுகலை பாட வகுப்பினைத் துவக்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள அதிவேக முறைக்கான **(National Centre for Ultra Fast Process)** தேசிய மையத்தில் விடுதி மற்றும் ஆய்வக வசதிகள் ஏற்படுத்துவதற்காக அரசு ரூ.80 இலட்சம் அளித்துள்ளது.

## பெரியாரியல் மையம்

திருச்சி பாரதிதாசன் பல்க்லைக் கழகத்தில் **(Periyar Research Centre)** பெரியாரியல் மையம் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட உள்ளது. அம்மையத்திற்கான ஓர் பேராசிரியர் மற்றும் இரண்டு ஆராய்ச்சியாளர்கள் பதவிகளுக்கு அனுமதி அளிக்கப்பட உள்ளது. அம்மையத்தின் நூலகத்திற்காக ரூபாய் ஒரு லட்சம் வழங்கப்படவுள்ளது.

## கணிப்பொறி பாட வகுப்பு

அனைத்து அரசு கல்லூரிகளிலும் இளம் அறிவியல் கணிப்பொறி பாடத்தினை ஒரு பாட வகுப்பாகத் துவக்குவதற்குத் திட்டமிட்டு, படிப் படியாகச் செயல்படுத்தப்பட உள்ளது. தற்சமயம் 25 அரசு கல்லூரிகளில் இளம் அறிவியல் கணிப்பொறி பாடத்திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 1998 - 99 ஆம் ஆண்டு கூடுதலாக 10 கல்லூரிகளில் இளம் அறிவியல் கணிப்பொறி பாடவகுப்பு துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தொழிற்கல்வி பாடத்திட்டங்கள்

மாணவர்கள் நல்ல வேலை வாய்ப்பு களைப் பெறுவதற்கான வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினால் பல்கலைக்கழக மான்யக்குழு 1994-95 ஆம் ஆண்டு முதல் தொழிற் கல்வியினை முதலாம் பட்டப் படிப்புகளில் கற்பிக்கும் பாடத்திட்டத்தினைத் துவக்கியது. இதற்கான முப்பத்தாறு பாடத்திட்டங்களைப் பல்கலைக்கழக மான்யக்குழு தேர்ந்தெடுத்துள்ளது. இதுவரை அந்தந்தப் பகுதிகளின் தேவையைக் கருத்திற்கொண்டு தமிழகத்தில் 41 கல்லூரிகளில் பலவிதத் தொழிற்கல்வி பாடத்திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 4 அரசு கல்லூரிகளாகும்.

## கல்லூரிகளுக்குத் தன்னாட்சி

கல்லூரிகளுக்குத் தன்னாட்சி வழங்குவதில் தமிழகம் முன்னோடி யாகத் திகழ்கிறது. தற்சமயம் நான்கு அரசு கல்லூரிகளை உள்ளடக்கி, 38 கல்லூரிகளுக்குத் தன்னாட்சித் தகுதி வழங்கப்பட்டுள்ளது. 1978-79 முதல் தமிழகத்தில் தன்னாட்சிக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. பல்கலைக் கழக மான்யக்குழு தன்னாட்சிக் கல்லூரிகளின் தரத்தை உயர்த்து வதற்குத் தனி நிதி உதவி அளிக்கிறது. தேசியக் கல்விக் கொள்கையிலும் தன்னாட்சி வழங்கும் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. 1997-98 ஆம் கல்வியாண்டில் ஐந்து அரசுக் கலைக்கல்லூரிகளுக்கும், ஆறு உதவிபெறும் கல்லூரிகளுக்கும் தன்னாட்சி வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரிகளில் தமிழ் வாயிலாகப் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டொன் றுக்கு ரூ.400 வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. 1997-98ல் இத்திட்டத்தின் கீழ் 24,298 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.97 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் அதிக அளவில் தமிழ்வழிப் பாடப்பிரிவு நடத்திடக் கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.

பயிற்றுக் கட்டணம் தொடர்பாகச் சுயநிதி மற்றும் தனியார் கல்லூரிக ளின் நிர்வாகங்களின் கருத்தினைக் கேட்பதற்காக, மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆளுடையபிள்ளை அவர்களைத் தலைவராகக்கொண்டு மாநிலக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களில் தனது அறிக்கையைத் தருமாறு இக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பி.எட். பாடவகுப்புகள் மற்றும் கல்லூரிகள் துவங்குவதற்கான அனுமதியை 1997-98 ஆம் ஆண்டு முதல் தடை செய்யலாம் என அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் தடை 1998-99 ஆம் ஆண்டுக்கும் நடை முறையிலிருக்கும்.

கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளர் நியமனத்திற்குப் பார்வையற்ற நபர் களுக்குச் செய்யப்பட்ட பணியிடங்கள் குறிப்பிட்ட அந்த வருடத்தில் நிறைவு செய்யப்படவில்லை. எனில், அதனை அதற்கடுத்த வருடத்தில் நிரப்புமாறு ஆசிரியர் தேர்வு வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்குத் தேர்வுக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப் பட்டுள்ளது. சிவில் சர்வீஸ் பணிக்குத் தேர்வு எழுதும் பார்வையற்ற மாணவர்களுக்கு முன் பயிற்சித் தேர்வு மையங்களின் மூலம் பயிற்சி அளிக்கப்படும்.

## 15 பொறியற் கல்லூரி துவக்க அனுமதி

மனிதவள மேம்பாட்டுத் துறையின் கீழ் இயங்கிவரும் ஒரு பகுதியான தொழில்நுட்பக் கல்வியானது. மாணவர்களின் திறமையை

உயர்த்துவதிலும் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்குவதிலும் முக்கியமான பங்களிக்கிறது. இந்நிலையினை நன்குணர்ந்த தமிழக அரசு, தொழில் நுட்பக்கல்வி மேம்பாட்டிற்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கிறது. 1997 - 98 ஆம் ஆண்டில் அனைத்திந்தியத் தொழில்நுட்பக் கல்விக்குழு 15 புதிய பொறியியற் கல்லூரிகள் மற்றும் 13 தொழில் நுட்பப் பயிலகங்களைத் துவக்க அனுமதியளித்துள்ளது. அவைகளை 1998-99 ஆம் ஆண்டு முதல் சுயநிதி அடிப்படையில் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளன.

### ஆபரணச் செயல் முறை பாடப்பிரிவு

மும்பையில் இயங்கிவரும் உலகத் தங்கக் குழுவின் ஒத்துழைப்புடன் சென்னை டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் தொழில்நுட்பப் பயிலகத்தில் ஆபரணச் செயல் முறை தொடர்பாக சில புதிய பாட வகுப்புகளைத் தொடங்க அரசு 97-98 ஆம் ஆண்டில் ஒப்புதல் வழங்கியுள்ளது. அவை தங்க நகை செய்தல், கல் பதித்தல், உற்பத்தி நிர்வாகம், சுத்திகரிப்புச் செய்தல், மெருகேற்றுதல் மற்றும் தரக்கட்டுப்பாடு என்பது குறித்த பாடங்களாகும். வேலைவாய்ப்பினை பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதால் இப்பாட வகுப்பில் சேர மாணவர்களிடையே அதிக ஆர்வம் உள்ளது.

அரசுப் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல தொழில் நுட்பப் பயிலகங்களில் உள்ள ஆசிரியர் பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்டுள்ளன. ஆரம்ப நிலையில் உள்ள விரிவுரையாளர் பணியிடங்களை 1998 - 99 ஆம் ஆண்டில் தேர்வு வாரியம் மூலம் நிரப்புவதற்குத் தேர்வுவாரியம் மூலம் நிரப்புவதற்குத் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்துடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கான முன்னர், எஞ்சிய காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கும் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.



தமிழ்நாட்டிலுள்ள சுயநிதி பொறியியற் கல்லூரிகள், தொழில் நுட்பப் பயிலகங்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், பல் மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றில் போதுமான அடிப்படை வசதிகள், உள் கட்டமைப்பு, நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் கொண்ட போதுமான ஆசிரியர்கள் உள்ளனரா மற்றும் அக்கல்வி நிறுவனங்கள் போதுமான நிதி வசதி கொண்டுள்ளதா என்பது போன்ற விவரங்களை ஆராய்ந்தறிவதற்காக 1996 ஆகஸ்ட் திங்களில் அரசு டாக்டர் அனந்தகிருஷ்ணன் தலைமையில் ஒரு உயர் நிலைக்குழு அமைத்தது. அக்குழு தனது முடிவான அறிக்கையை அரசிடம் வழங்கியுள்ளது. அவ்வறிக்கையில் கண்ட அனைத்து முக்கியப் பரிந்துரைகளின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆண்டாண்டு காலமாகக் கல்வித்துறை வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் கணிசமான அளவிற்கு அதிகரித்து வந்த போதிலும், உயர் கல்வித்துறையில் புதிய பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், கலை மற்றும் அறிவியற் கல்லூரிகள் தொடங்குவதற்குத் தேவை அதிகரித்துள்ள போதிலும், அரசின் நிதி நிலை காரணமாக அரசு மேற்கண்ட கல்லூரிகளைத் தொடங்க இயலாத சூழ்நிலை உள்ளதால், சுயநிதி அடிப்படையில் பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்க முன்வரும் தனியார் நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய தனியார் சுயநிதி நிறுவனங்கள், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக தொடங்கப்பட்டுள்ளதால், ஊரகப் பகுதி மக்களும் எளிதில் உயர்கல்வி பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்நிறுவனங்களால் ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பும் கிடைத்துள்ளது. தொழில் நுட்பக் கல்வித் துறையில் தனியார் சுயநிதி நிறுவனங்கள் தொடங்கப்பட்டு, தற்போது முழுத்தேவையும் பூர்த்தி செய்யப்படும் உச்சநிலை அடையப்பட்டுள்ளது.

### அறிவியல் நகரம்

அறிவியல் நகரம் 2000 என்ற நிறுவனத்தைக் கம்பெனிகளின் சட்டத்தின் கீழ், கீழ்க்காணும் நோக்கங்களுடன் தோற்றுவிப்பதற்குத் தமிழக அரசு கருதியுள்ளது.

அ) பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காக நிதி ஆதாரங்களைத் தோற்றுவித்தல்.

ஆ) தொலை உணர்வு, சுற்றுச்சூழல் ஆராய்ச்சி, மருத்துவத் தொழில் நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி நடத்துவதற்கு ஏற்ற வாய்ப்பினை ஏற்படுத்துதல்.

இ) அறிவியல் நகரத்தின் ஆய்வுக்கூடங்களில் கண்டுபிடிப்புகளை வணிகத்துறைப் பயன்பாட்டுக்கு அளித்தல்.

ஈ) தகுதியும் திறமையும் வாய்ந்த இளம் விஞ்ஞானிகளை ஊக்குவித்தல், இளங்கலை, முதுகலைப் பட்டதாரிகள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், அறிவியல் தொழில்நுட்பவியல், பொறியியல் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வோர் இவ்வறிவியல் நிறுவனத்தால் நேரடியாகப் பயனடைவார்கள்.

- இவ்வாறு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் சட்டப்பேரவையில் வைத்த கல்வி மானியக்கோரிக்கையின்போது அறிவித்தார்.

★ ★ ★



# பாவேந்தர் நோக்கில் பாரதி...



புதுநெறி காண, கொலை மலிந்த அந்நாளில், கொல்லா நோன்பு நின்று நிலைபெற வேண்டி, நெடுந்தவம் புரிந்த நம் தாயகத்தில், சமண மதம் தோன்றியதுபோல், முத்தியோ சிலரின் சொத்தென இருக்கையில், இத்தமிழ் நாடு அருந்தவப் பயனாய், இராமானுசர், இராமலிங்க அடிகள் ஆகிய பெரியார்களை ஈன்றது போல், ஜார் மன்னனின் கொடுமையைத் தாங்காது, உருசிய நாடு ஏருற லெனினை ஈன்றது போல், 'செல்வர் சிலரின் நல்வாழ்வுக்கே எல்லா மக்களும்' என்ற பிரான்சு நாட்டில், 'குடிகள் குடிகளுக்காக' எனக் கவிதைகள் பல குவிக்க, விக்டர் யூகோ எனும் கவிஞன் தோன்றியது போல், தமிழரின் உயிர்நிகர் தமிழ், நிலை தாழ்ந்ததால், தமிழகம், தமிழின் மேன்மைக்கு, உயர்வு அளிக்கும் தலைவனை, எண்ணித் தவங்கிடக்கும் காலத்தில், இலகு பாரதிப் புலவன் தோன்றினான். எப்படிப்பட்ட புலவன் பாரதி ?

*"பைந்தமிழ்த் தேர்ப் பாகன் ! அவனொரு*
*செந்தமிழ்த் தேனீ ! சிந்துக்குத் தந்தை*
*குவிக்கும் கவிதைக் குயில் ! இந்நாட்டினைக்*
*கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு !*
*நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா !*
*காடு கமழும் கற்பூரச் சொற்கோ !*
*கற்பனை ஊற்றாம் கதையின் புதையல் !*
*திறம்பாட வந்த மறவன் ! புதிய*
*அறம்பாட வந்த அறிஞன் ! நாட்டில்*
*படரும் சாதிப் படைக்கு மருந்து !*
*மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன் !*
*அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன் !*

- என்று பாரதியின் பண்பு நலனைப் பாங்குறப் புகழ்வார் பாவேந்தர். மகாகவியின், கவின் கவிதைகள் யாவும் சொற் புதிது; சுவை புதிது; வளம் புதிது; சோதிமிக்க நவ கவிதைகள்; எந்நாளும் அழியாத மாகவிதைகள்; இவர்தம் கவிதைகள், இந்தியத் திருநாட்டின் விடுதலையை வேண்டின; நாட்டு மக்களின் மனத்தில் விடுதலை வேட்கையை விதைத்தன; தமிழ் உணர்வைத் தமிழரிடையே தட்டி எழுப்பின; ஆன்மீகச் சிந்தனையை அகத்தில் வளர்த்தன; பெண் விடுதலையைப்



## சாதி எதிர்ப்புக் கொள்கை

### டாக்டர் மா. அண்ணாதுரை

போற்றின; சீர்திருத்தச் சிந்தனையைச் சிந்தையில் தோற்றுவித்தன. சாதி சமயத்தைச் சாடின.

"நீதிக்குத் தாய் - நாலு
சாதிக்குத் தாய்.."

"கண்ணன் வழிப்பிறந்த சாதி"

"சாதிகள் நால்வகையாய்த் - தொழில்
தன்னிற் பிரித்துரைத்தாள்"

- என்றும் தொடக்க காலத்தில், ஆன்மீகத்தையும், சாதியையும் போற்றிப் பாடிய பாவேந்தரின் பாட்டு நெறியை மாற்றின.

**"பாரதியாருடைய தொடர்பு, என்னுடைய பாநெறியில் ஒரு புதிய போக்கை ஏற்படுத்தியது. அவர் கண்ணெதிரில் காணப்படும் மக்களின் தேவைகளைப் பாடினார். அது என்னுடைய மனத்தைக் கவர்ந்தது. பிறகே, என்னுடைய பாக்கள் அரசியல், சமுதாயம், மொழி ஆகிய துறைகளில் உள்ள குறைநிறைகளை, எடுத்துக்காட்டத் தலைப்பட்டன. இவ்வகையில் பாரதியாருக்கு, யான் கடமைப்பட்டவன்".**

- என்று பாரதி, தமக்குக் காட்டிய பாதையை நன்றியுடன் நவில்கின்றார். மேலும், பாரதியின் பாநெறியில் தம்மை மிகவும் ஈர்த்ததும், கவர்ந்ததும், இலட்சிய நோக்கை உருவாக்கியதும், அவர்தம் இருநெறிகளே என்பதைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் பாவேந்தர்.

*"சாதி ஒழித்திடல் ஒன்று ! - நல்ல*
*தமிழ் வளர்த்தல் மற்றொன்று !*
*பாதியை நாடு மறந்தால் - மற்ற*
*பாதி துலங்குவ தில்லை !*
*சாதி களைந்திட்ட ஏரி ! - நல்ல*
*தண்டமிழ் நீரினை ஏற்கும் !*
*சாதிப் பிணிப்பற்ற தோளே ! - நல்ல*



*தண்டமிழ் வாளினைத் தூக் கும் !*
*என்றுரைப் பார்என்னி டத்தில் - அந்த*
*இன்ப உரைகளென் காதில்*
*இன்றும் மறைந்திட வில்லை ! - நான்*
*இன்றும் இருப்பத னாலே !"....*

- மேலும் "அரசியல் கொடுமையைவிடச் சமூகக் கொடுமையே மிகப் பயங்கரமானது. எனவே, சாதிக் கொடுமையை எதிர்த்துப் போராடும் சமூகச் சீர்திருத்தவாதியே அரசியல்வாதியைவிட அதிக தைரியசாலி."

- என்று டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் குறிப்பிடுகின்றார். பாரதியும் பாரதிதாசனும் சமூகக் கொடுமைகளை எதிர்த்துப் போராடிய கவிஞர்களாவர். பார்ப்பனக் குலத்தில் பிறந்த பாரதி, தம் இனத்தார் எதிர்த்த போதும், அஞ்சாது, 'சமுதாயத்தின் சகல சாதிக் கொடுமைகளைக் கடுமையாக எதிர்த்து, தம் வாழ்க்கையையே அதற்கு அர்ப்பணித்த பாரதி' - தாம் வாழ்ந்த காலச் சூழலில், சாதியும், சமயமும், மூடப் பழக்க வழக்கங்களும், தீண்டாமையும் போன்ற சமூகக் கொடுமைகள் மண்டிக் கிடந்த நிலையைக் கண்டார்; மனம் நொந்தார்; வருந்தினார்!

*"விடுதலை ! விடுதலை ! விடுதலை !*
*பறைய ருக்கும் இங்கு தீயர்*
*புலைய ருக்கும் விடுதலை !*
*பரவ ரோடு குறவ ருக்கும்*
*மறவ ருக்கும் விடுதலை !"*

வேண்டினார்; இந்தியத் திருநாட்டில் ஒற்றுமை வளரவும், மக்களிடையே மனிதநேயம் மலரவும், 'சாதி' எனும் சாக்காட்டில் இருந்து, சமுதாயம் மீள வேண்டும் என்றார்.

*"சாதிப் பிரிவுகள் சொல்லி - அதில்*
*தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்"*

*"சாதிக் கொடுமைகள் வேண்டாம் ! - அன்பு*
*தன்னிற் செழித்திடும் வையம்"*

*"சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே*
*தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்த மென்போம்"*

*"பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே -*
*வெள்ளைப் பரங்கியைத் துரையென்ற காலமும்*
*போச்சே !"*

- என்று பாடினார் பாரதியார். இத்தகைய பாடல்கள் பாவேந்தரின் உள்ளத்தில் ஆழப் பதிந்தன. இதன் காரணமாகவே, பின்னாளில் இவர்தம் பெருமைகளை - தமிழுக்கு இவர் ஆற்றிய அரிய தொண்டுகளை - சமுதாயத் தொண்டுகளைப் பல எதிர்ப்புகளுக் கிடையில், 'தமிழும் பாரதியும்' - 'மகாகவி பாரதியார்' - 'பாரதியாரைப் பற்றி பாரதிதாசன்' - போன்ற தலைப்புகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். 'பாரதியார் உலகக் கவியல்லர்' என்றும், 'அவர் பாடல்களில் வெறுக்கத் தக்கன உள்ளன' என்றும் கல்கி கிருஷ்ணமூர்த்தி அந்நாளில் 'ஆனந்த விகடன்' இதழில் எழுதிய பொழுது, பாவேந்தர், வ.ரா. போன்றோர்களால் மறுத்துரைக்கப்பட்டன. 'பாரதியார் உலகக் கவி' - என்று ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் எனும் இதழில் பாவேந்தர் வெளியிட்டார். மேலும், பாரதியிடம் தாம் கண்ட இன்றியமையாத சமுதாயக் கொள்கையைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

**"பாரதியாருடைய முக்கியக் கொள்கை ஜாதி ஒழிப்பு ! அதுதான் அவரிடம் இருந்த சிறந்த கொள்கை; குறிப்பிட்டுப் பேச வேண்டிய கொள்கை ! பாரதியார் பார்ப்பனர்; தெரிந்தும் சொன்னார் - 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று, தமிழில் - நல்ல எளிய தமிழில் எல்லோருக்கும் புரியும்படி இதைச் சொன்னார். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சந்தோஷம்கூட !"**

பாரதியின் சாதி ஒழிப்புக் கொள்கையிலும், தமிழ் வளர்ச்சிக் கொள்கையிலும் மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் கொண்ட பாவேந்தர், பின்னாளில் புனைபெயர் ஒன்றினைத் தேர்வு செய்ய எண்ணியபோது, 'பாரதியார்' பெயரே அவர் உள்ளத்தில் தோன்றியது. 'பாரதிதாசன்' என்று தம் பெயரை மாற்றிக் கொண்டார். ஆனால், திராவிட இயக்கத்தில், 'சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி'யாக இருந்த காலத்தில், கருத்து வேறுபாட்டின் காரணமாக, இயக்கத்தில் சிலர் எதிர்ப்புக் குரல் கொடுத்தனர். பாவேந்தரிடம் 'பாரதி ஒரு பார்ப்பனக் கவிஞர்'. மேலும், தாசன் என்பது அடிமை என்று பொருள்படும். எனவே, தாங்கள் 'பாரதிதாசன்' என்று புனைபெயர் வைத்துக் கொள்ளலாமா ? என்று வினவினர்.

பாவேந்தரின் கண்கள் தீப்பொறியைக் கக்கின; பாரதியையும் தம்மையும் இகழ்ந்ததாகவே கருதினார். பல இலக்கிய - அரசியல் சொற்பொழிவுகளில் பதிலுரை தந்தார். 'பாவேந்தர் நோக்கில் பாரதி' எவ்வாறு உயர்ந்து நின்றார் என்பதைப் பின்வரும் அவர்தம் கூற்றே புலப்படுத்துகிறது. "நான் அப்பொழுது பாண்டிச்சேரியில் வாத்தியார் வேலையில் இருந்தேன். அப்போதே சில பத்திரிகைகளில் கட்டுரைகளும் பாட்டுகளும் எழுதி அனுப்புவது வழக்கம். அப்போது நான் உத்தியோகத்தில் இருந்து கொண்டு இக்காரியம் செய்வது உத்தியோகத்திற்குத் தொல்லை தரும்; யாராவது புகார் செய்வார்கள் என்று கருதி, ஓர் புனைபெயர் வைத்துக் கொள்ள விரும்பினேன். அப்போது என் கண்முன்னே,

*'சூத்திரனுக்கு ஒரு நீதி - தண்டச்*
*சோறுண்ணும் பார்ப்புக்கு வேறு ஒரு நீதி'*

- என்று கேட்ட பாரதியார், பார்ப்பனனாய் இருந்தும் பயப்படாது, தீமை வருமென்று தெரிந்திருந்தும் திகைக்காது, தமிழில் புரியும்படி சொல்லிய பாரதியார்தான் நின்றார். உடனே, பாரதிதாசன் என்று புனைபெயர் வைத்துக்கொண்டேன். சாதிக் கொள்கையை நன்றாக - உண்மையாக எதிர்த்தவர் பாரதியார்தாம்! அவருக்கு முன் அவ்வாறு சாதிக் கொள்கையை எதிர்த்தவரை நான் கண்டதில்லை. பாரதி (சாதியை) எதிர்த்துப் பணிபுரியத் தொடங்கிய பன்னாட்களுக்குப் பின்னரே பெரியார் இயக்கம் தோன்றியது. பாரதியார் இறந்த பின், சாதியை எதிர்த்துச் சீர்திருத்தங்களை ஆதரித்த பெரியாரை ஆதரிக்கத் தொடங்கினேன்".

பாரதிக்குப் பின், 1928-ஆம் ஆண்டு முதல், பெரியாரின் பகுத்தறிவு இயக்கத்தில், சுயமரியாதை இயக்கத்தில் இணைத்துக் கொண்ட பாவேந்தர், அன்று முதல், பாரதி - பெரியார் ஆகிய இருவரின் சாதி ஒழிப்புக் கொள்கையில் உறுதியாகத் திகழ்ந்துள்ளார். சாதி, சமயம், கடவுள், பெண் விடுதலை, பெண் சமத்துவம், குழந்தை மணம், விதவை மறுமணம், கலப்புமணம், குடும்பக் கட்டுப்பாடு, மதுவிலக்கு, தீண்டாமை, அரசியல், சுயமரியாதை, பகுத்தறிவு, பொதுவுடைமை, தொழிலாளர் முன்னேற்றம் போன்ற சமுதாயக் கூறுகளைக் காட்டிலும், சாதி ஒழிப்புக் கொள்கைக்கு முன்னுரிமையைத் தந்திருப்பது அவர்தம் படைப்புகளைப் படிப்போர் - ஆய்வோர் உணர்வர்.

*"மிக்குயர்ந்த சாதிகீழ்ச் சாதி என்னும்*
*வேற்றுமைகள் தமிழுக்கு இல்லை; தமிழர்க்கில்லை;*
*பொய்க்கூற்றே சாதினைல் ! ஆரியச் சொல் !*
*புறநஞ்சு ! பொன் விலங்கு ! பகையின் ஈட்டி !*
*கடற்குமிழி உடைந்திடுக ! சாதி வீழ்க !!*

*"இருட்டறையில் உள்ளதடா உலகம் ; சாதி*
*இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே"*

*"சாதி நோய் தவிர்க தோழனே !"*

*"சாதிக்கு ஆதரவு தருமோர் ஆட்சியினைத்*
*தீக்கிரை செய்க..."*

*"ஒழியாச் சாதி ஒழிய வேண்டும்*
*தமிழகம் அடிமை தவிர்த்தல் வேண்டும்"*

*"சாதி வலையினை அறுப்போம் - இனித்*
*தமிழர்கள் ஒற்றுமை கொள்வோம்"*

- என்றும் பாவேந்தர் சாதிக் கொடுமைகளால் தோன்றும் கேட்டினையும், சாதி ஒழிப்பிற்குரிய காரண - காரியங்களையும் கவிதைகள் - கட்டுரைகள் - காப்பியங்கள் - நாடகங்கள் - சிறுகதைகள் - புதினம் போன்ற இலக்கிய வடிவங்களின் வாயிலாக முழங்கியுள்ளார். மேலும், புதுவை முரசு, ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், குயில் (திங்கள், தினசரி, கிழமை, திங்களிருமுறை) போன்ற இதழ்களின் வாயிலாகவும், சாதி ஒழிப்பு மாநாடு, வானொலி ஆகியவற்றின் வாயிலாகவும் தமிழ்ச் சமுதாயத்திலிருந்து சாதி ஒழிய வேண்டும் என்பதைப் பாரதி வழியில் - பெரியார் வழியில் வலியுறுத்தியுள்ளார் பாவேந்தர்.

நிறைவாக, -

"வள்ளலார் வழிவந்த பாரதியார், சாதிகள் மனித குலத்துக்கு விரோதிகள். அவை சமுதாயத்திலே தோன்றும் களைகள்" என்று நினைத்துச் சாதிக் கொடுமைகளை எதிர்த்துப் போராடினார். "சாதியே கூடாது என்பது பாரதியின் கொள்கை" - பாரதி வழிவந்த பாவேந்தரும், "சாதி மதம் மனிதனுக்கு அவசியமில்லை; இருக்கக்கூடாது", "சாதி, மதம் இருப்பது கொண்டே பிழைக்கும் கூட்டத்திற்கு நான் விரோதி" என்பர். இது பாரதி உள்ளத்தின் வெளிப்பாடே ஆகும். பாரதியாரோடு பத்தாண்டுகள் நெருங்கிப் பழகிய, பாவேந்தர், யார்க்கும் அஞ்சாமல், பாரதியின் புகழ் பரப்பிய பண்பாளர்; சாதி ஒழிப்புக் கவிஞர். இவர்தம் நோக்கில், சாதி ஒழிப்புக் கொள்கையின் முன்னோடியாகத் திகழும், இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற சாதி எதிர்ப்புக் கவிஞர் பாரதியாரே ஆவார். ●



**1987 ஆம் ஆண்டு நடைபெற்ற இடஒதுக்கீட்டுப் போராட்டத்தில் உயிரிழந்த சமூகநீதிக் காவலர்கள் 13 பேருடைய குடும்பத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையின்பேரில் தலா 3 இலட்சம் ரூபாய் விதம் ரூ.39 இலட்சம் விழுப்புரத்தில், அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர்கள் திரு. க. பொன்முடி, திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், திரு.கு.பிச்சாண்டி ஆகியோர் இத்தொகையினை 19.4.98 அன்று வழங்கினார்கள். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அதுல்யமிஸ்ரா, மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. மு. ரவி ஆகியோர் உடனிருந்தனர்.**

# ★ விவசாயிகளுக்குப் பரிசளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்
# ★ விவசாயக் குடும்ப மாணவ-மாணவியர்க்கு நிதி உதவி

## குறியீட்டை விஞ்சி உணவு உற்பத்தியில் சாதனை !
## பள்ளிக்கல்வியில் வேளாண்மைப் பாடம் அறிமுகம் !

## *சட்டப் பேரவையில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அறிவிப்புகள்*

சட்டப்பேரவையில் வேளாண்மைத் துறைக்கான மான்யத்தில் பதிலளித்து மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் **திரு. வீரபாண்டி ஆறுமுகம்** ஆற்றிய உரையின் முக்கியப் பகுதிகள் வருமாறு:

★ தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் காவிரிப் படுகையில் மண்டிக் கிடந்த நெய்வேலி காட்டாமணி செடியை 2-4-டி சோடியம் உப்புக் கரைசலை தெளித்து அழிக்க முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு 1997-98ஆம் ஆண்டு ரூ.308.53 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு 4,378 ஹெக்டேர் நிலப்பரப்பில் மண்டிக்கிடந்த 'பி' முதல் 'இ' வரை உள்ள கால்வாய்களில் நெய்வேலி காட்டாமணிச் செடிகளை அழிக்க திட்டமிடப்பட்டு, சென்ற ஆண்டு 2,384 எக்டேர் மட்டுமே அழிக்க முடிந்தது.

மேட்டூர் நீர்தேக்கத்தில் இருந்து ஜூன் 12-ந் தேதி முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்ட காரணத்தினால் 4,378 எக்டேர் நிலப்பரப்பில் நெய்வேலி காட்டாமணிச் செடியை அகற்ற முடியவில்லை. நெய்வேலி காட்டாமணிச் செடியை அழிக்க 1998-99ஆம் ஆண்டில் ரூ.299.334 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

★ காவிரி டெல்டா பகுதிகளில் நிலத்தடி நீரைக் கொண்டு ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துப் பாசனம் செய்யும் விவசாயிகள் 3 (மூன்று) குதிரை திறன் கொண்ட ஆயில் இன்ஜின்கள் நீரை உறிஞ்சி வெளியே தள்ள சிரமப்படுவதால் வெளியேற்றப்படும் நீரின் அளவு குறைகிறது.

இதனைத் தவிர்க்க மானிய விலையில் வழங்கப்படும் 3 (மூன்று) குதிரைத்திறன் கொண்ட ஆயில் என்ஜின்களுக்கு பதிலாக 5 (ஐந்து) குதிரைத் திறன் கொண்ட ஆயில் என்ஜின்கள் வழங்குமாறு விவசாயிகள் வைத்த கோரிக்கையை, முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசிய பின் 27-7-96 அன்று வேளாண்மைத்துறை மானிய கோரிக்கையின் போது சிறுபாசனத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவு இணையத்தின் மூலம் வழங்கப்படும் என சட்டப்பேரவையில் தெரிவிக்கப்பட்டது.



இத்திட்டத்தில் சிறு, மிகச்சிறு, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் விவசாயிகளுக்கு முறையே 25,30 மற்றும் 50 சதவிகிதம் மானிய விலையில் வழங்கப்படும்.

இத்திட்டத்தில் 1998-99ஆம் ஆண்டில், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 62.5 விவசாயிகளுக்கு ரூ.50 இலட்சம் செலவில் 3 குதிரைத்திறன் கொண்ட ஆயில் என்ஜின்களுக்குப் பதிலாக 5 குதிரைத்திறன் கொண்ட ஆயில் இன்ஜின்களும், 5 எச்.பி.ஆயில் என்ஜின்களுக்குப் பதிலாக 7.5 குதிரைத்திறன் கொண்ட ஆயில் இன்ஜின்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் வேண்டும் என்ற கோரிக்கையும் ஏற்று 500 ஆயில் இன்ஜின்கள் ரூ.31 இலட்சம் மானியச் செலவில் விவசாயிகளுக்கு வழங்க முதலமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளார்.

★ மாணவர்களிடையே சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுப்புறத்தைப் பசுமையாக வைத்திருக்கச் செய்வது அவசியமாகும். தமிழகத்தில் உள்ள பள்ளிகளைப் பசுஞ்சோலைகளாக உருவாக்கிட ஆண்டுதோறும் மாவட்டம் ஒன்றிற்கு 25 கல்வி நிலையங்களைத் தேர்வு செய்து அவற்றிற்கு ரூ.500 மதிப்புள்ள மரக்கன்றுகள் தோட்டக்கலைத் துறையின் மூலம் இலவசமாக வழங்கப்படும்.

முதற்கட்டமாக 1998-99ஆம் நிதியாண்டில், விளைபொருட்கள் வரத்து அதிகமுள்ள 30 ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஒன்றிற்கு ரூ.0.75 இலட்சத்தில் ஒரு நிழற்குடை வீதம் ரூ.22.25 இலட்சம் செலவில் 30 நிழற்குடைகளை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இச்செலவினம் விற்பனைக் குழு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.



முதற்கட்டமாக, தொடர்ந்து தங்கள் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டுவந்து விற்பனை செய்யும் சிறு/மிகச் சிறு மற்றும் இதர விவசாயிகளில், பிரிவிற்கு ஒருவர் வீதம் குலுக்கல் முறையில் தேர்வு செய்து, ரூ.2000 மதிப்பில் குடும்பத்திற்குத் தேவையான பொருட்களைப்பரிசாக வழங்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம், பொருளாதார சாத்தியக்கூறு உள்ள 260 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.15.6 இலட்சம் செலவில் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும். இதனால் பயனடையும் விவசாயிகள் எண்ணிக்கை 780 ஆகும்.



ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வரத்தின் அளவை உயர்த்துவதற்கும், தங்கள் படிப்பைப் பாதியில் விட்டுவிடும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த விவசாயக் குடும்ப, மாணவ, மாணவியருக்கு, ஆறாம் வகுப்பு முதல் கல்லூரிப் படிப்பு வரை நிதியுதவி வழங்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 1620 பள்ளி/கல்லூரி மாணவ, மாணவியர் பயன்அடைவர். ஆண்டு ஒன்றுக்கு இத்திட்டத்திற்கு ஆகும் செலவு ரூ.20 இலட்சத்தை மாநில விளைபொருள் விற்பனை வாரியம் மேற்கொள்ளும்.

### மாவட்டந்தோறும் பசுமைக்கூடம்

தமிழ்நாட்டிலிருந்து நாட்டின் பிற பகுதிகளுக்கும், அயல்நாடுகளுக்கும், பூக்கள் ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. **அபிடா** நிதியுதவியுடன், சென்னைக்கு அருகில், பள்ளிக்கரணை கிராமத்தில், **பன்னாட்டு மலர் ஏலமையம்** ஒன்று நிறுவப்பட உள்ளது.

ஏற்றுமதிக்கான பூக்கள் சாகுபடி குறித்து தொழில் நுட்பங்களை விவசாயிகள் அறியாமல் உள்ளனர். அவர்களுக்கு தொழில்நுட்பங்களை விளக்கி, ஏற்றுமதிக்குத் தகுந்த பூக்களை அதிக அளவில் உற்பத்தி செய்ய ஊக்கப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

அதனடிப்படையில், நடப்பாண்டில் பூக்கள் அதிக அளவு உற்பத்தியாகும் காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், ஈரோடு, திருச்சி, மதுரை, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய 12 மாவட்டங்களில், மாவட்டத்திற்கு ஒன்று வீதம், தொழில்நுட்ப உத்தியுடன் கூடிய பசுமைக்கூடம் ஒன்றுக்கு ரூ.4 இலட்சம் வீதம் ரூ.48 இலட்சம் செலவில் 12 பசுமைக்கூடங்கள் அமைக்க அரசு தீர்மானித்துள்ளது. இச் செலவினம் விற்பனைக் குழு உபரி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

★ தற்போது 16 விற்பனைக் குழுக்களில், எந்த விற்பனைக் குழுக்களிலும் ஃபேக்ஸ் மற்றும் ஒயர்லெஸ் வசதி கிடையாது. கணிப்பொறி 2 விற்பனைக் குழுக்களிலும், நகல்பெருக்கிகள் 8 விற்பனைக் குழுக்களிலும் மட்டுமே உள்ளன.

நாட்டின் பிற பகுதிகளில் நிலவும் விலை விவரம், வரத்து விபரம் ஆகியவைகளை அறிய பேக்ஸ், கணிப்பொறி, ஒயர்லெஸ் கருவி மற்றும் படிப்பெருக்கி ஆகியவைகளை எல்லா விற்பனைக் குழுக்களுக்கும் வழங்குவது அவசியமாகிறது. எனவே, எஞ்சிய விற்பனைக் குழுக்களுக்கும் வேளாண்மை விற்பனை இயக்குநர் அலுவலகத்திற்கும் 1998-99ஆம் நிதியாண்டில் ரூ.47.00 இலட்சம் செலவில் மேற்படி சாதனங்களைத் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை வாரிய வளர்ச்சி நிதியிலிருந்து வாங்கி வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

### வெள்ள நிவாரணம்

★ விற்பனைக் குழு நிர்வாகத்தை மேலும் சீராகவும், சிறப்பாகவும் நடத்துவதற்கு விற்பனைக் குழு உறுப்பினர்களை நியமனம் செய்யவும், அவர்களில் ஒருவரை குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**தலைவர் கலைஞர்** அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் ஜூன் மாதத்தில் ஏற்பட்ட புயல் காற்று மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.48.17 இலட்சம் (வேளாண்மைக்கு ரூ.47.16 இலட்சம், தோட்டக்கலைக்கு ரூ.1.01 இலட்சம்) வெள்ள நிவாரணமாக வழங்கினார்.

அந்த வெள்ளத்தின்போது இறந்துவிட்ட கால்நடைகளுக்காகவும் நிவாரணம் வழங்கப்பட்டது. அதன்படி மாடு இறந்தால் ரூ.5,000-மும், கன்று இறந்தால் ரூ.3,000-மும், ஆடு இறந்தால் ரூ.1,000-மும், மேலும் முழுமையாக வீடு இழந்தவர்களுக்கு ரூ.1000-மும் பகுதியாக வீடு இழந்தவர்களுக்கு ரூ.500-ம் வழங்கப்பட்டது.

டிசம்பர் 1996-ல் ஏற்பட்ட வெள்ளச் சேதத்திற்கான நிவாரணமாக வழங்கப்பட்ட தொகை ரூ.55.40 கோடி ஆகும்.

1996-ல் தரிசு மற்றும் மானாவாரி நிலங்களை உணவு உற்பத்தி செய்யும் விளைநிலங்களாக மாற்ற டாக்டர் வி.சி.குழந்தைசாமி அவர்களின் தலைமையில் ஒரு உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது. அது தன்னுடைய அறிக்கையை அரசுக்கு அளித்து, அவ்வறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

### அரிசி உற்பத்தி

1997-ல் தமிழகத்தில் பெருவாரியான மாவட்டங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டது. அப்போது நிவாரணமாக ரூ.5.29 கோடி வழங்கப்பட்டது.

★ அரிசி உற்பத்தியைப் பொறுத்தவரை 1995-96-ல் 52.06 இலட்சம் மெ.டன்னாக இருந்தது. 1996-97-ல் 60.61 இலட்சம் மெ.டன்னாக உயர்ந்தது. 1997-98-ல் இது வரை தமிழகம் எட்டாத சாதனையை - குறிப்பாக 70 இலட்சம் மெ.டன் இலக்கு என்ற நிலையில் இதனையும் மிஞ்சி உற்பத்தி 73.56 இலட்சம் மெ.டன்னாக உயர்ந்துள்ளது.

அகில இந்திய அளவில் அவ்வப்போது கண்டுபிடிக்கப்படும் புதிய தொழில் நுட்பங்களைப் பரிமாறிக் கொள்ளவும், அங்கீகாரமற்ற பட்டதாரிகளை தடை செய்யவும், பட்டம் மற்றும் பட்டயப் படிப்பிற்கு வரன்முறைகளை வகுக்கவும், வேளாண் பட்டதாரிகள் சுயதொழில் மேற்கொள்ளவும், மருத்துவம், கால்நடை மருத்துவம், சித்த மருத்துவத்தைப் போன்று, வேளாண்மையும் ஒரு தொழில் நுட்பக் கல்வி என்ற அடிப்படையில், வேளாண்மைத் தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்டு, வேளாண்மை மன்றம் அமைப்பது இன்றியமையாதது என்று வேளாண் பட்டதாரிகள் சங்கம் மற்றும் வேளாண் உயர் அலுவலர் சங்கங்கள் பல ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்த வண்ணம் உள்ளன. இந்தக் கோரிக்கையை, இவ்வரசு பரிசீலித்து வேளாண்மை மன்றம் அமைக்க அனுமதி வழங்கும்.

வறுமையைப் போக்குவதென்பது, பசியைப் போக்குவதாகும். பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப இருக்கும் நிலத்தைக் கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்ற முனைப்போடு செயல்பட்டு வரும் வேளாண்மைத்துறை, உற்பத்தியைப் பொறுத்தவரை ஒரு எக்டேருக்கு 5 டன் நெல் என்ற இலக்கை எட்டிவிட்டது.

அதன் பயனாகச் சென்ற நிதியாண்டில் குறியீடான 70 இலட்சத்திற்கும் மேலாக, அதாவது 73.56 இலட்சம் மெ.டன் உற்பத்தி எட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதுடன், ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஒரு எக்டருக்கு 7 மெ.டன் நெல் உற்பத்தி செய்ய இத்துறை அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளும்.

* இதைப்போலவே 1997ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெய்த பெருமழையினாலும், வெள்ளத்தினாலும் மீண்டும் காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், திருவண்ணாமலை, தர்மபுரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் சில மாவட்டங்களில் விளைந்த நெற்பயிர்கள், சிறு தானியங்கள், பயறு வகைகளும், இதர பயிர்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டன. இதன்படி அதிகமாக நெற்பயிர்கள் 2,08,115 எக்டேர் பாதிக்கப்பட்டது.

நெற்பயிருக்கும், இதர பயிர்களுக்கும் 1996 டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட சேதத்திற்கு வழங்கப்பட்டது போல் ரொக்கமாக ரூ.528.843 இலட்சங்கள் வழங்கப்பட்டு 85,059 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். வெள்ள நிவாரண நடவடிக்கைகளில் விவசாயப் பெருமக்கள் கழக அரசின் கீழ் பெருமளவிற்குப் பயன் பெற்றுள்ளனர்.

### மரம் வளர்ப்புத் திட்டம்

* **மக்கள் நலம் காக்க மழை வளத்திற்கு முதலமைச்சரின் மரம் வளர்ப்புத் திட்டம்** சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக தமிழகத்தில் 27 மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 3 ஊராட்சி ஒன்றியங்கள் வீதம் 81 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது.



இத்திட்டத்தின்படி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 25 கி.மீ.தூரத்திற்கு புளி, வேம்பு போன்ற பயன்தரும் மரங்கள் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் இருமருங்கிலும் நடப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு இத்திட்டத்திற்காக ரூ.7.35 கோடி நிதி ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும் 2 புதிய மாவட்டங்களான பெரம்பலூர், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.58.8 இலட்சம் நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

1997-98ஆம் ஆண்டு பிப்ரவரி வரை ரூ.492.826 இலட்சம் செலவில் 1,615 கி.மீ. தூரத்திற்கு மரக்கன்றுகள் சாலையின் இருபுறமும் நடப்பட்டு உள்ளன. இக்கன்றுகளுக்கு நீர் ஊற்றி பாதுகாப்பதற்குக் காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1998-1999ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

### சோதனை முறை பயிர்க்காப்பீட்டுத் திட்டம்

* இயற்கைச் சீற்றத்தாலும் புயல், வெள்ளம், தீ, பூச்சிகளால் பயிர்ச்சேதம் போன்ற காரணங்களால் பயிர் விளைச்சல் பாதிக்கப்படும்போது அரசு நிவாரணம் ஒரு ஆறுதலுக்காக வழங்கப்படுகின்றதே ஒழிய விவசாயிகளின் முழுச் சேதத்தையும் வழங்க முடிவதில்லை.

பயிர்க்காப்பீட்டுத் திட்டம் கொண்டுவந்தால் இதுபோன்ற நேரங்களில் விவசாயிகளுக்குக் காப்பீட்டுத் தொகையைப் பெற வழி உள்ளது.

* தமிழ்நாட்டில் கடன்பெறாத சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளின் நலனுக்காகத் திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மத்திய அரசின் சோதனைமுறை பயிர் காப்பீட்டுத் திட்டம் 1997-98ஆம் ஆண்டு ரபி பருவம் முதல் செயல்படுத்தப்படுகிறது.

விவசாயிகளுக்குரிய காப்பீட்டுத் தொகையை 100 சதம் மானியமாக 8:2 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசால் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

### பள்ளிக்கல்வியில் வேளாண்மைப் பாடம்

* 1997-98ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இத்திட்டம் கல்வி அமைச்சர் அவர்களோடு 3-7-97 மற்றும் 16-3-98 ஆகிய நாட்களில் கூடிய கூட்டத்தில் பள்ளிக் கல்வியில் வேளாண்மையை ஒரு பாடமாக வைப்பது என்ற கொள்கை முடிவை ஏற்று, அதற்கான பாடத்திட்டத்தைத் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் தயாரிக்க அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழு தனது அறிக்கையை விரைவில் அரசுக்குச் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்மட்டக் குழுவின் அறிக்கை பெறப்பட்டவுடன் அரசு பரிசீலித்து, வரும் கல்வி ஆண்டிலேயே இத்திட்டத்தை செயல்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

### தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

* தமிழ்நாடு வேளாண்பல்கலைக்கழகம் 1971ஆம் ஆண்டு முதல்மைச்சர் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்டது.

வேளாண்பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பட்ட தன்னாட்சி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என அறிய **முதலமைச்சர் கலைஞர்** அவர்களின் அனுமதியோடு "ஒரு நபர் கமிஷன்" ஒன்றினை முதலமைச்சர் அவர்களைக் கலந்து விரைவில் நியமிக்கப்படும். 3 மாதத்திற்குள் அறிக்கை பெற்று, தேவையான சட்டம் மற்றும் விதிகளை மாற்றி அமைக்க இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

### ஊரகக் குடிநீர்

ஊரகப் பகுதிகளில் மக்கள் குடிநீருக்காக அல்லல்பட வேண்டாமெனத் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் மூலம் இதுவரை ரூ.4760.91 இலட்சம் செலவில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக் குடிதண்ணீர் வழங்கப்பட்டுள்ளது.

* வேளாண் பெருங்குடி மக்கள் தங்கள் விளைபொருட்களை விற்பனைக்குக் கொண்டுவர, வாகன வசதிக்காகச் சாலைகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. ஊரகச் சாலைகள் என்றாலே ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செய்யப்படும் சாலைகள் மட்டுமே என எண்ணிவிட வேண்டாம். தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்மூலம் இதுவரை ரூ.86.26 கோடி செலவில் 664 கி.மீ. நீளத்திற்குச் சாலைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.



இச்சாலைகள் மட்டுமின்றி, சர்க்கரைத்துறை மூலம் கரும்பு பயிரிடும் பகுதிகளில் கரும்பு உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்த கரும்பினை ஆலைகளுக்கு அனுப்பும் போது வசூலிக்கப்படும் செஸ் நிதியில் இருந்து அந்தந்த ஆலைப் பகுதிகளில் சாலை அமைத்துக் கொடுக்கப்படுகிறது.

### கரும்பு அபிவிருத்தித் திட்டம்

* இத்திட்டம் நீலகிரி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, இராமநாதபுரம் மாவட்டங்களைத் தவிர, அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய, மாநில அரசு 75:25 சதவிகிதத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

1997-98ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.196.55 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 1998-99ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும்.

### சர்க்கரைத் துறை

* திராவிட முன்னேற்றக் கழகம் 1996ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் தி.மு.க.ஆட்சி பொறுப்புக்கு வந்தால் கரும்பு விலை ஒரு டன்னுக்கு ரூ.1000 வழங்க பரிசீலிக்கும் என அறிவித்து இருந்தது.

மத்திய அரசின் சட்டபூர்வ விலையைவிட, மாநில அரசு கூடுதலாக விலை பரிந்துரை செய்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

1996-1997ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு சட்டபூர்வ குறைந்தபட்ச விலை 8.5% சர்க்கரை கட்டுமானத்திற்கு ஒரு டன்னுக்கு ரூ.459 என அறிவித்து இருந்தது. ஆனால் மாநில அரசு **தமிழக முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் அனுமதியோடு 8.5% சர்க்கரை கட்டுமானத்திற்கு டன் ஒன்றிற்கு ரூ.599 என மாநில அரசின் பரிந்துரை விலையாகவும், அதுபோல் 20 கிலோ மீட்டர் வரை உள்ள தூரத்திற்கு வண்டி வாடகையை விவசாயிகள் ஏற்க வேண்டும் என்று இருந்ததை குறைத்து 10 கி.மீட்டர் வரை உள்ள தூரத்திற்கு மட்டும் விவசாயிகள் ஏற்க வேண்டுமென்று குறைத்து **தமிழக அரசு சலுகை** வழங்கி உள்ளது.

மத்திய அரசின் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையை விட மாநில அரசின் பரிந்துரை விலை ரூ.140 அதிகமானதாகும்.

1997-98ஆம் ஆண்டிறக்கு மத்திய அரசு சட்டபூர்வ குறைந்தபட்ச விலை 8.5% சர்க்கரைக் கட்டுமானத்திற்கு ஒரு டன்னுக்கு ரூ.484.50 என அறிவித்து இருந்தது. ஆனால் மாநில அரசு பரிந்துரை விலை 8.5% சர்க்கரை கட்டுமானத்திற்கு ஒரு டன்னுக்கு ரூ.660 ஆக தமிழக அரசு உயர்த்தி வழங்கியுள்ளது.

மத்திய அரசின் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையை விட மாநில அரசின் பரிந்துரை விலை ரூ.175.50 **அதிகம் ஆகும்.**

### தோட்டக்கலை

* தமிழ்நாட்டில் பலவகைத் தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், நறுமணப் பயிர்கள் மற்றும் வணிக மலர்கள் பயிர் செய்வதற்கு உகந்த தட்பவெப்ப மற்றும் குளிர் மண்டல தட்பவெப்ப நிலைகள் தமிழகத்தில் இருக்கின்றன. தோட்டக்கலை பயிர்களின் பரப்பளவு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கத் தரமான நடவுச்செடிகள், விதைகள் மற்றும் இதர இடுபொருட்களை வழங்குவதோடு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளும் தோட்டக்கலை மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

- இவ்வாறு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் கூறியுள்ளார். ●

## சென்னையில் 15 தற்காலிக புறநகர் தீயணைப்பு நிலையங்கள்

தமிழகத்தில் கடந்த ஆண்டு தீ விபதுக்களில 187 பேர் இறந்துள்ளனர்; ரூ.73 கோடியே 28 லட்சத்து 69 ஆயிரம் மதிப்புள்ள சொத்துக்கள் சேதமடைந்தன.

கோடை காலம் தொடங்கியிருப்பதால் தீ விபத்துக்களைத் தடுக்க சென்னையில் மட்டும் 15 புறநகர் தீயணைப்பு நிலையங்கள் 'தற்காலிகமாக' அமைக்கப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் ஏப்ரல் 14ம் தேதி இந்தியாவில் கடைப்பிடிக்கப்படும் தீயணைப்புத் தொண்டு நாள், உலகத் தீயணைப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் 277 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. மொத்தம் 6500 பேர் பணிபுரிகின்றனர். சென்னையில் 12 நடமாடும் தீயணைப்பு நிலையங்கள் உள்ளன.

கடந்த ஆண்டு 13,670 தீ விபத்துக்கள் நடந்தன. வீடுகளில் 43 சதவீதத் தீ விபத்தும், தொழிற்சாலைகளில் 2.3 சதவீதத் தீ விபத்தும் மற்ற வகையில் 54 சதவீதத் தீ விபத்துக்களும் ஏற்படுகின்றன.

தீயணைப்புத் துறையினருக்குப் பயிற்சி அளிக்க தாம்பரம் அருகே ரூ.4 கோடியில் பயிற்சி அகாதெமி அமைக்கப்படுகிறது. ஆசிய அளவில் தீயணைப்பு வீரர்களுக்கு இங்கு பயிற்சி அளிக்கப்படும்.

தமிழகத்தில் 13 இடங்களில் தீயணைப்பு வீரர் குடியிருப்புகள் உள்ளன. தர்மபுரியில் ரூ.72 லட்சத்தில் 36 குடியிருப்புகள் தமிழக அரசால் கட்டப்படுகின்றன. ரூ.95 கோடியில் மேலும் 3141 குடியிருப்புகள் கட்ட, பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

தீ விபத்து மற்றும் தீத் தடுப்பு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

தீயணைப்பு வீரர்களுடன் மக்களும் சேர்ந்து பாடுபட்டால் தீயை வெகுவிரைவில் அனைத்து, சேதத்தைத் தடுக்க முடியும். இவ்வாறு தமிழ்நாடு தீயணைப்புத்துறை இயக்குநர் வீ. ஜெயபெருமாள் தெரிவித்துள்ளார்.

# தேவை சீரிய தத்துவம் சிறந்த படைப்புகள்

## தி.க.சிவசங்கரன்

"**வ**ங்க எழுத்தாளர் **மகாஸ்வேதா தேவிக்கு ஞானபீட விருது: நெல்சன் மண்டேலா வழங்கினார்"** என்னும் செய்தியைப் படித்தேன். அதையொட்டிச் சில சிந்தனைகள் எழுந்தன.

எதற்காக மகாஸ்வேதாவுக்கு இப்பரிசு ?

ஏன் அகிலனுக்குப் பிறகு - 20-25 ஆண்டுகளுக்குப் பிறகு - தமிழனுக்கு இப்பரிசு இன்னும் கிடைக்கவில்லை ?

சற்று சுயவிமர்சன ரீதியில் சிந்திப்போம்; ஆம்,நமது ஆணவம், மேட்டிமைத் தனம், குறுங்குழு வாதம் இவற்றை ஒதுக்கித் தள்ளிவிட்டுச் சிறிது யோசிப்போம்.

மகாஸ்வேதா தேவிக்கு இப்போது வயது 73; அவர் பாட்டாளி வர்க்கக் குடும்பத்தில் பிறந்தவரல்லர்; மத்தியதர வர்க்க, வங்கக் குடும்பத்தில் பிறந்தவர்; இன்னும் சொல்லப்போனால், எழுத்தாளர் குடும்பத்தில் உதித்தவர்; உயர்கல்வி பயின்றவர். சிறிது காலம் கல்வி நிலையங்களில் (பேராசிரியராக) பணியாற்றிவிட்டு, இலக்கியத்திற்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்தவர்.

இவரது 25க்கும் அதிகமான படைப்புகள், பல்வேறு இந்திய மொழிகளிலும், ஜப்பான், இத்தாலி மற்றும் பிரெஞ்சு மொழிகளிலும், மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன.

இத்தகைய சாதனைகள் இன்றைய தமிழ் எழுத்தாளர்களுக்கும் உண்டு; ஆனால், இவர்களில் எத்தனைப் பேர் மகாஸ்வேதாவைப் போல், இலக்கியப் படைப்பிலும், சொந்த வாழ்விலும் ஒளி விளக்காகத் திகழ்பவர்கள் ? தன்னலம் துறந்து, மக்கள் நலனுக்காக, அர்ப்பண உணர்வுடன் இயங்கிக்கொண்டிருப்பவர்கள் ? தமது எழுத்தை ஓர் இலக்கிய வேள்வியாக மாற்றிக் கொண்டிருப்பவர்கள் ? நாம் ஒவ்வொருவரும் சுய விமர்சனம் செய்துகொள்ள வேண்டும்...

மகாஸ்வேதாவின் படைப்புக்கள், உலகப் புகழ் பெற்றுள்ளன என்றால், அதற்குத் தகுந்த காரணம் உண்டு.

முதலாவதாக, மகாஸ்வேதாவின் சீரிய இலக்கியத் தத்துவம்; வாழ்க்கைத் தத்துவம். இது உலகு தழுவிய மனித நேயத்தையும், மனித விடுதலையையும் ஆதாரமாகக் கொண்டது.



சுரண்டல், அடக்குமுறை, ஒடுக்குமுறை, ஏற்றத் தாழ்வுகள் இன்றி, மனித குலம் விடுதலை பெற்றுக் கவுரவத்துடன், கம்பீரமாக, வளத்துடன், வாழ்வாங்கு வாழ வேண்டும்; மனித உரிமைகளுக்கான விடுதலைப் போராட்டத்தை எழுத்தாளன் உறுதியாக ஆதரிக்க வேண்டும்; இதுவே மகாஸ்வேதா தேவியின் இலக்கியக் கோட்பாடு; அவர் அயராது பின்பற்றும் வாழ்க்கை நெறி.

இந்தியாவை எடுத்துக்கொண்டால், தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர் இவர்களின் விடுதலைக்காகவும், பெண் விடுதலைக்காகவும், இவரது பேனா சொற்சித்திரங்களைத் தீட்டுகிறது; கலைப்படைப்புகளை வழங்குகிறது.

இரண்டவதாக, இலக்கியத்தில் உயர்ந்த இலட்சியங்களைப் பேசுவதுடன் நின்றுவிடாமல், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், மகளிர் ஆகியோரின் விடுதலைப் பேராட்ட இயக்கங்களுக்குத் தோள்கொடுக்கும் வீராங்கனையாகவும் இவர் விளங்குகிறார். தமது ஞானபீடப் பரிசுப் பணத்தை, இந்த இயக்கங்களின் வளர்ச்சிக்குக் காணிக்கையாகவும் வழங்கிவிட்டார்.

எனவேதான், 1996 - ஆம் ஆண்டுக்கான ஞானபீடப் பரிசு இவருக்கு. அதுவும், தென்ஆப்பிரிக்காவின் தேச விடுதலைக்காக சுமார் 27 ஆண்டுகள் தனிமைச் சிறையில் உறுதியுடன் போராடியவரும், மாவீரர், என்னும் சொல்லுக்கு இலக்கணமாகத் திகழ்பவருமான நெல்சன் மண்டேலாவின் திருக்கரங்களால் - நெஞ்சும் நிறைந்த வாழ்த்துக்களுடன் வழங்கப் பெற்ற விருது இது.

ஒரு தமிழ் எழுத்தாளனுக்கு, வருங்காலத்தில் ஞானபீட விருது கிடைக்கவேண்டும் என்பதே என் விருப்பம். ஆனால், அவன் மகாஸ்வேதா தேவியைப் போல் இலட்சியத்திலும், படைப்பாற்றலிலும், மிக உயர்ந்தவனாக, மிகச் சிறந்தவனாக இருத்தல் வேண்டும்; அத்தகைய எழுத்தாளன் நம்மிடையே உருவாகிக் கொண்டிருக்கிறான் என்றே நான் நம்புகிறேன்; முழுவீச்சுடன் அவன் வெளிப்படுவதற்கு இன்னும் பத்தாண்டுகளோ, பதினைந்து ஆண்டுகளோ ஆகலாம். இது காலத்தின் தீர்ப்புக்கு உரிய விஷயம்; எனினும் அந்தத் தனிப்பட்ட எழுத்தாளனின் தத்துவப்பார்வை, தலைசிறந்த படைப்புகள், அவை இந்திய மொழிகளிலும் உலக மொழிகளிலும் அங்கீகாரம் பெறுதல், மற்றும் நம்நாட்டின் அரசியல், பொருளாதார, சமுதாய, கலாச்சார சூழ்நிலைகள், வரலாற்றுப் போக்குகள் முதலிய அம்சங்களும் முக்கியமானவை; அடிப்படையானவை.

வேறு ஒரு கோணத்தில் பார்த்தால், மகாஸ்வேதா தேவியின் வாழ்வும் படைப்புகளும், . நமது மகாகவி பாரதியின் இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்டவை என்றும் கூறலாம்.

**சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்** என்னும் குறிக்கோள்களைச் **சமூகநீதி, சமுதாய விடுதலை** இவற்றுக் கான போராட்டத்துடன் இணைத்தவன், நமது **மகாகவி பாரதி**. அவற்றை உயிர் மூச்சாகக் கொண்டு காலத்தால் அழியாத படைப்புகளைக் கவிதையிலும், உரை நடையிலும் தந்தவன் பாரதி.

ஆகவே, மகாஸ்வேதாவை, மகாகவி பாரதியின் உலகுதழுவிய இலக்கிய வாரிசு என்று நாம் பாராட்டலாம்!

என்னைப் பொறுத்தவரையில் எனது 50 ஆண்டு இலக்கிய வாழ்க்கைக் கண்ணோட்டத்தில், என்னால் ஒன்று கூற முடியும்.

வருங்காலத் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியும், எழுத்தாளனின் மேம்பாடும் பாரதி, பாரதிதாசன், வ.ரா., புதுமைப்பித்தன் ஆகியோரின் மரபை, வரலாற்றுக் கண்ணோட்டத்துடன், இயக்க இயல் பார்வையுடன் நாம் பின்பற்றுவதிலும், இந்த மரபை மேன்மேலும் செழுமைப்படுத்துவதிலும் அடங்கியுள்ளன.

இந்தப் பாதையில் செல்லும் எழுத்தாளன் ஞானபீடப் பரிசைப் பெறலாம். பெறாமலும் போகலாம்; அது முக்கிய விஷயமல்ல.

சொல்லப்போனால், அவன் பாரதியைப் போல், எண்ணற்ற துன்பங்களை அனுபவிக்கக்கூடும், நெல்சன் மண்டேலாவைப் போல், நீண்ட நெடுங்காலம், கொடிய சிறைவாசத்தைத் தாங்க நேரிடலாம்; சிலி நாட்டுப் பெருங்கவிஞன் பாப்லோ நெரூதாவைப் போல், ஏகாதிபத்தியவாதிகளின் துப்பாகிகளுக்கு இரையாகலாம்; எனினும், தமது மக்களுக்கு மட்டுமின்றி, உலக மக்களின் விடுதலைக்காகத் தமது படைப்பாற்றலை அர்ப்பணிக்கும் கலைஞனுக்கு அழிவேயில்லை.

இன்றைய (தமிழ்) எழுத்தாளன் மகாஸ்வேதா தேவியின் நிலைக்கு உயர வேண்டுமானால், என்ன செய்யவேண்டும் ? கலை இலக்கியத் துறையில், கொள்கை அளவிலும், நடைமுறையிலும், அவன் ஒரு பஞ்சசீலக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். அவை வருமாறு :

1. தலித்தியம்
2. பெண்ணியம்
3. சுற்றுச் சூழலியம்
4. தமிழியம் (இதைத் தாய்மொழி இயம் என்றும் கூறலாம்.)
5. மார்க்சியம்

*"இன்றைய (தமிழ்) எழுத்தாளன் உயர வேண்டுமானால், என்ன செய்ய வேண்டும்? கலை இலக்கியத் துறையில், கொள்கை அளவிலும், நடைமுறையிலும், அவன் ஒரு பஞ்சசீலக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். அவை வருமாறு:*

*1. தலித்தியம்*
*2. பெண்ணியம்*
*3. சுற்றுச் சூழலியம்*
*4. தமிழியம் (இதைத் தாய்மொழி இயம் என்றும் கூறலாம்.)*
*5. மார்க்சியம்"*

இவை வறட்டுக் கோட்பாடுகளல்ல; அடிப்படை உரிமைகளை வலியுறுத்துகின்ற, ஆழமான தத்துவக் கோட்பாடுகள்; ஒவ்வொரு படைப்பாளிக்கும் கலைஞனுக்கும் இன்று தேவையான கோட்பாடுகள்.

இன்றைய வணிக இலக்கியச் சூழலிலும், நுகர்வுக் கலாச்சார மோகம் திட்டமிட்டு வளர்க்கப்படும் சூழலிலும், இந்தப் பஞ்சசீலக் கோட்பாடுகளை ஒரு படைப்பாளியால் பின்பற்ற முடியுமா ?

முடியும். நிச்சயம் முடியும் (மனம் இருப்பின், மார்க்கம் உண்டு) ஆனால், அவன் ஒரு மகாஸ்வேதாவாக இருக்க வேண்டும்; அவரைப் போன்ற விழுமிய ஆளுமையைப் பெற்றிருக்க வேண்டும்; விட்டுக்கொடுக்காத மன உறுதியையும், தெள்ளத் தெளிந்த வாழ்க்கைத் தத்துவத்தையும், தீரம் மிக்க போர்க்குணத்தையும், தன்னலம் கருதாத பண்பட்ட உள்ளத்தையும் புரட்சிகரமான இயக்கச் சார்பையும் பெற்றிருக்க வேண்டும்.

இந்திய சுதந்திரத்தின் 50ஆம் ஆண்டு பொன்விழா, வருகிற ஆகஸ்டு 15ல் நிறைவடைகிறது; கி.பி. இரண்டாயிரம் இன்னும் ஒன்றறை ஆண்டுகளில் நம்மை எதிர் நோக்குகிறது.

வருங்கால இந்தியாவின் வரலாற்றை உருவாக்குவதில் தமிழ்ப் படைப்பாளிகளுக்கும் ஒரு மகத்தான பங்கு உண்டு; இதை நாம் தட்டிக் கழிக்கமுடியாது.

வங்கம் எப்போதும்போல, இப்போதும் நமக்கு வழிகாட்டுகிறது; இந்திய இலக்கியத்தின் திசைவழியை நிர்ணயிக்கும் சக்தியாக அது மிளிர்கிறது; அதற்கு ஓர் எடுத்துக்காட்டு, மகாஸ்வேதா தேவி!

அவர் ஒரு மக்கள் கலைஞர். அவரது சீரிய தத்துவமும், சிறந்த படைப்புகளும் போற்றத்தக்கன. இன்றைய கால கட்டத்தில், அவை நமக்கு மிகவும் தேவை.

❑ ❑ ❑

# உயிர் காப்போம்!

பி. இரஜியா பேகம்

☒ நடைபாதையெல்லாம்
இன்று
கடைவீதி ஆனதாலே
மக்கள் -
நடுவீதியிலேயே
நடமாடுகிறார்கள்!

☒ இதனால் -
தடுமாறும் வாகனங்கள்
நம்மைக்
கதிகலங்க வைக்கின்றன!

☒ சாலையில் போக வேண்டியவை
மனிதனின்
சரீரத்தின் மேல்
சவாரி செய்கின்றன!

☒ எமன் தற்போது
எருமையில் வருவதாக
எனக்குத் தெரியவில்லை!
அவனும்
லாரி பஸ்களில்
அவசர அவசரமாகத்தான்
வாரிச்செல்கிறான் - நம்மை!
அத்தனை முன்னேற்றம்
அவனிடத்திலும்!



☒ இருப்பதை விட்டுவிட்டு
பறப்பதையே
பிடிக்க நினைப்போர்
சிவப்பு விளக்கைச்
சிந்திக்காமல் - தாமே
சிவப்பு நிறமாய்
சிதறிப் போகிறார்கள்!

☒ வாகனத்தில் செல்வோர்
வானத்தில் பறப்பதாய்
கனவு கண்டுகொண்டே
குறைப்பதில்லை வேகத்தை!

☒ சாலையில் நடப்பதே - பெரிய
சாதனை
ஆகிவிட்டது
தற்போது!

☒ இதனால் தான்
வாகனத்தில் போவோர்
வகையாய்க் கேட்கின்றார்
வீட்டில் சொல்லிவிட்டா
வீதியில் வருகின்றாய்!

☒ பத்திரமாய் வீட்டிற்கு
வந்து சேரும்வரை
உத்திரவாதமில்லை
உயிருக்கு!

☒ இப்படியே போனால்
இனிமேல் -
அடுத்த தெருவுக்குப்
போவதானாலும்
அனைவரிடமும்
சொல்லிவிட்டுத்தான்
அடியெடுத்து வைக்கவேண்டும்!

☒ வாழ்க்கையில்
முந்திச் செல்லாமல்
வாகனத்தை
முந்த நினைத்து,
வாழ்க்கையையே
இழந்துவிடாதீர்கள்!

☒ இடதுபக்கமே போவதால்
இடையூறு இல்லை
எவர்க்கும்;
சிக்னல் காட்டித்
திரும்புவதால்
சிக்கலில்லை
யாருக்கும்!

☑ விதிகளைக் கடைப்பிடித்து
வீதியில் நடந்து - தலை
விதி நம்மைவிட்டு
விலகிடச் செய்வோம்!

☑ மகிழ்வுடன் வாழ - நம்
மதிகொண்டு - என்றும்
விதிகளை மதித்து
விபத்தினைத் தடுப்போம்!

☑ வாழ்க்கை வாழ்வதற்கே
தவிர -
வாகனத்தில்
தலைகொடுத்துத்
தானம் செய்வதற்கல்ல
நினைவிருக்கட்டும்!



★



# படைப்பின் தனிமை

புதுமைப்பித்தன் சிறுகதைகள் பற்றிச் சில குறிப்புகள்



தத்துவம் நம்மைச் சிந்திக்க வைக்கிறது. இலக்கியமோ நம்மைப் பற்றியெரியச் செய்கிறது. புதுமைப்பித்தனின் படைப்புகளை அணுகும் எவருக்கும் இதை விளக்கிச் சொல்ல வேண்டிய தேவை இருக்காது. வாழ்வில் பிடிபடாத அதிசயத்தைப் பிரமிப்போடும் வேட்கையோடும் பார்த்து அதன் சிடுக்குகளைத் தொடர்ந்து தொடர்ந்து சென்று, அந்த சாகசத்தில் சிலிர்த்தும், குழம்பி விரியும் அதன் அர்த்தமில்லாத் தன்மையில் சலித்தும் புதுமைப்பித்தன் கூறிச் சென்ற கதைகள் அவர் ஆசைப்படாத நித்தியத்துவத்தைச் சாத்தியப்படுத்துகின்றன.

ஒளிகொண்ட சொற்கள் தனிமையில் கிடக்கும்படி சபிக்கப்பட்டுள்ளன. எதிர் காலத்திலிருந்து நிகழ்காலத்தை நோக்கி எரிகற்களாய்ப் பாயும் அவற்றைக் காணும்போது தர்க்கம் மறந்துபோகிறது. தனக்குப் பிரியமான ஒருவரைத் தவறவிட்டு ஒரு மனிதன், தான் எதிர்கொள்ளும் எல்லா முகங்களிலும் தவறவிட்ட அந்த முகத்தைத் தேடுவது போல, அதைக் கண்டு பிடித்துவிட்டதாகத் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்வது போல ஒரு நிலையை உண்டு பண்ணுகின்றன அந்தச் சொற்கள். தனிமையான, தனித்துப்போன, ஒருமைக்குணம் கொண்ட படைப்புகள்- இப்படியான ஒளிகொண்ட சொற்களின் சேர்க்கைகளேயாகும்.

படைப்பின் தனிமையென்பது, சமூக அழுத்தத்தால் ஒரு மனிதனுக்கு உருவாக்கப்படும் தனிப்பட்ட அடையாளத்தைப் போன்றதல்ல. ஒரு மனிதன், அவன் செய்வதற்கும் சொல்வதற்கும் பொறுப்பேற்க வேண்டுமென்கிற சமூக நிர்ப்பந்தத்தால் உருவாகிறது அந்த அடையாளம். சமூக நிர்ப்பந்தத்தால் உருவாக்கப்படும் இந்த அடையாளம், அடுத்து - பிறரிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டிக் கொள்ளும் இச்சையாக மாறும்போது தனிமனிதவாதமாக உருவெடுக்கிறது. ஆனால் ஒரு படைப்பின் தனிமை என்பது அப்படியானதல்ல.

படைப்பாளி அவரது படைப்பிலிருந்து இங்கே விடுவிக்கப்படுகிறார். அது அவர் அறியாமலேயே நிகழ்கிறது. தனது படைப்பு முற்றுப் பெற்றுவிட்டதா இல்லையா என்பதை அவர் உணர்வதே இல்லை. "ஒரு கலைப் படைப்பு ஒரு போதும் முற்றுப் பெறுவதில்லை" என பால் வலெரி என்ற கவிஞர் குறிப்பிட்டார். ஏனெனில், கலைஞன் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவதே இல்லை. வரையறுக்கப்பட்டதொரு வெளிக்குள் அந்தப் படைப்பு முடிந்துவிடுகின்றது. சூழல் தற்காலிகமாக

ரவிக்குமார்

ஒரு படைப்பை முடித்துவைக்கலாம். ஆனால், அங்கு விட்டதைக் கலைஞன் வேறொரு இடத்திலிருந்து தொடர்கிறான்.

ஒரு விதத்தில் படைப்புகள் என்பது புறவாழ்வுக்கெதிரான ஒரு செயல்பாடாக அமைகிறது. படைப்புக்குள் உருவாக்கப்படும் வெளி என்பது வெளியற்ற வெளியாகும். அது, யதார்த்த வெளியாகவும் இல்லாமல் கற்பித வெளியாகவுமில்லாமல் இருக்கிறது. ஒரு கண்ணாடிக்குள் பிரதிபலிக்கப்படும் பிம்பத்தினுள் தெரியும் இடத்தைப் போல இடமற்ற இடமாக இருக்கிறது அது. கண்ணாடிக்குள் நாம், இல்லாத நம்மைப் பார்க்கிறோம். இங்கே நாமும் யதார்த்தத்தில் இருக்கிறோம். கண்ணாடியும் இருக்கிறது. ஆனால், கண்ணாடிக்குள் தெரியும் பிம்பமோ இல்லாது இருக்கிறது. வெளியற்ற வெளிக்குள் தெரியும் பிம்பத்திலிருந்து யதார்த்தத்தில் நிற்கும் நம்மை நாம் நோக்குகிறோம். வெளியற்ற வெளியில் பட்டுத்தெறிக்கும் பார்வை நம்மை வடிவமைக்கிறது.

நிர்ணயிக்கமுடியாத, முடிவற்ற இந்த நிலை மனத்தின் முடிவற்ற நிலையுடன் தொடர்பு கொண்டிருக்கிறது. இப்படிச் சொல்வது கலைப் படைப்பைச் சிதிலப்பட்டதாக அர்த்தம் கொள்வதாகாது. இத்தகைய ஒருமைத் தன்மைதான் ஒரு படைப்பை மற்ற எதுவொன்றாலும் மாற்றீடு செய்ய முடியாத நிலைமையை உண்டாக்குகிறது.

யாருமே படிக்கமுடியாது, எவரும் புரிந்துகொள்ள முடியாது என்கிற அர்த்தத்தில் இந்த ஒருமைத் தன்மையை எடுத்துக்கொள்ளக் கூடாது. மாறாக, அந்தப் படைப்பு தன்னைத் திறந்து வைத்திருக்கும். அதை வாசிக்கும் ஒரு வாசகன் தானும் அப்படைப்பின் தனிமைக்குள் அமிழ்கிறான். அந்தப் படைப்பின் பலாபலன்களுக்குப் படைப்பாளியைப் போல வாசகனும் தன்னை ஒப்புக்கொள்கிறான்.

புதுமைப்பித்தன் படைப்புகள் பலவற்றிலும் இத்தகைய முற்றுப் பெறாது, நிர்ணயமற்ற தன்மை உருவாக்கும் தனிமையை நாம் உணரமுடியும். எங்கே துவங்குகின்றன, எங்கே முடிகின்றன என்பதை அனுமானிக்க முடியாத வேகத்தோடு தத்திச் செல்கின்றன அவரது சொற்கள்.

"சிற்பியின் நரகம்" முன் வைக்கும் காட்சிகள் அவை சடார் சடாரென்று மாறி விரியும்போது பின்னிச்செல்லும் தத்துவங்கள். 'சாத்தன் திடுக்கிட்டு விழிக்கிறான். என்ன பேய்க் கனவு! சீ என்று விபூதியை நெற்றியில் அணிந்து கொள்கிறான், பைலார்க்கஸின் நினைவு வருகிறது. சாத்தனின் மனம் சாந்தி பெறவில்லை.' இப்படி கதை முடிகிறது. ஆனால் அங்கிருந்த இழைகளை எடுத்து

**ஒரு படைப்பாளி தனது பூரணமான படைப்பை ஒருபோதும் படிப்பதில்லை. படைப்பு என்பது இவ்வாறாக அவன் வாழவே முடியாத ஒரு இடமாக - இடமற்ற இடமாகத் தோற்றம் தருகிறது.**

மற்றவற்றோடு பிணைத்து கதையைத் தொடரும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறான் வாசகன்.

"கலியாணி" என்கிற படைப்பும் இப்படித்தான். முடிவற்ற ஒரு முடிவை நம்மிடம் தந்துவிட்டு நகர்கிறது. அர்ச்சகருக்கு இரண்டாம் தாரமாய் வாழ்க்கைப்பட்டு விடும் கலியாணி இயற்கையில் பரிபூரண சக்தியும் சோபையும் கொந்தளிக்கும் நிலையில் உள்ளவள். ஆனால் அர்ச்சகருக்கு அது புரியவில்லை. சுந்தரசர்மா என்கின்ற ஓவியர் அங்கு வந்து சேர்கிறார். அவளது உள்ளத்து உணர்வுகளைப் புரிந்து கொள்கிறார். மனித நாற்றமே அற்ற இடத்திற்குச் சென்றுவிடுவோம் என அவளை சர்மா அழைக்கிறார். "ஐயோடி, அது முடியாது" என்கிறாள் கலியாணி. "கலியாணியின் வாழ்க்கை அலையில் ஒரு குமிழ் உடைந்து போயிற்று"- என்ற வரியோடு முடியும் அந்த படைப்பு, அடுத்து தோன்றும் குமிழ்களைப் பற்றிய கற்பனையை வாசகனிடத்தில் விட்டுவிடுகிறது.

படைப்பாளி தான் விரும்புவது போல் தனது படைப்பை முன் வைக்க விரும்புகிறான். ஆனால் அந்த முயற்சியின் இறுதியில் அவனுக்குக் கிடைப்பது வார்த்தைகளின் கூட்டம்தான். மற்றொரு படைப்பில் தனது எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ள முடியுமென அவன் நம்புகிறான். ஆனால் படைப்போ அவனை ஒதுக்கி உதாசீனப்படுத்திவிட்டுத் தன் போக்கில் சென்றுவிடுகிறது. இப்படித் தொடரும் படைப்புச்செயல் ஒரு விநோதமான முரண்பாட்டை உண்டாக்குகிறது. மரணத்தை வெல்லும் நித்தியத்துவம் பற்றிய கற்பனையில் ஆசுவாசப் படுவதற்கு விழையும் படைப்பாளி அந்தப் படைப்புச் செயலின் இறுதியில் மரணத்தையே எதிர் கொள்கிறான். முற்றுப்பெற்ற தனது படைப்பைக் காண அவன் உயிரோடு இருப்பதில்லை. இதையே வேறுவிதமாகக் கூறினால், ஒரு படைப்பாளி தனது பூரணமான படைப்பை ஒருபோதும் படிப்பதில்லை. படைப்பு என்பது இவ்வாறாக அவன் வாழவே முடியாத ஒரு இடமாக - இடமற்ற இடமாக தோற்றம் தருகிறது. இப்படித்தனது படைப்பைத் தான் வாசிக்கமுடியாத ஒரு நிலைதான் படைப்பாக்கம் உருவாக்கித்தரும் வினோத விதி. இங்கேதான் வாழமுடியாத இடமற்ற இடத்தை எழுத்தின் மூலமாக எட்ட முயற்சிக்கும் படைப்பாளிக்கு எழுதுவது தவிர வேறு மாற்றம் கிடையாது. எழுதும்போதே விலகிச் செல்லும் படைப்பு மீண்டும் அவனைத் தனிமையிலேயே கிடக்கும்படி சபிக்கிறது. இப்படியாக, தனது படைப்பாகச் செயல்பாட்டின் இறுதியில், மீண்டும் தொடக்க நிலைக்கே அவன் வந்து சேர்கிறான்.

தனது படைப்பை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாத ஒரு நிலைதான் அவனை மீண்டும் மீண்டும் எழுதத் தூண்டுகிறது. "படைப்பாளியின் நோக்கம் அவனது வாழ்க்கையோடுதான் முடிகிறது என்று சொல்வது, அவனது நோக்கத்தினூடாக நித்தியத்துவம் என்னும் பேரழிவை நோக்கி அவனது வாழ்க்கை பாய்ந்துச்செல்கிறது, என்ற உண்மையை மறைத்துவிடுகிறது" என்றார் மாரீஸ் ப்ளான்ஷொ (Maurice Blanchot).

எழுதுதல் என்கிற வினை எழுத்தாளனின் தான் என்ற சுயத்துக்கும், வார்த்தைக்கும் இடையிலான பிணைப்பைத் துண்டித்து விடுகின்றன. இதனால் எழுத்தாளன் மற்றவர்கள் பேசாத ஒரு மொழியைப் பேசவேண்டியதாகிறது. அந்த மொழி யாரையும் நோக்கியதல்ல, அது எதையும் வெளிப்படுத்திக் காட்டுவதுமில்லை. அது படைப்பாளியானவன் தன்னை, தனது அடையாளத்தைத் தொடர்ந்து அழித்துக்கொள்ளும் செயல்பாட்டின் விளை பொருளாகத் தோற்றம் கொள்வது. புதுமைப் பித்தனின் படைப்புகளை வாசிக்க மொழி பற்றிய இத்தகைய அணுகுமுறை அவசியமாகும்.

"நித்தியத்துவத்துக்கும் மரணப்பாதையின் சுழலுக்கும் மத்தியிலுள்ள விளைவுக்கோட்டின் எல்லை வெளியான இடைவெளியில் நின்று - அதாவது, ஆசையற்ற ஒரு குழந்தையின் மனநிலையில்" புதுமைப்பித்தனின் படைப்புக்களை அணுகுவது முக்கியம். மாறாக, ஒருமைத் தன்மை கொண்ட இத்தகைய படைப்புகளைத் தத்தமது அரசியல் பரிவர்த்தனைக்குள், இழுத்துப் போடச் செய்யப்படும் முயற்சிகள், பிரம்மராட்சஸ் கதையின் முடிவில் எஞ்சும் எலும்புக் கூடுகளைப் போல வெறும் கோட்பாடுகளாகவே எஞ்சிக் கிடக்கும். ★



# 1300 ஆண்டுகட்கு முற்பட்ட அரிய பொருட்கள்

நாகை மாவட்டம் பூம்புகார், இராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளம், பெரியார் மாவட்டம், கொடுமணல் ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் தொல்பொருள் ஆய்வுத்துறை அகழாய்வு செய்துவருகின்றது.

இம் மூன்று இடங்களிலிருந்தும் தமிழ்நாட்டின் பண்பாட்டு மரபுகளை அறிந்துகொள்ளும் வகையிலான விலைமதிப்பில்லாச் சான்றாதாரங்களான அரிய தொல்பொருட்கள் கிடைத்துவருகின்றன.

வழக்கம்போலவே இம்முறையும் இவ்வாறான அரிய வரலாற்றுச் சான்றுகளைத் தருவதில் முதலிடம் வகிப்பது அழகன்குளம் ஆகும்.

இங்கு யானையின் உருவம் ஒருபுறமும் மீன் சின்னம் மறுபுறமும் பொறிக்கப்பட்ட சதுரச் செப்புக் காசு கிடைத்துள்ளது. இது பாண்டியர் காலக் காசாகும். கி.மு.3 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது இக்காசு. தவிர, ஒருவகை மென்கல்லால் ஆன எடைக்கல், பல வடிவங்களில் அமைந்த விலை மதிப்பில்லாக் கல்மணிகள், சங்கு வளையல் துண்டுகள், பண்டைய தமிழ் எழுத்துக்கள் பொறித்த கருப்பு சிவப்புப் பானையோடுகள், புள்ளிவட்டம் பெற்றுள்ள பானையோடுகள் ஆகியனவும் இங்கு கிடைத்துள்ளன.

## அரிய பானையோடு

கிடைத்துள்ள அரிய மணிகளுள் மத்தளம், நெல்லிக்காய் வடிவிலான மணிகள் கண்ணைக் கவர்வன. எழுத்துப் பொறிக்கப்பட்ட பானையோடுகளுள் "தானிய தூவரைமா(ன்)" என்று பொறிக்கப்பட்டுள்ள பானையோடு குறிப்பிடத்தக்கது.



பண்டைய வரிவடிவத்தில் அமைந்துள்ள இவ்வெழுத்துக்களில் உயிர்மெய்யெழுத்தில் காணப்பெறும் படுக்கைக் கோடுகள் குற்றெழுத்துக்களைச் சுட்டுகின்றன என்று கொண்டால் மேற்கூறிய வாசகத்தைத் "தனி துவரைமான்" அதாவது "தனித்தன்மை வாய்ந்த அல்லது சிறப்பு வாய்ந்த துவரைமான்" என்று பொருள்படும். துவரைமான் என்றால் துவரையின் மகன் என்று பொருள் தருகிறது.

துவரை என்பது துவாரகையின் தமிழ் வடிவம். எனவே இம்மட்கலத்தை வைத்திருந்தவன் இறைவன் கண்ணபிரானின் பரமபக்தனாக இருந்திருத்தல் வேண்டும் என்று கூறுகிறார்கள்.

மேற்காணும் பொருட்கள் தவிர, செங்கல்லால் ஆன நீர் வடிகால் ஒன்றும் வெளிப்படுத்தப்பட்டது. இவ்விடத்தில் துறையின் துணை இயக்குநர் திரு.கு.தாமோதரன் அவர்களின் மேற்பார்வையில் திருவாளர்கள் ச.செல்வராஜ், நா.கணேசன் ஆகியோர் அகழாய்வு மேற்கொண்டுள்ளனர்.

## கொடுமணல் அகழாய்வு

அடுத்து அகழாய்வு செய்யப்படும் இரண்டு இடங்களுள் கொடுமணல், எழுத்துப் பொறிக்கப்பட்ட பானையோடுகள், குறியீடுகள் கொண்ட பானையோடுகள், எலும்பாலான அம்புமுனை ஆகிய அரிய பொருட்களையும், பூம்புகார், மிக அழகிய சுடுமண் பொம்மைகளையும், விலை மதிப்பில்லாக் கல்மணிகளையும் தந்துள்ளன.

கொடுமணலில் கிடைத்துள்ள பானையோடுகளில் உள்ள எழுத்துகளில் வரிவடிவம் ஆந்திர மாநிலம் பட்டிப்புரோலுவில் கிடைத்த கி.மு.2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டோடு ஒத்துள்ளதைப் பார்க்கையில், தமிழகத்தில் கிடைக்கும் பண்டைத் தமிழ்க் கல்வெட்டுகளை மேலும் ஆழ்ந்த ஆய்வு செய்ய வேண்டுமென்று எண்ணத் தோன்றுகிறது.

இவை தவிர, கொடுமணல் அகழாய்வுக் குழி ஒன்றில் சுடுமண் குழாய்களால் அமைக்கப்பெற்ற குடிநீர்க் கால்வாய் அமைக்கப்பட்டிருப்பதும் கண்டறியப் பட்டுள்ளது.

## கண்டெடுத்த தலை

பூம்புகாரில் கிடைத்துள்ள சுடுமண் பொருட்களுள் ஓர் உருவத்தின் தலைப்பகுதி தனிச்சிறப்புடையது; ஆம், தலைப்பகுதி மட்டுமே கிடைத்திருக்கிறது. எனினும், அதன் முழுமையான உருவம் எவ்வளவு எழில் மிகுந்ததாக இருந்திருக்கக்கூடும் என்பதை அத்தலைப் பகுதியைக் கொண்டே உய்த்துணர முடிகிறது.

இவ்வுருவின் முகம் குழந்தையைத் தேற்றும் கனிவான தாயின் முகம் போலக் காணப்படுகிறது. இதழில் மென்னகை, கவர்ந்திழுக்கும் காந்தக் கண்கள், பிற்காலப் பல்லவர் அல்லது முற்காலச் சோழர் கலை மரபினுக்கே உரிய மூக்கு மற்றும் உருவத்தின் முகப்பகுதி முழுவதுமே அமைதி தவழும் வகையில் அமைந்துள்ளது.

மேலும் இங்கு கிடைத்துள்ள காளை, யாளி ஆகிய சுடுமண் உருவங்களும் குறிப்பிடத்தக்கவையாகும்.



தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர் திரு.அ.அப்துல்மஜீத் அவர்களின் மேற்பார்வையில் பூம்புகார் அகழாய்வினை அகழாய்வாளர்கள் திரு.க.குழந்தைவேலன், திரு.இரா.முத்து ஆகியோரும், கொடுமணல் அகழாய்வினை அகழாய்வாளர்கள் திரு.இரா.செல்வராசு, திரு.பொ.கௌதமபுத்திரன் ஆகியோரும் மேற்கொண்டுள்ளனர். ★

# மணமகள் தேவை

## கி.ராஜநாராயணன்

எனக்குக் கலியணமாகி பேரம்பேத்தியெல்லாம் எடுத்தாச்சி. ஆனாலும், 'மணமகள் தேவை' காலத்தைப் பத்திரிகையில் ஒருபார்வை பார்க்கிற வழக்கம் இருக்கிறது!

ஒரு நாள் இப்படிப் பார்த்துக் கொண்டிருந்தபோது "சம்பிரதாய வித்தை தெரிந்த ஒரு பொண்ணுக்கு, சம்பிரதாய வித்தைகள் அறிந்த ஒரு மணமகன் தேவை" என்றிருந்தது.

"என்னத்தப் படிச்சி மண்ணள்ளிப் போட்டாலும் நமக்குத் தெரியாத வார்த்தைகள், விசயங்கள் இருக்கத்தான் செய்யுது; என்ன எளவு கொண்டாட" என்று வருத்தத்தோடு முகம் திரும்பியபோது, கழனியூரன் வந்து கொண்டிருப்பது தெரிந்தது வாசல் பக்கம்.

'வாங்க வாங்க' என்று உபசரித்து உட்கார வைத்துப் பேசிக்கொண்டிருந்தபோது, பத்திரிகையை அவர் பக்கம் நீட்டி, "இது என்னென்னு பாருங்க"ன்னு காட்டினேன். நாலு திக்கும் போயி வந்தவர். நாலா தண்ணியும் குடிச்சவர். இவருக்குத் தெரியாமல் இருக்காது' என்று நினைத்துக் கொண்டிருந்தபோது, "தெரியலையே" என்று பதில் வந்தது என்றாலும்," இது பற்றி ஒரு கதையிருக்கு" என்றார்.

"அதெச் சொல்லும் முதல்லெ" என்று கேட்டேன். "ஒரு ஊர்ல ஒரு கலியாணம் ஆகாத ராசா இருந்தாராம்", என்று ஆரம்பித்தார்.

"சரி" என்று ஆட்டினேன் தலையை.

"ஒரு நா ராசா, மந்திரியக் கூப்பிட்டனுப்பி, வேய் எனக்குக் கலியாண ஆசெ வந்துட்டது. ஒரு நல்...ல பொண்ணா பாரும்ன்னார்"

"எப்படியான பொண்ணு இருக்கணும்"ன்னு கேட்டார் மந்திரி.

சம்பிரதாய வித்தைன்னா என்னென்னு கேக்க மந்திரிக்குப் பயம்.

ராசா எது சொன்னாலும் முதல்ல யாருஞ் சொல்லவேண்டியது

"சரி!"

மந்திரியும் அதைத்தாம் சொன்னார்.

நே... ரெ வீட்டுக்கு வந்தார். பொண்டாட்டியக் கூப்பிட்டு, "அடியே... ஒனக்கு சம்பிரதாய வித்தைன்னா என்னதுன்னு தெரியுமா"ன்னு கேட்டார்.



"யாரு கண்டா அந்தக் கருமாந்திரத் தயெல்லாம்; முதல்ல காலுகையெக் களுவிட்டுவாங்க; சோத்த போடுதம்"ன்னா. மந்திரிக்கு வெறுத்துப் போச்சி. தட்டத்துல சோத்தைப் போட்டு வச்சிருக்கு. மந்திரி முகட்டை வெறிச்சிப் பார்த்துகிட்டிருக்காரு.

மந்திரி மகன் வந்தாம். அப்பா சாப்பிடாம இப்படி இருக்கதப் பார்த்துட்டு, "என்னப்பா சங்கதி" ன்னு விசாரிச்சாம். இன்னதுன்னு மந்திரி சொன்னார்.

"இம்புட்டுத்தானா; இதுக்குத்தாம் இந்தக் கவலையா? நீங்க பேசாம வீட்டுக்குள்ளெயே இருங்க. நாம் போயி அப்படியான அந்தப் பொண்ணெப் பார்த்துட்டு வாரே"ன்னான்.

மந்திரி மகன் அந்தப் பொண்ணெத் தேடி தேசாந்திரம் புறப்பட்டுப் போனான். காடுவனம் வனாந்திரப் பாதை வழியா இப்படிப் போறப்போ, வழித்துணைக்கு ஒருத்தர் கிடைச்சார். அவரோட பேசிக்கிட்டே ரெண்டு பேரும் நடந்து போயிக் கிட்டிருக்காங்க. அப்பொ, இவங்களுக்கு எதரெ ஒருத்தன் வந்தான். கூட வந்தவர், "தம்பி யாரோ வர்ற மாதிரி தெரியி"தென்னார்.

அந்தக் காலத்துல திருட்டுப்பயம், கொள்ளைக்காரங்க பயம் அதிகம்.

மந்திரி மகன் சொன்னான் "இவனா; இவன் வேறயாருமில்ல பிணம்"ன்னான்.

அவருக்கு இது விளங்கல; இருந்தாலும், சரி இருக்கட்டும்னு மனசுக்குள்ள நினைச்சுக் கிட்டார்.

கொஞ்சதூரம் போனாங்க.

எதுக்கெ ரெண்டு பேர் வந்தாங்க.

"தம்பி இவங்க யாருன்னு தெரியலையே" -ன்னு கேட்டார்.

"இவங்களா; இவங்க ரெண்டு பேரும், ஒன்னு பிணம்; மத்தவன் பிணங்காத்தான்" -ன்னார்!

இதும் அவருக்கு விளங்கல.. சரி, இருக்கட்டும்ன்னு நினைச்சுகிட்டார்.

இன்னுங் கொஞ்சதூரம் நடந்து போனாங்க.

கொஞ்சதூரத்துல எதுக்க மூணுபேரு வந்தாங்க.

"தம்பி மூணு பேர் வர்றாங்களே இவங்க யாராயிருக்கும்"ன்னு கேட்டார்.

"ஊரெழுப்பி"ன்னு பதில் சொன்னாம் மந்திரி மகன்.

இதும் அவருக்கு விளங்கல!

சரி; இருக்கட்டும்னு நினைச்சிக்கிட்டே நடந்து போயிக்கிட்டிருக்கும்போது, நாலு பேரு வந்தாங்க. இவங்க யாருன்னு கேட்டாரு இவர்.

"ராஜா"ன்னு பதில் வந்தது.

இதுக்குள்ள அந்த வழித்துணைக் காரரோட ஊர் வந்துவிட்டது. நுழையிற பாதையில சத்திரம் இருந்தது. மந்திரி மகன் அதுக்குள்ளே போயிட்டாம். இவரு ஊருக்குள்ளெ போயிட்டார்.

வீட்டுக்கு வந்த அந்த வழித்துணைக் காரருக்கு ஒரே அதிசயம், வேடிக்கை, இதெ யாரிட்டயாவது சொல்லித் தீர்க்கணும்.

தன்னோட மகளெக் கூப்பிட்டார். "யம்மா இங்க வா. கேளு இந்த வேடிக்கைய"ன்னு, நடந்ததெ அப்பிடியே சொன்னார்.

அவரோட மக மகா புத்திசாலி.சம்பிரதாய வித்தைகள்ளாம் தெரிஞ்சவ. அறிவிலேயும் அழகுலயும் ரொம்பக் கூடுனவ.

எல்லாத்தையும் கேட்டுட்டு, "அப்பா அவரு சொன்ன ஒவ்வொண்ணுக்கும் ஒரு அர்த்தம் இருக்கு. விவரமாச் சொல்றோம், கேட்டுக்குங்க"ன்னு சொல்லி,

"முதல்ல வந்தவனெப் பிணம்ன்னு ஏஞ்சொன்னார்ன்னா, அந்த அத்துவானக் காட்டுல தனிய ஒருத்தன் போனா, எது நேர்ந்தாலும் அது அவனோட முடிஞ்சி போயிரும்; வெளியே தெரியாது. அப்பிடிப் போறவனெ ஒரு பாம்பு கடிச்சாலுஞ் சாவவேண்டியதுதாம். பிணமாத்தங் கிடக்கணும். அதாம் அப்படிச் சொன்னது"ன்னா.

சரிதான்னு பட்டது அவருக்கு.

ரெண்டுபோர் வந்தபோது, "பிணாங்காத்தான்னு சொன்னாரெ ?"

ரெண்டு போர் வந்தாலும் பயனில்லெங்கிறதுதான்! பிணமாக் கிடக்கிறவனெக் காத்துக்கிட்டுத்தான் கிடக்கணும் அவனும். அத்துவானக் காட்டுல அந்தப் பிணத்தை விட்டுட்டுப் போனா காட்டுநாய்க! நரிக வந்து தின்னுட்டுப் போயிரும். அதனாலதாம் ரெண்டாமவனெ "பிணங்காத்தான்னு" சொன்னது.

அதுசரி; மூணு பேரு வந்தாங்களே அதெ, ஊரெழுப்பின்னு சொன்னது எப்படி ?"

"முதலாமவன் பிணம், ரெண்டாமவன் காத்தான், மூணாமவன்தான் ஊருக்குள்ளெபோயி ஆட்களெ எழுப்பிக்கொண்டாராணும். அதனால தான் ஊரெழுப்பி"

"ஓஹோ'; சங்கதி அப்படியா. செரி செரி நாலமவன் வந்தப்பொ (நாலுபேரும் சேர்ந்து) 'ராஜா'ன்னு சொன்னானே ?

அதுக்கு மகள் சொன்னா; "நாலாவது ஆள் ராசாயில்லெ; பிணமா இருந்தவன் ராசா!"

"எப்படி அது ?!"

"நாலு பேராயிருந்தா, செத்துப் பிணமாக்கிடக்கிறவனெ தலைமாட்டுல ஒருத்தம் கால்மாட்டுல ஒருத்தம் நடுவுல ஒருத்தம்ன்னு மூணுபேரும் சேர்ந்து தூக்கிட்டுப் போயிருவாங்க. பிணமாக்கிடந்து நாறவேண்டாம். செத்தாலும் அவன் ராசாதானெ!



அந்த மகளெப் பெத்த அப்பனுக்குத் தன்னோட மக சாமர்த்தியத்தெப் பார்த்துப் பிரமிச்சிப்போயிட்டார்.

பிறகு, மக கேட்டா, "உங்ககூட வந்த அந்த ஆளு எங்கெ ?"

"நம்ம ஊரு சத்திரத்துல தங்கியிருக்காம்" - ன்னார் அப்பா. சரீன்னு சொல்லி மக அவரிட்டெ ஒரு துட்டக் கொடுத்து கடையில போயி முன் நக்கி பின்நக்கி வாங்கிட்டு வாங்க"ன்னா. அவருக்கு அது விளங்கலெ. என்ன சொல்றான்னு முளிச்சார். நீங்க போயி கேளுங்கப்பா; தருவாங்கன்னா. சரீன்னு புறப்பட்டுப் போனார்.

ஒவ்வொரு கடையாகப் போயி, ஒரு துட்டுக்கு முன்நக்கி பின்நக்கி கொடுங்கன்னு கேட்டார். கடைக்காரங்களுக்கும் அது என்னதுன்னு தெரியல. ஆனாலும் கெத்துவிடாம, நாளைக்கி வாங்க கிடைக்கும்ன்னாங்க (எதும், இல்லேன்னு சொல்லமாட்டாங்க; சொன்னா அப்படியே இல்லாதவங்களா ஆயிருவோம்ன்னு நம்பிக்கை).



இந்தப் பேருலதாம் ஏதோ கோளாறு இருக்கு. அது என்னதுன்னு மகளும் சொல்லமாட்டேங்கா; நமக்குந் தெரியல. ஒருவேளை அந்த சத்திரத்துல இருக்க இளவட்டத்துக்குத் தெரிஞ்சிருக்கும்; போயிக் கேப்போம்ன்னு போனார். அதேபடியா அவனும் இருந்தாம். கொஞ்சநேரம் உக்காந்து பேசிக்கிட்டிருந்தாங்க. அவஞ் சொன்ன வார்த்தைகளுக்கெல்லாம் தன்னோட மகள் சொன்ன அர்த்தத்தை அவங்கிட்டெச் சொன்னார். அப்பதாம் தெரிஞ்சது அவனுக்கு; நாம தேடிவந்த 'சம்பிரதாய வித்தை' தெரிஞ்ச பொண்ணு இவதாம்ன்னுட்டு.

அவரிட்டெ அந்த மந்திரிமகன் சொன்னாம், "என்னோட கடைக்கு வாங்க, நா அந்த பின்நக்கி முன்நக்கிய வாங்கித் தர்ரே"ன்னு கூட்டிட்டுப் போயி தேன் வாங்கி அவரு கையைப் பிடிக்கச் சொல்லி ஊத்தினாம். தொன்னையில வாங்கின தேனை அவரோட இடது கையில் கொடுத்து வீட்டுக்கு அனுப்பிவச்சாம். இடது கையில இருந்த தொன்னையில உள்ள தேன் அப்பிடியே இருந்தது". வலது கையில் ஊத்துன தேன் புறங்கை வழியா வழிய ஆரம்பிச்சதும், வம்பாக் கீழெபோகுதேன்னுட்டு நக்க ஆரம்பிச்சப்பொ, முன்கைத் தேனும் வழிய ஆரம்பிச்சது. ஆக ரெண்டு பக்கமும் நக்கி சுத்தப்படுத்தினார். இப்பொ விளங்கிப் போச்சி; இது முன் நக்கி பின் நக்கி தாம்ன்னுட்டு சிரிப்புத்தாங்கல அவருக்கு.

மகள் சொன்னா," அப்பா அவரெ நம்ம வீட்டுக்கு சாப்பிடக் கூப்பிடுங்க."

போயி, அப்பா அவனெக் கூட்டிட்டு வந்தார். வாசலுக்கு வந்து மகள் அவனை வாங்கன்னு சொன்னா. அவளைப் பார்த்து மந்திரிமகன், இது வந்த வாசலா வராத வாசலான்னு விசாரிச்சாம். இது வராதாவாசல் தான்ன்னு பதில் சொன்னான்.

கால் கை கழுவ சொம்பில் தண்ணீர் கொண்டுவந்து வைத்தாள்.

இது தொட்ட சொம்பா தொடாத சொம்பான்னு கேட்டாம். தொடாத சொம்புன்னு பதில் வந்தது.



பாய்தந்து விரித்து உட்காரச் சொன்னாள். விரிச்ச பாயா விரிக்காத பாயான்னு கேட்டாம்.

விரிக்காத பாய்ன்னு பதில் சொன்னா.

பாயில உக்காந்தவனுக்கு விருந்து படைச்சா. திருப்தியா சாப்புட்டு முடிச்சாம். தாம்பூலம் கொடுக்கும்போது, யாரும் தரியாத தாம்பூலம்ன்னு தந்தா.

எல்லோரும் கொஞ்சநேரம் உக்காந்து பேசிக்கிட்டிருந்தபோது, மந்திரிகுமாரனைப் பார்த்து அவ, நீங்க நாடுவிட்டு நாடு வந்த விசயம் என்னன்னு கேட்டா. அவன் நடந்த கதைய எல்லாம் விவரமாச் சொன்னான். சரி; அப்பிடின்னா வாங்க உங்க நாட்டுக்குப் போவம். போயி, உங்க ராசாவுக்கு நம்ம சம்பிரதாயவித்தையக் காட்டுவோம்னா அவ.

ஊருவந்து சேந்தாக. ஊர் வாசல்ல இருக்கிற அம்மன் கோயிலுக்குப் பக்கத்துல இருக்கிற கால்வாய்க் கரையோரம் ராவோட ராவா ஒரு விஸ்தாரமான குடிசையைக் கட்டி அதுல அவமட்டும் தனியா இருந்துக்கிட்டா. மறுநா காலையில முதஆளா ஊர்த்தலையாரி வந்தாம். யாரு இங்க குடிசை போட்டு இருக்கதுன்னு விசாரிச்சாம். வேறயாரு மில்லை. தனியா ஒரு பொண்ணு அழகுப் பதுமையா இருக்கதைப் பார்த்தாம். ஒம்மேல ஆசைப்பட்டு வந்தேம்ன்னான். அப்பா இது பகலு; ராத்திரிக்குப் பாக்கலாம்ன்னா. அது வரைக்கும் என்ன செய்வோம்ன்னு கேட்டாம். புறவாசப் பக்கம் ஒரு மூட்டைக் கேப்பையும் திரிகையும் இருக்கு; திரிச்சிக்கிட்டு இருன்னாள். சரின்னு போயி திரிக்க உக்காந்துட்டாம். அந்த குடிசை வீட்டுக்குப் பக்கத்துலேயே மந்திரி குமாரன் மற்றவர் கண்ணுக்குத் தெரியாம மறைஞ்சிருந்து காவல் காத்துக் கொண்டிருந்தாம்.

இளம் மத்தியான நேரத்துல அந்த ஊரு கர்ணம் வந்தார். யாரு இங்கெ தனியா குடியிருக்கதுன்னு விசாரிச்சார். அவளெப் பார்த்தாரோயில்லியோ சொக்கிப் போயிட்டார். யேத்தா நீ இப்பிடி ஒரு பொண்ணு இருக்கது இத்தினிநா தெரியாமப் போச்சேன்னு வருத்தப்பட்டார். சரி; எப்பொ வச்சிக்கிடுவன்னு கேட்டார். ராத்திரிக்கு வாங்கன்னா இவ. அதுவரைக்கு என்ன செய்யன்னு கேட்டார்.

வீட்டுக்குப் பொறத்தால புழுங்க நெல்லு ஒரு மூடை கிடக்கு. பக்கத்துலயே குந்தாணியும் உலக்கையும் இருக்கு. எடுத்துப் போட்டு குத்தி அரிசி ஆக்குங்க. ராத்திரிச் சாப்பாட்டுக்கு அந்த அரிசிதாம்ன்னா.

கர்ணம் போ்யி நெல்லுக் குத்த ஆரம்பிச்சிட்டார்.

சாயந்திரம் அரண்மனை வைத்தியர் வந்தார். அவரும் முன்னால சொன்னவங்க போலவேதாம் சொன்னார். ராசா வர்ற நேரமாப்பாத்து வந்திருக்கீரவே; அவரு வந்துட்டுப் போகட்டும்ன்னா இவ.

அதுவரைக்கும் நா என்ன செய்யன்னு கேட்டார் வைத்தியரு.

இப்பிடி இந்த மூலையில உக்காரும்ன்னு சொல்லி அவரு தலையில சாணி உருண்டைய வச்சி, அது மேலெ உலைமூடி தீபத்தைப் பொருத்தி வச்சிட்டா. அசையாம பொம்மைபோல் இருந்துக்கிட்டார் வைத்தியர். ராசாவும் வந்துட்டார்.

அவரும் முன்னால சொன்னவாங்க போலதாம் அவளெப் பார்த்துச் சொன்னார்.

இப்பவே இருக்கணும்ன்னார்.

மகாராசா இப்படி அவசரப்பட்டா எப்படி ? நடுச்சாமத்துக்கு மேலதாம் எல்லாம்ன்னுட்டா; அப்பொ பொழுதெ எப்படிப் போக்கன்னு கேட்டார் ராசா.

ஒரு கதை சொல்லுங்கன்னு கேட்டா இவ. அய்யோ எனக்குக் கதை தெரியாதேன்னார். நீ வேனா ஒரு கதைசொல்லேம்னனு கேட்டார்.

சொல்லலாம்; அதுக்கு நாங் கேக்கத நீங்க தரணும். சம்மதமானா ஒரு அருமையான கெட்டவார்த்தெக் கதை இருக்கு சொல்லுதேம்ன்னா.

சொல்லு சொல்லு, அது எனக்கு ரொம்ப...ப் பிடிக்கும்ன்னார் ராசா ரொம்ப ஆசையா.

அப்பா நாங் கேக்கதை தாரும்ன்னா.

என்ன கேட்டாலும் தர்ரேன்னார்.

ஓங்க மீசை வேணும்ன்னா இவ. ஒனக்கென்னதுக்கு மீசெ ?

அதெப்பத்தி ஓங்களெக்கென்ன; சொன்னபடி தரமுடியுமா முடியாதா ?

ராசா ரோசிச்சார். மீசைதானெ; போனாப் போகுது. திரும்பவும் முளைச்சிருந்தானென்னு நினச்சி, சரி எடுத்துக்கொன்னார்.

ராசா, இடுப்புல கட்டியிருந்த வாளை உருவினார். ரெண்டு பக்கத்து மீசையவும் கொத்தா இறுக்கிப் புடிச்சி கரகரன்னு அறுக்கும்போது கொஞ்சம் உதடும் சேந்து வந்துட்டது ! அய்யோ அய்யோன்னு கூப்பாடு போட்டார். அவ கையில வாள் இருக்கதும் அவ பார்வையும் ராசவுக்கு சரியாப்படல. இனி இங்க நிக்கப்படாதுன்னு ஓடப்பார்த்தார். அதுக்குள்ளெ தலைவாசக் கதவை மாறுவேசத்துலயிருந்த மந்திரிமகன் அடைச்சி வெளித்தாப்பா போட்டுட்டாம்.

புறவாசக் கதவு வழியா ஓட்டம் பிடிச்சார். மீசை இல்லாம ரத்தம் வழிய ஓடுற ராசாவப் பாத்து சிரிச்சாங்க தலையாரியும் கர்ணமும். உள்ளெ விளக்கு எரிஞ்சதே தவிர அரமணை வைத்தியரைக் காணம் ! ராத்ரியே போயி அரண்மனையில அவள் ராசாவைப் பார்த்து சம்பிரதாயவித்தை தெரிஞ்ச பொண்ணு வேணும்ன்னு சொன்னீங்களாமே; வந்திருக்கேம்ன்னு ராசாவுக்கு எதுக்கெபோயி நின்னா. வேண்டாந் தாயீ எனக்கு வேண்டவே வேண்டாம்ன்னு ரெண்டு கையவும் தலைக்கு மேல ஒசத்திக் கும்புடு போட்டாராம் அவளெப் பாத்து.

மே உதட்டுப் புண்ணெல்லாம் ஆறி, கிழிஞ்ச உதட்டை மறைக்க மீசையெல்லாம் வளர்ந்த பிறகு ஒருநா மந்திரியக் கூப்பிட்டனுப்பினாரு ராசா.

மந்திரிக்கானா பயம் ! ராசா சொல்லி எம்புட்டு நாளாகுது, சம்பிரதாய வித்தை தெரிஞ்ச பொண்ணு வேணும்ன்னு கேட்டு, என்ன ஆக்கினை வரப்போகுதோன்னு போயி நின்னார் மந்திரி.

"யப்பா, நமக்கு இந்த சம்பிரதாயவித்தை தெரிஞ்ச பொண்ணெல்லாம் வேணாம். சாதாப்பொண்ணே போதும்"ன்னுட்டார். அதேபோல, பக்கத்து ஊர் ராசாவோட பொண்ணெப்பாத்து நிச்சயம் செய்தாங்க.

"அதே முகூர்த்தத்துல, சம்பிரதாய வித்தெ தெரிஞ்ச மந்திரிமகனுக்கும் சம்பிரதாய வித்தை தெரிஞ்ச அந்தப் பொண்ணுக்கும் கலியாணம் நடந்து இப்புவம் சவுகரியமா இருக்காளாம்" என்று முடித்தார் கழனியூரன்.

## தொழிலாளி

சுடப்பட்ட குதிரை இறந்த பிறகு, அதன் குட்டிகளை அடுத்தவர் யாராவது வாங்கி வளர்த்துக் கொள்வர்; ஆனால், நலிவடைந்த தொழிலாளி மாள நேர்ந்தால், அவனுடைய குடும்பத்தை யார் காப்பற்றுவது ?

- அறிஞர் அண்ணா

# மணிச்சத்து உபயோகத் திறனை அதிகரிக்கும் வழிமுறைகள்

பயிர்களின் வேர் வளர்ச்சிக்கும் தானிய முதிர்ச்சிக்கும் மணிச்சத்து மிகவும் அவசியம். ஆனால் மணிச்சத்தினை மண்ணிலிடும் பொழுது மண்ணில் நிலவும் பல்வேறு பௌதிக - இரசாயனத் தன்மைகளினால் மண்ணில் நிலைநிறுத்தப் படுவதால் பயிர்களுக்கு எளிதாகக் கிடைக்கப் பெறுவதில்லை. அமில மண்வகைகளில் அலுமினியம் மற்றும் இரும்பு பாஸ்பேட்டுகளாகவும், கார மண்வகைகளில் ட்ரைகால்சியம் பாஸ்பேட்டாகவும் மாற்றப்படுகிறது. அதனால், பயிர் வளர்ச்சிக்கு மணிச்சத்து கிடைக்கப் பெறாமல் மகசூல் குறைய வாய்ப்பேற்படுகிறது. எனவே, மணிச்சத்தின் உபயோகத் திறனை அதிகப்படுத்துவது அவசியம்.

### மணிச்சத்து குறைவாகக் காணப்படும் மண் வகைகள்

- ★ அமில மண்
- ★ களர் நிலங்கள்
- ★ நீண்ட நாட்கள் நீர்த்தேக்கமுள்ள சதுப்பு நிலப் பகுதிகள்

### எப்பொழுது இடவேண்டும்?

மணிச்சத்து வேர் வளர்ச்சிக்கே அதிகமாகத் தேவைப்படுவதால், பயிர்களின் தொடக்க வளர்ச்சி காலத்திலேயே இடுவது நல்லது. அதனால், விதைப்பு/நடவுக்கு முன் அடியுரமாக இடுவதே நல்லது. ஆனால், மணிச்சத்து உரங்களைப் பொதி உருவாகும் பருவம் வரை, மகசூல் இழக்காமல் இடலாம் என்று நிகழ்கால ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. எனவே, அடியுரம் இடத் தவறினாலும், மேலுரமாகவும் இடலாமெனத் தெளிவாகிறது.

### எவ்வாறு இடவேண்டும்?

மணிச்சத்தை இயற்கை மற்றும் செயற்கை உரங்கள் வாயிலாக அளிக்கலாம். கீழ்க்கண்ட முறைகளில் மணிச்சத்து இடப்படுகிறது.

- ★ அடியுரமாக மண்ணில் தூவுதல்
- ★ வேர்மண்டலத்தில் மட்டும் இடுதல்
- ★ நாற்றுக்களின் வேர் நனைப்பு
- ★ இலைவழித் தெளிப்பு முறை
- ★ தொழுஉரத்துடன் ஊட்டம் ஏற்றி இடுதல்

தூவுதல் முறையில் உரம் பரவலாக வீசப்படுவதால், வேர்ப் பகுதிகளுக்கு அப்பால் விழுந்து உபயோகப்படாமல் போவதற்கு வாய்ப்புண்டு. ஒரு குறிப்பிட்ட பகுதியான வேர்மண்டலத்தில் மட்டும் இடும்பொழுது, உரமிட அதிக அளவில் ஆட்கள் தேவைப்படும்.

எனவே, செலவு குறைவான, அதே சமயத்தில் போதுமான ஊட்டச்சத்து எளிதில் கிடைக்கக் கூடிய தொழில் நுட்பமுறையே ஒரு சிறந்த மேலாண்மை முறையாகும்.

சூப்பர் பாஸ்பேட் கலவையில் நெல் நாற்றுக்களின் வேர்களை நனைத்து இடுவதன் மூலம் மணிச்சத்து பரிந்துரையில் 10 முதல் 20 விழுக்காடு மணிச்சத்தினைக் குறைத்துக் கொள்ளலாம்.

பொதுவாக மணிச்சத்து உரத்தை நாற்றுநடுமுன் அடியுரமாக இட்டபோதிலும் பொதி உருவாகும் பருவம் வரையிலும் இடலாமென அண்மைக்கால ஆராய்ச்சி முடிவுகள் தெளிவுபடுத்துகின்றன. எனவே மணிச்சத்தை அடியுரமாக இடத்தவறிய வேளாண் பெருமக்கள், பொதி உருவாகும் பருவத்திற்குள்ளாக இட்டுப் பயனடையலாம். அதற்குப் பின்னர் அளித்துப் பயனில்லை.

தழைச்சத்துப் போல் மணிச்சத்தைப் பிரித்திட வேண்டிய அவசியமில்லை. காரணம் முதிர்ந்த இலைப் பாகங்களிலிருந்து கொழுந்துப் பகுதிகளுக்கு, மணிச்சத்து எளிதாக நகரும் தன்மை கொண்டவை. மேலும் நெல்வயல்களில் நீர்த்தேக்கம் தொடர்ச்சியாகக் காணப்படுவதால் மணிச்சத்தின் கரைதிறன் அதிகரித்து, கிடக்கை மேலும் அதிகரிக்கிறது. மேலும் சூப்பர் பாஸ்பேட் உரம் மாவு வடிவத்தில் இருப்பதால், மேலுரமாக இடும்பொழுது இலைகளின் மீது விழுந்து கருகிப்போவதற்கு வாய்ப்புண்டு. இருப்பினும், குருணைவடிவ சூப்பர் பாஸ்பேட், டை அம்மோனியம் பாஸ்பேட் போன்ற உரங்களைத் தாராளமாக மேலுரமாக இடலாம். மேலும், மணிச்சத்து நீரில் கரைந்து வீரியத்திற்கு இலக்காகுதல் மிகவும் குறைவு.



கரைதிறன் குறைவாகக் கொண்ட மலைப்பாகவரத்தை நெல்லுக்கு உபயோகப்படுத்தும் போது கவனம் தேவை. நெல் வயல் நடுநிலை கார அமிலநிலை கொண்டது. இந்நிலையில் மலைப் பாகவரத்தை இட்டால் பயிருக்குக் கிடைக்காது. அதனால், நெல்லுக்கு முந்தைய பயறு வகைப் பயிர்களுக்கு இட்டு, அப்பயிர் விட்டுச் சென்ற மணிச்சத்தை அடுத்த நெல்பயிருக்கு உபயோகப்படுத்தும்படி செய்யலாம்.

மானாவாரிப் பயிர்களுக்கு மணிச்சத்து இடும்பொழுது, அதனைத் தொழுஉரத்தில் ஊட்டமேற்றி பின் இடுதல் நலம். தொழுஉரத்தில் ஊட்டமேற்றுவதால், மணிச்சத்து எளிதில் கிடைக்கும் படிவத்திற்கு மாற்றப்பட்டு, சிறிது சிறிதாக நீண்ட நாட்களுக்குக் கிடைக்க வழிவகுக்கிறது.

தற்சமயம் மணிச்சத்தின் உபயோகத் திறனை அதிகரிக்க உயிர் உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பாஸ்போ பேக்டீரியம், மைகோரைசா பூசணம் போன்றவை கரையாப் படிவத்தில் இருக்கும் மணிச்சத்தினைக் கரைத்து பயிர்கள் எளிதில் எடுத்துக் கொள்ளும் படிவத்திற்கு மாற்றிக் கொடுப்பதால் பயிர்களின் தேவை முழுமையாக நிவர்த்திக்கப்பட்டு, மகசூல் அதிகரிக்க வழிகோலுகிறது. மேலும் பூசணத்தின் இழைகள் நீண்டு வளரும் தன்மை கொண்டதால், வேருக்கு வெகுதொலைவில் காணப்படும் மணிச்சத்தினையும் சேகரித்துப் பயிருக்கு அளிக்கிறது. இதன் மூலம் 20 முதல் 25 விழுக்காடு வரை மணிச்சத்து சிக்கனம் ஏற்படுகிறது.

பயறுவகைப் பயிர்களின் மகசூலை அதிகரிக்க டி.ஏ.பி.2.0 சதக் கரைசல் தெளிப்பு முறையில் பயன்படுத்தப் படுகிறது. இம்முறையில், மண்ணில் நிலைநிறுத்தப்படுதல் குறைக்கப்பட்டு நேரடியாகப் பயிர்களுக்குக் கிடைக்க வழியேற்படுகிறது. மேலும் டி.ஏ.பி. உரத்தில் மணிச்சத்தோடு தழைச்சத்தும் காணப்படுவதால், பயிர் வளர்ச்சி மேலும் ஊக்குவிக்கப்படுகிறது. பருப்பினப் பயிர்களின் வேர்களில் சுரக்கும் திரவம் அமிலத்தன்மை கொண்டவையாக இருப்பதால் கரையாப் படிவத்தில் இருக்கும் மணிச்சத்தினைக் கரைத்து பயிர்கள் எளிதாக எடுத்துக் கொள்ள வழிவகுக்கிறது.

மணிச்சத்தினைச் செயற்கை உரங்கள் வாயிலாக மட்டுமல்லாமல் இயற்கை உரங்கள் வாயிலாகவும் அளிக்கலாம். இயற்கை உரங்களில் முக்கியமானவை "எலும்புத்தூள்" மற்றும் "ஆவியேற்றப்பட்ட எலும்புத் தூள்களாகும்". எலும்புத் தூள்களை ஆவியேற்றுவதால் அவற்றின் மணிச்சத்தின் கிடக்கை அதிகரிக்கிறது.

எனவே, வேளாண் பெருமக்கள் மேற்கண்ட முறைகளைக் கையாண்டு மணிச்சத்தின் உபயோகத் திறனை அதிகரிக்கலாம்.

*- கோ.ஆண்டி, முனைவர் ஜி, செல்வக்குமார் மற்றும் முனைவர் கே.கே.மாதன், மண்ணியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-3.*

★ ★ ★



## மத்திய அரசுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகிதப் பட்டியல்

| நிலை | தற்போதைய ஊதிய ஏற்றமுறை ரூ. | திருத்தப்பட்ட ஊதிய ஏற்றமுறை ரூ. |
|---|---|---|
| I | 5500-200-6500 | 17400-500-21900 |
| II | 5100-150-5700 | 16400-450-2000 |
| III | 4500-150-5700 | 15000-400-18600 |
| IV | 4100-125-4850-150-5300 | 14300-400-18300 |
| V | 3950-125-4700-150-5000 | 12750-375-16500 |
| VI | 3700-125-4700-150-5000 | 12000-375-16500 |
| VII | 3000-100-3500-125-4500 | 10000-325-15200 |
| VIII | 2500-75-2800-100-4200 | 9100-275-14050 |
| IX | 2200-75-2800-100-4000 | 8000-270-13500 |
| X | 2000-60-2300-75-3200-100-3500 | 6500-200-11100 |
| XI | 2000-60-2300-75-3200 | 6500-200-10500 |
| XII | 1820-60-2300-75-3200 | 5900-200-9900 |
| XIII | 1640-60-2600-75-2900 | 5500-175-9000 |
| XIV | 1600-50-2300-60-2660 | 5300-150-8300 |
| XV | 1400-40-1600-50-2300-60-2600 | 5000-150-8000 |
| XVI | 1350-30-1440-40-1800-50-2200 | 4500-125-7000 |
| XVII | 1320-30-1560-40-2040 | 4300-100-6000 |
| XVIII | 1200-30-1560-40-2040 | 4000-100-6000 |
| XIX | 1100-25-1150-30-1660 | 3625-85-4900 |
| XX | 975-25-1150-30-1660 | 3200-85-4900 |
| XXI | 950-20-1150-25-1500 | 3050-75-3950-80-4590 |
| XXII | 825-15-900-20-1200 | 2750-70-3800-75-4400 |
| XXIII | 800-15-1010-20-1150 | 2650-65-3300-70-4000 |
| XXIV | 775-12-835-15-1030 | 2610-60-3150-65-3540 |
| XXV | 750-12-870-15-945 | 2550-55-2660-60-3200 |

## திருத்தப்பட்ட தேர்வுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறை

| வரிசை எண் | சாதாரண நிலை ரூ | தேர்வு நிலை ரூ | சிறப்பு நிலை ரூ |
|---|---|---|---|
| 1 | 2550-55-2660-60-3200 | 2650-65-3300-70-4000 | 2750-70-3800-75-4400 |
| 2 | 2610-60-3150-65-3540 | 2750-70-3800-75-4400 | 3050-75-3950-80-4590 |
| 3 | 2650-65-3300-70-4000 | 3050-75-3950-80-4590 | 3200-85-4900 |
| 4 | 2750-70-3800-75-4400 | 3050-75-3950-80-4590 | 3200-85-4900 |
| 5 | 3050-75-3950-80-4590 | 4000-100-6000 | 4300-100-6000 |
| 6 | 3200-85-4900 | 4000-100-6000 | 4300-100-6000 |
| 7 | 3625-85-4900 | 4300-100-6000 | 4500-125-7000 |
| 8 | 4000-100-6000 | 5000-150-8000 | 5500-175-9000 |
| 9 | 4300-100-6000 | 5000-150-8000 | 5500-175-9000 |
| 10 | 4500-125-7000 | 5300-150-8300 | 5900-200-9900 |
| 11 | 5000-150-8000 | 5500-175-9000 | 6500-200-10500 |
| 12 | 5300-150-8300 | 6500-200-10500 | 8000-275-13500 |
| 13 | 5500-175-9000 | 6500-200-10500 | 8000-275-13500 |
| 14 | 5900-200-9900 | 8000-275-13500 | 9100-275-14050 |
| 15 | 6500-200-10500 | 8000-275-13500 | 9100-275-14050 |
| 16 | 6500-200-11100 | 9100-275-14050 | 10000-325-15200 |
| 17 | 8000-275-13500 | 9100-275-14050 | 10000-325-15200 |
| 18 | 9100-275-14050 | 10000-325-15200 | 12000-375-16500 |



## திருத்தப்பட்ட ஊதிய விகிதப்படி வீட்டு வாடகைப்படி

| | வ.எண். மற்றும் ஊதிய விகிதம் | மாத வீட்டு வாடகைப்படி (ரூபாயில்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | நிலை (அ) சென்னை நகரம் மற்றும் 32 கி.மீ. வரை நகர எல்லைக்குட்பட்ட இடங்கள் ரூ. | நிலை (ஆ) கோவை, மதுரை நகரங்கள் மற்றும் 16 கி.மீ. நகர எல்லைக்குட்பட்ட இடங்கள் ரூ. | நிலை (II)ல் உள்ள இடங்கள் மற்றும் 8 கி.மீ. நகர எல்லைக்குட்பட்ட இடங்கள் ரூ. | நிலை (III) ல் உள்ள இடங்கள் ரூ. | வரைமுறைப்படாத இடங்கள் ரூ. |
| 1. | Upto 2849 | 250 | 150 | 120 | 80 | 60 |
| 2. | 2850-3599 | 280 | 200 | 150 | 100 | 70 |
| 3. | 3600-4399 | 340 | 250 | 180 | 120 | 80 |
| 4. | 4400-4999 | 400 | 300 | 220 | 150 | 90 |
| 5. | 5000-5699 | 500 | 360 | 270 | 190 | 100 |
| 6. | 5700-6399 | 600 | 420 | 320 | 230 | 110 |
| 7. | 6400-7399 | 700 | 480 | 380 | 280 | 120 |
| 8. | 7400-7799 | 800 | 550 | 440 | 330 | 130 |
| 9. | 7800-8599 | 900 | 620 | 500 | 380 | 140 |
| 10. | 8600-9299 | 1000 | 690 | 560 | 430 | 150 |
| 11. | 9300-10499 | 1100 | 740 | 620 | 450 | 160 |
| 12. | 10500-10799 | 1200 | 800 | 680 | 500 | 170 |
| 13. | 10800-11299 | 1300 | 850 | 700 | 500 | 180 |
| 14. | 11300-11599 | 1400 | 900 | 700 | 500 | 190 |
| 15. | 11600-11899 | 1450 | 900 | 700 | 500 | 200 |
| 16. | 11900-13499 | 1500 | 900 | 700 | 500 | 200 |
| 17 | 13500 and above | 1600 | 900 | 700 | 500 | 200 |

## திருத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் நகர ஈட்டுப்படி

| வ.எண். | ஊதிய விகிதம் (ரூ.) | நிலை (அ) சென்னை நகரம் மற்றும் 32 கி.மீ. வரை நகர எல்லைக்குட்பட்ட இடங்கள் (ரூ.) | நிலை (ஆ) கோவை, மதுரை நகரங்கள் மற்றும் 16 கி.மீ. நகர எல்லைக்குட்பட்ட இடங்கள் (ரூ.) |
|---|---|---|---|
| 1. | Below 3000 | 90 | 45 |
| 2. | 3000 - 4499 | 125 | 65 |
| 3. | 4500 - 5999 | 200 | 100 |
| 4. | 6000 and above | 300 | 180 |

## அகவிலைப்படி

### அரசு ஊழியருக்குக் கீழ்க்கண்டவாறு அகவிலைப்படி வழங்கப்படவுள்ளது

| | | | |
|---|---|---|---|
| 1-7-1996 | முதல் | 4% | அடிப்படை ஊதியத்தில் |
| 1-1-1997 | முதல் | 8% | " |
| 1-7-1997 | முதல் | 13% | " |

## அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்பு-திருத்தப்பட்ட பிடிப்பு விவரம்

| ஊதிய ஏற்றமுறை | நிலை-I(அ) நிலை-I(ஆ) | நிலை-II | நிலை-III | இதர |
|---|---|---|---|---|
| | | (சதவிகிதத்தில்) | | |
| 3050 - 4590 | - | NIL | - | - |
| 3200 - 5464 | 1.5 | 1.5 | 1 | 1 |
| 5465 - 9999 | 3 | 3 | 3 | 2 |
| 10,000 - அதற்குமேல் | 4 | 4 | 4 | 3 |



# நெருப்பும் பஞ்சும்

- முக்தா சீனிவாசன்

என்மீது என் அலுவலகத்தில் பணிபுரியும் அத்துணைப் பேருக்கும் ரொம்ப கோபம். "என்ன இந்த எம்.டி. இப்படிச் செய்துட்டாரு" என்று என்னைக் குறைகூறிப் பேசாதவர்கள் இல்லை. நான் செய்ததெல்லாம் ஒன்றே ஒன்றுதான். ஹெட் கிளார்க் வனஜாவைக் கடலூர் பிராஞ்ச்சுக்கு மாற்றிவிட்டேன்.

கடந்த எட்டு ஆண்டுகளாக வனஜா எங்கள் நிறுவனத்தில் வேலை பார்க்கிறாள். ஆபிஸில் அவளுக்கு ரொம்ப நல்ல பெயர். எல்லோரும் தமது வேலைகளில் ஒரு பகுதியையாவது வனஜா தலையில் கட்டிவிட்டுப் போவார்கள். கொஞ்சம் கூட முகம் சுளிக்காமல் தன் வேலைகளோடு மற்றவர்கள் வேலையையும் சேர்த்துச் செய்து முடித்துவிட்டுத்தான் வீட்டுக்குப் போவாள். ஆபீஸில் பணிபுரியும் யாருக்காவது உடல் நலம் சரியில்லையென்றால் முதலில் அவரைப் போய்பார்த்து டாக்டரிடம் இட்டுச் செல்வாள். ப்யூன் பெரியசாமியின் மூத்த மகள் மஞ்சள் நீராட்டு விழாவை முன்னின்று நடத்தியதும் வனஜாதான். கஷ்டப்படுபவர்களுக்குக் கொஞ்சம் கொஞ்சம் பண உதவியும் செய்வாள். இப்படியிருக்கும் வனஜாவை அனைவரும் நேசிப்பது இயற்கைதானே - அவளைப்போய் நான் மாற்றிவிட்டால் கோபம் வராதா என்ன?

வனஜாவின் தகப்பனார் ராஜகோபாலன் வந்து என்னை ஆபிஸில் சந்தித்தார். தன் மகளை நான் கடலூருக்கு மாற்றம் செய்திருப்பதினால் தங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை விளக்கிச் சொன்னார். "என் மகள் வனஜா ஒரு விதவை. அவளுக்கு முப்பது வயதுதான் ஆகிறது. கணவன் இறந்து போய் எட்டு வருஷங்களாகின்றன. இப்படி திடீரென்று கடலூருக்குப் போகச் சொன்னால் அங்கே போய் எப்படித் தனியாக இருப்பாள்? எங்கே தங்குவாள்?" என்று கேட்டார்.

"ஏன்? பணிபுரியும் பெண்கள் மட்டும் தங்கும் ஹாஸ்டல் ஒன்று அங்கே உள்ளது. மிக்க வசதியானது அது. அதில் நானே சொல்லி இடம் வாங்கித் தருகிறேன்." என்றேன்.

சோர்ந்த முகத்துடன் என்னைப் பார்த்த அவர் "வயதான என்னையும் என் மனைவியையும் விட்டுவிட்டு அவள் போனால், எங்களை யார் பார்த்துக்கொள்வது?" என்று கேட்டார்.

"ஏன் சார், உங்களைப் பற்றியே நீங்கள் சிந்தித்துக் கொண்டிருந்தால் எப்படி? இந்த டிரான்ஸ்பரினால் உங்கள் மகளுக்கு பிரமோஷன் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. வனஜாவை அங்கே சூப்பரின்டெண்டா போடறோம், ஆயிரம் ரூபாய்க்கு பக்கமா சம்பளம் கூட வரும். பேசாமல் வனஜாவைப் போய் கடலூரில் டியூட்டில ஜாயின் பண்ணச் சொல்லுங்க" என்று கூறி ராஜகோபாலனை அனுப்பி வைத்தேன். தனக்கு ஏதோ பெரிய பாதகம் விளைவித்து விட்டது போல் என்னை ஒரு வித அசூயை நிறைந்த பார்வையோடு பார்த்துவிட்டுப் புறப்பட்டார் வனஜாவின் தந்தை.

அன்று இரவு - என் மனைவி எனக்கு உணவு பரிமாறிக்கொண்டே "வனஜாவைக் கடலூருக்கு டிரான்ஸ்பர் பண்ணிட்டீங்களாமே, ஏன்?" என்று கேட்டாள். "அங்கு ஆபீஸை நடத்த சரியான ஆள் போதாமல் மானேஜர் ஸ்ரீராமன் திண்டாடுகிறார். இவளைப்போட்டால் ஆபீஸ் நிர்வாகம் சரியாகிவிடும். அதனால்தான் டிரான்ஸ்பர் செய்தேன்." என்றேன். "பாவம் வனஜா. இருபது வயதில் கல்யாணமாகி இருபத்திரெண்டு வயதிலேயே விதவையாகிவிட்டாள். அடக்க ஒடுக்கமாக வந்த அவளை உங்கள் ஆபீஸில் வேலைக்கு எடுத்துக் கொண்டீர்கள். நன்றாகப் பாடுபட்டு முன்னுக்கு வந்தாள். எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்கினாள். ஒரு தமையனுக்கு உண்டான அனுதாபத்தோடு அவளுக்கு எல்லா உதவிகளையும் நீங்க செய்து வந்தீர்கள். இப்ப போய் அவளை டிரான்ஸ்பர் செய்தது நீங்கள் அவளுக்குச் செய்யும் கொடுமை" என்று கூறி முடித்தாள் என் மனைவி. 'இது அவளுக்கு நான் கொடுக்கும் துன்பமல்ல, இதுவரை அந்த இளம் விதவைக்கு நான் செய்து வந்த உதவிகளின் அடுத்த கட்டம்' என்று நினைத்துக் கொண்டு பேசாமல் இருந்தேன்.



வனஜா கடலூர் பிராஞ்சில் போய் வேலைக்குச் சேர்ந்தாள். பிரமோஷனும் சம்பள உயர்வும் அவளுக்கு அளிக்கப்பட்டுவிட்டதாக மானேஜர் ஸ்ரீராம் ரிப்போர்ட் அனுப்பியிருந்தான். என்ன இருந்தாலும் என் மனைவி உட்பட இங்கு என் ஆபீஸில் உள்ள அனைவரும், நான் அவளை டிரான்ஸ்பர் செய்ததற்காக என்மீது வருத்தமும் கோபமும் பட்டுக்கொண்டுதான் இருந்தார்கள்.

ஆறு மாதம் கழிந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை.

வனஜாவும் அவளது அப்பா ராஜ கோபாலனும் என்னைப் பார்க்க வீட்டுக்கு வந்திருந்தார்கள். நான் அவர்கள் நலன் விசாரித்தேன். என் மனைவி அவர்களுக்கு காபி கொண்டுவந்து கொடுத்தாள். அப்போது ராஜகோபாலன், தன் ப்ரீப் கேஸைத் திறந்து ஒரு இன்விடேஷனை எடுத்து என் பெயரை எழுதி நீட்டினார். அதில் வனஜாவுக்கும் கடலூர் பிராஞ்ச் மானேஜர் ஸ்ரீராமுக்கும் திருமணம் வருகிற பத்தாம் தேதி என்று குறிப்பிட்டிருந்தது.

வனஜாவுக்கு வாழ்த்துச் சொன்னேன். "உங்கள் மகள் மறுமணம் செய்து கொள்வதை நீங்கள் தடுக்காமல் ஏற்றுக் கொண்டமைக்காக உங்களைப் பாராட்டுகிறேன்" என்று நான் ராஜகோபாலனைப் பாராட்டினேன். அவர்கள் சந்தோஷமாகப் புறப்பட்டார்கள்.

காப்பி டம்ளரை எடுத்துச் செல்ல வந்த என் மனைவி, "அவளைக் கடலூருக்கு நீங்க டிரான்ஸ்பர் செய்தது தேவையில்லாம அவளுக்கு தந்த கஷ்டம்னுதான் நான் நினைச்சேன். ஆனா அதுவே அவளுக்கு ஒரு வரப் பிரசாதம் ஆயிடுச்சு. நாம ஒன்னு நினைக்கிறோம் - அது ஒன்று நடக்குது" என்றாள்.

"அடி பைத்தியம். அதா ஒன்னும் நடக்கலை. நானாத் திட்டமிட்டுச் செய்ததுதான் அது. கடலூர் பிராஞ்ச் மானேஜர் ஸ்ரீராமுக்கு இப்ப 38 வயது. அவனது மனைவி ஹார்ட் அட்டாக்கிலே போய் ஆறு வருஷமாகிறது. எனக்கு ஒரு சமயம் திடீரென்று ஒரு யோசனை தோணிச்சு. நல்லவர்களான ஸ்ரீராமையும் வனஜாவையும் ஒரே இடத்தில் பணிபுரிய வைத்தால், ஒரு வேளை அவர்கள் இழந்து போன தங்கள் இருவரது வாழ்க்கையையும் நினைத்துக்கொண்டே இருப்பதை விட்டு, தங்களுக்குள் ஒரு புதிய வாழ்க்கைக்கு வழி தேடலாம் அல்லவா? நெருப்பையும் பஞ்சையும் அருகில் வைக்கக்கூடாது என்பார்கள்.... ஆனால் நான் அந்த நெருப்பையும் இந்த பஞ்சையும் வேண்டுமென்றே அருகாமைக்கு கொண்டு வந்தேன். அதற்காகத்தான் வனஜாவைக் கடலூருக்கு டிரான்ஸ்பர் செய்தேன். நான் எதிர்பார்த்த நல்ல முடிவு கிடைத்துவிட்டது என்றேன்.

திறந்த வாய் மூடாமல் என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள் என் மனைவி. ★




'**த**மிழரசு' ஒரு தரமான பத்திரிகையாக அமைந்திருக்கிறது; அரசின் பத்திரிகையொன்று, அரசுத் திட்டங்கள் - சாதனைகள் பற்றிய விளக்க ஏடாக மட்டுமன்றி, இவ்வாறு கதை, கட்டுரை, கவிதையெல்லாம் தாங்கி வெளிவருவது அரிது. தொடரட்டும் தங்கள் தூய தமிழ்ப் பணி.

- தி.வே.நடேசன், திம்மலை.

**தி**ரு.வி.க., அவரது சீடர் கல்கி, வேலூர் ஜமதக்னி போன்றோரின் நூற்கள் நாட்டுடைமை பற்றித் தமிழரசு மூலம் அறிந்து மகிழ்ந்தேன்; வளர்க முதல்வர் கலைஞரின் தமிழ் வளர்ச்சிப்பணி - வாழ்க தமிழரசின் இலக்கியப் பணி.

- தா.பகவதி, மதுரவாயில். .

**அ**ட்டையிலேயே - சி.சுப்பிரமணியம், எம்.எஸ்.சுப்புலட்சுமி, அப்துல் கலாம் ஆகியவர்களின் புகைப்படங்களை அழகுற வெளியிட்டு, அவர்கள் பாரத ரத்னா விருதுபெற்றது பற்றிக் குறிப்பிட்டுப் பெருமைப்படுத்தியிருந்தீர்கள்; 'தமிழரசு'க்கு இதயம் கனிந்த எனது நல்வாழ்த்துக்கள்.

- மு.சிவக்குமார், நெடுவயல்.

**உ**லக மகளிர்நாள் குறித்து முதல்வர் கலைஞர் அவர்கள் விடுத்திருந்த வாழ்த்துச் செய்தி, மகளிர் நலம் காக்கும் வகையிலும், அவர்களை விண்ணளவிற்கு உயர்த்தும் நோக்கிலும் அமைந்திருந்தது; நன்றி.

- அ.பா.சேகர், நா.காட்டூர்.

**வ**ன்முறை தலைதூக்கவிடாமல், இவ்வுலகத்தை இனிய பூஞ்சோலையாக்க மனிதனால் நிச்சயம் முடியும் என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது 'உலகம் இனியது' என்ற கட்டுரை.

- சீனி.தேவராசன், ஈரோடு.





**ஒ**ருமைதரும் தமிழகத்தின்
ஓங்குபுகழ் பரப்பிடவே
பெருமையொடு உதித்தாய் நீ,
பேருலகில் - அருமையென
இப்போது பவனிவரும்
இன்பத்தமிழ் அரசிதழே
எப்போதும் வாழ்க இனிது !

- ப. அருணாசல சண்முகம், வீரளூர்.




**அ**ள்ளஅள்ளக் குறையாத இலக்கியப் புதையலாகத் தமிழரசை வெளிவரச் செய்து, எம்உள்ளம் துள்ளிக் குதிக்கச் செய்துவிட்டீர்; நன்றியுடன் பாராட்டுகிறேன்.

- கா.நா.ராஜசேகர், மங்களபுரம்.



# "வருவாய்த்துறை அலுவலர்களுக்கு ஆண்டுதோறும் அண்ணா பதக்கம்!"

## சட்டப்பேரவையில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சிலார் அறிவிப்பு!

**ச**ட்டப்பேரவையில் வருாய்த்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதில் அளித்துப் பேசிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் அறிவித்ததாவது:

தமிழக மக்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களது அன்றாட வாழ்க்கை நடைமுறைகளுக்கு எந்தவொரு வகையிலாவது உறுதுணையாக வருவாய்த் துறை அமைந்திருக்கிறது என்று கூறுவதிலே நான் பெருமிதம் அடைகிறேன்.

மனிதனுக்குத் தேவையான உணவு, உடை, உறையுள், வேலை உள்ளிட்ட அனைத்து அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதில் வருவாய்த்துறை தனது சீரிய பணியை ஆற்றி வருகிறது.

சென்ற அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் திங்களில் ஏறபட்ட இயற்கை சீற்றத்தினால் தமிழகத்தின் சில மாவட்டங்கள் பெரிதும் பாதிப்புற்றன.

பாதிக்கப்பட்ட மக்களை நேரில் பார்த்து ஆறுதல் அளித்ததுடன் பல இடங்களில் நிவாரண உதவிகைள நான் வழங்கினேன். இந்த வெள்ள நிவாரணப் பணிகளில் அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், சென்னை மாநகரப் பகுதிகளில் மேயர்-தம்பி ஸ்டாலினும் பங்கு கொண்டு மக்களின் துயர் துடைப்பதில் முனைப்புடன் செயலாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வெள்ளச் சேதங்களினால் 234 பேர் உயிர் இழந்தனர்; 631 கால்நடைகள் மடிந்தன. 1,33,000 எக்டேர் நிலங்களில் பயிர்கள் சேதமடைந்தன. பொதுமக்களுக்கு உணவு வழங்குவது, பாதைகள் மற்றும் பாலங்களை மராமத்து செய்வது அகியவை மூலம் இயல்பு வாழ்க்கை வெகு விரைவில் கொண்டு வரப்பட்டது.

இறந்தவர்கள் மற்றும் கால்நடைகளுக்கு உரிய இழப்பீட்டுத தொகைகள் உடனுக்குடன் வழங்கப்பட்டன. முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்த ஆணைக்கேற்ப, பொதுமக்களின் முறையீடுகளை உடனுக்குடன் பரிவுடன் கவனிக்க அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

வெள்ள நிவாரணப்பணிகளுக்காக ரூ.58.95 கோடியை அரசு வழங்கியது.

அது மட்டுமல்ல, அந்த கனத்த மழையினால் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு நடப்பு ஆண்டிற்கான நிலவரி முழுவதையும் - அதாவது சுமார் 44 கோடி ரூபாயை ரத்து செய்து முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே அறிவித்துள்ளார்கள்.

வெள்ள நிவாரணம் மற்றும் புனரமைப்புப் பணிகளில் வருவாய்த்துறை உரிய முறையில் பணியாற்றியுள்ளது. தகவல் தொடர்பு சாதனங்கள் இயங்காத நிலையில், வருவாய்த்துறையில் நிறுவப்பட்ட 'ஹோம்ரேடியோ' போன்ற சாதனங்கள் மிகப் பயனுடையவையாக இருந்தன.



நடப்பு ஆண்டில், குடியிருப்பு மனைப் பட்டாக்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட குறியளவு 75,000. ஆனால் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு மட்டும் சுமார் 74,000 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது நாம் பெருமைப்படத்தக்க ஒரு சாதனையாகும்.

பல ஆண்டு காலமாக ஆட்சேபணையற்ற வகைப்பாட்டு நிலங்களில் குடியிருந்தாலும் கூட, மலைப்பிரதேசங்களில் இயற்கைச் சூழல் சீரழிவைத் தடுக்கின்ற காரணத்தால் வீட்டுமனை ஒப்படை செய்வது தடை செய்யப்பட்டு இருந்தது. குறிப்பாக நிலகிரி மாவட்டத்தில் இத்தகைய ஏழை எளிய மக்கள் சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் குடியிருந்து வந்தாலும அண்மையில் இந்த அரசுதான் இப்பகுதியில் ஒப்படை செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையைத் தளர்வு செய்து ஆணை வெளியிட்டிருக்கிறது.

அதேபோல நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை ஒப்படை செய்வதற்கு இந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்டிருந்த குறியீடு 2,550 ஏக்கர் ஆகும். ஆனால், குறியீடுகளுக்கு மேலாக சுமார் 110 விழுக்காடு அதாவது 2,826 ஏக்கர் நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. குறியீடு 4,000 பேருக்கு நிலம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது.

வேளாண்மை வருமான வரியைப் பொறுத்தவரை இந்த ஆண்டு ரூ.20கோடி வசூல் செய்ய வேண்டும் என்ற குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், 37.98 கோடி ரூபாய் - அதாவது 189 விழுக்காடு வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்பதும் கலைஞர் அரசின் மற்றும் ஒரு சாதனையாகும். ஆகவே, கடந்த ஆண்டில் வருவாய்த்துறையின் பணிகள் சிறப்பாக அமைந்தன என்று இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதிலே நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இருப்பினும், மக்களின் தேவைகளும் எதிர்பார்ப்புகளும் வளர்ந்து கொண்டேதான் இருக்கும். அவைகளை நிறைவேற்ற இந்த அரசு தொடர்ந்து முனைப்புடன் செயலாற்றும்.

சட்டம் - ஒழுங்கு, புயல் வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற இயற்கைச் சீற்ற காலங்கள்; மிக முக்கிய விருந்தினர் வருகை ஆகிய சமயங்களில், மாவட்ட மற்றும் மாநில தலைமையிடங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியது ஒரு இன்றியமையாத தேவையாகும். இதைக் கருத்தில் கொண்டு, மாவட்டாட்சியர், கோட்டாட்சியர் அலுவலகங்களுடன் துரிதமான, பயனுள்ள தொடர்பு வசதிகளை உருவாக்கவும்; மாவட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளவும் வி.எச்.எப் போன்ற நவீன தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்த அரசு பரிசீலிக்கும்.

கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் ஆகிய வருவாய்த்துறை அலுவலர்கள் பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறார்கள். காலம், நேரம் கருதாமல் அவர்கள் ஆற்றி வரும் பணிகளைச் சிறப்பிக்க அரசு விரும்புகிறது.

காவல்துறை அலுவலர்களுக்கு வழங்கப்படும் பதக்கங்கள் போல வருவாய்த்துறையில் சிறப்பாகப் பணியாற்றி, எந்தவிதத் தண்டனையோ, குற்றச்சாட்டோ இல்லாத அலுவலர்கள் - அதாவது, கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் ஆகிய அலுவலர்களில் சிறந்த ஒவ்வொரு நபருக்கும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும், அவர்கள் ஆற்றிய பணியைச் சிறப்பிக்கும் வகையில் விருதும், பதக்கமும், ஒவ்வொரு ஆண்டும் வழங்கலாமா என்பது குறித்து அரசு பரிசீலனை செய்யும். மேற்படி விருது, 'பேரறிஞர் அண்ணா விருது' என்று அழைக்கப்படும்.

தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமைஉரிமை வழங்குதல்) சட்டத்தின் கீழ் 19.6.71 அன்று குத்தகை அல்லது உரிமம் பெற்றவர் என்ற முறையில் குடியிருப்பு மனை வைத்துக்கொள்ள உரிமை உண்டு. இவர்களில், பலர் சிறு குடிசைகளிலேயே வாழ்ந்து வருகிறார்கள். பெரும் மழை மற்றும் வெள்ளக்காலங்களில் இவர்களது குடியிருப்புகள் நீரால் சூழப்பட்டு இன்னல் அடைகிறார்கள். ஆகவே அவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள, அரசு மானியத் திட்டங்கள் வாயிலாக உதவி அளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்களின் நிலங்கள் குறித்த புல எல்லையை அளவிட்டுக் காட்டவும், பாகப் பிரிவினை போன்ற நில மாற்றங்கள் காரணமாகப் புலங்கள் உட்பிரிவு செய்யப்படுவதற்கும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இத்தகைய பணிகளை எவ்விதத் தாமதமும் இல்லாமல், உடனுக்குடன் முடித்துக் கொடுக்கத் தக்க அறிவுரைகளை அரசு வெளியிடும்.

நில உரிமைப் பதிவேடு திட்டம் ஏற்கெனவே எட்டு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சேலம், நாமக்கல், தருமபுரி, இராமநாதபுரம், திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் கடலூர் ஆகிய ஏழு மாவட்டங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இப்பணிகளை விரைவில் முடித்து, நில உரிமைப்பதிவேடுகளை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நில அளவைத் திட்டம் முதன்முதலில் தமிழகத்தில்தான் துவங்கப்பட்டது. இருப்பினும், நவீன தொழில் நுட்ப உத்திகள் பயன்படுத்தப்படவில்லை. ஆகவே, நில அளவைத் துறையை, தொழில்நுட்பச் சாதனங்கள் மூலம் நவீனப்படுத்தவும், நில அளவைத் துறை அலுவலர்களுக்கு நவீனத் தொழில் நுட்ப முறைகளில் தகுந்த பயிற்சி அளிக்கவும், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதை அரசு பரிசீலிக்கும்.

நில அளவைத் துறையில் பலதரப்பட்ட பணியாளர்களுக்கு, நில அளவை செய்தல், நிலப்பரப்பு கணித்தல், நிலப்படம் வரைதல் போன்ற பணிகளில் பயிற்சி வழங்க தற்போது தஞ்சை மாவட்டம், ஒரத்தநாட்டில் ஒரு பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இங்கு வழங்கப்படும் பயிற்சி முறைகள் இன்னமும் பழமையானதாகவே இருந்து வருகிறது. வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில்நுட்ப உத்திகளையும், கருவிகளையும் பயன்படுத்தி, மேற்கண்ட பயிற்சிகளை சென்னையில் அளிக்க ஏதுவாக ஒரு கூடுதல் பயிற்சி மையம் நிறுவ இயலுமா என்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

நில அளவைத் துறையில், தற்போது புலப்படங்களை அச்சிட்டு வழங்குவதற்கு ஒரு நிழற்பட அச்சகம் சென்னையில் இயங்கி வருகிறது. இது மிகவும் பழமையானது. இதன் காரணமாக, காலதாமதம் ஏற்படுகிறது. குறிப்பிட்ட கால வரம்பிற்குள் பணி முடிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. கிராம, வட்ட மற்றும் மாவட்ட புலப்படங்கள் தயாரிக்கவும், தேர்தல் காலங்களில் தேவைப்படும் புலப்படங்கள் தயாரிக்கவும் இந்த அச்சகத்தை நவீன வசதியுடன் செயல்படும் வகையில் உருவாக்க வேண்டியுள்ளது. ஆகவே, 'லித்தோ' மற்றும் 'லேசர்' அச்சுமுறைகளை இந்த அச்சகத்தில் அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வீட்டுமனை மற்றும் விவசாய நிலங்கள் கோரிக்கை மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு, வீட்டு மனை மற்றும் நில ஒப்படை செய்யப்படுகின்றன. ஆனால், உண்மை நிலையைக் கூறாது, தவறான தகவல்கள் அடிப்படையில் பலர் ஒப்படை பெற்றிருப்பதும், ஒப்படை பெற்ற நிலங்களை உரிய முறையில் பயன்படுத்தாமல் இருப்பதும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. ஆகவே, இந்தத் தவறுகளையும், குறைகளையும் களைகின்ற வகையில், வீட்டு மனை மற்றும் நில ஒப்படைகள் ஆய்வுசெய்யப்பட்டு, தவறான தகவல்கள் அடிப்படையில் பலர் ஒப்படை பெற்றிருப்பதும், ஒப்படை பெற்ற நிலங்களை உரிய முறையில் பயன்படுத்தாமல் இருப்பதும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. ஆகவே, இந்தத் தவறுகளையும், குறைகளையும் களைகின்ற வகையில், வீட்டு மனை மற்றும் நில ஒப்படைகள் ஆய்வு செய்யப்பட்டு, தவறான தகவல்கள் அடிப்படையில் அல்லது உரிய முறையில் பயன்படுத்தாமல் உள்ள இனங்களில், அவற்றை மீளக் கொள்ள அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

வீட்டு மனை மற்றும் விவசாய நிலங்களை ஒப்படை செய்வதற்கு, வாட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், நில நிர்வாக ஆணையர் மற்றும் அரசுக்குத் தனித் தனியே நிதிஅதிகார வரம்பு உள்ளது. இந்த நிதிவரம்பு பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. தற்போது நில மதிப்புக் கூடியுள்ள காரணத்தால் இந்த நிதி வரம்பை உயர்த்துவதற்குத் தேவை எழுந்துள்ளது. ஆகவே, மேற்சொன்ன அலுவலர்களின் நிதி வரம்பை உயர்த்துவதற்குத் தக்க நடவடிக்கையினை அரசு மேற்கொள்ளும்.

> *பண முதலாளித்துவத்தைவிட, நில முதலாளித்துவமிருக்கிறதே - அதுதான் மனிதத் தன்மையை மாய்ப்பதிலே முதல்தரமானது.*
>
> - அறிஞர் அண்ணா

உறுப்பினர்கள் பலர் பல்வேறு கருத்துகளை தெரிவித்திருக்கிறார்கள்.

இவை யாவற்றையும் கருத்திற்கொண்டு, தேவையான நடவடிக்கைகள், முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி உரிய நேரத்தில் மேற்கொள்வோம் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் இந்த அவைக்குத் தேவையான பொருத்தமான ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மார்ட்டின் லூதர் கிங் என்ற கறுப்பர் இனத் தலைவர், தமது இன மக்களின் விடுதலைக்காகப் பாடு பட்டு வந்தார். அவரது விடுதலை வேட்கை முயற்சிகளைக் கண்டு பொறுக்காத வெள்ளையர் அவரைச் சுட்டுக் கொன்றனர்.

மார்ட்டின் லூதர் கிங்கைப்போல நாமும் சமத்துவம், சகோதரத்துவம், மனித நேயம், மத நல்லிணக்கம் ஆகியவைகளையே வேண்டுகிறோம்.

அதற்காக இந்த அரசு, கலைஞர் தலைமையில் இயங்கும் அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் வருவாய்த்துறையின் மூலமும் செய்வதில் எந்தத் தயக்கமும் காட்டாது.

நான் ஒன்று சொல்வேன்...

``The crowhas begun to caw - the dawn is not far off".

அதாவது -

"காகம் கரையத் தொடங்கியது. விடியல் வெகு தொலைவில் இல்லை" பேரவைத் தலைவர் அவர்களே !

- என்று கூறி அமைகிறேன்."

- மேற்கண்டவாறு தமது பதிலுரையில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் குறிப்பிட்டார். ★



# மக்கள் நல்வாழ்வுத் துறையின் மகத்தான செயல் திட்டங்கள்!

**சட்டப்பேரவையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி அவர்கள் 17.4.98 அன்று ஆற்றிய உரை.**

"ஏற்கெனவே மருத்துவத்துறைக்கு 1045.72 கோடி நிதி ஒதுக்கியிருந்தாலும், பகுதி 2 திட்டத்தின்கீழ் 15 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியிருந்தாலும் இன்னமும் நிதி போதாது என்று உங்கள் சார்பிலே முதல்வரிடத்திலே எடுத்துச் சொல்லி, ஒவ்வொரு கோரிக்கையாக வைத்த நேரத்திலே இன்றுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு இடையிலேயும் அவர் 10 கோடி ரூபாய் தாராளமாக இந்தத் துறைக்கு வழங்கியிருக்கிறார்.

### முதல்வர் கலைஞர் பரிந்துரை

இந்த ஆண்டு முதல் எம்.பி.பி.எஸ். மற்றும் பி.டி.எஸ். படிக்க வேண்டும் என்று நினைக்கின்ற கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவீதம் இடஒதுக்கீடு நிச்சயமாகச் செய்து தரப்படும்.

பட்டதாரிகளே இல்லாத குடும்பங்களில் இருந்து வருகின்ற, எம்.பி.பி.எஸ். படிக்கவேண்டும் என்று வருகின்ற பட்டதாரிகளுக்கு அவர்கள் படிக்கின்ற வரையில் முழுச்செலவையும் அரசே ஏற்றுக் கொள்ளும்.

ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்த வரையில் 1408 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றுக்கொண்ட போது 652 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டடங்களே இல்லாமல் இருந்தது. அதை முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி அவர்களும் உடனடியாக 2 ஆண்டு காலத்தில் கட்டி முடிக்கவேண்டுமென்று ஆணை பிறப்பித்து 300 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. இந்த ஆண்டு 352 கட்டடங்களுக்கான பணி நடைபெற்று வருகின்றது.

### தொழில் அதிபர்களே தத்து எடுக்கும் திட்டம்

இங்கே ஆரம்ப சுகாதார நிலையங்களின் பராமரிப்பைப் பொறுத்தவரையில் இந்தியாவில் யாருமே எடுக்காத முயற்சியை நமது முதலமைச்சர் அவர்கள் எடுத்து இருக்கிறார்கள்.

ஆனால், தொழில் அதிபர்கள், வசதி படைத்தவர்களுக்கு ஒரு சர்வீஸ் மெண்டாலிட்டி வேண்டும் என்ற அந்த நல்ல நோக்கத்தோடு தொழில் அதிபர்களை எல்லாம் அழைத்து நீங்கள் எங்கெங்கே தொழிற்சாலைகள் வைத்து இருக்கிறீர்களோ அங்கே இருக்கக் கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தை எடுத்துக்கொண்டால் - பராமரிப்புக்கு எடுத்துக்கொண்டால் நீங்கள் உங்களுடைய நிறுவனத்திற்கு விளம்பரத்தையும் பெறலாம்; அதே நேரத்தில் நோயாளிகளுக்கு உதவி கிடைக்கும் என எடுத்துச்சொன்னார் முதலமைச்சர். நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கின்ற தொழில்அதிபர்கள் அவர்களே முன்வந்து 100 இடங்களில் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களை அவர்கள் தத்து எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்த மருத்துவமனைகள் எது எது என்று இப்போதே தேர்வு செய்யப்பட்டு விட்டது.

அதேபோல் எதிர்காலத்தில் தொழில் அதிபர்கள் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவமனைகளைத் தத்து எடுக்க முயற்சிகள் தொடர்ந்து செய்யப்படும்.

இப்படி 24 மணி நேரம் சேவை செய்கின்ற இந்த மருத்துவமனைகளைப் பொறுத்த வரையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்ற போது, திட்டக் கமிஷன் துணைத் தலைவர் அவர்களை நேராகச் சந்தித்துச் சொல்லியிருக்கிறார்கள். மாவட்ட மருத்துவமனைகளிலேயே, தாலுகா மருத்துவமனைகளிலேயே 24 மணி நேர சேவை கிடைக்காதபோது, தமிழ்நாட்டில் எப்படி கிராமப்பகுதியில் - அதுவும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேரம் டாக்டர்கள் இருக்கிறார்கள் என்று கேட்டு அதற்கு முதலமைச்சர் அவர்கள் விவரங்களை எடுத்துச் சொன்ன பிறகு உண்மையிலேயே இது இந்தியாவிலேயே பாராட்டக்கூடிய மிகச்சிறந்த திட்டம் என்று முதலமைச்சர் அவர்களுக்கும் அவர்கள் பாராட்டுக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.





## டி.ஆர். பாலு, எம்.பி. நிதி உதவி

வட்டார மருத்துவமனைகள், முதல்நிலை மேல் சிகிச்சை மையங்களாகச் செயல்பட்டு வருபவற்றில் 100 படுக்கைகளுக்குக் குறைவாக இருந்தால், அதையெல்லாம் 100 படுக்கைகளாக உயர்த்தவேண்டும் என்று அரசாங்கம் திட்டமிட்டு, இப்பொழுது 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

சென்னை மாநகரின் தென் பகுதியில் புதிய குடியிருப்புகள் பெருகுவதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மனத்திலே கொண்டு, குறிப்பாக மகாபலிபுரம் சாலையிலே ஏற்படுகின்ற விபத்துக்களையெல்லாம் தடுப்பதற்கும், அங்கே ஏற்படுகின்ற அந்த விபத்துக்களிலே பாதிக்கப்படுகின்றவர்களுக்கு ஒரு மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று எண்ணி, நீலாங்கரையில் ஏறக்குறைய முதல் கட்டமாக 10 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையைத் தொடங்குவதற்கு இந்த ஆண்டு அனுமதி வழங்கியிருக்கின்றார்கள்.

அதற்கு அந்த நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்களும், அவருடைய நிதியிலேயிருந்து 15 இலட்சம் ரூபாய் பணத்தைத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்.

முதலமைச்சரவர்கள் நிதிநெருக்கடிக்கு இடையிலேயும் 13.5 இலட்சம் ரூபாய் நிதியைத் தந்து கிட்டத்தட்ட 350 ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்குவதற்கு உதவி செய்திருக்கிறார்கள்.

## தொழுநோயாளிகளே இல்லாத நிலை

தொழுநோயாளியைப் பொறுத்தவரையிலே 1983ல 10 ஆயிரத்திலே 118 பேர் என்று இருந்த நிலை மாறி, பிறகு 6 பேர் என்று குறைந்து கி.பி. 2000 க்குள்ளாக தமிழகத்திலே ஒரு தொழுநோயாளி கூட இருக்கமாட்டார் என்ற நிலை உருவாக இருக்கிறது.

போலியோவைப் பொறுத்தவரையிலே இந்தியாவிலேயே நாம்தான் சிறப்பாக இந்தத் திட்டத்தை அமல்படுத்திவருகிறோம்.

கி.பி. 2000-ல், போலியோவால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் ஒருவர் கூட தமிழ்நாட்டிலே இருக்கமாட்டார் என்று திட்டவட்டமாக நான் சொல்வேன்.

## எய்ட்ஸ் கட்டுப்பாடு

எய்ட்ஸ் நோய், இரத்த வங்கிகளில் கொடுக்கப்படுகின்ற தவறான இரத்தம் மூலமாகவும் பரவுகிறது. இதிலிருந்து காப்பதற்காக உரிமம் கொடுப்பதிலே நம்முடைய அரசாங்கம் கண்டிப்பாக இருக்கிறது. யார் உரிமம் பெற்றிருக்கிறார்களோ அந்த இரத்த வங்கியிலேயிருந்துதான் இரத்தம் கொடுக்க வேண்டும் என்றும் இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

தாம்பரம் நெஞ்சக நோய் மருத்துவமனையில் இதற்கான சிகிச்சையை நாம் அளிக்கிறோம். சித்த மருத்துவத்தின் மூலம் நாம் கொடுக்கின்ற மருந்துகளினால் நோயாளி குணமடைந்தாலும்கூட, விஞ்ஞான ரீதியாக நாம் முழுமையாகத் திருப்தியடைய முடியவில்லை; எனவே, விஞ்ஞான ரீதியாக இந்த மருந்து வேலை செய்து அவர்கள் குணமானார்கள் என்பதற்காக ஒரு கருவி வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு 50 இலட்சம் ரூபாய் செலவாகும் என்றார்கள். எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலம் அந்தக் கருவி இந்த ஆண்டு வழங்கப்பட்டிருக்கின்றது.

நம்முடைய சித்தமருத்துவர்கள் அதைப் பயன்படுத்தி, மருந்து கண்டுபிடிப்பார்களேயானால் எய்ட்ஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடித்தவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் என்ற நல்ல பெயர் நமக்குக் கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கொசுவை ஒழிப்பதற்கு நாம் இன்றையதினம் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். மாநகராட்சி, நகராட்சிகள் மூலமாக மருந்து தெளிக்கிறோம். இருந்தாலும், இந்தக் கொசுத் தொல்லையிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக இன்றைய தினம் இந்த அரசு நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு குழுவை அமைக்கலாம் என்று இருக்கிறது.

## கண்ணொளி வழங்கும் திட்டம்

கண்ணொளி வழங்கும் திட்டம் இந்தியாவிலேயே இன்று இந்த மாநிலத்திலே தான் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. 1972-ஆம் ஆண்டு நம்முடைய கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அறிவிக்கப்பட்ட திட்டம் இந்தத் திட்டம். அங்கெல்லாம் கண் டாக்டர் சென்றதால் அந்தக் கண்ணொளி வழங்கும் திட்டத்தின் மூலமாக இலட்சக் கணக்கானவர்கள் பயனடைந்தார்கள். அந்தத் திட்டத்தை இந்த அரசு தொடர்ந்து செய்யவேண்டும் என்று நினைக்கிறது. சென்ற ஆண்டு 3 இலட்சத்து 17,000 பேருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுப் பயனடைந்திருக்கிறார்கள்.

அந்த எண்ணிக்கை இந்த ஆண்டு 3,50,000 பேருக்குச் சிகிச்சை அளிக்கவேண்டுமென்று முயற்சி எடுத்து, முதல் கட்டமாக முதலமைச்சர் பிறந்த ஜூன் 3-ஆம் தேதியிலிருந்து இந்தக் கண்ணொளி வழங்கும் திட்டம் அமல்படுத்தப்படும்.

கோவை மாவட்டத்தில் முதல்கட்டமாகக் கண்பார்வை அளிக்க வேண்டுமென்பதற்காகத் திட்டமிடப்பட்டு, இந்த ஆண்டு முதல் கட்டமாக அந்த மாவட்டத்தில் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படும்.

## பெண் குழந்தைகளுக்கு அரசு முன்பணம்

முதலமைச்சர் அவர்கள் மகளிர், பெண் குழந்தைகளைக் கொல்வது தவறு என்று உணரும்வகையில் அதற்காகத் திட்டமிட்டு முதல் பெண் குழந்தை பிறந்தால் 1500 ரூபாய், இரண்டாவது பெண் குழந்தைக்கு இன்னொரு 1500 ரூபாய் என்று சொல்லி, அவர்களுக்குப் பிறந்தவுடனேயே டெபாசிட் செய்து அந்தப் பணத்தை அவர்களுடைய திருமண வயதை எட்டும் காலத்திலே பெற்றோர்கள் எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் - அதாவது இப்போது பெண்



குழந்தை பிறந்தவுடன் செய்தால், 21 ஆண்டுகளுக்குப் பிறகு அது 28 ஆயிரம் ரூபாயாக வளர்ந்து பெற்றோர்களுக்குக் கிடைக்கிறது.

அதன் மூலமாவது பெண்குழந்தைகள் கொல்லப்படாமல் இருப்பார்களா என்ற நல்ல எண்ணத்தோடு நமது முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்.

ஆனால், அதையும் மீறி யாராவது பெண் குழந்தைகளைக் கொல்வதற்குக் கணவன்மார்கள் அதற்குத் தூண்டுதலாக இருப்பார்களானால், அவர்கள் மீது இந்த அரசு கருணையில்லாமல் கடுமையான கிரிமினல் குற்றம் சாட்டி வழக்குத் தொடரும்.

குடும்பக் கட்டுப்பாட்டிலே இந்தியாவிலேயே நாம் இரண்டாவது இடத்திலே இருக்கிறோம். 19.2 என்ற புள்ளிவிவரம் இன்று இந்தியாவிலேயே நமக்குப் பெருமை தரத்தக்கதாக இருக்கிறது. அதாவது பிறப்பு விகிதம்.

## திருச்சியில் மனநலக் காப்பகம்

மனநலக் காப்பு மையங்கள், இந்தியாவிலேயே மிகச் சிறந்த - மெண்டல் ஆஸ்பிடல் - மனநலக் காப்பு மையம் கீழ்ப்பாக்கத்திலே இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு இதுபோன்ற இடங்களைத் தயார் செய்யவேண்டுமென்று எண்ணி, இந்த அரசாங்கம் இந்த ஆண்டு திருச்சியிலே புதிதாக ஒரு மெண்டல் ஹாஸ்பிடல் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையிலே இயங்கிக்கொண்டிருக்கும் கைஅறுவை ஆய்வு மற்றும் புனரமைப்பு மையத்தை சிறந்த சேவை மையமாக இந்த ஆண்டு அறிவிக்கிறது. இதற்காக முதலமைச்சர் அவர்கள் 25 இலட்சம் ரூபாயை நிதியாக ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

இராஜாஜி மருத்துவமனைக்கு ஒரு 50 இலட்சம் ரூபாயை நிதியாக பார்ட்-2 ஸ்கீமிலே ஒதுக்கினார்கள். நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்களிடத்திலே போய்ச் சொன்ன உடன் - எப்பொழுதுமே சபாநாயகருக்கு ஒரு தனிக்கவனம் உள்ளது. அதை ஒரு கோடி ரூபாயாக உயர்த்தி உடனடியாக அந்தப் பிரச்சினையைத் தீர்த்துவையுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

## அட்டைப்பட விவரம்

**முதலாம் பக்க அட்டையில்...**

கவர்னகிரியில், மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் திறந்துவைத்த **வீரன் சுந்தரலிங்கம்** நினைவுக் கிராமம்.

**இரண்டாம் பக்க அட்டையில்...**

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்,
பொதுவுடைமை வீரர் **ப.ஜீவானந்தம்.**

**கடைசிப் பக்க அட்டையில்...**

நாகர்கோவிலில், மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் திறந்து வைத்த பொதுவுடைமை வீரர் **ப.ஜீவானந்தம்** மணிமண்டபம்.

## மேலும் புதிய மருத்துவக் கல்லூரிகள்

மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் தமிழகத்திலே 10 மருத்துவக் கல்லூரிகள், அரசு மருத்துவக் கல்லூரிகளே இயங்கிவருகின்றன. பல ஆண்டுகளாகப் புதிய கல்லூரிகளே தமிழகத்தில் ஏற்படுத்தப்படவில்லை. நாம் இன்னும் ஒரு 4 மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கவேண்டும் என்பது முதலமைச்சருடைய ஆசை. ஆனால் நிதிநிலைமை சரியாக இல்லை.

அது மட்டுமல்ல; இந்தியாவிலேயே தேர்வு முறையை நாம் தான் சிறப்பாகச் செய்கிறோம். அந்த மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது தகுதி அடிப்படையிலே மட்டுமல்ல, இடங்களை ஒதுக்கீடு செய்யும்போதும் மருத்துவமனைகளிலே மருத்துவக் கல்லூரிகளிலே அதிலேயும் இடஒதுக்கீடு பார்க்கிறோம்.

சென்னை பொது மருத்துவமனை என்று சொன்னால் மெரிட்டிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு எவ்வளவு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, முன்னேறிய சமுதாயத்திற்கு எவ்வளவு என்று பார்த்து விகிதாச்சார அடிப்படையிலே தான் நாம் இடங்களை ஒதுக்குகிறோம். இது இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலேயும் கிடையாது.

அதுவும் என்றைக்குத் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்களைப் பத்திரிகையிலே வெளியிடுகிறோமோ அன்றைக்கே எந்தக் கல்லூரி என்பதையும் வெளியிட்டுவிடுகிறோம்.

## ரூ.5 இலட்சம் முன்பணம்

நம்முடைய தமிழகத்திலே கேரளாவில் உள்ளது போல அப்படிப்பட்ட சொசைட்டி மூலமாக மருத்துவக் கல்லூரிகளை கோ-ஆபரேட்டிவ் சங்கங்கள் மூலமாக அங்கே எப்படி நடைபெறுகிறதோ அப்படி நாமும் நடத்த ஆரம்பிக்கலாம் என்று ஒரு முடிவு செய்திருக்கிறோம்.

அதிலே வேடிக்கை என்னவென்றால் அதிலே தேர்ந்தெடுக்கப்படுகிற மாணவர்களும் நம்முடைய எப்போதும் போல தேர்ந்தெடுக்கப்படுகிற பட்டியலிலிருந்து தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவர்கள் போய்ச் சேருகிற நேரத்திலே 5 இலட்ச ரூபாய் முன்பணம் கட்ட வேண்டும். அவர்கள் திரும்பிப் போகும்போது அந்த 5 இலட்ச ரூபாயை நாம் திருப்பிக் கொடுத்துவிடுகிறோம்.

இப்போது பல கல்லூரிகளில் தனியார் கல்லூரிகளில் 20 இலட்ச ரூபாய் என்று வாங்குகிறார்கள். 5 இலட்ச ரூபாய் என்று Capitation fees வாங்குகிறார்கள்; 10 இலட்சம் ரூபாய் என்று வாங்குகிறார்கள்; அது உறுப்பினர்களுக்கு எல்லாம் தெரியும். ஆனால் அரசாங்கக் கல்லூரிகளிலே 5 இலட்ச ரூபாயை முன்பணமாகக் கொடுத்துவிட்டுப் போகிற நேரத்தில் அந்த 5 இலட்ச ரூபாயை நாம் திருப்பிக் கொடுத்துவிடுகிறோம்.

சிலபேர் கேட்கலாம். தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 5 இலட்ச ரூபாய் எங்கேயிருந்து கிடைக்கும் என்று. அப்படி ஒரு குறை இருக்குமானால் அவர்களுக்கு, படிப்பதற்குச் சில வங்கிகள் கடன் கொடுக்கின்றன. அந்தக் கடனையும் அரசாங்கமே ஏற்பாடு செய்து அந்த மாணவர்களையும் சேர்த்துக்கொள்வதற்கு இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

வேலூரிலும் தூத்துக்குடியிலேயும் இந்த ஆண்டு முதற்கட்டமாக அந்தக் கல்லூரிகள் தொடங்கப்படும். அடுத்த கட்டமாகக் கன்னியாகுமரியிலும், விழுப்புரத்திலும் அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும்.

சித்த மருத்துவத்தைப் பொறுத்தவரையிலே இந்த அரசாங்கம் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. எப்போதும் இல்லாத அளவுக்கு ஒரு கவுன்சிலை ஏற்படுத்தியிருக்கிறோம். ஐ.ஏ.எஸ். அதிகாரி - லட்சுமிகாந்தன் தலைமையிலே நாம் ஒரு கவுன்சிலை ஏற்படுத்தியிருக்கிறோம்.

அடுத்து மருந்து விநியோகத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தின் விநியோக முறையைப்போல வேறு எங்கேயும் கிடையாது.

### தமிழகத்தைப் பின்பற்றும் பஞ்சாப்

கம்ப்யூட்டர் நெட்ஒர்க் மூலமாகத் தலைமையிடத்திலிருந்து சென்னையிலிருந்து விநியோகிக்கப்படுகின்றன.

கன்னியாகுமரியின் ஒரு கோடியிலே மருந்து இல்லை என்று காலை 10 மணிக்குச் சொன்னால் அதைக் கம்ப்யூட்டர் மூலம் தெரிந்துகொண்டு மறுநாள் காலை 10 மணிக்கெல்லாம் அங்கே அந்த மருந்துகள் போய்ச்சேரக் கூடிய வாய்ப்பினை நாம் பெற்றிருக்கிறோம். அந்த மருந்துகள் கூட டெண்டர் மூலமாகத்தான் பெறப்படுகின்றன. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுடைய குழு ஒன்று பரிசீலித்து, தேர்ந்தெடுத்த மருந்துகளை வழங்குகிறார்கள்.

தலைமைத் தேர்தல் ஆணையர் கில் அவர்களை, நாம் சந்திக்கச் சென்றிருந்தபோது; "தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட ஒரு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேஷன் இருக்கிறதாமே, அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்" என்று கேட்டார்கள். நானும் எடுத்துச் சொன்னேன். அவர்கள் உடனடியாகப் பஞ்சாப் முதலமைச்சர் அவர்களிடம் தொடர்பு கொண்டு, யாரையாவது அனுப்பி தமிழ்நாட்டிலே இந்த மருத்துவ சேவைக்கழகம் எப்படி செயல்படுகிறது என்று பாருங்கள் எனத் தெரிவித்தார்கள். தமிழ்நாட்டில் செயல்படும் மருத்துவச் சேவை சர்வீஸைப் பார்த்து பஞ்சாபிலே ஆரம்பிக்கலாம் என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய அளவில் நம்முடைய மருத்துவ சேவைக் கழகம் பணியாற்றிக் கொண்டிருக்கிறது".

- இவ்வாறு அமைச்சர் திரு. **ஆர்க்காடு வீராசாமி** அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்தார்.

## மூவலூர் இராமாமிர்தத்தம்மையார்
## திருமண நிதிஉதவித் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில்
## 60 ஆயிரம் பேர் பயன்பெற ரூ.60 கோடி ஒதுக்கீடு



- மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்
**திருமதி சற்குண பாண்டியன்**
(23.4.98-ல் சட்டமன்ற அறிவிப்பிலிருந்து)

**1996-97**-ஆம் நிதியாண்டில் 31,680 பெண்கள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தில் பயன்பெறும் வகையில் ரூ.31,680 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1997-98-ம் நிதியாண்டில் 37,000 பெண்கள் பயன்பெறும் வகையில் ரூ.37 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆகமொத்தம் 96-98 பிப்ரவரி மாதம் வரை 68,680 பெண்கள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

31.3.98 வரை நிலுவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும். மேலும் இத்திட்டத்திற்கு 98-99-ஆம் ஆண்டிற்கு ரூ.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளினை ஏற்று, அன்பளிப்பாகப் பல்வேறு கொடையாளர்களிடமிருந்து சுமார் ரூ.5 கோடியளவில் நிதி வசூலாகியது. அந்தத் தொகைக்கு வருமான வரிவிலக்கு அளிக்கவும் முதலமைச்சர் அவர்கள் வழிவகை செய்துள்ளார்.

தாய் தந்தையை இழந்த 20 வயது பூர்த்தியான 8-ஆம் வகுப்புவரை படிக்கவியலாத ஆதரவற்ற பெண்களுக்கான திருமணநிதி உதவித் திட்டத்தின்படி 1996-97ஆம் ஆண்டில் ரூ.2,000 ஆகவும், 1997-98 ஆண்டில் ரூ.3,000 ஆகவும் உயர்த்தப்பட்டது. பின்னர் 1998-99-ஆம் ஆண்டில் ரூ.5,000-ம் ஆகவும் உயர்த்தப்படுகிறது.

18 வயது பூர்த்தியான 8-ஆம் வகுப்பு வரை படிக்க இயலாத ஏழை விதவையரது மகள் திருமண நிதிஉதவித் திட்டத்திற்கான உதவித்தொகை 1997-98-ஆம் ஆண்டு ரூ.3,000 ஆகவும், 1998-99ஆம் ஆண்டு ரூ.5000 ஆகவும் உயர்த்தப்பட்டது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமணத் திட்டம், அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமணத் திட்டம் மற்றும் பார்வையற்றோரைத் திருமண செய்துகொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கு வழங்கப்படும் திருமண உதவித் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களின் கீழும் தம்பதியரின் ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகாமல் இருக்கவேண்டும் என்ற விதி நடைமுறையில் உள்ளது. அது இந்த ஆண்டு முதல் முழுமையாக நீக்கப்படுகிறது.

காது கேளாதவர்களைத் திருமணம் செய்ய முன்வரும் பேசும்திறன் மற்றும் காது கேட்கும் திறனுடையவர்களுக்கு, இந்த ஆண்டு முதல் ஒரு பாராட்டுச் சான்றிதழும், திருமணச் செலவிற்காக ரூ2,000-மும் தேசிய சேமிப்புப் பத்திரமாக ரூ.3,000-மும் இவ்வாண்டு முதல் வழங்கப்படும். இது ஒரு புதிய திட்டமாகும். ★





## 133 அடி உயர வள்ளுவர் சிலை அமைப்புப் பணி: முதலமைச்சர் கலைஞர் பார்வையிட்டார்

*வான்புகழ் கொண்ட குறள் தந்த பெரும் பேராசான் வள்ளுவருக்குத் தமிழகத் தலைநகரில் வள்ளுவர் கோட்டம் கண்ட கலைஞர் அரசு, தென் குமரிமுனையில் 133 அடி உயரத்தில் திருவள்ளுவருக்குச் சிலை அமைத்திட முடிவெடுத்து 1990 - ஆம் ஆண்டு கழக ஆட்சிக் காலத்தில் அப்பணியின் தொடக்கவிழா நடைபெற்றது.*

*அப்பணி இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றப் படவிருக்கிறது என 1998-99ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெருமகிழ்ச்சியுடன் அறிவித்துப் பெருமிதம் கொண்டார்.*

*முக்கடலும் சங்கமிக்கும் குமரிமுனையில் நடைபெற்று வரும் அப்பணியினை கலைஞர் அவர்கள் 19.4.98 அன்று பார்வையிட்டுப் பணிகளைத் துரிதப்படுத்திட ஆணையிட்டார்.*

*சிலை அமைக்கும் பணி குறித்த விவரங்களையும், அதன் நுட்பங்களையும் அப்பணியை மேற்கொண்டு வரும் கணபதி ஸ்தபதி அவர்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் விளக்கிக் கூறினார்.*

*முதலமைச்சருடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. ஆர்க்காடு வீராசாமி, திரு. துரைமுருகன், திரு. தா. கிருட்டினன், திரு. ஆலடி அருணா, திரு. முல்லைவேந்தன், திரு.இரகுமான்கான், திரு.சமயநல்லூர் செல்வராஜ், திரு. சுரேஷ்ராஜன், திரு. ஜெனிபர் சந்திரன், முதலமைச்சர் அவர்களின் துணைவியார் திருமதி. தயாளு அம்மாள் ஆகியோரும் சென்றிருந்தனர்.*

### கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைப்புப்பணி

*1975 - ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கன்னியாகுமரியில், விவேகானந்தர் நினைவு மண்டபம் அருகில் அமைந்துள்ள பாறையின் மீது திருவள்ளுவர் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்தார். அதன் அடிப்படையில் 133 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.*

### பணிபற்றிய புள்ளி விவரங்களும் பணிப் பொறுப்பும்

*திருவள்ளுவர் சிலை அமைக்க அரசு ஆணையிட்ட நாள் 24.7.1990 ஆகும். சிலை செய்வதற்கு ஒதுக்கீடு செய்த தொகையின் அளவு ரூ.360.15 இலட்சம்.*

| | |
|---|---|
| *கல்லால் சிலை வடிக்கும் சிற்பியின் பெயர்* | *திரு. வை.கணபதி ஸ்தபதி.* |

*அம்பாசமுத்திரம் (நெல்லை மாவட்டம்) பட்டுமலைக் குப்பம், (செங்கை மாவட்டம்) ஆகிய இடங்களில் உள்ள பாறைகளிலிருந்து கற்களை வெட்டி எடுத்து, பீடத்தையும் சிலையையும் சிற்பிகளைக் கொண்டு செதுக்கி, கன்னியாகுமரிக் கடற்கரைக்குக் கொண்டுவந்து இறக்கி வைத்திடும் பொறுப்பும், பாறைமீது கற்களைச் சேர்மானம் செய்து சிலையைக் கட்டிக் கொடுக்கும் பொறுப்பும் திரு.வை.கணபதி ஸ்தபதியிடம் ஒப்படைக்கப்பட்டது.*

*கடற்கரையிலிருந்து வள்ளுவர் பாறைக்குச் சிற்பிகளையும், செதுக்கி முடித்திட்ட கற்களையும், பிற கட்டுமானப் பொருட்களையும் பாண்டூன் மூலம் எடுத்துச் சென்று ஸ்தபதியிடம் ஒப்படைக்கும் பொறுப்பும், மேடு பள்ளங்களாய்க் கிடந்த வள்ளுவர் பாறையின் முகட்டை வெட்டிச் சமன்படுத்திடும் பணியும், வள்ளுவர் பாறைக் கருகில் படகுத் துறை அமைத்திடும் பணியும் தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.*

### சிலை பற்றிய தொழில்நுட்பக் குறிப்புகள்

*இது, முற்றிலும் கற்களால் நிர்மாணிக்கப்படும் திருவள்ளுவர் உருவச் சிலையாகும்.*

| | | |
|---|---|---|
| *திருவள்ளுவர் சிலையின் மொத்த உயரம்* | : | *133 அடி* |
| *சிலையின் உயரம் மட்டும்* | : | *95 அடி* |
| *பீடத்தின் உயரம்* | : | *38 அடி* |
| *முகத்தின் உயரம்* | : | *10 அடி* |
| *கொண்டை உயரம்* | : | *5 அடி* |
| *மார்பளவு அகலம் (தோள்பட்டை சேர்த்து)* | : | *30 அடி* |
| *கைத்தலத்தின் உயரம்* | : | *10 அடி* |
| *கையில் பிடித்திருக்கும் ஏட்டின் நீளம்* | : | *10 அடி* |
| *சிலை, ஆதாரபீடம் மற்றும் சுற்றுச்சுவர் ஆகியவற்றிற்குத் தேவையான கற்களின் மொத்த எடை* | : | *3,681 டன்* |
| *சிலை மற்றும் பீடம் ஆகியவற்றின் மொத்த எடை* | : | *7,000 டன்* |

| | | *கற்கள்* | *வரிகள்* | *உயரம்* |
|---|---|---|---|---|
| *ஆதாரபீடம்* | : | *672* | *15* | *38 அடி* |
| *சுற்றுச்சுவர்* | : | *1726* | *18* | *38 அடி* |
| *சிலை* | : | *1283* | *21* | *95 அடி* |
| *மொத்தம்* | : | *3681* | | *133 அடி* |

| | |
|---|---|
| சிலை நிற்கும் பீடத்தின் பரப்பளவு | 35'x25' =875 ச.அடி |
| இதைச்சுற்றி 38 அடி உயரம் கொண்ட சுவர் அமைகிறது. அதன் பரப்பளவு | 63'x53' = 3,339 ச.அடி |

### பணி தொடங்கப் பெற்ற நாள்

| | |
|---|---|
| கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலைப்பணி தொடங்கப் பெற்ற நாள் | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 6.9.90 அன்று தொடங்கப் பெற்றது. |
| ஸ்தபதி பணி தொடங்கிய நாள் | 27.1.1991 |

### சிலை செதுக்கும் பணிகள் நடைபெற்ற இடங்கள்:

1. சோழிங்கநல்லூர் (சென்னை)
2. அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி)
3. கன்னியாகுமரி

ஸ்தபதிக்கு உரிய நேரத்தில் தேவையான பணம் வழங்கப் படாததால் அவர் தனது பணியை நிறுத்திய நாள் 1.3.1995

முதற்கட்டத்தில் செய்திட்ட பணிகள் (1991 முதல் 28.2.94 வரை)

சிலைக்கும் பீடத்திற்கும் மொத்தமாக ஆகும் 3,681 கற்களில் 2,048 கற்கள் செதுக்கி முடிக்கப்பட்டிருந்தன.

| | |
|---|---|
| எஞ்சியிருந்த பணி அளவு | 1633 கற்களுக்கான பணி 3681 கற்களைச் சேர்மானம் செய்திடும் பணி. |

### இரண்டாம் கட்டப் பணிகள் (தொய்விற்குப்பின் தொடக்கம்)

திருவள்ளுவர் சிலையை விரைவில் முடித்திட வேண்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறையில் 25.6.1997 அன்று சிறப்புக்கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதித்துறைச் செயலர், பொதுப்பணித்துறையைச் சேர்ந்த உயர் அலுவலர்கள் ஆகியோருடன் அமர்ந்து சிலை செய்வதற்கான மதிப்பீடு, செயல்முறைத் திட்டம், தேவைப்படும் கால அவகாசம், நிதி ஒதுக்கீடு ஆகியவை தொடர்பான அம்சங்கள் மிகவும் விரிவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. திரு. கணபதி ஸ்தபதி அவர்கள் கொடுத்த திருத்திய மதிப்பீடும், தமிழ்நாடு கட்டுமானக் கழகம் அளித்த திருத்திய மதிப்பீடும் பொதுப்பணித்துறை ஆய்வு செய்து கொடுத்ததின் அடிப்படையில் திருத்திய மதிப்பீட்டுத் தொகையான ரூ.614.00 இலட்சம் திரு. கணபதி ஸ்தபதி அவர்களுக்கும், ரூ.172 இலட்சம் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திற்கும் 3.7.1997 அன்று அரசு அங்கீகரித்தது.

> **திருவள்ளுவர் பிறந்த நாட்டுக்கு உரியவர்கள் நாம்; அவர் வாழ்ந்த மண்ணில் வாழத் தக்கவர்கள் நாம் என்பதைப் பேச்சினால் அல்ல; செயலினால் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்.**
>
> - அறிஞர் அண்ணா

| | |
|---|---|
| இடைக்காலத் தொய்வுக்குப் பிறகு திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி தொடங்கப்பட்ட நாள் | 1.9.1997 |
| திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ. | 614 இலட்சம் |

### வள்ளுவர் பாறையில் சேர்மானப்பணி

1.3.1995க்குப் பிறகு நின்றுவிட்ட பணிகளை விரைவாக முடித்திட வேண்டி 12.12.1996 அன்று அரசு ஆணையிட்டு மீண்டும் திருவள்ளுவர் சிலை அமைகின்ற பணிகள் தொடங்கப்பட்டன.

| | |
|---|---|
| வள்ளுவர் பாறைக்குப் பாண்டூன் மூலம் கொண்டு செல்லப்பட்ட கற்கள் | 209 |
| மேற்கண்ட கற்களில் சேர்மானம் செய்யப்பட்ட கற்கள் | 88 (2 வரிகள்) திண்டு வரி (levelling course) மற்றும் ஆதார பீட முதல் வரி |

தற்போது வள்ளுவர் பாறைக்குக் கல் எடுத்துச் செல்ல உதவும் படகுத் துறை சின்னமுட்டம் படகுத் துறை (சின்ன முட்டத்திலிருந்து வள்ளுவர் பாறைக்குள்ள கடல் வழித்தூரம் 3 கி.மீ.)

### உபரிப் படகுத்துறை அமைப்பதன் அவசியம்

தற்பொழுது பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகப் படகுத் துறையின் மூலம் விவேகானந்தர் நினைவு மண்டபம் செல்லும் பயணிகள் எண்ணிக்கை பெருகிவிட்டதால் அத்துறையை வள்ளுவர் சிலைக் கட்டுமானப் பணிக்குப் பயன்படுத்த இயலாது என்று பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துவிட்டதால் மீனவர் படகுத்துறையான சின்னமுட்டத்திலிருந்து கற்களைக் கொண்டுசெல்ல வேண்டியதாயிற்று. ஆனால் 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15ஆம் நாள் முதல் மூன்று மாதங்கள் சின்னமுட்டம் படகுத் துறையிலிருந்து பாண்டூன் மூலம் (படகு மூலம்) செதுக்கப்பட்ட கற்களைப் பாறைக்கு எடுத்துச் செல்ல இயலாது என்றும், அந்த நேரத்தில் மீனவர்கள் மீன் பிடிக்கும் பருவகாலப் பணியைத் தொடங்கி விடுவதால் சின்ன முட்டம் படகுத் துறையிலிருந்து கல் எடுத்துச் செல்லுவது இயலாது என்றும் தெரியவருகிறது. எனவே ஆகஸ்ட் திங்களுக்குள் தனியாகப் படகுத்துறை ஒன்றினை அமைத்திடல் அவசியம் ஆகும்.

மேலும் திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணி முடிவடைந்த பின்பு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகமாகும் என்பதாலும், தனியான படகுத் துறை இருப்பின், இப்போது விரைவில் சிலைக்குத் தேவையான கற்கள் மற்றும் பொருட்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் கொண்டு செல்ல வசதியாக இருக்கும் என்பதாலும், புதிய படகுத் துறை ஒன்றினை விரைவில் அமைத்திட வேண்டியிருக்கும்.

### நிதியும், நிதி ஒதுக்கீடும்

| | தமிழ்நாடு கட்டுமானக் கழகம் (இலட்சத்தில்) | ஸ்தபதி (இலட்சத்தில்) |
|---|---|---|
| திருத்திய மதிப்பீடு | ரூ. 172.00 | ரூ. 614.00 |
| இதுவரை வழங்கப்பட்டது | ரூ. 83.00 | ரூ. 272.58 |

### பணியை முடித்திட வகுத்துக்கொண்ட கால அளவு

| | |
|---|---|
| ஆதார பீடம் | 5 மாதம் |
| சிலை | 10 மாதம் |
| சுற்றுச்சுவர் | 6 மாதம் |
| சிலை முடித்திடும் நாள் | ஆகஸ்ட் 1999க்குள் |

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906



பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-2













**நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.**

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள். சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள். பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

ஆனால் அப்படி இல்லையே...

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ. தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**


குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98


# இந்த இதழில்...


★ கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு - அரசின் வெள்ளை அறிக்கை ----- 2
★ குடிநீர்த் திட்டங்கள் ----- 9
★ தமிழகத்தில் ஒரே காலகட்டத்தில் 16 அணைகள் ----- 13
★ ஆதிதிராவிட மக்களுக்கு 60 ஆயிரம் இலவச கான்கீரிட் வீடுகள் ----- 14
★ தொழிலாளர்களின் தோழனாய் விளங்கும் அரசு, இது! 'மே தினச் செய்தி' - முதலமைச்சர் கலைஞர் ----- 17
★ கைத்தறி நெசவாளர்களுக்கு சலுகைகள் - கலைஞர் அறிவிப்பு ----- 19
★ வேர்கள் - அசோகமித்திரன் ----- 21
★ தமிழகத்திலுள்ள களிமண் உருவங்கள் - நடன காசிநாதன் ----- 23
★ தனிமரம் - பாவண்ணன் ----- 27
★ மே நாள் - ஜி.மகேந்திரன் ----- 30
★ உணவுத் துறையின் ஒப்பற்றபணிகள் ----- 33
★ போக்குவரத்துத் துறையில் சீர்திருத்தங்கள் ----- 37
★ இரண்டாண்டு சாதனைகள் ----- 43
★ ஒடுக்கப்பட்ட உழைப்பாளிகளை ஒன்றுபடுத்திய காரல் மார்க்ஸ் - முதலமைச்சர் கலைஞர் ----- 45
★ பாரதியார் கவிதை ----- 48


## திருக்குறள்

*ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து*
*வேண்டும் பனுவல் துணிவு.*

*ஒழுக்கத்தில் உறுதியான துறவிகளின் பெருமை, சான்றோர் நூலில் விருப்பமுடனும், உயர்வாகவும் [illegible] பெறும்.*
*(கலைஞர் உரையிலிருந்து)*


**தமிழரசு**
திருவள்ளுவர் ஆண்டு 2029
சித்திரை - வைகாசி
மே 1-15, 1998
மலர்:28 இதழ்:21
விலை ரூ.3


**அட்டைப்படம்**

முதல் அட்டை : உழைப்பாளர் சிலை
நான்காம் அட்டை : மேதினத்தூண்

# கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு :

## அரசின் வெள்ளை அறிக்கை

**சட்டப்பேரவையில் வைக்கப்பட்ட நாள் 23-4-1998**



**14-2-1998** அன்று கோயம்புத்தூரில் நிகழ்ந்த குண்டு வெடிப்பிற்கான அடிப்படைக் காரணங்கள், அரசு எடுத்த நடவடிக்கைகள் ஆகியவைபற்றி விளக்க இந்த வெள்ளை அறிக்கை அவைமுன் வைக்கப்படுகிறது.

### தமிழகத்தில் பிற குண்டுவெடிப்பு நிகழ்ச்சிகள்

1984 - லிருந்தே நெஞ்சை உலுக்கும் பல குண்டு வெடிப்புகள் தமிழகத்தில் நிகழ்ந்துவந்திருக்கின்றன. அவற்றில் முக்கியமான சில சம்பவங்கள் வருமாறு :

2-8-84 அன்று மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஏற்பட்ட பெரும் குண்டுவெடிப்பில் 25 வெளிநாட்டவர் உட்பட 30 பேர் உயிரிழந்தனர். 37 பேர் காயமுற்றனர். தமிழீழப் போராளிக் குழுவினர்தான் இந்தக் குண்டுவெடிப்பிற்குக் காரணம் எனப் புலன் விசாரணையில் தெரிய வந்தது. இந்த வழக்கில் சரவணபவன் மற்றும் நான்கு நபர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. முக்கியக் குற்றவாளியான தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் என்பவர் ஜாமீனில் விடுதலை ஆகி தலைமறைவாகச் சென்றவர் 6-2-98 அன்று மீண்டும் கைது செய்யப்பட்டார். அவர் மீது உள்ள வழக்கில் நீதிமன்ற விசாரணை நடைபெறவுள்ளது.

15-3-87 அன்று அரியலூருக்கு அருகில் மருதையாறு பாலத்தில் தமிழ்நாடு விடுதலைப் படையினர் குண்டு வைத்ததில், மலைக்கோட்டை விரைவு ரயில் கவிழ்ந்து 26 பேர் மரணம் அடைந்தனர். 140 பேருக்குமேல் காயமடைந்தனர். மூவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு மேல்முறையீடு நிலுவையில் உள்ளது.

21-5-91 அன்று திருப்பெரும்புதூரில் நிகழ்ந்த கொடூர குண்டு வெடிப்பில் முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. ராஜிவ்காந்தி மற்றும் 9 காவலர்கள் உட்பட 18 பேர் மரணமடைந்தனர். விடுதலைப் புலிகள் மற்றும் அவர்கள் ஆதரவாளர்களான 26 பேருக்கு நீதிமன்றம் 28-1-98 அன்று மரணதண்டனை வழங்கியுள்ளது. மேல்முறையீடு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

20-4-92 அன்று தேனி மாவட்டம் சுருளிப்பட்டியில் தமிழக மக்கள் விடுதலைப் படையினரால் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் ஒருவர் மரணமுற்றார். குற்றவாளி ராஜாராம் தலைமறைவாக உள்ளதால், வழக்கு விசாரணையில் உள்ளது.

8-8-93 அன்று சென்னை ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் குண்டு வைத்ததில் 11 பேர் மரணம் அடைந்தனர். சி.பி.ஐ. விசாரணை நடைபெற்று, முஸ்லீம் தீவிரவாதிகள் எஸ்.ஏ.பாஷா, இமாம் அலி, ஹைதர் அலி ஆகியோர் உட்பட 18 பேர் மீது வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

18-11-93 அன்று தமிழ்நாடு விடுதலைப் படையினர் கடலூர் மாவட்டம் குள்ளஞ்சாவடி காவல் நிலையத்தைக் குண்டு வீசி தாக்கியதில் ஒரு காவலர் மரணமடைந்தார். 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

25-5-94 அன்று தஞ்சாவூர் மாவட்டம் அம்மாப்பேட்டை என்ற இடத்தில், சோதனைச் சாவடியில், ஒரு காரை நிறுத்தி காவல்துறையினர் சோதனை செய்தபோது விடுதலைப்புலி இயக்கத்தைச் சேர்ந்த சக்தி என்பவர் எறிந்த குண்டு வெடித்ததில் ஒருவர் மரணமடைந்தார். 7 பேர் காயமடைந்தனர். 18 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

14-4-95 அன்று சென்னை இந்து முன்னணி அலுவலகத்தில் முஸ்லீம் தீவிரவாதிகள் குண்டு வைத்ததில் இருவர் இறந்தனர். குற்றவாளிகள் இன்னும் கைது செய்யப்படவில்லை. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

3-7-95 அன்று நாகை இந்து முன்னணி இயக்கத்தைச் சேர்ந்த தங்க முத்துகிருஷ்ணன் என்பவருக்கு அனுப்பப்பட்ட தபால் வெடிகுண்டு வெடித்ததில் தங்க முத்துகிருஷ்ணனின் மனைவி மரணம் அடைந்தார். ராஜாஉசேன், ரிஃபாயி, குத்புதின், ஹாரூன் இஸ்மாயில் ஆகிய நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். 4 பேர் தலைமறைவாக உள்ளனர். வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது.

இந்தச் சம்பவங்களைப் பற்றி ஆராய்ந்து அறிய மாநிலங்கள் அவை எதிர்க்கட்சித் தலைவர், திரு.சிக்கந்தர் பக்த் அவர்கள் தலைமையில் திரு. ஜெ.பி.மாத்தூர் (மாநிலங்களவை உறுப்பினர்), திருமதி. சுஷ்மா சுவராஜ் (மாநிலங்களவை



உறுப்பினர்), திரு.தனஞ்செய் குமார் (நாடாளுமன்ற உறுப்பினர்), திரு.ஓ.ராஜகோபால் (மாநிலங்களவை உறுப்பினர்) ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர், திரு. வாஜ்பாய் அவர்கள் அனுப்பிவைத்தார். இந்தக் குழு 29, 30-7-95 ஆகிய நாட்களில் சென்னையில் ஆய்வு நடத்தி அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது.

### மத தீவிரவாத வளர்ச்சி



மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாகத் தமிழகம் விளங்கிவந்தது. இதற்குக் களங்கம் விளைவிக்கும் நிகழ்ச்சிகள் 15 ஆண்டுகளுக்குமுன் ஆரம்பித்தன என்று சொல்லலாம். மற்ற மதத்தினரைப் பற்றி மனம் புண்படும் விதத்தில் சிலர் பேசி வந்தது, காழ்ப்புணர்ச்சியைத் தூண்டிவிட்டது. ஒரு மதத்தின் ஊர்வலங்கள் மற்றுமொரு மதத்தின் வழிபாட்டுத் தலங்கள் வழியாகச் செல்லும்போது பிரச்சினைகள் ஏற்பட்டன. அரசு பல சமயங்களில் தலையிட்டு அசம்பாவிதங்களைத் தவிர்த்திருக்கிறது. 1992 - ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6 - ஆம் தேதி அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி தமிழக முஸ்லீம்களிடையே பெருத்த கொந்தளிப்பை ஏற்படுத்தி, மத தீவிரவாதம் தமிழகத்தில் பரவிடக் காரணமாக அமைந்தது. 1992 - ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன்பு, தனி நபர்கள் மீது குறி வைத்து வன்முறை நடத்தப்பட்டு வந்தது. பாபர் மசூதி இடிக்கப்பட்ட பின் சில முஸ்லீம் தீவிரவாத வன்முறையாளர்கள் குண்டு வெடிப்புகளில் ஈடுபடலாயினர். சென்னையில் ஆர்.எஸ்.எஸ் அலுவலகத்தில் குண்டு வெடிப்பு, இந்து முன்னணி அலுவலகத்தில் குண்டு வெடிப்பு ஆகியவை நிகழ்ந்தன.

### கோயம்புத்தூர் குண்டுவெடிப்பின் பின்னணி

1993- ல் ஆரம்பித்த குண்டுவெடிப்புகளின் தொடர்ச்சியாகக் கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு என்ற நிலை இருந்தாலும், கோயம்புத்தூர் குண்டு வெடிப்பிற்கு முன்பு நிகழ்ந்த சமீபகால நிகழ்வுகளைப் பற்றிக் குறிப்பிடவேண்டும். 28-1-97 அன்று பொள்ளாச்சியில் அகில இந்திய ஜிஹாத் கமிட்டியின் தலைவர் பழனிபாபா ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலையையொட்டி கோயம்புத்தூரில் சில வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன. அதில் 4 முஸ்லீம்களும், 2 இந்துக்களும் உயிரிழந்தனர். இந்த வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து 1997 - ஆம் ஆண்டு செப்டம்பரில் ஏற்பட்ட வன்முறையில் 5 இந்துக்கள் கொல்லப்பட்டனர். இந்த இரு நிகழ்வுகளிலும் காவல்துறையினர் உடன் நடவடிக்கை எடுத்து, 43 முஸ்லீம்களையும், 27 இந்துக்களையும் கைது செய்தனர். இருப்பினும், ஏற்கெனவே கூறியதுபோல், மத நல்லிணக்கம் பாதிக்கப்பட்டிருந்த இந்தச் சூழ்நிலையில், 29-11-97 அன்று கோயம்புத்தூரில் அலுவலில் இருந்த செல்வராஜ் என்னும் காவலர், அல் உம்மா தீவிரவாத முஸ்லீம்களால் குத்திக் கொலை செய்யப்பட்டார். இதையடுத்து, கோயம்புத்தூரில் மத தீவிரவாதிகள் நடத்திய வன்முறைச் சம்பவங்களில் 18 முஸ்லீம்களும் 4 இந்துக்களும் உயிரிழந்தனர். சட்டம் - ஒழுங்கைக் காப்பாற்ற உடனடியாக ராணுவம் வரவழைக்கப்பட்டு 24 மணி நேரத்திற்குள் கோயம்புத்தூரில் வன்முறை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. 3-12-97 அன்று, உடுமலைப்பேட்டையில் குண்டு வெடித்ததில் 3 பேர் மரணமடைந்தனர். அப்துல் கையூம், அப்துல் கரீம், பழனி பாபு, சுல்தான் நஸீர் ஆகிய நால்வர் கைது செய்யப்பட்டு, வழக்கு புலன் விசாரணையில் உள்ளது. 6-12-97 அன்று, திருச்சியில் பாண்டியன் விரைவு ரயிலிலும், ஈரோடு அருகில் சேரன் விரைவு ரயிலிலும், இஸ்லாமியப் பாதுகாப்புப் படையினரால் வைக்கப்புட்ட குண்டுகள் வெடித்ததில் 6 பேர் மரணமடைந்தனர். அப்துல் ரஹீம், அலி அப்துல்லா ஆகிய இருவரும் இவ்வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது. 14-2-98 அன்று கோயம்புத்தூரில் வெடிகுண்டுகள் வெடித்ததில் 49பேரும், குண்டுகள் தயாரித்தவர்கள் 6 பேரும், விபத்துக்களில் 4 பேரும், மொத்தம் 59 பேர் (46 இந்துக்கள், 13 முஸ்லீம்கள்) மரணமடைந்தனர். இந்த வழக்குத் தொடர்பாக, 20-4-98 வரை 158 குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு 102 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நவம்பர் 1997 -ல் கோவையில் காவலர் செல்வராஜ் கொலை செய்யப்பட்டு அதன் தொடர்பாக நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் 18 முஸ்லீம்கள் கொல்லப்பட்ட துயர சம்பவத்திற்குப் பழிவாங்கும் படலமாகவே இந்த விரும்பத்தகாத குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என்பது புலன் விசாரணையில் தெரியவருகிறது.

### கோயம்புத்தூர் குண்டுவெடிப்புகள் குறித்து முன்னெச்சரிக்கைச் செய்திகள்

முஸ்லீம்கள் அடைந்த பாதிப்பிற்குப் பழிவாங்கக் கோயம்புத்தூரின் புறநகர்ப் பகுதிகளில் எதிர்த்தாக்குதல் மேற்கொள்ள அல் உம்மா இயக்கத்தினருக்கு அதன் தலைவர் உத்தரவிட்டிருப்பதாகவும், காவல் நிலையங்களும், காவல்துறை ஆணையர் அலுவலகமும், எரிவாயு லாரிகளும் தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்றும் மத்திய அரசு அமைப்பு ஒன்றிடமிருந்து 21.12.97 தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. உடனடியாகக் கோயம்புத்தூர் காவல்துறை ஆணையாளரும், கோயம்புத்தூர் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரும் மாநில நுண்ணறிவுப் பிரிவினரால் எச்சரிக்கப்பட்டனர். கோயம்புத்தூர் காவல்துறை ஆணையாளரும் 25.12.97 அன்று தன் அலுவலர்களைக்கூட்டி, அவர்களை எச்சரித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். எட்டு சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டன. காவல் நிலையங்களுக்கும் காவல்துறை ஆணையாளர் அலுவலகத்திற்கும் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தத் தகவலின் அடிப்படையில் 24.12.97 அன்று காவல்துறைத் தலைமை இயக்குநர், கூடுதல் இயக்குநர் (சட்டம், ஒழுங்கு), கூடுதல் இயக்குநர் (நுண்ணறிவு), உள்துறைச் செயலாளர்,

பொதுத் துறைச் செயலாளர் ஆகியோருடன் தலைமைச் செயலாளர் நடத்திய கூட்டத்தில் விவாதித்து முஸ்லிம் அடிப்படைவாத இயக்கத் தலைவர்களைத் தீவிரமாகக் கண்காணிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. மேலும், தீவிரத் திட்டம் (Contingency Plan) ஒன்றும் தயாரிக்க முடிவு எடுக்கப்பட்டது. தீவிரக் கண்காணிப்பின் விளைவாக, திருச்சி ரயில் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட அப்துல் ரகீம் என்பவர் 10-1-98 அன்று கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் 2.1.98 அன்று, இந்து இயக்கங்களின் தலைவர்களையும் காவல்துறை அலுவலர்களையும் தாக்க அல் உம்மா பிரிவினர் திட்டம் போட்டிருப்பதாகவும், கோட்டைமேடு பகுதியில் தகராறு ஏற்படுத்தி போலீஸ் வந்தவுடன் அவர்களைத் தாக்குவதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் மத்திய அரசு அமைப்பு ஒன்றிடமிருந்து தகவல் வந்தது. இந்தத் தகவலும் உடனடியாகக் கோயம்புத்தூர் காவல்துறை ஆணையாளருக்குத் தெரிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் இந்து இயக்கத்தினர் சிலருக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. காவல்துறை அலுவலர்களும் எச்சரிக்கப்பட்டனர்.

மத்திய அரசுத் துறையிடமிருந்து 19-1-98ல் வரப்பெற்ற மற்றொரு அறிக்கையில் அல் உம்மா இயக்கத்தினர் சிலர் கோயம்புத்தூரில் பயன்படுத்துவதறகு வெடிமருந்துகள் வாங்க ஏர்வாடி காசிம் என்பவரைக் கேட்டுள்ளதாகவும், ரம்ஜானுக்கு ஒரு வாரத்திற்குப் பின் வன்முறை நடத்தத் திட்டம் தீட்டியிருப்பதாகவும் தகவல் தெரிவிக்கப்ட்டுள்ளது. மேலும், கைது செய்யப்பட்டுள்ள ரகீம் விடுதலை செய்யப்படாவிட்டால் வன்முறையில் ஈடுபட ஜிகாத் கமிட்டி முடிவு செய்திருப்பதாகவும் கூறப்பபட்டுள்ளது. இத்தகவலும் உடனுக்குடன் அனைத்துக் காவல்துறை ஆணையாளர்களுக்கும் மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. ஏர்வாடி காசிமைப் பிடிப்பதற்கான முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டன.

23.1.98 அன்று மத்திய உள்துறை அலுவலகத்திலிருந்து வந்த செய்தியில் இஸ்லாமியப் பாதுகாப்புப் படை என்ற பெயரில் அல் உம்மா இயக்கத்தினர் கோயம்புத்தூர் நகரில் குண்டு வெடிக்கக் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில், கோவை நகரக் காவல்துறை ஆணையாளரும், கோவை மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரும் உடனடியாக எச்சரிக்கப்பட்டனர்.

இதுபோன்ற செய்திகள் குறித்து, காவல்துறை தலைமை இயக்குநரும், கூடுதல் தலைமை இயக்குநர் (சட்டம், ஒழுங்கு)-ம் கோயம்புத்தூர் காவல்துறை ஆணையாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டும் எச்சரித்துள்ளனர்.

மாநில நுண்ணறிவுப் பிரிவு தன் அலுவலர்கள் மூலம் தகவல் சேகரித்து 3.12.97 முதல் 10.2.98 வரை 12 எச்சரிக்கைச் செய்திகளைக் கோயம்புத்தூர் காவல் துறை ஆணையாளருக்கு அனுப்பியுள்ளது. 3.12.97 அன்று முஸ்லீம் தீவிரவாதிகள் காவல்துறை குடியிருப்புகளைத் தாக்கத் திட்டமிட்டிருப்பதாகச் செய்தி அனுப்பப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து காவல்துறை அலுவலர்களும். அவர்களின் குடியிருப்புகளும், வாகனங்களும், இந்தியன் ஆயில் மற்றும் பாரத் பெட்ரோலிய நிறுவனங்களும் தாக்குதலுக்கு உள்ளாகக் கூடும் என்றும், குண்டு வெடிப்புத் தாக்குதல் நடத்தப்படக் கூடும் என்றும் எச்சரிக்கைச் செய்திகள் அனுப்பப்பட்டுள்ளன. ஆயுதங்கள் மறைத்து வைக்கப் பட்டிருக்கும் இடங்கள் என்று குறிப்பிட்டு இரண்டு செய்திகளும் அனுப்பப்பட்டுள்ளன. இறுதியாக 10.2.98 அன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்தியில் அல் உம்மா இயக்கத்தினர் திருமால் வீதியில் ஒரு குறிப்பிட்ட கட்டிடத்திற்கு வந்து போவதாகவும், பிப்ரவரி 14 அல்லது 20 அன்று குண்டுகள் வெடிக்கத் திட்டம் தீட்டியிருப்பதாகவும், கோயம்புத்தூர் காவல்துறை ஆணையாளருக்கு வான்தந்தி மூலம் செய்தி அனுப்பப்பட்டுள்ளது. இந்தத் தகவல் அவருக்குக் கோயம்புத்தூரில் உள்ள மாநில நுண்ணறிவுப் பிரிவு அதிகாரியினால் நேரடியாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றிக் கூடுதல் இயக்குநர் (நுண்ணறிவு) கோவை நகரக் காவல்துறை ஆணையாளருக்கு 12-ஆம் தேதி ஒரு நேர்முகக் கடிதமும் அனுப்பியுள்ளார். கோயம்புத்தூர் காவல்துறை ஆணையாளர், செய்தியில் குறிப்பிட்ட இடங்களைத் தேடிப் பார்த்தாகவும், குண்டுகள் ஏதும் இல்லை எனவும் காவல்துறை இயக்குநனருக்குப் பின்னர் அனுப்பிய பதிலில் குறிப்பிட்டுள்ளார்.



சர். பிட்டி. தியாகராயர் பிறந்த நாளான 27.4.98 அன்று மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

*குண்டுவெடிப்பு நடைபெற்ற சில மணி நேரங்களிலேயே இராணுவமும், சி.ஆர்.பி.எப் -ம் வரவழைக்கப்பட்டு கோயம்புத்தூரில் வன்முறை ஒடுக்கப்பட்டது. திருமால் வீதியில் ஒரு கட்டடத்தில் தீவிரவாதிகள் தஞ்சம் அடைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, 14. 2. 98 அன்று இரவே அக்கட்டடத்தைப் போலீசார் சுற்றி வளைத்தனர். தீவிரவாதிகள் வைத்திருந்த குண்டு வெடித்ததில் தீவிரவாதிகளில் ஆறு பேர் இறந்தனர். எஞ்சியிருந்த எட்டுப் பேர் கைது செய்யப்பட்டனர்.*

அரசு பல எச்சரிக்கைகள் செய்தும், குண்டு வெடிப்புகளைத் தடுக்காமல் போனதற்கு கோயம்புத்தூர் காவல் துறை ஆணையாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது பெரும் தண்டனைக்குரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

வெடிகுண்டுகள் பயன்படுத்தப்படக்கூடும் என்ற தகவலின் அடிப்படையில், 1.2.98 அன்று காவல்துறை இயக்குநர் அனைத்துக் காவல்துறை ஆணையாளர்களுக்கும் மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும் அனுப்பிய செய்தியில் 1-2-98 நள்ளிரவு முதல் 4-2-98 வரை மாநிலம் முழுவதும் வெடிப்பொருட்கள் தீவிர தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. மீண்டும் 9-2-98 அன்று அனுப்பப்பட்ட செய்தியில் 9-2-98 நள்ளிரவு முதல் 11-2-98 நள்ளிரவு வரை தணிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வெடிமருந்துக் கடைகளைத் தணிக்கை செய்வதுடன், கள்ளத்தனமாக வெடிமருந்துகளை வைத்திருப்பவர்களைக் கண்டுபிடிக்கும்படியும், குறிப்பாக - வாகனத் தணிக்கைள் மேற்கொள்ளும்படியும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மீண்டும் 10.2.98 அன்று அனுப்பப்பட்ட வான்செய்தியில் வெடிபொருள் சோதனை, இரவு பகல் வாகனத் தணிக்கை, லாட்ஜ் தணிக்கை ஆகியவற்றைச் செய்யும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. குண்டுகள் தயாரித்து, குறிப்பாக சென்னை, கோயம்புத்தூர், நாகர்கோவில், திருச்சி, உதகமண்டலம் தொகுதிகளில் பீதியை ஏற்படுத்த முயற்சிகள் இருக்கக்கூடும் என்றும் இந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கைகளின் அடிப்படையில் 13-2-98 வரை மாநிலம் முழுவதும் 49 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 81 பேர் கைது செய்யப்பட்டு, சுமார் 2000 நாட்டு வெடிகுண்டுகள், 586 ஜெலட்டின் குச்சிகள், 1595 டெடனேட்டர்கள், உரிமம் இல்லாத 8 துப்பாக்கிகள், 2 ரிவால்வர்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன. ஆனால், கோயம்புத்தூர் மாநகரத்தில் எவ்விதப் பொருள்களும் கைப்பற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1997 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த கலவரங்களுக்குப் பின், கோயம்புத்தூர் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு முன் வரை, கோயம்புத்தூர் நகரில் 23 பேரும் (14 இந், 9 முஸ்லீம்), கோயம்புத்தூர் மாவட்டத்தில் 5 பேரும் (3இந்து, 2முஸ்லீம்) தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். மொத்தம் 259 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

## கோயம்புத்தூர் குண்டுவெடிப்பிற்குப் பின் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

கோயம்புத்தூர் குண்டு வெடிப்பிற்குப் பின்னர் அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது :-

குண்டுவெடிப்பு நடைபெற்ற சில மணி நேரங்களிலேயே இராணுவமும், சி.ஆர்.பி.எப்-ம் வரவழைக்கப்பட்டு கோயம்புத்தூரில் வன்முறை ஒடுக்கப்பட்டது. திருமால் வீதியில் ஒரு கட்டடத்தில் தீவிரவாதிகள் தஞ்சம் அடைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, 14-2-98 அன்று இரவே அக்கட்டடத்தைப் போலீசார் சுற்றி வளைத்தனர். தீவிரவாதிகள் வைத்திருந்த குண்டு வெடித்ததில் தீவிரவாதிகளில் ஆறு பேர் இறந்தனர். எஞ்சியிருந்த எட்டுப் பேர் கைது செய்யப்பட்டனர்.

**“கோயம்புத்தூர் குண்டு வெடிப்புகள் நடைபெற்ற இரண்டு மணிநேரத்திற்குள் அல்உம்மா இயக்கமும், அகில இந்திய ஜிஹாத் கமிட்டி இயக்கமும் மாநில அரசால் தடைசெய்யப்பட்டன. அல்உம்மா இயக்கத் தலைவர், எஸ்.ஏ. பாஷா மற்றும் அவருடன் இருந்த 12பேர் உடன் கைது செய்யப்பட்டனர். பின்னர், அவற்றின் அலுவலகங்களுக்கு சீல் வைக்கப்பட்டது. அவற்றின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. அல்உம்மா இயக்கத்தைச் சேர்ந்த 53 நபர்களும் அகில இந்திய ஜிகாத் கமிட்டியை சேர்ந்த 66 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.”**

கோயம்புத்தூர் குண்டு வெடிப்புகள் நடைபெற்ற இரண்டு மணிநேரத்திற்குள் அல்உம்மா இயக்கமும், அகில இந்திய ஜிஹாத் கமிட்டி இயக்கமும் மாநில அரசால் தடைசெய்யப்பட்டன. அல்உம்மா இயக்கத் தலைவர், எஸ்.ஏ. பாஷா மற்றும் அவருடன் இருந்த 12பேர் உடன் கைது செய்யப்பட்டனர். பின்னர், அவற்றின் அலுவலகங்களுக்கு சீல் வைக்கப்பட்டது. அவற்றின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. அல்உம்மா இயக்கத்தைச் சேர்ந்த 53 நபர்களும் அகில இந்திய ஜிகாத் கமிட்டியை சேர்ந்த 66 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காவல்துறைத் தலைவர் ஒருவர் தலைமையில் மாநிலக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்பு விசாரணைக் குழு திறம்பட புலன் விசாரணை மேற்கொண்டு இக் குற்றவாளிகளைக் கைது செய்ததுடன், சதியை அம்பலப்படுத்தக்கூடிய மிகப் பயனுள்ள சாட்சியங்களையும் சேகரித்துள்ளது.

புலன் விசாரணையில், 20-4-98 வரை 158 குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 102 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 8 பேர் மரணம் அடைந்துள்ளனர். வெடிபொருட்கள் கர்நாடக மாநிலத்தில் இருந்து வாங்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு அம்மாநிலத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், இஸ்லாமியப் பாதுகாப்புப்படை என்ற இயக்கத்தைச் சேர்ந்த அலி அப்துல்லா என்பவர் திருவாரூர் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு அவர் 6-12-97 அன்று நடந்த ரெயில் குண்டு வெடிப்புகளில் சம்பந்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கோபம்புத்தூர் நகரிலும் கோயம்புத்தூர் மாவட்டத்திலும் தீவிரவாதிகளால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகளும் பொருட்களும் கைப்பற்றபட்டுள்ளன.

சென்னை நகரில் மேற்கொள்ளப்பட்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, வெடிகுண்டுகளும், வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டதுடன், பல தீவிரவாதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். 1042 எலக்ட்ரிக் டெடனேட்டர்கள், 1022 சாதாரண டெடனேட்டர்கள், 5 நாட்டு வெடிகுண்டுகள், 37 பெட்ரோல் குண்டுகள், 187 ஜெலட்டின் குச்சிகள், குறித்த நேரத்தில் வெடிக்கும்-குண்டு (time bomb) ஒன்று, 2 டின் குண்டுகள், 12 பெட்டி குண்டுகள், உரிமம் இல்லாத 3 ரிவால்வர்கள், 3 பைப் வெடிகுண்டுகள் முதலியவை கைப்பற்றப்பட்டன.

பிப்ரவரி 14-க்குப் பிறகு இதுவரை 35 பேர் (முஸ்லீம்கள்) தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம் மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் காவல்துறை இயக்குநர்கள் (DGP) பாண்டிச்சேரி காவல்துறைத் தலைவர் (I.G.) ஆகியோரது கூட்டம் மாதந்தோறும் நடத்தப்பட்டு, தீவிரவாதிகளைக் கண்காணித்து அவர்கள் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுப்பதென முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக, கோயம்புத்தூரில் குண்டு வெடிப்பிற்குப் பின்பு மாநிலத்தில் வேறு எந்தப் பகுதியிலும் பின் விளைவுகள் இல்லாமல் தடுக்கப்பட்டது. மத்தியில் புதிய அரசு பதவி ஏற்கும் நாளான 19.3.98 அன்று மாநிலத்தில் குண்டு வெடிப்புகள் நிகழக் கூடும் என்ற தகவலின் அடிப் படையில் மாநிலம் முழுவதும் காவல் துறையினர் முனைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டதின் விளைவாக எந்தவித அசம்பாவிதமும் நிகழாமல் தடுக்கப்பட்டது. தற்போத தமிழகம் எங்கும் பூரண அமைதி நிலவுகிறது.

குஜராத் மாநிலத்தின் தலைமை நீதிபதியாக இருந்து ஒய்வுபெற்ற நீதிபதி திரு.பி.ஆர்.கோகுல கிருஷ்ணன் தலைமையில் ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு கோயம்புத்தூர் குண்டு வெடிப்பு நிகழ்ந்ததற்கான சூழ்நிலைகள் குறித்தும், பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய நஷ்ட ஈடு குறித்தும், இது போன்ற சம்பவங்களைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் ஆராய்ந்து அறிக்கை தரும். இடைக்கால நிவாரணம் வழங்க ஆறரைக் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம் மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் காவல்துறை இயக்குநர்கள் (DGP) பாண்டிச்சேரி காவல்துறைத் தலைவர் (I.G.) ஆகியோரது கூட்டம் மாதந்தோறும் நடத்தப்பட்டு, தீவிரவாதிகளைக் கண்காணித்து அவர்கள் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுப்பதென முடிவு எடுக்கப்பட்டுள்ளது.**



புலன் விசாரணையின் அடிப்படையில் குண்டு வெடிப்புகளில் சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உயர்நீதிமன்ற அனுமதியுடன் தனிக்கோர்ட் ஒன்று நிறுவி வழக்கு விசாரணையை விரைவுபடுத்தவும் அரசு முடிவு எடுத்துள்ளது.

## ஐ.எஸ்.ஐ. நடவடிக்கைகள்

தமிழகத்தில் ஐ.எஸ்.ஐ. உளவாளிகள் நடமாடுவது பற்றியோ கோயம்புத்தூர் குண்டுவெடிப்புகளில் அவர்களுடைய ஈடுபாடு பற்றியோ மத்திய உள்துறையிலிருந்தோ அல்லது மத்தியப் புலனாய்வுத் துறையிலிருந்தோ தகவல் ஏதும் இல்லை. பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. இந்தியாவில் வன்முறைச் சம்பவங்களை நிகழ்த்தி குழப்பத்தை விளைவிக்கும் என்பது பற்றிபொதுப்படையான செய்திகள் அவ்வப்போது மத்திய உள்துறையிலிருந்து வந்துள்ளன. பொதுவாக இவ்வியக்கம் காஷ்மீர் தீவிரவாதிகள் மற்றும் சீக்கிய தீவிரவாதிகள் துணையுடன் இந்தியாவில் பல்வேறு வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடக்கூடும் என்று தகவல் உள்ளது.

***கோவையில் குண்டு வெடிப்பு நிகழ்ந்த நாளன்று பி.ஜே.பி. பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகக் திரு.எல்.கே. அத்வானி அவர்கள் கோவை வந்திருந்தார். அவருக்குத் தக்க பாதுகாப்பு அளிப்பதில் அரசு மிகவும் கவனமாக இருந்தது. இந்தியப் பிரதமருக்கு இணையான பாதுகாப்பு அவருக்கு அளிக்கப்பட்டது. குண்டு வெடிப்பில் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தவர்களை நேரில் பார்க்கவேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டபோது அவருக்குத் தக்க பாதுகாப்புகள் அனைத்தையும் அரசு செய்தது. அதேநாள், இரவு திருச்சியில் திரு.அத்வானி அவர்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டத்திற்கும் பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது.***

## திரு. அத்வானி உயிருக்குப் பாதுகாப்பு

கோவையில் குண்டு வெடிப்பு நிகழ்ந்த நாளன்று பி.ஜே.பி. பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகக் திரு.எல்.கே. அத்வானி அவர்கள் கோவை வந்திருந்தார். அவருக்குத் தக்க பாதுகாப்பு அளிப்பதில் அரசு மிகவும் கவனமாக இருந்தது. இந்தியப் பிரதமருக்கு இணையான பாதுகாப்பு அவருக்கு அளிக்கப்பட்டது. குண்டு வெடிப்பில் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தவர்களை நேரில் பார்க்கவேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டபோது அவருக்குத் தக்க பாதுகாப்புகள் அனைத்தையும் அரசு செய்தது. அதேநாள், இரவு திருச்சியில் திரு.அத்வானி அவர்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டத்திற்கும் பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

## மத்திய அரசின் ஒத்துழைப்பு

கோவை குண்டு வெடிப்பு சம்பந்தப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பற்றியும் பின்னர் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றியும் தமிழக அரசு மத்திய அரசிற்கு அனைத்து தகவல்களையும் அனுப்பியுள்ளது. தீவிரவாதத்தை ஒடுக்குவதில் தமிழக அரசு தீவிரமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி அதற்கு மத்திய அரசிடமிருந்து பின்வரும் உதவிகளைத் தமிழக அரசு கோரியுள்ளது :

அ) கோயம்புத்தூரில் மத்திய அரசின் அதிரடிப்படையினுடைய பட்டாலியன் ஒன்றை நிரந்தரமாக நிறுவவேண்டும்.

ஆ) மத்திய அரசும் தமிழக அரசும் இணைந்து செலவுகளைப் பகிர்ந்துகொண்டு இரண்டு இந்திய ரிசர்வ் பட்டாலியன்களைத் தமிழகத்தில் நிறுவ வேண்டும்.

இ) அல்-உம்மா மற்றும் ஜிகாத் கமிட்டி ஆகிய இயக்கங்கள், பிற மாநிலங்களில் இருந்தும் செயல்படுவதால் அகில இந்திய அளவில் அவற்றைத் தடை செய்யவேண்டும். இதற்கான கோரிக்கை 18-3-98ல் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஈ) காவல்துறையை நவீனப்படுத்த மத்திய அரசு ஆண்டுதோறும் 10 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்கவேண்டும்.

உ) வெடிபொருள் கட்டுப்பாட்டுச் சட்டம் மத்திய அரசுடைய சட்டமாகையால் வெடிபொருளை வைத்திருத்தல், எடுத்துச் செல்லுதல் ஆகியவற்றிற்குக் கடுமையான வழிமுறைகளை மத்திய அரசு விதிக்கவேண்டும். இதற்கான கடிதத்தை 21-3-98 அன்று மாநில அரசு மத்திய அரசிற்கு அனுப்பியுள்ளது.

மைய அரசின் உள்துறை சிறப்புச் செயலாளர், திரு.அசோக்குமார் தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு சென்னைக்கு 16.4.1998 அன்று அனுப்பி வைத்தது. மத தீவிரவாதத்திற்கு எதிராக அரசு எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி இந்தக் குழுவிற்கு அலுவலர்களால் விளக்கிக் கூறப்பட்டது. மத்திய அரசு குழுவும், தமிழக அரசு மற்றும் தமிழகக் காவல்துறை எடுத்துள்ள நடவடிக்கைகளில் முழு திருப்தி தெரிவித்தது. இந்தச் சமயத்தில் மத்திய அரசிடம் தமிழக அரசு கோரிய கோரிக்கைகள் பற்றி மறுபடியும் வலியுறுத்தப்பட்டது. தீவிரவாதத்தை முறியடிப்பதற்குத் தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு முழு ஒத்துழைப்பைத் தரவேண்டுமெனத் தமிழக அரசு கோருகிறது.

தரப்பட்டுள்ள விவரங்களிலிருந்து தமிழக அரசு தீவிரவாதத்தை ஒருபோதும் அனுமதிக்கவில்லை என்பது தெளிவாகும். வன்முறைகள் நிகழ்ந்த போதெல்லாம் பாரபட்சமின்றித் தீவிரவாதிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தீவிரவாதிகள் பலர் கோவை குண்டுவெடிப்பிற்கு முன்பாகவே, தேசியப் பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், குண்டு வெடிப்புச் சம்பவத்திற்குப் பிறகு, உடனடியாகத் தீவிரவாத இயக்கங்கள் இரண்டைத் தமிழக அரசு தடை செய்தது. இந்த இயக்கங்கள் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. அவர்களுடைய அலுவலகங்களும் மூடப்பட்டு, சீல் வைக்கப்பட்டுள்ளன. தீவிரவாதத்தில் ஈடுபடுவர்க்ள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்கும். தீவிரவாதிகளை முழுமையாகக் கட்டுப்படுத்த ஒரு தனிச்சட்டத்தை இயற்ற அரசு முடிவு செய்துள்ளது. தீவிரவாத்தை ஒழிக்க இது உதவுமென அரசு கருதுகிறது.

**"இவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக, கோயம்புத்தூரில் குண்டு வெடிப்பிற்குப் பின்பு மாநிலத்தில் வேறு எந்தப் பகுதியிலும் பின் விளைவுகள் இல்லாமல் தடுக்கப்பட்டது. மத்தியில் புதிய அரசு பதவி ஏற்கும் நாளான 19.3.98 அன்று மாநிலத்தில் குண்டு வெடிப்புகள் நிகழக் கூடும் என்ற தகவலின் அடிப்படையில் மாநிலம் முழுவதும் காவல் துறையினர் முனைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டதின் விளைவாக எந்தவித அசம்பாவிதமும் நிகழாமல் தடுக்கப்பட்டது. தற்போத தமிழகம் எங்கும் பூரண அமைதி நிலவுகிறது."**

தீவிரவாதிகள் அனைத்து மதங்களிலும் இருக்கும் மிகக்குறைந்த பிரிவினரேயாகும். மதத்தலைவர்கள் அனைவரும் மதத் தீவிரவாதிகளை ஒதுக்கி வைக்கவேண்டும். அவ்வாறு ஒதுக்கிவைத்து மதத் தலைவர்கள் சிலரும் அறிக்கைகள் வெளியிட்டிருக்கிறார்கள். மதத் தீவிரவாதிகளுடைய செயல்களுக்கு எந்தவிதமான ஆதரவையும் அளிக்காது, அவர்களைக் கண்டித்து, தீவிரவாதத்தைத் தடுப்பதற்கு அரசிற்கு எல்லா உதவிகளையும் அளிக்க முன்வர வேண்டும். மத வேற்றுமையைத் தூண்டிவிடும் பேச்சுகளைக் குறைத்து, எம்மதமும் சம்மதம் என்ற அடிப்படையில் பிற மதத்தினரையும் மதிக்கக் கற்றுக்கொண்டு, மத நல்லிணக்கத்தை உறுதி செய்ய மதத் தலைவர்கள் மேலும் உதவிடவேண்டுமென்று அரசு இத்தருணத்தில் கோருகிறது. அரசின் சட்டம் - ஒழுங்கு இயந்திரத்தை மட்டும் வைத்துக்கொண்டு, மதத்தீவிரவாதத்தை முழுமையாக ஒழிக்க இயலாது. மக்களுடைய மனதில் இருக்கின்ற மத வேறுபாட்டை நீக்கவேண்டும். அதற்கு சமுதாயத் தலைவர்களும், மதத் தலைவர்களும் துணை நிற்கவேண்டுமென்று அரசு வேண்டுவதுடன் அதற்கான முழு முயற்சிகளையும் அரசு எடுத்திடும் என்று உறுதி அளிக்கிறது.

கோயம்புத்தூர் குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இடைக்கால நிவாரணமாக இதுவரை 6½ கோடி ரூபாய் நிதி உதவியை அரசு அறிவித்துள்ளது. வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை எதுவாயினும் ஏற்பட்டுள்ள இழப்புக்கு அது ஈடாகாது என்பதை இந்த அரசு உணர்கிறது. இழப்புக்கு ஆளான குடும்பத்தினருக்குக் கண்ணீருடன் கலந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, தமிழகம் அமைதி பூமியாக விளங்கிட அனைத்துத் தரப்பு மக்களின் ஒத்துழைப்பையும் வழங்குமாறு மீண்டும் ஒருமுறை வேண்டிக் கேட்டுக் கொண்டு இந்த வெள்ளை அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்.

**மு.கருணாநிதி**
முதலமைச்சர்.



பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாளையொட்டி 29.4.98 அன்று சென்னை மெரினாவில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. க.அன்பழகன், மற்றும் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



# குடிநீர் பிரச்சினையைப் போக்க ஊராட்சி, நகராட்சிகளுக்கு ரூ.430 கோடி ஒதுக்கப்படும்.



1989ல் தற்போதைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்பதற்குப் முன்னால் ஊராட்சி ஒன்றியச்சாலைகளைத் தார்ச்சாலைகளாக மாற்றியமைக்க இயலாத நிலை இருந்தது. கலைஞர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பின்னர்தான் ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும் தார்ச் சாலைகளாக அமைக்கலாம் என்ற நிலையை ஏற்படுத்தினார்.

## கூடுதலாகத் தார்ச்சாலைகள் அமைப்பு

இதன் அடிப்படையில் 1996 - 97ல் 5,000 கி.மீ. தார்ச்சாலையும், 1997 - 98ல் 5,000 கி.மீ. தார்ச் சாலையும் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப் பட்டதன் பேரில், இதுவரை இரண்டு ஆண்டுகளில் 11,764 கி.மீ. தார்ச்சாலைகள் எடுக்கப்பட்டு பெரும்பகுதி முடிவடையும் நிலை உள்ளது. இதைத் தொடர்ந்து இந்த ஆண்டு சென்ற ஆண்டுகளைவிட சற்றுக் கூடுதலாக 7,000 கி.மீ. வரை தார்ச்சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

## நீர்நிலை ஆதாரம் மேம்பாட்டுத் திட்டம்

ஊராட்சிகளில் குடிநீர்ப் பிரச்சினையில் அதிகக் கவனம் செலுத்திடும் இந்த அரசு, இதற்குத் தொடர்புடைய இதர பணியான நீர்நிலை ஆதாரத்தை மேம்படுத்தும் புதிய திட்டத்தினைத் துவங்க உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஊராட்சிகளுக்கு உட்பட்ட பெரிய, சிறிய குளங்கள், குட்டைகள், ஊரணிகள் எதுவாக இருப்பினும் அவைகளில் ஒரு ஊராட்சிக்கு ஒன்று வீதம் எடுத்துக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் வரத்து வாய்க்கால்.மதகு, வடிகால் மதகு, தடுப்பு அணை, ப்டித்துறை, ஆழப்படுததும் பணி போன்ற பணிகளை செய்ய இருக்கிறது.

## ஊராட்சிகளுக்காக ரூ.126 கோடி

இதற்காக ஒவ்வொரு ஊராட்சிக்கும் தலா ரூ.1 லட்சம் வழங்கப்பட இருக்கிறது. இதன்படி தமிழகத்திலுள்ள 12,593 ஊராட்சிகளும் பயன்பெறும் வகையில் ரூ.126 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இதுவரை கிராமங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கு மட்டும் முதல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு வந்தது. உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு கட்டடங்கள் பற்றாக்குறை வெகுவாக இருப்பதால் இந்த ஆண்டு, முதல் முறையாக கிராமப்புறங்களில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 500 கட்டடங்கள் கட்டித்தர முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ரூ.14 கோடி அனுமதிக்கப்படும்.

1997 - 98 ஆம்ஆண்டில் கிராமப்புறங்களில் 2217 பொது விநியோக கட்டங்கள் கட்டித் தரப்பட்டது. இதைப்போன்று இந்த ஆண்டிலும், மேலும் 2000 பொது விநியோக கட்டடங்கள் ரூ.30 கோடி செலவில் கட்டித் தரப்படும்.

இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தில் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கு கட்டிட சாமான்கள் விலையேற்றம் மற்றும் தொழிலாளர் கூலி உயர்வு காரணமாக, தற்போதைய மதிப்பீட்டு தொகையை உயர்த்தி தரவேண்டும் என்று உறுப்பினர்களும், பயனாளிகளும் நீண்ட நாட்களாக வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு வலுவூட்டப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் கூரை அமைப்பதற்கென, தமிழக அரசு வழங்கி வரும் தொகையான, ரூ.7000த்தினை இந்த ஆண்டு ரூ.121,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கு முதல்வர் அறிவித்தபடி ரூ.35 இலட்சம் என்ற கணக்கின் அடிப்படையில் 235 தொகுதிகளுக்கும் ரூ.82.25 கோடி செலவிடப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு 2 ஜீப்புகள் என்ற முடிவின்படி ஏற்கெனவே இவ்வரசு வழங்கிய 211 ஜீப்புகள் போக, 173 ஜீப்புகளுடன் உதவி செயற்பொறியாளர்களுக்கு 68 ஜீப்புகளும் ஆக மொத்தம் 241 ஜீப்புகள் ரூ.9.035 கோடி செலவில் வழங்கப்படும்.

## 30 ஆயிரம் தெருவிளக்குகள்

முழுமையாகத் தெரு விளக்கு இல்லாத குடியிருப்புகளுக்குத் தெருவிளக்குவசதி அமைத்திடத் தேவையெனக் கணக்கிடப்பட்ட 50,000 தெரு விளக்குகளில் 1997 - 98ல் அமைக்க ஆணையிடப்பட்ட 20,000 தெரு விளக்குகள் தவிரத், எஞ்சியுள்ள 30,000 தெருவிளக்குகள் சுமார் ரூ.12.60 கோடி செலவில் அமைக்கப்படும்.

ஊரக இளைஞர் சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு தொழில்களில் பயிற்சியளிக்கும் நிலையங்களை மேம்படுத்திட ரூ.2 கோடி நிதி உதவி அளிக்கப்படும். பயிற்சியின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு அனைத்து அரசுத் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றம் பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றை ட்ரைசம் பயிற்சி நிறுவனங்களாகச் சேர்க்கப்படும்.

சட்டப்பேரவையில் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி அறிவிப்பு



## குடிநீர்க் குழாய்கள் அமைக்க ரூ.15 கோடி

கோடைக்காலத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் ஊராட்சிகளில் கைப்பம்புகள், விசைப்பம்புகள், புதிய குழாய் நீட்டிப்புச் செய்தல், குழாய் நீட்டிப்பினை விரிவுபடுத்துதல் போன்ற பணிகளுக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்குப் புதிதாக ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

சுற்றுலா மையங்கள், மாநகராட்சி மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகளை ஒட்டியுள்ள ஊராட்சிகள் தெரிவுசெய்து சாலை வசதி, பொது சுகாதார வசதி மேம்பாட்டிற்காகச் சமன்பாடு ஊக்க நிதியிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வழங்குவதற்கு ரூ.10 கோடி புதிதாக ஒதுக்கீடு செய்யப்படும்.

ரூ.13.88 இலட்சம் செலவில் யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து ஈரோடு மாவட்டம், பவானி வட்டாரத்தில் 500 எம்.எம் திறந்த சிலிண்டர் அமைப்புகள் இந்தியா மார்க் - 3 கைப்பம்புகள் நிறுவப்படும். இதைத்தவிர ரூ.21.80 இலட்சம் செலவில் சத்தியமங்கலம், தாளவாடி, அந்தியூர் வட்டாரங்களில் இந்தியா மார்க் - 2 பம்புகள், மார்க் - 3 பம்புகளாக மாற்றப்படும்.

மத்திய ஊரக சுகாதார திட்டத்தின் கீழ் - ஈரோடு, சேலம், நாமக்கல், மாவட்டங்களில் 176 கழிப்பிடங்கள் தலா ரூ.9,000 மதிப்பீட்டில் கட்டப்படும். மத்திய ஊரக சுகாதார திட்டம், யூனிசெப் மற்றும் டானிடா திட்டங்களுடன் இணைந்து முழுமையான ஊரக சுகாதாரத் திட்டம் இம்மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

50 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சந்தைகளை மேம்படுத்திக் கொள்ள தலா ரூ.5 இலட்சம் விதம் ரூ.2.5 கோடி நிதி வழங்கப்படும்.

தற்போது ஊராட்சிகளில் ஒப்படைக்கப்படும் திட்ட வேலைகளுக்குத் தேவையான சிமெண்ட் மற்றும் இரும்புக் கம்பிகள் ஊராட்சி ஒன்றிய இருப்பிலிருந்து வழங்கப்படுகின்றன. இனிமேல் தேவைப்படும் இரும்புக் கம்பிகள் மற்றும் சிமெண்ட் ஆகியவற்றை ஊராட்சிகளே வாங்கிக்கொள்ள அனுமதிக்கப்படும்.

### பணிகள் காலதாமதம் தவிர்த்திட ஏற்பாடு

தற்போது ஊராட்சிகளின் சுயநிதி மற்றும் வளர்ச்சித்திட்ட நிதியிலிருந்து செயல்படுத்தப் படும் வேலைகள் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தொழில்நுட்ப பணியாளர்கள் மூலம் செயல் படுத்தப்படுகின்றது.

ஊராட்சிகளின் நிதி ஆதாரங்கள் குறைவாகவே உள்ளன. ஆகவே சிறிய வேலைகளை மட்டுமே எடுத்துச் செய்யக்கூடிய நிலை உள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் சுமார் 30 முதல் 60 வரை ஊராட்சிகள் உள்ளன. இவற்றிற்கான பணிகளின் மதிப்பீடு மற்றும் மேலளவு செய்தல் யாவும் ஊராட்சி ஒன்றியத்தி லுள்ள தொழில்நுட்ப பணியாளர்கள் மூலம் செயல்படுத்தப்படுவதால் மிகுந்த காலதாமதம் ஆகிறது என முறையீடுகள் அரசிற்கு வந்துள்ளன.

இவ்வகையான இடர்பாடுகளை நீக்குவதற்குக் கேரளா போன்ற மாநிலங்களில் பட்டம் பெற்ற பொறியாளர்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் ஊராட்சிகளின் இடர்ப்பாடுகள் பெரிதும் நீங்கியுள்ளன.

இதுபோன்றே தமிழக அரசும் ஊராட்சிகளின் சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கு பட்டயப் பொறியாளர்களைப் பயன்படுத்திக் கொள்ள ஊராட்சிகளுக்கு அனுமதி வழங்கப் பரிசீலித்து வருகிறது. திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு பட்டயப் பொறியாளர்களை பயன்படுத்திக்கொள்ள ஊராட்சிகளுக்கு அனுமதி வழங்கப் பரிசீலித்து வருகிறது. திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகளுக்குத் தற்போதைய நடைமுறைகளே நீடிக்கும்.

ஒப்படைக்கப்படும் வேலைகளின் மதிப்பில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் இப்பொறியாளர் களுக்குக் கட்டணமாக ஊராட்சியிலிருந்து வழங்க அனுமதிக்கப்படும்.

1997 - 98 ஆம் ஆண்டில், தெருவிளக்கு சம்பந்தமான பொருட்கள் வாங்கிட அரசு நிறுவனங்களையும் மற்றும் பொருட்களின் விலையையும் நிர்ணயித்தது. தெரு விளக்கு சம்மந்தமான பொருள்கள் வாங்குவதற்குத் தற்போதுள்ள ஒப்பந்தக்காலம் முடிவுற்றதும், ஊராட்சிகள் தாங்களாகவே தங்கள் தேவைக் கேற்பத் தெருவிளக்கு சம்பந்தமான பொருள்களை (ஐ.எஸ்.ஐ) முத்திரை கொண்ட தரம் வாய்ந்த பொருட்களாக இருக்க வேண்டுமென்ற நிபந்தனைகளுடன் வாங்கிக் கொள்ள அனுமதி வழங்கப்படும்.

கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் பழுதுபார்ப்பதற்கு ஊராட்சிகளே விலைப்புள்ளி ஒப்பந்தப் புள்ளியினைப் பெற்று, ஊராட்சியின் தீர்மானத்துடன் செயலாக்கம் செய்திட அனுமதிக்கப்படும்.

ஊராட்சி ஒன்றியப் பொது நிதி உபரியிலிருந்து மேற்கொள்ளப்படும் மூலதனப் பணிகளுக்கான நிதிவரம்பு உயர்த்தப்பட்டு, தனியான பணிகளுக்கு ரூ.5 இலட்சம் வரை ஊராட்சிஒன்றியக் குழுவும், ரூ.5 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் வரை மாவட்ட ஆட்சித்தலைவரும், ரூ.10 இலட்சத்திலிருந்து 1 கோடி வரை ஊரக வளர்ச்சி இயக்குநரும், 1 கோடிக்குமேல் அரசும் நிர்வாக அனுமதி வழங்க அனுமதிக்கப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில் இளநிலை உதவியாளர் பதவிக்கு, பணி உயர்வு பெற, தகுதியான கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் பகுதிநேர . முழுநேர எழுத்தர்கள்வேலை வாய்ப்பகங்கள் மூலமே தேர்வு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கி இதன் மூலம் அனைத்து ஊராட்சி உதவியாளர்களும் இப்பதவிக்கு தகுதி பெற ஆவன செய்யப்படும்.

சொந்தக் கட்டடம் இல்லாத 289 ஊராட்சிகளுக்கும் இந்த ஆண்டு கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டு அனைத்து ஊராட்சிகளும் சொந்தக் கட்டடத்திலேயே செயல்படுகிறது என்ற நிலை ஏற்படுத்தப்படும்.

### ஊர்நல அலுவலர்கள் நியமனம்

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணிகளை ஒருங்கிணைத்து, திட்டப் பணிகளைத் துரிதமாகச் செயல்படுத்தத் தேவையான எண்ணிக்கையில் ஊர்நல அலுவலர்கள் களப்பணியாளர்களாக மீண்டும் நியமிக்கப்படுவார்கள். உறுப்பினர்களின் நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையில் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் சுகாதாரப் பணியாளர்களைப் பணியிடங்கள் தோற்றுவிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பணியிடங்களில் ஏற்கெனவே பதலியாட்டுகளாகப் பணிபுரிந்து வந்த



நபர்களே பெரும்பாலும் பணியமர்த்தப் பட்டுள்ளனர். இவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு தொகுப்பு ஊதியத்தினை மாற்றியமைத்து ஆணை வெளியிடப்படும். இதன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் 31.12.96 ல் ஏற்கெனவே பத்து ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு மாதம் 2,100 விதமும், ஐந்து முதல் பத்து ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு மாதம் ரூ.2000 மும் ஐந்து ஆண்டு வரை பணிபுரிந்தவர்களுக்கு ரூ.1500 மும் வழங்கப்படும்.

### துப்புரவுப் பணியாளர்

இதேபோன்று பேரூராட்சிகளில் பத்து ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர்களுக்கு மாதம் ரூ.1800 - ம், ஐந்து முதல் 10 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு மாதம் ரூ.1500ம் ஐந்து ஆண்டுகளுக்குள் பணி புரிந்தவர்களுக்கு மாதம் ரூ.1200ம் வழங்கப்படும். சென்னை மாநகராட்சிக்கு மட்டும் 2783 புதிய துப்புரவு பணியாளர்கள் பணியிடங்களைத் தோற்றுவித்து அரசு ஆணையிட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சிகளில் 600 விளக்குகளுக்கு ஒரு லைன்மேன் மற்றும் ஒரு ஹெல்பர் என்ற அடிப்படையில் புதிய பணியிடங்கள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரத்தைப் பொறுத்து தோற்றுவிக்கப்படும். பேரூராட்சிகளில் தற்போது இப்பணியை மின்வாரியப் பணியாளர்கள் செய்துவருகிறார்கள். இந்த நிலையை மாற்றித் தெருவிளக்குகள் பராமரிப்பதற்கெனப் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

மாநகராட்சிகளில் உள்ளது போன்று இனி மேல் நகராட்சிகளில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்களுக்கும் பாலியஸ்டர் சீருடை வழங்கப்படும்.

மாநிலத்திலுள்ள 102 நகராட்சிகளில் 79 நகராட்சிப் பகுதிகளில் மலேரியா, பைலேரியா போன்ற நோய்கள் பரவக்கூடிய வாய்ப்பு உள்ளதால் நோய்த் தடுப்பு நடவடிக்கைக்காகத் தெளிப்பான் மற்றும் மருந்து விநியோகத்திற்காக ரூ.50 இலட்சம் சிறப்பினமாக நிதி ஒதுக்கப்படும்.



அருப்புக்கோட்டை, மாதவரம், ஒசூர், திண்டுக்கல் மற்றும் சங்கரன் கோவில் நகராட்சிகளில் குடிநீர் திட்டங்களை மேம்படுத்த ரூ.1.50 கோடி ஒதுக்கப்படும்.

16 பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்டங்களை மேம்படுத்த ரூ.1.21 கோடி நிதி ஒதுக்கப்படும்.

பேரூராட்சிகளில் தண்ணீர் வசதியில்லாத பொதுக் கழிப்பிடங்களில் தண்ணீர் வசதி செய்து கொடுக்க ரூ.7.5 இலட்சமும், உலர் கழிப்பிடங் களைத் தண்ணீர் வசதி உள்ள நவீன கழிப்பிடங் களாக மாற்றியமைக்க ரூ.40 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்படும்.

பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிச்சாலை களின் நிலமையை ஆய்வு செய்து, அரசு பல்வேறு நிதியினங்களிலிருந்து சாலை மேம்பாட்டிற்காகச் சிறப்பாக ஒரு தொகையைப் புதிதாக முடிவு செய்துள்ளது. இதன்படி பேரூராட்சிகளுக்கு ரூ.2.5 கோடியும், நகராட்சிகளுக்கு ரூ.20 கோடியும் வழங்கப்படும். இந்தத் தொகையுடன் நகராட்சி மற்றும் பேரூராட்சிகள் தங்களது பொது நிதியையும் சேர்த்து நல்லமுறையில் சாலைகளைப் பராமரிக்கலாம்.

பேருந்து நிலையங்களுக்குச் செல்லும் சாலை, சிறிய தெருக்கள் மற்றும் சந்துகளை சிமெண்ட் சாலைகளாக மாற்றியமைக்கத் தனி நிதி இந்த ஆண்டு முதல் முறையாக ஒதுக்கீடு செய்யப்படும். அந்தந்த நகராட்சி பாதி செலவையும் பேரூராட்சி 25 சதவீத செலவையும் ஏற்கும். இந்தத் திட்டத்திற்காக நகராட்சிகளுக்கு ரூ.5 கோடியும், பேரூராட்சிகளுக்கு ரூ.10 கோடியும் ஒதுக்கீடு செய்யப்படும்.

3 மண்டல நகராட்சி இணை இயக்குநர்களுக்கும், 3 பேரூராட்சி உதவி இயக்குநர்களுக்கும் முறையே ரூ. 6.45 இலட்சம் மற்றும் 8.50 இலட்சம் செலவில் புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை கடந்த ஆண்டில் சுமார் 50 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்ட 22 பாலம் கட்டும் பணிகளில் முடிக்கப்பட்ட ஏழு பணிகள் தவிர எஞ்சிய பணிகள் நடப்பாண்டில் கட்டி முடிக்கப்படும்.

### சென்னையில் மேம்பாலங்கள்

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக மாநகரின் எல்லைக்குள் 12 இடங்களில் மேம்பாலம் அமைத்தல் மற்றும் சுரங்கப்பாதை அமைத்தல் ஆகியவற்றிற்கான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு உயர் தொழில்நுட்ப உதவியுடன் பணிகள் உடனடியாகத் துவங்கப்படும்.

ஏற்கெனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு சொத்துவரி நிர்ணயிக்கும் புதிய முறை அனைத்துப் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி களில் நடைமுறைப்படுத்தப்பட்டு, அந்த முறையின் அடிப்படையில் 1.10.98 முதல் வரி சீராய்வு செய்யப் படும்.

சுற்றுலா மையங்கள் மற்றும் புகழ் பெற்ற புனித ஸ்தலங்களாகக் கருதப்படும் பேரூராட்சி கள் மற்றும் நகராட்சிகளில் அடிப்படை வசதி செய்யக் கூடுதலாக சமன்பாடு நிதியிலிருந்து பேரூராட்சிகளுக்கு ரூ.5 கோடியும், நகராட்சி களுக்கு ரூ.3 கோடியும் இந்த ஆண்டு புதிதாக ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் சில பேரூராட்சிகளை மக்கள் தொகை, மக்கள் தொகை நெருக்கம், ஆண்டு வருமானம் மற்றும் விவசாய முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் ஊராட்சிகளாக மறுவகை மாற்றம் செய்ய முடிவு எடுக்கப்பட்டது. சுமார் 100 பேரூராட்சிகள் இதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றி உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி இவை களை ஊராட்சிகளாக அறிவித்திடத் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கை நடப்பு நிதியாண்டில் முடிவடையும்.

அடுத்த 2 ஆண்டுகளில் சென்னை மாநகரில் மீதமுள்ள 2,600 குழல் விளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றியமைக்கப்படும்.

இந்த நிதியாண்டில் குடிநீர்த் திட்டங் களுக்காக 28 மாவட்டங்கள் உள்ளடக்கிய 212 சட்ட மன்ற தொகுதிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள், 1090 ஊராட்சிகள் மற்றும் 5,500 ஊரகக் குடியிருப்புகளுக்கும், 20 ஊரகப் பேரூராட்சிகள் இதர ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்கும் ரூ.330 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். 5 நகராட்சிகள், 20 நகரப் பேரூராட்சிகள், குடியிருப்புகளுக்கும் குடிநீர்த் திட்டங்களுக்காகவும் இதர நகர பகுதிகளுக்கான திட்டங்களுக்காகவும் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

இந்த நிதி ஒதுக்கீடு ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்காகக் கடந்த ஆறு ஆண்டுகளின் சராசரி நிதி ஒதுக்கீடான ரூ.178 கோடியைக் காட்டிலும் 85 விழுக்காடு அதிகமாகும். இதே போன்று நகரக் குடிநீர்த் திட்டங்களுக்குச் சென்ற காலங்களில் ஒதுக்கப்பட்ட ரூ.48 கோடியைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாகும்.

### கோவை மாவட்டக் குடிநீர்த் திட்டங்கள்

கோவை மாவட்டத்தில் திருப்பூர் இரண்டாம் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 5 ஊராட்சி ஒன்றியங் களில் உள்ள 49 ஊராட்சிகளில் அடங்கிய 412 ஊரகக் குடியிருப்புகளுக்கான திட்டம் ரூ.31.5 கோடி மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டத்தில்

அரச்சலூர், தொட்டாம்பாளையம் திட்டங்கள் ரூ.19.60 கோடி மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் தாணிப்பாடி தண்டராம்பட்டு திட்டம் ரூ.4.38 கோடி மதிப்பீட்டிலும் கன்னியா குமரி மாவட்டம், கொல்லங்கோடு ஏழுதேசம் குடிநீர்த் திட்டம் ரூ.4.38 கோடி மதிப்பீட்டிலும் முடிக்கப்படவுள்ளது.

இந்த நிதியாண்டில் ஊரக குடிநீர்த்திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீடான ரூ.330 கோடியில் 56 ஊராட்சிகள் அடங்கிய 537 ப்ளோரைடால் பாதிக்கப்பட்ட ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.25 கோடி நிதி ஒதுக்கீட்டில் 72 ஆயிரம் மக்கள் பயன்பெறும் திட்டம் செயல்படுத்தப்படும்.

நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் 401.36 கோடி மதிப்பீட்டில் செயலாக்கப்பட்டு வரும் 16 பெரிய அளவிலான குடிநீர்த் திட்டங்கள் 33 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் 1999 - 2000 ஆண்டில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். உதாரணமாக நாகை, திருவாரூர், மாவட்டங்களில் வேதாரண்யம் - திருத்துறைப்பூண்டி திட்டம் ரூ.105.46 கோடி மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டத்தில் முத்தூர் - காங்கேயம் திட்டம் ரூ.62 கோடி மதிப்பீட்டிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் திசையன்விளை - நான்குனேரி திட்டம் ரூ.43 கோடி மதிப்பீட்டிலும், ரெம்பலூர் மாவட்டத்தில் துறையூர் திட்டம் ரூ.31.11 கோடி மதிப்பீட்டிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் கடம்பூர் - விளாத்திக்குளம் திட்டம் ரூ.28.50 கோடி மதிப்பீட்டிலும் செயலாக்கத்தில் உள்ளன.

இந்த நிதியாண்டில் 10 பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 21 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.272.71 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். உதாரணமாக, கோவை மாவட்டம், பொள்ளாச்சி ஊரகப் பகுதிகளுக்கான திட்டம் ரூ.54.70 கோடி மதிப்பீட்டிலும் ஈரோடு மாவட்டத்தில் வெள்ளக்கோவில் திட்டம் ரூ.24.30 கோடி மதிப்பீட்டிலும், நாகை மாவட்டத்தில சீர்காழி - செம்பனார் கோவில் திட்டம் ரூ.19.20 கோடி மதிப்பீட்டிலும், சேலம் - நாமக்கல் மாவட்டத்தில் பட்டணம் - சீராப்பள்ளி திட்டம் ரூ.61.41 கோடி மதிப்பீட்டிலும், பெரம்பலூர் மாவட்டத்தில் பூவாலூர் - குறும்பலூர் திட்டம் ரூ.26.40 கோடி மதிப்பீட்டிலும், திருச்சி மாவட்டத்தில் 4 ஊராட்சி ஒன்றியங்களில உள்ள 9 ஊராட்சிகளில் 43 ஊரகக் குடியிருப்புகளுக்கான திட்டம் ரூ.12 கோடி மதிப்பீட்டிலும் செயல்படுத்தப்படவுள்ளது.

## முதல்வர் அறிவித்தபடி தன்னிறைவுப் பணிகள்

தமிழக முதல்வர்அவர்கள் தமிழகத்தில் அனைத்து ஊரகக் குடியிருப்புகளிலும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வசதி பெறும் வகையில் 9-வது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதிக்குள் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என அறிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் முதற்கட்டமாக 1998 - 99 ஆம் ஆண்டிற்குள் 10 லிட்டருக்கும் குறைவாகக் குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகள் அனைத்தும் முழு அளவு குடிநீர் பெறும் வகையில் திட்டங்கள் நிறைவேற்றப்படும். மேலும் 11 முதல் 39 லிட்டர் வரை குடிநீர் பெறும் குடியிருப்புகளுக்கு முழு அளவில் குடிநீர் வழங்கும் அடிப்படையில் முதற்கட்டமாக இந்த ஆண்டே சில ஊராட்சி ஒன்றியங்கள் குடிநீர வசதியில் தன்னிறைவு அடையத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மற்ற ஊராட்சி ஒன்றியங்கள் 9-வது ஐந்தாண்டு திட்ட கால இறுதிக்குள் தன்னிறைவு அடையத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குடிநீர்ப் பற்றாக்குறை மிகுந்த இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 3 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 342 ஊராட்சிகளில் அடங்கிய 1,787 ஊரகக் குடியிருப்புகளைச் சேர்ந்த 14 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் சுமார் 400 கோடி மதிப்பீட்டில் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 5 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பாளையம், வேடசந்தூர், ஒட்டன்சத்திரம் நகரப் பேரூராட்சிகளில் எரியோடு, தாடிக்கொம்பு, அகரம் கிராமப் பேரூராட்சிகள் மற்றும் 284 ஊராட்சிகளில் அடங்கிய 1432 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.190 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த்திட்டம் நிறைவேற்றப்படும். காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் திண்டுக்கல் நகராட்சிக்கு ரூ.73 கோடி 2 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாடு திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

கோவை மாநகராட்சிப் பகுதியில் 8 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.48 கோடி மதிப்பீட்டில் பில்லூர் குடிநீர்த் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். சேலம் மாநகராட்சிப் பகுதியில் 6 இலட்சத்து 30 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.64 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாடு திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

சேலம் மாவட்டத்தில் 3,80,000 மக்கள் பயன்பெறும் வகையில் பட்டிணம் - சீராப்பள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து தம்மம்பட்டி மற்றும் 5 ஊரக பேரூராட்சிகள், 56 ஊராட்சிகளில் அங்கிய அனைத்து ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.43 கோடி மதிப்பீட்டில் கூட்டு குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

நாமக்கல் மாவட்டத்தில் 6 இலட்சத்து 30 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் பட்டிணம் - சீராப்பள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து 3 ஊரக பேரூராட்சிகள் மற்றும் 150 ஊராட்சிகள் அடங்கிய 858 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.64 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

## கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

மதுரை மாவட்டத்தில் 3 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் வைகை ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 12 ஊராட்சிகளைச் சேர்ந்த 83 குடியிருப்புகள், டி,கல்லுப்பட்டி ஒன்றியத்திலுள்ள 93 குடியிருப்புகள், ஏழுமலை கல்லுப்பட்டி ஊரக பேரூராட்சிகள், பேரையூர், ஆண்டிப்பட்டி ஒன்றியத்திலுள்ள 8 ஊராட்சிகளில் அடங்கிய 36 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.47 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

திருச்சி மாவட்டம் 5 இலட்சத்து 70 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் காவேரி ஆற்றினை நீராதாரமாக் கொண்டு மருங்காபுரி - வையம்பட்டி, மணப்பாறை மற்றும் கடம்பூர் ஒன்றியத்திலுள்ள 223 ஊராட்சிகளில் அடங்கிய 1138 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.48 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

சேலம் மாவட்டத்தில் 75 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் காவேரி ஆற்றினை நீராதாரமாக கொண்டு எடப்பாடி - கொங்கனாபுரம் ஒன்றியங்களில் 31 ஊராட்சிகளை சேர்ந்த 15 வழியோர கிராமங்களுக்கு ரூ.7.5 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படும்.

ஈரோடு மாவட்டத்தில் 75 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் காங்கேயம் மற்றும் சென்னிமலை ஒன்றியங்களில் 47 ஊராட்சிகளைச் சேர்ந்த 232 குடியிருப்புகளுக்கு முத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து ரூ.7.40 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

ஈரோடு மாவட்டத்தில் 1 இலட்சம் மக்கள் பயன்பெறும் வண்ணம் ஊத்துக்குடி ஒன்றியத்திலுள்ள 44 ஊராட்சிகளில் 217 குடியிருப்புகளுக்கு ரூ.10 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

( [illegible] 41 [illegible] )



## தமிழகத்தில் ஒரே நேரத்தில் ரூ.427 கோடியில் 16 அணைத் திட்டங்கள் !

கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே திட்டங்களுக்கா குறை? இராஜாதோப்பு கானாறு அணை, மோர்தா அணை, செண்பகத் தோப்பு அணை, ஆண்டியப்பனூர் ஓடை அணை, வரட்டாறு - வள்ளி மதுரை அணை, மலட்டாறு - பத்தலப்பள்ளி அணை, குப்பனத்தம் அணை, அடவி நயினார் கோவில் அணை, கொடு முடியாறு அணை, நம்பியாறு அணை, பொய்கையாறு அணை, இருக்கண்குடி அணை, சண்முகாநதி அணை, சோத்துப்பாறை அணை, வடக்குப் பச்சையாறு அணை, நங்காஞ்சியாறு அணை என்று 16 திட்டங்கள், இப்போது அதன் வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது. எவ்வளவு மதிப்பீட்டில்? 427 கோடி ரூபாய் மதிப்பில்; 16 திட்டங்கள் 427 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இன்றைக்கு வேலைகள் தமிழ்நாட்டில் ஒரே நேரத்தில் நடந்து கொண்டிருக்கின்றன.

இவ்வளவு பெரிய தொகையில், 16 இடங்களில் ஒரே நேரத்தில் வேலைகள் நடக்கின்றன. இதுபோல வேறு ஒரு மாநிலத்தைச் சுட்டிக் காட்ட முடியுமா?



இந்த ஆட்சியில் இரண்டு திட்டங்கள் கொண்டு வந்தார்கள். அதில் ஒன்று மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம், எதிர்க் கட்சித் தலைவர் தொகுதியில் இது வருகிறது. அதற்கும் இன்றைக்குக் கலைஞர் அவர்கள் 16 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு ரூபாய் கூட ஒதுக்கவில்லை.

மக்களுக்குத் திட்டத்தின் பயன் சேர வேண்டும் என்பதற்காக அந்த இருக்கண்குடி திட்டத்திற்காக 28 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்.

1989-லே ஆட்சிக்கு வந்தவுடனே, பொய்கையாறு, நம்பியாறு, அடவிநயினார் கோயில், நங்காஞ்சியாறு, இராஜாதோப்பு கானாறு, மோர்தனா போன்ற அணைத் திட்டங்களை அறிவித்தோம்.

இந்த முறை ஆட்சிக்கு வந்தபிறகு, வடக்குப் பச்சையாறு, அணைத் திட்டம், செண்பகத் தோப்பு அணைத்திட்டம், பத்தலப்பள்ளி அணைத் திட்டம், வரட்டாறு அணைத் திட்டம், குப்பநத்தம் அணைத் திட்டம் போன்ற திட்டங்களைத் துவக்கியிருக்கிறோம். இந்த 16 புதிய அணைக்கட்டுத் திட்டங்கள் மட்டுமல்ல, அதே நேரத்தில் ஏற்கெனவே உள்ள அணைகளை பலப்படுத்த வேண்டி திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

16 அணைகள் கட்டுமானம், மற்றொன்று ஏற்கெனவே உள்ள அணைகளைப் பலப்படுத்தல், 14 அணைகளைப் பலப்படுத்துவதற்கு 55 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து ஒரே நேரத்தில் பணி நடந்து கொண்டிருக்கிறது.

அதேபோன்று, கால்வாய்களைத் தூர் எடுக்கும் பணி, கால்வாய்களைப் புனரமைக்கும் பணி, கரைகளைப் பூசுதல், கரைகளைப் பலப்படுத்துதல் மற்றும் மதகு அடைப்புகளை மாற்றியமைக்கும் பணி செய்தல் போன்ற பணிகளுக்கு 341 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 17 இடங்களில் அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அதேமாதிரி தூர்வாரி, வாய்க்கால்களை மேம்படுத்தி, கரைகளை வலுப்படுத்தி, மதகுகளை மாற்றி அமைப்பதற்கான திட்டங்களுக்கு இந்த ஆண்டு 25 கோடி ரூபாய். காவேரி கழிமுகப் பகுதியில் நவீன கருவிகளைப் பயன்படுத்தி தூர் வாரும் பணிக்கு இந்த ஆண்டு 23 கோடி ரூபாய்; சென்ற ஆண்டு 12 கோடி ரூபாய். இவ்வளவும் கலைஞருடைய ஆட்சிலேதான்.

கிட்டத்தட்ட பார்த்தால், பொதுப்பணித் துறையிலே அணைகளைக் கட்டுவது, அணைகளைப் பழுது பார்ப்பது, கால்வாய்களைப் பலப் படுத்துவது, நவீனப்படுத்துவது, தூர்வாருவது, குளங்களை ஆழப்படுத்துவது, ஏரிகளைச் செப்பனிடுவது என்று ஒரே நேரத்திலே இந்த மாநிலத்தில் கிட்டத்தட்ட 1700 கோடிக்கான மதிப்புள்ள திட்டங்கள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## சென்னை மாநகரில் வெள்ளத் தடுப்பிற்கு ரூ.300 கோடி ஒதுக்கீடு !

சென்னை மாநகரில் வெள்ள நீரைக் கட்டுப்படுத்துவதற்காக, பெருமளவில் ஒருங்கிணைந்த திட்டங்கள் பலவற்றைச் செய்ய ரூ.300 கோடியை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அனுமதித்து இருக்கிறார்கள்.

இதில் கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் முதலிய நகரின் நீர் வழிகளைத் தூர்வாருதல், கூவம் - அடையாறு ஆகிய ஆறுகளின் கரைகளைப் பலப்படுத்துதல், கரைகளின் அருகிலே தடுப்புச் சுவர்கள் கட்டுதல், மேலும் சென்னையில் பெருவெள்ளத்தால் பாதிப்புக்கு உள்ளாகும் தணிகாசலம் நகர், மணலி போன்ற இடங்களுக்கு வெள்ள நிவாரணம் அளித்தல் போன்ற பெரும் பணிகள் அடங்கும்.

மேலும் நகரில் பெருநீர் வடிகால்களுக்கு வந்துசேரும் மாநகர வடிகால் வாய்க்கால்களைப் புதுப்பித்தல், தேவைப்படும் புதிய வடிகால் வாய்க்கால்களை அமைத்தல் போன்ற பணிகளும் இதில் அடங்கும்.

இதுவரை ஓட்டேரி நல்லா, மத்திய பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவற்றைத் தூர்வாரும் பணிகள் செய்து முடிக்கப்படும் தருவாயில் உள்ளன.

இதன் தொடர்ச்சியாக வடசென்னைப் பகுதியில் உள்ள வடக்கு பக்கிங்ஹாம் கால்வாய் தூர்வாரும் பணி ரூ.5.72 கோடி. தென்சென்னைப் பகுதியில் மறைமலையடிகள் ஆற்றுப் பாலத்திற்கு மேற்கே அடையாறு ஆற்றின் இடதுகரையில் ஒரு கிலோமீட்டர் நீளத்திற்குத் தடுப்புச் சுவர் கட்டுதலுக்கு ரூ.4.7 கோடி மற்றும் தணிகாசலம் நகருக்கு வெள்ளநிவாரணம் ரூ.18 கோடி ஆகிய பணிகள் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட இருக்கிறது.

தாம்பரம் சட்டப்பேரவை உறுப்பினர் மீ.அ.வைத்தியலிங்கமும், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலுவும் இதுகுறித்து, திரும்பத் திரும்ப அரசிடம் கேட்டு, முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் பல மனுக்களைக் கொடுத்திருந்தார்கள்.

மழைக்காலங்களில் அடையாற்றில் மிகுதியான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, கரையோரைப் பகுதிகள் முழுகும் நிலை ஏற்பட்டு, பெருத்த நட்டத்தை மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம், படப்பை, கூடுவாஞ்சேரி, மண்மங்கலம், சோமங்கலம் ஆகிய பகுதிகளில் மழைக் காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து வரக்காரணம்; திருநீர்மலை என்கிற இடத்தில் அடையாற்றில் கலப்பதால் மட்டுமல்லாமல், மழைக்காலங்களில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து வரும் உபரிநீரும் அதே திருநீர்மலையிலேயே அடையாற்றில் கலப்பதாலும்தான். இப்படி வரும் பெருவெள்ளம் வீணாகக் கடலில் போய்க் கலக்கிறது.

எனவே, அடையாற்றில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளத்தைத் தவிர்க்கவும், வீணாக அந்த நீர் கடலில் கலப்பதைத் தேக்கிவைப்பதற்கும் அதன்மூலம் மக்களுக்குக் குடிநீருக்காகப் பயன்படுத்தும் நோக்கத்தில் நிலத்தடி நீரைப் பெருக்கும் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இதன் மூலம் நிலத்தடி நீர் குறையும் காலங்களில், கடல் நீர் நிலப் பகுதிக்குள் நுழைந்து குடிநீரை உப்பு நீராக மாற்றுவதையும் தடுக்க முடியும். மேலும் வளர்ந்துவரும் சென்னை மாநகரின் விரிவாக்கத்திற்கும், பெருகிவரும் தொழிற்சாலைகளுக்கும் இந்த நீர் எதிர்காலத்தில் பயன்படும்.

எனவே, திருநீர்மலையில் அடையாற்றின் குறுக்கே பலநோக்கு கொண்ட ஒரு நீர்த்தேக்கம் அமைக்க முதலமைச்சர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார். இதுகுறித்து விரிவான ஆய்வைப், பொதுப்பணித்துறை உடனடியாக மேற்கொள்ளும்.

*. சட்டப்பேரவையில் 22. 4. 98 அன்று*
*மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்*
***திரு.துரைமுருகன்** அறிவிப்பு.*

**1998-99** ஆம் ஆண்டுக்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறைக்கான மான்யக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து அமைச்சர் சமயநல்லூர் செல்வராசு அவர்கள் பேசியதாவது:-

மாறிவரும் சமுதாயத்தில், மலர்ந்து நிற்கும் ஆதிதிராவிடர் நலத்துறை, மிகச் சிறப்பாகச் செயல்பட மூன்று பெரும் திட்டங்களாவன:-

***கல்வி நிலையை உயர்த்துதல்.***
***பொருளாதார நிலையை உயர்த்துதல்.***
***அடிப்படை வசதிகளைப் பெருக்குதல்.***

- ஆகியவற்றை முதல்வர் கலைஞர் அவர்கள் உருவாக்கித் தந்துள்ளார்.

இத்திட்டங்கள் மூலம் ஆதிதிராவிடர் மக்கள் வாழ்வுயர, வாக்குயர, சீருயர, சிறப்புயர அவர்கள் செம்மாந்து வாழ, ரூ.434 கோடி நிதியினை மனநிறைவோடு முதல்வர் அவர்கள்

# ஆதிதிராவிட மக்களுக்கு இந்த ஆண்டில் 60 ஆயிரம் இலவச கான்கிரீட் வீடுகள்



வழங்கியுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கூடுதல் நிதி**

முந்தைய ஆட்சியில், ஒதுக்கப்பட்ட நிதியைக் காட்டிலும், கழக ஆட்சியில் ரூ.225 கோடியே 90 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் இங்கு நான் குறிப்பிடவேண்டும். ஆதிதிராவிடர் மக்கள் வாழ்க்கைத் தரம் உயரத் தமிழக முதல்வர் அவர்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மீது கொண்டுள்ள பற்று, பரிவு, பந்தம், பாசம், ஒட்டு உறவின் காரணமாக, கோடி கோடியாக அள்ளித் தந்து இருக்கிறார்கள் என்பதை நன்றி உணர்வோடு எடுத்துக் கூற விழைகிறேன்.

6 நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகவும், 6 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், நிலை உயர்த்துவதோடு மட்டுமின்றி, நிலை உயர்த்தப்பட்ட 12 பள்ளிகளுக்கும் அடிப்படை வசதிகள், கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கும் முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, இதற்காக ரூ.1 கோடியே 37 இலட்சத்து 13 ஆயிரத்தை ஒதுக்கியுள்ளார்கள். 3 மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் கட்டுவதற்கும், சென்னை கன்னிகாபுரம், செவ்வாய்ப்பேட்டை மகளிர் மேல்நிலைப் பள்ளிகளிலும் மற்றும் திருச்சி மாவட்டம் துறையூர் மாணவர் இல்லத்திலும் சுற்றுச்சுவர் எழுப்பவும், கோமுகி அணை பழங்குடியினர் மனையகப் பள்ளிக்குச் சிறுபாலம் அமைக்கவும் ரூ.91 இலட்சத்து 48 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**எங்கும் கணினி, எதிலும் கணினி**

"மாணவர்கள் எதிர்காலச் சமுதாயத்தின் விதை நெல்" என்பதை உணர்ந்த அரசு, மாணவர்களைக் கண்ணின் மணியெனக் கருதி, 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்பதைப்போல, எங்கும் கணினி - எதிலும் கணினி எனும் நிலையினை நம் முதல்வர் அவர்கள் ஏற்படுத்தி, 51 மேல்நிலைப் பள்ளிகளிலும், 9 உயர்நிலைப் பள்ளிகளிலும் மாணவர்களுக்கு - கணினிகளுக்கான கல்வியும், நலப்பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் கணினியில் பயிற்சியும், படித்த இளைஞர்களுக்குச் சுயதொழில் சார்ந்த கணினி பயிற்சியும், அதனைத் தொடர்ந்து கணினி மையங்கள் வைக்கவும் நிதி அளித்துள்ளார்கள்.

**மாணவர்களுக்குத் தங்கும் விடுதிகள்**

வேலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் பட்ட மேற்படிப்பு படிக்கும் மாணவர்கட்குப் புதிதாக இரண்டு விடுதிகளும், மேலும் பள்ளி மாணவர்களுக்கு 20 விடுதிகளும் சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் பொன்னேரி ஆகிய இடங்களில் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு மூன்று விடுதிகளும், ஆகமொத்தம் 25 விடுதிகள் இவ்வாண்டு தொடங்கப்படும் என்பதை இப்பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**உணவுக் கட்டணம் உயர்வு**

மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவுக் கட்டணமாக முந்தைய ஆட்சியில் ரூ.202.50 ஆக இருந்தது. மாணவர்களின் வயிற்றுப் பசியைப் போக்கி, அறிவுப் பசியை வளர்த்திட, மாணவரில்லங்களில் படிக்கும் மாணவர்களின் உள்ளம் மகிழும் வண்ணம் பழகுபவர்களுக்கு அகநானூறாக, பாங்குடன் வாழுவதற்குப் புறநானூறாக விளங்கும் முதல்வர் அவர்கள் நான் நூறு நூறாகத் தருகிறேன் நானூறாகத் தருகிறேன் என்று ரூ.400 ஆக உயர்த்தித் தந்துள்ளார்கள். இது இரட்டிப்பாக, தித்திப்பாக இருக்கிறது. ஆதிதிராவிட மாணவர்களுக்கும் - ஏன்? பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் அட்சயப் பாத்திரமாக, அமுத சுரபியாகத் திகழ்பவர் நம் முதல்வர் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

**விடுதிகளுக்கும் புதிய கட்டடங்கள்**

மாட்டுத் தொழுவங்கள் போல், கடந்த கால ஆட்சியில் கட்டப்பட்டுள்ள மயானக்கூரை போல் இடிந்த, வடிவமிழந்த சில தனியார் கட்டடங்களில்

*சட்டப்பேரவையில் 29.4.98 அன்று*
*மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சர்*
*திரு. சமயநல்லூர் செல்வராசு அவர்கள்*
*அறிவிப்பு*



நடந்து வந்த மாணவ - மாணவியர் விடுதிகளை மாற்றி, புதிய கட்டடங்கள் கட்ட ரூ.8 கோடியே 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்டதோடு நில்லாமல், ஒழுங்காக விடுதிக் கட்டடங்களைக் கட்டுவதற்குத் திறந்த முறை ஒப்பந்தப்புள்ளி பெற்று, அவைகளைக் கட்டுவதற்காக ஆதிதிராவிட ஒப்பந்தக் காரர்களுக்கு மட்டுமே முன்னுரிமையும் முதலிடமும் அளித்து, கட்டடப் பணிகளைக் கண்காணிப்பதற்காக ஐவர் குழு ஒன்றையும் அமைத்து, ஒரு புதியமுறை இப்போது கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த மகத்தான செயல்பாட்டினை இந்திய அளவில் முதன்முதலாக உருவாக்கித் தந்த உன்னதத் தலைவர் கலைஞர் அவர்களே.

**விடுதிகளுக்குச் சமையல் எரிவாயு**

சென்னையிலுள்ள அனைத்துக் கல்லூரி மாணவர் விடுதியில் தங்கிப் பயிலும் 500 மாணவர்கட்கு ரூ.17 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் அறைகலன்களும், வளர்ந்து வரும் அறிவியல் யுகத்தில், அடுப்பெரிக்க விறகுக் கட்டைகளா? புகைக்கும் மண்ணெண்ணெய் அடுப்புகளா? எனச் சிந்தித்த கலைஞர் அவர்கள், பணத்தடைகள் முன்நின்றபோதும், மனத்தடையில்லாத தாராள குணத்தால், வாடுகின்ற பயிர்களுக்கு வான்மழை போல், 50 மாணவர் இல்லங்களுக்குச் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்குவதற்காகச் சிறப்பு நிதியாக ரூ.20 இலட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளார்.

**கல்வி-குடும்பத் திட்டம்**

ஒரு காலத்தில் குலத்துக்கு ஒரு கல்வித் திட்டம் என்றிருந்தது. இன்று குடும்பத்துக்கு ஒரு கல்வித் திட்டத்துக்கு கலைஞர் வழி வகுத்துள்ளார். ஒவ்வொரு ஆதிதிராவிடர் - மலைவாழ் மக்களும் தனிப்பட்ட முறையில் தொழில்துறையில் முன்னேறவும், குடும்பம் தழைக்கவும், கல்வியில் நாட்டம் பிறக்கவும், கல்வியால் பயன்கிட்டும் என்பதை உறுதிசெய்யவும் "கல்வி - குடும்பத் திட்டம்" என்ற ஒரு புதிய திட்டத்தை இவ்வரசு புதிதாகக் கொண்டுவந்துள்ளது.

இத்திட்டத்தின்படி எந்தக் குடும்பம் தனது பிள்ளைகளில் ஒருவரையாவது, பட்டயம் அல்லது பட்டப்படிப்பில் தேர்ச்சி பெறச் செய்கிறதோ, அந்தக் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் குறைந்தது ரூபாய் பதினைந்து ஆயிரம் என்ற அடிப்படையில் சிறுதொழில் கூடம் அமைத்திட, அடிப்படைச் சாதனை வசதிகளை, இலவசமாக அரசு வழங்கும் ஒரு புதுமையான பொருளாதார மறுமலர்ச்சித் திட்டம் இது.

> *சாதிகளை வேரறுத்து, சமத்துவத்தை நிலைநாட்ட இந்தியாவிற்கே வழிகாட்டும் திட்டமான சமத்துவபுரம் எனும் திட்டத்தை விடுதலைப் பொன்விழாவில் பொன்னொளித் திட்டமாக அறிவித்து, தமிழகம் எங்கும் தலா 100 வீடுகளைக் கொண்ட 50 சமத்துவபுரங்களை உருவாக்கி அதில் அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவேற்றி, எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற உள்ள உணர்வை உருவாக்கிய, சமத்துவச் சூரியனாக விளங்கும் முதல்வர் அவர்கள் 50 சமத்துவபுரத்திற்கு ரூ.17 கோடியே 50 இலட்சம் ஒதுக்கித் தந்துள்ளார்கள்.*

**பழங்குடியினர் மேம்பாட்டுக் குழு**

பழங்குடியின மக்களின் மேல்நிலைக் கல்வி வளர நூறு விழுக்காடு இலக்கு எய்தவேண்டும் என்பதை இத்துறைக் கொள்கையாக மேற்கொண்டு, அதற்கொப்ப நடப்பு ஐந்தாண்டு காலத்தில் திட்டங்களைச் செயல்படுத்தும். இதன் முதற்படியாக, வரும் ஆண்டில் பழங்குடியினர் மேலாண் குழு நடத்தும் மேல்நிலைப்பள்ளி ஒன்றைத் துவக்க முதலமைச்சர் அவர்களின் மேலான பரிந்துரைப்படி, மத்திய அரசு ரூ.1 கோடி வழங்கியுள்ளது.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் அல்லாத பகுதிகளிலும், பழங்குடியினர் நலனுக்காக மனையகப் பள்ளிகள் அதாவது உண்டுறைவிடப் பள்ளிகள் இந்த இனத்தின் விடியலுக்காகப் பாடுபட்ட தந்தை பெரியார் பிறந்த ஈரோடு மாவட்டத்தில் கத்தேரி மலையிலும், கோவை மாவட்டத்தில் காடம்பாறை மற்றும் பரளி இரு இடங்களிலும், தேனி மாவட்டத்தில் ஆனைமலையிலும் ஆகிய 4 இடங்களில் தொடங்குவதற்கு ரூ.15 இலட்சத்து 23 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**பணி இடங்களை நிரப்ப நடவடிக்கை**

ஒதுக்கப்பட்ட மக்களுக்காக, ஒதுக்கப்பட்ட பணியிடங்களை அரசுத் துறைகளிலும், அரசுத்துறை நிறுவனங்களிலும் நிரப்பப்படாமல் இருக்கும் இடங்களை முழுமையாக ஒடுக்கப்பட்டவர்களைக் கொண்டு நிரப்புவதுதான் இந்த அரசின் லட்சியமும், இலக்குமாகும்.

**வீட்டுமனை - இலவச வீடுகள்**

ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டடி மனை வழங்குவதற்கும், வேண்டிய நற்காரியங்கள் விரைந்து நடத்திடுவதற்கும், இத்துறையைச் சார்ந்த 20 தனி வட்டாட்சியர்களுக்கு ரூ.71 இலட்சம் செலவில் ஜீப்புகள் வாங்கி வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும், குடியிருக்கக்கூட குடிசையில்லாது வாடிய ஆதிதிராவிட மக்களுக்கு இந்தியாவிலேயே முதன்முதலாகக் கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தந்த பெருமை கலைஞர் அவர்களையே சாரும். இந்த முன்னோடித் திட்டத்தின் அடிப்படையில்தான் அனைத்திந்திய அளவில் "இந்திரா வீட்டு வசதித் திட்டம்" உருவாக்கப்பட்டது என்பது உலகறிந்த உண்மை.

நடப்பாண்டில் 60 ஆயிரம் வீடுகள் கட்டப்படும். குடியிருப்புகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு ரூ.68 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வீட்டுமனைக்கான நில எடுப்புப் பணிக்கென ரூ.15 கோடியே 51 இலட்சம் நடப்பாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு 75,000 இலவச மனையடிப் பட்டாக்கள் வழங்கப்படும்.

## சுந்தரலிங்கம் வாரிசுக்கு இலவச விடுகள்

தூத்துக்குடி மாவட்டத்தில் பாஞ்சாலங்குறிச்சியை அடுத்துள்ள கவர்னகிரியில் வாழ்ந்த விடுதலை வீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு 200 வீடுகள் மற்றும் சாலை, பூங்கா, நூலகம், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளோடு, கவர்னகிரியில் "வீரன் சுந்தரலிங்கம் நினைவு கிராமம்" ரூ.1 கோடியே 5 இலட்சம் செலவில் கம்பீரமாக அமைக்கப்பட்டு, 18.4.98 அன்று துவக்கி வைத்த முதல்வர் அவர்களுக்கு கவர்னகிரியில் வாழும் ஆதிதிராவிடர் மட்டுமல்லாமல், உலகில் வாழும் அத்தனை ஆதிதிராவிடர் மக்களும் காலமெல்லாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளனர்.

## சமத்துவபுரம் காணும் சமத்துவச் சூரியன்

சாதிகளை வேரறுத்து, சமத்துவத்தை நிலைநாட்ட இந்தியாவிற்கே வழிகாட்டும் திட்டமான சமத்துவபுரம் எனும் திட்டத்தை விடுதலைப் பொன்விழாவில் பொன்னொளித் திட்டமாக அறிவித்து, தமிழகம் எங்கும் தலா 100 வீடுகளைக் கொண்ட 50 சமத்துவபுரங்களை உருவாக்கி அதில் அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவேற்றி, எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற உள்ள உணர்வை உருவாக்கிய, சமத்துவச் சூரியனாக விளங்கும் முதல்வர் அவர்கள் 50 சமத்துவபுரத்திற்கு ரூ.17 கோடியே 50 இலட்சம் ஒதுக்கித் தந்துள்ளார்கள்.

## கொத்தடிமை ஒழிப்பு

கொத்தடிமை ஒழிப்பில் இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழ்கிறது தமிழகம். தமிழக அரசின் கொத்தடிமை மறுவாழ்வுத் திட்டங்கள் பிற மாநிலங்களுக்கு முன்மாதிரி என்று உச்ச நீதிமன்றம் பாராட்டியுள்ளது. தமிழ்நாட்டில் எவ்வளவு கொத்தடிமைகள் உள்ளனர் எனக் கண்டறியப்பட்டு, முதற்கட்டமாக அவர்களில் 10 ஆயிரம் பேர் மறுவாழ்வு பெற அரசு ரூ.5 கோடி ஒதுக்கியுள்ளது. இதற்கு மத்திய அரசும் ரூ.3 கோடி நிதி வழங்கியுள்ளது.

துப்புரவுத் தொழிலாளர்கள் மறுவாழ்வுத் திட்டத்திற்கு நேரடிக் கடன் அளிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். மனிதனே மனிதக் கழிவுகளை அகற்றும் அவலம் நீங்கச் சட்டம் இயற்றப்படும்.

★ ★ ★



தமிழ்நாடு அரசின் சார்பில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை வாழ்ந்த இல்லத்தை அரசு நினைவகமாக்க நாமக்கல் கவிஞர் குடும்பத்தினருக்கு ரூ.9இலட்சத்து 58 ஆயிரத்துக்கான காசோலையினை மாண்புமிகு தமிழக **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் 30.4.98 அன்று வழங்கினார். காசோலையினைப் பெற்றுக்கொண்ட நாமக்கல் கவிஞர் குடும்பத்தினர், முதல்வருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்கள்.

# "தொழிலாளர்களின் தோழனாய் விளங்கிடும் அரசு, இது!"

முதல்வர் கலைஞர் மே நாள் செய்தி



மே நாள் - மேதினியெங்கும் கொண்டாடப்படும் தொழிலாளர் திருநாள்! உழைப்பை மதித்து - உழைப்பாளிகளின் உயர்வுகள் குறித்துச் சிந்தித்து ஊக்கமுடன் செயல்பட்டிட உலகத்தவர்க்கு உணர்வூட்டிடும் உன்னதப் பெருநாள்!

உடல்நலம் கெட - உள நலம் குன்றிட - உழைப்பாளர்கள் சுரண்டப்படுவதை உணர்ந்து - எட்டு மணி நேர வேலை கேட்டுப் போராடி - செங்குருதி சிந்தி - சித்திரவதைகளுக்கு ஆளாகி - தூக்கு மேடைகளேறி - அன்று அமெரிக்க மண்ணில் தியாகச் சுவடுகள் பதித்த தீரமறவர்களைப் போற்றி வெற்றிப் பதாகையுயர்த்தி வணங்கிடும் வீரத் திருநாள்- மே நாள்!

இந்த மே நாளை - இந்திய மண்ணில் முதன்முதலில் கொண்டாடிய பெருமை தமிழகத்திற்கு உண்டு.

மே நாள் கொண்டாடிடும் தொழிலாளர்தம் மேன்மைக்காக முதன் முதல் தொழிற்சங்கம் கண்ட பெருமையும் தமிழகத்திற்கு உண்டு.



மே நாள்- மிகுந்த மகிழ்ச்சியுடன் தொழிலாளர் பெருமக்களால் கொண்டாடப்படுவதற்காக - அந்நாளிற்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்கிய பெருமைகூட தமிழகத்திற்கு அதிலும், இந்த அரசுக்குத்தான் உண்டு.

தொழிலாளர் நலம் காக்க 1969 ஆம் ஆண்டில் ஒரு தனி அமைச்சகம் கண்ட பெருமையும் இந்த அரசுக்கே உண்டு!

இவை மட்டுமல்ல;

தொழிலாளர் நல வாரியம் அமைத்தது - தொழிலாளர் ஓய்வு பெறும்போது பணிக்கொடை வழங்கிடச் செய்தது - தொழில்புரியும் காலத்தில் விபத்துக்கள் நேர்ந்து தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டால், அவர்களுக்குத் தொழில் விபத்து நிவாரணம் வழங்கிடும் திட்டம் கண்டது - தொழிலாளர் வாழ்க்கைத்தரம் உயர தொழிலாளர் கல்வி நிலையம் கண்டது - ஒப்பந்தத் தொழிலாளர்களின் நலன் காத்திடத் தனிச் சட்டம் கண்டது - மே நாள் நூற்றாண்டின் நினைவுச் சின்னம் அமைத்தது முதலிய பல்வேறு பணிகளை நிறைவேற்றி - தொழிலாளர் உணர்வுகளைப் போற்றி அவர்களின் நலன் காத்திட அரண்கள் பல அமைத்துள்ளதும் இந்த அரசே.

கடந்த ஆண்டில் - அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்திட குழு ஒன்றை அமைத்து - அக்குழு வழங்கியுள்ள அறிக்கையின் அடிப்படையில், சலவையாளர்கள், மண்பாண்டம் வனைவோர், சுமை தூக்கிடுவோர், முந்திரி உடைத்தல், பந்தல் அமைத்தல், கயிறு தயாரித்தல், அப்பளம் தயாரித்தல் போன்ற அமைப்பு ரீதியில் இல்லாத 43 வகை தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் என ஏறத்தாழ 25 இலட்சம் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், அவர்களுக்கு நோய்க்கால உதவிக் காப்பீடு, பேறுகால உதவித் தொகை, ஓய்வூதியம் போன்ற நல உதவிகள் வழங்கிடக் கூடிய "அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர் நல வாரியம்" ஒன்றை உருவாக்கிடத் திட்டமிட்டு - அதற்குரிய அறிவிப்புகளை அண்மையில் வெளியிட்டுள்ளதும் இந்த அரசே.

இப்படித் தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டு - அவர்தம் வாழ்வு உயர்ந்திட - வளம் உயர்ந்திட வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த திட்டங்கள் பல தந்து தொழிலாளர்களின் தோழனாய் விளங்கிடும் தமிழக அரசின் சார்பில் தொழிலாளர் சமுதாயத்திற்கு என் இதயம் கனிந்த மே நாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

நான் தரையில் வாழ்கிறவன்
கருப்பை சிசுப்போலக்
கால்மடக்கித் தூங்குகிறவன்.
இந்தக் கட்டில்களை,
நுரைமெத்தைகளை எல்லாம்
அப்புறப்படுத்தினால் நல்லது.
நசுங்கிய பல்லியை
மொய்க்கிற எறும்புகள்
கட்டில்கால் வழியான பாதையில்
வளர்கின்றன.
சிதறின தின்பண்டத் துண்டுகள்
தென்படுவதும் உண்டு.
மூட்டுவலித்தைல வாசனை தவிர
அதிகப்படி மணம் எதுவுமில்லை.
என்றோ இந்தப் படுக்கையில் படுத்துக்
கேட்ட ஒலிநாடாக்களின் இழை
அறுந்த சிக்கல்கள்
ஜன்னல்கள் வழியே எறியப்பட்டு
வாழைகளின் பக்கக் கன்றுகளில்
சுற்றி அலைக்கழிகின்றன.
விரியன் பாம்புகள்
மே மாத உச்சித் தீயில்
புடைநீங்கிக் கட்டிலுக்கு
விரைந்துவரும் சாத்தியமும் உண்டு,
புற்றுகளுக்கு நடுவில் உள்ள
என் வீட்டில்.
நீங்கள் அதில் படுத்திருக்க
விருப்பமெனில்
ஆட்சேபமில்லை, நகர்த்திக் கொள்ளுங்கள்
உங்கள் இடத்திற்கு.
எனக்குக் கட்டில்களற்ற
விசாலத் தரை போதும்.
தரை -
குளிர்ந்த தரை !





## கைத்தறித் துணிகளுக்கு 30 சதவிகிதத் தள்ளுபடி !
## கூட்டுறவுச் சங்கங்களுக்கு மே இறுதிக்குள் ரூ.43.25 கோடி !
## நூல் விலை நிர்ணயம் செய்ய மாநில அளவில் குழு !
## நெசவாளர்களுக்கான காப்பீட்டுத்தொகை ரூ.35 ஆயிரம் !

### சட்டப்பேரவையில் முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

**1998-99**ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை 27.3.98 அன்று சட்டப்பேரவையில் வைத்தபோது நான் அறிவித்ததற்கிணங்க, கைத்தறித் துறைச் செயலாளரை அமைப்பாளராகவும் சட்டமன்ற உறுப்பினர்கள் பி.என்.சுப்பிரமணியன், ஈ.எஸ்.எஸ்.இராமன், நா.பெரியசாமி, இரா.தாமரைக்கனி, கே.ஆர்.ஜி.தனபால், நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் ஜெ.சுத்தானந்தன், ச.சி.பெருமாள் மற்றும் நிதித்துறை கூடுதல் செயலர் ஆகியோர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

இக்குழு கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்ற காரணத்தால் உருவாகியுள்ள பிரச்சினைகள், நெசவாளர்களுக்கு எளிதாக நியாயவிலையில் நூல் கிடைக்க வழிவகைகள், நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு கிடைப்பதற்கும், தேவையான கடன் வசதி எளிதில் பெறுவதற்குமான செயல்பாடுகள் போன்றவற்றை ஆராய்ந்து மே மாதம் முதல் தேதிக்குள் அரசுக்கு அறிக்கையினை வழங்கிடக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதற்கிணங்க, இக்குழு சென்னை மற்றும் நெசவாளர்கள் அதிகமாக உள்ள இடங்களுக்கு நேரில் சென்று அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தது. மேலும், இக்குழு கூட்டுறவு சாராத நெசவாளர் சங்க அமைப்புகள், நாபார்டு மற்றும் வங்கி அலுவலர்கள், நூற்பாலைகள், தொடர்புடைய துறை அலுவலர்கள் ஆகியோர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து தனது பரிந்துரைகளைக் கொண்ட அறிக்கையினை 27.4.98 அன்று என்னிடம் அளித்தது.

இக்குழுவின் பரிந்துரைகள் 29.4.98 அன்று, அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் முடிவுகள் எடுக்கப் பட்டுள்ளன.

கோ-ஆப்டெக்ஸ் மற்றும் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் 31.3.98 வரை தேங்கியுள்ள கைத்தறித் துணிகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுவரும் 20 சதவிகிதத் தள்ளுபடியுடன் மேலும் 10 சதவிகிதம் சிறப்புத்தள்ளுபடி மே மாதம் முதல் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு அளிக்கப்படும்.

கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய 1994-95 மற்றும் 1995-96 ஆகிய ஆண்டுகளுக்கான பழைய பாக்கி தள்ளுபடி மானியமான ரூ.43.25 கோடி மே மாத முடிவுக்குள் அளிக்கப்படும்.

கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து ரூ.50 கோடி மதிப்பிற்குக் கொள்முதல் செய்திட உற்பத்தித் திட்டத்தினை கோ-ஆப்டெக்ஸ் உடனடியாக அந்தச் சங்கங்களுக்கு வழங்கிடும்.

கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்திட கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்குத் தேவையான நிதியுதவி அவ்வப்போது அளிக்கப்படும்.

கூட்டுறவுச் சங்கங்களும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் செய்திடும் மொத்த விற்பனைக்கும் 20 சதவிகிதம் தள்ளுபடி அளிக்கப்படும்.

**தள்ளுபடி மானிய பாக்கிகள் ஒவ்வொரு காலாண்டும் வழங்கப்படும்**

தள்ளுபடி மானிய பாக்கிகள் ஒவ்வொரு காலாண்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படும். ஏற்கெனவே சரியாக அளிக்கப்படவில்லை. எனவேதான் தள்ளுபடி மானிய பாக்கிகளை ஒவ்வொரு காலாண்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படும்.

கைத்தறித் துணிகள் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில் அரசுத்துறைகள் மற்றும் அரசுத்துறை நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான துணிகளைப் பிரதம சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து நேரடியாக வாங்கிக்கொள்ள ஆணை பிறப்பிக்கப்படும்.

கோ-ஆப்டெக்ஸ் பிரதம சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்யும் பொழுது, துணியின் முழு மதிப்பையும் சங்கங்களுக்கு அளித்து அவற்றின் விற்பனையின் போது நுகர்வோருக்கு அரசுத் தள்ளுபடியினை அளித்து, அதன் பின்னர் அத் தள்ளுபடித் தொகையினை அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளும்.

**நெசவாள உறுப்பினர் அனைவருக்கும் அடையாள அட்டை**



உண்மையான கைத்தறி நெசவாளர்கள் தான் அரசின் திட்டங்களின் பயன்களைப் பெறுகிறார்கள் என்பதை உறுதி செய்து கொள்ளும் வகையில், சங்கங்கள் தங்களது நெசவாள உறுப்பினர் அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்கும்.

மத்திய அரசு முன்பு அமல்படுத்தி வந்த சிட்டா நூல் மானியத் திட்டத்தினை மீண்டும் செயல்படுத்திட மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தும்.

கோ-ஆப்டெக்ஸ் மற்றும் கூட்டுறவு நூற்பாலைகள், பிரதம நெசவாளர் சங்கங்களுக்குக் கடனிலும் நூல் வழங்கும்.

**நூல் விலையினை நிர்ணயம் செய்ய மாநில அளவிலான குழு**

நூல் விலையினை நிர்ணயம் செய்வதற்காக மாநிலத்தின் பல்வேறு நெசவாளர் மையங்களிலுள்ள நெசவாளர் சங்கப் பிரதிநிதிகள், அலுவலர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு மாநில அளவில் ஒரு குழு அமைக்கப்படும்.

பான்சில்க் நிறுவனத்திடமிருந்து பட்டுச்சங்கங்கள் கடனில் வாங்கிய பட்டு நூலுக்கான தவணை தவறிய பாக்கிக்கு விதிக்கப்பட்டுள்ள 2 சதவீதம் தண்டவட்டி, சங்கங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நிலுவையைச் செலுத்தினால், ரத்து செய்யப்படும்.

நடப்பு ஆண்டிற்கு, பிரதம சங்கங்களுக்கு மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நபார்டு வழங்கும் ரொக்கக் கடன், 1997-98ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அளவிற்கு வழங்கிடவும், சங்கங்களுக்கு வரவேண்டிய தள்ளுபடி மானிய முழுத் தொகையினை வங்கிக் கடனுக்கு நிதிஆதாரமாக எடுத்துக்கொள்ளவும், சங்கங்களுக்கு அளிக்கப்படும் 3 சதவிகித வட்டி மானியத்தை, முன்பு நடைமுறையில் இருந்தது போலவே வங்கிகளே நேரடியாக அரசிடமிருந்து பெற்றுக்கொள்வதை மீண்டும் அமல்படுத்திட வேண்டும் என்றும் நபார்டு வங்கியிடம் வலியுறுத்தப்படும்.

நெசவாளர் சங்கங்கள் வங்கிக் கடன் பெறுவது போன்ற பிரச்சினைகளை அவ்வப்போது தீர்த்துக்கொள்ளும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நெசவாளர் சங்கங்கள் மற்றும் வங்கிகளின் பிரதிநிதிகள் அடங்கிய மாவட்ட அளவிலான குழு அமைக்கப்படும்.

**காப்பீட்டுத் தொகை உயர்வு**

நெசவாளர்களுக்குத் தற்பொழுது வழங்கப்பட்டுவரும் காப்பீட்டுத் தொகையான ரூ.25,000ஐ, ரூ.35,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

கூட்டுறவுச் சங்க நெசவாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பணிபுரிவோர் உட்பட, இப்போது பணிபுரிந்தால் இல்லை என்றிருக்கிறது. அதை மாற்றி 60 வயதான உறுப்பினர் அனைவரும் பயன்பெறும் வகையில் நிபந்தனைகள் தளர்த்தப்படும்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு ஒரு ஆலோசனைக்குழு அமைக்கப்படும்.

கைத்தறி ஒதுக்கீட்டுச் சட்டம் முறையாக அமலாக்கம் செய்யப்படும்.

தனியாரிடம் உள்ள நெசவாளர்களின் நலனைக் காத்திட, கைத்தறித் தொழிலாளர்கள் நலச்சட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

**மாநிலக் கைத்தறி ஆலோசனைக்குழு மீண்டும் அமைக்கப்படும்**

மாநில அளவில் 1989ஆம் ஆண்டில் இருந்ததைப்போல் கைத்தறி அமைச்சர் தலைமையில் மாநிலக் கைத்தறி ஆலோசனைக் குழு மீண்டும் அமைக்கப்படும்.



கைத்தறித் துணி தேக்கத்தினால் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினரல்லாத தனியார் நெசவாளர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வேலைவாய்ப்பு இழந்துள்ளனர். எனவே தனியார் துறையில் ஏற்பட்டுள்ள துணித் தேக்கத்தினைப் போக்கி, அவர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளித்திட நபார்டு மறுநிதி திட்டத்தின்கீழ் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலமாகக் கடனுதவி வழங்கப்படும்.

தமிழகக் கைத்தறி நெசவாளர்களுக்குத் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குக் கைத்தறி ஏற்றுமதியில் உருவாகியுள்ள சுணக்கமும் ஒரு காரணமாகும். தமிழக அரசு, தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியை அதிகரிக்கச் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மத்திய அரசை வலியுறுத்தும்.

**நலிவடைந்த கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் புனரமைப்புத் திட்டங்கள்**

நன்றாக இயங்கிவந்து கடந்த ஆட்சியில் நலிவடைந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைத்திட நபார்டு நிதிநிறுவனத்தின் ஆலோசனையுடன் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அவை தொழிலாளர்கள், வங்கிகள் ஆகியோருடைய ஒத்துழைப்புடன் மீண்டும் நன்முறையில் இயங்க முயற்சிகள் எடுக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருந்தேன். அதற்கேற்ப 16 கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் புனரமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள இரண்டு கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் புனரமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவு நூற்பாலைகள் இலாபகரமாக இயங்கும் வகையில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதன்மூலம் இந்த நூற்பாலைகளில் நிலுவையில் உள்ள பஞ்சு கொள்முதல் பாக்கி மற்றும் இதர நிலுவைகள் மிகவிரைவில் தீர்க்கப்படும்.

- இவ்வாறு 30.4.98 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார். ●



# வேர்கள் - அசோகமித்திரன்

**வே**ர்கள் என்ற சொல் சில ஆண்டுகளாக மிகுந்த செல்வாக்கு பெற்றிருக்கிறது. நாட்டியக் கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள் (குறிப்பாக வாத்தியம் இசைப்பவர்கள்), ஓவியக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், சமூகத் தலைவர்கள், சீர்திருத்தவாதிகள் எனப் பல பிரிவினர் நம் வேர்களை முக்கியக் கவனம் செலுத்தி அறிய வேண்டும் என்று பல தருணங்களிலும், சூழ்நிலைகளிலும் கூறி வருகிறார்கள். வேர்களைத் தேடாதவன் சமகாலத்தை உணராதவன் என்பது போன்ற எண்ணம் சமுதாய மாற்றத்தின் இயக்கங்களில் அக்கறை கொண்டவர்கள் நடுவில் நிலவுகிறது.

இன்றைய மாற்றங்கள் பலவும் ஏற்படாத காலத்தில், இந்திய சுதந்திரத்திற்கு முந்தைய காலத்தில் வேர்களை அறியவேண்டும் என்ற தாகம் இருந்ததாகத் தெரியவில்லை. இன்றைவிட அன்று கிராமங்கள் கிராமங்களாகவே இருந்தன. பல நகரங்களின் வாழ்க்கை கிராமப்புறத்தை விட அதிகம் மாறுபட்டிருந்ததாகக் கூற முடியாது. நகரத்திலேயே பல இடங்களில் விடிய விடியக் கூத்து நடக்கும். பெட்ரோமாக்ஸ் விளக்கை வைத்துக் கொண்டு சந்தனக்குடம், புலிவேஷம் சகிதமாக நள்ளிரவில் ஊர்வலம் வரும். இப்படி வெளிப்படையான நிகழ்ச்சிகளைத் தவிர அன்றாட வாழ்க்கையில் எல்லா அம்சங்களிலும் பல நூற்றாண்டுகளை நினைவில் கொள்ளக்கூடிய பழக்க வழக்கங்கள் வெகு சகஜமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. மகிழ்ச்சியையும் வளர்ச்சியையும் குறிக்கும் திருமணச் சடங்கிலிருந்து ஒருவரின் இறுதிச் சடங்கு வரை அந்தந்தப் பிரிவினரின் வசதிக்கேற்பவும் செல்வாக்குக்கேற்பவும் கிரியைகள் நிறைவேற்றப்பட்டன. இவை நீண்ட தொடர்ச்சியுடையவை என்ற உணர்வுகூட அன்று தோன்றியிருக்க நியாயமில்லை. எப்போதோ ஒருமுறை வன்முறை தோன்றினாலும் பொதுவாக ஒரு மதத்தினர் தங்களுடைய பகிரங்க மதச் சடங்குகளை நிறைவேற்றும்போது இன்னொரு மதத்தினர் வழிபாட்டு நம்பிக்கைகளை அலட்சியப்படுத்தாத முறையில் நடந்து கொண்டார்கள். மதுராவிலும், காசியிலும் மட்டும் கோயிலும், மசூதியும் அடுத்தடுத்து இருப்பதாக அமையவில்லை. மாநிலங்கள் பலவற்றில் இப்படிப் பல இடங்கள் நெடுங்காலமாக இருக்கின்றன. என் இளம்பிராயத்தைக் கழித்த அன்றைய நிஜாம் ராஜ்யத்தில் ஆடி மாதம் முழுக்க மாங்காளம்மா ஜாத்ரா (மாகாளியம்மன் யாத்திரை) எனக் கடைப்பிடிக்கப்படும். நானிருந்த ஊரில் மட்டும் தினம் ஏழெட்டு ஊர்வலங்கள், கரகம் சகிதம் இரட்டை அல்லது நான்கு பறை வாத்தியத்துடன் நடைபெறும். அந்தக் கடும் வெயிலில் கரகம் சுமந்து ஆடி வருபவர் பரவச நிலையில் இருப்பர். ஆனால், மசூதி உள்ள தெருவில் நுழைந்தால், மேளம் நிறுத்தப்பட்டு, ஊர்வலம் மசூதியைக் கடந்த பிறகுதான் மீண்டும் ஒலிக்கத் தொடங்கும். பரவச நிலைக் கரகக்காரரும் இந்தக் கட்டுப்பாட்டுக்கு இணங்கித்தான் நடப்பார். இதெல்லாமே வெகு இயல்பாக நிகழும். யாரும் இதைத் தவறாகவோ, இகழ்ச்சியாகவோ நினைத்தல் கிடையாது. இந்த ஜாத்ராவின் ஒரு பகுதியாகப் புலிவேஷமும் நிகழ்த்தப்படும். புலிவேஷக் கலைஞர்கள் அநேகமாக முஸ்லீம்கள்தான். இதே கலைஞர்கள் மொகரம் வரும்போது மீண்டும் புலிவேஷம் அணிவார்கள். ஒரு பிள்ளையார் கோயிலை அடுத்தும் அனுமார் கோயிலை அடுத்தும் மசூதிகள் இருந்தன. வெள்ளிக்கிழமை பிள்ளையார் கோயிலுக்கு முக்கியமான நாள். அன்று குடம் ஏற்றி ஆரத்தி காட்டுவதோடு நிறுத்தாமல் பிரசாதமாகச் சுண்டலும் தருவார்கள். சரியாக எட்டு மணிக்கு முடிந்துவிடும்... இதையும் யாரும் பாரபட்சமான ஏற்பாடாக நினைக்கவில்லை.

"அன்று உங்கள் அனைவருக்கும் பெரியண்ணனாக வெள்ளைக்காரன் உட்கார்ந்திருக்கிறான். அதனால்தான் இந்த நல்ல பிள்ளைத்தனம்" என்று இன்று சிலர் கூறக்கூடும். இதில் உண்மை சிறிதும் கிடையாது என்று கூறிவிடமுடியாது. ஆனால், முழு உண்மையும் இதுவே எனவும் கூறிவிட முடியாது.

இரண்டாம் உலக யுத்தம் 1945-ம் ஆண்டு முடிந்தபோது, மனித இனத்தின் பல நம்பிக்கைகள் தகர்க்கப்பட்டிருந்தன. பொதுவுடைமைய வாழ்க்கை நெறி என்று ஆட்சி மூலம் மக்களை ஏற்கச் செய்த ஓர் அரசு, ஒரு நெருக்கடியின்போது மணல் வீடு போலச் சரிந்துவிடும் என எதிர்பார்த்த மேலைச் சிந்தனையாளர்களை நிலைகுலைய வைப்பது போலச் சோவியத் ரஷ்யா, ஜெர்மனியைப் போரில் தோற்கடித்தது. ஆனால், மிகப் பெரிய விரக்தியை ஏற்படுத்தியது, மேலைச் சிந்தனை வளம், தத்துவம், தாராளக்கல்வி, நுண்ணிய கலை உணர்வு, ஜனநாயகம் இவற்றுக்கெல்லாம் இதர நாடுகளோடு உரிமை கொண்டாடிய ஜெர்மனி பெரும் திரளான மக்களைத் திட்டமிட்டுப் படுகொலை செய்தது. மனிதன் தோன்றியதிலிருந்து எவ்வளவோ போர்களுக்குப் பிறகு படுகொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. ஆயிரக்கணக்கான மக்கள் அடிமைகளாகக் கடத்தப்பட்டிருக்கிறார்கள். பெண்களை எல்லாம் அக்கிரமங்களுக்கும் உட்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் ஜெர்மனியில் நிகழ்த்திய யூத இன ஒழிப்புப் பேய்த்தனமானது. 'முழு யூத இன ஒழிப்பு பேய்த்தனமானது'. 'முழு யுத்தம்' என்ற பெயரில் பல நூற்றாண்டுகள் ஆயிரம் மக்கள் முயற்சியில் உருவான அழகிய நகரங்கள் சில நூறு குண்டுகளால் தரைமட்டமாகி இருக்கின்றன. குழந்தைகள், பெரியவர்கள், ஆண், பெண், முதியோர், நோயுற்றோர் என்ற பேதமில்லாமல் உடல் சிதறி இறந்திருக்கிறார்கள். இடிபாடுகள் நடுவில், அனாதையாகத் திரியும் குழந்தைகளும், கிழவர்களும் ஒருவாய் உணவுக்குக் குப்பைத் தொட்டிகளைக் கிளறியிருக்கிறார்கள். இராணுவ முகாம்களின் அருகாமையில் பிச்சைக் கேட்டு நின்றிருக்கிறார்கள். இச்சூழ்நிலையில் வேர்கள் என எந்த மேலைநாட்டினரும் தேடிப் போகக் கூடிய



மணநிலையில் இருந்திருக்க நியாயமில்லை. மாறாக மேலைய வெள்ளையர் ஆதிக்கத்தில் பல நூற்றாண்டுகளைக் கழித்துவிட்ட கறுப்பு இன மக்களும் கீழைய நாட்டினரும் வேர்களை நாடிச் செல்லத் தொடங்கினர்.

வேர்கள் பண்டையக் கலாச்சாரம், பழக்க வழக்கங்களை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதோடு முடிந்துவிடுவதாக எண்ணப்படவில்லை. பகுத்தறிவுவாதம் நிலை கொண்ட இந்த இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் பழைய மத நம்பிக்கைகளையும் இந்த வேர்கள் மீட்டுக் கொணர்ந்தது. ஐக்கிய அமெரிக்காவில் கறுப்பு இனத்தவரிடையே ஒரு பிரிவினர் அவர்கள் ஆப்பிரிக்கக் கண்டத்தின் முஸ்லீம் குழுவினிடமிருந்து கடத்திக் கொணர்ந்தவர் என அறிவித்துக் கொண்டார்கள். கரும் சிறுத்தைகள், "கறுப்பு முஸ்லீம்கள்" என்ற அந்த இயக்கங்கள் அறுபதுகளிலும் எழுபதுகள் தொடக்கத்திலும் அமெரிக்கர்களிடையே சிறிது பயமும் பீதியும் கூட ஏற்படுத்தியது. இவர்களின் தலைவர் எலிஜா முகம்மது என்பவர் பண்டைய மதக்குழுவினிடையே இருக்கக்கூடிய ஒரு பரிபூரண சரணாகதியைத்தான் எதிர்பார்த்திருக்கக்கூடும். ஆனால், அவருடைய முக்கியச் சீடரான மால்கம் எக்ஸ் என்பவர் எலிஜா முகம்மதுவிடமிருந்து பிரிந்து சென்று தனித் தலைவரானார். இருவருமே அரங்கப் பேச்சாற்றலால் கேட்போரை எதையும் செய்யத்தூண்டும் அபார சக்தி பெற்றவர்கள். இவர்களுடைய கோட்பாடுகளும், வேட்கைகளும் பழங்குடிமக்கள் காலத்துக்கும், சூழ்நிலைக்கும் பொருத்தமாக இருந்திருக்கக்கூடும். ஆனால், ஜனநாயகம், சமத்துவம் முதலிய சிந்தனைகளும் உலவக்கூடிய நாட்களில் இந்த இயக்கங்கள் போன்றவை நீடித்த மாற்றங்கள் நிலையாகக் கொண்டுவருவது கடினம். இந்த இயக்கங்களின் விளைவாக காஸியஸ் கிளே என்பவர் முகம்மது அலி என அன்று பெயர் மாற்றம்செய்து கொண்டதோடு அல்லாமல், அரசின் கட்டாய ராணுவ சேவை ஆணைக்குட்படாமல் உலக வீரா பட்டத்தைத் துறந்து சிறைவாசமும் மேற்கொண்டார். நடந்து முடிந்த 1996 அட்லாண்டா ஒலிம்பிக் போட்டியின் துவக்க நாளன்று அவர் ஒலிம்பிக் ஜோதியை ஏற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலக்கியத்தில் வேர்களைத் தேடல் சில சந்தர்ப்பங்களில் வெற்றியை ஈட்டித் தந்திருக்கிறது. எஸ்ரா பவுண்டு எனும் அமெரிக்கக் கவிஞர் மத்திய கால பிரான்ஸ் நாட்டுக் கவிதைகளை ஆராய்ந்ததில் அவருடைய சொந்தப் படைப்பில் சிறப்பான பரிமாணங்கள் தோன்றின. (அமெரிக்க வெள்ளையர்களுக்கு அவர்களுடைய மண்ணிலேயே மிகப் புராதனமான வேர்கள் கிடைப்பது அசாத்தியம். ஐரோப்பிய வேர்களை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் இருப்பதைப் புரிந்துகொள்ள முடியும்.)



வேதநாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரம்" ஆங்கில நாவல் இலக்கியத்தின் பாதிப்பால் தமிழில் தோன்றிய முதல் முழுநீள புனைகதைப் படைப்பானாலும் அதில் இந்திய வேர்களை எளிதில் உணர்ந்துகொள்ள முடியும். வேதநாயகம்பிள்ளை அவர்கள் நாவலின் இறுதியில் 'பலசுருதி'யும் எழுதியிருக்கிறார். எல்லாமே இயல்பாக இருக்கும், இயல்பாக இருக்கும் என்று கூறுவதை விட, 'பிரதாப முதலியார் சரித்திர'மும் அதைத் தொடர்ந்து வந்த பல நவீனப்படைப்புகளும் அவற்றின் உந்துதல் எங்கிருந்து வந்தாலும் தமிழ் வெளிப்பாட்டில் இம்மக்களுக்குரிய ஆதார சுருதியை உட்பொதிந்தே இருந்து வந்திருக்கின்றன. மிக அந்நியமான சம்பவச் சேர்க்கை கொண்டிருந்த துப்பறியும் நவீனங்களில் கூடக் கதை மாற்றல் நெருக்கடியின்போது வெளிப்படுத்தும் உரையாடலோ எண்ணமோ இந்திய வேர்களுக்குரியதாகவே இருக்கும்.

படைப்பாளியின் இயல்பான தன்மையின் வெளிப்பாடாக இருக்கும் போதுதான் கலை ஒருங்கிணைந்த படைப்பாக உருவாகிறது. வலுக்கட்டாயமாக எந்த ஒரு நோக்கையும் படைப்பில் இருத்தும்போது அது தனித்து நிற்பதோடு படைப்பின் மொத்த உருவ அமைதியையும் பாதித்துவிடுகிறது. மேலும் நாம் நம்முடைய வேர்கள் உள் உண்ணுவதும் ஒரு வகை கால நிர்ணயிப்புக்கு உட்பட்டதுதான். நம் அன்றாட வாழ்க்கையில் கணக்கில்லாத அம்சங்களில் வேர்களிலிருந்து விலகிப் போயிருக்கிறோம். விலகிப்போயிருக்கிறோம் என்பதை விட நாம் சமுதாயவியல் பரிணாமத்துக்கு உட்பட்டிருக்கிறோம் என்று கூறுவது பொருத்தமானதாகும். நாம் வசிக்கும் இல்லங்கள் பயன்படுத்தும் எரிபொருள், உண்ணும் உணவு, உடுக்கும் உடை, தொழில், பொழுதுபோக்கு, திருமணம், குழந்தை வளர்ப்பு, கல்வி புகட்டல் எனப் பல அடிப்படைக் கூறுகளில் கடந்த நூறு இருநூறு ஆண்டுகளிலேயே ஏராளமான மாற்றங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அரசு என்பதே இந்த நூறு ஆண்டுகளில் அமைப்பிலும் பணிகளிலும் எவ்வளவு மாறியிருக்கிறது.

நீண்ட தொடர்ச்சியுடைய கலாச்சாரம் மிக நுண்ணிய வகையில் அதன் வேர்களை உயிர்ப்பித்துக் கொண்டே இருக்கும். பரிணாமகதிக்கு மாறாக வேர்களைச் செயற்கையாக வற்புறுத்தும் முயற்சிகள் இன்றைய வாழ்க்கைக்கு அந்நியமாகவே இயங்கும் யதார்த்தத்திற்கு விலகியிருக்கும் எந்த இயக்கமும் மனித முன்னேற்றத்துக்கு வழிகோலாது. ●



# தமிழகத்தில் களிமண் உருவங்கள் - தோற்றமும், வளர்ச்சியும்

- நடன காசிநாதன்
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

**த**மிழகம் கலை, கைவினைத் தொழில்களின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் உன்னத நிலை பெற்று விளங்குகிறது. நாகரிக வளர்ச்சியோடு கலை, கைத்தொழில் ஆகியனவும் வளர்ச்சியினையும், நேர்த்தியினையும் பெற்றன. பிற கலைகள் அனைத்திற்கும் அடிப்படையாகவும், அவற்றின் வளர்ச்சிக்கும் உயர்விற்கும் உறுதுணையாகவும் அமைந்தது ஓவியம். அதுபோலக் கல் ஆயுதங்கள் செய்தல், கைவினைத் தொழில்களுக்கு அடிப்படையாக அமைந்தது. வேட்டையாடுவதற்காகக் கல்லிலும், மரத்திலும், எலும்பிலும் ஆயுதங்கள் செய்தலும், உணவு சமைப்பதற்கும், தானியங்கள் சேகரிப்பதற்கும், மட்பாண்டங்கள் வனைதலும் வரலாற்றுக்கு முற்பட்ட மனித சமுதாயத்திற்கு அடிப்படைத் தேவைகளாக இருந்தன. இவை தவிரப் பாறைகளிலும் மட்கலங்களிலும் ஓவியங்கள் தீட்டுவதையும் பொழுதுபோக்காகக் கொண்டிருக்கின்றனர். இன்னும் குறிப்பாகச் சொல்வோமேயானால் இறந்தவர்களை மண்ணுள் பாதுகாப்பாகப் புதைக்கப் பயன்படுத்திய சவப்பெட்டிகளைக் கூட ஆடு, குதிரை வடிவங்களில் செய்தமைத்துள்ளனர். மேலும் ஈமத் தாழிகளின் மேல்மூடிகளில் பறவை, விலங்கு உருவங்களை அமைத்து மகிழ்ந்திருக்கின்றனர். எனவே சுடுமண் உருவங்கள் செய்யும் கலை பெருங்கற் காலத்திலேயே தோன்றிவிட்டது எனலாம். சங்க இலக்கியங்களான திருக்குறள், சிலப்பதிகாரம் போன்றவற்றில் 'மணிமான்புனை பாவை', 'மண்ணீட்டாளர்' போன்ற சொற்கள் சுடுமண் உருவங்களையும், களிமண் கைவினைஞர்களையும் குறிக்க எடுத்தாளப்பட்டுள்ளன.

மேற்காணும் கருத்துக்களுக்கு வலிமை சேர்ப்பதாகத் தருமபுரி மாவட்டம் கடத்தூரில் கிடைத்துள்ள ஒரு சுடுமண் பெண் உருவத்தையும், இரண்டு ஆண் உருவங்களையும் குறிப்பிட வேண்டும். தமிழாசிரியர் திரு.புது.பொ.வெங்கடராமன் அவர்கள் ஒத்துழைப்புடன் இச்சுடுமண் உருவங்கள் கண்டறியப்பட்டன. மேற்கூறிய மூன்று உருவங்களில் இரண்டு நல்ல நிலையிலும் மற்றொன்று தலை தவிர்த்துப் பிற பகுதிகள் சிதைந்தும் காணப்படுகின்றன. தவாலிகர் என்பார் அவற்றைப் பற்றித் தாம் எழுதிய விரிவான கட்டுரையில் களிமண்ணோடு தேவைக்கு அதிகமான அளவு மணலும் பக்குவமான கலவைக்கேற்ற பொருட்களும் கலந்து செய்யப்படுவதால் உருவங்களில் ஒருவிதக் கட்டுமானம் இழையோடுகிறது என்கிறார். மேலும் இம்மண் சிற்பங்கள் பற்றி அவர் கூறியுள்ள கருத்து அப்படியே இங்கு தரப்படுகிறது. "பெண் உருவங்கள் நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளது. அவ்வுருவத்தில் வலக்கை மணிக் கட்டிலிருந்து உடைந்தும், இடக்கை முழங்கை வரை உடைந்தும் காணப்படுகின்றன. கால்களில் முழங்காலுக்குக் கீழ் காணப்படவில்லை. இவ்வுருவம் முழுதும் கையால் செய்யப்பட்டுள்ளது. உறுப்பமைப்பில் சப்பையான மூக்கும், குறுகலான பெரிய அல்லது நீள்வட்டத்தில் கீறியது போன்ற கண்ணும் குறுகிய முன்தலையும் தனித்தன்மைகளாகக் கருதத்தக்கன.

இவ்வுருவம் இதுகாறும் அறியப்பட்டுள்ள இந்தியச் சுடுமண் கலைப்பாணிகள் எதிலும் சாராது தனித்தன்மை வாய்ந்த பழைய சுடுமண் உருவமாக உள்ளது. இதன் பாங்கு கி.மு.5-3ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தொன்மை வகைபோல் காணப்பட்டாலும் அணிந்துள்ள முறுக்குப் பதக்கத்தைக் கொண்டு இதன் காலத்தை கி.மு.முதலாம் நூற்றாண்டாகக் கருதலாம். இவ்வகைப் பதக்கத்தின் பிறப்பிடம் மத்திய ஆசியா. இதனை இந்தியாவில் அறிமுகப்படுத்தியவர்கள் சித்தியர்கள்.

2. ஆண் உருவம் அமர்ந்த நிலையில், கால்களை முன்புறம் நீட்டியும், கைகள் மேலே தூக்கப் பெற்றும் காட்டப்பட்டுள்ளன.



'முத்தோன்' . மேலப்பெரும்பள்ளம் - பூம்புகார் - கி.பி.3ஆம் நூற்றாண்டு



*முற்காலச் சோழர் கால ஆணின் தலை உருவம் . கி.பி.9. 10ஆம் நூற்றாண்டு - பூம்புகார்.*

இதன் முக அமைப்புப் பெரிதும் சிதைந்திருப்பினும் இருக்கக் கூடியவற்றின் அமைதியைக் காணும்போது நீண்ட மூக்கும், மெல்லிய உதடுகளும், கீறினாற் போன்ற குறுகிய கண்களும், மேடான கன்னத்தின் எலும்புகளும் காணப்பெறுகையால் இவ்வுருவம் அயல்நாட்டைச் சார்ந்தது என்றே கருதத் தூண்டுகிறது. அடர்த்தியான மீசையும், தாடியும் கொண்டு காட்சியளிக்கிறது. தலையில் அணிந்துள்ள தலையணி தலைக்கவசமாக இருத்தல் வேண்டும். மேலும் கன்னத்தைப் பாதுகாக்கும் பட்டைவார், முற்காலச் சாதவாகனர் (கி.மு.முதலாம் நூற்றாண்டு) காலத்ததாக, அஜந்தாவில், பத்தாம் எண் குடைவரையில் உள்ள ஓவியத்தைப் பெரிதும் ஒத்துள்ளது. இவ்வுருவத்தில் உள்ளங்கைகளும், கணுக்கால்களும் சிதைந்து விட்டன. சிறு குழிவான உந்தி தெளிவாகக் காணப்படுவதால் மேலாடை இன்றிக் காணப்படுகிறது எனலாம். ஆனால் கீழ் ஆடையற்ற மேனி அல்ல என்பதும் புரிகிறது. இவ்வுருவத்தின் உறுப்பமைதி கொண்டு பண்டைய சித்தியன் படைவீரன் எனக் கொள்ளலாம்.

ஆண் தலை மட்டும் காணப்படும் இதன் அகன்ற தட்டையான மூக்கு, தடித்த உதடுகள், அகன்று துருத்திய கண்கள் ஆகியன அச்சமூட்டுவதாக உள்ளன. அகன்ற கரையுடன் கூடிய தலையணி அணிந்துள்ளது. உயரமான தலையணியாக இருந்திருத்தல் வேண்டும். ஆனால் உடைந்துள்ளது.

இது தற்காலத்திய குல்லா என்பதினின்றும் பெரிதும் வேறுபட்டதல்ல. வடமொழியில் 'குல்ஹா' என்று வழங்கப்பெறும் சொல், பர்சீய மொழியில் உள்ள 'கொல்' என்பதிலிருந்து தோன்றியதாகக் கருதப்படுகிறது. இவ்வுருவம் அயல்நாட்டினனாகவே இருக்கலாம் என்று கருதப்படுகிறது. சிலையின் உருவமைதி அடிப்படையில் இதனைக் கிறித்து சகாப்தத்தின் முதல் நூற்றாண்டாகக் கொள்ளலாம்.

மேலே விவரிக்கப்பட்ட சுடுமண் பொம்மைகள் தென்னிந்தியப் பெருங்கற்காலச் சின்னங்களில் இதுகாறும் கிடைத்தவற்றுள் தனித்தன்மை வாய்ந்தவையாகவும், நீலகிரி பெருங்கற் சின்னங்களின் மண்சிற்பங்களைவிட பழமையானதாகவும் உள்ளன. இரண்டு ஆணுருவங்களுமே அயல்நாட்டு மனித இனம் சார்ந்ததாகப் பெரும்பாலும் சித்திய இனத்தவராகக் கருத இடந்தருகின்றன.

இதன் மூலம் பெருங்கற் சின்னங்களை அமைத்தவர்கள் இடுகுழியுள் இடும் மற்ற பொருட்களுடன் சுடுமண் பொம்மைகளையும் வைத்துப் புதைத்துள்ளனர் என்ற முடிவிற்கு வரலாம். பெருங்கற் சின்னங்களின் காலத்தை அறியக் களத்தூர் சுடுமண் உருவங்கள் உதவி புரிகின்றன. அவற்றின் காலம் கி.பி.1-2ஆம் நூற்றாண்டு.

சங்க காலப் பாண்டியரின் துறைமுகப் பட்டினமான கொற்கையில் கிடைத்துள்ள சுடுமண் உருவங்களுள் பெண்ணின் முண்டப் பகுதி கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது. அதன் இடைப்பகுதி கருவுறுவதற்கு ஏற்ற வகையில் பருத்து காணப்படுகிறது. குழந்தைப் பிறப்புக்கு முக்கியத்துவம் தந்து இவ்வுருவம் அமைக்கப்பட்டுள்ளதால் வளமை வழிபாடு வழக்கில் இருந்துள்ளது என்பதை இதனால் உணரலாம்.

அண்மைக் காலங்களில் கிடைத்துவரும் கி.மு.2,1ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த பல சான்றாதாரங்கள் மண்பாவை செய்யும் கலை வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் பரவலாக இருந்திருக்கிறது என்பதை மெய்ப்பிக்கின்றன.

மலையமான், சோழர், பாண்டியர் ஆகியோரின் பண்டைய துறைமுகங்களான அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், அழகன்குளம் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் கிடைத்துள்ள சுடுமண் பொம்மைகளால் கிறித்து சகாப்தத்திற்கு முன்பிருந்தே களிமண் உருவங்கள் செய்யும் தொழில் சிறப்புற்று இருந்துள்ளது என்பதை அறிகிறோம். அரிக்கமேட்டில் கிடைத்துள்ள கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த இரண்டு சுடுமண் பொம்மைகள் குறிப்பிடத்தக்கவை. இவற்றைவிட மேலானதாகக் குறிப்பிடத்தக்க ஒன்று அழகன்குளத்தில் கிடைத்துள்ளது. கி.மு.முதலாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.முதல் நூற்றாண்டு வரை எனக் கொள்ளலாம். மேற்கூறிய அனைத்துமே பெண் உருவங்களாகும். அரிக்கமேட்டில் கிடைத்துள்ள இரண்டு உருவங்களுள் ஒன்று தமிழ்நாட்டுப் பாணியில் புடவை உடுத்தி, பழமோ அல்லது விதையோ நிரம்பிய கூடையை இடக்கையில் ஏந்தி, வலக்கையைத் தொங்கவிட்ட நிலையில் காட்சியளிக்கின்றது. மற்றோர் உருவம் வடநாட்டுப் பாணியில் மேலாடை வலது தோளிலிருந்து இடது கையின் கீழ் செல்வது போலவும், இடுப்புக்குக் கீழ் ஆடை சாய்வான இணைகோடுகளாகக் காட்டப்பட்டும் உள்ளன. இடையின் கீழ்ப்பகுதியின் நடுவே நீண்ட குஞ்சம் தொங்குகின்றது.

*ஆப்பிரிக்க நாட்டுப் பானை ஓட்டின் மீது பெண்களின் உருவங்கள் - அழகன் குளம் - கி.மு.2ஆம் நூற்றாண்டு.*







*தாயும் - சேயும்.*
*இந்தோ - கிரேக்க பாணியில் வடிவமைக்கப்பட்டுள்ளது.*
*கி.மு.2 - 1ஆம் நூற்றாண்டு - அழகன் குளம்*

அழகன்குளத்தில் கிடைத்துள்ள சுடுமண் உருவம் கிரேக்கக் கலையமைதியிலான தமிழ்நாட்டுப் பெண்ணாகக் காட்சி தருகின்றது. அவள் இடுப்பில் குழந்தையை ஏந்தியுள்ளாள். அக்குழந்தையின் கால்கள் கிரேக்க மரபினைத் தெளிவாகச் சுட்டுகின்றன. ஆனால் பெண்ணின் ஆடையமைப்பு உள்நாட்டுப் பாணியை வெளிப்படுத்துகிறது. இச்சுடுமண் உருவத்தில் இழைந்தோடும் கலைநயம் அழகன்குளம் மட்கலனையே ஒத்ததாக மிகவும் மென்மையாகவும், நெகிழ்வாகவும் அமைந்துள்ளது. இவ்வாண்டு நிகழ்த்தப்பெற்ற அகழாய்வில், ஒரு பானையோட்டில் இரு பெண் உருவங்கள் அச்சு குத்தப்பெற்ற முறையில் காணப்பெறுகின்றன. இவற்றின் கலையமைதி ஆப்பிரிக்க நாட்டுக் கலையமைதியோடு ஒப்பிடத்தக்கதாய் உள்ளன. இவை கி.மு.2 அல்லது முதல் நூற்றாண்டினதாகக் கொள்ளலாம்.

இதுகாறும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மேற்கூறிய உருவங்கள் அனைத்துமே எந்தவொரு அடிப்படையிலும் சாராது பொதுநிலை சார்ந்தவையே என்று கொள்ளலாம். கிறித்து சகாப்தத்திற்கு சற்று முற்பட்ட காலந்தொடங்கி இதுகாறும் கிடைத்துள்ள களிமண் உருவங்களை 'சமயம் சார்ந்தவை' என்றும் 'சமயம் சாராதவை' என்றும் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

காவிரிப் பூம்பட்டினம் அகழாய்வில் இவ்விரு வகை சார்ந்த உருவங்களும் கிடைத்துள்ளன. சமயம் சார்ந்தவைகளாகச் சில கடவுளர் உருவங்களும் கிடைத்துள்ளன. இவை தவிரச் சில விலங்குகள் மற்றும் பறவைகளின் உருவங்களும் கிடைத்துள்ளன. இவை கி.பி.2ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.10ஆம் நூற்றாண்டு வரை வெவ்வேறு காலங்களைச் சார்ந்தவை.

1960ஆம் ஆண்டு புகாரில் நடைபெற்ற அகழாய்வில் கிடைக்கப்பெற்ற இரண்டு சுடுமண் பொம்மைகள் ஆந்திரத்திலுள்ள நாகார்ச்சுன கொண்டா கலைப்பாணியைப் பெரிதும் பிரதிபலிப்பதாக உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாம். ஆணின் உருவம் வில் போன்ற தலையணியுடன் கூடிய தலைப்பாகை அணிந்துள்ளது. அத்தலைப்பாகையின் அடிப்பக்க மடிப்பில் அலங்காரமான அணி போன்று காணப்படுகிறது. பெண்ணின் உருவம் சுருண்ட கூந்தலைத் தன் இரு காதுகளின் புறமும் காணுமாறு அணிகளுடனும், கழுத்தணி, ஸ்தான சூத்திரத்துடனும் காட்சியளிக்கிறது. இவ்விரு உருவங்களும் சமயம் சாராக் கலைச் சான்றுகளாய் உள்ளன.

கி.மு.2 முதல் கி.பி.2ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சார்ந்ததான தெய்வ நேர்ச்சிக்காக விடப்பட்ட புத்தபாதமும், அவலோகி தேசுவரரின் தலையும் சமயம் சார்ந்தவற்றுக்கு எடுத்துக் காட்டுகளாம். இங்கு முருகன் அல்லது இயக்கனுடைய தலைப்பகுதியும் மேற்பரப்பாய்வில் கிடைத்துள்ளது. மேலப் பெரும்பள்ளம், திருக்கோயிலூர் ஆகிய இடங்களில் முதுமக்கள் தாழியின் வெளிப்புறம் ஓட்டு வேலையாகச் செய்யப்பட்ட உருவங்களும் கவனத்தை ஈர்க்கத்தக்கவையாகும். இவற்றுள் பூம்புகார்த் தாழி ஓட்டுவேலை கி.பி.3ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. திருக்கோயிலூர்ச் சிற்பம் கி.பி.4-5ஆம் நூற்றாண்டினது.

விழுப்புரம் மாவட்டம் சேந்தமங்கலம் அகழாய்வில் தனித்தன்மை கொண்ட களிமண் உருவம் ஒன்று கண்டறியப்பட்டது. அதில் ஆணின் உருவமும், பெண்ணின் உருவமும் புடைச் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளன. இரண்டும் ஒரு காலை நேராக வைத்தும், ஒரு காலைச் சற்று மடக்கியும் நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளன. இவை கி.பி.2ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மிதுனச் சிற்பங்களாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதே இடத்தில் ஆணின் தலையற்ற உடற்பகுதியும் கிடைத்துள்ளது. இதன் உருவமைதி கொண்டு இதனைக் கி.பி.1-2ஆம் நூற்றாண்டு என்று கொள்ளலாம்.

சங்க காலத்தினையொட்டி தமிழகத்தில் சமணச் சமயம் சிறப்புற்றிருந்தது. எனவே அச்சமயத்தைச் சார்ந்தவர்கள் தம் வழிபாட்டிற்காக இயக்கன், இயக்கி உருவங்களைப் படைத்திருக்கின்றனர்.

கோவை மாவட்டம் போளுவாம்பட்டி அகழாய்வில் ஒரு சில மிக நேர்த்தியான இயக்கன் உருவங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இதுபோன்று சில பொம்மைகள் காவிரிப்பூம்பட்டினத்திலும் சேகரிக்கப்பட்டுள்ளன. இவை கி.பி.7-8ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவ்வுருவங்கள் இருகால்களை நீட்டித் தொங்கவிட்டு, அதாவது குதிரைமேல் அமர்ந்தது போன்ற நிலையில், தடித்த தலைப்பாகை அணிந்து காணப்படுகின்றன. இத்துடன் தாயும் சேயும் ஆக உள்ள உருவங்கள் தமிழகத்தில் கணிசமான அளவில் கிடைத்துள்ளன. இவை யசோதையும் கண்ணனுமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆதலால் இக்காலக் கட்டத்தில் சமணத்தோடு வைணவமும் உயர்நிலையில் இருந்துள்ளது என்று கொள்ளலாம்.



*பிற்காலச்சோழர்கால நந்தி உருவம் - கி.பி.12- 13ஆம் நூற்றாண்டு - பூம்புகார்.*

சேந்தமங்கலத்தில் கிடைத்துள்ள தவழும் கண்ணன், மனித உருவங்கள், பறவைகள், விலங்குகள் ஆகிய சுடுமண் உருவங்கள் கி.பி.13-14ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவை இடைக்காலத்தின் பிற்பகுதிக் கலைத்தன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

ஈரோடு மாவட்டம் மண்மங்கலம் கோட்டை மேட்டில் வட்டமான ஆசனத்தில் அமர்ந்த நிலையில் காணப்படும் மிக அழகிய களிமண் உருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றுள் இரண்டு பெண்ணுருவங்கள் இடையில் குழந்தையை ஏந்தியும், மூன்றாவது உருவம் குழந்தை இன்றியும் காணப்படுகின்றன. இவை பற்றி எழுதிய அப்துல்மஜீத் இவற்றின் காலம் கி.பி.11 முதல் 13ஆம் நூற்றாண்டுகளெனக் கணித்துள்ளார். அவை மூன்றனுள் ஒன்று கி.பி.11ஆம் நூற்றாண்டினது என்றும் பிற இரண்டும் கி.பி.16,17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்றும் கொள்ளலாம்.

தருமபுரி மாவட்டம் பனையகுளம், கொளகத்தூர் ஆகிய இடங்களில் தற்செயலாக இரண்டு வகையான சுடுமண் உருவங்கள் கண்டறியப்பட்டன. இவையனைத்தும் பெண்ணுருவங்களே. இவற்றின் காலம் கி.பி.2 முதல் 8ஆம் நூற்றாண்டு என்று கருதப்படுவதால் இவை வரலாற்று நோக்கில் மிகவும் அரிய கண்டுபிடிப்புகளாகக் கொள்ளப்படுகிறது. பனையகுளத்தில் ஒரு பெண்ணின் உருவம் முகத்திலிருந்து வயிறு வரை உள்ள பகுதிதான் கிடைத்துள்ளது. இதன் கலையமைதி கொண்டு காலத்தால் முற்பட்டதாக அதாவது கி.பி.2ஆம் நூற்றாண்டைச் சார்ந்தததாகக் கருதப்படுகிறது. கொளகத்தூரில் தலை மட்டுமே கிடைத்துள்ள உருவத்தின் முக அமைதி கொண்டு இது ஆப்பிரிக்கப் பெண்ணை ஒத்திருப்பதாகக் கூறலாம். இதுவும் அதே காலத்தைச் சார்ந்தது.

மீதமுள்ள உருவங்களுள் பனையகுளம் பெண்ணின் மார்பளவுள்ள உருவம் பல்லவர் கால உருவமைதியிலேயே காணப்படுவதால் இதனைக் கி.பி.7ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம்.

அடுத்து இடைக்காலத்திற்கு வருவோமானால், அண்மையில் பூம்புகாரில் கண்டெடுக்கப்பட்ட முற்காலச் சோழர் கலைப்பாங்கிலுள்ள ஆணின் தலைப்பகுதியைக் குறிப்பிடுதல் வேண்டும். இந்தத் தலைப்பகுதியை மட்டும் கொண்டு இதன் முழு உருவமும் எத்தகையதாக இருந்திருக்குமென ஊகிக்க முடிகிறது. முகம் மிகவும் அமைதியாகவும் இளமையாகவும் உள்ளது. இளநகை தவழும் இதழ்களும், கண்களும், நீண்ட மூக்கும் முற்காலச் சோழர் கலைப் பாணியினைப் பிரதிபலிக்கின்றது. திண்டுக்கல் மாவட்டம் அரவக் குறிச்சியில் குழந்தையை இடுப்பில் ஏந்திய தாயின் உருவம் அண்மையில் கிடைத்துள்ளது. இதுவும் கி.பி.10-11ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. திருமலை நாயக்கர் அரண்மனையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள கொந்தகைக் களிமண் உருவங்கள் அழகிய வேலைப்பாட்டுடன் காட்சி தருகின்றன. அளவில் பெரியதாகவும், கருஞ்சிவப்பு நிறமாகவும், உறுதியாகவும், உருண்டு திரண்டும் உள்ளன. இவை கி.பி.13-14ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

இவ்வுருவங்களையடுத்து தஞ்சையின் ஒரு பகுதியாகிய செக்கடிமேட்டில் கிடைத்த சுடுமண் உருவங்களை இங்குக் குறிப்பிடவேண்டும். இவ்வுருவங்களுள் கணேசரும், வேணுகோபாலரும், காளை வாகனமும் மதச்சார்புடையவை என்று பிரிக்கலாம். இவற்றின் கலையமைதி கொண்டு கி.பி.17-18ஆம் நூற்றாண்டு என்று கூறலாம்.

மேலே கூறப்பட்டவற்றைக் கொண்டு பார்க்கையில் பெருங்கற்காலத்திலே களிமண் உருவங்கள் செய்யும் பழக்கம் தோன்றிவிட்டது என்பது தெளிவாகிறது. அக்கால கட்டத்தில் இயற்கைப் பொருட்களான பறவைகள், விலங்குகள் மட்டுமே செய்யப்பட்டன. கிறித்து சகாப்தத்திற்குச் சற்று முன்னும் பின்னும் களிமண் கைவினைத் தொழிலில் மதச்சார்புடைய உருவங்களும் புகுத்தப்பட்டன. அவற்றுள்ளும் பௌத்தமத உருவங்களே முதன்மை பெற்றிருந்தன். வரலாற்றுக் காலந்தொடங்கி இந்துமதக் கடவுளர் உருவங்களும் இடம் பெறலாயின.

இடைக்காலத்தில் தவழும் கண்ணன் போன்றவை மக்கள் மனதைக் கவர்கின்ற நிலை பெற்றிருக்கின்றன. மக்கள் தாங்கள் விரும்பி வழிபடும் தெய்வங்களை ஏராளமாகப் படைக்கத் தொடங்கிவிட்டனர். வரலாற்றுக் காலத்தின் இறுதிக் கட்டத்தில் கணேசர், வேணுகோபாலர் போன்ற தெய்வங்களும் தமது வாகனங்களுடன் படைக்கப்படலாயின.

தமிழ்நாட்டின் தென்பகுதியில் சிறுதெய்வங்களுக்குச் சுடுமண் உருவங்கள் செய்யப்படுவது இன்றும் வழக்கத்திலுள்ளது. அங்கு மதுரைவீரன், அய்யனார் கோயில்களின் முன பெரிய அளவில் குதிரைகள் செய்து வைக்கப்படுகின்றன. செம்பு, மரம், தந்தம் ஆகியவற்றால் செய்யப்படும் உருவங்களுக்கு அடிப்படையாக அமைவது களிமண் உருவக்கலையே என்றாலும், நாளடைவில் உயர்தட்டு மக்கள் சுடுமண் கலையை ஆதரிப்பது அரிதாகிவிட்டது. ஆனாலும் இம்மரபுவழி உன்னதக் கலைக்குக் கிராமிய மக்களின் பேராதரவு இன்னமும் இருந்து வருவது கண்டு உளம் பூரித்தெழுகிறது. ★



# தனிமரம்

பாவண்ணன்

ஒரு வகையில் குடும்பத்துக்கு அது பெருமை. இன்னொரு வகையில் வீண்வேலை. ஊரோடு இருக்கிற ஆசையில் ராணுவத்தில் ரிட்டயர்மெண்ட் வாங்கிக் கொண்டு திரும்பி வந்த கோபாலசாமி கையோடு ரத்தனையும் அழைத்து வந்தார். பங்களாதேஷ் யுத்தம் முடிந்திருந்த நேரம் அது. ரத்தனுக்கு முட்டிக்குக் கீழே ஒருகால் இல்லை. குண்டு பாய்ந்ததில் எடுத்துவிட்டார்கள். ராணுவ ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாய் இருந்த சமயத்தில் பீகாருக்குள் புகுந்த கங்கை வெள்ளம் அவர் கிராமத்தையே அடித்துக் கொண்டு போய்விட்டது. பலியான எழுநூறு சொச்ச உயிர்களில் அவர் அம்மா, அப்பா, மனைவி, மகள் எல்லாரும் அடக்கம். மூணு மாசத்துக்குப் பின் ரிட்டயர்மெண்ட் வாங்கிக் கொண்டு முடமான காலோடு போய்ச் சேர்ந்தபோது பார்த்துப் பேசக்கூட யாரும் இல்லை. சிதைக்கப்பட்ட பிரதேசம் போலக் கிடந்தது கிராமம். சொல்லி அழுவதற்காவது துணை வேண்டுமேயென்று முகாமுக்குத் திரும்பிய ரத்தனுக்கு ஆறுதல் சொல்லி அழைத்து வந்து குடும்பத்தோடு வைத்துக்கொண்டார் கோபாலசாமி.

ராணுவத்தில் கிடைத்த பணம் நாற்பதாயிரத்துச் சில்லறையைக் கோபாலசாமியிடம் கொடுத்துவிட்டார் ரத்தன். அவருக்குச் சொந்தமான கோழிப் பண்ணை ரத்தனின் பணத்தில் மேலும் கொஞ்சம் விருத்தியானது. கூடமாட முடிந்தவரைக்கும் எல்லாக் காரியங்களிலும் ஒத்தாசையாய் இருந்தார் ரத்தன். அவரைச் சொந்தத்தம்பி போலப் பார்த்துக்கொண்டார் கோபாலாசாமி. இருபது வருஷ காலத்துக்கு எந்தப் பிரச்னையும் இல்லை. கோபாலசாமியும் அவர் மனைவியும் அடுத்தடுத்து இறந்து போனார்கள். அதற்கப்புறம் பிரச்சனை தொடங்கியது.

ஆண் வாரிசு இல்லாத வீட்டுக்குக் கண்டமங்கலத்தில் இருந்து குடும்பப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள மூத்த மருமகன் என்கிற அந்தஸ்தோடு வந்து சேர்ந்தான் வீரப்பன். ஒரு டெம்போவில் கட்டில், அலமாரி, தட்டுமுட்டுச் சாமான்களோடு வந்தவன் குடும்பத்துக்கும் பண்ணைக்கும் உபகாரமாக இருப்பான் என்றுதான் ரத்தன் நம்பினார். பெரிய பொறுப்பை எடுத்துக் கொள்ளப் போகிற பிள்ளை என்று உபசரிக்கவும் செய்தார். ஆனால் பண்ணைக்குள் நுழைந்து கோழி எத்தனை, முட்டை எத்தனை, வரவு எவ்வளவு, செலவு எவ்வளவு, என்று கணக்குப் பிள்ளையைக் கேட்கிற மாதிரி அதட்டலாய்க் கேட்டபோது மனம் நொந்து போனார் அவர்.

துறுதுறுப்பான பையன்தான். கையும் காலும் ஒரு நிமிடம் கூட சும்மா இல்லை கட்டி ஆளும் வெறி அவன் ரத்தத்தில் ஓடிக் கொண்டிருந்தது. கொஞ்சம் கறுப்பு. ரேவதிக்கு அவ்வளவாகப் பொருந்தாத ஜோடி. கழுத்தில் இருக்கும் தங்கச் சங்கிலியை மெனக்கிட்டு பல்லிடுக்கில் கடித்துக் கொண்டிருந்தான். தர்மசங்கடமான சூழலுக்குள் விதி தன்னைத் தள்ளிவிட்டதை நினைத்தபடி கண்களை மூடிக்கொண்டு தூணோரம் உட்கார்ந்தார் ரத்தன்.

மறுநாள் ரத்தன் பண்ணைக்குள் நுழையும்போது வீரப்பன் வேலைக்காரச் சிறுவனின் துணையோடு முட்டைகளை எண்ணி எண்ணிக் கூடையில் போட்டுக் கொண்டிருந்தான். ரத்தனுக்கு தூக்கிவாரிப் போட்டது. இதை எதிர்பார்க்கவில்லை அவர். வழக்கம்போல முந்நூறு முட்டைகளைச் சலீம்பாய் கடைக்கு அனுப்பச் சீட்டு எழுதப்போனார். வீரப்பன் அவரைத் தடுத்தான். அப்துல்கரீம் கடையில் இருந்து ஆள்வரும் என்றும், கொடுத்தனுப்பினால் போதும் என்றும் சொன்னான். "இரு, இரு" என்று சொன்னபடி, முன்னால் வந்தார் ரத்தன். ஆண்டாண்டு காலமாய்ச் சலீம்பாய்க்குக் கொடுத்து வரும் வழக்கத்தைச் சொன்னார். "அவனுக்காக நீங்க ஏன் வக்காலத்து வாங்குறீங்க" கமிஷன் ஏதாச்சிம் கெடைக்குதா ஒங்களுக்கு ?" என்று சட்டென்று துடுக்காய்க் கேட்டான் வீரப்பன். ஆடிப்போய் விட்டார் ரத்தன். அரைநிமிடம் வார்த்தையே வரவில்லை. மார்பு படபடக்கத் தான் வலியுறுத்துவதற்கான காரணத்தைச் சொன்னார். கோபாலசாமிக்கும் சலீம்பாய்க்கும் இருந்த நெருக்கத்தைப் பற்றிச் சொன்னார்.

"எங்க மாமா ஒரு அப்பாவி மனுஷன். வெளுத்ததெல்லாம் பாலுன்னு நெனைக்கற ஆளு. அதான் அவர் தலையில எல்லாரும் மொளகா அரச்சாங்க. அந்த சலீம்பாயும் அதுல ஒருத்தன்".

ஓரக்கண்ணால் அவரைப் பார்த்தபடி சொல்லிக் கொண்டே வெளியேறினான் வீரப்பன். அவனுடன் தொடர்ந்து வாதிப்பதா வேண்டாமா என்று குழம்பினார் ரத்தன். படபடப்போடு அக்குள் கட்டையை ஓரமாய்ச் சாய்த்து வைத்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தார். ஏதோ பறவைகள் கூரையை உதறிக்கொண்டு பறந்தன. காலை வெளிச்சம் மெல்ல மெல்ல அதிகரித்துக் கொண்டே இருந்தது.

வீரப்பன் குரலைப் பெரிதாக்கிக் கொண்டு நின்றபோது அவர் நினைவு கலைந்தது.

"என்ன உட்கார்ந்துட்டே தூங்கறீங்களா ?"

ரத்தன் அசட்டுச்சிரிப்போடு எழுந்திருக்கக் கட்டைக்காகக் கைகளை நீட்டினார்.

"வேற யார் யாருக்கு எவ்வெவ்வளவு அனுப்பணும்னு எழுதி வச்சிருக்கேன். பார்த்து அனுப்பிருங்க.."

"சரி".

"ஊரெல்லாம் ஒன்னேகால் ரூபாய்க்கு முட்ட விக்குது. இன்னும் பழைய முக்கால் ரூபாய்க்கே சலீம்பாய்க்கு நாம ஏன் போடணும் ? நஷ்டப்படறதுக்கா வியாபாரம் செய்யறும் ?"

"அது சரி".

"இன்னம் யாராவது புது பார்ட்டிங்க கெடைக்கறாங்களான்னு பார்க்கறான்".

"சரி".

"வியாபாரத்தை இன்னம் கொஞ்சம் விஸ்தரிக்கலாம்னு நெனைக்கறன். நீங்கதான் ஒத்தாசையா இருக்கணும்".

"சரி".

"பெங்களூருக்குக் கறிக் கோழிங்க அனுப்பலாம்னு ஒரு திட்டம் வச்சிருக்கேன். பின்னால இன்னம் கொஞ்சம் பெரிசா கொட்டா போட்டு அதுக்கும் ஏற்பாடு செய்யலாம்னு நெனைக்கறேன்".

ரத்தனின் பதில் "சரி" என்கிற அளவோடு சுருங்கிக் கொண்டது. தன்னை மீறி அப்படி நிகழ்ந்து விட்டதை அவரே உணர்ந்தார். வீட்டிலும் அவர் உட்கார்ந்த இடத்துக்குச் சாப்பாடு வந்தது. தண்ணீர் வந்தது. வேளா வேளைக்கு டீ வந்தது. ஆனால் மனசு ஓவென்று இருந்தது. கூட உட்கார்ந்து பேச ஆள் இல்லாதது பெரிய மனக்குறை. கதை கேட்கிற கடைசிப்பெண் கூட அருகில் வருவதை நிறுத்திக்கொண்டது வருத்தமாய் இருந்தது. நடுப்பெண்ணும் மூத்தப் பெண்ணும் ஆளைப் பார்த்தால் சிரிப்பது என்கிற அளவோடு நிறுத்திக் கொண்டார்கள். ஏறத்தாழ இருபது வருஷம் தான்இருந்த வீடா இது என்று அவருக்கே ஆச்சரியமாக இருந்தது.



நாளடைவில் பண்ணையின் முகம் மாறியது. கோழிகள் பெருகின. புதுப்புதுத் தாங்கிகள் செய்யப்பட்டன. அவற்றிற்குத் தேவையான தீனிப் பொருள்களைச் சேமித்து வைக்கச் சின்னக் கிடங்கு கட்டப்பட்டது. பெருக்கவும் குப்பைகளைக் கொண்டுபோய்க் கொட்டவும் தனித்தனியே இரண்டு பெண்கள் வேலைக்கு அமர்த்தப் பட்டார்கள். கால்களில் சக்கரம் கட்டிக்கொண்ட மாதிரி சுற்றிக்கொண்டே இருந்தான் வீரப்பன். ஒத்தாசை வேண்டும் என்று அவன் சொன்னது வெறும் சம்பிரதாயமான வார்த்தையாக நின்று போனதை எண்ணி வருந்தினார் ரத்தன்.

ரத்தன் அநேகமாக ஓரம் கட்டப்பட்ட மனிதரைப் போல இருந்தார். உடல் மெலியத் தொடங்கியது. பக்கத்திலேயே இருந்தாலும் கூட யாரும் எதுவும் கலந்து பேசுவதில்லை. வேலைக்காரர்களும் அவரை உதாசீனப்படுத்தத் தொடங்கினர். இனி இவருக்குப் பழைய மரியாதை இல்லை என்பது அவர்களுக்குக் கூட தெரிந்துவிட்டது. இவரால் தம் வேலைக்கு எந்த குந்தகமும் ஏற்படாது என்று புரிந்துகொண்டார்கள். இந்தக் கிழவனை இவ்வளவு தூரம் யார் நொண்டிக்கொண்டு வரச்சொன்னார்கள் என்று குத்திக்காட்டினார்கள். இது தவிரச் சமயம் கிடைக்கும் போதெல்லாம் ரத்தனை சீண்டிப் பார்த்துச் சந்தோஷம் கொண்டார்கள். அவரைக் கோபப்படுத்திவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு வந்தது போலப் பேசினார்கள். ஆனால் ரத்தனின் வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட சீற்றத்துடன் வரவில்லை., ஒரு அசட்டுச் சிரிப்பு. "அப்படியா" என்று தலையாட்டல். அட, சும்மா இருங்கய்யா என்று அலுப்பு. அவ்வளவுதான் அவர் எதிர்வினை. வீரப்பனும் இந்தக் கும்பலுடன் சேர்ந்துகொண்டான் என்பதுதான் அவருக்குச் சங்கடமாய் இருந்தது.

"ஆத்தோட ஒருத்தி போய்ட்டாங்கறதுக்காக ஆயுசுபூரா சும்மா இருந்துடணுமா ? அந்த ஊர்லியே தகுதியானவளா பாத்து கட்டிக்கறத உட்டுட்டு இங்கு வந்து ஏன் அல்லாடணும் ?"

"அவருதான் ஏதோ மொறைக்கிக் கூப்பிட்டார்ன்னா இவரு எதுக்கு பொட்டிய தூக்கிட்டு ஓடி வரணும் ? நானா இருந்தா கோடி ரூபா கொட்டிக் கொடுத்தாலும் பொறந்த ஊர விட்டு ஒரு அடிக்கூட எடுத்து வைக்க மாட்டேன்".

"கெழத்துக்குத் தலையெழுத்தப் பாரு, எங்கேயோ பொறந்து, எங்கயோ வளந்து எங்கயோ குப்ப கொட்டுது."

"எல்லாவற்றிற்கும் தலையசைத்தபடி உட்கார்ந்திருந்தார் ரத்தன். அவருடைய சிரிப்பும் மௌனமும் ஒற்றை வார்த்தைப் பதிலுமே வீரப்பனுக்கு வெறியை அதிகப்படுத்தியது.

"ஒரு வட நாட்டுக்காரன் தைரியமா வந்து இங்க வாழ்ந்துட்ட... இதே எங்க ஆளுங்க அங்க வந்தா இருக்க உடுவீங்களா... எல்லாம் நாங்க கொடுக்கற தாராளம்... அத நெனச்சிக்குங்க",



அதற்கும் ஒரு சிரிப்புதான் அவர் பதில். மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியாமல் உட்கார்ந்திருந்தான் வீரப்பன். ஏதாவது சுடுசொல்லை அவர்மீது உடனடியாய்க் கொட்டித் தன் ஸ்தானத்தை உறுதிப்படுத்தி விடவேண்டும் என்று தவித்தான். பதற்றம் புத்திசாலித்தனமல்ல என அவன் உள்மனம் சொன்னது பல்லைக் கடித்தபடி எழுந்து போனான்.

ரத்தனுக்கு இரவில் தூக்கம் வரவே இல்லை. ஏதோதோ கெட்ட கெட்ட கனவுகள். பெரிய பாழுங்கிணறு. கையையும் காலையும் கட்டி விட்டுத் தொபீர் என்று தள்ளிவிடுகிறார்கள். அது ஒரு கனவு. இன்னொரு கனவில் சுற்றிலும் அலையடிக்கும் சமுத்திரம் கப்பல் நொறுங்கிப் போக ஒரு மரக்கட்டையைப் பிடித்தபடி நீந்துகிறார் ரத்தன். வேகமாக எழுந்த அலையில் தடுமாறிக் கட்டையின் மீது இருந்த பிடிமானம் நழுவி விடுகிறது. சமுத்திரம் அவரைத் தம் வயிற்றின் ஆழத்திற்கு இழுத்துக்கொண்டே செல்கிறது. மரணம் என்கிற சொல் அடிக்கடி காதுக்குள் ஒலித்தது. வாழ்க்கை மீதும் மனிதர்கள் மீதும் முதன்முதலாக வெறுப்பு ஏற்பட்டது.

விடிந்ததும் விடியாததுமாகப் பண்ணையில் வேலை செய்த சிறுவன் ஓடிவந்து அவரை அழைத்தான் எழுந்து உட்கார்ந்தவரிடம் "ஐயா கூப்படறாங்க" என்றான். மௌனமாக எழுந்து கட்டையை ஊன்றிக்கொண்டு சென்றார் ரத்தன்.

இறைச்சிக் கோழிகளில் கொட்டகைக்குள் நின்றிருந்தார் வீரப்பன். குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டிருந்தான். முற்றிலுமாக இன்னும் இருள் பிரிந்திருக்கவில்லை. ரத்தனைப் பார்த்ததுமே "பத்து கறிக்கோழிங்க செத்துக் கெடக்குது என்றான். ரத்தனுக்குப் பகீர் என்றது. அக்குள் கட்டை நழுவும்போல இருந்தது. "என்ன... என்ன சொல்ற நீ... ?"என்று பதறினார். வீரப்பன் தன் சிவந்த கண்களை உருட்டி "பத்துக் கோழிங்க செத்துக் கெடக்குது" என்றான் மீண்டும்.

ரத்தன் படலை விலக்கிக் கொண்டு உள்ளே போய்ப் பார்த்தார். தனியே ஓரமாய் துணிக்கூளம் போலப் பத்துக் கோழிகள் கிடந்தன. குனிந்து தொட்டுப் பார்த்தார். உடல் சில்லிட்டிருந்தது. சின்ன கண்ணாடி குண்டு போல மின்னும் கண்கள் குத்திட்டிருந்தன.

கைக்கட்டையைச் சுவரோரம் சரித்துவிட்டு அப்படியே உட்கார்ந்தார் ரத்தன். ஒரு கணம் என்ன செய்வது என்று புரியவில்லை. மீண்டும் மீண்டும்அவர் பார்வை செத்துப்போன கோழிகள்மீது பதிந்தது. 'கடவுளே' என்று வாய்விட்டுச் சொன்னார். "எப்படி ஆச்சு ?" எனத் தவிப்போடு வீரப்பன் பக்கம் திரும்பிப் பார்த்தார்.

"அதான் நானும் கேக்கறன். எப்படி ஆச்சு ?" என்று குரலை உயர்த்திக் கேட்டான் வீரப்பன். அடிபட்டது போல உடல் நடுங்கியது ரத்தனுக்கு. கண்களில் திகைப்பு தேங்கியது.

"என்ன முழிக்கறிங்க ? எப்படி ஆச்சின்னு நீங்கதான் சொல்லணும்" என்று கத்தினான் வீரப்பன்.

"நீ சொல்லியனுப்பனப்பறம் தான் நான் வந்தன். எனக்கு எப்படிப்பா தெரியும் ?" என்றார் ரத்தன்.

"அந்தக் கதையெல்லாம் வேணாம். நேத்து ராத்திரி கோழிங்களுக்கு தீனி வச்சது நீங்க ! தண்ணி ஊத்தனது நீங்க ! உங்களுக்குத் தெரியலன்னா எப்படி... ?"

"சாமி சத்தியமா எனக்குத் தெரியாது" என்று தன் நெஞ்சைத் தொட்டுச் சொன்னார் ரத்தன். தடுமாறி எழுந்து நிற்க முயன்றார்.

"உண்மைய சொல்லிட்டா ஒங்களுக்குக்கும் நல்லது. எங்களுக்கும் நல்லது. சும்மா வீண் பிரச்சன வேணாம்".

"அபாண்டமா இப்படிப் பேசாத தம்பி. இது எப்படி நடந்துதுண்னே எனக்குப் புரியல".

ரத்தனின் குரல் அடங்கி வரவர, வீரப்பன் குரலை உயர்த்தத் தொடங்கினான். இறுதியில் "என்னைக்கா இருந்தாலும் உண்மை வந்துதான் ஆவணும் அதுமட்டும் ஞாபகத்துல இருக்கட்டும்" என்று சொல்லிவிட்டு துண்டை உதறிக் கொண்டு போனான் வீரப்பன். போகும்போது குப்பை கூட்டும் பெண்ணிடம் கோழிகளை அப்புறப்படுத்தச் சொன்னான்.

ரத்தன் தனித்து விடப்பட்டார். அவரால் யாரையும் நிமிர்ந்து பார்க்க இயலவில்லை. எல்லாருடைய கண்களிலும் சந்தேகக்கோடு. வீட்டுப் பெண்ணின் பார்வையில் கொஞ்சமும் ஒட்டுதல் இல்லை. அன்று முழுக்க அவர் சாப்பிடவில்லை. திண்ணைக்கு வந்த சாப்பாடு அப்படியே மூடி இருந்தது. மதியத்திற்குப் பிறகு கொஞ்சம் தண்ணீர் மட்டும் குடித்தார். மனம் பாரமாக இருந்தது. வெயில் என்று கூடப் பார்க்காமல் ஏரிக்கரைப் பக்கம் சென்றார். சுழன்று அடிக்கும் காற்றில் ஆலமரத்தடியில் பாறை மீது உட்கார்ந்தார். பக்கத்தில் பட்டுப் போன மரமொன்றிருந்தது. கிளை எதுவுமில்லாத வெறும் கட்டை. அதன் பட்டையை இரண்டு காகங்கள் கொத்திக் கொண்டிருந்தன. பார்த்துக் கொண்டிருந்த ரத்தன் கசப்பான சிரிப்பொன்றை உதிர்த்தார்.

இரண்டு நாள் கழித்து மீண்டும் வீரப்பன் வந்து அவரை அழைத்தான். காலை வேளை, அவருக்குப் பகீர் என்றது. எதுவும் பேசாமல் கூடவே அழைத்துப்போய் பண்ணைச்சுவர் அருகே காட்டினான். ஏழெட்டுக் கோழிகள் இறந்து கிடந்தன. ஒரடி சட்டென்று பின் வாங்கினார் ரத்தன். "இதுக்கு என்ன சொல்றீங்க"? என்று கேட்டான் வீரப்பன். குழப்பத்திலும் திகைப்பிலும் மூழ்கிய ரத்தனின் பதிலுக்குக்கூட காத்திருக்காமல் போய்விட்டான்.

யோசனையில் ஆழ்ந்தபடி திண்ணைக்குத் திரும்பினார் ரத்தன். இது எப்படி நடக்கிறது என்று அவருக்குப் புரியவே இல்லை. அவர் முதல் சந்தேகம் வீரப்பன் மீதுதான். தொடர்ந்து பண்ணைக்குப் புதுசாக வந்த எல்லார் மீதும் சந்தேகம் படர்ந்தது. ஆனால் வீரப்பனோ ரத்தன்தான் இந்த வேலையை ரகசியமாய்ச் செய்கிறார் என்றும் தனக்கும் அவருக்கும் இருக்கிற பகையைக் கோழி மீது காட்டுகிறார் என்றும் வதந்தி பரப்பினான். குடும்பத்துக்குள்ளும் பண்ணைக்குள்ளும் அவர் தனிமைப் படுத்தப்பட்டார். தன்னை நோக்கிச் சுட்டும் விரல்களை அவரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. அன்றும் அவர் பட்டினி கிடந்தார்.

மறுநாள் இரவு தூங்கவே இல்லை அவர். விடியும் நேரம் நெருங்க நெருங்க வீரப்பன் கொண்டு வரப்போகும் கோழிகளின் சாவுச் செய்திக்காக நடுக்கத்தோடு காத்திருந்தார். தனியே எழுந்துபோகப் பயமாக இருந்தது. பண்ணைக்குள் ஓர் இரவைக் கழித்தால் கண்டு பிடித்துவிட முடியும் என்கிற நம்பிக்கையைச் செயல்படுத்த முடியாத நிலையில் இருந்தார் அவர். விடியும்போது வீரப்பன் செய்தி அனுப்பி இருந்தான். குப்பை கூட்டும் பெண் வந்து சொன்னாள். அவர் அருகே எட்டுக் கோழிகள் செத்துக் கிடந்தன. அன்று திண்ணையை விட்டு எழுந்திருக்கவே இல்லை அவர் மனசில் வெறுமை.

அடுத்தநாள் மேலும் ஆறுகோழிகள் இறந்து கிடப்பதாய்ப் பையன் வந்து சொன்னான். ரத்தனின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

"இப்படி தெனமும் கொஞ்சம் கொஞ்சமா கொல்றதுக்குப் பதிலா எல்லாத்தயும் ஒரே நாள்ல கொன்னுருய்யா. கூண்டோட போய்ச் சேந்துரும். அப்படியே எங்களுக்கும் கொஞ்ச வெஷத்தக் குடுத்துரு. நாங்களும் போயிடுவம். இத்தன வருஷமா ஒன்ன வச்சி காப்பத்தின குடும்பத்துக்கு ரொம்ப பெரிய உபகாரம் செஞ்சிட்ட.."

வீரப்பன் திண்ணைக்கு வந்து சத்தம் போட்டான். அவரால் ஒரு வார்த்தை பேசமுடியவில்லை. அழுதபடி உட்கார்ந்து விட்டார். பகல் முழுக்க அழுகைதான். சாயங்காலமாக அக்குள் கட்டையோடு ஊரைத்தாண்டி நடந்தார்.

இரவு சாப்பாட்டு வேளையின்போது திண்ணையில் ரத்தன் இல்லை. என்கிற சங்கதியை வீரப்பனிடம் வந்து சொன்னாள் வேலைக்காரப் பெண். "எங்க போகும் கெழம்... எங்கனா கோயில் கொளம்ன்னு உக்காந்துட்டு திரும்பி வரும்,போ..." என்றான் அவன். கோழி செத்துப் போகத் தொடங்கிய நாளில் இருந்தே அவர் சாப்பிடுவதை விட்டுவிட்டார் என்கிற சங்கதி தெரிந்த பெண்கள் அவ்வளவாய் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

மறுநாள் வாசல் பெருக்கப் போன பெண் வந்து ரத்தன் வீட்டில் இல்லை என்கிற சங்கதியை வீரப்பனிடம் சொன்னாள். தற்கொலையோ என்கிற எண்ணம் சட்டென எழுந்து அவனை உறைய வைத்தது. அன்று முழுக்க ஏதாவது செய்தி வரும் என்று, பதட்டத்தோடேயே இருந்தான். ஏதுவும் இல்லை. அவர் ஊரை விட்டு போய்விட்டார் என்கிற விஷயத்தை அவனால் நம்பவும் முடியவில்லை. இதுதான் எதிர்பார்த்த முடிவா என்று குழப்பமாக இருந்தது.

இரண்டுநாள் கழித்து முட்டைகளை எண்ண அதிகாலையில் பண்ணைக்குச் சென்ற வீரப்பனின் பார்வையில் சுவர் ஓரம் ஐந்தாறு கோழிகள் சுருண்டுக் கிடப்பதைக் கண்டான். பையனிடம் "ஏண்டா அப்படிக் கெடக்குது ?" என்றான். தானே நெருங்கித் தூக்கினான். கோழிகள் இறந்திருந்தன.

* * *

# மே நாள்



**ஜி. மகேந்திரன்**

எந்தத் தொழிலாளியும் சூரியன் உதிப்பதற்கு முன்பாகவோ அல்லது மறைவதற்கு முன்பாகவோ தங்கள் குடும்பத்தினரைச் சந்தித்துக் கொண்டதில்லை. பகல் வெளிச்சத்தில் சந்தித்துக்கொள்ள வாய்ப்பற்றவர் மெழுகுவெர்த்தியின் மங்கலான வெளிச்சத்தில் ஏக்கத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்வார்கள். இப்படியாகத்தான் புதிதாகத் தோன்றி எண்ணிக்கையில் பலவாக உயர்ந்துகொண்டிருந்த தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை அமைந்திருந்தது.

தொழிலாளி வர்க்கத்தின் இந்த அவலங்களைப் பேசுவதற்குப் பல இலக்கியங்கள் எழுந்தன. மார்க்சிம் கார்க்கியின் "தாய்" பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் துன்பம் மிகுந்த சோகங்களைத் தொழிலாளர்கள் ஒருவரோடு ஒருவர் பகிர்ந்துகொள்ளவும் புதிய எழுச்சி கொண்டு வர்க்க உணர்வு பெறவும் உதவி செய்தது.

அழுக்கு நிறைந்த இடத்தில் கரப்பான் பூச்சிகள் வசிப்பதைப் போல, தொழிலாளர்களின் குடியிருப்பு நெருக்கமாகவும், அசுத்தம் நிறைந்ததாகவும் இருந்தது. வயல்வெளிகளில் செழுமையாய் விளைந்து ஆலைக்குள் செல்லும் கரும்பு போலத் தொழிலாளர்கள் ஆலைக்குச் செல்வார்கள். கரும்பு இயந்திரத்தின் பற்சக்கரங்களுக்கிடையே சிக்கி, சாரத்தை எல்லாம் இழந்து சக்கையாக வெளியே தள்ளப்படுவதைப்போல எண்ணெய்ப் பசையும் கரிய புகையும் மிஞ்சிய உடல்களோடு வெளியே தள்ளப்பட்டார்கள்.

மார்க்சிம் கார்க்கியின் "தாய்" தரும் இந்த விபரங்கள் முற்றிலும் உண்மையைத்தவிர வேறு எதுவுமில்லை என்பதற்கான ஆதாரங்கள் நிறையவே இருக்கின்றன.

தொழிலாளி வர்க்கத்தின் நூற்றாண்டு குமுறல் ஒட்டுமொத்தமாக அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில் 1885 - மே மாதத்தில் வெடித்தது. சிகாகோ நகரம் தொழிலாளர்கள் நிறைந்திருந்தது. சோசலிஸச் சிந்தனை நிறைந்த பல குழுக்களும் செயல்பட்டன. இந்த முக்கியத்துவம்தான் மேதினப் போராட்டங்கள் தோன்றி உலகையே அதிர்ச்சி கொள்ளச் செய்யக் காரணமாகியது.

சிகாகோ நகரின் எழுச்சிக்கு முக்கிய வழிகாட்டுதல் ஐரோப்பாவில் பல ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய இயக்கங்கள்தாம். 1848-ல் கார்ல் மார்க்ஸ், பிரடரிக் ஏங்கல்ஸ் வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை தொழிலாளர்களைத் தெளிவுபடுத்தியது.

தொழிலாளர்கள் இழப்பதற்கு எதுவுமில்லை - அடிமைச் சங்கிலியை தவிர, ஆனால் வெல்வதற்கு ஒரு புதுஉலகம் காத்திருக்கிறது என்று உணர்ந்தார்கள்.

தொழிலாளர்களின் இரண்டாவது அகிலம், தொழிலாளர்களின் மீதான மூர்க்கத்தனமான சுரண்டல் குறித்து, பெரும்கவலையை வெளியிட்டது. 1866-ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் தொழிலாளர்களுக்கு 8 மணிநேரம் மட்டும் உழைப்பும், 8 மணி நேரம் உறக்கமும், 8 மணி நேரம் ஓய்வும் தேவை என்று தீர்மானத்தை நிறைவேற்றியது. அமெரிக்காவின் சிகாகோ நகரப் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

சிகாகோ நகரில் மே மாதத்தில் நடைபெற்ற போராட்டம் உழைக்கும் நேரத்தை 8 மணியாகக் குறைக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியது. மே மாதம் சிகாகோவில் வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடப்பட்டது. மே மாதம் முதல் தேதியில் - 25 ஆயிரம் தொழிலாளர்கள் குவிந்துவிட்டார்கள்.

தீயைப்போல எல்லாத் தொழிற்சாலைகளிலும் பற்றிக்கொண்ட இந்தப் போராட்டக்கனல் மிகவும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாக சிகாகோவிலுள்ள மைக்ரிப்பேர் தொழிற்சாலையில் நடைபெற்றது. வேறு எந்தச் சமாதானப் பேச்சுவார்த்தையும் இல்லாமல் வேலைநிறுத்தப் போராட்டத்தை அடக்க, முதலாளிகள் போலீஸை முன் நிறுத்தினர். வன்முறை தலைதூக்கியது. போலீஸ்காரர்கள் துப்பாக்கியால் சுட்டதில் அங்கே 6 தொழிலாளர்கள் இறந்துபோனார்கள்.

சிகாகோ நகரின் ஹே மார்க்கட் சதுக்கத்தில் தொழிலாளர்கள் அனைவரும், காவல்துறையின் இந்தக்கொடுமையைக் கண்டிக்க எழுச்சியோடு கூடிவிட்டார்கள். தொழிற்சங்க அமைப்பு மே-மாதம் 3,4 தேதிகளில் பேரணியும், பொதுக்கூட்டம் ஒன்றும் ்ங்கு நடத்துவது என்று முடிவு செய்தனர்.

தொழிலாளர்கள் திட்டமிட்டபடி மாபெரும் எழுச்சியுடன் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.



"சுடப்பட்ட குதிரை இறந்த பிறகு, அதன் குட்டிகளை அடுத்தவர் யாராவது வாங்கி வளர்த்துக் கொள்வர். ஆனால், நலிவடைந்த தொழிலாளி மாளநேர்ந்தால், அவனுடைய குடும்பத்தை யார் காப்பாற்றுவது?"

- அறிஞர் அண்ணா



கடைசியாகப் பேச அழைக்கப்பட்ட தொழிற்சங்கத் தலைவர் தனது உரையை நிகழ்த்திக்கொண்டிருந்த போதுதான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

தொழிலாளர் பெருவெள்ளத்தின் நடுவில் கையால் எறியப்பட்ட ஒரு வெடிகுண்டு வெடித்தது. சிறிது காலத்திற்குப் பின்னர் இந்தக்குண்டை வீசியவன் - காவல்துறையாலும் முதலாளிகளாலும் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கைக்கூலியே என்பது நிரூபிக்கப்பட்டது. இந்த வெடிகுண்டால் காவல்துறை அதிகாரி ஒருவர் அங்கேயே இறந்துபோனார். கலவரம் வெடித்தது. ஹே மார்க்கெட் சதுக்கமே யுத்த பூமியாக மாறியது. மோதலில் 8 போலீஸ்காரர்களும், 4 தொழிலாளர்களும் கொல்லப்பட்டனர்.

இவ்வாறான, தொழிற்சாலைகளின் செயல்பாட்டைத் தொழிலாளர்களைத் தூண்டியதன் மூலம் பெரும் நஷ்டத்தை உருவாக்கியது; சட்டத்திற்குப் புறம்பாக அவர்கள் பேரணி நடத்தியது; பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு என்ற பெயரில் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்தது - முதலான பல வழக்குகள் தொழிற்சங்கத்தின் முக்கியத் தலைவர்களின் மீது தொடரப்பட்டது. மொத்தம் 27 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

இந்தக் குற்றம் சாட்டப்பட்டவர்களின் பட்டியலில் முக்கியத் தலைவர்கள் முறையே (1) பார்சன்ஸ் (2) ஸ்பைஸ் (3) ஏங்கெல் (4) பிஷர் (5) லிங் (6) பீல்டன் (7) ஷேவ்ரா (8) நிபி - ஆகியோர் அடங்குவர்.

வழக்கு நடைபெற்றதில் முக்கியத் தலைவர்களான இவர்கள்தான், இந்த வன்முறையைத் திட்டமிட்டு நடத்தியவர்கள் என்று அறிவிக்கப்பட்டது. இதில் முதல் ஏழு பேருக்குத் தூக்கு தண்டனையும் பெயர்ப் பட்டியலில் 8-வதாக இடம்பெற்ற நிபிக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது.

'இது அநீதி' என்று உலகம் முழுவதும் கண்டனக் குரல் கேட்டது. ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலான கண்டங்களில் எல்லாம் கடும் எதிர்ப்பு வெளிப்பட்டது. தண்டிக்கப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் பலமாக எழுந்தது.

இதில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க மற்றொரு விஷயம், உலகின் மாபெரும் சிந்தனையாளர்களான இங்கர்சால், பெர்னார்ட்ஷா - போன்றவர்களும் 'இந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும்' என்று குரல் கொடுத்தனர். எழுதியும் பேசியும் கூட அவர்கள் இதற்கு ஆதரவு திரட்டினார்கள்.

உலகம் முழுவதும் எழுந்த இந்தக் கண்டன அலையால் அமெரிக்க அரசு சில தலைவர்களின் தண்டனையை மட்டும் குறைக்க முன்வந்தது.

பீல்டன், ஷேவ்ரா - ஆகிய இருவரின் தூக்குத் தண்டனையும் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. ஆனால், லிங் என்பவரை - தற்கொலை செய்துகொண்டார் என்னும் ஆதாரங்களைத் தயாரித்து வைத்துக்கொண்டு சிறைச்சாலையிலேயே அடித்துக் கொன்றுவிட்டார்கள்.

உலகத் தொழிலாளிவர்க்கம் எவ்வளவுதான் முயற்சி செய்தபோதிலும் நால்வரின் மரணத்தைத் தடுக்க இயலவில்லை. தோழர்கள் பார்சன்ஸ், ஸ்பைஸ், ஏங்கெல், பிஷர் - ஆகியோர் அமெரிக்க அரசால் தூக்கிலிடப்பட்டார்கள்.

1885, மே-1, சிகாகோ நகரில், எழுச்சி கொண்டு தொழிலாளர்கள் தங்கள் உரிமைக்காக எழுந்த இந்த நாளைத்தான் உலகம் முழுவதும் தொழிலாளர் தினமாகக் கொண்டாடுகிறார்கள்.

1890-ஆம் ஆண்டு, இலண்டனில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் மாமேதை ஏங்கெல்ஸ் கீழ்க்கண்டவாறு கூறினார்:

"ஐரோப்பிய, அமெரிக்கத் தொழிலாளர்கள் ஒன்று திரண்டு விட்டார்கள். சட்டப்படி, 8 மணி நேர வேலை என்னும் கோரிக்கையைக் கட்டாயம் பெற்றுவிடுவார்கள்".

1890-ல் மேதினம் ரஷியாவில் கொண்டாடப்பட்டபோது, லெனின் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். "தொழிலாளர்களின் - உலகம் தழுவிய ஒற்றுமையில் கவனம் கொள்ளாது, ஒரு தனிப்பட்ட தேசமோ அல்லது உலகமோ முன்னேற்றம் பெறுதல் என்பது சாத்தியமில்லை" - என்று தமது மேதின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

இந்தியாவில் முதன்முதலில் மேதினம் கொண்டாடப்பட்ட இடம் சென்னைதான் என்பது இப்போது குறிப்பிடத்தக்கதாகும்.

தலைசிறந்த சீர்திருத்தவாதியும், தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட்டுமான ம.சிங்காரவேலர்தான் 1923-ல் சென்னை 'ஐ கோர்ட்' கடற்கரையில் மேதின விழாவைக் கொண்டாடியுள்ளார். அப்பொழுது அவரால் தொடங்கப்பட்ட கட்சியின் பெயர் - தொழிலாளர்கள், விவசாயிகள் கட்சி (Labour Kissan Party). இதன் சார்பில்தான் மேதினம் அன்று கொண்டாடப்பட்டது.

அவரைப் பெருமைப்படுத்தும் விதத்தில், கலைஞர் அரசு, அண்மையில் கட்டி முடிக்கப்பட்ட சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் கட்டடத்திற்கு "சிங்காரவேலர் மாளிகை" எனப்பெயர் சூட்டியது.

1946-ல் பண்டிதர் ஜவகர்லால் நேரு அவர்களின் தலைமையில் இயங்கிய இடைக்கால அரசுதான் மேதினத்தை இந்தியத் தொழிலாளர்களின் தினமாக அறிவித்தது. ❑

## வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ஜீப்புகள்

**வருவாய்க் கோட்ட அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ரூ.1 கோடியே 81 ஆயிரம் மதிப்புள்ள 32 புதிய ஜீப்புகள் 15. 4. 98 அன்று அரசு தலைமைச் செயலகத்தில் வழங்கப்பட்டன. வருவாய் நிர்வாகப் பலன்கள் மக்களை உடனடியாகச் சென்றடையும் வகையில், அதிகாரிகள் விரைந்து செயல்பட இவை உதவும் என, அவற்றை வழங்கிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி.மனோகரன் அவர்கள் குறிப்பிட்டார்.**

## நூல் நயம்

### 📖 தடி வீர சுவாமி கதை & வன்னியராயன் கதை

பதிப்பாசிரியர் : சு.நிர்மலா தேவி

வெளியிட்டோர்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி.வளாகம், தரமணி,
சென்னை-600 113.

பக்கம்:265 — விலை ரூ.55

நாட்டுப்புறக் கதைப்பாடல் சுவடிப் பதிப்புகளில் புகழ்பெற்றவர் நூலாசிரியர். திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ள இரண்டு சமூகக் கதைப்பாடல் சுவடிகளைத் தேடிப்பிடித்து எடுத்துவந்து பதிப்பித்திருக்கிறார்; அதுவே இந்நூல்.

★ ★ ★

### 📖 கண்ணீரில் விளைந்த காவியம்

ஆசிரியர் : புலவர் தே.ப.சின்னசாமி

பக்கம்:120 — விலை ரூ.23

மறைந்த தன்னுடைய மனைவிக்கே இந்நூலைக் காணிக்கையாக்கியுள்ளார் நூலாசிரியர்; அதுமட்டுமல்ல, இக்காவியம் முழுவதுமே மனைவி என்பவள் எப்படி அமைந்திட வேண்டும் என்பதை விளக்குவதேபோல் அமைக்கப்பட்டிருக்கிறது.

### 📖 மனிதரில் டிசம்பர்கள்
(வாழ்வியல் நாடகம்)

பக்கம்:119 — விலை ரூ.23

ஆசிரியர் : ஸ்ரீசவிதா

"வானொலிப் போட்டிக்காக எழுதப்பட்ட நாடகத்தை நூல் வடிவில் வெளியிட்டிருக்கிறார்கள். தந்தை-மகன் இடைப்பட்ட பாசத்தை, நெருடலை முக்கிய இழையாக வைத்து எழுதப்பட்டுள்ள இதில், சோகமும் நகைச்சுவையும் சமஅளவில் கைகோத்து நிற்கின்றன.

இவ்விரு நூல்களையும் வெளியிட்டோர்:
மணிமேகலைப் பிரசுரம்,
4, தணிகாசலம் சாலை, சென்னை-600 017.

### 📖 அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வரலாறு
(1776 முதல் 1945 வரை)

ஆசிரியர் : பி.எல்.ராஜேந்திரன்

வெளியிட்டோர் : உமா பதிப்பகம்
58, ஐயப்ப செட்டித் தெரு,
மண்ணடி, சென்னை-600 001.

பக்கம்:150 — விலை ரூ.35

எளிய தமிழ்நடையில், எம்.ஏ. (வரலாறு) இரண்டாம் ஆண்டு படிக்கின்ற மாணாக்கர்க்கும் உதவுவதாக எழுதப்பட்டுள்ளது இந்நூல். இரண்டாம் உலகப் போர் வரை, அமெரிக்காவை ஆண்டவர்களின் படங்கள் இடம் பெற்றிருப்பது ஒரு சிறப்பு அம்சம்.

★ ★ ★

### 📖 காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்-4

ஆசிரியர் : விஷ்ணு பிரபாகர்
தமிழாக்கம் : விஜிகிருஷ்ணமூர்த்தி

வெளியிட்டோர் : காந்திய இலக்கியச் சங்கம்,
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி,
மதுரை - 625 020.

பக்கம்:113 — விலை ரூ.10

காந்தியடிகளாரின் தனிமனிதப் பண்பு, செயலாற்றல் ஆகியவற்றை விளக்கக் கூடிய பலநிகழ்ச்சிகளின் தொகுப்பாக இந்நூல் விளங்குகிறது. சொல்லவந்த செய்திகளின் தரம் கெடாமல் தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.





# உணவு - கூட்டுறவுத் துறையின் ஒப்பற்ற பணிகள்

சட்டப் பேரவையில் 28-4-98 அன்று

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்

திரு.கே.என்.நேரு அவர்கள் தாக்கல் செய்து அவர் ஆற்றிய உரை பின்வருமாறு:

*கிட்டத்தட்ட, தமிழ்நாட்டிலே, மொத்தம் ஒரு கோடியே 50 இலட்சம் கார்டுகள், குடும்பக் கார்டுகள் உள்ளன. ஆட்சிப் பொறுப்பேற்றபோது, கிட்டத்தட்ட ஒவ்வொரு மாதமும் 2 இலட்சம் டன் வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலையிலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். அப்போது அரிசியினுடைய கையிருப்பு, தமிழ்நாட்டிலே 3 இலட்சத்து 20 ஆயிரம் டன். ஒவ்வொரு மாதமும் 2 இலட்சம் டன் என்கிறபோது, நம்மால் வழங்குவதற்கு இயலவில்லை. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்ல முடியவில்லை.*

### மத்திய அரசிடமிருந்து அதிக அரிசி

*அப்போதுதான், முதன்முதலாக நாம் வெளி மார்க்கெட்டிலிருந்து அரிசியைப் பெறவேண்டும் என்று சொல்லி, ஆந்திர மாநிலத்திலிருந்து அந்த ஆண்டு ஒரு இலட்சம் டன் அரிசி பெற்றோம். கடந்த ஆண்டு 4 இலட்சம் டன் அரிசி வாங்கலாம் என்று இருந்தபோது, 3 இலட்சம் 20 ஆயிரம் டன்னை விட அதிகமான அளவு விளைந்துவிட்ட காரணத்தினால், அது நிறுத்தப்பட்டது. இப்படி, வெளிமாநிலத்திலிருந்து அரிசி பெற்றோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் செல்லும் போதெல்லாம், பிரதமரைச் சந்தித்து, தமிழ்நாடு மாநிலம் அரிசி உற்பத்தியில் பற்றாக்குறை மாநிலமாக இருக்கிறது. எங்களுக்கு ஒதுக்கக்கூடிய அரிசியைக் கூடுதலாக ஒதுக்கவேண்டும் என்று வற்புறுத்திய காரணத்தினால், 1 இலட்சத்து 40 ஆயிரம் டன்னிலிருந்து 1 இலட்சத்து 65 ஆயிரம் டன்னாக உயர்த்தி, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய முயற்சியால், அவ்வாறு உயர்த்திக் கிடைத்த காரணத்தினால், அன்றைக்குப் பொதுவிநியோகத் திட்டம் எந்தவித தங்கு தடையும் இல்லாமல் நடைபெற்றுக் கொண்டிருந்தது.*

*1977-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு இதை ஆரம்பித்தபோது, இதற்கு அரசு அளித்த மானியம் வெறும் 10 கோடி ரூபாய்தான். இன்றைக்கு இந்த அரசு, இந்த ஆண்டு அனுமதி கோரியிருக்கிற தொகை 1,166 கோடி ரூபாய். இந்த அளவிற்கு, இன்றைக்கு பொதுவிநியோகக் கடைகள் மிக அதிகமான அளவுக்குப் பொருள்களை வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.*

### மே 1-ஆம் தேதி குடும்ப அட்டை வழங்கல்

*இந்த அரசு பொறுப்பேற்றிருந்தபோது, ஒரு கோடியே 50 இலட்சம் கார்டுகளிலே, கிட்டத்தட்ட 15 இலட்சம் போலிக் கார்டுகளாக இருந்தன என்று ஆய்ந்து அறியப்பட்டு, புதிய கார்டுகள் வழங்கப்பட வேண்டுமென்ற முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின் பேரில் துறை செயல்பட்டது. இதிலே "ஏன் இவ்வளவு கால தாமதம்?" என்று உறுப்பினர்கள் கேட்டார்கள். "இரண்டாண்டுக் காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, எப்போது கார்டுகளை வழங்கப் போகிறீர்கள்?" என்று கேட்டார்கள்.*

*வருகிற 1-ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து மாநகரப் பகுதியிலும், அதுபோன்றே மாவட்டப் பகுதியிலும் வழங்குவதற்கு முழு முயற்சியாக அத்தனை ஏற்பாடுகளும் செய்யப்பட்டு கார்டுகள் அச்சடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.*

### ரூ.30 கோடி செலவு

*புது கார்டுகள் வழங்குவதால், இந்த அரசுக்கு ஏதாவது ஆதாயமா? ஏன் இவ்வளவு காலதாமதம்*



*எடுத்துக் கொண்டீர்கள் என்று கேட்டால், ஒன்றரைக் கோடி கார்டுகள் மட்டுமல்லாமல், போலிக் கார்டுகளாகக் கண்டறியப்பட்ட 15 இலட்சம் கார்டுகள் போக, மீதி 1 கோடியே 35 இலட்சம் கார்டுகள் வழங்க வேண்டும் என்பதுடன், புதிதாக மீண்டும் 15 இலட்சம் கார்டுகள், குடும்ப அட்டைகள் வழங்க வேண்டியிருப்பதால், கடந்த காலத்திலே இருந்ததைப் போலவே அதே ஒன்றரைக் கோடி அளவுக்குக் குடும்ப அட்டைகள் வரும் என்று தெரிந்திருந்தாலும்கூட, உண்மையாக வாங்க வேண்டியவர்களுக்கு அட்டைகள் வழங்கவேண்டும்;*

போலியாக இருக்கின்ற அட்டைகளை நீக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான், 30 கோடி ரூபாய் செலவு செய்து, இன்றைக்கு அந்தப் பணியினை நிறைவேற்றியிருக்கிறார் நம்முடைய முதலமைச்சர்.

இங்கே பேசும்போது பல உறுப்பினர்கள் அரிசி கருப்பாக இருக்கிறது அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா என்று கேட்டார்கள். இங்கு நான் குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உறுப்பினர்கள் தான் மழை பெய்கிற நேரத்திலே விவசாயிகள் நெல்லை எங்கே கொண்டு போய் விற்பார்கள்? விவசாயிகளுக்கு உரிய விலையைத் தரவேண்டாமா? விவசாயிகளிடம் அந்த நெல்லை வாங்கிக்கொண்டு அவர்களை ஆதரிக்க வேண்டாமா என்று கேட்ட உறுப்பினர்களே இன்றைக்கு அரிசி கருப்பாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்.



## முதல்வர் உத்தரவு

அதற்கும் முதலமைச்சர் அவர்கள் இனி நாட்டிலே கருப்பு அரிசி என்பது பொது விநியோகக் கடையிலே கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

நுகர்பொருள் வாணிபக் கழகம் தொடங்கப்பட்டு 25 ஆண்டுகள் ஆகின்றன. ஏகபோக கொள்முதல் திட்ட காலத்திலே கூட இவ்வளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டதில்லை. குறுவையிலே 7 இலட்சம் டன், சம்பாவிலே கிட்டத்தட்ட 12 இலட்சம் டன் அளவிற்கு நெல்லை கொள்முதல் செய்திருக்கிறோம். கொள்முதல் செய்த பணியாளர்கள் அதை நல்லமுறையில் கொள்முதல் செய்திருக்கிறார்கள்.

அரிசி 20 கிலோ என்பதைத் தவறாது தந்து கொண்டிருக்கிறோம். ரேஷன் கடைகள் பிரிக்கப்பட்டிருந்தாலும் கூட்டம் அதிகமாக இருக்கிறது அதற்கு என்ன செய்யலாம் என்று முதல்வரை அணுகியபோது முதலமைச்சர் அவர்கள் மானியம் தந்து மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களை நமக்கு அளித்திருக்கிறார்கள். அவர் எடுத்தவுடன் 20 நிலையங்களை அளித்தார்கள். அதற்குப் பிறகு 3 மாதங்களிலே 100 நிலையங்கள் அமைப்பதற்குரிய அனுமதி தந்திருக்கிறார்கள்.

## மண்ணெண்ணெய் வழங்கு நிலையம்

அதற்குப் பிறகு, இப்போது 500 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்களை அமைப்பதற்குரிய அந்த அனுமதியைத் தந்திருக்கிறார்கள். இதிலே கிட்டத்தட்ட 100 நிலையங்களில் ஆங்காங்கு பணிகள் ஆரம்பித்து இப்போது முடிகின்ற நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றது. இதிலே கூட சில சங்கங்கள், நாங்கள் ஏழைச் சங்கங்கள், எங்களால் இந்த நிலையங்களைத் தொடங்க முடியுமா? என்று கேட்டபோது, 'நான் தருகிறேன் பணம்' என்று சொல்லி, அரசிடமிருந்து மானியமாக, அந்த 50 சதவிகித மானியத்தைத் தந்திருக்கிறார்கள். அதுவும் இன்றைக்கு மக்களால் வெகுவாக வரவேற்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, புதிய நியாயவிலைக் கடைகளைப் பொறுத்தவரையில், இது பற்றி இங்கு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். எந்தெந்தப் பகுதியிலே 800 அட்டைகளுக்கு மேல் இருக்கிறதோ அங்கு நீங்களாக கடைகளைத் திறக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அது அப்படியல்ல, நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே நலிந்த சங்கங்கள்கூட நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவை அவசியமானால், சட்டமன்ற



> அரிசி 20 கிலோ என்பதைத் தவறாது தந்து கொண்டிருக்கிறோம். ரேஷன் கடைகள் பிரிக்கப்பட்டிருந்தாலும் கூட்டம் அதிகமாக இருக்கிறது, அதற்கு என்ன செய்யலாம் என்று முதல்வரை அணுகியபோது முதலமைச்சர் அவர்கள் மானியம் தந்து மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களை நமக்கு அளித்திருக்கிறார்கள். அவர் எடுத்தவுடன் 20 நிலையங்களை அளித்தார்கள். அதற்குப் பிறகு 3 மாதங்களிலே 100 நிலையங்கள் அமைப்பதற்குரிய அனுமதி தந்திருக்கிறார்கள்.

உறுப்பினர்கள் அவசியம் என்று தெரிவித்தால், அரசினுடைய சட்டத்திற்கு உட்பட்டு நிச்சயமாகக் கடைகளைத் திறப்பதற்கு நாங்கள் முழுமையாக நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல கடந்த ஆண்டுகூட சொன்னார்கள், சென்னை உணவு மண்டலத்தை 14-ஆக உயர்த்தித் தரவேண்டுமென்று சொன்னார்கள். கடந்த காலத்தில் அறிவித்ததைப் போல 14 மண்டலங்களாக நாங்கள் உயர்த்தியும் தந்திருக்கிறோம். இதிலே இந்த ஆண்டு, நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே அப்பாவு அவர்கள் குறிப்பிட்டதைப் போல கடந்த காலத்திலே வாங்கப்பட்ட நெல்களையெல்லாம் அடுக்கி வைப்பதற்குரிய இடங்களைத் தேர்வு செய்யவேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் ஈரத்தோடு வாங்கிய நெல்லை அரைப்பதற்கு மில் முதலாளிகளை அழைத்து ஒரு 10 கூட்டங்களாவது போட்டிருப்போம். அவர்கள் கேட்ட சலுகைகள் எல்லாம் கூட தந்தோம். அதிகமான அளவிற்கு ‹ சலுகைகளைத் தந்தும்கூட அவர்கள் இதிலே இருந்து எடுத்து அரைப்பதற்கு முன்வரவில்லை.

## நவீன அரிசி ஆலைகள்

அதற்காக, இன்றைக்கு 23, 25 இடங்களிலே நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக நடத்தப்படுகின்ற அந்த மாடர்ன் ரைஸ் மில்களை எல்லாம் அதனுடைய நூறு சதவிகித அரைப்புத் திறனை நாம் கொண்டு ‹ வரவேண்டும் என்று முதல்வர் அவர்கள் சொல்லியதன் பேரில், இப்போது பல இடங்களிலே மின்சாரக் கோளாறுகள் காரணமாக மிஷின்கள் சரியாக இல்லாத காரணத்தினால் அவைகளையெல்லாம் கடந்த ஆண்டிலே சரி செய்ததன் காரணமாக இப்போது முந்தைய ஆண்டைவிட 60,000 டன் கூடுதலாக நெல்லை அரைத்திருக்கிறோம்.

இதிலேகூட, இந்த ஆண்டு மேலும் இரண்டு மில்களை காவிரிப் படுகையில் 800, 1,000 டன் என்ற அளவில் தினமும் அரைப்பதற்குரிய திறனைக் கொண்ட மில்களை அமைப்பதற்கு நமது தலைவர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அவைகளை அரைப்பதோடு மட்டுமல்லாமல் அதைக் கொண்டு சென்று வைப்பதற்காக இன்றைக்கு தமிழ்நாட்டிலே 189 தாலுக்காக்களிலே மட்டும்தான் கிடங்கிகள் இருக்கின்றன. மீதம் இருக்கின்ற 42 இடங்களில் கிடங்குகளைக் கட்டுவதற்குரிய இந்த ஆண்டு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து கடன் பெற்று 42 இடங்களிலே புதிய கிடங்குகளைக் கட்டுவதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டு, அதற்கான அனுமதியையும் முதல்வர் அவர்கள் தந்திருக்கின்றார்கள்.

கூட்டுறவுத் துறையிலே கடந்த ஆண்டு பல அறிவிப்புகளை வெளியிட்டிருந்தோம். இந்த ஆண்டு அந்த அறிவிப்புகளை நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். குறிப்பாக, மொத்த தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் 8,033 தேர்தல் நடத்தி முடிக்கப்பட்ட நிர்வாகக் குழுவிடம் சங்க நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது 800. மீதம் உள்ளவை 31. இந்த 31 சங்கங்களும் பல இடங்களில் நீதிமன்றங்களிலே வழக்கு இருக்கின்ற காரணத்தினால் அதை நடத்த முடியவில்லை. அதிலேகூட தலைமைச் சங்கங்களுக்கும் அதைப் போல மாநில தலைமைச் சங்கங்கள், மத்திய சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்படவேண்டுமென்று சொன்னார்கள். முதலமைச்சரைக் கலந்து' அதற்குரிய தேதி அறிவிக்கப்படும் என்பதையும் நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

## இந்த ஆண்டு வழங்கும் கடன்கள்

நகைக் கடன்கள் 96-97ஆம் ஆண்டு வழங்கிய கடன்கள் 2,535 கோடி ரூபாய். பயன்பெற்றோர் எண்ணிக்கை 34.26 இலட்சம். 1997-98ஆம் ஆண்டு வழங்கிய கடன்கள் 2,779 கோடி ரூபாய். பயன்பெற்றோர் எண்ணிக்கை 38.35 இலட்சம். இந்த ஆண்டு 3,400 கோடி ரூபாய் நகைக் கடனாக வழங்குவதாக நாங்கள் குறியீடு நிர்ணயித்திருக்கிறோம்.

அதுபோல தானிய ஈட்டுக் கடன் 96-97ஆம் ஆண்டு வழங்கிய கடன் ரூ.13.36 கோடி. பயன்பெற்றோர் எண்ணிக்கை 10 இலட்சம். 97-98ஆம் ஆண்டில் வழங்கிய கடன் ரூ.21.80 கோடி. பயன்பெற்றோர் எண்ணிக்கை 14 இலட்சம். இந்த ஆண்டு 98-99இல் 70 கோடி ரூபாய் தானிய ஈட்டுக் கடன் வழங்குவதாகக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அதுபோன்று, நடுத்தர காலக் கடன்கள். 96-97ஆம் ஆண்டு வழங்கிய கடன் ரூ.66.37 கோடி. பயன்பெற்றோர் எண்ணிக்கை 76 ஆயிரம் பேர் 97-98ஆம் ஆண்டு வழங்கிய கடன் ரூபாய் 100 கோடியே 74 இலட்சம். பயன்பெற்றோர் எண்ணிக்கை 92 ஆயிரம் பேர். இந்த ஆண்டு நடுத்தர காலக் கடனாக வழங்குவதற்கு

ரூ.100 கோடி என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேபோல வீட்டு வசதி திட்டம். இந்தத் திட்டம் 96-97இல் செயல்படவில்லை. 97-98இல் வழங்கப்பட்ட கடன் ரூ.52.09 கோடி. பயன்பெற்றோர் 900 பேர். இந்த ஆண்டு இந்த திட்டத்திற்கு ரூ.105 கோடி தருவதாகக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று, லாரி, பேருந்துக் கடன்கள் வாங்குவதற்கு இந்த ஆண்டு ரூ.10 கோடி வழங்குவதாகக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

மருத்துவப் பொறியாளர் கடன்களுக்கு ரூ.10 கோடி இந்த ஆண்டு புதிதாகக் கடன் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

பண்ணை சாராக் கடன், இந்த ஆண்டு, 1998-99இல் ரூ.130 கோடி வழங்குவதாகக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

நீண்ட காலக் கடன், 1998-99ஆம் ஆண்டு ரூ.248 கோடி வழங்குவதாகக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று, வைப்பு நிதித் திட்டத்தில் நிதி திரட்டுதல் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டபோது கூட்டுறவுத் துறையிலே வைப்புநிதியாக இருந்தது 7,000 கோடி ரூபாய். இந்த இரண்டு ஆண்டு காலத்தில், கிட்டத்தட்ட 22 மாத காலத்தில் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும் 9,750 கோடி ரூபாய் வைப்புநிதியாக வைக்கப்பட்டிருக்கிறது என்றால், மக்கள் இதிலே அதிக ஆர்வம் காட்டி, நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்கிற காரணத்தினால் இவ்வளவு ரூபாய் சேர்ந்திருக்கிறது. இந்தியாவிலேயே சிறந்த வங்கியாக நமது தலைமை வங்கி தேர்வு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோலத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், இங்கேகூட உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். விவசாயிகள் கடன் வேண்டுமென்று கேட்டால் அவர்களிடம் அதிகமான உரத்தை வாங்க வேண்டுமென்று சொல்வதாக உறுப்பினர்கள் சொன்னார்கள். 97-98இல் தொடக்க நாணயக் கூட்டுறவு வங்கியில் குறுகிய காலக் கடனாகக் கொடுக்கப் பெற்றது ரூ.697 கோடி. பயன்பெற்றோர் எண்ணிக்கை 7,60,000 நபர்கள்.

### வங்கிகளுக்குப் புதிய கட்டடங்கள்

அதே மாதிரி இந்த ஆண்டு கடந்த ஆண்டைப் போல நமது முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க கிட்டத்தட்ட அத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 50 வங்கிகளுக்கு புதிய கட்டடங்கள் தரப்படும். நகர வங்கிகளுக்கு, 50 வங்கிகளுக்குப் புதிய கட்டடங்கள்.

அதே மாதிரி மத்திய வங்கியினுடைய கிளை 50 இடங்களிலே, அதற்குப் புதிய கட்டடங்கள், இப்படி கடந்த ஆண்டு அறிவித்ததை பணத்துடன் அரசாணையும் வழங்கப்பட்டிருக்கிறது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே 8 கோடி ரூபாய் செலவிலே 1,800 வங்கிகளுக்கு 'கிரில் கேட்டும்', 2,200 வங்கிகளுக்கு தொடர்ந்து கடந்த காலத்தில் அறிவித்ததைப் போல புதிய மத்திய வங்கி கிளைகளாக இந்த ஆண்டு 25 கிளைகள் திறக்கப்படும்.

50 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்குப் புதிய கட்டடம். அதேபோன்று 50 நகர வங்கிகளுக்குக் கட்டடம் கட்டப்படும். மத்திய வங்கியின் 50 கிளைகளுக்குக் கட்டடங்களும் இந்த ஆண்டு கட்டப்படும் என்பதைத் தெரிவித்து, இந்தத் துறையிலே இருக்கிற பல குறைபாடுகளை நிச்சயமாகக் களைய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் உங்களுடைய உற்சாகத்தை ஏற்று நல்லமுறையிலே செயல்படுவோம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 30 ஆம் தேதி வரை நெல் கொள்முதல்

நேற்றைய முன்தினமே அவையில் அறிவித்து இருக்கிறோம். 30ஆம் தேதி வரை விவசாயிகளுடைய நெல்லை நாங்கள் நிச்சயமாக கொள்முதல் செய்கிறோம். சாக்கு இல்லை. பணம் இல்லை என்ற பிரச்சினைகள் இல்லை. சாக்கு இருக்கிறது பணம் இருக்கிறது. அதற்குரிய பணம் தருகிறோம். 30ஆம் தேதி வரை நிச்சயமாக வருகின்ற நெல்லை நாங்கள் கொள்முதல் செய்கிறோம் என்ற அறிவிப்பை இங்கே தெரிவிக்கிறேன்.

அடுத்து நுகர்பொருள் வாணிபக் கழகம் தொடங்கி 25 ஆண்டுகள் ஆகின்றன. 25 ஆண்டுகள் முடிவதையொட்டி, ஒவ்வொரு ஊழியர்களுக்கும் 1,000 ரூபாய் மதிப்புள்ள பொருள் வழங்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல மற்ற துறைகளில் இருப்பதுபோல, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பணியாற்றுகிற தொழிலாளர்கள் பணிக்காலத்தில் இறக்க நேரிடுமானால், அவர்கள் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் 60,000 ரூபாயை 1 இலட்சமாக உயர்த்தித் தரச்சொல்லி முதலமைச்சர் அவர்கள் எனக்கு அனுமதி வழங்கியுள்ளார்கள் என்ற நல்ல செய்தியையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

*அதுபோல தானிய ஈட்டுக் கடன் 96-97ஆம் ஆண்டு வழங்கிய கடன் ரூ.13.36 கோடி. பயன்பெற்றோர் எண்ணிக்கை 10 இலட்சம். 97-98ஆம் ஆண்டில் வழங்கிய கடன் ரூ.21.80 கோடி. பயன்பெற்றோர் எண்ணிக்கை 14 இலட்சம். இந்த ஆண்டு 98-99இல் 70 கோடி ரூபாய் தானிய ஈட்டுக் கடன் வழங்குவதாகக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.*



இங்கே 10 உறுப்பினர்கள் போக்குவரத்துத் துறையினுடைய பணிகளைப் பற்றியும், அதிலே இருக்கிற குறைகளைப் பற்றியும் சுட்டிக்காட்டி உரையாற்றியிருக்கிறார்கள்.

இந்தப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த வரையில் 1972-ல் இன்றைய முதலமைச்சர் அன்று முதலமைச்சராக இருந்தபோது பொதுவுடைமை நோக்கத்தோடு 2247 அரசுப் பேருந்துகளாக இருந்த அந்த அரசுத்துறையை, முதல் போக்குவரத்துக் கழகத்தை உருவாக்கி 1973-ல் மீண்டும் 3 போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கி இன்று 2247 பேருந்துகள் என்ற எண்ணிக்கையை 17,284 பேருந்துகள் என்று எண்ணிக்கை உயர்கின்ற அளவுக்குப் பாடுபட்டிருக்கிற தலைவர் கழகத்தலைவர் என்பதை மறுக்கமுடியாது.

அன்று 20,000 தொழிலாளர்கள்தான் பணியாற்றிக் கொண்டிருந்த நிலைமையை மாற்றி இன்று 1,24,900 பணியாளர்கள் இதிலே பணியாற்றுகிறார்கள் என்று சொன்னால், அதற்கு வித்திட்டவர் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் என்பதை நன்றி உள்ளவர்கள் மறக்கமாட்டார்கள்.



சீர்கேடுகளை எல்லாம் அகற்றுகின்ற வகையில் பல சீர்திருத்தங்களையும் இந்தத் துறையிலே கொண்டு வந்து இருக்கிறோம். அதனுடைய விளைவாக இன்று ஏற்பட இருந்த பெரிய நஷ்டம் குறைக்கப்பட்டிருக்கிறது. நான் சில உதாரணங்களைச் சுட்டிக்காட்டினால் இந்தச் சீர்திருத்த நடவடிக்கைகளினால் இந்தத் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற நன்மைகளை நீங்கள் நன்கு உணர முடியும்.

குறிப்பாக கூண்டு கட்டுவது - பாடி பில்டிங் - அதிலே கடந்த காலங்களில் 95-96ல் நகரப் பேருந்துகளைக் கட்டுகின்றபோது ஒரு பேருந்துக்கான சராசரி செலவை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 2.65 இலட்சங்கள், 1996-97ல் 1.64 இலட்சமாக அது குறைந்திருக்கிறது.

எந்தப் பொருளினுடைய விலை ஏறிக்கொண்டிருந்தாலும் பாடி கட்டுவதிலே - இந்தக் கூடு கட்டுவதிலே இந்த இரண்டு ஆண்டுகளில் போக்குவரத்துக் கழகங்களில் ஒரு பேருந்துக்கு 1 இலட்சம் ரூபாய் அளவுக்குக் குறைகிற வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம், இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக.

அதேபோலப் புறநகர் பேருந்துகளில் கடந்த காலங்களிலே 3.17 இலட்சம். இன்று அவைகள் கட்டப்படுவதற்கு 2.32 இலட்சம் கிட்டத்தட்ட அதிலேயும் 1 இலட்சம் ரூபாய் மிச்சப்படுத்தப்படுகிறது. பெயிண்ட் வாங்குவது அன்றையவிட பெயிண்ட்டுகள் எல்லாம் எல்லா இடங்களிலும் விலை ஏறியிருக்கிறது. ஆனால் கார்ப்பரேஷனில் மட்டும் அவர்கள்

## போக்குவரத்துத் துறையில் சீர்கேடுகளைப் போக்கிட சீர்திருத்தங்கள்

அன்று வாங்கிய விலையை விட இன்று குறைந்த விலைக்கு வாங்கிக்கொண்டிருக்கிறோம். அதுதான் கடந்த காலங்களிலே அடித்த கொள்ளை, பெயிண்ட்டிலே மட்டும் இன்று 15 முதல் 25 சதவீதம் வரை விலை குறைந்திருக்கிறது.

உறுப்பினர்கள் கணேசன், திருநாவுக்கரசு, ஞானசேகரன் ஆகியோர் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்து அவர்கள் இங்கே பேசி இருக்கிறார்கள். கணேசனுக்குக் கொடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஊதியத்தில் உள்ள முரண்பாடுகளை எல்லாம் சுட்டிக்காட்டினார்.

எப்போதுமே நம்முடைய நாட்டில் ஒரு பழமொழி உண்டு; அரைக் காசு உத்தியோகமாக இருந்தாலும் • அரசாங்க உத்தியோகமாக இருக்கவேண்டும் என்று சொல்லுவார்கள். நமக்கு, கவர்ன்மெண்டு வேலை என்று சொன்னால் பணிப் பாதுகாப்பு, நிரந்தரம் இருக்கிறது என்பது ஒரு உளவியல் ரீதியாக ஏற்பட்டுவிட்ட பாதிப்பு. ஆகவேதான் இந்த உளவியல் ரீதியாக இருக்கிற இந்த உணர்வைப் பயன்படுத்தி, தொழிலாளர்களை எப்படியும் தங்கள் பக்கம் திருப்பலாம் என்று சிலபேர் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

### தொழிலாளர்களுக்கு அன்பு வேண்டுகோள்

அந்தத் தொழிலாளர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்ளும் அன்பான வேண்டுகோள்; உறுப்பினர் திருநாவுக்கரசு நான் சொல்லவேண்டும் என்று சொன்னார். நான் இங்கே சட்டமன்றத்தில் சுட்டிக்காட்டி எடுத்துவைக்கிற வாதங்கள் கூட தொழிலாளத் தோழர்கள் நாளைக்குப் பத்திரிகையில் படிக்கமுடியும். அவர்கள் ஒப்பிட்டுப் பார்க்கட்டும், அவர்கள் இன்று பெறுகிற ஊதியங்கள், தொழிற்சங்கங்களில் அவர்கள் உறுப்பினர்களாக இருக்கிற காரணத்தால், தொழிற்சங்கச் சட்டங்களுக்கு உட்பட்டு நடக்கிற காரணத்தால் அவர்களுக்குக் கிடைக்கிற சலுகைகள், இவைகளை எல்லாம் ஒப்பிட்டுப் பார்த்து அரசு ஊழியர்களாக மாறினால் அவர்களுக்குக் கிடைக்கிற இழப்பு என்ன என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

### 3 ஆண்டுக்குள் ஊதிய உயர்வு

இப்போது அவர்களுக்கு இந்த எண்ணம் வருவதற்குக் காரணம் அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த ஊதிய உயர்வுகள்தான். இவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொடுக்கப்பட்ட ஊதிய உயர்வு 98-ல் இப்போது அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு கொடுக்கப்படுகிறது.

முதன்முதலாக இவர்கள் அரசு ஊழியர்களாக வருகிறோம் என்று ஏற்றுக்கொண்டால் நாங்கள் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு கேட்கமாட்டோம். அரசு ஊழியர்களுக்கு இருப்பதைப் போலவே 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை எங்களுக்கு ஊதியம் நிர்ணயித்தால் போதும் என்பதை முதலில் ஒத்துக்கொள்ள வேண்டும். அதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்களா ? அதுமட்டுமல்ல; இப்போது அவர்கள் ஏற்றுக்கொண்டால் அவர்களுக்குக் கிடைக்கிற பணிஇழப்பையும் அவர்கள் பார்க்கவேண்டும்.

அதற்காகத்தான் நான் சொல்லுகிறபொழுதே மிகவும் கவனத்துடன் சொன்னேன். இதுபோன்ற பண இழப்புகள் வந்தாலும் அவைகளை இழப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். நீதிமன்றத்திற்குச் செல்லமாட்டோம். தொழிற்சங்க உரிமைகளை விட்டுக்கொடுக்கிறோம் என்று அவர்கள் கேட்டுக்கொண்டால் அரசு ஊழியர்களாக அவர்களை மாற்றுவதிலே இந்த அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை.

## முதல்வர் உடனடி உத்தரவு

ஆகவே, தொழிலாளர்களுக்கு இதுபோன்ற எண்ணம் இருக்கும் என்று சொன்னால், இந்த அரசைப் பொறுத்தவரையில் முதல்வர் கலைஞர் அவர்களுடைய அரசைப் பொறுத்த வரையில் போராளிகளை மதிக்கக்கூடிய ஒரு தலைவர் கலைஞர் என்ற காரணத்தாலேதான், போராட்டம் என்று அறிவித்தவுடனேயே அமைச்சரை அழைத்துப் பேசுங்கள் என்று கட்டளையிடுகிற தலைவர் கலைஞர் அவர்கள் இருக்கிற காலத்திலே எந்தப் போராட்டமும் நடத்தக்கூடாது என்று உணர்ந்திருக்கிற காரணத்தாலே - நேற்றைக்கு முன்தினம் நான் சேலம் சென்ற போதுகூட, உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் சொன்னதைப்போல் அங்கேயிருக்கிற தொழிற்சங்கத்தினுடைய, பிராஞ்சிலே இருக்கிற தொழிற்சங்கத் தலைவர்களைக்கூட அழைத்துப் பேசினேன்.

## அனைத்து சங்கங்களின் ஒருமித்த கருத்து

அங்கே எச்.எம்.எஸ்-லே இருந்தவர்கள் வந்து பார்த்தார்கள்; ஐ.என்.டி.யூ.சி.யிலே இருந்தவர்கள் வந்து பார்த்தார்கள். தொ.மு.ச.விலே இருந்து வந்து பார்த்தார்கள். சி.ஐ.டி.யூ.சி.லே இருந்தவர்கள் வந்து பார்த்தார்கள். அவர்கள் எல்லாம் வைத்த கோரிக்கை, அரசு ஊழியர்களாக எங்களை ஆக்கவேண்டிய அவசியம் இல்லை. தொழிலாளர்களுக்குக் கிடைக்கிற உரிமைகளை நாங்கள் இழப்பதற்குத் தயாராக இல்லை என்றுதான் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமின்றி, போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில், உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக் காட்டினார்கள். 21 போக்குவரத்துக் கழகங்கள், மாவட்டத்திற்கு ஒரு கழகம் வேண்டும் என்று ஞானசேகரன் குறிப்பிட்டார். இவைகளையெல்லாம், இன்று நடைமுறை அடிப்படையிலே இரண்டு போக்குவரத்துக் கழகங்களை மட்டும் நான்கை இணைத்து இரண்டாக உருவாக்கியிருக்கிறோம். விரைவுப் பேருந்துக் கழகங்களையும் ஒன்றாக இணைத்திருக்கிறோம். மாநகரப் போக்குவரத்துக் கழகம் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறது. மற்ற போக்குவரத்துக் கழகங்கள் அப்படியே இயங்கிக் கொண்டிருக்கின்றன.





இந்தப் போக்குவரத்துக் கழகங்களினால் ஏற்படக்கூடிய லாபங்களை உணர்ந்து அதனால் அனுகூலங்கள் இருக்குமானால் படிப்படியாக அவைகளைச் செய்யலாம் என்று இந்த அரசு முடிவு எடுத்து அவைகளை நிறுத்தி வைத்திருக்கிறது. ஆகவே, இந்தப் போக்குவரத்துக் கழகங்களினுடைய நஷ்டங்களைப் பொறுத்தவரையிலும், நிர்வாகச் சீர்திருத்த முறைகளிலேயும் இந்த அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறது.

## மக்கள் தேவையுணர்ந்து சேவை புரியும் கலைஞர்

இது மட்டுமின்றி, போக்குவரத்துக் கழகங்களிலே ஏற்படுகிற நஷ்டத்தை ஈடுகட்டுவதற்கு முதல்வர் அவர்கள் இந்தத் துறையின் ஒரு பகுதியாக இருக்கிற - இதிலே கிடைக்கிற லாபங்களை அதற்கு விட்டுக்கொடுத்து, இந்த நஷ்டங்களை ஈடுகட்டுகிற அளவிற்கு அவரும்கூட அடிக்கடி கொடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தாலேதான் இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் இன்று இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த அளவிற்கு நஷ்டங்கள் வந்தாலும் பொதுமக்களுடைய தேவைகளைக் கருதி சேவை செய்து கொண்டிருக்கிற முதல்வர் அவர்கள் அளித்திருக்கிற சலுகைகளின் அடிப்படையில் சிறப்பாக இவை செயல்பட்டு வருகின்றன.

மேலும், மினி பஸ் பற்றி எல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். மினி பஸ் போக்குவரத்து உருவாக்கப்பட்டதனுடைய நோக்கமே, கிராமப்புறங்களிலே பேருந்து வசதிகள் இல்லாத இடங்களுக்கு மினி பஸ் இயங்கவேண்டும் என்பதுதான். இதுதான் அதனுடைய நோக்கமே தவிர, மற்ற நிலைகளை ஊக்கப்படுத்த வேண்டும் என்பது அல்ல. அந்த எண்ணத்தில் 16 கிலோ மீட்டர் வழங்கப்பட்டு சர்வீஸ் ரோடு 1 கிலோ மீட்டர் வரை இருக்கிற இடங்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது.

நீங்கள் சொல்லுவதைப் போல் 4 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர் என்று நீட்டித்துக் கொடுக்கப்படும் என்று சொன்னால், போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகளாக இருந்தாலும் அவை பாதிக்கப்படும். தனியார்கள், வண்டி ஓட்டுபவர்கள், உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக்காட்டியதைப் போல லாபநோக்கம் இல்லாமல் ஓட்டமாட்டார்கள். 16 கிலோ மீட்டர், 22 கிலோ மீட்டர் என்று வாங்கி வைத்துவிட்டு, அந்த இடத்திலேயிருந்து 4 கிலோ மீட்டர் தூரம், கூட்டம் அதிகமாக இருக்கிறதே என்று, அதற்கு மட்டும் ஷார்ட் ட்ரிப் ஓட்டிக் கொண்டிருப்பார்களே தவிர, அவர்களுக்கு நீட்டிப்பு இருக்கிற பகுதிகளிலே எல்லாம் விடமாட்டார்கள். இது நடைமுறையிலே இருக்கிற சிக்கல்.

அதற்காகத்தான் இந்த அரசு, தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இன்று நாம் 16 கிலோ மீட்டர் என்றும், 1 கிலோ மீட்டர் சர்வீஸ் ரோடு என்ற அடிப்படையிலேயும் வழங்கியிருக்கிறோம். உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப் போல முன்பு 40 என்று இருந்தால் இன்றுவரை 105 பேருந்துகளுக்கு, மினி பேருந்துகளுக்கு உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது.

அவைகளின் செயல்பாடுகளைக் கணித்து, அதிலே குறைபாடுகள் இல்லாமல் இருக்குமானால், நிச்சயமாக அந்த 1 கி.மீ. என்பதை 2 கி.மீ. அல்லது 3 கி.மீ. என்று தளர்த்துவதற்கு முதல்வர் அவர்களோடு கலந்து ஆலோசித்து அதற்கான ஏற்பாடுகளை வருங்காலங்களில் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## தொழிலாளர்களுக்கு மருத்துவ உதவி

உறுப்பினர்களுக்கு குடும்ப மருத்துவ உதவித் திட்டமாக ஒரு இலட்சம் ரூபாய் அல்லது அதற்குக் குறைவாகச் செலவாகிறது என்று சொன்னால், செலவு செய்ததில் 75 சதவீதம் தொகை வழங்கப்படும் என்று அரசு உத்தரவு இருந்தது. ஆனால், அது மாற்றப்பட்டு, அதிகபட்சம் ஒரு இலட்சம் ரூபாய் அல்லது அதற்குள்ளாக எவ்வளவு செலவு செய்திருந்தாலும், செலவு செய்த முழுத்தொகையையும் வழங்கலாம் என்று இந்த அரசு அறிவிக்கிறது. இது தொழிலாளர்களுக்கு இந்த அரசு செய்கின்ற நன்மை.

மேலும் போக்குவரத்துக் கழகங்களில் பார்வையற்ற பணியாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாதம் 75 ரூபாய் ஊர்திப் படியாக வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இச்சலுகை இதுவரை அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது போக்குவரத்து கழகத்தில் பணியாற்றுகின்ற பார்வையற்ற தொழிலாளர்களுக்கும் இது நீட்டிக்கப்படுகிறது.

மேலும், சென்னை மாநகரப் பயணிகளுக்கென்று சில சலுகைகளை முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். "ட்ராவல் அஸ் யூ ப்ளீஸ்" என்ற பயணச்சீட்டு விற்கப்படுகிறது. ஒரு மாதத்திற்கு 375 ரூபாய். கிட்டத்தட்ட மாதத்திற்கு 10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் ரூபாய் வரை டிக்கெட் விற்கப்படுகிறது. மாதத்திற்கு 375 ரூபாய் கட்டி வாங்கிக்கொண்டால், எங்கே வேண்டுமானாலும் பயணம் செய்யலாம். அந்தப் பயணச் சீட்டை வைத்திருக்கின்ற யார் வேண்டுமானாலும் பயணம் செய்யலாம் என்ற ஒருமுறை இப்பொழுது சென்னையில் இருக்கிறது. அந்த 375 ரூபாய் மொத்தமாகச் செலுத்துகின்றவர்களுக்குச் சில சலுகைகளை முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அவர்களே 3 மாதத்திற்குச் சேர்த்து மொத்தமாக வாங்கிக்கொண்டால், அவர்கள் 1000 ரூபாய் கட்டினால் போதும். 3 மாதத்திற்கு இந்தச் சலுகையை அனுபவிக்கலாம். அதுபோல 6 மாதத்திற்கு மொத்தமாக வாங்கிக் கொண்டால், 2000 ரூபாய் கொடுத்து வாங்கிக்கொண்டால், 6 மாதத்திற்குச் சென்னை மாநகரத்தில் எங்கு வேண்டுமானாலும், அந்தப் பயணச்சீட்டை வைத்திருக்கின்ற யார் வேண்டுமானாலும் பயணம் செய்யலாம் என்ற சலுகையைப் பயணிகளுக்காக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அதுபோன்று சென்னையில் மட்டும் அரசு ஊழியர்கள் - மற்றவர்கள் சீசன் டிக்கெட் 40 பயணச் சீட்டு வாங்கினால், 60 முறை பயணம் செய்யலாம் என்று வழங்கியிருக்கிறோம். இதை மாநகரவாசிகளுக்கு மட்டுமல்லாமல், புறநகர்ப் பகுதிகளில் உள்ள மக்கள் பயணம் செய்வதற்கு வசதியாகவும் இந்த சீசன் டிக்கெட் வசதியை மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும் நீட்டித்து வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது பெரும்பாலானவர்கள் கார் வைத்திருக்கிறவர்களெல்லாம் ஆண்டுக்கு ஒருமுறை லைசென்ஸ் வாங்குவதில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதாவது சாலை வரி கட்டுவதில் உள்ள பல்வேறு முறைகளை மாற்றி அவர்களுக்கு நிரந்தரமாக ஆயுட்காலவரி என்ற அடிப்படையில் அவர்களுக்கு வழங்கவும் முதல்வர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். அதற்கான சட்டத்திருத்தம் இந்தக் கூட்டத்தொடரில் வரும். புது வாகனங்களுக்கு ஆயுட்கால வரி கட்டாயமாக இருக்கும். இனி, புதிதாக வாங்குகின்றவர்கள் ஆயுட்கால வரியைக் கட்டவேண்டும். இதுவரை வண்டி வைத்திருப்போர் வேண்டுமானால் அதற்கு விருப்பம் கொடுத்து அதை மாற்றிக்கொள்ளலாம். அல்லது ஆண்டுக்கு ஒருமுறை வரியைக் கட்டலாம் என்ற சலுகையை அளித்து இந்தத் திட்டத்தை அளித்து இருக்கிறார்கள்.

## விருப்புவெறுப்பின்றிச் செயல்படும் அரசு

மேலும் பல உறுப்பினர்கள் ஆங்காங்கே துணை அலுவலகங்கள் வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதுவும் குறிப்பாக, இங்கே உறுப்பினர் கருப்பசாமி அவர்கள் பேசுகின்றபோது, சங்கரன்கோவிலுக்கு விட்டிருந்த பேருந்தைக்கூட, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்ற காரணத்தினால் நிறுத்திவிட்டார்கள் என்று சொன்னார்.

*கூண்டு கட்டுவது - பாடி பில்டிங் - அதிலே கடந்த காலங்களில் 95-96ல் நகரப் பேருந்துகளைக் கட்டுகின்றபோது ஒரு பேருந்துக்கான சராசரி செலவை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 2.65 இலட்சங்கள், 1996-97ல் 1.64 இலட்சமாக அது குறைந்திருக்கிறது.*

*எந்தப் பொருளினுடைய விலை ஏறிக்கொண்டிருந்தாலும் பாடி கட்டுவதிலே - இந்தக் கூடு கட்டுவதிலே இந்த இரண்டு ஆண்டுகளில் போக்குவரத்துக் கழகங்களில் ஒரு பேருந்துக்கு 1 இலட்சம் ரூபாய் அளவுக்குக் குறைகிற வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம், இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக.*

எந்தக் காலத்திலே நிறுத்தப்பட்டது என்று அவர் சொன்னால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏனென்றால், கடந்த காலங்களிலே நிறுத்தப்பட்ட பேருந்துகளையெல்லாம் நடத்திக்கொண்டிருக்கின்ற அரசுதான் கலைஞருடைய அரசு. எந்தத் தனிப்பட்ட உறுப்பினர் மீதும் விருப்பு வெறுப்போடு நடக்கிற அரசு அல்ல இந்த அரசு. வேண்டுமானால் அவருடைய தலைவர்களுக்கு அது வழக்கமாக இருக்கலாம். அந்த அடிப்படையில்தான் உண்மைகளைக்கூட மறைத்து, அவர்கள் எதையெதையோ சொல்லி, யார் யாரையோ கைது செய்ய வேண்டுமென்றெல்லாம்கூட பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

*புறநகர் பேருந்துகளில் கூண்டு கட்ட கடந்த காலங்களிலே 3.17 இலட்சம். இன்று அவைகள் கட்டப்படுவதற்கு 2.32 இலட்சம் கிட்டத்தட்ட அதிலேயும் 1 இலட்சம் ரூபாய் மிச்சப்படுத்தப்படுகிறது. பெயிண்ட் அன்றை விட எல்லா இடங்களிலும் விலை ஏறியிருக்கிறது. ஆனால் கார்ப்பரேஷனில் மட்டும் அவர்கள் அன்று வாங்கிய விலையை விட இன்று குறைந்த விலைக்கு வாங்கிக்கொண்டிருக்கிறோம். பெயிண்ட்டிலே மட்டும் இன்று 15 முதல் 25 சதவீதம் வரை விலை குறைந்திருக்கிறது.*

### விருப்ப எண்கள் பெற

பேருந்து நிறுத்தப்பட்டிருக்கிறது என்று இப்பொழுது சுட்டிக் காட்டுகிறார். அதை விடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மேலும் விபத்து நிவாரண நிதியை முதல்வர் அவர்கள் அதிகரித்துக் கொடுத்திருக்கிறார்கள். இதுவரை உயிர்நீத்தால் 3,000 ஆக வழங்கப்பட்டு வந்த தொகை, ரூ.5,000 ஆக இனி வழங்கப்படும். நிரந்தரச் செயலிழப்பாக இருந்தால், இதுவரை ரூ.1,500 என்று வழங்கப்பட்டது. இனி அது ரூ.3,000 ஆக வழங்கப்படும். ஒரு கண் அல்லது ஒரு கை/கால் இழப்பு ஏற்பட்டிருந்தால், இதுவரை ரூ.1,000 வழங்கப்பட்டு வந்தது. இனிமேல் ரூ.2,000 ஆக அது வழங்கப்படும். ஏனைய சிறிய காயங்களுக்கு இதுவரை ரூ.100 வழங்கப்பட்டு வந்தது. இனிமேல் ரூ.250 ஆக அது வழங்கப்படும்.

மேலும், சிறப்பு எண்களைப் பதிவு செய்கின்றபோது சில சங்கடங்கள் இருக்கின்றன. குறிப்பாக விருப்ப எண்ணைப் பெறுவதற்கு ரூ.5,000 கட்டினால் போதும் என்று விதி இருக்கிறது. இப்பொழுது அதை மாற்றியமைத்து, இந்த அரசு சில விதிமுறைகளை உருவாக்கியிருக்கிறது. 50 சி.சி.வரை கொள்ளளவு உள்ள வாகனங்களுக்கு ரூ.500 கட்டினால் அவர்கள் விரும்பிய எண்களைப் பெறமுடியும். 50 சி.சி.க்கு மேல் அனைத்து இரு சக்கர வாகனங்களுக்கு ரூ.1,000 கட்டினால் போதும்.

இப்போது 50 சி.சி.வாகனங்களுக்கு வாங்கவேண்டுமானால்கூட ரூ.5,000 கட்ட வேண்டும். அதைக் குறைத்து இப்போது 30 சி.சி. வரையுள்ள வாகனங்களுக்கு ரூ.500-ம் 50 சி.சிக்கு மேல் உள்ள இருசக்கர வாகனங்களுக்கு ரூ.1000-ம் ஏனைய வாகனங்களுக்கு ரூ.3,000-ம் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கு, அதாவது ரூ.4 இலட்சம் மற்றும் அதற்கு மேல் விலையுள்ள வாகனங்களுக்கு ரூ.5,000-ம் சிறப்பு எண்களுக்குப் பதிவுக் கட்டணமாகப் பெறப்படும் என்கிற திருத்தத்தையும் கொண்டுவந்திருக்கிறோம்.

### த.மா.கா.உறுப்பினர் கோரிக்கை ஏற்பு

மேலும், தமிழ்மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் ஒரு கேள்வியிலே கேட்டிருந்தார். உறுப்பினர் அழகராஜா - உறுப்பினர்கள் கார் வாங்குகிற போது, அவர்கள் விரும்பிய எண்ணைப் பெறுகிறபோது, ஐயாயிரம் ரூபாய் கட்டுவதிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கேட்டிருந்தார். எல்லோருக்கும் சலுகைகளைக் கொடுத்தோம். சட்டமன்ற உறுப்பினர்கள் சலுகைகளைக் கேட்கிறபோது பல சலுகைகளைக் கேட்டிருந்தாலும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் உறுப்பினர் கேட்டதற்கிணங்க, நமது முதலமைச்சர் அவர்கள், அதற்கு அனுமதி அளித்து, சட்டமன்ற உறுப்பினர்கள் கார் வாங்கினால், அவர்கள் விரும்பிய எண்ணைப் பெறுவதற்கு 5 ஆயிரம் ரூபாய் கட்டுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

*- சட்டப்பேரவையில் 5-5-98 அன்று போக்குவரத்துத்துறை மான்யக்கோரிக்கை மீதான விவாதங்களுக்கு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.பொன்முடி அவர்கள் அளித்த பதிலுரையிலிருந்து.* ★

'யாதும் ஊரே யாவரும் கேளிர்...

பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!'

- கணியன் பூங்குன்றனார், புறநானூறு.





12-ஆம் பக்கத் தொடர்ச்சி

கோவை மாவட்டத்தில் 55 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம், வடவள்ளி நகர பேரூராட்சிகள் மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.5.5 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

கோவை மாவட்டத்தில் 10 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் வேட்டைக்காரன்புதூர், உடையகுளம், கோட்டூர் மற்றும் ஆனைமலை ஒன்றியத்தில் 6 ஊராட்சிகளில் அடங்கிய 38 கிராமங்களுக்கு ரூ.15.32 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

கடலூர் மாவட்டத்தில் 1 இலட்சத்து 45 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் ரூ.17 கோடி மதிப்பீட்டில் கடலூர் நகராட்சிக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கப்படும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 98 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் கீழ்க்கொடுங்காலூர் மற்றும் 20 ஊராட்சிகளைச் சேர்ந்த 100 குடியிருப்புகளுக்கான ரூ.9.75 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 54 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் வந்தவாசி மற்றும் தெள்ளாறு ஒன்றியத்தில் உள்ள நல்லூர் மற்றும் 22 ஊராட்சிகளைச் சேர்ந்த 108 குடியிருப்புகளுக்கான ரூ.5.45 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் 16 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் ரூ.5.8 கோடி மதிப்பீட்டில் பாலக்கோடு ஊரகப் பேரூராட்சி குடிநீர்த் மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கப்படும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் 48 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் கும்மிடிப்பூண்டி மற்றும் மீஞ்சூர் ஒன்றியத்தில் கடலோரக் குடியிருப்புகளுக்கான ரூ.11 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டம் செயலாக்கப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 26 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் திருப்போரூர், திருக்கழுக்குன்றம், சித்தாமூர் மற்றும் லத்தூர் ஒன்றியங்களைச் சேர்ந்த கடலோரக் குடியிருப்புகளுக்கான ரூ.5 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படும்.

நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்குக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு உள்ளாட்சி அமைப்புகளின் மன்றத் தீர்மானம் எதிர்பார்க்காமல் ஆய்வுப் பணிகள் துவக்கப்படும். ஆயினும் இப்பணிகளுக்கான ஒப்புதல் உள்ளாட்சி அமைப்புகளிடம் பெற்ற பின்னரே இறுதி செய்யப்படும். உள்ளாட்சி அமைப்பு களிடமிருந்து ஆய்வுத் தொகையை எதிர்பார்க்காமல் ஆய்வுகளை மேற்கொள்ளவும் பின்னர் இத்தொகையைத் திட்ட செலவினத்தில் சேர்த்துக் கொள்ளவும் குடிநீர் வாரியத்திற்கு அரசு ஆணை வழங்கியுள்ளது.

புதிய குடிநீர்த் திட்டங்களை, வடிவமைக்கும் போது இப்பகுதியில் முன்பே இயங்கிவரும் கைமிறைப்பான்கள் மூலம் கிடைக்கும் குடிநீரின் அளவைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்ற புதிய வழிமுறையைப் பின்பற்ற அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

குடிநீர்த் திட்ட செயலாக்கத்தில் தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 50 லிட்டருக்கும் குறைவாகக் குடிநீர் வசதி பெறும் நகராட்சிகளுக்கும், 50 லிட்டருக்கும் குறைவாகக் குடிநீர் வசதி பெறும் நகர மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கும் முன்னுரிமை அளிக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

உலக வங்கி நிதியுதவியுடன் நிறைவேற்றப்படும் தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்திலிருந்து ரூ.10 கோடி நிதியுதவி பெறும் சேலம், நாமக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் 30.9.98க்குள் முடிவடையும் வகையில் ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

தன்னலமற்ற தொண்டு நிறுவனங்கள் அவர்களின் நிதியிலிருந்து செலவு செய்த குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற முன்வருமானால் குடிநீர் வடிகால் வாரியத் தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் நீராதாரம் தோற்றுவித்தல் போன்ற உதவி வழங்கப்படும். இப்பணியை முடிவுற்றவுடன் தனி மின்னிறைப்பான் திட்டங்கள் பராமரிப்பிற்காக உள்ளாட்சி மன்றத்திடமும், கூட்டுக் குடிநீர்திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமும் ஒப்படைக்கப்படும்.

ஊரகக் குடிநீர்த் திட்டங்களில் முன்பு 750 வரை மக்கள் தொகை கிராமங்களுக்கு 10,000 லிட்டர் கொள்ளளவும் 750க்கு மேல் மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவும் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் முறையை மாற்றி இனிமேல் 500க்கு மேற்பட்ட மக்கள் தொகை இருந்தாலே 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

### நரிப்பையூரில் ரூ.40 கோடி திட்டம்

இராமநாதபுரம் மாவட்டத்தில 77 ஊராட்சிகள் அடங்கிய 296 குடியிருப்புகளில் உள்ள 80,000 மக்கள் பயன்பெறும் வகையில் 38 லட்சம் லிட்டர் கொடுதிறன் கொண்ட நரிப்பையூர் உப்புநீரை நன்னீராக்கும் திட்டம் ரூ.40.81 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு 1998 - 99ல் பயனுக்குக் கொண்டு வரப்படும். இந்தியாவிலேயே இவ்வளவு பெரிய அளவிலான திட்டம் எதுவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் மூலம்நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 20 லிட்டர் குடிநீர் மட்டுமே வழங்க முடியும் என்பதால் இக்குடியிருப்புகளுக்குக் கூடுதலாக 20 லிட்டர் நீர் வழங்கிடவும் மாவட்டத்தின் இதர பகுதிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கிடவும் நிரந்தர நீராதாரம் கொண்ட புதிய பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### தருமபுரி, கடலூர் குடிநீர்த் திட்டங்கள்

தருமபுரி மாவட்டத்தின் மூன்றில் இரண்டுபகுதியைச் சேர்ந்த 18 லட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 2 நகராட்சிகள், 14 பேரூராட்சிகள், 4855 ஊராட்சிகள் அடங்கிய 4101 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் மற்றும் பொதுச் சுகாதாரத் திட்டம் ரூ.636.30 கோடி திருந்திய திட்ட மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் ஜப்பானிய அயல்நாட்டுப் பொருளாதார கூட்டுறவு நிதியத்தின் நிதி உதவியுடன் செயலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கடலூர் மாவட்ட - வீராணம் ஏரியின் கொள்ளளவை அதிகரித்து விவசாயத் துறைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் வாழும் 10 இலட்சம் மக்கள் பயன் பெறும்வகையில் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதயுதவியுடன் ரூ.263 கோடி மதிப்பீட்டிலான குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப் படும்.

### பாதாளச் சாக்காடைத் திட்டங்கள்

பாதாளச் சாக்கடைத்திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 90 லிட்டருக்கு மேல் குடிநீர் வழங்கப்படும். எல்லா நகராட்சிகளிலும், எல்லா மாவட்ட தலைமையகங் களிலும், அதாவது ஆலந்தூர், தாம்பரம், பல்லாவரம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், கரூர், வேலூர், அம்பத்தூர் ஆகிய 12 நகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.100 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதிஉதவியுடன் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மற்றும் திண்டுக்கல் நகராட்சிகளில் ரூ.200 கோடி மதிப்பீட்டில் ஹட்கோ நிதியுதவியுடன் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### கண்காணிப்புக்குழு அமைப்பு

தமிழ்நாட்டில் குறைந்த அளவு குடிநீர் வசதியுள்ள எல்லா நகராட்சிகளிலும் மற்ற நகரப் பேரூராட்சிகளிலும் புதிய குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்த ஹட்கோ நிறுவனத்திடமிருந்து ஐந்தாண்டுகளில் ரூ.500 கோடி கடனுதவி பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கிராமக் குடிநீர்த் திட்டங்களின் புனரமைப்புப் பணிகளைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செய்து திட்டங்களை முழுப் பலனுக்குக் கொண்டு வர இரண்டாண்டுகளில் ரூ.52 கோடி மதிப்பீட்டில் திட்டம் நிறைவேற்றப் படும். தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்436 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் பராமரித்து வருகின்றது.

இதனைப் பராமரிப்பதிலும் நிர்வகிப்பதிலும் உள்ளாட்சி அமைப்புகள் பங்கேற்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் பயன்பெறும் உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கண்காணிப்புக்குழு அமைக்கப்படும். இக்குழு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடி திட்டங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்யும்.

நகர உள்ளாட்சி அமைப்புகளுக்குக் குடிநீர் வடிகால் வாரியம் முறையான,தொடர்ந்த குடிநீர் வழங்குவதை ஒழுங்குப்படுத்தும் வகையில், பெரிய அளவில் குடிநீர் வழங்குதலை அளக்கும் கருவிகள் பொருத்தப்படும்.

குடிநீர் வடிகால் வாரியத்தின் 4 தலைமைப் பொறியாளர் அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் வடிவமைப்பு மற்றும் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்க ஏதுவாக ரூ.5.35 கோடி செலவில் புதிய கணிப்பொறிகளையும், மென்பொருட்களையும் நிறுவப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைப் பற்றிய செய்திகள் இணையும் வசதியில் இன்று (27.4.98) முதல் சேர்க்கப்படும். இதன் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்பாடுகள் மற்றும் வாரியத்தால் இதுவரை செயல்படுத்தப்பட்டுள்ள பெரிய அளவிலான திட்டங்கள் பற்றிய விவரங்கள் மற்றும் நடப்பு ஆண்டில் நிறைவேற்றப்பட உள்ள திட்டங்கள் பற்றி சர்வதேச அளவில் நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் அறிந்துகொள்ளலாம். இந்தியாவிலுள்ள குடிநீர் வாரியங்களிலேயே, முதலாவதாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்தான் இந்த இணைய வசதியைப் பயன்படுத்த உள்ளது என்பதை உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன்.

ஒரு ஊர்தி செயல் இழந்து நிராகரிக்கப்பட்டாலே அதற்குப் பதிலாகப் புதிய ஊர்தி வாங்குவது என்ற புதிய முறைப்படி 243 புதிய ஜீப்புகள் வாங்கப்பட வேண்டியதில் 56 ஜீப்புகள் வாங்கப்பட்டு மீதமுள்ள 187 புதிய ஊர்திகள் ரூ.6.5 கோடி செலவில் வாங்கி, குடிநீர்த் திட்டங்களை விரைவில் செயல்படும் வகையில் பயன்படுத்தப்படும்.

வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகங்களுக்கு ரூ.7.550 கோடி செலவில் ஏழு இடங்களில் புதிய கட்டட வளாகங்கள் அமைக்கப்படும்.

தொழில்நுட்பப் பணியாளர்களின் திறனையும் அறிவையும் வளர்க்கும் விதத்தில், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் துறையின் சமீபத்திய தொழில்நுட்ப வளர்ச்சியில் 15 அலுவலர்களுக்கு டென்மார்க் நாட்டில் பயிற்சி அளிக்கப்படும்.

இந்த அரசு பதவி ஏற்ற 13.5.96க்கு பிறகு 22 மாதங்களில் 5914 ஊரகக் குடியிருப்புகளுக்கு நீராதாரம் தோற்றுவித்து குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றி மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டது. 2821 ஊரகக் குடியிருப்புகளுக்குச் சென்ற ஆண்டில் நீராதாரம் உருவாக்கப்பட்டு நடப்பு ஆண்டில் குடிநீர்த் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 2623 ஊரகக் குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே நீராதாரங்கள் தோற்றுவிக்கப்பட்டு குடிநீர்த் திட்டப் பணிகள் இந்த ஆண்டில் எடுக்கப்படும்.

### தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம்

சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் சார்பில் நொச்சிக்குப்பம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. போல - வேளச்சேரி நடுக்குப்பம், காசிமேடு ஆகிய பகுதிகளிலும் சுமார் 12,000 நபர்கள் பயன்பெறும் உவர்நீரை நன்னீராக்கும் திட்டம் ரூ.2.15 கோடி செலவில் செயலாக்கப்படும்.

1998 - 99 ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் ரூ.300 கோடிகளுக்கு மேல் மூலதனத் திட்டங்களை செயல்படுத்தும்.

6.4.98 அன்று வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அவர்கள், இதே பேரவையில் பேசும்போது, நகர பகுதியின் தென்பகுதிகளான வேளச்சேரி, சைதாப்பேட்டை, கலைஞர் கருணாநிதி நகர் ஆகிய இடங்களுக்குத் தண்ணீர் விநியோகம் செய்ய ஒரு தனிச் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து விநியோகம் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார். இதனைக் கருத்தில் கொண்டும் சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் ஏற்கெனவே தயாரித்திருந்த பெருந்திட்டத்தின் அடிப்படையிலும், செம்பரம்பாக்கத்தில் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் தண்ணீரைச் சுத்திகரிக்கும் திறன் கொண்ட ஒரு புதிய தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சுமார் 300 கோடியில் அமையவிருக்கும் இந்த நிலையம் 2002 ஆம் ஆண்டில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கழிவுநீர்க் குழாய்களில், அடைப்புகளை உடனுக்குடன் அகற்ற வாரியம் 40 ஜெட் ராட்டிங் இயந்திரங்களையும், 50 டிராக் பக்கெட் இயந்திரங்களையும் ரூ.12.77 கோடி செலவில் புதிதாக வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இவற்றில் 25 பிராக்பக்கெட்டு இயந்திரங்கள் பெறப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள இயந்திரங்கள் விரைவாகப் பெறப்பட்டு பணியில் ஈடுப்படுத்தப்படும்.

சென்னை மாநகரில், குடிநீர் விநியோகத்தைச் சீராக்க நகரின் 16 இடங்களில் குடிநீர் விநியோக நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று இருக்க தற்போது 4 நிலையங்கள் மட்டும்தான் உள்ளன. மீதமுள்ள 12 நிலையங்களில், வள்ளுவர் கோட்டம், திருவல்லிக்கேணி மற்றும் கண்ணப்பர் திடல் ஆகிய இடங்களில் அமையவுள்ள நிலையங்கள் இந்த ஆண்டிலேயே முடிக்கப்பட்டு, செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்படும். 8 நிலையங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. பள்ளிப்பட்டு நிலையத்திற்கான வேலை கூடிய விரைவில் ஆரம்பிக்கப்படும்.

### மாம்பலத்தில் கழிவுநீர்க் குழாய்கள்

மாம்பலம் வாய்க்கால் கரையோரத்தில், கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்படும் திட்டம் ரூ.16 கோடி செலவில் இந்தத் ஆண்டு ஆரம்பிக்கப்படும். இந்த திட்டம் செயல்படுத்திய பின், மாம்பலம் வாய்க்காலில் கழிவுநீர் கலக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- சட்டப் பேரவையில் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி அவர்கள்
27.5.98 அன்று ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல்
மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்குப்
பதிலளித்து ஆற்றிய உரையிலிருந்து...)



# நலம் காண்போம் - தமிழக வளம் காண்போம்



## கலைஞர் அரசின் 2 ஆண்டுப் பணிகளில் சில....



விவசாயிகளுக்கு இந்த ஆண்டு 44 கோடி நிலவரி ரத்து. கூட்டுறவு கடன்களுக்கு அபராத வட்டித் தொகை ரூ.50 கோடி தள்ளுபடி.

விவசாயிகளுக்குத் தொடர்ந்து இலவச மின்சாரம்.

77,901 விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புகள்.

நெல் கொள்முதல் விலை :
குவிண்டாலுக்கு

| | 1995-96ல் (இலட்சம் டன்) | 1997-98ல் (இலட்சம் டன்) |
|---|---|---|
| மோட்டா ரகம் | ரூ.360 | ரூ.415 |
| சன்ன ரகம் | ரூ.375 | ரூ. 445 |
| போக்குவரத்து இடைநிகழ் செலவு | ரூ.5 | ரூ. 35 |
| கொள்முதல் அளவு | 1.43 | 18 |

1996-98ல் (இரண்டு ஆண்டுகளில்) ஆதிதிராவிடர்கள் - நலிந்தோருக்கு இலவச கான்கிரீட் வீடுகள், 1,27,832. இவ்வாண்டில் மேலும் 60,000 வீடுகள்.

1991-96 வரை 5 ஆண்டுகளில் கட்டி முடித்த வீடுகள் 1,20,700.

நலிந்த பிரிவினருக்கு வயதின் அடிப்படையில் வழங்கப்படும் மாத ஒய்வூதியம்.

1995ல் ரூ.100 - எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு.

1998ல் ரூ.150 - எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு ரத்து.

★ அடித்தட்டு மக்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அரண். ரூ.6,485 கோடியில் உணவு, உடை, உறையுள்.

★ ஏழை, எளியோர் 1 கோடி 40 இலட்சம் பேர்களுக்கு இலவச வேட்டி சேலை.

★ ஏழைப் பெண்கள் திருமண உதவித் தொகை 1989 ல் ரூ.5000, 1996ல் ரூ.10,000.

1996 - 98ல் வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ.68 கோடி.

இவ்வாண்டு 60,000 பெண்கள் பயன்பெற ரூ.60 கோடி.

★ மனைவரி ரத்து, நிலுவைத் தொகையும் தள்ளுபடி.

★ ரூ.3,000க்கு மேற்படாத சொத்தின் மதிப்பிற்கு, முத்திரைத் தீர்வு, பதிவுக் கட்டணம் ரத்து.

★ மூன்று பேர் உள்ள குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி.

★ 2,000 புதிய நியாய விலைக் கடைகள் - அனைத்து நியாய விலைக் கடைகளிலும் புகார் புத்தகம். புதிய இரண்டு வண்ணக் குடும்ப அட்டைகள்.

★ ஜனநாயக ஒளி பரவிட உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள். கூட்டுறவுத் தேர்தல்கள்.

★ ஆண்டுதோறும் தொகுதிக்கு ஒரு நவீன கிராமம் - அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் - ரூ.224 கோடி மதிப்பீட்டில் 33,282 பணிகள்.

★ 'நமக்கு நாமே திட்டம்' - ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு.

★ சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கு ரூ.35 இலட்சம்.

★ நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள 96,000 உறுப்பினர்களின் 60 வயதை கடந்த கைத்தறி நெசவாளர்களுக்கு மாத உதவித் தொகை ரூ.150.

★ கைத்தறி நெசவாளர் துயர் துடைத்திட ஆண்டு முழுவதும் 20% ரிபேட், தேக்கத்தைக் குறைத்திட 3 மாதங்களுக்கு 30% சிறப்பு ரிபேட்.

★ 4 ஆண்டுகளாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப்படாமல் இருந்த ரிபேட் ரூ.43 கோடி வழங்கப்படும்.

★ 25,860 ஆசிரியர்கள் முன்னுரிமைத் தகுதிப்படி பணி நியமனம்.

★ 2,600 பெண் காவலர்கள் உள்பட 10,302 காவலர்கள் நியமனம்.

★ 1,100 உதவி ஆய்வாளர்கள் நியமனம்.

★ 8,000 சாலைப் பணியாளர்கள் நியமனம்.

★ 13,000 மக்கள் நலப் பணியாளர்கள் மீண்டும் நியமனம்.

★ 12,000 கி.மீ. சாலைகள் தார்ச்சாலைகளாக மாற்றம்.

★ 10,000 கி.மீ. தூரத்திற்குப் புதிதாக கிராமச் சாலைகள்.

★ ரூ.285 கோடியில் 7,227 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அதிகரிப்பு.

★ 1,10,000 புதிய தெருவிளக்குகள்.

★ 4,000 மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு.

★ 98,000 குடிசைகளுக்கு மின் இணைப்பு.

★ மத்திய அரசின் திருத்திய ஊதிய விகிதங்கள் மாநில அரசு ஊழியர்களுக்கும் 1-1-1996 முதல்.

★ தனியார் மின்உற்பத்தி நிறுவனங்களுடன் இணைந்து 5,792 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டத்திற்கான அனுமதி.

★ ரூ.100 கோடி மதிப்பீட்டில் டாசிட் நிறுவனத்தின் மூலம் 'வணிக மற்றும் நிதி மையம்'.

★ திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.700 கோடி திட்டச் செலவில் உயர் தொழில் நுட்பத் தொழில் பூங்கா, அதில் ரூ.7,000 கோடி மதிப்பீட்டில் புதிய தொழிற்சாலைகள்.

★ தொடக்கப்பள்ளி இல்லாத குக்கிராமங்களே இல்லை என்ற நிலையை உருவாக்கும் திட்டம்.

★ 12 ஆம் வகுப்பு வரை மாணவர்க்கு இலவச பஸ் பயணம்.

★ கிராமப்புறப்பள்ளி மாணவர்க்கு, தொழில் கல்லூரிகளில் 15 சதவீதம்.

★ பள்ளி மாணவர்க்குச் சத்துணவோடு வாரம் ஒரு முறை முட்டை.

★ அமைப்பு ரீதியில் இல்லாத 25 இலட்சம் தொழிலாளர்கள் பயன்பெற 'தொழிலாளர் நல வாரியம்'.

★ ரூ.26 கோடியில் மீனவர்களுக்கு 8,000 இலவச வீடுகள்; இவ்வாண்டில் மேலும் 4,000 வீடுகள்.

★ ரூ.186 கோடி மதிப்பீட்டில் 1000 பேருக்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய அனைத்து கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை வசதி.

★ சேலத்தில் பெரியார் பல்கலைக்கழகம், சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், திருச்சியில் கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரி. நெல்லையில் புதிய சட்டக் கல்லூரி.

★ 24 மணி நேரமும் இயங்கும் 167 ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

★ ரூ.50 கோடியில் 652 ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

★ அனைத்து சமூகத்தினரும் நல்லிணக்கத்தோடு ஒற்றுமையாக வாழும் வகையில் 50 இடங்களில் 'சமத்துவபுரம்'.

## சொன்னதைச் செய்வோம்! செய்வதைச் சொல்வோம்!!

★ ★ ★



# ஒடுக்கப்பட்ட உழைப்பாளிகளை ஒன்றுபடுத்திய காரல்மார்க்ஸ்

**ஜமதக்னி மொழிபெயர்த்த காரல் மார்க்சின் நூல்களை வெளியிட்டு முதலமைச்சர் கலைஞர் உரை**

"காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் - அவன் காணத் தகுந்தது வறுமையா? பூணத் தகுந்தது பொறுமையா?" என்ற கேள்வியைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுப்பினார். இந்தக் கேள்விக்கு விடை காணும் அந்த வழியைத்தான் நூற்றாண்டு காலமாக உலகத்திலே உள்ள பல சிந்தனையாளர்கள் தேடித்தேடி அதிலே மாபெரும் சிந்தனையாளனாக கார்ல் மார்க்ஸ் தோன்றி இந்த மூலதனத்தை நமக்கெல்லாம் வழங்கியிருக்கிறார்.

இந்த மூலதனத்தை இந்தியாவிலேயே முதன்முதலாக நம்முடைய இந்திய மொழியில் - அதுவும் நம்முடைய தமிழ் மொழியிலேயே முழுவதும் மொழியாக்கம் செய்து தந்த பெருமை - அந்தப் பெருமையை நாமெல்லாம் பெற்று மகிழ்கின்ற இந்த நல்ல வாய்ப்பான நேரத்தில் இல்லை என்றாலுங்கூட - அந்தப் பெரும் மொழிப்புலவர் ஜமதக்னி அவர்களுக்கு தமிழ்ச் சமுதாயம், இலட்சிய வெறிகொண்ட இளைஞர் சமுதாயம், தொழிலாளர் வர்க்கம் என்றென்றும் தன்னுடைய பாராட்டுக்களையும், நன்றியையும் காணிக்கையாக்கத் தயாராக இருக்கின்றது.

இந்த நூலை வெளியிடுவதற்காக நம்முடைய நாகநாதன் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பற்றி இங்கே பேசிய முனைவர் பேராசிரியர் ஜெகதீசன் குறிப்பிட்டார் என்று கருதுகிறேன்.

நான் என்றோ ஒருநாள் அவரோடு பழகுகிறவன் அல்ல. ஒவ்வொரு நாளும் காலையில் அண்ணா அறிவாலயத்தில் வாக்கிங் செல்லுகிற நேரமெல்லாம் எனக்குத் துணையாக வருகின்றவர் நாகநாதன். யார் வந்தாலும் வராவிட்டாலும் நாகநாதன் வரத் தவறுவதில்லை. அப்படி நடந்த நேரத்திலேதான் நாகநாதன் என்னிடத்தில் இந்த நூலைப் பற்றிப் பல நேரங்களிலே விளக்கியிருக்கிறார். அது அச்சிலேற்றப்பட முடியாமல், அச்சியேற்றப் பட்டாலும் வெளிவர முடியாமல் ஒரு தயக்கம். ஒரு இடர்ப்பாடு ஏற்பட்டிருப்பதை என்னிடத்தில் எடுத்துக் கூறியிருக் கின்றார். அதற்கு ஏற்ப, அவர் விடுத்த விண்ணப்பம்; நம்முடைய தமிழ்க்குடிமகன் அவர்களுடைய துறையிலே தேங்கிக் கிடக்கிறது என்று செய்தி என்னிடத்திலே சொல்லப் பட்டது. தேங்கிக் கிடப்பதை அறிந்து, தமிழ்க் குடிமகனிடத்திலே நானே கேட்டு, தேக்கத்தைப் போக்கி, எல்லோருடைய ஏக்கத்தையும் போக்குகின்ற அளவிற்கு இன்றைக்கு இந்த 'மூலதனம்' வெளியிடப் பட்டிருக்கின்றது.

தமிழ்க்குடிமகன் அவர்கள் நான் சொன்னவுடன், உடனடியாக செயல்பட்டு இந்தப் பரிந்துரையைச் செய்து நிதிநிலை அறிக்கையிலேயே நாகநாதனுடைய முயற்சிக்காக ஒரு ஐந்து இலட்ச ரூபாயை அரசின் சார்பாக வழங்குகின்ற அந்த நிலையை ஏற்படுத்தியிருக்கின்றார்.

### எது மூலதனம்? ஏங்கல்ஸ் விளக்கம்

'மூலதனம்' என்கின்ற இந்த நூலுக்கு முகவுரை அந்தக் காலத்திலே எழுதியவர், 1886-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் ஐந்தாம் நாள், 'மூலதனம்' முகவுரை எழுதியவர். ஆங்கிலப் பதிப்புக்கு முகவுரை எழுதியவர் 'பிரடரிக் ஏங்கல்ஸ்' அவர்கள் ஆவார்கள்.

அவர் குறிப்பிடுகிறார்.

"மூலதனம் (Das Capital) ஐரோப்பா கண்டத்தில் பாட்டாளி வகுப்பினரின் விவிலியம் (கிறித்துவ மறைநூல்) என அழைக்கப்படுகிறது. ஜெர்மனியிலும், சுவிட்சர்லாந்திலும் மட்டுமின்றி; பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம் மற்றும் அமெரிக்கா - மேலும் இத்தாலியிலும், ஸ்பெயினிலும் கூட இந்த நூலில் மேற்கொள்ளப்பட்டுள்ள முடிவுகள் பாட்டாளி வகுப்பினர் இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளாக மலர்ந்துவருகின்றன".

- என்று ஏங்கல்ஸ் 1886-ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எழுதிய முகவுரையிலே குறிப்பிடுகின்றார்.

மேலும் 'மூலதனம்' என்ற அந்த நூலைப் பற்றி ஏங்கல்ஸ் குறிப்பிடும்பொழுது :

"மார்க்சியக் கண்ணோட்டத்தில் மூலதனம் என்றால் என்ன என்பது பற்றிக் குறிப்பிட வேண்டியுள்ளது. பொதுவான கருத்தில் ஏதாவது ஒருவகையான உடைமை உள்ளவர்கள் எல்லாம் முதலாளிகள் அல்லது மூலதனக்காரர்கள் என்று கருதப்படுகிறார்கள்.

இதன் அடிப்படையில் சுயமாக உழைக்கும் சிறு வர்த்தகர்கள் - கடைக்காரர்கள், சிறுபட்டறை உரிமையாளர்கள் எல்லாம் முதலாளிகள் என்று அழைக்கப்படுகின்றனர்.

இவர்களிடத்தில் சிறிதளவு உடைமை உள்ளது என்பது உண்மைதான்.

ஆனால், அவர்களும் உழைப்பில் ஈடுபடுகின்றனர். இவர்களின் உடைமை பிரதானமாகப் பிறரைச் சுரண்டுவதன் மூலம் பெருகும் மூலதனமாகச் செயல்படவில்லை.

அதேபோல் பெட்டியிலே பூட்டி வைக்கப் பட்டுள்ளது மூலதனமாகாது.

வட்டி வியாபாரமும் மூலதனமாகாது.

சாதாரண வட்டிக்கடன் பிரதானமாக அவ்வப் போது ஏற்படும் செலவுக்காக வாங்கப்படுவதுதான். இவைகள் எல்லாம் உழைப்பைச் சுரண்டும் மூலதனமாகாது. வங்கிகள். இன்சூரன்ஸ், நிறுவனங்கள் மூலம் முதலாளிகள் மூலதனத்தின் ஒரு பகுதியைப் பெறுகின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் மூலதனம் என்பது மனித உழைப்பைச் சுரண்டுவதில் ஈடுபடுத்தப்படும் பணத்தைத்தான் குறிக்கிறது".

மனித உழைப்பைச் சுரண்டுவதில் ஈடுபடுத்தப்படும் பணத்தைத்தான் 'மூலதனம்' என்பது குறிப்பிடுகிறது என்ற சீரிய செழுமிய கருத்தை 'மூலதனம்' என்கின்ற மொத்த நூலுக்கும் ஒரே ஒரு வரியில் ஏங்கல்ஸ் அவர்கள் பொருள் விளக்கம் தந்து, நம்மையெல்லாம் சிந்தனையிலே ஆழ்த்துகின்றார்.

### மதத்தை அபினி என்றவர் பிறந்தது மதகுருமார் நிறைந்த ஊரில்

இத்தகைய அருமையான ஒரு தத்துவ நூலை அரும்பாடுபட்டுத் தந்த கார்ல்மார்க்ஸ் அவர்கள் எங்கே பிறந்தார். பொதுவுடைமைப் பூங்கா என்று வர்ணிக்கப்படுகின்ற ரஷ்யாவிலா? அல்லது செஞ்சீனத்திலா? அல்ல. ஜெர்மனியிலே 'ட்ரியர்' என்ற ஊரில் பிறந்தார். அந்த ஊர் புரோகிதர்களின் அடைக்கல ஸ்தானமாகவும், வைதீகத்தின் மூலஸ்தானமாகவும் இருந்த ஊர்.

காரல் மார்க்ஸ் பிறந்த ஊரிலிருந்து, கிறிஸ்தவ தேவாலயங்கள், மடங்கள், மத நிறுவனங்கள், பாதிரிமார்களின் உறைவிடங்கள் முதலியவற்றைப் பார்த்து "கெதே" என்ற ஜெர்மானியக் கவிஞன் பிரமித்துப் போனதாகக் கூறுகிறான்.

அவ்வளவு மதகுருமார்கள் நிரம்பிய ஊரில் காரல் மார்க்ஸ் பிறந்தார். இப்படி மத ஆதிக்கம் நிறைந்து விளங்கிய 'ட்ரியர்' என்னும் ஊர் காரல் மார்க்ஸ் அவர்களுடைய ஊரை மட்டுமல்ல; அவரது மூதாதையர்கள் யூதர்கள் என்பதையும் உலகத்திற்குச் சொல்கிறது. அவர்களுடைய பரம்பரைத் தொழில் - காரல் மார்க்சின் மூதாதையர்களின் பரம்பரைத் தொழில் இங்கே நம்முடைய ஆனைமுத்து அவர்கள் குறிப்பிட்டார்களே, அந்தப் பெயரையே மாற்றிவிட்டார்கள் என்று - காரல் மார்க்சுடைய பரம்பரைத் தொழில் புரோகிதம்.

ஆனால், காரல் மார்க்சின் தந்தை ஹிர்ஷெல் மார்க்ஸ் வழக்கறிஞர் தொழில் செய்தார். அப்படி அவர் வழக்கறிஞர் தொழில் செய்வதை யூதர்களே

தடுத்தார்கள். யூதர் என்பதால் காரல் மார்க்ஸின் தந்தைக்கு வழக்கறிஞர் தொழிலில் போதிய வருவாயும் கிடைக்கவில்லை. அதன் காரணமாக 1821-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 24-ஆம் தேதி ஹிர்ஷெல் மார்க்ஸ் யூதனாக இருந்து வழக்கறிஞர் தொழில் நடத்தத் தடை இருக்கின்ற காரணத்தால், வருமானம் இல்லாத காரணத்தால், யூதனாக இருப்பதனால் தான் வழக்கறிஞர் தொழிலுக்குத் தடை என்ற கேள்வியை எழுப்பி, கிறிஸ்தவ மதத்திற்கு மாறினார்.

அவர் அப்படி மாறிய பிறகு, ஓராண்டுகாலம் கடந்த பிறகு, அவருடைய மனைவியும் கிறித்துவ மதத்திற்கு மாறினார். இப்படி மதஉணர்வு பெருகியிருந்த ஊரிலும் மதம் மாறிய பெற்றோர்கள் இடையிலும் பிறந்து வளர்ந்த காரல் மார்க்ஸ்தான் பின்னாளில், "மதம் மக்களுக்கு அபினி" என்று குறிப்பிட்டார் என்று வரலாற்று ஆசிரியர்கள் புகழ்ந்து கூறுகின்றார்கள்.

இவர் ஆரம்பத்திலே பத்திரிகைத் தொழிலில்தான் ஈடுபட்டார். இவர் பிறந்த அந்தப் பிரதேசத்திற்குப் பெயர் ரைன்லாந்து. ரைன்லாந்து என்கின்ற அந்தப் பிரதேசத்தின் பெயரை வைத்து, "ரைன்லாந்து கெஜட்" என்கின்ற ஒரு பத்திரிகையில் அவரும், அவருடைய நண்பர்களும் அந்தத் தொழிலில் ஈடுபட்டு அதைத் தொடங்கினார்கள். இந்தப் பத்திரிகை 1812-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாள் தொடங்கப்பட்டது.

படிப்பை முடித்துவிட்டு, வேலையில்லாமல் இருந்த காலத்தில், இந்தப் பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரைகளின் காரணமாக, அந்தப் பத்திரிகையும் காரல் மார்க்சினுடைய பெயரும் மிகப் பெரும் புகழுக்கு உள்ளாயின.

ஆனால், அந்தப் பத்திரிகையினுடைய மதிப்பு உயர்ந்த பிறகு, ஜெர்மானிய அரசு அவர்மீது ஒரு கண் வைக்கத் தொடங்கியது. காரணம், அரசைக் கண்டித்து, அரசினுடைய கொள்கைகளைக் கண்டித்து, அதனுடைய திட்டங்களைக் கண்டித்து, அவர் எழுத அவர்மீது ஜெர்மானிய அரசினுடைய கண்பட்டது. எனவே. பல அடக்குமுறைகளுக்கு அவர் ஆளாகவேண்டியிருந்தது.

### மார்க்ஸின் பத்திரிகைக் கொள்கைதான் பெரியாரின் பத்திரிகைக் கொள்கையும்

அந்தப் பத்திரிகையிலே அவர் எடுத்தவைத்த எண்ணம் நம்முடைய சிந்தனையில் எல்லாம் என்றென்றும் பதியவேண்டிய ஒரு எண்ணமாகும்.

"அரசாங்கத்திற்காக மக்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணம் கூடாது. மக்களுக்காகத்தான் அரசாங்கம் இருக்கிறது என்ற எண்ணம்தான் தேவை" என்று அவர் குறிப்பிடுகிறார்.



இதற்குப் பிறகு ரைன்லாந்து பத்திரிகையை அவர் நிறுத்திவிட்டு, வேறு இடம் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது, அரசின் கெடுபிடிகளால். பத்திரிகையின் கொள்கைகளைப் பற்றி இன்னொரு கருத்தையும் மார்க்ஸ் வெகு அழகாகச் சொல்கிறார்.

"சந்தாதாரர்கள் பத்திரிகையின் கொள்கையை நிர்ணயிக்கக்கூடாது. பத்திரிகைதான் சந்தாதாரர் களின் கொள்கையை நிர்ணயிக்க வேண்டும்".

சந்தாதாரர்கள் என்றால் வாசகர்கள். தந்தை பெரியார் அவர்கள் 'குடியரசு' இதழ் தொடங்கி நடத்திக் கொண்டிருந்தபொழுது, இது விற்குமா? இதை மக்கள் ஏற்பார்களா? இந்தக் கருத்தை மக்கள் ஜீரணம் செய்ய முடியுமா? என்றெல்லாம் கேட்ட நேரத்தில் பெரியார் சொன்னாராம்:

"விற்கிறதோ இல்லையோ, நான் 'குடியரசு' பத்திரிகையை அச்சடிப்பேன். எவனும் வாங்கு கிறானோ இல்லையோ, அதைப்பற்றிக் கவலை யில்லை. ஒரே ஒரு பத்திரிகையாவது அச்சடித்து அந்த ஒரு பத்திரிகையை நான் ஒருவனே திண்ணையிலே உட்கார்ந்து நானே படித்துப் பார்ப்பேன்" - என்று தந்தை பெரியார் சொன்னார்.

இதே கருத்தைத்தான் காரல் மார்க்ஸ் சொல்கிறார். வாசகர்கள் பத்திரிகையின் கொள்கையை நிர்ணயிக்கக் கூடாது. பத்திரிகை தான் வாசகர்களின் கொள்கையை நிர்ணயிக் கவேண்டும் என்று மார்க்ஸ் சொன்னதாக சாமிநாத சர்மா அவர்களின் புத்தகத்திலே வெகு அழகாக அவர் மார்க்சின் இந்த சிந்தனா விலாசத்தைச் சுட்டிக் காட்டுகின்றார்.

காரல் மார்க்சைப் பற்றி நம்முடைய பேராசிரியர்கள் இங்கே பேசும்பொழுது, திராவிட இயக்கத்திற்கும், காரல் மார்க்சினுடைய கொள்கை களுக்கும் உள்ள உடன்பாடு - ஏன்? கம்யூனிச இயக்கத்திற்கும், திராவிட இயக்கத்திற்கும் உள்ள உடன்பாடு - அதைப்பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் பல நேரங்களிலே ஆற்றிய உரைகள், எழுதிய எழுத்துக்கள் இவைகளையெல்லாம் சான்றுகளாக ஆக்கிக் காட்டினார்கள். அண்ணா அவர்கள் காரல் மார்க்சைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்.

அண்ணா அவர்கள் காரல் மார்க்ஸைப்பற்றிக் குறிப்பிடும்போது சொல்கிறார்;

"வளமையினருகே வறுமை; பலத்தினருகே பயம்; இவை ஏன்? இந்தக் கேள்வி சாதாரண மக்களையல்ல; கருத்துலகின் காவலர்களாக விளங்கியவர்கள் அனைவரையும் கதிகலங்க அடித்தது. கிமு.நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த பிளேட்டோ என்னும் கிரேக்கத் தத்துவ ஞானியின் காலத்திலிருந்து, கிபி.பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த காரல் மார்க்ஸ் காலத்திற்கு முன்பு வரை மக்களின் நல்வாழ்வுக்கான ஆராய்ச்சிகள் அனைத்தும் அறிவுக்குப் பொருத்தமான முடிவை அளிக்கவில்லை.

| | | |
|---|---|---|
| ஆண்டை | - | அடிமை |
| உயர்ந்தவன் | - | தாழ்ந்தவன் |
| மதகுரு | - | பக்தன் |
| மிராசு | - | உழவன் |
| பிரபு | - | பணியாள் |
| முதலாளி | - | தொழிலாளி |

இவர்களிடையே ஏற்பட்ட போராட்டங்களின் வரலாற்றை நன்றாக அலசிப்பார்த்தவர் காரல் மார்க்ஸ்.

பிரபுக்கள் - முதலாளிகளின் கொடுங் கோன்மை வெகுநாளைக்கு நிலைக்காதென் பதையும், உழைப்பாளிகளின் முயற்சியால்தான். உழைப்பாளர் உலகு மலரும் என்பதையும் அவர் எடுத்துக்காட்டினார்.

அவருடைய தெளிந்த முடிவு ஒடுக்கப்பட்ட உழைப்பாளர்களை ஒன்று சேர்த்தது; நலிவுற்ற ஒடுக்கப்பட்ட உழைப்பாளர்களை ஒற்றுமைப் படுத்தியது;" - என்று அறிஞர் அண்ணா அவர்கள் காரல் மார்க்ஸைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

### காரல் மார்க்ஸ் வாழ்க்கை பற்றி சாமிநாத சர்மாவின் கவிதை

இத்தகைய பெருமை வாய்ந்த காரல் மார்க்ஸ் அவர்களுடைய வாழ்க்கை எப்படி இருந்தது என்பதை சாமிநாத சர்மா தன்னுடைய நூலில் கவிதை வரிகளில் வந்ததைச் சுட்டிக்காட்டுகிறார்.

"அவன் மேகங்களுக்கு மத்தியில் தன் இலட்சியத்தைப் பொருத்தி வைத்துக்கொண்டான்.

ஆனால், புழுதி மண்ணிலேதான் அவன் வாழ்க்கையை நடத்த வேண்டியிருந்தது.

அன்றாடம் என்ன தேவையோ அதுதான் அவனுக்குக் கிடைத்துக் கொண்டிருந்தது.

நாலா பக்கங்களிலும் நெருக்கப்பட்டான். அவனை வறுமை வாட்டியது. தேவை திணறச் செய்தது. அவன் பொதுவாக வாழ்க்கையிலே புடமிடப்பட்டான். புடம் போடப்பட்டான்".

- இது சாமிநாத சர்மா எழுதிய நூலில் காணப்படும் கவிதை வரிகள்.

உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். என்னையும் அந்த உணர்வுகளில் இணைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

திராவிட இயக்கத்துக்கும், கம்யூனிஸக் கொள்கைகளுக்கும் உள்ள உடன்பாடு இன்று நேற்றல்ல. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட உறவாகும். 'திராவிடர்' என்றாலே உழைப்பாளிகள்தான், பாட்டாளிகள்தான் என்ற சித்தாந்தத்தை உண்மை தத்துவத்தை தந்தை பெரியார் அவர்கள் எடுத்துரைத்திருக்கிறார்கள். மே தினங்கள் கொண்டாடப்படுகின்ற நேரத்தில் எல்லாம் உரையாற்றிய அறிஞர் அண்ணா அவர்கள் திராவிடர் என்றாலே உழைப்பாளிகள்தான் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த இயக்கத்தில் சிறுபிராயம் முதல் நான் ஈடுபட்ட நேரத்தில் - நேற்றைக்குக்கூட ஒரு விழாவிலே தம்பி துரைமுருகன் பேசும்போது குறிப்பிட்டார். "பெரியாரும் அண்ணாவும் மாத்திரம் இல்லாமல் இருந்திருந்தால், கலைஞர் தமிழ்நாட்டில் ஒரு கம்யூனிஸ்ட் தலைவராகவே ஆகியிருப்பார்" என்று அவர் குறிப்பிட்டார்.

காரணம், பெரியாருடைய திராவிட இயக்கக் கொள்கைகளும், சமுதாயக் கொள்கைகளும், சுயமரியாதை கொள்கைகளும், அண்ணா அவர்களுடைய தமிழ் உணர்வு நிலையும் என்னை ஈர்த்துவிட்ட காரணத்தால், முழுக்க முழுக்க கம்யூனிஸ்ட்டாக நான் ஆகிவிடவில்லை என்பதை அவர் குறிப்பிட்டார். கம்யூனிஸ்ட் என்ற பெயரில் நான் இல்லாவிட்டாலும்கூட நான் ஒரு பொதுவுடைமைக்காரன்தான். நான் ஒரு கம்யூனிஸ்ட்தான். அதனால்தான் நான் 1983-ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு முன்பு நான் எழுதிய குறளோவியத்தில் காரல் மார்க்சினுடைய வாழ்க்கையை எழுதவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது.

83 - ஆம் ஆண்டு எழுதி வெளியிடப்பட்டது குறளோவியம். அந்த குறளோவியத்தில் காரல் மார்க்ஸைப் பற்றி எழுதியுள்ள வரிகளை மாத்திரம் படித்துக் காட்டுகிறேன்.

165 ஆண்டுகளுக்கு முன்பு - இது 15 ஆண்டுகளுக்கு முன்பு எழுதியதால் 165 என்று குறிப்பிடுகின்றேன். ஆனால், உள்ளபடியே 180 ஆண்டுகளுக்கு முன்பு - இன்றைய நிலையிலே வசித்தால்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு வானளாவிய சிந்தனையை நிறுத்திக்கொண்டு பூமிக்குள் கல்லறையாகிவிட்ட சமதர்மச் சிற்பி காரல் மார்க்சின் சித்தாந்தங்களைப் பற்றித் தெரிந் கொண்டிருக் கிறோம். அவனது பொதுவுடைமைச் சிந்தனை களைச் செயலாக்கும் குறிக்கோள் என்றைக்கு வெற்றி பெறும் என்ற ஆர்வத்தோடு உழைக்கும் கூட்டம் இன்னமும் இந்த உலகின் பல நாடுகளில் போர்க்கொடி உயர்த்திக்கொண்டு இருக்கின்றது.

### கார்ல் மார்க்சின் வாழ்க்கைத் துணைநலமாக விளங்கிய ஜென்னி

அந்த மாமனிதன் - சாதாரணக் குடும்பத்தில் பிறந்து மிகச் சாமானிய வாழ்வு வாழ்ந்து வறுமையின் கோரப்பிடியில் அடிக்கடி சிக்கி, அறுபத்தி ஐந்தாவது வயதில் கண்மூடும் வரையில் தனது கடமையை ஓய்வின்றி ஆற்றியதற்கு ஏங்கல்ஸ் போன்ற உற்ற நண்பர் ஒருவர் இருந்தபோதிலும் அருகிலேயே இருந்து இறுதிவரையில் இல்லறம் நடத்திய மாதரசி ஜென்னி என்னும் குடும்ப விளக்கின் பெருமையைப் பலர் அறியமாட்டார்கள்.

செல்வக் குடும்பத்தில் உதித்தவள், அழகில் மிகச்சிறந்தவள், அவளை மணக்கப் பலர் தவித்தனர். ஆனால் அவளோ, வளமற்ற குடும்பத்தில் பிறந்த - தனது அழகிற்குப் பொருத்தமற்ற - தன்னை விட நான்கு வயது குறைவான காரல் மார்க்சையே மணப்பேன் என்று ஏழு ஆண்டுகள் காத்திருந்தாள். அவ்வாறே மணந்து கொண்டாள். கணவன் நாடு கடத்தப்பட்ட போதெல்லாம் அவளும் அவனுடன் சென்றாள். அவன் கைது செய்யப்பட்ட போது அவளும் கைது செய்யப்பட்டாள்.

அந்தப் பெண்மணி ஜென்னி தங்களின் குடும்ப நண்பருக்கு எழுதிய மடல் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறாள்:

"எனக்குத் தாங்க இயலாத மார்பு வலி - முதுகு வலி - குழந்தைக்குப் பால் கொடுக்க ஒருத்தியை ஏற்பாடு செய்யக்கூட கையில் போதுமான பணமில்லை. என் மார்பு வலியைப் பொறுத்துக் கொண்டு நானே குழந்தைக்குப் பால் கொடுத்தேன். குழந்தைக்கு வலிப்பு நோய் ஏற்பட்டு, அதனால் என் மார்பு கடியுண்டு ரணமாகி குருதி வடியத்தொடங்கியது. அதனால் பாலும் குருதியும் கலந்து அது குடிக்க வேண்டியிருந்தது. அந்த நிலையில் கடன்காரர்கள் வீட்டுக்குள் நுழைந்து எங்கள் துணிமணிகள், குழந்தைகளின் தொட்டில் விளையாட்டுப் பொம்மைகள் அனைத்தையும் ஏலம் போடுவதற்கு எடுத்துக்கொண்டார்கள். மூன்று நாள் சாவுடன் போராடிய குழந்தை இறந்துவிட்டது. அதன் உடலைப் பின்புறத்து அறையில் மூடி வைத்துவிட்டு, நாங்களும் மற்ற குழந்தைகளும் முன்புறத்து அறையில் இரவு முழுவதும் தரையில் படுத்துக்கிடந்தோம். விடிந்தால் அந்தக் குழந்தைக்கு ஒரு சவப்பெட்டி தயார் செய்யக்கூட எங்களால் முடியவில்லை.



நான் மட்டும் தனிமையில் இந்தத் துன்பங்களை அனுபவிக்கவில்லை. ஒருவகையில் நான் கொடுத்து வைத்தவள். என் கணவர்தான் எனக்கு எல்லாம் - அவர் என் பக்கத்திலேயே இருக்கிறார் என்பதே எனக்கு ஆறுதல். நான் அவருடன் அவருக்குத் துணையாக இருப்பதே என் துன்பங்களுக்கெல்லாம் பரிகாரமாகக் கருதுகிறேன். ஆனால், என்னுடையவரிடம் பல வகையிலும் ஆதாயம் பெற்றவர்களில் ஒரிருவரே உதவிக்கு வருகின்றனர். அதை நினைக்கும்போது என் நெஞ்சம் நெருப்பாகிறது. உதவியற்ற நிலையிலும் கடமையாற்றிடும் அவருடன் துணையாக இணைந்து நிற்பதே எனக்கு இன்பமல்லவா?"

இன்று உலகத்தின் கண்கள் எல்லாம் எந்தக் கருத்துக்களைப் படித்திடத் துடிக்கின்றனவோ அந்தக் கருத்துப் புதையலுக்குச் சொந்தக்காரனான காரல் மார்க்சின் இல்வாழ்க்கையில் விளைந்த துன்ப துயரங்கள் ஒன்று இரண்டல்ல - ஓராயிரம் - அத்தனையையும் தாங்கிக்கொண்டு அவனையும் தாங்கி நின்ற அந்தத் தாய்க்குலத்துத் திருச்சுடர் ஜென்னியை "வாழ்க்கைத் துணைநலம்" என்று வாயார, மனமார வாழ்த்தவேண்டாமோ?

அருமையான புதையல் போன்ற ஒரு கருவூலம் போன்ற நூலினை நமக்கெல்லாம் தந்துள்ள தம்பி நாகநாதனை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இந்த நூலைத் தமிழாக்கித் தந்துள்ள ஜமதக்னி அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். சிறைவாசத்திலே பல ஆண்டுக்காலம் இருந்தவர்; தியாக சீலர்; தான் மாத்திரமல்லாமல் தன்னுடைய குடும்பத்தையே இந்திய நாட்டு விடுதலைக்காக அர்ப்பணித்தவர். அவருடைய அருமைச் செல்வி சாந்தி அவர்களும், சாந்தியினுடைய அருமைக் கணவர் நாகநாதனும் அந்த தியாகசீலருடைய புகழைப் பரப்புகின்ற வகையில் அவர் பெரும்பாடு பட்டு நாலைந்து ஆண்டுகள் தொடர்ந்து எழுதி எழுதிக் குவிந்த தொழிலாளர்களுடைய இலக்கியத்தை இன்றைக்கு வெளியிட முன்வந்தமைக்காக என் சார்பிலும், உங்கள் அத்தனைப் பேருடைய சார்பிலும் நன்றியையும், பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் அவர்களுக்குத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

- ஜமதக்னி மொழிபெயர்த்த காரல்மார்க்சின் நூல்களை வெளியிட்டு 2.5.98 அன்று முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து.

★★★

# தொழில்



இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்தி ரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்.
பிரம தேவன் கலையிங்கு நீரே!.

மண்ணெ டுத்துக் குடங்கள் செய்வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!
எண்ணெய், பால்நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்;
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே!

பாட்டுஞ் செய்யுளுங் கோத்திடு வீரே!
பரத நாட்டியக் கூத்திடு வீரே!
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே!
நாட்டி லேயறம் கூட்டி வைப்பீரே!
நாடும் இன்பங்கள் ஊட்டி வைப்பீரே!
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவிர் நீரே!

- பாரதியார்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



# தமிழரசு









## ஒரு சொல் கேளீர் !

அன்பார்ந்த 'தமிழரசு' வாசகப் பெருமக்களே! - விற்பனையாளர்களே! - விளம்பரதாரர்களே! - வணக்கம்!

1970-ல் துவக்கப்பட்ட உங்கள் 'தமிழரசு' ஏட்டின் 28ஆம் ஆண்டுப் பயணம் இனிதே நிறைவடைகிறது.

பவளவிழாக் காணும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் அன்று வெளியிடப்பட்ட தமிழ் - ஆங்கிலத் தமிழரசு, எப்போதும் போல மாவட்டச் சிறப்பிதழை மணக்க மணக்கத் தொடர்ந்து வெளியிட்டு மகிழ்ந்திட விருக்கின்றது.

புதிதாக மலர்ந்த மாவட்டங்களில் ஒன்றான திருவாரூர் மாவட்ட இதழை சிறப்பிதழாக வெளியிட்டுள்ளோம். அடுத்த இதழிலும் ஆரூர்ச் செய்திகள் தொடரும்; அடுத்தடுத்து மற்ற மாவட்டச் சிறப்பிதழ்களும் தொடர்ந்திடும். வாழ்த்துங்கள்!!

- ஆசிரியர்


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2029
வைகாசி
மே 16-31, 1998
மலர் : 28 இதழ்:22
விலை ரூ.3


### திருக்குறள்

*சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தி னூஉங்கு*
*ஆக்கம் எவனோ உயிர்க்கு*

சிறப்பையும், செழிப்பையும் தரக்கூடிய அறவழி ஒன்றைத்தவிர ஆக்கமளிக்கக் கூடிய வழி வேறென்ன இருக்கிறது ? (கலைஞர் உரையிலிருந்து)



# தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி

## இரண்டே ஆண்டுகளில் இந்தியாவிலேயே மூன்றாம் இடம் - முதல் இடத்தை நோக்கி முன்னேற்றம் !

### கலைஞர் ஆட்சியில் தொழில் தொடங்கச் செய்துகொண்ட ஒப்பந்தங்கள்

| ஒப்பந்த நாள் | தொழிற்சாலையின் பெயர் | முதலீடு (ரூபாய் கோடியில்) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 18-7-96 | ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை | 2,450 | 1998, அக்டோபரில் உற்பத்தி தொடங்கப்படும் |
| 2-8-96 | ஆப்டிகல் ஃபைபர் கேபிள்ஸ் தொழிற்சாலை | 40 | 10.25 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது |
| 29-8-96 | எம்.சி.சி. ஸ்கிராப் அக்ரோ தொழிற்சாலை | 38.42 | 44 ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் - 1999 ஜூனில் உற்பத்தி தொடங்கும் |
| 18-11-96 | வணிக மலர் வளர்க்கும் புளுமிங்பீடோவ் தொழிற்சாலை | 5.42 | 1997 ஜனவரியில் உற்பத்தியைத் தொடங்கி ஏற்றுமதி செய்து வருகிறது |
| 1-1-97 | குருதி சேமிப்புப் பைகள் தயாரிக்கும் தொழிற்சாலை | 14.5 | 12 ஏக்கர் நிலப் பரப்பில் அமையும், இயந்திரங்கள் உபகரணங்கள் இறக்குமதி செய்ய நடவடிக்கை - பணிகள் தொடங்கப் படவுள்ளன |
| 6-1-97 | செயிண்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலை | 450 | கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1999 இறுதியில்உற்பத்தியை தொடங்கும் |
| 3-3-97 | இன்டக்கிரேட்டட் அயர்ன் அண்டு ஸ்டீல் பிளாண்ட் தொழிற்சாலை | 3,300 | திட்டத்திற்கான ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது |
| 10-3-97 | மெட்டல் ஹலைடு லேம்ப் தொழிற்சாலை | 28.6 | 1998 மார்ச்சில் உற்பத்தி தொடங்கப் பட்டுள்ளது |
| 10-3-97 | பி.வி.சி. ரெசின் தொழிற்சாலை | 350 | பணிகள் தொடங்கப் படவுள்ளன |
| 30-5-97 | டவுரஸ் நாவல்டீஸ் லிமிடெட் தொழிற்சாலை | 10.2 | உற்பத்தி தொடங்கப் பட்டுள்ளது |
| 31-5.97 | எஸ்.ஜி. அயர்ன் தொழிற்சாலை (இன்சில் இண்டஸ்ட்ரீஸ்) | 12.5 | உற்பத்தி தொடங்கப் பட்டுள்ளது |
| 2-6-97 | இல்ஜின் ஆட்டோமேட்டிவ் தொழிற்சாலை | 18 | கட்டுமானப் பணிகள் முடிவுற்று இயந்திரங்கள் பொருத்தப்படுகின்றன |
| 9-6-97 | கரூர் யான் லிங்க்ஸ் லிமிடெட் தொழிற்சாலை | 45 | 1998 மார்ச்சில் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது |

#### தொழில்துறையில் தமிழகம் மீண்டும் 3வது இடம்

★ கலைஞர் ஆட்சியில் 1989-90 ஆம் ஆண்டில் 24,067 கோடி ரூபாய் அளவுக்குத் தொழிற்சாலைகளில் உற்பத்தி ஏற்படுத்தி, அகில இந்திய அளவில் மூன்றாவது இடம்.

★ 1991 ஜூலை முதல் 1996 ஏப்ரல் வரை சுமார் 60 மாதங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த முதலீடு 90,609 கோடி ரூபாய் அகில இந்திய அளவில் 5 வது இடம்.

★ கலைஞர் ஆட்சியில் 1998 ஜனவரி வரை இருபதே மாதங்களில் முதலீடு 33,560 கோடி ரூபாய். அகில இந்திய அளவில் 3வது இடம்.

★ இது நாட்டின் மொத்த மூலதனத்தில் 17.6%

ஆதாரம் CMIE

#### ஏற்றுமதி

★ 1991-92ல் ஏற்றுமதி

★ 6,781 கோடி ரூபாய்

★ 1996-97ல் ஏற்றுமதி

★ 18,500 கோடி ரூபாயாக உயர்வு

★ 1997-98ல் 20,000 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது.

★ இது நாட்டின் ஏற்றுமதியில் 17%



| ஒப்பந்த நாள் | தொழிற்சாலையின் பெயர் | முதலீடு (ரூபாய் கோடியில்) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 12-6-97 | ஆட்டோ உதிரி பாகங்கள் தயாரிக்கும் மஹிந்திரா இண்டஸ்ட்ரீஸ் பார்க் லிமிடெட் தொழில்வளாகம் | 150 | 1,200 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்சாலைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. |
| 19-6-97 | ரமணசேகர் ஸ்டீல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை | 10.18 | உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது |
| 16-7-97 | பிஸ் பினால் - ஏ இரசாயனத் தொழிற்சாலை | 250 | பணிகள் தொடங்கப்பட்டுள்ளன |
| 16-7-97 | பை ஆக்ஸியலி ஓரியண்டெட் பாலிபிளான் தொழிற்சாலை | 150 | திட்ட அறிக்கை தயாரிக்கப்படுகிறது |
| 14-8-97 | ஆடைகள் தயாரிக்கும் பாரத் டெக்ஸ் ஃபாஷன்ஸ் லிமிடெட் தொழிற்சாலை | 5.1 | 1997 அக்டோபரில் உற்பத்தி தொடங்கப் பட்டுள்ளது. |
| 12-9-97 | மட்சுசிட்டா தொழிற்சாலை | 59.4 | 2 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் முடியும் நிலை |
| 3-10-97 | கும்ஹோ டயர்ஸ் தொழிற்சாலை | 350 | பணிகள் தொடங்கப்படவுள்ளன |
| 7-1-98 | ஸ்ரீராம் ஆட்டோ காம்போனன்ட்ஸ் லிமிடெட் தொழிற்சாலை | 21 | 1998 ஏப்ரலில் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது |
| 7-1-98 | 100 சதவீதம் ஏற்றுமதியைக் கொண்ட கோழி இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலை | 32 | தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது |
| 7-1-98 | 100 சதவீதம் ஏற்றுமதி செய்யும் ஃப்ரோசன் ஃப்ரெஞ்ச் பிரைஸ் நிறுவனங்கள் | 32 | பணிகள் தொடங்கப்படவுள்ளன |
| 7-1-98 | டேரிம் எண்டர்பிரைசஸ் கம்பெனி | 4 | கட்டுமானப் பணிகள் முடிவடைந்து இயந்திரங்கள் பொருத்தும்பணி நடைபெறுகிறது. |
| 7-1-98 | ஜே.கே.எம். டெரிம் ஆட்டோமேட்டிவ் தொழிற்சாலை | 17 | கட்டுமானப் பணிகள் முடிவடைந்து இயந்திரங்கள் பொருத்தும் பணி நடைபெறுகிறது |
| 7-1-98 | யாம்கோ இண்டஸ்ட்ரீஸ் | 2 | கட்டுமானப்பணிகள் விரைவில் தொடங்கும் |
| 7-1-98 | மார்க்குயூப் இந்தியா தொழிற்சாலை | 36.5 | 3ஏக்கர் நிலப்பரப்பில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன |
| 9-1-98 | நாகார்ஜுனா ரிஃபைனரீஸ் லிமிடெட் தொழிற்சாலை | 3200 | நிலம் வாங்கும் பணி முடிவடையும் நிலை - கட்டுமானப் பணிகள் ஜூனில் தொடங்கும் |
| 9-1-98 | மேண்டோ பிரேக் சிஸ்டம்ஸ் தொழிற்சாலை | 30 | கட்டுமானப் பணிகள் முடிவடைந்து இயந்திரங்கள் பொருத்தப்படுகின்றன |
| 9-1-98 | போஸ் ஹூண்டாய் ஸ்டீல் மேனுபேக்சரிங் தொழிற்சாலை | 44.19 | கட்டுமானப் பணிகள் முடிவடைந்து இயந்திரங்கள் பொருத்தப்படுகின்றன |
| 21-1-98 | டிரான்ஸ்ரூட் இன்டர்நேஷனல் நிறுவனம், சி.சி.எப்., ஐ.எல்.எப்.எஸ் (சாலை மேம்பாடு மற்றும் நிர்வாகத் திட்டம்) | 160 | பணிகள் தொடங்கப்படவுள்ளன |
| 24-2-98 | உயர்தரத் தொழில்நுட்பத் தொழில் பூங்கா. (ஹைடெக் இண்டஸ்டிரியல் பார்க்) | 800 (அடிப்படை வசதிகள்) 12,000 (தொழில் நிறுவனங்கள்) | 2,500 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்யும் பணி ஜூன் மாதத்தில் முடிவடையும் |
| 25-2-98 | பி.வி.சி. ஃபோம் சீட்ஸ் தொழிற்சாலை | 45.69 | 6 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது - கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன |

#### கலைஞர் ஆட்சியில் புதிய தொழில் வளாகங்கள்

திருப்பெரும்புதூர் - 2,469 ஏக்கர் பரப்பளவில்
இருங்காட்டுக்கோட்டை - 1,829 ஏக்கர் பரப்பளவில்
நெமிலி - 2,429 ஏக்கர் பரப்பளவில்
வடமங்கலம் - 1,408 ஏக்கர் பரப்பளவில்
கடலூர் மாவட்டம், சிலப்பிமங்கலம் (தோல் பதனிடும் தொழில்வளாகம்) - 300 ஏக்கர் பரப்பளவில்
மாமண்டூர் - பழமத்தூர் - 860 ஏக்கர் பரப்பளவில்
காஞ்சிபுரம் மாவட்டம் - ஒரகடம் - 2043 ஏக்கர் பரப்பளவில்
வாதராஜபுரம் தொழில் வளாகம் -1989 ஏக்கர் பரப்பளவில்

#### கலைஞர் ஆட்சியில் நடவடிக்கையில் உள்ள புதிய மின் திட்டங்கள்

★ 2,750 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய 20 சிறு மின் திட்டங்கள்

★ 2,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யத் திரவ நிலை எரிவாயுத் திட்டம்.

★ பழுப்பு நிலக்கரி மூலம் முதல் கட்டமாக 500 மெகாவாட் உற்பத்தி செய்யும் திட்டம்.




திரு. **எம். ஆர். மோகன்**, இ.ஆ.ப.
(மாவட்ட ஆட்சித் தலைவர்)

**ஒ**ரு நாடு எத்தகைய வளங்கள் எல்லாம் பெற்றதாக இருக்கவேண்டும் என்பதற்குத் திருக்குறளிலே விளக்கம் காணப்படுகிறது.

ஆனால், ஒரு மாவட்டம் எவ்வாறு அமைந்திடவேண்டும் என்று, எனக்குத் தெரிந்து - எவ்வாறான வளங்களும் நலங்களும் பெற்றதாக அது இருக்க வேண்டும் என்று யாரும் வரையறை செய்து வைத்திருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் ஒன்று, தமிழ்நாடு அரசின் தனிப்பார்வையில், எமது திருவாரூர் மாவட்டம், வருங்காலத்தில் அதற்கான எடுத்துக்காட்டு மாவட்டமாக விளங்கப்போகிறது என்பதை என்னால் மிக உறுதியாக இப்போதே சொல்லமுடியும்.

அண்ணா மறுமலர்ச்சி, நமக்கு நாமே, சமத்துவபுரம் போன்ற அண்மைக்காலத் திட்டங்கள் மட்டுமல்ல; அரசின் எல்லாத் திட்டங்களுமே இலக்கையும் மிஞ்சி விரைந்து நடைபெற்றுவரும் மாவட்டமாகத் திகழ்ந்துவரும் பெருமை இந்தத் திருவாரூர் மாவட்டத்திற்கு உண்டு.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை அவனி அறியச் செய்தது போன்ற பல சிறப்புக்களும் இன்னும் பல தொன்மைச் சிறப்புக்களையும் திருவாரூர் மாவட்டம் ஏற்கெனவே பெற்றிருக்கிறது என்றாலும் கூட, அந்தச் சிறப்புகளெல்லாம் முனையளவும் குறையாத அளவிலே, அரசின் வழிகாட்டுதலோடும் அறிவுறுத்தலோடும் இம் மாவட்டத்தை நிர்வகித்து வரும் பெரும் பொறுப்பு எமக்கிருக்கிறது.

வளர்ச்சி பெற்றுவரும் புதிய மாவட்டம் என்பதால், எந்த ஒரு செயல்பாட்டு நடவடிக்கையிலும் மிகவும் நிதானத்துடன் நாங்கள் அளந்து அளந்தே அடியெடுத்து வைத்து வருகிறோம்.

### சட்டம் ஒழுங்கு

எந்த ஒரு மாவட்டமானாலும் சட்டம் -ஒழுங்கு மிகவும் கவனமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். மாநில நிர்வாகத்திற்கு மகுடம் போன்றது அது.

திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை சட்டம் ஒழுங்கு சீராகவே உள்ளது. திருவாரூர், திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில், இருந்த முரடர்களின் அட்டகாசம், காவல்துறை அதிகாரிகளின் அதிரடி நடவடிக்கைகளால் குறிப்பிடப்படும் வகையில் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிட்டது. ஆகையால், குற்றங்களும் கணிசமாகக் குறைந்துள்ளன.

முத்துப்பேட்டை கந்தூரி விழாவின்போது, முன்பெல்லாம் சட்டம் ஒழுங்கு நிலைமை பரிசோதனைக்கு உள்ளாகி வந்தது. அங்கேயும் இப்போது கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருக்கிறது. கூத்தாநல்லூர், திருத்துறைப்பூண்டி பகுதிகளிலும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட முற்பட்டபோது கூட, தீவிர நடவடிக்கை மேற்கொண்டு கட்டுப்படுத்தினோம். இதற்காக எல்லாத்தரப்பு மக்களுமே ஜாதி, மத பேதமின்றி மாவட்ட நிாவாகத்தைப் பெரிதும் பாராட்டினர்.

அரசியல் உணர்வுகள் அதிகமுள்ள குடவாசலில், அண்மைக்காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்றில் ஏற்பட இருந்த பெரும் சண்டையைக் காவல்துறை அதிகாரிகளே விரைந்து செயல்பட்டுத் தவிர்த்து, அமைதி நிலவச் செய்தனர்; பலருடைய போற்றுதலையும், புகழுதலையும் பெற்றனர்.

### வெள்ள நிவாரணம்

மாவட்ட நிர்வாகம், மக்களுடன் ஒன்றிச் செயல்படுகிறது. இதனால்தான் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட எதிர்பாராத மழைவெள்ளத்தின் போது, நானே நேரில் இந்த மாவட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட சுமார் எழுபது சதவீத கிராமங்களுக்குச் சென்று மக்களிடம் நேரடியாகவே குறைகளை, கண்டும் கேட்டும் அறிய முடிந்தது. ஏழை எளிய மக்களுக்கு ஏற்ற வகையில் உடனுக்குடன் உதவ - திறம்பட சக அதிகாரிகளோடு செயல்பட்டு மக்களைத் திருப்திப்படுத்த முடிந்தது. மழை வெள்ளத்தின்போது 350 உணவு மையங்கள் இப்பகுதியில் விரைந்து அமைக்கப்பட்டன. மக்களிடமிருந்து புகார் வரும்முன்பே அவர்கள் குறைநீக்கிட மளமளவென்று நாங்கள் செயல்பட்டோம்.

அந்த வெள்ளப்பெருக்கின்போது 29,734 குடிசைகள் திருவாரூர் மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்டன. 1,32,146 குடிசைகள் தண்ணீரால் சூழப்பட்டன; அவைகளுக்கான வெள்ள நிவாரணமாக ரூ. 6,93,77,800 செலவிடப்பட்டது.



*என்னைப் பெற்றது*
*திருக்குவளை ஆயினும்,*
*நான் உலகத்தைக் கற்றது*
*திருவாரூரில்தான்!*

- 2.8.92ல், 'முரசொலி' வெளியிட்ட
கலைஞர் கடிதத்திலிருந்து.



பயிர்ச் சேதத்திற்காக மட்டும் ரூ.5,30,99,000 தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வழங்கப்பட்டது.

வெண்ணாறு பிரிவு (Vennar Division), பாசனப் பணிக்காக 1.46 கோடியும், காவிரி பிரிவு ரூ.54 இலட்சமும், மொத்தம் 2 கோடி ரூபாய் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் சரிசெய்து மேம்படுத்திட மட்டும் ரூ.1.1கோடி ஒப்பளிக்கப்பட்டு அதற்கான ஆக்கப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.



*திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர்*

### மாவட்டப் பெருந்திட்ட வளாகம்

திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் விரைவிலேயே தனிப்பட்ட மாவட்டப் பெருந்திட்ட வளாகமாக அமையவிருக்கிறது.

இத் திட்டத்திற்காக 234.78 ஏக்கர் திருவாரூர் அருகில் உள்ள விளமல் கிராமத்தில் இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதில் 88.60 ஏக்கர் நிலம் கோயிலுக்குச் சொந்தமானதாகும். 146.18 ஏக்கர் தனியார் நிலம்.

நிலத்தைக் கையகப்படுத்தும் பணி முறைப்படி தொடங்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

இந்த வளாகத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், காவல்துறைக் கண்காணிப்பாளர் அலுவலகம், மாவட்ட நீதிமன்றம், மாவட்டக் கருவூலம், தமிழ் வளர்ச்சி அலுவலகம், நில அளவைப் பதிவேடு துறை, மாவட்ட வளர்ச்சி முகமை, குடிநீர் வடிகால் வாரியம், முன்னாள் இராணுவத்தினர் நலம் காப்பு அலுவலகம், சமூக நலத்துறை, நுகர்பொருள் வாணிபக் கழகம், ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம், கல்வி ஆணையம், நூலக அலுவலகம், மாவட்ட விளையாட்டு அலுவலகம், கோட்டத் தீயணைப்பு இயக்ககம், மாவட்டத் தொழில் மையம், மாவட்டக் கூட்டுறவுத் துறை, மாவட்டக் கூட்டுறவு வங்கி, வணிக வரித்துறை, புள்ளியியல் துறை மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படவிருக்கும் குடியிருப்புகள் எல்லாம் அடங்கும்.

இதற்கான நிலத்தைக் கையகப்படுத்தும் வகையில் மட்டும் ரூ.1.4 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கிறோம்.

### திருவாரூர் நகர் வளர்ச்சி

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தைப் போலவே, திருவாரூர் நகரின் மேம்பாட்டுக்கான பொது வளர்ச்சிக்கென ஒரு தனித்திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

### குடும்ப அட்டை

நியாயவிலைக் கடைகளில், மக்கள் தேவையான உணவுப் பொருட்களைப் பெறப் புதிய முறையில் குடும்ப அட்டை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது அல்லவா? திருவாரூர் மாவட்டத்தில் குடும்ப அட்டை வழங்குவற்கான ஆரம்பப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றது. அவற்றை அச்சிடும் பணி முடிவடைந்து, அட்டை தயார் செய்யும் பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டிருக்கிறது. இப்பணியை 'எல்காட்' செய்துவிட்டது.

ஒரு மாதத்திற்குள் 2,60,000 குடும்ப அட்டைகள் விரைவில் மக்களுக்கு வழங்கப்படும். அதன்பின் எவ்விதச் சிக்கலும் இல்லாமல் மக்கள் உரிய குடும்ப அட்டைகள் மூலம் தட்டுப்பாடின்றி உணவுப் பொருட்களைப் பெறலாம்.

### மண்ணெண்ணெய் பங்க்

பெட்ரோல், டீசல் பங்க்கைப் போலவே, மண்ணெண்ணெய் பங்க் அமைக்கும் பணியும் முடிவடைந்து திருவாரூர் மாவட்டத்தில் இப்போது நடைபெற்று வருகிறது.

மன்னார்குடி கோட்டத்தைப் பொறுத்து, அந்நகரிலும் கூட இத்தகைய ஒரு பங்கை அமைக்க இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### தொழில்வளம் ஓங்கும்

திருவாரூரைப் பாரம்பரிய நகரங்களில் ஒன்றாகச் சேர்த்துக்கொள்வதற்கான கோரிக்கையும் இப்போது தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது.

அருங்காட்சியகம் ஒன்றையும் திருவாரூர் பெரிய கோயிலான தியாகராசர் கோயிலிலேயே அமைக்க உத்தேசித்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிறந்த சிறப்பினதான இந்த ஜூன் திங்களுக்குள் அழகிய வகையில் அது அமைக்கப்பட்டுவிடும்.

ஒரு மாவட்டத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தொழில்களின் வளர்ச்சி மிகவும் முக்கியமாகும். வேலை வாய்ப்பு, பொருளாதார மேம்பாடு போன்ற பல நன்மைகள் அதனால்தான் அமையும். ஆகவே, திருவாரூர் மாவட்டத்தைத் தொழில் வள்ர்ச்சியில் முன்னேற்றத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொழில் தொடங்குவற்குத் தக்க பல சூழ்நிலையை உருவாக்கிட மாவட்ட நிர்வாகம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அதற்கு அடிப்படைத் தேவையான சாலை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு இப்போது மாவட்டச் சாலைகள் சிறந்த முறையில் அமைக்கப்பட்டு வருகின்றன. திருவாரூர், நீடாமங்கலம், திருத்துறைப்பூண்டி நகரப் பகுதிகளில் - போக்குவரத்து நெரிசல் இல்லாதிருக்க "பை-பாஸ்" சாலைகள் அமைக்கவும் திட்டமிட்டிருக்கிறோம்.

அடுத்துத் தேவைப்படுவது, மின்சக்தியாகும். புதிய மாவட்டம் என்பதால், தற்பொழுது சீராக இல்லாமல் இப்பகுதியில் மின்சாரமானது சற்று ஏற்றத்தாழ்வோடு இருந்துவருகின்றது. மிக விரைவில் இதைச் சரி செய்திடத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடுத்ததாகத் தேவைப்படும் அடிப்படை வசதி தண்ணீர் ஆகும். பெருந்தொழில் தொடங்கினால் தேவைப்படும் அளவுக்கு நிறைய தண்ணீர் வேண்டியிருக்கும்; அதை அடுத்து மனித சக்திதான்; அதையும் பரிசீலித்து வருகிறோம்.

புதிய மாவட்டம் என்பதால் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை முன்நிறுத்தி, திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறோம்.

# திருவாரூர் மாவட்டம்

1. மக்கள்தொகை: (1991 கணக்கெடுப்பு)

| | | |
|---|---|---|
| ஆண் | - | 5,67,530 |
| பெண் | - | 5,61,002 |
| மொத்தம் | - | 11,28,532 |

| | | |
|---|---|---|
| வருவாய்க் கோட்டங்கள் | - | 2 |
| வட்டங்கள் | - | 7 |
| உள்வட்டம் | - | 27 |
| வருவாய் ஊர் | - | 575 |
| ஊராட்சி ஒன்றியம் | - | 10 |
| ஊராட்சி | - | 430 |
| நகராட்சி | - | 4 |
| பேரூராட்சி | - | 7 |
| சட்டப்பேரவைத் தொகுதிகள் | - | 7 |
| நாடாளுமன்றத் தொகுதிகள் | - | 2 |
| ரயில் சந்திப்பு நிலையங்கள் | - | 2 |



மன்னார்குடி அருகில் உள்ள கோவில் களப்பால் கிராமத்தில் 'கேஸ்' கிடைப்பதாக அறியப்பட்டுள்ளது. அதைக் கொண்டு திருமக்கோட்டையில், மின் உற்பத்தி செய்யலாமா என்றும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

ONGC யில் தேவைக்குமேல் கிடைக்கும் எரிவாயுவை வீட்டுச் சமையல் வேலைக்குப் பயன்படுத்தவும், தொழிற்சாலைகளில் பயன்படுத்தவும், திருவாரூரில் உள்ள வியாபாரிகளிடம் விருப்பம் கேட்கப்பட்டுள்ளது. ஆனால், அவர்களிடம் இதற்குப் பெரும் அளவில் ஆதரவு இல்லை; ஏனோ தயங்குகிறார்கள்.

'Gail' நிறுவனத்தார் தன் சொந்தச் செலவில் குழாய் மூலம் எரிவாயுவைக் கொண்டுவர முன்வந்துள்ளனர். ஒரு கிலோமீட்டர் குழாய் அமைக்க ரூ.15 இலட்சம் செலவாகும். பயனடைவோர்க்கு, மாதக்கட்டணம், சர்வீஸ் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம், பைப் அமைக்கும் செலவு போன்ற இனங்களின் செலவாகச் சில ஆயிரங்கள் ஆகும்.

கியாஸ் கட்டிங் தொழிற் கூடங்கள் வைத்திருப்போர் சிலர் இத்திட்டத்தின் மூலம் பலனடைய விண்ணப்பித்துள்ளனர். இது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற முறையில் வணிகப் பெருமக்களைச் சந்தித்து, அதன் மூலம் கிட்டும் பலன்களை எடுத்துரைத்து இத்திட்டத்திற்கு ஆதரவு திரட்டிவருகிறேன்.

திருவாரூரில் எம்.ஆர்.எம்.குழாய் மூலம் தனிநபர் வீட்டிற்கும் அதைக் கொண்டுவரும் திட்டமும் உள்ளது.

**ஆலைகளும் சாலைகளும்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், 262 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்து, சம்பா பயிரில் மட்டும் 2,95,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்து சாதனை படைத்துள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில், திருவாரூரிலும், சுந்தரக்கோட்டையிலும், நவீன அரிசி ஆலைகள் நன்முறையிலே இயங்கிவருகின்றன.

புதிய மாவட்டங்கள் தொடங்கியதில் - திருவாரூரைப் பொருத்தவரை தொடக்கத்திலிருந்தே வெகுசிறப்பான வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மற்ற சில முக்கிய அலுவலகங்கள், தேசியத் தகவல் மையம் (NIC-NET) ஆகியவைக்கு உடனடியாக இடம் ஒதுக்கப்பட்டு, நிர்வாகம் செம்மையாகச் செயல்பட்டு வருகின்றது.

திருவாரூர் தனி மாவட்டம் ஆக்கப்பட்டபின், உடனடியாகச் சாலைப்பணிகள் பெரும் அளவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முக்கியச் சாலைகள் முதல் கட்டமாகச் சிறப்பாக அமைக்கப்பட்டு வருகின்றன. இணைப்புச் சாலைகளுக்கும், இப்பகுதியில் முதன் முதலாக மைய சுடுகளவை இயந்திரம் மூலம் தார் மற்றும் ஜல்லிக்கலவை தயார்செய்து லாரிகள் மூலம் எடுத்துச்சென்று நவீன முறையில் சாலைகள் போடப்பட்டுள்ளன.

**மக்கள் குறை கேட்பு**

மக்கள் குறை கேட்கும் நாள், வாரந்தவறாமல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே நடத்தப்பட்டு வருகிறது. ஆர்வத்தோடு அதற்காகவே வருகை தரும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், உடனுக்குடன் பரிசீலிக்கப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அப்படி வரும் மனுக்களில் 50 சதவீதம், தங்கள் சொந்தக் காரணங்களுக் கானவைகளாகவே இருக்கின்றன. எனினும், உடனுக்குடன் மனு மீது அவ்வப்போது உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதால், ஒரே காரணத்திற்காக இரண்டாவது முறை மக்களால் மனு செய்யப் படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, மிகவிரைவிலேயே, தமிழகத்தில் உள்ள குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்ற மாவட்டங்களில் முதலிடம் வகிப்பதாகத் திருவாரூர் மாவட்டம் திகழ்ந்திடப்போவது உண்மை - வெறும் புகழ்ச்சியில்லை!





# பரவசமூட்டும் பழைய நினைவுகள்

இராம. அரங்கண்ணல்



சிரித்த முகத்தோடு நகைச்சுவைபாகப் பேசும் நண்பர் தென்னனோடு தென்படுவார் என் சகோதரர், திருவாரூரில் சிலபல ஆண்டுகளுக்கு முன்பு! அந்தச் சகோதரர் 'குடியரசோ' 'திராவிட நாடோ' 'பச்சையட்டைப் பகுத்தறிவோ' தான் இருக்கும் கலைஞரது கரங்களில்!

சுயமரியாதைக்காரர்கள் என்றால் உறவினர் உள்பட ஊரார் எல்லாம் முகஞ்சுளித்த காலம். நமக்கென்று ஒரு மரியாதையே கிடையாது என்று அலட்சியப்படுத்தப்பட்ட நாட்கள் அவை. அணாக்கள்தான் பையில் இருக்குமேயொழிய ரூபாய் நோட்டுகளைப் பார்க்கமுடியாத வயது. பத்தாவது வரை படித்த பிள்ளை ஏதாவது உத்யோகத்தைத் தேடக்கூடாதா என்பது அக்காக்களின் கவலை. 'எங்கே கூட்டம்?', 'எப்போது நாம் கூட்டம் போடலாம்!' என்பதே இலட்சியமாகச் சுற்றுவார், கலைஞர்!

'முரசொலி' எனும் பெயரில் திங்களுக்கொரு 'பிட் நோட்டீஸ்' போட்டு ஊரெல்லாம் வழங்குவார்; தமிழ் நாடெங்குமுள்ள முக்கியமானவர்களுக்குத் தபாலிலும் போகும். அச்சடிக்கவும் தபால் செலவுக்கும் எப்படியெப்படியெல்லாம் நிதி வசூல் செய்தார்கள் என்பதை எண்ணினால் ரசமான காட்சிகளாகக் கண்முன் வருகின்றன அவை! சூடுபறக்கும் 'முரசொலி'யில். அப்போது, சிதம்பரம் கோயிலில், ஏதோ ஒரு விழா. என் சகோதரர் எழுதினார், முரசொலியில் படிப்போர் ரசிப்பர். நடையழகு அப்போதே மிளிரும். இன்றைய 'விடுதலை' ஆசிரியர் தோழர் கி.வீரமணி - அன்று சிறுவர் - அதை அப்படியே படித்து ஒப்புவித்துக் கைத்தட்டுதலைப் பெறுவார், பல மேடைகளில் அன்று.

கூட்டங்கள் நடத்த வசூலுக்குச் செல்வார் இவர். காங்கிரஸ்காரனாயிருந்து அவருடைய சகோதரனாக ஆனபிறகு நானும் செல்வேன். ஆரூரில் ஒரு பணக்காரர். நீதிக்கட்சிக்கு மிகவும் வேண்டியவர். "ஒரு ரூபாயாவது எப்படியும் கொடுப்பார்!" என்பது துணிச்சல்காரரான தென்னன் கணக்கீடு. போனோம் அவரிடம்.

நோட்டை நீட்டினார் என் சகோதரர். அந்தப் பெரிய மனிதர் நாலணாவைக் கொடுத்துக் கையெழுத்திட்டார். என் சகோதரருக்கு எப்போதுமே தன்மான உணர்வு அதிகம். அப்போதைய நிலையில் நாலணாகூடப் பெரிதுதான்! ஆனால் அதை வாங்க மறுத்துவிட்டு, வெளியே வந்தார். வெளியே, அந்தப் பெரிய மனிதருடைய பேத்தி - சிறுமி - ஒரு சிறிய பையை எடுத்துநீட்டி, தான் 'சேர்த்தது' இருப்பதாகவும் எடுத்துக் கொள்ளும்படியும் சொன்னார். இன்றும் மறக்க முடியவில்லை - நமதியக்கம் எப்படியெல்லாம் வளர்க்கப்பட்டது தெரியுமா என்பதை எண்ணும்போது!

டாக்டர் விசயராகவனின் 'ராயல்' சோடாக்கடை! நிழலுக்கு அதுதான் எங்கள் இருப்பிடம். ஏதாவது கூட்டம் என்றால் அங்கிருந்துதான் மேசையும் நாற்காலியும் கிடைக்கும். என் சகோதரர், எங்களைப் போன்றோர் உதவியுடன் தானே தூக்கிச் சென்று போடுவார். ஒரு கூட்டம் நடத்தியதும் ஏதோ பெரிய இலட்சிய சித்தி பெற்றவர் போல் மகிழ்ச்சியடைவார். அப்படியெல்லாம் இந்த இயக்கம் வளரப் பாடுபட்டவர் என்பதால்தான் இன்றும் அந்த வேகத்தைக் காண்கிறோம், கழகம் வளர்ப்பதில் கலைஞரிடம்!

ஒரு சமயம், திருவாரூருக்கு அருகாமையிலுள்ள நன்னிலத்துக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தில் கூட்டம். சகோதரர் ஒரு தோழரோடு போயிருந்தார். (அவருக்கு அண்ணன் தம்பி கிடையாது! அதனால்தான் போலும் எப்போதும் பார்த்தாலும் யாராவதுகூட இருக்கவேண்டியிருக்கிறது!!). கூட்டம் முடிந்ததும் 'வணக்கம்' சொல்லி அனுப்பிவிட்டார்கள் தோழர்கள். கூட வந்தவரிடம் ரயிலுக்குக் காசு இருக்கும் என்பது இவர் நினைப்பு. 'இவ்வளவு அருமையாகப் பேசிய இவனை சும்மாவா அனுப்பியிருப்பார்கள். வழிச்செலவுக்குப் பணம் கொடுத்திருப்பார்கள், என்பது நண்பரின் கணிப்பு.

இரயிலடிக்கு வந்து 'டிக்கெட்'டுக்காகச் சென்றபோதுதான் இருவர் பையும் காலி என்பது ஒருவருக்கொருவர் புரிந்தது. நேரமோ இரவு! இரயில் வர இன்னும் ஒரு மணி இருந்தது. இரண்டு பேரும் சட்டைப் பையில் எவ்வளவு காசு இருக்கிறது என்று தடவினால், இரண்டு பேருக்கும் வேண்டிய டிக்கெட்டை வாங்க ஒரே ஒரு காலணா குறைகிறது. என்ன செய்வது? அந்த நள்ளிரவில் நண்பர்களிருவரும் ரயில் வருவதற்குள் அடுத்த ஸ்டேஷக்கு நடந்துவந்து, ரயிலேறி ஊருக்கு வந்தார்கள்.

என் சகோதரர் கலைஞருக்குத் திருமணம். எங்களுக்கெல்லாம் குதூகலம். சிதம்பரம் இசைமேதை ஜயராமன் அவர்களின் தங்கை, என் சகோதரி, பத்மாவுக்கும் இவருக்கும், சினிமாவில் மட்டுமின்றி சங்கீதத் துறையிலும் பெயர் பெற்ற சி.எஸ்.ஜயராமனுக்கு 'இவர்' மைத்துனராகிறார் என்பதில் நண்பர்களான எங்களுக்குத் தனி ஆனந்தம். ஓடி ஓடி ஒவ்வொரு அச்சகமாகத் தேடிப் பலர் வாழ்த்துப்பாக்களைத் தயாரித்தோம். அதே நாளில் 'சி.எஸ்.ஜே'க்கும் திருமணம்.



ஒரு பக்கத்தில் அய்யரோடு அவர் மணம்: இன்னொரு பக்கத்தில் எங்களோடு இவர் திருமணம். அங்கே 'வெள்ளி' மயமான அன்பளிப்புகள்! இங்கே அச்சடித்த எங்கள் வாழ்த்துக்கள்தான் அன்பளிப்புகள்!! இரவு, கலைவாணர் என்.எஸ்.கே.யின் 'கிந்தனார்' காலட்சேபம். தாங்கமுடியாத கூட்டம். எங்க 'மாப்பிள்ளை' எங்கேயிருந்து கேட்டார் தெரியுமா? எங்களோடு எதிர்த் திண்ணையில்!!

'இவர்' வீட்டுக்கு அடிக்கடி போவேன். ஒருநாள் கூட இவரைப் பார்க்காமலிருக்க முடியாது. தொடர்பு கொண்டவரைத் தொத்திக் கொள்ளச் செய்யும் வசீகரம் இவருடையது! அப்போதெல்லாம் இவரது துணைவியார் எனது சொந்தத் தங்கைபோல ஒரு பிரமை எனக்கு. சொந்த வாழ்வில் எனக்குச் சகோதர சகோதரிகளே கிடையாது. அதனால்தான் இவர் என் சகோதரரானார். இவரது துணைவியான என் தங்கை இறந்த செய்தி சென்னையில் 'விடுதலை' துணை ஆசிரியனாகயிருந்த எனக்குக் கிடைத்தபோது நான் விம்மி விம்மி அழுதேன்! இவரைப் போய் திருவாரூரில் பார்த்து நான் நேரில் ஆறுதல் சொல்லச் சென்றபோது...அம்மம்மா! வாழ்க்கையின் எல்லாக் கொடுமைகளையும் கண்டவர் என் சகோதரர் கலைஞர்.

எனது இன்னொரு தங்கையாக விளங்கும் தயாளு அவர்கள் மட்டும் அச்சமயம் இவருக்குத் துணைவியாக வாய்க்காமலிருந்திருந்தால்...? மனிதனை வெற்றி வீரனாக ஆக்குவது அவனுக்கு வாய்த்த மனைவியைப் பொறுத்தது என்பார்கள். என் சகோதரர், 'கொடுத்து வைத்தவர்'. இன்று, எது கேட்டாலும், இவருக்குக்

## தமிழே உயிர்

அன்னைத் தமிழின் அரிய செல்வன்
ஆன்ற மதிநிறை அஞ்சா நெஞ்சன்
இன்பம் நல்கும் வெற்றிகள் குவித்தோன்
ஈன்றாள் புகழுறச் செயலால் உயர்ந்தோன்
உலகோர் மெச்சும் உரைநடை தந்தோன்
ஊழ்வினைக் காப்பியம் ஒளிபெற வடித்தோன்
எங்கும் தமிழ்மணம் பரப்பி மகிழ்வோன்
ஏங்கிய பாரதி கனவை முடித்தோன்
ஐதிக உலகில் புரட்சி விளைத்தோன்
ஒத்துக் கொள்ளும் புதுமை படைத்தோன்
ஓர்குலம் தமிழினம் ஓங்குக என்றே
ஔவை மண்ணில் அயரா துழைப்போன்
நம் கலைஞர் - அவர்
வாழ்க! நலமாய்!! வாழ்க! வளமாய்!!
வாழ்க! தமிழுயிர்!! வாழ்க! வாழ்கவே!!

- முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

காலடியில் விழும்! ஆனால் அன்று...சுட்ட நாட்கள்...கொட்டிய வினாடிகள்...வாழ்க பல்லாண்டு என் தங்கை...சுமங்கலியாக...என்று மனதார வாழ்த்துகிறேன்.

குடும்பமே இவருக்காகத் தானிருந்தது. இரண்டு சகோதரிகள் - அப்பா, அம்மா - செல்லப்பிள்ளையான இவர்! இவரது தந்தையார் நாங்கள் நண்பர்களானபோது நோய்வாய்ப்பட்டிருந்ததால் எனக்கெல்லாம் அதிகம் பரிச்சயம் கிடையாது.

ஆனால் இவரது அம்மா? 'கோமல் தம்பி' என்று கன்னத்தில் குழிவிழச் சிரித்தபடி என்னை அழைக்கும்போது பாசமும் அன்பும் வழியும். அதேபோலத்தான் அக்காக்களும். அரசியலைத் தொழிலாக எண்ணுவோரும் உண்டு. பட்டும்படாமலும் நடந்துகொள்வார்கள். ஆனால் இவரது குடும்பம், இவரைச் சேர்ந்த எங்களையெல்லாம் சொந்தத் தம்பிகளாக ஆக்கிக் கொண்டதாகும். இந்தப் பாசம்தான், 'இவர்' மீது சில சமயம் எனக்கெல்லாம் கோபம் வந்தாலும், உடனே ஓடிப்போகச் செய்துவிடுகிறது. தம்பி மாறன் - அவர் தம்பி செல்வம் - அமிர்தம் - இவரது பிள்ளைகள் எல்லாம் 'கழகம், கழகம்' என்றல்லவா இருக்கின்றன?

இப்படியொரு குடும்பம் தமிழக அரசியல் வரலாற்றில்! இப்படிக் குடும்பமே கொள்கைக்கூடம் ஆனதால்தான், என் சகோதரரும் உலகத் தலைவரானார்.

இதெல்லாம் பழைய நினைவுகள்! குறித்து வைக்காவிடில் காலத்தோடு அழிந்துவிடுமேயன்று எழுதினேன். எல்லாத் தகவல்களையும் எழுதுவதென்றால், பெரிய நூலாகிவிடும். ஆனால் அந்தநூல், வளரும். கழகத் தோழர்கள் ஒருவருக்கொருவர் எப்படிப் பழகவேண்டும் என்பதற்கான விளக்கவுரையாக நிச்சயம் அமையும்.

சாதாரண 'மு.க.' எப்படி இவ்வளவு பெரிய தலைவரானார்? அன்பு - அனைவரையும் சகோதரர்களாக்கிக் கொள்ளும் பண்பு - குடும்பத்தாராக எண்ணும் குணம் - இயற்கையாக இவருக்கென்று வாய்த்த திறமை - திறமையைத் தூங்கப் போடாமல் பம்பரம் போலப் பணியாற்றும் உணர்ச்சி...இவைதான் என்பது என் கருத்து. இதே உணர்வு மட்டும் எல்லோருக்கும் ஏற்பட்டுவிடுமானால், நமது கழகத்தை அழிக்க எந்தச் சக்தியாலும், இயலாது.

இன்று இவர் முதலமைச்சர் - எட்டாத நிலாவெனக் கருதப்பட்ட இந்தியத் தலைவர்கள் இவர் கருத்தைக் கவனத்தோடு கேட்கிறார்கள் - வெளிநாட்டுத் தூதுவர்கள் இவர் 'பேட்டி'க்காகக் காத்திருக்கிறார்கள் - அதிகாரிகள் ஆலவட்டம் சுற்றுகிறார்கள்...ஆனாலும் இவர் நம்மோடுதான் இருக்கிறார்! நம்மில் தான் மகிழ்ச்சி காண்கிறார்!!

தமிழ்நாடு இவரைக் கண்டு பூரிக்கிறது. என் போன்றோர், இவரால், பூரிப்படைகிறோம். ★

### அட்டைப்பட விளக்கம்

**முதல் பக்க அட்டை:**

தமிழ்த்தென்றல் திரு.வி.க., பேராசிரியர் கல்கி நூல்களை அரசுடைமையாக்கி அவர்களது குடும்பத்தாருக்குப் பரிவுத் தொகை வழங்குதல் மற்றும் சிவகங்கையில் அரசு வளர்ச்சித் திட்டங்கள் தொடக்க விழா - நலத்திட்ட விழா - நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா (17.5.98).

**கடைசிப் பக்க அட்டை:**

திருவாரூர் ஆழித்தேர்





# எங்கள் ஊர்ச் சிங்கம்

## ஆரூர் தாஸ்

திருஆரூரான் ஆன தியாகேசப்பெருமானை வழிபடுவதற்காக வந்த சைவ சமயக்குரவர் நால்வருள் ஒருவரான திருஞானசம்பந்தர் ஆலயத்தின் ஒரு கோபுரத்தில் ஏறி உச்சியில் நின்று நான்கு திசைகளிலும் தன் பார்வையைச் சுழலவிட, விழிகளுக்கு எட்டிய தூரம் பசும் பச்சைப்படுதா விரித்தாற் போன்று நெற்பயிரைக்கண்டு வியந்து பரவசமுற்று, 'அன்னவயல் சூழ்ந்த ஆரூரான்' என்று ஈசனைப் போற்றிப் புகழ்ந்து துதித்திருக்கின்றார்.

நெல்வயல் - கரும்புவயல் என்று தான் கூறுவது வழக்கம்.

'சோற்றுவயல்' என்று சொன்ன தமிழ், சம்பந்தருடையது!

சோழ வளநாடு சோறுடைத்து!

திரு + ஆர் + ஊர்,

ஆர் என்ற சொல், அழகு, ஆத்திமரம், சரக்கொன்றை. பூமி, செவ்வாய் எனப் பல்வேறு பொருள்படுகின்றது.

அழகிய பூமியான ஊர் என்பதனாலோ, அழகுமிகு ஆத்தி மரங்கள் - சரக்கொன்றை, நிறைந்த ஊர் என்பதனாலோ திருஆரூர் என்று பெயர்பெற்று, நாளடைவில் திருவாரூர் என வழங்கப் பெற்றிருக்கிறது!

அத்தகைய அழகு நிறை ஆரூரைத் தலைநகரமாகக் கொண்டு, 'கடல்கிழக்கு, வெள்ளாறு தெற்கு, கோட்டைக்கரை மேற்கு, ஏணாடு வடக்கு, இருபத்து நாற்காதம் எல்லையாகக் கொண்ட பூமியும், தென்னிந்தியாவின் பெரும்பாகமுமான சோழ நாட்டை மங்காப்புகழ் படைத்த மனுநீதிச் சோழன் ஆண்டான்!

நீதிவிசாரணை அழைப்பிற்கென்றே அரண்மனைக்கு வெளியில் 'ஆராய்ச்சி மணி' கட்டி ஆட்சி செலுத்திய மாண்பு, மனுநீதிச் சோழ மன்னனுக்கு மட்டுமே உரித்தானது!

கன்றை இழந்து கண்ணீர் மல்கிய ஒரு காராம் பசுவிற்கு நீதி வழங்குவதன் பொருட்டு - அதற்குக் காரணமான தன் மகனையே சக்கரத்தின் அடியில் இட்டு, தானே அமர்ந்து தேரினைச் செலுத்தி, கோணாத கோலுக்கும், தாழாத குடைக்கும், சாயாத சிங்காதனத்துக்கும் பெருமை சேர்த்தான் அப் பெருமன்னன்!

அதன் சின்னமாக ஓரே கருங்கற்பாறையில் செதுக்கப்பெற்ற 'கல்தேர்' இன்றைக்கும் வடக்கு வீதியின் கண் இருக்கக் காணலாம்.

அக்காலத்தில், தெற்குவீதியின் மேலக்கோடியில், அரண்மனை இருந்த இடத்தின் ஒரு பகுதியில், பிற்காலத்தில் நகராண்மைக் கழகமும் தொடக்கப் பள்ளியும் அமையப்பெற்றன.



விஜயாலய சோழன் ஆரூரை ஆட்சி புரிந்ததன் நினைவாக, அழகிய ஓடம் போக்கி ஆற்றைக் கடந்த தென்பகுதி 'விஜயபுரம்' என வழங்கலாயிற்று.

ஓடம்போக்கி ஆறு!

தோண்டத்தோண்ட பொன்னும் வைரமுமாக மின்னும் வண்டல் மண்ணையன்றி துளியும் கல்லே காணமுடியாத ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் மையப்பகுதியான திருஆரூரில்,

தியாகேசனுக்குத் திருக்கோயில் எழுப்புவதற்கென, தஞ்சைக்கு மேற்குப் பகுதியில் பெயர்த்தெடுக்கப்பட்ட பெரியபெரிய கருங்கற் பாறைகளை ஆரூருக்குக் கொண்டு வருவதற்காகவும், அதேசமயம் பாசன வசதிக்காகவும் திட்டமிட்டு வெட்டப்பெற்ற வெட்டாற்றின் ஒரு கிளை நதி வழியே ஓடங்களில் அக் கருங்கற்பாறைகளை, ஏற்றி வந்த காரணத்தால், அந்த ஆறு 'ஓடம்போக்கி' என்று பெயர் பெற்றது!

பலருக்கு அவர்களது ஊரினால் பெருமை! சிலரால்தான் ஊர் பெருமை பெறுகின்றது!

அந்த வகையில் - தன் ஊருக்குப் பெருமை சேர்த்தவர் தமிழகத்தின் முதல்வரும், தமிழ்த்தாயின் தவப் புதல்வருமான நமது கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்!

ஒரு மனிதன் கொண்டிருக்க வேண்டிய அனைத்துப் பாசங்களிலும், மூன்று பாசங்கள் மிக முக்கியமானவை

தாய்ப்பாசம்!

தாய்மொழிப் பாசம்!

தன் ஊர்ப்பாசம்!

இம்மூன்று பாசங்களையும் முழுமையாகக் கொண்டவர் நமது முதல்வர்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" - என்ற புறநானூறு கூற்றுக்கு உட்பட்டவராயிருந்தாலும்

திருவாரூரின் தென்கிழக்கே, அவர் பிறந்த திருக்குவளை!

மேற்கே, அவரது அருமை அன்னையார் அஞ்சுகம் அம்மையார் நினைவிடமும், அவர் வயிற்றுக்குச் சோறு வழங்கும் நிலமும் அமைந்துள்ள காட்டூர்!

வடக்கே, நஞ்சை நிலங்களிலேயே முதல்தர நல்ல நிலங்களைக்கொண்ட ஊரான நந்நிலம் - அதாவது நன்னிலம்!

தெற்கே ஊரின் எல்லையான புலிவலம்! இவற்றிற்கு இடைப்பட்ட எங்கள் அழகிய ஊரின் கலைமண்ணில், அவரது காலடிபடாத அங்குல இடம் கூட கிடையாது எனலாம்.

கூட்டங்களில் பேசுவதற்காக, கொள்கையைப் பரப்புவதற்காக, கொண்டிருக்கும் நண்பர்களின் மங்கல விழாக்களில் கலந்துகொண்டு தன் புதிய தமிழைப் பொழிவதற்காக.

சுற்றிச்சுற்றி அலைந்து திரிந்தவர் அவர்! அறிவும், ஆற்றலும், ஆர்வமும், ஆளுந்திறனும், எழுத்தில் அழுத்தமும், சொல்லில் வன்மையும் ஒருங்கே அமையப்பெற்ற, அகவை எழுபத்தைந்தைத் தொடும் -

என்றும் இளமை குன்றாத ஒரு அற்புதப் பிறவியைத் தன் மண்ணின் மைந்தனாகக் கொண்ட எங்கள் ஊர் மாண்புமிக்கதல்லவா!

உருக்கினால் உருவாகி, பழுக்கக் காய்ச்சப்பட்ட பரிமேல் அமர்ந்து, 'அழகர்' என்ற அருந்தமிழ்ப் புலவர், அரசர் முன்னிலையில் திருக்குறளுக்கு உரைசெய்து, 'பரிமேலழகர்' என்று பெயர் பெற்றதாகப் படித்திருக்கின்றேன்.

இந்தியத் திருநாடு விடுதலைபெற்ற இந்த ஐம்பது ஆண்டுகளில், நம் தமிழகத்தில், இதற்கு முன்பு ஆட்சிபுரிந்த எந்த ஒரு முதல்வரும் இப்படி ஒரு கடினமான காலக்கட்டத்தைக் கண்டதில்லை - என்று கூறும் அளவுக்கு, மோசம், வஞ்சகம், சூழ்ச்சி, துரோகம் ஆகிய கொடிய தீ நாக்குகள் சுற்றிச்சுழல, அவற்றின் நடுவில் அமர்ந்து நிலைகுலையாமல், நெஞ்சுரத்துடன் ஆட்சி செலுத்தும் எங்கள் அருமைக் கலைஞரை எந்தச் சிறப்புப் பெயரால் அழைப்பது?

நட்டம் வந்தாலும் வரட்டும் என்று திட்டம் போட்டு நிறைவேற்றும் துணிவு கொண்ட அவருக்குப் பட்டம் என்ன சூட்டுவது?

தமிழகத்திற்குக் கிடைத்த இந்தத் தங்கம் - 'எங்கள் ஊர்ச் சிங்கம்' என்று கூறிக்கொள்வதில் எனக்குக் கொள்ளை மகிழ்ச்சி! பெருமை! ஏன்? சற்றுக் கர்வமுங்கூட!

பவளவிழாக் காணும் நமது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டுமென வாழ்த்தி வணங்குகிறேன். □

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

## பாவேந்தர் காட்டும் திருவாரூர்

❑ *தண்பொழிலில் குயில்பாடும் திருவா ரூரில்*
*தமிழ்நாடு தமிழ்மாண வர்மன்றம் காண்!*
*வண்மையொடும் உண்மையொடும் வாழ்ந்திடும் காண்!*

❑ *மக்களிடை எழுச்சிக்கு மருந்தா கும்காண்!*
*கண்மூடிக் குறிமறந்து தமிழர் தங்கள்*
*கலைமறந்த நெஞ்சத்தில் ஒளிஎய்தும் காண்!*

❑ *புண் வாய்ந்தோர் அல்லர்காண்! திருவா ரூரின்*
*புலிஇளைஞர் காண்! தோள்கள் பூரித்தார்காண்!...*



*- பள்ளிப் பருவத்தில், கலைஞர் திருவாரூரில் அமைத்து நடத்திய தமிழ் மாணவர் மன்றத்திற்குப் புரட்சிக் கவிஞர் எழுதிய வாழ்த்துப்பாவில் இருந்து.*



*திருவாரூர் மாவட்டம்*

# வளர்ச்சிப் பாதையில்



*நிர்வாக வசதிக்கெனத் தமிழகத்தில் உள்ள சில பெரிய மாவட்டங்கள் பிரிக்கப்பட்டன; 1.1.1997-ல், முதலமைச்சர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட திருவாரூர் மாவட்டம், பெறற்கரும் பெருமை பெற்றதாகச் சிறப்படைந்து வருகிறது.*

*இம்மாவட்டத்தில் அங்கிங்கெனாதபடி எங்கும் ஆக்கப்பணிகள் அடுக்கடுக்காகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.ரா.மோகன், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி சோமதுமதி ஆகியோரிடம், அவை பற்றிக் கேட்டறிந்து. இங்கே பாங்குறப் பட்டியலிட்டுக் காட்டப்படுகின்றன!*

**அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

*திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் திருவாரூர், மன்னார்குடி, வலங்கைமான் மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகிய நான்கு ஒன்றியங்களில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் சிறப்புறச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் விவரம் வருமாறு:*

**திருவாரூர் ஒன்றியம் - புலிவலம் கிராமம்**

*புலிவலம், காந்திநகர், திரு.வி.க. நகர், திருவாசல் தெரு, விளவனம் படுகை, தனிக்கொண்டான் இருப்பு, விஷ்ணுதோப்பு - ஆக மொத்தம் 7,376 மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்கள்.*

**வலங்கைமான் ஒன்றியம் - கோவிந்தகுடி கிராமம்**

*-கோவிந்தகுடி, நெடுவாசல், வாணியக்கரம்பை - ஆக மொத்தம் 4,646 மக்கள்தொகை கொண்ட மூன்று குக்கிராமங்கள்.*



**மன்னார்குடி ஒன்றியம் - பரவாக்கோட்டை கிராமம்**

*பரவாக்கோட்டை, ராஜசாம்பாள்புரம், குடிகாடு, கருவேப்பிலை நத்தம் - ஆக மொத்தம் 8,337 மக்கள்தொகை கொண்ட நான்கு கிராமங்கள்.*

**திருத்துறைப்பூண்டி ஒன்றியம் - தில்லைவிளாகம் கிராமம்**

*தில்லைவிளாகம், கீழக்கரை, மேலக்கரை, மேலக்காடு, துரைத்தோப்பு, அமரங்காடு, தில்லை தெற்குப்பகுதி 6, தெற்குப்பகுதி 7, ஓமன்காடு, கழுவன்காடு ஆக மொத்தம் 7,039 மக்கள்தொகை கொண்ட 11 குக்கிராமங்கள் தோறும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அற்புதமாகச் செயல்படுத்தப்படுகிறது.*

*இந்த இணையற்ற திட்டத்திற்கெனத் தில்லைவிளாகத்திற்கு ரூ.24.58 இலட்சமும், பரவாக்கோட்டைக்கு ரூ.28.30 இலட்சமும், கோவிந்தகுடிக்கு ரூ.15.77 இலட்சமும், புலிவலத்திற்கு ரூ.25.04 இலட்சமும் மொத்தம் ரூ.93.69 அரசின் சிறப்பு நிதியாக அளிக்கப்பட்டு, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ரூ.283.33 இலட்சத்தில் செயலாக்கம் பெற்றுவருகின்றது.*

*இத்திட்டத்தின்மூலம், குடிநீர் வசதி, கல்வி, பொதுச்சுகாதாரம், சத்துணவு, குடியிருப்பு, கிராமச்சாலைகள், பொது விநியோகம், சமூகநலன், நிலப்பட்டா வழங்குதல் - ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், ஆதி திராவிடர் - பழங்குடியினர் மயான சாலை வசதி, கூட்டுறவு சங்கக் கடன் வசதி, பொருளாதார*

முன்னேற்றத் திட்டம், தொலைபேசி மற்றும் துணை அஞ்சல் நிலைய வசதி, பொது நூலகம், படிப்பகம் மற்றும் பொதுத்தொலைக்காட்சிப் பெட்டிக்கெனத் தனி அறை, கழிவு நீர் வடிகால் வசதி, மத்திய கிராமப்புறச் சுகாதாரத் திட்டம், மதுவிலக்கு, குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு, சிறுசேமிப்பு, தனிநபர் வீடுகளுக்குச் சுகாதாரக் கழிப்பிடம், மரம் வளர்ப்பு போன்ற 21 அம்சங்கள் நிறைவேற்றப்பட்டு - சாதாரணக் கிராமங்கள் கூட நகரங்களுக்கு இணையாக எல்லா வசதிகளும் பெற்றதாகப் பெருமை பெறும்.

**சமத்துவபுரம்**

திருவாரூர் மாவட்டத்தில் சமத்துவபுரம் திட்டத்தை நிறைவேற்றிட இரண்டு கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. திருவாரூர் வட்டத்தில் அலிவலம் கிராமத்திலும் மன்னார்குடி வட்டத்தில் நொச்சியூர் கிராமத்திலும் சமத்துவபுரம் அமைக்கப்படும். இரண்டு கிராமங்களிலும் தலா 10 ஏக்கர் புறம்போக்கு நிலம் இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அலிவலம் கிராமத்தில் பயனாளிகளும் கூட தகுதியினடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு விட்டனர்.

**நமக்கு நாமே**

திருவாரூர் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 10 ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்றே ஒன்று தவிர 9 ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற 32 கிராமங்களில் நமக்கு நாமே திட்டம் நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அவற்றில் எடுத்துக்கொண்ட பணிகளின் எண்ணிக்கை 42.

மக்களின் பங்குத்தொகையாக ரூ.8,09,935ம் அரசின் பங்காக ரூ.18,93,315ம் சேர்த்து மொத்தம் ரூ.27,03,250ல் நமக்குநாமே திட்டம் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்**

★ திருவாரூர் மாவட்டத்தில் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் 1997 - 98 நிதியாண்டில் 116 சாலைப் பணிகள் ரூ.457.882 இலட்சம் ஒதுக்கீட்டில் எடுக்கப்பட்டு, மொத்தம் 154.46 கி.மீ. தூரம் சாலை போடப்பட்டிருக்கிறது.

★ ரூ.186.48 இலட்சம் செலவில் 38 பள்ளிக் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

★ ரூ.49.48 இலட்சம் செலவில் 38 நியாய விலைக்கடைகள் அமைக்கப்பட்டன.

★ 79 சத்துணவுக்கூட சமையல் அறைகள் ரூ.23.65 இலட்சம் செலவில் கட்டப்பட்டன.



★ 9 சிறுபாலங்கள் ரூ.5.68 இலட்சம் செலவில் கட்டப்பட்டன.

★ 7 சத்துணவு மையப்பணிகள் ரூ.9.88 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

★ 27 பள்ளிகளில் கழிவறைகள் ரூ.4.26 இலட்சத்தில் கட்டப்பட்டன.

★ 6 கால்நடை கிளை நிலையங்கள் ரூ.6.98 இலட்சத்தில் உருவாக்கப்பட்டன.

★ ரூ.7.58 இலட்சம் செலவில் 5 ஊராட்சிக் கட்டடங்கள் கட்டப்பட்டன.

★ ரூ.4.58 இலட்சத்தில் 5 தடுப்புச்சுவர் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ 4 அங்கன்வாடி கட்டடப் பணிகள் ரூ.3.96 இலட்சம் ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டன.

- இவற்றுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்தப் பணிகள் 334 ஆகும். ஒதுக்கப்பட்ட தொகை ரூ.679.852 இலட்சம்.

**மக்கள் நல்வாழ்வுத் திட்டப்பணிகள்**

கூடுதலாக 48 படுக்கைகள் கொண்டதாகத் திருவாரூர் அரசு மருத்துவமனையை விரிவாக அமைக்க ரூ.1.255 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் விபத்து அவசரகால உதவி வார்டும் தனிப்பட அமைக்கப்படும்.

இரத்ததான வங்கி அமைக்கும் பணி முடிவுறும் தருவாயில், அரசின் ஒப்புதலுக்காக உள்ளது.



ஆம்புலன்ஸ் வண்டிகள் இயங்கிவருகின்றன.

இவை தவிர - திருவாரூர் மாவட்டத்தில் அடியக்கமங்கலம், திருவீழிமிழலை, பூந்தோட்டம், உள்ளிக்கோட்டை மற்றும் சித்தமல்லி ஆகிய இடங்களில் 24 மணிநேரமும் செயல்படும் ஆரம்ப சுகாதார மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன.

**மகளிர் நலம்**

திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மகளிர் மேம்பாட்டிற்குப் பெரிதும் வகைசெய்யப்பட்டுள்ளது.

★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித்திட்டத்தில் 1.4.97 முதல் 31.3.98 வரை 1,266 நபர்களுக்கு ரூ.10,000 வீதம் மொத்தம் ரூ.1,26,60,000 வழங்கப்பட்டது. 1996 - 97ல் விட்டுப்போன 133 நபர்களுக்கு ரூ.13,30,000 வழங்கப்பட்டிருக்கிறது.



★ ஆதரவற்ற மகளிர் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் மூன்று நபர்களுக்கு ரூ.3,000 வீதம் மொத்தம் ரூ.9,000 வழங்கப்பட்டது.

★ அன்னை அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித்திட்டத்தில் மொத்தம் ரூ.1,40,000 வழங்கப்பட்டது.

★ விதவைப் பெண்டிரின் மகள் திருமண உதவித் திட்டத்தில் 21 நபர்க்கு ரூ.3,000 வீதம் மொத்தம் ரூ.63,000 வழங்கப்பட்டுள்ளது.

★ விதவை மறுமண நிதிஉதவித் திட்டத்தில் 9 நபர்க்கு ரூ.7,000 வீதம் ரூ.63,000 வழங்கப்பட்டது.

★ விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், ஊனமுற்ற மகளிர் ஆகிய 70 பேருக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

★ டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தில், 2,800 மகளிர்க்கு ரூ. 500 வீதம் மொத்தம் ரூ.14 இலட்சம் வழங்கப்பட்டது.

★ பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தில் 166 நபர்க்கு அரசு வைப்புத்தொகையாக தலா ரூ.3000 அளிக்கப்பட்டுள்ளது.

★ தேசியப் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், ரூ.500 வீதம் 200 நபர்களுக்கு மொத்தம் ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டது.

**திருவாரூர் மாவட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

சட்டமன்றத்தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஏழு சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டிற்காக மொத்தம் ரூ.119 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் விவரம் வருமாறு -

திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதிக்கு ரூ.25 இலட்சம், நீடாமங்கலம் தொகுதிக்கு ரூ.12.50 இலட்சம், வலங்கைமான் தொகுதிக்கு ரூ.12.50 இலட்சம், குத்தாலம் தொகுதிக்கு ரூ.12.50 இலட்சம், நன்னிலம் தொகுதிக்கு ரூ.16.50 இலட்சம், திருவாரூர் தொகுதிக்கு ரூ.15 இலட்சம், மன்னார்குடி தொகுதிக்கு ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் குடிநீர் வசதிக்காக ரூ.3.90 இலட்சமும் சாலைப்பணிகளுக்காக ரூ. 39.85 இலட்சமும் மற்ற பணிகளுக்கு ரூ.75.25 இலட்சமும் செலவிடப்படும்.

**நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

நாகை நாடாளுமன்றத் தொகுதியின் கீழ், ரூ.56.30 இலட்சமும், தஞ்சை நாடாளுமன்றத் தொகுதிக்கு ரூ.10 இலட்சமும் ஒதுக்கப்பட்டு, மொத்தம் ரூ.66.30 இலட்சத்தில் 9 பள்ளிக் கட்டடங்கள், 4 சாலைகள் மற்றும் 12 பணிகள் ஆகியவை செய்து முடிக்கப்படும்.

திருவாரூர் மாவட்டத்தில் 1997 - 98 ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட மத்திய திட்டங்கள்:

★ இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தில் ரூ.61.22 இலட்சத்தில் 1986 பணிகள் எடுத்துக் கொள்ளப் பட்டன.



★ ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ.166.897 இலட்சத்தில் 781 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

★ மத்திய கிராமப்புறச் சுகாதாரத் திட்டத்தின் கீழ், தனிநபர்களுக்குக் கழிவறை கட்டும் திட்டத்தில் ரூ.32,80,000 செலவில் 1640 கழிவறைகள் கட்டப்பட்டன. இதில் 20 கழிப்பறைகள் பள்ளிக்கூடங்களில் ரூ.12,40,000 செலவில் கட்டப்பட்டன.

★ மில்லியன் கிணறு திட்டத்தில் 160 ஜீவன்தாரா கிணறுகள் ரூ.67.20 இலட்சத்தில் அமைக்கப்பட்டன.

★ 50 பாசனக்குளங்கள் ரூ.75.30 இலட்சத்தில் அமைக்கப்பட்டன.

★ ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கடன் வழங்கிட நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 4,614 ஆகும். இதன் மூலம் இதுவரை 4,250 பேர் பயனடைந்துள்ளனர்.

★ 1998 - 99 ஆம் நிதி ஆண்டில் ஜவகர் வேலைவாயப்புத் திட்டத்திற்கு ரூ.517.69 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ வீட்டிற்கு ரூ.29,000 என்ற வீதத்தில் 1,095 தொகுப்பு வீடுகள் இந்த நிதியாண்டில் கட்டப்படும்.

★ வேலைவாய்ப்பு உறுதியளிக்கும் திட்டத்தில், நடப்பாண்டில் ரூ.11.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 40 சதவீதம் குடிநீர் வசதிகளுக்காகவும், 40 சதவீதம் சாலைப் பணிகளுக்காகவும், 20 சதவீதம் கட்டடப் பணிகளுக்காகவும் என்ற வகையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

★ தனிநபர்களுக்குக் கழிவறை கட்டும் திட்டத்தில் 1784 நபர்களுக்குக் கழிவறை கட்டித்தரப்படும். இதில் 20 நடுநிலைப்பள்ளிகளும், 24 தொடக்கப் பள்ளிகளும் அடங்கும்.

★ 1998 - 99ல் - 208 ஜீவன்தாரா கிணறுகள் வெட்டப்படும். இதில் 138 கிணறுகள் ஆதிதிராவிடர்களுக்கும், 70 கிணறுகள் மற்றவர்களுக்குமாக இருக்கும்.

★ மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் 1998 - 99 ல் 55 குழுக்கள் அமைக்கப்பட்டு ஒரு குழுவுக்கு ரூ.25,000 வீதம் வழங்கப்படும்.

**நிலுவைப் பணிகள் நிறைவேற்றம்**

திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் - 1.7.96 அன்று அனைத்துத் திட்டங்களிலும் முடிக்கப்படாமல் நிலுவையில் இருந்த பணிகளின் எண்ணிக்கை 6,245 ஆகும். இப்பணிகள் செயலாக்கம் பெற்று, இதுவரை 6,100 பணிகள் தொடர்ந்து செய்து முடிக்கப்பட்டன.

- இவ்வாறாகப் புதிதாக மலர்ந்த திருவாரூர் மாவட்டம் வளர்ச்சிப் பணிகளில் வியத்தகு வண்ணம் வெற்றிநடை போட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

- ஆர். ராஜசேகரன்



**வைரம் குப்பையிலே கிடந்தாலும், எடுத்துக் கொஞ்சம் தூசியைத் தட்டினால் மீண்டும் ஒளிவிடும். ஆனால், இழிநிலையில் மங்கிப்போன பித்தளைகளை யாரும் தீண்டமாட்டார்கள்!**

- கலைஞர்



# கர்ப்பச் சுமையானவன்



❑ தன்நாவும் பேனாவும் ஆயுதங்களாம் - சுவைத்
தமிழும் திறமும் அவன் கேடயங்களாம்
முன்னேற்றப் படைக்கென முரசொலிப்பான் - நல்ல
முத்தாரம் தமிழ்க்கெனப் பரிசளிப்பான்

❑ வாளின் நிழல்களிலே வளர்ந்துவந்தவன் - போர்
வரலாற்று வாழ்க்கையிலே கிளர்ந்துவந்தவன்
தோளின் தொடர்கதைகள் நெய்துவந்தவன் - புகழ்ச்
சுடருக்கு வேர்வைநெய் பெய்துவந்தவன்

❑ பரணிகளே அவனுக்குத் தாலாட்டு - பகைப்
பச்சைரத்த மேபிடித்த நீராட்டு
மரணத்தோடெப் பொழுதும் விளையாட்டு - அவன்
வாய்பாடும் பாட்டெல்லாம் போர்ப்பாட்டு

❑ படுத்துக் கிடந்ததொட்டில் பாசறைகளே - அவன்
படித்த கலாசாலை வெஞ்சிறைகளே
தொடுத்துக் கொடுத்ததெல்லாம் காவியங்களே - காலத்
தொல்லைக்கும் அழியாத ஓவியங்களே

❑ தமிழென்னும் கண்ணுக்கு இமையானவன் - கலைச்
சரித்திரத்தில் கர்ப்பச் சுமையானவன்
கமழ்கின்ற புகழ்மண்ணில் வேர் கொண்டவன் - எங்கள்
கலைஞர் எனக்கலையாய்ப் பேர்கொண்டவன்.

- கவிக்கோ.அப்துல் ரகுமான்

திருவாரூர் மாவட்டம்:

# நெய்வேலி காட்டாமணக்கு அழிப்புத் திட்டம் 1998-99



திருவாரூர் மாவட்டத்தில் 1998-99-ஆம் ஆண்டில் பி முதல் ஜி வகுப்பு வாய்க்கால்கள் மற்றும் ஏரி, குளங்களில் உள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை 2, 4டி சோடியம் உப்பு, களைக்கொல்லி மருந்து தெளித்து அழிக்கும் திட்டம் தற்போது தொடங்கப்பட்டு உள்ளது.

இத்திட்டத்தின்கீழ், வாய்க்கால்களில் நீர்ப்பாசனத்திற்கும், மழை வெள்ளக் காலங்களில் தண்ணீர் வடிவதற்கும், முற்றிலுமாக அழிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக ரூ.27,74,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களில் உள்ள நெய்வேலி காட்டாமணக்கினை அழிப்பதன்மூலம், குறைந்த காலத்தில் அதிகப் பரப்பிற்கு நீர்ப்பாசனம் செய்ய வழி ஏற்படுகிறது. மழை வெள்ளக் காலங்களில் நீர் விரைவாக வடிவதால் பயிருக்குச் சேதம் ஏற்படுவது தடுக்கப்படுகிறது.

பாசன வாய்க்கால்களில் நெய்வேலி காட்டாமணக்கினை அழிக்க, விவசாயிகள் பெருமுயற்சி செய்தும், இச்செடிகள் தனது விரைவாக வளரும் தன்மை, கடுமையான வறட்சியையும் அதிக நீர் தேங்கியுள்ள நிலையையும் தாங்கி வளரும் ஆற்றல் கொண்டுள்ளதால் இதனை முற்றிலும் அழிக்க இயலவில்லை.

களைக்கொல்லியுடன் யூரியாவைக் கலந்து தெளிப்பதால் களைக்கொல்லிச் செடியின் நுனி குருத்து முதல்வேர்ப்பகுதிவரை ஊடுருவிச் சென்று நெய்வேலி காட்டாமணக்குச் செடியினை 21 நாட்களுக்குள் முற்றிலும் வாடி கருகச் செய்துவிடுகிறது.

இதனால் செடிகள் திரும்பவும் துளிர்க்காமல் பட்டுப் போய்விடுகிறது.

இத்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட விகிதங்களில் மருந்துக் கலவை தெளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| (1) 24டி சோடியம் சால்ட் | - 2 கிராம் | ஒரு லிட்டர் தண்ணீருக்கு |
| (2) சோப்புக் கரைசல் | - ஒரு மி.லி. | |
| (3) யூரியா | - 10 கிராம் | |

களைக்கொல்லி தெளித்து மூன்று வாரங்களுக்குப் பிறகு காய்ந்த, பட்டுப்போன செடிகளை வேருடன் பிடுங்கிக் குவித்து மண்ணெண்ணெய் கொண்டு கொளுத்தி அழிக்கவும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் வாய்க்கால்கள், வடிகால்கள் மற்றும் ஏரி குளங்களில் இடையூறாக உள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடிகள் முற்றிலும் அழிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ★



# திருவாரூரில் பிறந்து சிறந்த சங்கீத மும்மூர்த்திகள்



சொ.பா

தியாகராச சுவாமிகள், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாத்திரிகள் ஆகிய மூன்று இசை மேதைகளைக் கருநாடக சங்கீத மும்மூர்த்திகள் என்று குறிப்பது ஓர் அண்மைக்கால மரபாகும்.

இம்மூவருமே கி.பி.18 ஆம் நூற்றாண்டிலும் 19 - ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்கள்; திருவாரூரில் பிறந்தவர்கள். தியாகையர், இராமம் பிரம்மம் - சீதம்மா ஆகியோருக்கு மகனாய் கி.பி. 1761 - இல் பிறந்தார். முத்துசாமி தீட்சிதர் இராமசாமி - சுப்பம்மாள் ஆகியோருக்கு மகனாய் கி.பி. 1775 ஆம் ஆண்டிலும், சியாமா சாத்திரிகள் விசுவநாதையர் - வெங்கட லட்சுமி ஆகியோருக்கு மகனாய் கி.பி. 1762 - ஆம் ஆண்டிலும் பிறந்தனர்.

மூவருமே நிறைவாழ்வு வாழ்ந்த பெருமக்கள். தியாகையர் 80 ஆண்டுகளும், முத்துசாமி தீட்சிதர் 69 ஆண்டுகளும், சியாமா சாஸ்திரிகள் 65 ஆண்டுகளும் வாழ்ந்தவர்கள். இம்மூவரும் தாங்கள் காலமாகும் நாளை முன்னதாகவே கூறி மறைந்தனர் என்று கூறப்படுகின்றார்கள்.

மூவருமே அவர்கள் வாழ்ந்த காலத்துக் குறுநில மன்னர்களால் போற்றப்பட்டவர்கள்; இந்து பிராமண வகுப்பில் எளிய குடும்பத்தில் பிறந்து துன்ப துயரங்களில் எதிர் நீச்சலடித்து முன்னேறியவர்கள்; குருமுகமாக முறையாகப் பாடங்கேட்டவர்கள்; மனிதரைப் புகழ்வதனை வெறுத்தவர்கள். இம்மூவருக்குமே முதல் ஆசிரியர் அவர் தம் தந்தையரே. நல்ல மாணவப் பரம்பரை இம் மூவருக்குமே உண்டு. தியாகையர் திருவையாற்றிலும், சியாமா சாத்திரிகள் தஞ்சை நகரத்திலும், முத்துசாமி தீட்சிதர் எட்டயபுரத்திலும் தம் இறுதிநாட்களைக் கழித்தனர். தீட்சிதர், சாத்திரி ஆகிய இருவரின் சந்ததியிலும் இசை மேதைகள் தோன்றினர். மகாகவிபாரதி போற்றிப் பாடிய சுப்பராம தீட்சிதர் முத்துசாமி தீட்சிதரின் பேரர் ஆவார்.



திருவாரூரிலுள்ள தியாகராயர் பிறந்த வீடு

தியாகையர் இயற்றிய கீர்த்தனைகளே எண்ணிக்கையில் மிகுதி. தியாகையருக்கே மாணவர் எண்ணிக்கையும் மிகுதி. தியாகப் பிரமம் எனப்போற்றப் பெறும் தியாகையர் மற்ற இருவரை விட மிகுதியான மொழிகள் கற்றவர். தெலுங்கு, சமசுகிருதம், மராத்தி, தமிழ், கன்னடம், இந்தி ஆகிய ஆறு மொழிகள் அறிந்தவர் அவர்.

மூவருமே தேவார மூவரைப் போலப் பல ஊர்களுக்குச் சென்று அவ்வவ்வூரில் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பாடிப் பரவும் வழக்கத்தை மேற்கொண்டனர். தியாகையர் திருப்பதி வரை சென்றவர்; முத்துசாமி தீட்சிதர் காசி வரை சென்றவர். சியாமா சாத்திரிகள் சென்ற இடங்கள் குறைவே. தியாகையர் சென்று வந்த இடங்களுள் சில : திருப்பதி, புத்தூர், சென்னை, கோவூர், திருவொற்றியூர், சோளிங்கர், திருவரங்கம், இலால்குடி, நாகப்பட்டினம். முத்துசாமி தீட்சிதர் காசி, காளத்தி, திருத்தணி, காஞ்சி, வைத்தீசுவரன்கோயில், மதுரை, எட்டயபுரம், திருச்செந்தூர், சாத்தூர், இராமேசுவரம் ஆகிய ஊர்களுக்கும், சியாமா சாத்திரியார் காஞ்சி, திருவானைக்கா, நாகை, மதுரை, வைத்தீசுவரன் கோயில் ஆகிய ஊர்களுக்கும் சென்றுள்ளனர்.

அற்புதங்கள் நிகழ்த்தியதாக மூவரைப் பற்றியும் நிரம்பக் குறிப்புகள் உண்டு. மூவரும் வெளியூர்களுக்குச் சென்றுவந்தபோது நிகழ்ந்தனவாகச் சொல்லப்படும் கதைகளும் நிரம்ப உண்டு. தியாகையர் இராமனையும், முத்துசாமி தீட்சிதர் முருகனையும், சியாமா சாத்திரிகள் தேவியையும் வழிபடு கடவுளாகக் கொண்டவர்கள். தியாகையர் புதிய ராகங்களைக் கண்டுபிடித்துப் பாடியவர். தேவாமிருத வருசனி, கடேவாணி, செஞ்சுகாம்போசி, கம்பிரவாணி, பகுதாரி, சாரமதி, பாலரஞ்சனி, உமாபரணம் ஆகிய இராகங்கள் அவருடைய படைப்புகளே. சியாமா சாத்திரிகள் மட்டும் தமிழிலும் சில சாகித்தியங்கள் இயற்றியுள்ளார்.

கருநாடக இசையில் இராகம், தாளம், பாவம் ஆகிய மூன்றும் உயிர் நாடியாகும்.



முத்துசாமி தீட்சிதர் பிறந்த விடு

தியாகையர் படைப்புகளில் பாவமும் தீட்சிதர் படைப்புகளில் இராகமும், சாத்திரியார் படைப்புகளில் தாளமும் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளன. மற்ற இருவரின் படைப்புகளை நோக்கத் தியாகையரின் படைப்புகள் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் எளிமையானவை.

பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அமைப்பு கிருதிகளில் இடம்பெற்று நிலைத்தமை இம்மூவர் காலத்தில்தான், பத்ராசலம் இராமதாசு, கோபால கிருட்டிண பாரதியார், சுவாதித்திருநாள் ஆகியோர்க்கும் இதில் பங்கு உண்டு.

தீட்சிதர் தம் கிருதிகளில் இராகத்தின் சொரூபம் வெளிப்படையாகத் தோன்றுமாறும், இராகபத்தியும் ஆலாபன கிரமமும் செறிந்திருக்குமாறும் அமைந்திருப்பதைக் காணலாம். சாத்திரியார் படைப்புகளைக் கற்பது சிறிது கடினமாகும்.

இம்மூவரில் சியாமா சாத்திரியாரும், தீட்சிதரும் சந்தித்தமைக்கும், தியாகையரும் சாத்திரியாரும் சந்தித்தமைக்கும் வரலாற்றுச் சான்றுகள் உண்டு. ஆனால், தியாகையரும், தீட்சிதரும் சந்தித்தனர் என்பதற்கு மறுக்கமுடியாது அமையும் சான்றுகள் இல்லை. திருவையாற்றில் எழுந்தருளியிருக்கும் அம்பாள் தருமசம்வர்த்தனியைப் பற்றிய தீட்சிதர் கிருதிகள் இருப்பதனால் அவர் திருவையாற்றிற்குச் சென்றிருக்கவும், தியாகையரைச் சந்தித்திருக்கவும் வாய்ப்பு உண்டு.

தியாகையரின் நாட்டை, கவுளை, ஆரபி, வராளி, சிரீ ஆகிய கனராகங்களில் அமைந்த கீர்த்தனகளைப் பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் எனக் குறிப்பிட்டு வழங்குவதுபோல், தீட்சிதரின் நவரத்தினக் கீர்த்தனைகளும், நவக்கிரகக் கீர்த்தனைகளும் குறிப்பிடத்தக்கவையே.

தீட்சிதரால் மட்டுமே கையாளப்பட்ட இராகங்கள் உண்டு. அவற்றுள் சில சாரங்க நாட்ட, சாயகவுள, பூர்வி, பாடி, மகூரி, சுத்த வசந்தா, அமிருதவர்சனி என்பனவாகும்.

தியாகையரும் சியாமா சாத்திரிகளும் பெரும்பாலும் தெலுங்கிலும், தீட்சிதர் பெரும்பாலும் சமசுகிருதத்திலும் கிருதிகள் இயற்றியுள்ளனர். தியாகையரைப் போல மற்ற இருவரும் இசை நாடகங்கள் எழுதியதாகத் தெரியவில்லை. தீட்சிதர் காசியில் வாழ்ந்த காரணத்தினால் அவருடைய கிருதிகளில் இந்துசுத்தானி இசையின் செல்வாக்கு உண்டு.

இம்மூவரும் தெலுங்கிலேயே நிரம்பச் சாகித்தியங்கள் இயற்றியமைக்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது. தெலுங்கில் எல்லாச் சொற்களும் உயிரீறாக இருப்பதனால் சாகித்தியங்கள் இயற்றுவதற்குத் தெலுங்கு மிகவும் ஏற்றதாக இருக்கிறது என்பதே அக்காரணம். இது ஒரு மொழியியல் காரணமேயாகும். தியாகையர் இராமாயணக் கதையைத் தம் கிருதிகளுக்குரிய உள்ளடக்கமாகக் கொண்டமையால் அவரால் எளிதாக மக்களை ஈர்க்கும் பாடல்களைப் பலவாகப் பாடமுடிந்தது. தீட்சிதர் கிருதிகள் பற்றற்ற தன்மையைப் போதிக்கும் நிலையில் உள்ளன.

சாத்திரியாரின் படைப்புகள் ஆழமானவை; நுட்பமானவை; மக்களிடம் மிகுதியாகப் பரப்பப்படாதவை. சியாமா சாத்திரியார் சாகித்தியகர்த்தா என்பதை விடவும் பாடகர் என்றே பெரிதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளார். தீட்சிதர் கிருதிகள் நிறைய இருப்பினும் அவரது இராக அமைப்பு புரிந்துகொள்ளச் சிக்கலானது.

தீட்சிதர் ஒரு வேதாந்தி. தியாகையரும் சாத்திரியும் பக்தர்கள். மூவரும் வாக்கேயக்காரர்கள் என்பதில் அடங்குவர். எது எப்படியிருப்பினும் இம்மூன்று வாக்கேயக்காரர்களும் தென்னக இசையின் தூண்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. தியாகராசர் தம் கிருதிகளில் தம் பெயரையே முத்திரையாகவும், முத்துசாமி தீட்சிதர் 'குக குக' என்ற தொடரை முத்திரையாகவும், சாத்திரியார், சியாம கிருட்டினன் என்பதை முத்திரையாகவும் பயன்படுத்திப் பாடியுள்ளனர்.



சியாமா சாத்திரிகள் பிறந்த வீடு

முத்திரை என்பது பாட்டின் இறுதியில் ஓரடியில் குறிப்பிட்ட தொடர் தவறாது இடம்பெறுமாறு அமைத்துப் பாடுவது. இந்த வழக்கம் தேவார காலத்திலும் உண்டு. இது ஆக்கியோன் பெயரைக் கண்டுகொள்ள உதவும்.

தியாகையர் கி.பி.1847-ஆம் ஆண்டிலும், தீட்சிதர் கி.பி.1834-ஆம் ஆண்டிலும், சியாமா சாத்திரிகள் கி.பி.1827-ஆம் ஆண்டிலும் காலமானார்கள். ★



# கால்நடைப் பண்ணை கொருக்கை

திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மிகப்பெரிய வட்டங்களில் திருத்துறைப் பூண்டி ஒன்றாகும். வேளாண்மையையே மிகவும் நம்பியிருக்கும் இந்த மாவட்டத்தில் - திருத்துறைப்பூண்டிக்கு அருகே உள்ள கொருக்கை என்ற இடத்திலிருக்கும் கால்நடைப் பண்ணை குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குகிறது.




அதைப் பார்த்துவர அங்கே பயணம் சென்ற எங்களைத் திருத்துறைப் பூண்டியிலேயே வரவேற்று வழிகட்டினார், கால்நடை மருத்துவரான டாக்டர் எஸ்.ரங்கநாதன். இவர் பொறுப்பில்தான் அந்தக் கால்நடைப் பண்ணை இருக்கிறது.

மன்னார்குடி கோட்டத்தைச் சேர்ந்த திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் மட்டும் சுமார் 15,000 மாடுகள், சுமார் 5,000 வெள்ளாடுகள் இருக்கின்றன.

பொதுவாக எங்கும் உள்ளதுபோல் இந்தப் பகுதியிலும், அதிகம் பால்கறக்கும் கால்நடைகளுக்கு மடிநோய் வருவது உண்டாம்.

"நோய்கண்டதுமே கொண்டுவந்துவிட்டால் பாதிக்கப்பட்ட கால்நடைகளைக் காப்பாற்றி விடலாம்; பால் மரத்தபின் வந்தால் கொஞ்சம் சிரமம். இருந்தாலும், முன்னெச்சரிக்கையாக எங்கள் கிளை நிலையங்கள் மூலம் ஊர் ஊராகப் போய் ஆறு மாதத்திற்கு ஒருமுறை ஊசி போட்டு வருகிறோம்".

''அப்படியானால் நடமாடும் மருந்தகம் உண்டா என்ன?"

"மன்னார்குடியில இருக்கு".

''ஆடுகளுக்கும் குறிப்பிட்ட நோய் ஏதாவது?..."

''வரும். புது மழை பெய்து, புதுசா முளைக்கிற புல்லை அதிகம் திங்கற ஆடுங்களுக்குப் பெரும்பாலும் குடற்புழு உண்டாகி, கழிச்சல் நோய்ன்னு ஒண்ணு வர்றதுண்டு. இதுவும் அப்படித்தான் சார், நோய் கண்ட ஆரம்பத்துலயே வந்தா காப்பாத்திடலாம்; இல்லைன்னா ஆடுங்களோட உயிருக்கே ஆபத்துதான்."

- மருத்துவமனைக்கு வந்த கால்நடைகளைப் பரிசோதித்தவாறே பேசினார் மருத்துவர்.

ஆடுகளுக்குச் செயற்கை முறைக் கருவூட்டல் முறை என்பது அவ்வளவாக வெற்றிபெறவில்லை என்றாலும், மாடுகளுக்கு இந்தப் பகுதியில் செயற்கைமுறைக் கருவூட்டலுக்கு நல்ல வரவேற்பிருக்கிறது. இதற்கென்றே திருத்துறைப்பூண்டி கால்நடை மருந்தகத்திற்கு நாள்தோறும் குறைந்தது 50 மாடுகளாவது கொண்டு வரப்படுகின்றனவாம்.

## கொருக்கையில்...

திருத்துறைப்பூண்டியை விட்டு ஏழெட்டுக் கிலோமீட்டர் விலகியுள்ள உம்பளச்சேரி கிராமத்தருகே இருக்கும் திருவாரூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையான கொருக்கைக்கு வந்து சேர்ந்தோம்.

"இந்தக் கால்நடைப் பண்ணைக்கு இவர்தான் சார் மேலாளர்" - என்று கூறி, திரு.ராஜேந்திர கணேஷ் என்பவரை நமக்கு அறிமுகம் செய்துவைத்தார்கள்.

495.68 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப் பட்டிருக்கும் அந்த கொருக்கைப் பண்ணை முழுவதையும் நமக்கு மிகுந்த உற்சாகத்தோடு சுற்றிக் காட்டி - அதுபற்றிக் கேட்ட விவரங்களை உடனுக்குடன் சொல்லிவந்தார் பண்ணை மேலாளர்.

## ஜம்னாபாரி - உம்பளச்சேரி

"உம்பளச்சேரி மாடு, ஜம்னாபாரி ஆடுன்னு ரெண்டு புதுமாதிரியான இனங்களை இங்கே நாங்க பாதுகாத்து வளர்த்து வர்றமுங்க..."

"புது மாதிரின்னா?"

"உம்பளச்சேரி வகையறாவுல இருக்கிற பசுமாடுங்க கூட வேலைக்குத்தான் ஒதவும்; அவ்வளவா பால்தராதுங்க. வண்டி இழுக்கிறது...ஏர் உழறது மாதிரி முரட்டுத்தனமான காரியங்களை இந்த மாடுங்க இலகுவா செய்யும். எந்தச் சீதோஷ்ண நிலையையும் தாங்கும்; அவ்வளவு திடகாத்திரம்! நல்ல வளர்ச்சி!"

''பார்த்தா...எலும்பும் தோலுமா இருக்கு?..." - அந்த மாடுகளைப் பார்த்த பிறகு இப்படிக் கேட்டோம்.

"இயற்கையாகவே இந்த இனத்தோட உடல்வாகு அப்படித்தானுங்க; மடிகூட எடுப்பா வராது".

பார்த்தோம்; அவர் சொல்லியது போல்தான் இருந்தது.

"ஜம்னாபாரி ஆடுங்கிறது?"

''முகத்தைவிட காதுங்க ரொம்ப நீளமாயிருக்கும்!" - தூர இருந்து பார்த்தாலே அது தெரிந்தது என்றாலும், அவர் தூரத்திப் பிடித்து ஓர் ஆட்டுக் குட்டியை நம்மிடம் காட்டினார்; அதேபோல்தான் இருபுறமும் நீண்டு தொங்கின, காதுகள்.

## தாமரை பூத்த தடாகங்கள்

கால்நடைப் பண்ணை என்பதால் - கோல் கிராஸ், வேலி மசால், மக்காச் சோளம், பெஃபலோகிராப், ஆஃப்ரிகன், காசாமணி போன்ற புல் வகைகள் நிறைய விளைச்சல் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கென்றே 70, 80 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கொருக்கைப் பண்ணை உள்ள இடம் ஏதோ கடலோரம் போல மணல்வெளியாக இருந்தாலும், பசுமைச் சோலைபோல் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் உள்ளேயே பதினொரு தாமரைக் குளங்கள் கண்ணைக் கவருவதாக நீர்நிறைந்து காணப்படுகின்றன. வெண்தாமரைப் பூக்களும், அகன்ற அதன் இலைகளும் தண்ணீர்த் தடத்திற்கு மேலேயே தலைதூக்கியபடி நின்று அழகுகாட்டி அசைந்தாடின.

மேனி வியர்க்கக் கொளுத்தும் வெயிலிலும், மெய்மறந்து ஒரு குளக்கரையில் நின்றிருந்த



நம்முன் வந்து, புதிதாகப் பறித்த இரண்டு தாமரைப் பூக்களை நீட்டினார் ஒரு முதியவர்.

### பண்ணையின் கதை

இந்த கொருக்கைப் பண்ணை 25.3.1959-ல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இங்கே கால்நடைப் பிரிவு, பால் பிரிவு, விவசாயப் பிரிவு என மூன்று பிரிவுகள் உள்ளன.

உம்பளச்சேரி மாடுகள் ஒருவழிச் சேர்க்கைக்கு மட்டும் என்று வைத்து அதன் தனித்தன்மை கெடாமல் பாதுகாக்கப்படுகின்றன. தரமான காளைக் கன்றுகள், பால், தீவனப்புல் போன்றவை தனியாருக்கும் முறைப்படி விற்கப்படுகின்றன.

இதனுள்ளே உள்ள மேய்ச்சல் நிலம் மட்டும் 233.86 ஏக்கரில் உள்ளது; சாலைகள், கால்நடைகள் அடைக்கப்படும் கொட்டகைகள் போன்றவை 85 இருக்கின்றன.

இங்கே உம்பளச்சேரி கறவைப் பசுக்கள், கிடேரிகள், பொலிகாளைகள், வேலை மாடுகள் எல்லாமுமாக 349 இருக்கின்றன. ஜம்னாபாரி ஆடுகள், கிடாக்கள் எல்லாமுமாக 78 இருக்கின்றன.






அலுவலரிலிருந்து, தினக்கூலிப் பணியாளர்கள் வரை சுமார் 60 பேர் இந்தப் பண்ணையில் இருக்கிறார்கள்.

வேளாண்மைத் தொழிலையே தமது முக்கியத் தொழிலாக நம்பியிருக்கும் மாவட்டம் திருவாரூர் மாவட்டம். இப்படிப்பட்ட இந்த மாவட்டத்தில் இதுபோன்ற கால்நடைப் பண்ணைகளைச் செவ்வனே பராமரிப்பதும் பாதுகாப்பதும் மிக முக்கியமான ஒரு பணிதானே!

- ராஜு

"இந்தக் குளத்துலல்லாம் கானாங் கோழியாட்டம் 'சிரவி'ன்னு ஒரு புதுவகைப் பறவை இருக்குதுங்க; ஒடம்புல எலும்பே இருக்காது; சமைச்சு சாப்புட்டா அற்புதமா இருக்கும்க!"

"அப்படியா!" - என்றவாறே அந்தப் பூக்களை வாங்கிக்கொண்டு, ஜம்னாபாரியையும் உம்பளச்சேரியையும் உள்ளுக்குள் வியந்தபடி நாங்கள் எங்கள் வண்டிக்கு வந்தோம்.

"வேறே எங்கேயும் இந்த ஜம்னாபாரி, உம்பளச்சேரி இனம் கிடையாதுங்க. அரசாங்கம் மனசு வெச்சு, இன்னம் உதவி பண்ணினா, இதுங்களை நல்லபடி பெரிய அளவுல விருத்தி பண்ணலாமுங்க" - என்றார் தலையில் புல் கட்டோடு வந்த ஒரு பெண்மணி.





## திருவாரூர் மாவட்டத்தில்
# வெண்ணாறு வடிநிலக் கோட்டம்-பணிகள்



காவிரித் தாய் கர்நாடக மாநிலத்தில் குடகு மலையில் உற்பத்தியாகி, தமிழகத்தில் தவழ்ந்து, பூம்புகாரில் - வங்காள விரிகுடாவில் சங்கமமாகிறது. இப் பொன்னி நதி கர்நாடக - தமிழக மாநிலங்களில் 802 கிலோமீட்டர் பயணம் செய்து ஆங்காங்கே வாழும் மக்களுக்குக் குடிநீராகவும், நீர் மின்சக்தியாகவும், விவசாயத்திற்குத் தேவையான தண்ணீராகவும், சுற்றுலாத் தலமாகவும் பயன்பட்டு வருகிறது.

காவிரி டெல்டா நீர்ப்பாசனம் மேட்டூர் அணையிலிருந்து பெறும் தண்ணீரைக் கொண்டும், டெல்டாவில் பொழியும் வடகிழக்குப் பருவமழையைக் கொண்டும் நடைபெறுகிறது. மேட்டூர் அணைக்குக் கீழ் உள்ள பாசனப் பரப்பின் விவரம் பின்வருமாறு:

| | ஏக்கர் |
|---|---|
| மேட்டூர் அணையிலிருந்து மேலணை (முக்கொம்பு) வரை உள்ள பாசனப் பரப்பு ... | 1,90,336 |
| காவிரி வடிநிலப் பகுதியில் உள்ள பாசனப் பரப்பு (காரைக்கால் பகுதி 27,000 ஏக்கர் உட்பட) ... | 4,93,837 |
| வெண்ணாறு வடிநிலப் பகுதியில் உள்ள பாசனப் பரப்பு. | 4,96,814 |
| கல்லணைக் கால்வாய் பகுதியில் உள்ள பாசனப் பரப்பு | 2,27,471 |
| ஆகமொத்தம் பாசனப் பரப்பு ... | 14,08,458 |

கீழ்க்காவிரி வடிநில வட்டம்-காவிரி வடிநிலப் பகுதி, வெண்ணாறு வடிநிலப் பகுதி, கல்லணைக் கால்வாய்ப் பகுதிகளில் உள்ள 12,18,122 ஏக்கர் நிலங்களின் நீர்ப்பாசனத்தை நிர்வகிக்கிறது. கல்லணையில் ஆரம்பித்து வங்காள விரிகுடா வரை 110 கி.மீ. நீளமும் கடற்கரையை ஒட்டி தெற்கு வடக்காக 125 கி.மீ. தூரம் உள்ள நிலப்பரப்பில் இப் பாசனப் பரப்பு அடங்கியுள்ளது.

வெண்ணாறு, அதன் கிளை ஆறுகள் மற்றும் வாய்க்கால்களின் நீர் நிர்வாகம் செய்யும் பணியும் மற்றும் ஆறுகள், வாய்க்கால்கள், வடிகால்கள், ஏரிகளின் பராமரிப்பு மற்றும் அவைகளின்மீது அமைந்துள்ள பாசனக் கட்டுமானங்களையும் பராமரிப்பு செய்யும் பணியும் வெண்ணாறு வடிநிலக் கோட்டத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வெண்ணாறு வடிநிலப்பகுதி தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் அமைந்துள்ளது. வெண்ணாறு பகுதியில் மொத்தம் 759 கி.மீ. நீளம் கொண்ட 16 ஆறுகள் 583 ஏ. பிரிவு வாய்க்கால்கள், 44 பாசன ஏரிகள், 37 (சிஎம்பி.) வடவாறு நீட்டிப்பு வாய்க்காலின் கிளை வாய்க்கால்கள் மற்றும் 73 பெரிய அளவு வாய்க்கால்கள் இப்பகுதியில் அமைந்துள்ளன. வெண்ணாற்றின் மொத்தப் பாசன பரப்பு 4,96,814 ஏக்கர் அல்லது 2,01,058 எக்டேர் ஆகும்.

**திருவாரூர் மாவட்டம்:**

புதிதாக அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தில், மொத்தம் 446 கி.மீ. நீளம் கொண்ட 16 ஆறுகள் உள்ளன. மேலும்

இம்மாவட்டப் பகுதியில் மொத்தம்; 1399 கி.மீ. நீளம் கொண்ட 396 'ஏ' பிரிவு வாய்க்கால்களும், 70 கி.மீ. நீளம் கொண்ட 30 சி.எம்.பி. கிளை வாய்க்கால்களும் மற்றும் 28 ஏரிகளும் அமைந்துள்ளன. இவற்றின் மூலம் இம்மாவட்டத்தில் மொத்தம் 2,93,164 ஏக்கர் அல்லது 1,18,642 எக்டேர் பரப்பு பாசனம் பெறுகின்றன.

காவிரி டெல்டாவில் முக்கியப் பயிர் நெல் சாகுபடியாகும். ஒரு போக சாகுபடி (சிங்கிள் கிராப்) மற்றும் இருபோக சாகுபடி (டபுள் கிராப்) என இருவகைச் சாகுபடிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. குறுகிய காலப்பயிர்கள் "குறுவை" சாகுபடிகள் ஜூலை முதல் ஆகஸ்ட் வரை பயிரிடப்பட்டு நவம்பர் முதல் மற்றும் இரண்டாம் வாரத்தில் அறுவடை செய்யப்படுகின்றன. அறுவடைக்குப் பின்னர் அதே நிலங்களில் "தாளடி" நடவு செய்து, பிப்ரவரி மாதத்தில் அறுவடை ஆகின்றன. ஏனைய நிலங்களில் ஒரு போக சாகுபடியாகச் சம்பா நடவு செய்யப்பட்டு செப்டம்பர் மாதத்தில் துவங்கப்பட்டு ஜனவரி இறுதியில் அறுவடை செய்யப்படுகின்றன.

### வேலைகளின் விவரம்:

ஆண்டுதோறும் வழங்கப்படும் மராமத்து நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு, பாசனக் கட்டுமானங்களுக்குச் சிறப்புப் பழுதுபார்த்தல், கரைகளைச் சீரமைத்தல், மண்வாரி இயந்திரங்கள் மூலம் ஆறுகள், வடிகால்கள் மற்றும் பெரிய அளவு வாய்க்கால்களில் அடர்ந்துள்ள சீமைக் காட்டாமணி செடிகள் அகற்றுதல் மண் திட்டுகளை அகற்றுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் அவ்வப்போது வழங்கப்படும் 'ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்', வேலை வாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டம்', 'நமக்கு நாமே திட்டம்' மற்றும் 'மாவட்டப் பரவலாக்கத் திட்டம்' போன்ற சில திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு குடிமராமத்து, கரைகளைப் பலப்படுத்துதல், தூர் வாருதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1997-98ஆம் ஆண்டு மராமத்து நிதிஒதுக்கீட்டைக் கொண்டு திருவாரூர் மாவட்டத்தில் 69.65 இலட்சம் மதிப்பில் 186 சிறப்புப் பழுதுபார்க்கும் பணிகளும் மற்றும் இம்மாவட்டத்திலுள்ள சமநிலைப் பொறிகள் மற்றும் தலைமதகுகளின் அமைப்புகளுக்கு எண்ணெயிடுதல் தார் அடித்தல் போன்ற ஆண்டு பராமரிப்புப் பணிகள் 13.55 இலட்சம் செலவிலும் செய்யப்பட்டுள்ளன.

திருவாரூர் மாவட்டத்தில் வேலை வாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டத்தின்கீழ் 1996-97ஆம் ஆண்டு 10 வேலைகள் 3.95 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவரால் ஒப்புதல் வழங்கப்பட்டு, பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின்கீழ் 202 வேலைகள் ரூ.1,75,94,000 மதிப்பீட்டில் செயல்படுத்தப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் ஒப்புதலும், நிதியும் பெறப்பட்டவுடன் வேலைகள் செயல்படுத்தப்படும்.

### மண் வாரி இயந்திரப் பணிகள்:

காவிரி டெல்டா பகுதியில் ஆறுகள் வடிகால்கள், வாய்க்கால்கள் மற்றும் ஏரிகள் முதலியவற்றில் வளர்ந்துள்ளதும் மற்றும் நீரோட்டத்திற்குத் தடையாகவும் உள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை அகற்றவும் மற்றும் திட்டுகளை அகற்றவும், பாசனக் கட்டுமானங்களைப் பழுதுபார்த்துச் சீரமைக்கவும் தமிழக அரசால் அரசாணை எண்.139 பொ.ப.து. நாள் 2-4-97-ல் ரூ.10 கோடிக்குச் சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டதில் இம்மாவட்டத்தில் மட்டும் சுந்த அமைப்புக் காலத்தில் மொத்தம் ரூ.322.23 இலட்சம் மதிப்பில் 274 பணிகள் செய்துமுடிக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசால் திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி கோவிலுக்குச் சொந்தமான கமலாலயம் திருக்குளத்தின் உள்வரத்து மற்றும் வெளிப்போக்கினை அபிவிருத்தி செய்வதற்கு அரசாணை எண்.140 நாள் : 2-4-97-ல் ரூ.29 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



நெஞ்சையள்ளும் திருவாரூர் மாவட்ட நஞ்சை நிலக்காட்சி



# திருவாரூர் நகராட்சி மன்றம்



திருவாரூர் நகராட்சி மன்றத் தலைவராக இருந்து சிறப்புறச் செயல்பட்டு வருகிறார், திருமதி. யசோதா தெட்சணாமூர்த்தி அவர்கள், இளமை முதலே பொதுத்தொண்டில் பெரும் நாட்டமுடையவராக இருந்து வரும் இவர், பி.ஏ. வரை படித்திருக்கிறார்; வயதில் ஐம்பதைக் கடந்திருக்கிறார். இருந்தாலும் கூட சிறிதும் கர்வமோ, ஓயாத உழைப்பால் வரும் அயர்வோ அவரிடம் காணப்படவில்லை.

1996 - 97ம் ஆண்டுக்கு, 10.47 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள திருவாரூர் நகராட்சியின் மேம்பாட்டுக்காக ரூ.98.32 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது.

"அந்தத் தொகையில் என்னவெல்லாம் செய்தீர்கள் ?" என்று கேட்டபோது, அவர் தெரிவித்தது இது :

"நகராட்சி மன்றத்திற்காக 2 லாரிகள், ஒரு புல்டோசர் வாங்கப்பட்டது. தட்டுப்பாடற்ற குடிநீருக்காக ரூ.10 இலட்சம் செலவிடப்பட்டது. தெருவிளக்கிற்காக ரூ.10 இலட்சம் செலவாயிற்று. அதாவது 450 டியூப் லைட்டுகள், 150 சோடியம் விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. வெள்ள நிவாரண நிதிக்காக ரூ.21 இலட்சம் அளிக்கப்பட்டிருக்கிறது..."

இவையெல்லாம் தவிர திருவாரூர் மாவட்டப் பரவலாக்கத் திட்டத்திற்காக 7 பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

"இந்த மாதிரி பொதுவான பல நல்ல வேலைகளுக்காகவே அத்தொகை செலவிடப்பட்டிருக்கிறது; இதற்காக முதலமைச்சர் அவர்களே பாராட்டியிருக்கிறார்" - என்றார் நகராட்சி மன்றத் தலைவர்.



திருவாரூர் நகராட்சிமன்றக் கட்டுப்பாட்டின் கீழ், 149 தெருக்கள், 39 முக்கியச் சாலைகள் இருக்கின்றன. 30 வார்டுகள் உள்ளன. ஆதிதிராவிடர்கள் வார்டு 4, பெண்களுக்கான வார்டுகள் 10; இதில் ஆதிதிராவிடப் பெண்களுக்கான வார்டுகள் 2; பொது வார்டுகள் 8 ஆகும்.

1997 - 98 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 1.2 கோடியில் மேற்கண்டவற்றில் 48 சந்துகளுக்கு சிமெண்ட் சாலை போடப்பட்டிருக்கிறது. 102 தெருக்களுக்கும், 19 சாலைகளுக்கும் தார் போட்டிருக்கிறார்கள்.

1914 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டிருக்கிறது, இந்தத் திருவாரூர் நகராட்சி மன்றம். அப்போது, நீதிக் கட்சியைச் சேர்ந்த பாவா கெங்கப்ப முதலியார் என்பவர்தான் முதலாவது நகராட்சி மன்றத் தலைவராக இருந்திருக்கிறார்.

30 பேரை உறுப்பினர்களாகக் கொண்ட திருவாரூர் நகராட்சி மன்றத்தின் நடவடிக்கைகள் அப்பழுக்கற்றவையாக இருக்கும்படி மிகக் கவனத்தோடு கவனித்து வருவதாகச் சொன்னார், யசோதா தெட்சணாமூர்த்தி. இந்த நகராட்சி ஆணையராகத் திரு.பத்மநாபன் இருக்கிறார்.

"இந்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் 230 சோடியம் ஆவி விளக்குகள், 1,248 டியூப்லைட்டுகள் எல்லாம் போடப்படும்; கொடிக்கால் பாளையம் மகப்பேறு நிலையம் கட்டி முடிக்கப்படும். பாதுகாக்கப்பட்ட குடிநீருக்காக ரூ.20 இலட்சம் செலவிடப்படும். சுதந்திர தினப் பொன்விழா ஆண்டு - தேசியக் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.11.15 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில், மருதப்பட்டினத்தில் சோடியம் விளக்குகளும், ஒரு சிமெண்ட் சாலையும் ஒரு தார்ச்சாலையும் போடப்பட்டது. இங்கே திருவாரூரிலிருந்து நன்னிலம் போகும் சாலையில் - ஊர்க்கடைசியில் நாலுகால் மண்டபம் அருகில், இரண்டு இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேநிலை நீர்த்தேக்கத்தொட்டி ஒன்று கட்டவிருக்கிறோம். திருவாரூருக்கே அம்மையப்பனிலிருந்துதான் குடிநீர் வருகிறது; அந்தத் தொட்டி கட்டிவிட்டால் திருவாரூர் நகரவாசிகளுக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு வராது. மாவட்ட ஆட்சித்தலைவரும் அதற்கான பம்ப்செட்டுக்கு வகை செய்வதாக உறுதியளித்திருக்கிறார்" என்று திட்டங்களை அடுக்கிக் கொண்டே போனார் நகராட்சி மன்றத் தலைவர்.

நடப்பாண்டில் ஏற்பட்ட வெள்ளத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டம் திருவாரூர் மாவட்டம். ஏழை விவசாயிகள் பலர் வீடிழந்தனர்; ஏராளனமான விளைநிலங்கள் நீரில் மூழ்கிப் பயிர்கள் நாசமாயின; ஆகவே, இங்கே மட்டும் வெள்ள நிவாரணத்திற்காக ரூ.50 இலட்சம் பாதிக்கப்பட்டோருக்குத் தரப்பட்டிருக்கிறது. அத்தொகையிலேயே பழுதான சாலைகளைச் சீரமைப்பது, கழிவு நீரகற்றல், வடிகால் தொடர்பான பணிகளையும் செய்திருக்கிறார்கள்.

தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் தன் பங்கிற்குக் கொடுத்த ரூ.1½ இலட்சத்தில், தியாகராசர் கோயில் தெப்பக்குளத்தை யாரும் அசுத்தப்படுத்த முடியாதபடி, பாதுகாப்பு சிமெண்ட் வேலி அமைக்கவிருக்கிறோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து தரப்பட்ட ரூ. 1½ இலட்சத்தில், சீராளன்தோப்பில் நவீன கழிப்பிடம் கட்டித் தரப்பட்டுள்ளது. சோமசுந்தரம் பூங்கா நவீனமயமாக்கப்பட்டிருக்கிறது.

இதெல்லாம் தவிர, 10 இலட்சம் ரூபாய் செலவில், சபாபதி முதலியார் முனிசிபல் நடுநிலைப்பள்ளி, அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டிருக்கிறது.

"எல்லாம் சரி, இவ்வாறான பொதுப்பணிகளில் முழுமூச்சோடு தாங்கள் ஈடுபட உங்கள் குடும்பச் சூழ்நிலை ஒத்துவருகிறதா ?" என்று நாம் கேட்க, அவர் அதற்குச் சொன்ன பதில் -

"என்னுடைய கணவர் தெட்சணாமூர்த்தி அவர்கள், திருவாரூர் மாவட்ட ரோட்டரி சங்கத் தலைவராக இருக்கிறார். அவரும் பில்டிங் காண்ட்ராக்ட் போன்ற பணிகளில் முழுமூச்சோடு ஈடுபாடு கொண்டவர். எனக்கு இரண்டே ஆண்பிள்ளைகள்தான். ஆகவே, குடும்பத்தைப் பொறுத்தவரை எந்தப் பிரச்சினைக்கும் இடமில்லை. நானும், அந்தவகையில் செயலாற்றிவருகிறேன்." என்று தன்னம்பிக்கையோடு தெரிவித்தார் திருவாரூர் நகராட்சி மன்றத் தலைவர் திருமதி. யசோதா தெட்சணாமூர்த்தி அவர்கள்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

## சாலை வசதி

*திருவாரூர் மாவட்டத்தில் உள்ள...*

| | கி.மீ. |
|---|---|
| தேசிய நெடுஞ்சாலை | - 43.00 |
| மாவட்ட நெடுஞ்சாலை | - 394.00 |
| மாவட்டத்தில் உள்ள பிறசாலைகள் | - 782.90 |
| ஊராட்சி ஒன்றியச் சாலைகள் | - 992.00 |
| ஊராட்சிச் சாலைகள் | - 500.40 |





# 'கலைஞரின் நட்பு'

-தென்னன்

"திருவாரூர்ங்கிற ஐந்தெழுத்தைச் சொன்னாலே பக்தகோடிகளுக்கெல்லாம் தியாகேசர்ங்கிற ஐந்தெழுத்துதான் ஞாபகத்துக்கு வரும்; ஆனா என்னாட்டம் ஆசாமிங்களுக்கெல்லாம் கருணாநிதிங்கிற ஐந்தெழுத்துக் கலைஞர் பேருதான் ஞாபகத்துக்கு வரும்!" என்றார் இளமைக் காலம் முதலே கலைஞரோடு நெருங்கிப் பழகிவருபவரான திரு. கு.தென்னன்.

சதாசிவன், சிவசங்கரன், கோவிந்த பிச்சை, கம்யூனிஸ்ட்டைச் சேர்ந்தவரான தம்புசாமி, விசுவநாதன், நல்லாசிரியர் விருதுபெற்ற வரதராசன் - என்று, கலைஞரை நன்கறிந்தவராகத் திருவாரூரில் இப்போது வாழ்ந்திடுவோர் பட்டியல் நீண்டுகொண்டே போகும். ஆனால், யாராவது ஒருவரிடம் இதுபற்றிக் கேட்டறிந்தால் போதும் என்று முடிவு செய்த நாங்கள் தென்னனைப் பார்த்தால் போதும்என்று முடிவெடுத்தோம்.

அங்குள்ள கமலாம்பிகா கூட்டுறவு வங்கியின் தலைவராக இருந்து வருகிறார் இவர். இப்போதும் சரி; மாதம் இரண்டு மூன்று தடவையாவது சென்னைக்கு வந்து கலைஞரையும், அவர் குடும்பத்தாரையும் நலம் விசாரித்துச் செல்லாவிட்டால் தென்னனுக்குத் தூக்கம் வராதாம்!

"சிறு வயது முதலே உங்களுக்கும் தமிழக முதலமைச்சராக உள்ள கலைஞர் அவர்களுக்கும் பழக்கமுண்டு என்கிறார்களே, அதெப்பிடி ஏற்பட்டது?"

சில நிமிஷ யோசனைக்குப்பின் அவர் பேசத் தொடங்கினார் - "பக்கத்தாப்ல இருக்கிற திருக்குவளை கிராமம்தான் அவரோட சொந்த ஊர். அங்கே இருந்த பாடசாலைல, ஐந்தாம் வகுப்புக்கு மேல கிடையாது. அதலால, அவரை மேலே படிக்க வைக்கணும்னுதான் அவங்க குடும்பமே இந்தத் திருவாரூருக்கு வந்து சேர்ந்தது; நானும் அவரும் அன்று ஒரே கொள்கையுடையவர்களாக இருந்ததால் எங்கட்குள் ஒரு குடும்ப் நட்பு ஏற்பட்டது. அந்த நட்பே இன்றுவரை நீடிக்கிறது.





கலைஞர் பிறந்த இல்லம் - திருக்குவளை

"இளம் வயதிலேயே சுயமரியாதை இயக்கத்துல அவருக்கு அழுத்தமான பிடிப்பு ஏற்பட்டது எப்படிங்க?"

பழைய காலத்தை மீண்டும் நினைவு கூர்வதுபோல் எங்கோ பார்த்தபடி கேட்டார் - "இதை அவ்வளவு சுருக்கமா சொல்லமுடியாதுங்களே!"

"விரிவா... விளக்கமாகவே சொல்லலாம்" என்றோம் நாம்.

"மேல்ஜாதி கொடுமை, கீழ்ஜாதி கொடுமை, அக்கிரகாரத்தில் மேலே துண்டு போட்டுக் கொண்டோ, காலில் செருப்பு போட்டுக் கொண்டோ போகக் கூடாது என்ற கொடுமை. இக்கொடுமைகளை, பார்த்துதான் எங்கட்கு சுயமரியாதை கொள்கைப் பற்றும், பெரியார் மேல் பக்தியும் ஏற்பட்டது. நீதிக்கட்சியின் பதினாலாவது மாநாடு திருவாரூர்மில்லுல நடந்த காலம் அது. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ., அப்போதைய காங்கிரசில் இருந்த ஆங்கிலேயப் பிரதிநிதிகள்லாம் வந்து கலந்துகிட்டாங்க. இதுக்குக் கொஞ்சம் முன்னால.... அதாவது 1938 அல்லது 39ன்னு நினைக்கிறேன். 'தமிழ்நாடு தமிழருக்கே'ங்கிற முழக்கத்தைப் பெரியார் எழுப்பினார். இப்பல்லாம் கட்சிக்கொடி நிறத்துல வேட்டியோட கரையெல்லாம் போடுறாங்களே, அதாட்டம் அப்பல்லாம் 'தமிழ்நாடு தமிழருக்கேன்னு' வரிசையா எழுத்துக்களைக் கரையாப் போட்ட வேட்டியெல்லாம் வரும்; நிறையப் பேர் கட்டீருப்பாங்க"...

"சரி, மாநாட்டுக்கு வருவோம்..."

"என்.எஸ். சாமியப்ப முதலியார்தான் அந்த மாநாட்டுக்கு வரவேற்புக் குழுத்தலைவர். டி.என்.ராமன், டி.என். லட்சப்பா எல்லாம் கலந்துகிட்டாங்க. அவங்களோட நாங்களும் சேர்ந்து மாநாடு தொடர்பான வேலைகளையெல்லாம் பார்த்தோம். அப்பத்தான் முதன்முதல்ல, அறிஞர் அண்ணாவிடம் இளைஞர் கலைஞரை அறிமுகம் செய்துவைத்தார் டி.என்.இராமன். அந்த மாநாட்டிலதான் தமிழ்நாடு தமிழருக்கேங்கிற கோஷத்தை 'திராவிட நாடு திராவிடருக்கே'ன்னு மாற்றித் தீர்மானம் கொணர்ந்தாங்க'...



திருவாரூர் கோயில் தெப்பக்குளமான கமலாலயம்



"அதனடிப்படையில, 1944ல் சேலத்துல நடந்த 15வது மாநாட்டுலதான் திராவிடர் கழகமே உதயமாச்சு - இல்லே?"

"ஆமாமா. இதையெல்லாம் ஏன் இப்ப ஞாபகப் படுத்தறேன்னா.. அப்படியெல்லாம் இயக்கங்கள் உண்டாகிற அளவுக்கும் மாநாடுகள், ஊர்வலங்கள் நடத்தற அளவுக்கும் பெரும்பான்மை மக்களிடையே எழுச்சி மூள்ற அளவுக்கு அப்ப நாட்டு நிலைமை இருந்தது; சாதிமதப் பாகுபாடு, ஏழை பணக்காரர் வேறுபாடு மாதிரி ஏற்றத்தாழ்வெல்லாம் அதிகமாக இருந்தது; கடவுள் பெயரால் மூட நம்பிக்கையெல்லாம் ஏற்படுத்தப்படுற நிலைமை, கோயிலுக்குள்ள ஆதிதிராவிடர் வரக்கூடாதுங்கிற நிலைமையெல்லாம் இருந்தது. இதனால உண்டான ஆத்திக நாத்திக அமளியெல்லாம் இருந்தது. இப்படிப்பட்ட நிலைமையெல்லாம் மாறனும், எல்லோரும் சமம்கிற தத்துவத்தை நாட்டுமக்கள் உணரவைக்கனும்னெல்லாம் அப்பத்தான் பெரியார் ஓங்கிக் குரல் கொடுத்தார்; ஊர் ஊராகப் போயி பிரச்சாரம் செய்தார். பகுத்தறிவுபூர்வமான அவர் கருத்தை ஆதரிச்சவங்கள்ளாம் அவர் பக்கம் போனாங்க. நம்ம கலைஞர் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தால் ஈர்க்கப்பட்ட சந்தர்ப்பமும் அதுதான்!"

"அப்ப... அவர் வீட்லயெல்லாம் இதுபத்திக் கண்டிக்கமாட்டங்களா?"

"ஒரே பையன்னு செல்லம்; எதைப் பத்தியும் அவ்வளவா கண்டுக்கவும் மாட்டங்க - கண்டிக்கவும் மாட்டங்க."



கலைஞரை ஈன்றெடுத்த தாயார் அஞ்சுகம் அம்மையார் - தந்தையார் முத்துவேலர்

"சரி, காங்கிரஸ் கட்சி பற்றிக் கலைஞரோட மதிப்பீடு அப்ப எப்பிடி இருந்தது?"

"சொல்றேன்!" என்றபடி நிமிர்ந்து உட்கார்ந்தார் தென்னன். "உண்மையான தியாகிங்களை சிறு வயது முதலே நல்லபடி மரியாதை கொடுத்து மதிக்கிற குணம் கலைஞருக்கு உண்டு. இவர் திருக்குவளைல இருக்கிறப்ப, அதாவது பத்து வயசாகிறதுக்குள்ளேயே நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்றேனே! வயதான பெரியவர் ஒருவர். கதராடை, கதர்க்குல்லாய், கையில் காங்கிரஸ் கொடி, தோள்ல ஒரு கதர்ப்பை சகிதம் எப்போதாவது திருக்குவளைப் பக்கம் ஒரு ஓட்டை சைக்கிள்ல வருவார். வந்தேமாதரம், ஜெய்ஹிந்த் முழக்கமெல்லாம் போட்டுட்டு, சுத்தி நிக்கிற ஜனங்களைப் பார்த்து இந்திய விடுதலையைப் பற்றியும். அதுக்கு என்னனால்லாம் போராட வேண்டும். காந்தி, நேரு போன்றவர்கள் ஜெயில்லே எப்பிடியெல்லாம் வதைப்படுகிறார்கள் என்றெல்லாம் ரொம்ப உருக்கமா பேசுவார். அவர் பேச்சுல அப்பிடியே லயிச்சுப் போய் நிற்பார் இவர்; "இவராட்டம் நாமும் நாட்டுக்கும், மக்களுக்கும் தியாக உணர்வோட பாடுபடனும்" என்பார். அப்படி உண்மைத் தியாகிகளை மதித்துப் போற்றிப் பாராட்டும் குணம் அப்பவே பசுமரத்தாணிபோல அவர் மனசுல பதிஞ்சிருந்தது. அந்த உணர்வுதான் அவர் எம்.எல்.ஏ., ஆகி, கழகப் பொருளாளர் ஆகி, தலைவர் ஆன இப்போதும் அவருக்குப் புகழும் பெருமையும் சேரக் காரணமா இருக்குங்கிறது என்னோட கருத்து".

"தொண்டர் கலைஞர் - தலைவர் கலைஞர்... இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்னங்க?"



*1936-ல், திருவாருருக்குக் கலைஞரின் குடும்பம் வந்த பிறகு - அவர் தங்கிப் படிக்கவும், 'மாணவர் நேசன்', 'முரசொலி' ஆகிய ஏடுகள் தொடங்கவும் மூலாதாரமாக இருந்த இல்லம்.*

"முதலமைச்சர் கலைஞரையும் சேர்த்துக்குங்க!" என்று கூறிச் சிரித்து விட்டு, மேலே தொடர்ந்தார் அவர் - "எல்லாக் கலைஞரும் எனக்கு ஒரே மாதிரிதான் தெரியறார். எப்போதுமே தான் ஒரு பொறுப்பை ஏத்துக்கிட்டா... பிடிவாதமா அதை நல்லபடி நிறைவேத்தனும்ன்னு நிப்பார். நிறைவேத்திக் காட்டுவார். 1958ல் இதே திருவாரூர்ல தி.மு.க. மாநாட்டை அவரே முன் நின்று நடத்தினார். பந்தல் அலங்காரம், பந்தல்ல முக்கனித் தோரணம், வர்ற தொண்டர்கள் தங்க வசதி, சாப்பாட்டு வசதின்னு எல்லாத்தையும் அவரே எடுத்துப் போட்டுக்கிட்டு கவனிச்சார். அதுமட்டுமல்ல; கொடி கட்றது, தோரணம் கட்றது, நோட்டீஸ் குடுக்கிறது, போஸ்டர் ஒட்றது எல்லாத்துக்கும் தானே முன்னால வந்து செய்வார். அப்படிச் செய்தாதான் அவர் மனசு திருப்திப்படும். எந்த ஒரு காரியத்தையும் செய்து முடிக்கிறவரை தூங்க மாட்டார். எனக்குத் தெரிஞ்சி அண்ணா இருந்தப்ப அதிக வசூல் காட்டின முதல் மாவட்ட மாநாடே அதுதான்னு ஞாபகம். தலைவரானாலும், முதலமைச்சரானாலும் அந்த மாதிரி குணமெல்லாம் எப்பவும் அவர்கிட்டேயிருந்து மாறலியே!' ஒரு உதாரணம்-

1943ல் திருச்சிராப்பள்ளியில வட மண்டல திராவிட மாணவர் மாநாடு நடந்தது. கலைஞரும், நானும், தவமணிராசனும் போயிருந்தோம். நல்லா நடந்தது. அங்கேர்ந்து திரும்பி வரும்போது அதைவிடச் சிறப்பா நாமும் நம்ம திருவாரூர்ல ஒரு மாநாடு நடத்திக் காட்டனும்னார், கலைஞர். அப்படி திருவாரூர்ல நாங்க நடத்துனதுதான் தென்மண்டல திராவிட மாணவர் மாநாடு!"

"அடடே, அப்பிடியா?"

"ஸ்கூல்ல படிச்சுக்கிட்டிருந்த காலத்துலேயே சிறுவர் சீர்திருத்தச் சங்கம், மாணவர் ஒற்றுமைச் சங்கம்னெல்லாம் ஆரம்பிச்சு திறமையா நடத்தினார். எதைச் சாதிக்கனும்னாலும் நமக்குள் ஒற்றுமை இருக்கவேண்டியது அவசியம்பார். அதெல்லாம் ஒரு சாதாரண அமைப்பா இருந்தாலும்கூட, அதுக்கெல்லாம் அப்பவே முறைப்படி தேர்தல் நடத்தித்தான் தலைவர், செயலாளர், பொருளாளரையெல்லாம் தேர்ந்தெடுப்பார். ஆறாவது படிக்கும்போதே - 12 வயசுலேயே அவருக்கு இருந்த இதுமாதிரி குணங்கள்தான், 74 வயசாகிற இன்னிக்கி கழகத்தை ஜனநாயக அமைப்பாக நடத்தி வருகிறார். இந்த நாட்டையும் நல்லபடியா நிர்வகித்து வருகிறார்!"

"திருவாரூர்லயிருந்து முரசொலி துண்டு வெளியீடு வந்தப்ப... நீங்கதான் கிளைக் கழகச் செயலாளரா இருந்தீங்க போலிருக்கு?"

"ஆமா, சீர்திருத்த இயக்கத்திலே இருந்தேன். அப்பக்கூட கலைஞர் இப்பிடித்தான் - எழுதறது, புருப் படிக்கிறது, பக்கம் போடறதுன்னு மட்டும் நின்னுடமாட்டார். தானே, போஸ்டாபீசுக்குத் தலையில 'பண்டிலா' கட்டி சுமந்துகிட்டுப் போவார். முதன் முதல்ல அந்தத் துண்டறிக்கையைத் தாமா முன்வந்து எங்களுக்கு அச்சடிச்சு முரசொலியை கொடுத்தவரே அப்ப திருவாரூர்ல இருந்த ஒரு காங்கிரஸ்காரர்தாங்க; நல்ல ஆத்திகரும் கூட".



"திருவாரூர்ல முரசொலி துண்டுப் பிரசுரம் நடத்தினப்ப நடந்த முக்கியச் சம்பவம் ஏதாவது..."

"ஏதாவதா? நிறைய இருக்கு. ஒண்ணு வேணும்னா சொல்றேனே! சிதம்பரத்துல அப்ப நடத்தப்பட இருந்த வருணாசிரம மாநாட்டை இவர் அதுல கண்டிச்சு எழுதப்போயி... அதனால இவரே சிதம்பரத்துக்குள்ள வரப்பிடாதுன்னு தடை போட்டுட்டாங்க. இதுவரைக்கும்... நிறையப்பேர் அதைப்பத்திப் பேசியிருக்காங்க எழுதியிருக்காங்க. இதுல முக்கியமான சேதி என்னன்னா... அப்ப இருந்த வெள்ளைக்காரக் கலெக்டர், கலைஞர் எழுதியிருந்ததுபத்திப் புரிஞ்சிகிட்டு, அந்த மாநாட்டையே சிதம்பரத்துல நடத்துக்கூடாதுன்னு தடைவிதிச்சிட்டார்னு ரொம்பப் பேருக்குத் தெரியாது!"

"அந்தக் காலத்துல ஒங்கரெண்டு பேருக்கும் பொழுதுபோக்கு என்னவா இருந்ததுங்க?"

சிரிப்புடன் ஆரம்பிக்கிறார் - "எதைச் சொல்றது, எதை விடறதுன்னு தெரியலே. திருவாரூர் கடைத்தெருவுல பி.ஒ.ராஜகோபால்ன்னு ஒருத்தர் காசுக்கடை வெச்சிருந்தார். அவர்தான் அப்ப இந்த ஊர் திராவிடநாடு பத்திரிகை ஏஜெண்ட். திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவரும் கூட. நேரம் கிடைக்கிறப்பவெல்லாம் அங்கபோய் உட்கார்ந்துக்குவோம். கலைஞர்... உரத்தகுரல்ல... என்கிட்ட பேசறாப்ல, சீர்திருத்த கருத்துக்களைப் பத்தியெல்லாம் பேச ஆரம்பிப்பார். போற வர்ற ஜனங்க மட்டுமில்லாமெ... அடுத்த எதிர்த்த கடைக்காரவங்கள்ளாம் வந்து நின்னு கூட்டமா கேட்டு ரசிப்பாங்க. இதனால... அவங்க வியாபாரம் பாதிச்சிருக்கும் போலிருக்கு - 'இங்கு வியாபாரம் தவிர வேறு எதுவும் பேசக்கூடாது'ன்னு ஒரு நாள் போர்டு எழுதி வெச்சுட்டாங்க. மறுநாள் அதைப் போய்ப் பார்த்ததும் கலைஞர் என்ன செய்தார்ன்னா... ஒரு கல்யாணத்துக்கு அன்பளிப்பு தர ஒரு வெள்ளி டம்ளர் வாங்கறாப்ல வாங்கி, அதைக் கையில வெச்சுகிட்டு விலைபேசறதும்.. என்கிட்ட "ஊரு எவ்வளவு கெட்டு போச்சுப் பார்த்தியா?", "திராவிட நாட்டுல அண்ணா எழுதிருந்ததைப் படிச்சியா?" அப்படீன்னெல்லாம் எப்போதும் போலப் பேச ஆரம்பிச்சுட்டார். எங்க தந்திரத்தைக் கடைக்காரரும் மத்தவங்களும் புரிஞ்சுகிட்டாங்க. இவனுங்களை ஜெயிக்க முடியாதுன்னு முடிவு பண்ணி.. மறுநாளே அந்த போர்டை எடுத்துட்டாங்க!"

- இவ்வாறு சொல்லிவிட்டு அவர் சிரிக்க, அவேராடு நாமும் சேர்ந்து சிரித்தோம்.

"தியாகராசர் கோயில்ல தேன் குழல்னு ஒரு பலகாரம் விற்கும்; ஓரணா விலை. அதை வாங்கிச் சாப்பிட்டுக்கிட்டே கோயிலுக்குள்ளே போயி நண்பர்களோட சேர்ந்து... எங்கனா உட்கார்ந்து மணிக்கணக்குல பேசுவோம். எல்லாம் பகுத்தறிவு... சீர்த்திருத்தம் பத்தின சமாச்சாரங்களாத்தான் இருக்கும். அப்புறம் கால் பந்தட்டாம்னா கலைஞருக்கு ரொம்பப் பிடிக்கும்; நல்லாவும் ஆடுவார். கமலாலயம் குளத்துல நீச்சலடிப்போம்.

"ஓ, நீச்சல்னதும் ஞாபகம்வருது. அதுபத்தி... கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரா இருந்த கல்யாணசுந்தரம் கூட ஒரு தடவை பேசீருக்காரில்லே?"



*திருக்குவளையில் - கலைஞர் பிறந்த இல்லம் இருந்த இடத்தில் அமைந்துள்ள, முத்து வேலர் நூலகம் - அன்னை அஞ்சுகம் படிப்பகம். 8. 6. 1972-ல் மேதகு தமிழக ஆளுநர் திரு.கே.கே.ஷா அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.*

"அவர் பேசல... அவர் சொன்ன ஒரு சமாச்சாரத்துக்குப் பதில் சொல்றப்ப கலைஞர்தான் குறிப்பிட்டார். அதாவது, எதையும் ஆரம்பிக்கத்தான் கலைஞருக்குத் தெரியுமே தவிர, சரியா முடிக்க மாட்டார்னு ஒரு சமயம் கல்யாணசுந்தரம் பேசினார். நானும் அவரும் மாணவரா இருந்த காலத்துல... கமலாலயம் குளத்துல இக்கரையிலிருந்து அக்கரைக்குப் போவோம்னு பேசிகிட்டு நீச்சலடிக்க ஆரம்பிச்சோம். பாதி குளத்துல இருக்கிற மையமண்டபம் போனதும் நான் களைச்சுப் போயிட்டேன்; என்னால முடியலே; போசாமெ திரும்பிப்போயிறலாம்னேன், கலைஞர் விடலை; வந்த தூரமும்.. அக்கரைக்குப் போக வேண்டிய தூரமும் ஒன்னுதானேய்யா, குதிச்சி நீஞ்சு, அக்கரைக்கே போயிருவோம்னு குதிச்சுட்டார். வேற வழியில்லாமெ படாத பாடுபாட்டு... ஒரு வழியாப் போய்ச்சேர்ந்தேன். இந்தச் சம்பவத்தைச்சொல்லி - 'எதையும் பாதியில் விட்டுவிடும் குணம் எப்போதுமே இந்தக் கருணாநிதிக்கு இருந்ததில்லை! என்று கல்யாணசுந்தரத்திற்குப் பதில் சொன்னார், கலைஞர்."

**பேச்சு வழக்கு!**

**வயதில் முத்தவர்களை "ஐயா" என்று அழைப்பதும், இளையவர்களை "வாய்யா", "என்னையா", "என்ன தம்பி" என்பதும் - பெண்களானால் "என்னம்மா", "என்னக்கா" என்பதும் திருவாரூர் மாவட்ட மக்களிடம் வழக்கிலிருக்கிறது.**

"பொறுத்தமான பதில்தான்" என்றோம் நாம்.

"சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்னு வெறும் வார்த்தை அலங்காரத்திற்கு மட்டுமில்லை; சொன்னாப்லயே விடாப்பிடியா செய்துகாட்டுகிற பிடிவாத குணமும் அன்று முதலே கலைஞருககு உண்டு....!" என்றார் தென்ன்ன்.

வேறு ஏதோ புதிய செய்திவரப்போகிறது என்று நாம் நினைத்தது வீண்போகவில்லை -

"இப்பல்லாம் பொதுத் தேர்தல்ல வேட்பாளரா நிக்கிறவங்க வாக்குறுதிகளை வாரி வழங்கறாப்ல, அந்தக்கால நகர மன்றத் தேர்தல்ல போட்டியிடறவங்களும் தர்றதுண்டு. அதுமாதிரி, இந்த ஊர்ல இருக்கிற ஒரு குளத்துள படித்துறை இல்லாம இருந்தது. குளிக்கப் போறவங்க - குறிப்பா பெண்கள் கஷ்டப்படுவாங்க. தேர்தல்ல போட்டியிடறவங்க 'அதை நான் கட்டித் தர்றேன்னு' சொல்லி லகுவா ஜெயிச்சுருவாங்க. அப்புறம் மறந்துடுவாங்க. அந்த மாதிரி ஒரு தேர்தல்ல வந்து, காங்கிரஸ்காரர் ஒருத்தர்... பெரிய பணக்காரர். அந்த வார்டுல நின்னார். அப்பவெல்லாம் கட்சி ரீதியா யாரும் போட்டியிடறதில்லை. ஆனா... கலைஞர் தூண்டுதல் பேர்ல, அந்த வார்டுல டாக்டர் விஜயராகவன் போட்டியிட்டார். அவரை ஆதரிச்சுப் பேசிய கூட்டத்திலெல்லாம் 'மற்றவர்கள் மாதிரியல்ல நாங்கள்; எங்கள் வேட்பாளர் ஜெயித்தாலும் ஜெயிக்காவிட்டாலும் கட்டாயம் அந்த படித்துறையைக் கட்டித்தருவோம்' என்று தவறாமல் அறிவித்து வந்தார். கடைசியில் அந்த வார்டில் காங்கிரஸ் வேட்பாளர்தான் ஜெயித்தார். ஆனால் கலைஞரோ, மக்களுக்குத் தாம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, அப்போதே மூவாயிரம் ரூபாய் செலவில் இந்தக் குளத்திற்குப் படித்துறை கட்டித் தந்து மக்கள் மதிப்பைப் பெற்றார்!"

"அறிஞர் அண்ணா அவர்கள் கலைஞர் மீது கொண்டிருந்து அன்பை விளக்கப் புதுசா ஏதாவது சம்பவம்?..."

"அப்படிப்பட்ட சம்பவங்கள் நிறையே இருக்குதுங்க. கிட்டத்தட்ட அதுல பாதிதான் மக்களுக்குத் தெரிஞ்சிருக்கும். கலைஞரா சொன்னாத்தான் மீதத்தை நாடு அறியும்!" என்றபடி, வசதியாக உட்கார்ந்து கொண்டு பேசினார் தென்னன்.

"கலைஞர் எதையும் சொன்னா சொன்னபடி செய்வார்ங்கிறது எவ்வளவு சரியோ, அதே மாதிரி க்ஃரியங்களைப் பரபரப்போடும் மிக வேகமாகவும் செய்து முடிப்பார். யாராவது அவர் முதுகுல குத்த முயற்சி பண்றதா தெரிஞ்சா, தன் முழுத்திறனையையும் பயன்படுத்தி ஜெயிச்சுக் காட்டுவார். அப்பிடியொரு முரட்டுப் பிடிவாதகுணம். இதனாலேயே இவர்மேல எப்போதும் தனிப்பாசத்தோடும் கவலையோடும் இருந்தார் அண்ணா. இராஜாஜி டில்லியில் கவர்னர் ஜெனரலாக இருந்த நேரம் அது; அவர் தஞ்சாவூர் வர்றதா இருந்தப்ப, பள்ளி அக்கிரகாரத்துல அவருக்குக் கறுப்புக்கொடி காட்டப்படும் என்று கலைஞர் அறிவிச்சுட்டார். அதுமட்டுமில்லாமெ, சுத்துப்பட்ட ஊர்கள்லேல்லாம் போயி கூட்டம் நடத்தி, தாம் எடுத்த அந்த முடிவுக்கான காரணத்தையும் விளக்கிப் பல பொதுக்கூட்டங்களெ நடத்தி, பொது மக்கள் ஆதரவையும் திரட்டீட்டார். அப்போது கலைஞருக்கு... அண்ணா ஒரு நாலுபக்கக் கடிதம் எழுதினார். அதுல - "ஆட்சி அவர்கள் கையில் இருப்பதால் காவல்துறை மூலம் கண்மூடித்தனமாகத் தண்டிப்பார்கள். ஆகவே, ஒரு இடத்தில் மட்டும் கறுப்புக்கொடி காட்டுவதோடு நிறுத்திக் கொள்ளவும். உன் மூலம் ஆகவேண்டிய காரியங்கள் இன்னும் ஏராளம் இருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டிருந்தார்" - என்று சொன்ன திரு. கு. தென்னன் அவர்கள், அக் கடிதத்தையும் தேடிப்பிடித்துக் கொண்டுவந்து நமக்குக் காட்டினார்.

உள்ளபடியே, அவர் தொடக்கத்தில் சொன்னது போலக் கலைஞருக்கும் அவருக்கும் உள்ள தொடர்பை விளக்க ஒரு தனிப்புத்தகமே எழுதி வெளியிடலாம்; அவ்வளவு சங்கதிகள் இருக்கின்றன!

**- பி.எல்.ராஜேந்திரன்**





# திருவாரூர் தியாகராசர்

தெற்கு வடக்காக 666 அடி நீளமும், கிழக்கு மேற்காக 846 அடி அகலமும் உடைய இந்தக் கோயிலின் பாதுகாப்பு அரணாக விளங்கும் மதில் சுவரின் உயரம் 30 அடி.

தியாகராஜ சுவாமிகள் திருக் கோயிலின் கிழக்கே உள்ள கீழ ராஜ கோபுரத்தின் உயரம் 118 அடி; மேற்கிலும், வடக்கிலும் உள்ள கோபுரங்களின் உயரம் தலா 101 அடி; தெற்குக் கோபுரம் மட்டும் அவற்றையெல்லாம் விட சற்றுக் குள்ளம்.

• '**தி**ருவாரூரில் பிறந்தால் முக்தி' என்றெல்லாம் பக்தகோடிகள் பலபடப் பாராட்டக் காரணமாக விளங்குவது - திருவாரூரில் விண்தொட நிற்கும் அழகுமிகு கோபுரங்களோடு கூடிய அருள்மிகு **தியாகராசர் கோயில்தான்.**

இறைவன், லிங்க வடிவில் காட்சிதரும் சப்தவிடங்கத் தலங்கள் 7 ஆகும்.

திருவாரூர், திருக்காரவாசல், திருக்குவளை, திருவாய்மூர், திருநாகை, திருமறைக்காடு, திருநள்ளாறு- ஆகியவைகளே அவை அவற்றுள் முதல் இரண்டு தலங்களும் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவை

அடுத்துள்ள நான்கும் நாகை மாவட்டத்தில் இருக்கின்றன. கடைசியாக உள்ளது புதுவை மாநிலத்தில் இருக்கின்றது.

15 ஏக்கர் பரப்பளவில் - சரியாகச் சொல்லுவதானால் 6,53,400 சதுர அடி பரப்பளவில் அருள்மிகு தியாகராஜ சுவாமி கோயில் பரவியிருக்கிறது.

கோயில் குளமான கமலாலயத்தின் பரப்பளவோ 18 ஏக்கர்; அதாவது 7,84,080 சதுர அடி.

## கோபுரங்கள் - விமானங்கள்

இன்னும் தெளிவாகச் சொல்லுவதென்றால் - ஒன்பது ராஜகோபுரங்கள், 80 விமானங்கள், 12 பெரிய மதிற்சுவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க 13 மண்டபங்கள், 15 கிணறுகள், 3 நந்தவனங்கள், 3 பெரிய பிரகாரங்கள், நூற்றுக்கு மேலான சந்நிதிகள் இக்கோயிலுக்குள் அடக்கம்.

இங்குள்ள பஞ்சமுக வாத்தியம் எனப்படும் குடமுழா வாத்தியம் பற்றித் தேவாரத்திலேயே பாடப்பட்டிருக்கிறது.

திருவாரூரின் கீழவிதியில் இருக்கின்ற அருள்மிகு பழனியாண்டவர் திருக்கோயிலும், சன்னதி தெருவில் இருக்கின்ற அருள்மிகு திருநீலகண்ட சுவாமிகள் திருக்கோயிலும் இந்தத் தியாகராசர் கோயிலின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. இந்தக் கோயிலோடு தருமபுரம் ஆதீனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ராஜன் கட்டளை இருக்கிறது.



ஆரூர்க் கோயிலும் ஆழித் தேரும்



சோழ வளநாடு சோறுடைத்து' என்ற சொற்கோவை புகழ் மிக்கதாகும். நீதி வழுவா நெறிமுறைக்கும் அந்த மண்ணில் பஞ்சமில்லை. மனுநீதிச்சோழன் தன் மகனையே தேர்க்காலில் இட்டு . பரிதவித்த பசுவுக்கு நீதி வழங்கினான் என்று பேசுகிறோமல்லவா? அந்தச் சரித்திரச் சம்பவம் நடைபெற்றது திருவாரூரிலேதான்!

அரசு முதல்நிலை நிர்வாக அதிகாரி திரு.கே.நடராஜன் ஆலயப் பணிகளைக் கவனித்து வருகிறார்.

## 13 கட்டளைகள்

நஞ்சை சுமார் 856 ஏக்கர், 12 சென்டும் - புஞ்சை சுமார் 1017 ஏக்கர், 99 சென்டும் இந்தக் கோயிலுக்கு உண்டு; நிர்வாகியின் கட்டுப்பாட்டில் இது இருந்தாலும், 13 கட்டளைகளுக்கு உட்பட்டே யாவும் உள்ளன; கோயிலுக்கென்று தனியே நிலம் எதுவும் இல்லை. எல்லாம் -

அபிஷேகக் கட்டளை, அன்னதானக் கட்டளை, அர்த்தசாமக் கட்டளை, விஷு புண்ணிய காலக் கட்டளை, உள்துறைக் கட்டளை, பாலாயி கட்டளை, சுக்கிரவாரக் கட்டளை, பரிவட்டக் கட்டளை, திருச்சாந்து கட்டளை, கற்பூரக் கட்டளை, லோகநாயகி அம்மாள் தர்மக் கட்டளை, தெப்பத் திருநாள் மண்டகப்படி கட்டளை, ஆலய அலுவலகம் - ஆகிய 13 கட்டளைகளுக்கு உட்பட்டே இருக்கின்றன.

இதனால், சுதந்திரமாகச் செயல்பட முடியாததனாலோ, போதுமான நீர்வளம் காணாத விளைநிலம்போல இவ்வாலயம் பொலிவிழந்து காணப்படுவதாக நமக்குள் ஓர் உணர்வு எழுகிறது. அண்மையில் நடைபெற்ற ஆழித்தேரோட்டம் கூட மிகச் சிரமத்துடனேயே நடத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆனால், தருமபுரம் ஆதீனத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற ராஜன் கட்டளைக்கு மட்டும் 1942 ஏக்கர் 8.3 சென்ட் நிலம் இருக்கிறது.

மிகப்பெரிய கோயிலாக இருப்பதால் - திருவாரூர்க் கோயில் (தஞ்சைக் கோயிலை அடுத்து) 'பெரிய கோயில்' என்றே சைவர்களால் சிறப்பித்துக் குறிப்பிடப் படுகிறது.

திருவாரூர் தியாகராசப் பெருமானுக்குத் தூதுவளைக் கீரையும், பாகற்காய் நைவேத்தியமும் படைக்கப்படுவது ஒரு சிறப்பாகும்.

இந்தக் கோயிலுக்குக் கடைசியாக 4-4-88ல்தான் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இங்கேயுள்ள உற்சவர் தியாகராஜ சுவாமிகள் எனினும் மூலவர் வன்னிகநாதசுவாமி (புற்றிடங்கொண்டான்) எனப்படுகிறார். அம்மன்களின் பெயர்கள் - நீலோற்பலாம்பாள் (அல்லியங் கோதை), கமலாம்பாள்.

## பாதுகாப்பு மையம்

திருவாரூர் தியாகராசர் ஆலயத்தினுள்ளேதான் தமிழ்நாட்டிலேயே உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் அமைந்துள்ளது, தக்க காவல் பலத்தோடு.

அயல்நாடுகளுக்குக் கடத்திச் சென்றோரிடமிருந்து அரும்பாடுபட்டு மீட்கப்பட்ட சிவபுரம் நடராசர், திருவேள்விக்குடி நடராசர், பத்தூர் நடராசர் போன்ற அற்புதமான தமிழக உலோகத் திருமேனிகள் பல இங்கேதான் மிகுந்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருக்கின்றன.

திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய வேலை நாட்களில் மட்டுமே மிகுந்த கண்காணிப்போடு அவற்றிற்குப் பூஜை நடைபெறுகிறது. இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் எஸ்.முனியப்பன் கவனிப்பில் இம் மையத்திலிருக்கின்ற சுவாமி சிலைகள் உள்ளன.



நெல் விளைச்சலுக்கு அடுத்தபடியாகத் திருவாரூர் மாவட்டத்தில் - கரும்பு, வாழை, தென்னை, பனை ஆகியவற்றின் விளைச்சல் அதிக அளவில் இருக்கிறது.

## கலைஞரால் ஓடிய ஆழித்தேர்

தென்னாட்டிலேயே திருவாரூர்த்தேர் மிகவும் பிரசித்தமாகும். 1926-ல் நேர்ந்த தீ விபத்தால் பாதிக்கப்பட்ட இத்தேர், 1930-ல் மறுபடியும் சீரமைக்கப்பட்டது. 96 அடி உயரமும், விழாக்கால அலங்காரம் எல்லாமுமாகச் சேர்த்து, 300 டன் எடை கொண்டது இது.

*'ஆழித்தேர் வித்தகனை*
*நான்கண்டது ஆரூரே'...!*

- என்று அப்பர் பெருமான் புகழ்ந்து பாடியிருக்கிறார். 'ஆழித்தேர்' எனில், 'கடல்போல் அகன்ற மேல்தட்டுடைய பெரிய தேர்' என்பதாகும்.

'வேதாரண்யம் விளக்கழகு', 'திருவாரூர் தேரழகு' என்பார்கள்.

சென்ற ஆண்டு மே திங்கள் 24,25,26 ஆகிய மூன்று நாட்களும் இந்தத் தேர் ஓடியது. இது நிலையிலிருந்து புறப்பட்டு, மீண்டும் அங்கே வர மூன்று நாட்களாகும்.

அஸ்த சாதாரண வருஷம், வைகாசி 3, ஞாயிற்றுக்கிழமை அஸ்த நட்சத்திரத்தன்று தான் நெடுங்காலத்திற்குப் பின், இத்தேர் ஓடியது!

நீண்ட காலம் ஓடாமல் கிடந்த இந்த ஆழித்தேரை, பெருமுயற்சி எடுத்துக்கொண்டு ஓடச்செய்த பெருமை கலைஞர் அவர்களையே சேரும். ஆம், 1970-ல் தமிழக முதலமைச்சராகக் கலைஞர் அவர்கள் இருந்தபோதுதான் நீண்ட காலத்திற்குப் பின் - அதாவது 25 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தத் தேர் ஓட வகை செய்யப்பட்டது!

இதற்கு அப்போது பெரிதும் உதவியவர்கள் BHEL நிறுவனத்தார் ஆவர். ஆம்; தேருக்கு ஏற்றபடி மிகப்பெரிய தேர்க்கால்களை - சக்கரங்களை - அவர்களே செய்து கொடுத்து உதவினார்கள். இதற்கு அங்கே அப்போது முனைந்து நின்றவர், பொதுமேலாளராக இருந்த திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவராவார்.



தேர்க்கால்கள் செய்திட அந்நாளில் ஆன செலவு, அப்போதைய மதிப்பீட்டின்படி ரூ.4 இலட்சம் என்கிறார்கள்.

அதற்குப் பிறகு இப்போதுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ரூ. 2 இலட்சம் நிதிஉதவி செய்யப்பட்டு - ஆழித்தேர் எனப்படும் அந்த அலங்காரத்தேர் சென்ற மாதம் 26-ஆம் தேதி நகர்வலம் புறப்பட்டிருக்கிறது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் உற்சாக முழக்கத்தோடும் - நாதசுரம், பேண்டு வாத்தியம், கொம்பு, முரசம், எக்காலம், அதிர்வேட்டு, தேவார இசைப்பாடல்களின் முழக்கத்தோடும் இத்தேர் நகர்ந்து, நகர்ந்து வரும்போது - கமலாலயம் குளத்து நீரில் குமிழ் கிளம்புமாம் - அதிசயத்தோடு சொல்கிறார்கள் !

இந்தியா முழுவதிலும் உள்ள 64 சக்தி பீடங்களுக்கெல்லாம், ஆட்சிபீடமாக அமைந்துள்ளவை 5 ஊர்களாகும். அவை -

காசி (விசாலாட்சி), மதுரை (மீனாட்சி), காஞ்சி (காமாட்சி), திருவாரூர் (கமலாயதாட்சி), நாகை (நீலாயதாட்சி) ஆகியவையாகும்.

இக்கோயிலில் உள்ள அம்பிகை ஞானசக்தியாகவும் (கமலாம்பிகை), கிரியா சக்தியாகவும் (நீலோத்பலாம்பாள்), இச்சா சக்தியாகவும் (கொண்டி) வடிவு கொண்டுள்ளாள் என்பர்.

மதுரை சொக்கநாதர் 64 திருவிளையாடல் புரிந்தாரெனில் - திருவாரூர் தியாகேசப் பெருமாள் 364 திருவிளையாடல் புரிந்தார் என்கிறது புராண வரலாறு.

இங்குள்ள தேவாசிரியம் எனப்படும் ஆயிரங்கால் மண்டபத்தில் சைவ சமயச் சான்றோர் கூடி எடுக்கும் முடிவே, உலகெங்குமுள்ள சைவ சமயத்தினர் அனைவராலும் பின்பற்றப்படும் நிலைமை அந்தக் காலத்தில் இருந்திருக்கிறது.

## கமலாலயத்தில் படகோட்டம்

கோயில் குளமான கமலாலயத்தில்தான் திருவிழாக் காலத் தெப்போற்சவம் நடைபெறும்; இக்குளத்தில் எப்போதும் நீர் நிறைந்திருக்கிறது. இதன் நடுவே உள்ள சிறுகோயில் ஒன்றிற்குப் போய்வரவும், குளத்திற்குள்ளேயே குதூகலச் சுற்றுலா செல்லவும் என - தமிழக அரசு சுற்றுலாத்துறை மூலம் 20.4.98ல் இரண்டு படகுகள் விடப்பட்டிருக்கின்றன.

ஒன்று: காலால் மிதித்து 2 பேர் இயக்கிச் செல்லும் ஃபெடலிங் போட்; மற்றொன்று : 4 பேர் அமர்ந்து செல்லும் 'மோட்டார் போட்'. இதற்குக் கட்டணம் ரூ.3.

மைய மண்டபம் வரை மட்டுமே சென்றுவரத்தக்க வகையில், கயிறு கட்டி, அதைப் பிடித்தவாறே போய்வரத்தக்க இலவசப் படகு ஒன்றும் விடப்பட்டிருக்கிறது.

திருவாரூர் திருக்கோயிலுக்குச் சொந்தமான தெப்பக்குளம் (கமலாலயம்) கால்வாய்ச் சீரமைப்பிற்காகத் தமிழ்நாடு அரசால் ரூ.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இசைப்பள்ளி

சங்கீத மும்மூர்த்திகள் பிறந்தது இந்தத் திருவாரூரிலேதான். எனவே, எங்கும் இசைமயமாக இருக்கும் தியாகராசர் கோயிலில், நாதசுரம் - தவில் ஆகியவற்றைக் கற்பிக்கும் இசைப் பள்ளியொன்று 3-6-97ல் அரசு இந்துசமய அறநிலையத்துறை மூலம் நடத்தப்பட்டு வருகிறது.

இதில் 15 சிறுவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு இங்கேயே தங்கிப் பயின்று வருகின்றனர்; இவர்களுக்கு இசை கற்பிக்க ஓர் ஆசிரியர் பணிக்கமர்த்தப்பட்டிருக்கிறார்.

## இலவசத் திருமணம்

அருள்மிகு தியாகராசர் திருக்கோயிலில் மாண்புமிகு தமிழ்நாடு அரசு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.மு.தமிழ்க்குடிமகன் அவர்களால் - 8.3.98 அன்று ஏழை எளியவர்கள் 55 ஜோடிகளுக்கு இலவசத் திருமணம் செய்துவைக்கப்பட்டது.

ஒவ்வொரு ஜோடிக்கும் அரசின் முறைப்படி, ஆலயப்பணிகளின் உபரி நிதியிலிருந்து தலா ரூ.3,000 பெறுமானமுள்ள பொருட்கள் வழங்கப்பட்டன. 2 கிராம் பவுனில் தாலி, வேட்டி- சட்டை - துண்டு, சேலை-ரவிக்கை, குடம், குத்துவிளக்கு, 2 தட்டு, குங்குமச் சிமிழ் போன்றவைகளே அவை.

திருமணத்தன்றும், அதற்கு முதல் நாளும் - மணம் செய்துகொள்ளும் ஒவ்வொரு தம்பதியரின் உறவினர்கள் 25 பேருக்கு 2 வேளைச் சாப்பாடு, வடை - பாயசத்தோடு போட்டுக் கோலாகலமாகத் திருமணத்தை நடத்தி, வழிச்செலவுக்கும் பணம் கொடுத்து அனுப்பிவைத்திருக்கிறார்கள்.

## பாடல்பெற்ற தலம்

அருகில் உள்ள மாவட்டத்தில் இருக்கின்ற சீர்காழிக்கு அடுத்தபடியாக, அதிகமான தேவாரப்பாடல் பெற்ற திருத்தலம் திருவாரூர்தான்.

அப்பர், சுந்தரர் சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய சைவசமயக் குரவர் நால்வராலும் பாடப்பெற்ற கோயில் இது. இக்கோயில் பற்றி 330 தேவாரப் பாடல்களும், திருவாசகப் பாடல்களும் இருக்கின்றன. வேறுபல புறம்பாடல்களும் உண்டு. தெலுங்கு, மராட்டிய, சமஸ்கிருத இலக்கியங்களிலும் இக்கோயில் பற்றிச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

*தாய் உள்ளம்
என்பது
பெண்களுக்கு
மட்டுமே
உரியதல்ல; அது
வீரமுள்ள
ஆண்களுக்கும்
உரியதாகும் என்பது
என் வாதம்!*

**- கலைஞர்**

இங்கு வாழ்ந்த நம்பி ஆரூரன் (சுந்தரமூர்த்தி சுவாமிகள்) எழுதிய திருத்தொண்டத் தொகைதான், சேக்கிழாரின் பெரிய புராணத்திற்கே மூலம் எனப்படுகிறது.

'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று முன்பு பாடப்பட்டிருப்பினும் - 'திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்' என்று இத்'திருவாரூர்க் கோயிலைப் பாடவந்த சுந்தரமூர்த்தி நாயனார் பாடியிருப்பது குறிப்பிடத் தக்கது.

சிற்பச் சிறப்புகளும், ஓவிய வனப்பும் கொண்டு - எப்போதும் நாதசுர இசை தவழக் காணப்படும் இக்கோயில் கட்டப்பட்டது யார் காலத்தில் என்ற வரலாறே இல்லை! எல்லாப் பிரகாரங்களையும், எல்லாக் கோபுரங்களையும் ஒருவரே கட்டியதாகவும் தெரியவில்லை.

பெரிய புராணத்தின் துணைகொண்டு - இக்கோயில் முற்காலச் சோழர் காலத்தே கட்டப்பட்டிருக்கலாம் என்று கூறுகின்றனர் சிலர்; இதற்கு அவர்கள் காட்டும் ஆதாரம், பெரிய புராணத்தில் வரும் நகர்ச்சிறப்புப் பகுதியில் திருவாரூர் பாடப்பட்டிருக்கிறது என்பதேயாகும்!

தமிழகத்தை ஆண்ட பண்டைய மன்னர் காலக் கலைகள், கல்வெட்டுகள் யாவும் இத் திருக்கோயிலில் இருக்கின்றன.

அருள்மிகு தியாகராசர் திருக்கோயிலின் தலவிருட்சம் பாதிரிமரம் ஆகும்.

இக்கோயில் கட்டப்பட்ட காலம் பற்றிய கேள்விக்குப் பதில் போல நாவுக்கரசர் எழுதியிருப்பது இது :

*"திருவினன் ஓர்பாகம் சேர்வதற்கு முன்னோ பின்னோ
தில்லை அம்பலத்துள் ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ
திசையெட்டும் தெரிவதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர்க் கோயிலாக் கொண்ட நாளே !"*

- கங்கைகொண்டான்



# வணிக வரித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம்:

# முதலமைச்சர் கலைஞரின் புதிய அறிவிப்புகள் !

பொது விற்பனை வரிகள், மற்றும் நிர்வாகம் - குறிப்பாக, மாவட்ட நிர்வாகம், இவற்றினைக் குறித்து இன்றைய தினம் வைக்கப் பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கைகளில், உறுப்பினர்கள் தங்களுடைய சீரிய, செழுமிய கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். இந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே வைக்கப்பட்டுள்ள அவர்களுடைய முறையீடுகளை எல்லாம் என்னுடைய பதில் உரையிலேயே விளக்கிக் கூறி, அவைகளை ஏற்றுக் கொண்டேன் என்று கூறுகின்ற நிலை எனக்கு இல்லை என்பதை, கோரிக்கைகளை வைத்தவர்கள் மிக நன்றாக அறிவார்கள். ஏன் என்றால், நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்டு, அதிலே பல்வேறு சலுகைகள் இந்த மூன்றாவது நிதிநிலை அறிக்கை உள்பட, வணிகர்களுக்கு - பொதுமக்களுக்கு ஏற்ற வகையில், அறிவிக்கப்பட்டு, வியாபாரத்திலே கொசுறு என்பார்களே, அதைப்போல, சில கொசுறு கோரிக்கைகள் இங்கே எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றைப்பற்றி எல்லாம் பேசுவதற்கு முன்பு, நம்முடைய நண்பர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசிய சுப்பராயன் கூறிய ஒன்றை நானும் உன்னிப்பாக கவனித்தேன்; இந்த அவையும் கவனித்தது. நாடும் கவனிக்கும். அவர்கள் சொன்னார்கள், "நீங்கள் வசூலிக்கின்ற வரி எவ்வளவோ அதற்கு ஈடான தொகை அதிகாரிகளால் கொள்ளை யடிக்கப்படுகின்றன" என்று குறிப்பிட்டார்கள்.

இதிலே சுட்டிக்காட்டி அவர்கள் பேசுகிறபோது - உணவகங்களிலே வசூலிக்கப் படுகின்ற அந்த வரி பெரும்பாலும் அரசுக்குக் கிட்டாமல் அதிகாரிகளுக்கே செல்கிறது என்றும் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் அதிகாரிகளுக்காக வக்காலத்து வாங்கவில்லை; வாங்குபவனும் அல்ல. ஆனால் அதே நேரத்தில் அதிகாரிகள் எல்லோருமே தவறு செய்யக் கூடியவர்கள் அல்ல. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் கூட உதகையில் அளித்த ஒரு பேட்டியை இன்று காலைப் பத்திரிகையில் பார்த்தேன். அதிலே அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். 36 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீது கலைஞர் நடவடிக்கை எடுத்துவிட்ட காரணத்தால் அதிகாரிகள் எல்லாம் செயல்படவே பயப்படுகிறார்கள் என்று அதிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்.



யாராக இருந்தாலும் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கை. ஏன் இதுவரையிலே எடுக்கவில்லை என்பது எதிர்க்கட்சியினுடைய கேள்வி. இந்தக் கொள்கைக்கும், இந்தக் கேள்விக்கும் முரண்பாடு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் பழைய காலத்து அமைச்சர்கள் மாத்திரமல்ல, தவறு செய்த அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல 36 பேர்கள் மீது அல்ல; ஏறத்தாழ ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் 12 பேர் இருக்கலாம். அதிலேகூட 2, 3 பேரை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லை, மத்திய சர்க்காரிடத்திலே அனுமதி பெற்றுத்தான் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியும். அதிலே கூட மத்திய அரசிலே 2,3 அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே இந்த 10, 12 அதிகாரிகளில், 8, 9 அதிகாரிகள் மீதுதான் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

சோ. பாலகிருஷ்ணன் :- இந்த சுடுகாட்டு ஊழல் என்கின்ற பெயரால் நம்முடைய அரசு உயர்நீதிமன்றத்தில் மதுரையோடு நின்றுவிடக் கூடாது. எல்லா மாவட்டங்களுக்கும் சென்று அதை விசாரிக்க வேண்டுமென்று நம்முடைய அரசின் சார்பாக வழக்கறிஞர்கள் வாதாடிய பொழுது, அதன் காரணமாக உயர்நீதிமன்றத்தில் சி.பி.ஐக்கு அவர்கள் ஆணையிட்டு கிட்டத்தட்ட 30 அதிகாரிகள் மீது இன்று சி.பி.ஐ. நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள் மனதிலே ஒரு குழப்பம் இருக்கிறது என்பதைத்தான் நான் பத்திரிக்கைச் செய்தியாகச் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் கலைஞர் :- எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுவது போன்று அது அரசு தொடர்ந்த வழக்கல்ல; அவரே குறிப்பிட்டிருக்கிறார்கள். சி.பி.ஐ. வழக்கு என்று. எனவே சி.பி.ஐ. வழக்கில் நீதிமன்றத்தினுடைய உத்தரவை அவர்கள் நிறைவேற்றும்பொழுது அதிலே அரசு குறுக்கிட இயலாது என்பதை அவர்கள் அறிவார்கள் என்பதை நான் நம்புகிறேன். பொதுவாக 36 அதிகாரிகள் என்று சொல்லும் பொழுது ஒரு 'த்ரில்' அடேயப்பா, அவ்வளவு அதிகாரிகளா என்று எண்ணத் தோன்றும். ஆனாலும் அதிகாரிகளாக இருந்தாலும், கடந்த காலத்திலே ஆட்சி புரிந்த அமைச்சர்களாக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இந்த மாமன்றத்திலே உள்ள ஆளும் கட்சி, எதிர்க்கட்சி மற்றும் தோழமைக் கட்சியினுடைய ஏகோபித்த எண்ணம். அதிலே மாறுபாடான கருத்து எனக்கும் இல்லை; நம்முடைய எதிர்க்கட்சித்



திருவாரூர் அருகே, கடாரங்கொண்டானில் அமைந்துள்ள நுகர்பொருள் வாணிபத் திறந்த வெளிக் கிடங்கு.

தலைவருக்கும் இல்லை என்பதை நான் நன்றாக அறிவேன்; நாடும் நன்றாக உணர்ந்திருக்கிறது.

சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல எல்லா அதிகாரிகளுமே தவறானவர்கள் அல்ல. அவரும் அப்படிக் குறிப்பிடவில்லை. ஆனால் இந்த வணிகவரித் துறையிலே இதுபோன்ற தவறுகள் நடப்பதற்கு ஏராளமான இடம் இருக்கிறது என்பதை அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். அதிகாரிகள் ஊழல் புரிகின்ற அதிகாரிகள், தவறு செய்கின்ற அதிகாரிகள், லஞ்சம் வாங்குகின்ற அதிகாரிகள், அப்படித்தான் செய்வோம் என்று ஒரு உறுதி எடுத்துக் கொண்டு நடப்பார்களேயானால், அவர்களைத் திருத்துவது என்பது இயலாத காரியம். வானத்தைக் கூட வில்லாக வளைத்து விடலாம். ஆனால் அப்படிப்பட்ட குணம் படைத்தவர்களை, ஊழலில் திளைப்பவர்களை, லஞ்ச லாவண்யத்திலே பிழைக்க வேண்டும், குறுக்கு வழியிலே வாழ வேண்டும் என்று எண்ணுகிறவர்களை நாம் திருத்த முடியாது. அதிகார வர்க்கத்திலே சிலபேர் திருத்த முடியாதவர்களாகவே இருப்பார்கள்.

**அலைகளை எண்ணச் சொல்லும்போதும் தன் 'திறமையை'க் காட்டிய அதிகாரி**

உதாரணமாக ஒரு கதை கூட உண்டு. அதிகாரிகளைப் பற்றி ஏற்கெனவே ரிஜிஸ்ட்ரார் ஆக இருந்த வி.கே.சி. நடராஜன் அந்தக் கதையை சொல்லியிருக்கின்றார். அதை நான் ஒருமுறை பத்திரிகையிலே கூட குறிப்பிட்டு எழுதியிருக்கின்றேன். கடல் அலை ஆபீசர் என்று வைத்துக் கொள்ளலாம். ஒரு ஆபீசர் தொடர்ந்து கையூட்டுப் பெற்றுக்கொண்டே இருந்தார். இவரைத் திருத்துவது எப்படி ? இவர் கையூட்டுப் பெறாமல் நிறுத்துவது எப்படி என்று யோசித்து, சில நாணயமான அதிகாரிகள் எல்லாம் கூடிப் பேசி, இவருக்கு ஒரு வேலை கொடுக்கலாம் என்று கடற்கரையிலே போய் உட்காரச் சொன்னார்கள்.

என்ன வேலை என்று கேட்டால், 'கடலிலே வருகின்ற அலைகளை எண்ணிக்கொண்டிரு' என்று சொன்னார்கள். சொல்லி விட்டு, இவர்களுக்குள்ளே ஒரு பூரிப்பு. இவனை அடக்கிவிட்டோம்; கடற்கரையிலேயே இவனை உட்கார வைத்துவிட்டோம். இவன் கடல் அலையை எண்ணிக் கொண்டிருப்பானே தவிர, இனிமேல் வாங்குகின்ற லஞ்சப் பணத்தை எண்ணுவதற்கு இவனுக்கு வாய்ப்பு இருக்காது என்று எண்ணிக்கொண்டு இருந்தார்கள். அதிகாரி ஒரு நாள் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தார், அலைகளை எண்ணிக் கொண்டு. சிலபேர் மீன்பிடிப்பதற்காக கட்டு மரம் கட்டிக்கொண்டு கடலுக்குச் சென்றார்கள். இவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அவர்களை அழைத்து, எங்கே போகிறீர்கள் என்றார் ? அவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்கிறோம் என்றார்கள். நான் அலைகளை எண்ணிக் கொண்டு இருக்கிறேன். மீன் பிடிக்க, கட்டுமரத்தை உள்ளே விட்டால் அது டிஸ்டர்ப் ஆகும். அலைகள் வீணாகும் என்றார். அதற்கு அவர்கள் என்ன செய்யலாம் என்றார்கள். அதற்கு இவ்வளவு ரூபாய் கொடு, கொடுத்தால் விடுகிறேன் என்று சொன்னார். இப்படி அலைகளை எண்ணச் சொன்னால் கூட அங்கேயும் விடாமல் இந்தக் கடல் அலை ஆபீசர் தன்னுடைய திறமையைக் காட்டினார் என்று ஒரு அதிகாரியைப் பற்றி இந்தக் கதை சொல்லப்பட்டது.

உங்களுக்குத் தெரியும், நடராஜன் கன்னியாகுமரி கடலிலே குளிக்கும்போது விபத்தின் காரணமாக இறந்து விட்ட ஒரு மூத்த அதிகாரி நேர்மையான ஒரு அதிகாரி. அவர் சொன்ன கதைதான் இது. எனவே, தவறு செய்கின்ற அதிகாரிகள், அதைப்போல அந்த அதிகாரிகளோடு சேர்ந்துகொண்டு அரசாங்கத்தை ஏமாற்றுகின்ற சிலர் இவர்களுக்கிடையிலேதான் நாம் ஆட்சியை நடத்த வேண்டியிருக்கிறது. முடிந்த வரையில் நடவடிக்கைகள் எடுக்கிறோம். நடவடிக்கை எடுத்துக்கொண்டு, அதே நேரத்தில் நல்லாட்சி நடத்த வேண்டும் என்பதற்காகவும், நாம் நம்முடைய அரிய பணியினை ஆற்றிக் கொண்டிருக்கிறோம். விற்பனை வரியைப் பொறுத்த வரையில், இந்த அரசு இந்த மூன்று

**ரூ.25 இலட்சத்திற்குள் விற்பனைத் தொகையுள்ள உணவகங்களுக்கு முழு வரிவிலக்கு.**



## வரிவிதிப்பு முறைகள் சீரமைக்கப்பட்டு, எளிதாக்கப்பட்டுள்ளன.

நிதிநிலை அறிக்கைகளில் என்னென்ன கோரிக்கைகளை யெல்லாம் ஏற்று, விட்டுக்கொடுத்து வரிக் குறைப்பு, வரி விலக்கு இவைகளை யெல்லாம் செய்திருக்கிறது என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

இங்கே நம்முடைய சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். 17.7.96 ஆம் நாள் வெளியிடப்பட்ட அரசு அறிக்கையில், பருப்பு, பயிறு, மிளகாய் போன்ற பொருட்களுக்கு 17.7.96 முதல் விற்பனைத் தொகை ரூ.100 கோடி வரை உள்ள வணிகர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. வெளி மாநிலங்களுடைய விற்பனையைப் பொறுத்த வரை 5.8.96 முதல் 16.10.96 வரையிலான இடைப்பட்ட காலத்திற்கு வரி விலக்கு இல்லை என்றும் அந்த இடைப்பட்ட காலத்திற்கு உள் மாநிலம் மற்றும் வெளி மாநில விற்பனைகளுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்றும் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.சொக்கர் அவர்களும் கேட்டுக் கொண்டார். அவரது கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது.

17.7.96 முதல் பருப்பு, பயிறு, மிளகாய் போன்ற பொருட்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. பின்னர் அந்த வரிவிலக்கு உள் மாநில விற்பனைக்கு மாத்திரம் அல்லாமல் வெளி மாநில விற்பனைக்கும் பொருந்துமா என்ற ஐயப்பாட்டை நீக்கும் வகையில் மேற்கூறப்பட்ட வரிவிலக்கு "உள் மாநில விற்பனைக்கு" மட்டுமே என்று 5.8.96 ஆம் நாளிட்ட அரசு அறிக்கை வாயிலாக அறிவித்தது. அதன் பின்னர் வெளி மாநில விற்பனைக்கு "சி" படிவம் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் 4 விழுக்காடு வரியே விதிக்கப்படும் என்கின்ற அறிவிக்கை 13.9.96 நாளிட்ட அரசு ஆணையிலே வெளியிடப்பட்டு 16.10.96 ஆம்நாளிட்ட அரசிதழில் பிரசுரம் ஆகியுள்ளது. வெளி மாநில விற்பனைக்கு வரிவிலக்கு இல்லை என்பதை 5.8.96 ஆம் நாள் அறிவிக்கையில் தெளிவாக அறிவிக்கப்பட்டு விட்டதால் 5.8.96 முதல் வெளி மாநில விற்பனைக்கு வரி செலுத்த வேண்டும். எனினும் 17.7.96 முதல் 4.8.96 முடிய உள்ள இடைப்பட்ட காலத்திற்கு வரிவிதிக்கப்பட மாட்டாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல நம்முடைய சுப்பராயன் அவர்கள் தமிழ்நாடு ஹோட்டல்ஸ் அசோசியேஷன், சென்னை, இதன் சார்பாக அல்லது சார்பாக அவரிடத்திலே சொல்லப்பட்ட சில கருத்துக்களின் அடிப்படையில் அவர் சில செய்திகளை அரசுக்குச்சொல்லி அதை யோசிக்குமாறு கேட்டிருக்கிறார். அது பரிசீலிக்கப்பட்டது. அவர் சொன்னது உணவகங்களுக்கு விற்பனை வரியிலிருந்து முழு வரி விலக்கு அளிக்குமாறும் முழு வரி விலக்கு அளித்தால் அரசு நிதிநிலை பாதிக்கப்படும் எனக் கருதினால் - (எப்படி பாதிக்கப்படாமல் இருக்க முடியும் ? இப்போது ரூ.15 கோடி வருகிறது; பாதிக்கப்படும் என்று கருதினால் என்பதற்கே இடம் இல்லை; பாதிக்கப்படும்) விற்பனைத் தொகை ரூ.25 லட்சத்திற்கும் குறைவாக உள்ள உணவகங்களுக்கு விரி விதித்து - (இது ரொம்ப ஆபத்து; 25 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள உணவகங்களுக்கு வரி விதிக்கச் சொல்லி, அவர்கள் சொல்கிறார்கள். அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் ? நாம் 25 இலட்சத்திற்கு மேல்தான்என்று குறிப்பிட்டிருக்கிறோம்) - தற்போதுள்ள படிமுறை - ஸ்லாப்சிஸ்டம் - விதத்தை வெகுவாக குறைக்குமாறும் கோரிக்கை விடுத்தார்கள். இது பற்றி பரிசீலித்ததில் நான் இந்த அவைக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

**தங்கராஜ் தலைமையிலான வரி சீரமைப்புக்குழு பரிந்துரை**

சி.தங்கராஜ் ஐ.ஏ.எஸ் (ஓய்வு) அவர்களுடைய தலைமையிலான வரி சீரமைப்புக் குழு உணவகங்களில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்களுக்கு பின்வரும் படி முறை - ஸ்லாப் சிஸ்டம் - சதவிகிதத்தை பரிந்துரைத்தது. அவர்கள் பரிந்துரைத்த வரி விகிதத்திலிருந்து நாம் எவ்வளவு குறைவாக ஆக்கியிருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டத்தான் நான் சொல்கிறேன். தங்கராஜ் தலைமையிலே இருந்த சீரமைப்புக் குழு பரிந்துரை ஆண்டு ஒன்றிற்கு 3 இலட்சம் முதல் 5 இலட்சம்வரை டர்ன் ஓவர் இருந்தால், விற்பனைத் தொகை இருந்தால், வரித்தொகை வரி விகிதம் 6,000 ரூபாய். 5 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை என்றால் 12,000 ரூபாய். 10 இலட்சம் முதல் 20 இலட்சம் வரை என்றால் 24,000 ரூபாய். 20 இலட்சம் முதல் 30 இலட்சம் வரை என்றால் 48,000 ரூபாய். 30 இலட்சம் முதல் 40 இலட்சம் வரை என்றால் 60,000 ரூபாய். 40 இலட்சம் முதல் 50 இலட்சம் வரை என்றால் 84,000 ரூபாய். 50 இலட்சத்திற்கு மேல் 2 விழுக்காடு.

ஆனால், இதை அரசு ஏற்றுக் கொள்ள வில்லை. ஏற்றுக் கொண்டிருந்தால் இந்த ஹோட்டல் அதிபர்கள்எல்லாம் என்ன ஆகியிருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவே முடியாது. இருந்தாலும் நாங்களாகவே இவ்வளவு வரி அவர்களுக்குத் தேவையில்லை என்ற முடிவுக்கு வந்து பரிசீலித்து விற்பனைத் தொகை ரூ.25 இலட்சத்திற்கு உட்பட்டிருந்தால் வரியே இல்லை என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறோம். 25 இலட்சத்திற்கு மேல் 30 இலட்சம் வரை ஆண்டுக்கு 24,000 அவர்கள் பரிந்துரை 48,000. 30 லிருந்து 40 இலட்சம் வரை 36,000 என்று ஆக்கியிருக்கிறோம். 40 இலட்சத்திலிருந்து 50 இலட்சம் வரை 48,000. 50



நீர்வளமும் நிலவளமும் மிக்கதான திருவாரூர் மாவட்டத்தில் விளைந்திடும் நெல்லைக் கொள்முதல் செய்து பாதுகாத்துப் பதப்படுத்தி, அரிசியாக்கித்தரும் நவீன அரிசி ஆலை, திருவாரூர் பேருந்து நிலையத்தினருகே உள்ளது.

இலட்சத்திற்கு மிகும் விற்பனைத் தொகைக்கு 2 விழுக்காடு என்ற விற்பனை வரியை நாம் நிர்ணயம் செய்திருக்கிறோம்.

எனவே. சென்ற ஆண்டுதான் உணவகங்களுக்கான வரி விகிதங்களை விற்பனை வரி சீரமைப்புக் குழுவின் பரிந்துரையை விட மிகவும் குறைவான ஸ்லாப் - படி முறை வீதத்தை அரசு நடைமுறைப் படுத்தியிருக்கிற காரணத்தால் 25 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள உணவகங்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், உணவகங்களுக்கு மறுபடியும் வரி சீரமைப்பு செய்வதற்கு இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் மூலமாக அந்த அசோசியேஷனுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைச் சொன்னதால் அந்த அசோசியஷனுக்கும் அவருக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாக யாரும் கருதத் தேவையில்லை. அவர்கள் கொடுத்த கோரிக்கையை அவர் பிரதிபலித்திருக்கிறார் அவ்வளவுதான்.

### உணவகங்களில் தற்போதுள்ள விதிகளைத் தொடர வேண்டிய நிலை

உணவகங்களிலே தற்போது உள்ள இந்த படி முறை ஸ்லாப் விதியை நாம் தொடர வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர் கூறிய குறைகளை நீக்க வேண்டுமேயானால் உணவகங்களில் சார்ட்டர்டு அக்கவுண்ட் மூலம் கணக்கைத் தணிக்கை செய்து அதன் அடிப்படையில் வரிக் கணக்குகளை ஏற்றுக் கொள்ளலாம். இதில் 20% கணக்குகள் மாத்திரமே கணினி முறையிலே தேர்வு செய்யப்பட்டு ஆய்வு செய்யலாம். இந்தக் கருத்தை நான் பரிசீலித்து சுப்பராயன் அவர்கள் சொன்ன அந்தக் குறைபாடு நீங்குவதற்கு இயலுமா என்பதை அதிகாரிகளோடு கலந்து பேசி பிறகு அறிவிப்பேன் என்ற உறுதியை இங்கே அளிக்கிறேன்.

1996 - 97 ஆம் ஆண்டு வழங்கிய வணிக வரி சலுகையினால் நம்முடைய முதல் நிதிநிலை அறிக்கை - நான்காவது முறையாக இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு - முதல் நிதி நிலை அறிக்கையில் வழங்கிய வணிக வரி சலுகையினால் இந்த அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூ.370 கோடி என்பதை மறந்துவிடக் கூடாது. ஆனால் 370 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டாலும் கூட குரோத் ரேட் ஓரளவு இருந்த காரணத்தால் ஒரு பெரிய வீழ்ச்சி இந்த விற்பனை வரி வருவாயிலே நமக்கு ஏற்பட்டு விடவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1997 - 98 ஆம் ஆண்டு வழங்கிய வணிக வரிச் சலுகையினால் அரசுக்கு 44 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டது. அதே ஆண்டில் உணவு விடுதிகளுக்கு அரசு விதித்த வணிக வரி மற்றும் பான் மசாலா, பரிசுச் சீட்டுகளுக்கு விதித்த வரி உயர்வினால் 17 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் கிட்டியது.

### வணிக வரிச் சலுகையால் அரசுக்கு ரூ.40 கோடி இழப்பு

1998 - 99 நடப்பாண்டில் வழங்கிய வணிக வரிச் சலுகையினால் இந்த அரசுக்கு 40 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும். அதேசமயம் இந்தியாவில் தயாரிக்கப்படும் ஐ.எம்.எப்.எல் வெளிநாட்டு மது வகைகளுக்கு அரசு விதித்த வணிக வரி உயர்வினாலும் கூடுதல் விற்பனை வரியில்செய்த மாற்றங்களினாலும் 310 கோடி ரூபாய் அரசுக்கு வரி வருவாய் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. கூடுதல் விற்பனை வரி 100 கோடிக்கு மேல் என்று இருந்ததை 25 கோடிக்கு மேல் என்று மாற்றிய காரணத்தால் நமக்கு அதிலே அந்த வரியிலே அதிக வருவாய் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செய்யப்படும். இதற்கான சட்ட முன்வடிவு இந்தக்கூட்டத் தொடரிலேயே அறிமுகம் செய்யப்படும். வணிகராகப் பதிவு செய்த தற்போதுள்ள மொத்த விற்பனைத் தொகைக்கான வரம்பு 75 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுகிறது. இதற்கான சட்ட முன்வடிவு இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

ஒரு வணிகருடைய மொத்த வியாபாரத் தொகை ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்படாமல் இருந்தால் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, நிபந்தனைகள் என்றால், ஆவணங்களைப் பாதுகாத்தல், ரெக்கார்டுகளை வைத்துக் கொள்ளுதல் என்ற அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர்களுடைய கணக்குகளைத் தணிக்கைக்கு உட்படுத்தாமலேயே இறுதி வரி விதிப்பு செய்திட ஆணையிடப் பட்டுள்ளது. அந்த வணிகர்கள் விரிவான கணக்கு வழக்குகளைப் பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை. அடிப்படைக் கணக்கு ஆவணங்களைப் பராமரித்தாலே போதும் என்றும் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

## *பகுதி இயந்திரத்தினாலும் பகுதி கையாலும் செய்யப்படும் மெழுகு தீக்குச்சிகளுக்கும் முழு வரிவிலக்கு.*

1998 - 99 ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் வருவாய்க் கணக்கிலே செலவு 18 ஆயிரத்து 48 கோடி ரூபாய். வரவு 15 ஆயிரத்து 39 கோடி ரூபாய். இதிலே வணிக வரியின் மூலமாக 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது. இங்கே உறுப்பினர்கள் எல்லாம் கடந்த ஆண்டை நினைத்துக் கொண்டு, 6 ஆயிரம்கோடி ரூபாய், 6 ஆயிரத்து சொச்சம் கோடி ரூபாய் என்று எல்லாம் இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். எதிர்பார்க்கப்படுவது வணிக வரியின் மூலம் 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வரிவிதிப்பு முறைகளில் சீரமைப்பு

சென்ற 2 ஆண்டுகளிலே வரி விதிப்பு முறைகளிலே பல சீரமைப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. நாணயமாக வரி செலுத்துபவர்களுக்கு நடைமுறைகளை எளிதாக்கி வரி விதிப்பு அமைப்பின் கடுமையை குறைத்து உள்ளது. இதன்ஒரு தொடர் நடவடிக்கையாக ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்பட்டும் ரூபாய் 20 இலட்சத்திற்கு உட்பட்டும் மொத்த விற்பனைத் தொகை உடைய வியாபாரிகள் பதிவுபெற்ற பட்டயக் கணக்கர்கள் 'சாட்டர்டு அக்கவுண்டெண்டு' தணிக்கை செய்ததன் அடிப்படையில் கணக்குகள் ஏற்றுக்கொள்ளப்படும். இதில் 10 விழுக்காடு கணக்குகள் மட்டும் துறையினரால் ஆய்வு

### விற்பனை வரிச்சட்டம் தமிழில்

விற்பனை வரிச் சட்டத்தைத் தமிழில் வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது தமிழ்நாடு விற்பனை வரி சட்டத்திலிருந்து அட்டவணைகளை முதலில் வெளியிடவும், பின்னர் விற்பனை வரி சட்டத்தை முழுமையாகத் தமிழில் வெளியிடவும் முடிவு செய்யப்பட்டது. அதன் முதல் கட்டமாக 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் உள்ள அட்டவணைகள் தமிழில் வெளியிடப்பட்டன. தற்போது விற்பனை வரிச்சட்டம் சட்டத்துறையின் மூலமாக தமிழ் ஆக்கம் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது. ஆனாலும், கூட அந்தத் தமிழ் ஆக்கத்திலே பயன்படுத்தப்பட உள்ள சில தமிழ்ச் சொற்கள் வணிகர்களிடமும், வணிக வரித்துறையில் உள்ள அலுவலர்களிடமும் புழக்கத்தில் இல்லாத சொற்களாக இருக்கின்றன. உதாரணமாக மொழி பெயர்ப்பில் burden of proof என்பதற்கு சட்டத்துறை "நிரூபிக்கும் சுமை" என்று மொழியாக்கம் செய்திருக்கிறது. சட்டத்துறை - தமிழ்த்துறை அல்ல - சட்டத்துறை. ஆனால், அதனை "நிரூபிக்கும் பொறுப்பு" என்று எல்லோருக்கும் தெரிந்த தமிழிலே மொழி பெயர்ப்பு இப்பொழுது செய்யப்பட்டிருக்கிறது.



### SELF-ASSESSMENT

என்பதை, சட்டத்துறை, "தன் வரிக் கணிப்பு" என்று மொழி பெயர்த்து இருக்கிறது. அதை, எல்லோருக்கும் புரியக்கூடிய அளவிற்கு "சுய வரி விதிப்பு" என்ற தமிழில் எளிமைப்படுத்தப் பட்டிருக்கிறது. "சுய" என்பது சரியான தமிழ் மொழி அல்ல என்றாலும், வடமொழி என்றாலும் கூட, சுய மரியாதை தன்மானம் என்று நாம் மாற்றிக் கொண்டாலும் கூட. இங்கே சுயமரியாதை என்றாலே தமிழிலே பழக்கப்பட்டுவிட்ட வார்த்தை என்ற காரணத்தால் "சுய வரி விதிப்பு" என்ற தமிழில் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

### SUBJECT TO CONDITION

என்பதைச் சட்டத் துறை, "வரையறைக்குட் பட்டு" என்று மொழியாக்கம் செய்திருக்கிறது. அது சரியான மொழி பெயர்ப்பாக ஆக முடியாது. எனவேதான், "நிபந்தனைக்கு உட்பட்டு" என்று மொழி பெயர்த்து இருக்கின்றோம். எனவே, இந்தத் திருத்தங்கள் எல்லாம் ஆன பிறகு அது வெளியிடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### காலியிடங்களை உடனே நிரப்பிட ஆணை

விற்பனை வரிச் சட்ட வழக்குகளை விரைவுபடுத்த வேண்டும் என்று உறுப்பினர் ஒருவர் இங்கே பேசும்பொழுது குறிப்பிட்டார். சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் மேல் முறையீடு தீர்ப்பாயங்களில் நீதித்துறை உறுப்பினர்கள், கூடுதல் நீதித் துறை உறுப்பினர்கள் ஆகியோரின் பதவிகள் நிரப்பப்படாமல் இருந்தமையால் பல வழக்குகள் விசாரிக்கப்படாமலே தேங்கிக் கிடந்தன. இதன் காரணமாக வணிகர்களுக்குப் பல இடையூறுகளும், அரசுக்கு வருவாய் தேக்கமும் ஏற்பட்டு வந்தன. இவற்றைக் களையும்பொருட்டு, காலியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தற்பொழுது ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது தீர்ப்பாயத்தின் துணைத்தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர் பதவிகள் நிரப்பப்பட்டு, இந்த வழக்குகளை விரைவிலே முடித்திட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இங்கே வெட்டுத் தீர்மானங்கள் தந்துள்ள உறுப்பினர்கள், அவர்கள் இங்கே பேசுகின்ற வாய்ப்பைப் பெறாவிட்டாலும் அல்லது அவர்கள் பேசாவிட்டாலும்கூட, அவைகளைக் குறிப் பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன்.

### வேளாண் இடுபொருட்களுக்கு வரி குறைப்பு

பா.ம.க. - 1 கட்சி உறுப்பினர்கள் ஜ.கணேசன், ஜி.கே.மணி ஆகியோர் வேளாண் இடு பொருள்கள் மீது விற்பனை வரி விதிப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். வேளாண் இடுபொருட்களான யூரியா மற்றும் அமோனியம் பாஸ்பேட் உரத்திற்கு 5.3.97 முதல் 4 சதவீதத்தி லேயிருந்து 2 சதவீதமாக வரி குறைக்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே, - 97லேயே குறைச்சாச்சு. அதற்குத்தான் வெட்டுத்தீர்மானம் கொடுத்து இருக்கிறீர்கள் குறைத்தது தப்பு என்று.

## *விற்பனை வரிச்சட்டம் விரைவில் தமிழில் வெளியிடப்படும்.*

மேலும், உறுப்பினர்களுடைய கருத்து ஏற்கப்பட்டு வேளாண்மைக்கான ஃபேக்டீரியா வளர்ப்பு, தழைச்சத்து, எரு மற்றும் பச்சை எரு விதைகள் போன்றவைகளுக்கு முழு வரி விலக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வேளாண்மை விளைபொருட்களுக்கு வரி ரத்து

வேளாண்மை விளை பொருட்களின் மீது விதிக்கப்படும் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று பா.ம.க உறுப்பினர் கோவிந்தன் வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். பொது மக்களால் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் பின்வரும் வேளாண் விளைபொருட்கள் விற்பனைக்கு 17.7.96 முதல் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவை - கடலை, துவரை, பாசிப் பயிறு அல்லது பச்சைப் பயிறு, மசூர் உளுந்து, மோத்து, கேசரி, மிளகாய், புளி, தனியா, மஞ்சள், பெருங்காயம், மிளகு மற்றும் சிகைக்காய், வெல்லம், கரும் சீரகம் உள்ளிட்ட வேளாண் விளைபொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மணி அவர்கள், கயிறு உற்பத்தி செய்யும் குடிசைத் தொழிலுக்கு, கயிற்றின் விற்பனை வரி முழுமையாக நீக்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். ஆனால் அப்பொழுதே, கயிற்றின் மீதான விற்பனை வரி 17.7.96 முதல் விலக்கப்பட்டுள்ளது என்பதை அவருக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### தேங்காய்க் கொப்பரைக்கு ஒரு சதவிகிதமாக வரி குறைப்பு

தேங்காய்க் கொப்பரைக்கு முழுமையான வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று எஸ்.என்.பாலசுப்பிரமணியன், டி.மணி, பி.ஆர். சுந்தரம் ஆகியோர் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையின் போது மாநிலத்திற்குள் விற்பனை செய்யப்படும் தேங்காய். கொப்பரை போன்றவற்றிற்கு வரி 4 சதவீதத்திலேயிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இதுவும் போதாது என்று இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தேங்காய் மற்றும் கொப்பரை மீதான வரியை. தேங்காய் கொப்பரைக்கு விதிக்கப்படும் வரி 2 சதவீதத்திலேயிருந்து ஒரு சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

நிதிநிலை அறிக்கை மீது நடந்த விவாதத்திற்கு இந்தச் சட்டமன்றத்திலே பதில் கொடுத்தபோது, வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படும் தேங்காய் மற்றும் கொப்பரைக்கும் 1 சதவீதம் வரி அறிவிக்கப்பட்டது. எனவே, முழு வரிவிலக்கு அளிக்க இப்போது இயலாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இதை ஏற்று வியாபாரிகள் மற்றும் வியாபாரிகளின் சங்கத்தினர் என்னைச் சந்தித்து மகிழ்ச்சி தெரிவித்து நன்றி கூறியிருக் கின்றார்கள். எனவே. அவர்களே முழு வரிவிலக்கு கோரவில்லை என்பதையும், சுந்தரம் போன்றவர்கள்தான் முழு வரிவிலக்கு கோருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவெல்லாம் ஒரு பார்லிமெண் டேரியனுக்கு அழகு. ஒன்றைச் சொன்னால் அதைவிட இன்னொன்று கேட்க வேண்டும்; அதுதான் நல்ல, சரியான பாரிலிமெண்டேரியன் என்று பொருள். சர்.ஏ.டி.பன்னீர் செல்வத்தைப் பற்றி டாக்டர் கிருஷ்ணசாமி - இந்த கிருஷ்ணசாமி அல்ல - ஏ.ஆர். முதலியாருடைய குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் கிருஷ்ணசாமி பார்லிமெண்டேரியன் என்ற ஒரு புத்தகம் எழுதினார். அதிலே அவர் குறிப்பிடுகிறார். ஏ.டி.பன்னீர் செல்வத்தைப் பார்த்துக் கேட்டார்களாம். 'நீங்கள் நல்ல பார்லி மெண்டேரியன் என்று சொல்கிறார்களே, திடீரென்று ஒரு நாள் ஆளும் கட்சியிலேயிருந்து ஏழைகளுக்கு எல்லாம் இலவசமாக வீடு கட்டித்தரப்படும் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்' என்று கேட்டார்களாம். அவர் உடனே சொன்னாராம், "அது மாத்திரம் போதாது, வீட்டுக்கு 200 ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும் சொல்வேன்" என்று பன்னீர்செல்வம் சொன்னாராம். இதுதான் நல்ல பார்லிமெண் டேரியனுக்கு அழகு என்பார்கள். அதைப் போலவே நம்முடைய சுந்தரம் அவர்கள் இங்கே இவ்வளவு வரிவிலக்கு கொடுத்த பிறகும்கூட, நான்கை இரண்டாக்கி, இரண்டை ஒன்றாக

ஆக்கிய பிறகும்கூட, அதையும் விலக்கி விடு என்று குறிப்பிடுகிறார்கள். அவர்களே மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். சுந்தரம் கவலைப்படத் தேவையில்லை என்று நான் அவருக்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

மசாலாப் பொடிக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டிய அவசியம் குறித்து ஞானசேகரன், எஸ்.என். பாலசுப்பிரமணியன், நா.பெரியசாமி, சுந்தரம், நிஜாமுதீன் ஆகியோர் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். வணிகச்சின்னம் அல்லாத மசாலாப் பொடிகள் மீதான விற்பனை வரி 16 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகவும், 16 - லிருந்து 2 - ஆக..

ஆர்.சொக்கர் :- வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கு ஏற்கெனவே 8 சதவிகிதம்தான். வணிகச் சின்னம் உள்ள மசாலாப் பொடிக்கு 16 சதவிகிதம்தான். ஆனால் இப்போது கொள்கை விளக்கக் குறிப்பிலேயும் அதைப் பார்த்தேன். 16 - லேயிலிருந்து 2 என்று போடப்பட்டிருக்கிறது.

முதல்வர் :- வணிகச் சின்னம் அல்லாத மசாலாப்பொடிகள் மீதான விற்பனை வரி, 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. வணிகச் சின்னம் உள்ள மசாலாப் பொடியைப் பொறுத்தவரையில் அதன் மீதுள்ள விற்பனை வரி 4 சதவிகிதமாகவும், 27.3.1998 முதல் வரி குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது. சின்னம் அல்லாதவைகளுக்கு 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

வனஸ்பதி சமையல் எண்ணெய்க்கு முழு வரிவிலக்கு அளிக்க ஞானசேகரன் அவர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அவர் ரொம்ப நாளாகவே வனஸ்பதியைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார். நான் அன்றைக்கே சொல்கிறபோது அதில் கொழுப்பு சக்தி ரொம்ப அதிகம் என்றும். அது வேண்டாம் என்றும் ஏற்கெனவே ஞானசேகரனுக்குச் சொன்னேன். கொழுப்புச்சக்தி இல்லையென்று சொன்னாலும், உருவாக்கிக் கொள்ள வேண்டாம் என்பதற்காக அது வேண்டாம் என்கிறேன்.

**சமையல் எண்ணெய்களுக்கு முழுவரி விலக்கு**

சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், பாமாயில் எண்ணெய், பருத்திவிதை எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட அரிசி தவிட்டு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எல்லா சமையல் எண்ணெய்களுக்கும் 27.3.98 முதல் முழு வரிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளது. எனவே, வனஸ்பதிக்கு வரிவிலக்கு அளிப்பதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவிந்தன் அவர்கள் தமிழகத்து மாணவர்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்களுக்கு விற்பனை வரியிலேயிருந்து விலக்கு அளிக்க வேண்டி வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். தமிழகத்தில் வரி செலுத்தப்பட்ட காகிதத்தில் தயாரிக்கப்படும், மாணவர்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்களுக்கு 5.3.1997 முதல் முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இந்தச் சலுகை உள் மாநிலத்தில் வரி செலுத்தப்பட்ட காகிதத்தில் தயாரிக்கப்பட்டு வெளி மாநிலத்திலே விற்கப்படும் மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்களுக்கும் 27.3.1998 முதல் நீட்டிக்கப்படுகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழகத்தில் லாட்டரிசீட்டு விற்பனையிலே வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டிய அவசியம் குறித்து ஐ.கணேசன், ஜி.கே.மணி, அப்துல் நாசர் ஆகியோர் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

**கவர்ச்சிகரமாகப் பரிசுச்சீட்டை உருவாக்கத் திட்டம்**

தமிழகத்தில் லாட்டரி சீட்டு வணிகர்கள் செய்யும் வரி ஏய்ப்பைத் தடுக்கும்பொருட்டு, வணிகவரித் துறையில் உள்ள செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் அவ்வப்போது திடீர் சோதனை நடத்தி வரி ஏய்ப்பு தடுக்கப்படுகிறது. அதே நேரத்தில், வரி ஏய்ப்பு நடவடிக்கைகளைக் குறைக்கும் பொருட்டு, லாட்டரிச்சீட்டு வணிகர்கள் இணக்க முறையில், படித்தள வீதத்தில் வரி செலுத்த சட்டத்திலும் வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. 1997 - 98 ஆம் ஆண்டில் 11 கோடியே 26 இலட்சம் ரூபாய் இந்தப் பரிசுச்சீட்டு மூலமாக வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இந்த வருவாயை மேலும் பெருக்குவதற்கு, இந்தப் பரிசுச்சீட்டை நவீன முறையில் அறிமுகப்படுத்த வேண்டுமென்றும், இன்னும் அதற்காக பரிசுகளை அதிகப்படுத்த வேண்டுமென்றும், கவர்ச்சிகரமான அளவுக்கு இந்த பரிசுச்சீட்டுத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்றும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. 1996 - 97, 97 - 98, 98 - 99 ஆகிய இந்த மூன்று ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கையிலும் ஏராளமான வரிச்சலுகைகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அவைகளையெல்லாம் நான் மீண்டும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் நினைவுப்படுத்திக் கொள்ள முடியும் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

தற்பொழுது வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை மாத்திரம் இங்கே நான் சொல்ல விரும்புகின்றேன். வணிகச் சின்னம் பெறாத வெண்ணெய் மற்றும் நெய் வகைகளுக்கு 4 விழுக்காடு வரியும், வணிகச் சின்னம் பெற்ற அந்த பொருட்களுக்கு 10 விழுக்காடு வரியும் உள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். சொக்கர், வி.கே.லட்சுமணன், திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன், எதிர்க்கட்சித் தலைவர் சோ.பாலகிருஷ்ணன் ஆகியோர் பதப்படுத்தப்படாத வெண்ணெய்க்கு (Unpasteurised) முழு வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்றும், தற்போது பிஸ்கட்டுகளுக்கு உள்ளது போல, வணிகம் மற்றும் வணிகக் குறிகள் (Trade and merchandised marks act) சட்டத்தின் கீழ், பதிவுபெறாத வணிகச்சின்னம் உள்ள நெய்க்கு வரியை 4 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர் நா.பெரியசாமி, பி.ஆர்.சுந்தரம், வி.கே.லட்சுமணன் ஆகியோர் இதற்காக வெட்டுத் தீர்மானமே கொடுத்திருக்கிறார்கள். அவர்களது கோரிக்கையை ஏற்று வணிகம் மற்றும் வணிகக்குறிகள் சட்டத்தின் கீழ், பதிவு பெறாத வணிகச் சின்னம் உள்ள வெண்ணெய் மற்றும் நெய்க்கு வரி தற்போதுள்ள 10 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.இராசன் விருதுநகர் மாவட்டம். அவர்கள் சத்திரப்பட்டியில் மருத்துவத் துணிகளான Gauze and Bandage துணி வகைகள் விசைத்தறியில் உற்பத்தி செய்யப்படுகின்றன. விசைத்தறியில் உற்பத்தி செய்யப்படும் Gauze and Bandage துணிவகைகளுக்கு தற்பொழுது 8 விழுக்காடு வரி செலுத்தப்படுகிறது. Surgical Dressing Manufacturers Association இத்தொழிலை நம்பி சத்திரப்பட்டியில் 20 ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன என்றும் Gauze and Bandage துணி வகைகளுக்கு முழு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். எனவே இந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டுமென்று வி.பி.இராசன் கேட்டுக் கொண்டுள்ளார். இதற்காக நா.பெரியசாமி வெட்டுத் தீர்மானமே கொடுத்துள்ளார்கள்.

**பாண்டேஜ் துணிகளுக்கு முழு வரிவிலக்கு**

இக்கோரிக்கையைப் பரிசீலித்து, Gauze and Bandage துணிகளுக்கு

***சமையல் எண்ணெய்களுக்கு முழுமையான வரிவிலக்கு.***





திருவாரூர்-நாகை சாலையில் கட்டப்பட்டுள்ள ஓடம்போக்கி ஆற்று ஒற்றைப்பாலம்

ஒட்டுமொத்தமாக வரி விலக்கு அளித்தால், அரசுக்கு அதிக அளவில் வருவாய் இழப்பு ஏற்படும். ஏனென்றால், பெரிய வியாபாரிகள் அங்கே இருக்கிறார்கள் என்றாலும் சிறு உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் விற்பனைத் தொகை ஆண்டு ஒன்றுக்கு 25 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள விசைத்தறி மூலம் Gauze and Bandage துணிகளை உற்பத்தி செய்யும் சிறு உற்பத்தியாளர்களுக்கு முழு வரிவிலக்கு அளித்து ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிறகு வார்னிஷ், பற்றி கே.சுப்பராயன் கேட்டது -

Sivakasi Picture Varnish Coaters Association

அவர்களது விண்ணப்பத்தில் தாங்கள் செய்யும்

Picture Varnish Coating தொழில்,

குடிசைத் தொழில் என்றும்

Picture Varnish

தயாரிப்பதற்கு மூலப்பொருட்கள் யாவும் உள் மாநிலத்தில் வரி செலுத்தி வாங்கப் படுகின்றன என்றும், எனவே ஒப்பந்தப் பணிகள் என்ற வகையில் வரி விதிப்பு சரியில்லை என்றும் கூறி வரி விலக்கு கோரியிருக்கின்றார்கள். அவர்கள் கோரிக்கையை ஏற்று வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

இயந்திரங்களினால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு 8 விழுக்காடு விற்பனை வரி உள்ளது. ஆனால் கையால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு வரி விலக்கு உள்ளது. உற்பத்தியில் ஒரு சில பகுதிகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மெழுகுத் தீப்பெட்டிகள் கையினால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு சமமாகாது என்றும், அவை வரிவிலக்கு பெறத் தகுதி வாய்ந்தது அல்ல என்றும் 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் ஆணையிட்டுள்ளார். தற்போது தென்னிந்தியத் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம், இத்தகைய மெழுகுத் தீப்பெட்டிகளுக்கு முன்பு இருந்ததைப் போல தொடர்ந்து வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளனர். இவர்களது கோரிக்கையை இந்த அரசு பரிசீலித்து பகுதி இயந்திரத்தினாலும், பகுதி கையினாலும் செய்யப்படும் மெழுகு தீக்குச்சிகளுக்கும் முழு வரி விலக்கு அளிக்க முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மணி குடிசைத் தொழிலாகச் செய்யும் ரொட்டி மற்றும் பண்டங்களுக்கும் விற்பனை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்க வேண்டும் என்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். 17.7.96 முதல் ரொட்டிக்கு குறைந்த வரியாக 4 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. தற்போது 19.8.97ல் பேக்கரிகளில் தயாரிக்கப்படும் வணிகச் சின்னம் இல்லாத உணவுப் பொருட்கள் மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் சிறு தொழில்களுக்கு சலுகை அளிக்கும் வகையில் ரூபாய்5 இலட்சம் மொத்த விற்பனை தொகை உள்ள வணிகர்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறெல்லாம் எவ்வளவோ சிரமத்திற்கு இடையே சிலரது கோரிக்கைகளை ஏற்று, சிலரது கோரிக்கைகளை ஏற்க முடியாமல் அதே நேரத்தில் சுலபமாக வரிகளை வசூலிக்கக்கூடிய வகையில், ஏழைகளுக்கு எந்தவிதமான சிரமமும் இல்லாமலும், ஏழைகளுக்கு - நடுத்தர மக்களுக்கு கூடுமான வரையில் வரிவிலக்கு அளித்தும், வரியைக் குறைத்தும் அதே நேரத்தில் தாங்கக்கூடியவர்கள் மீது வரியை விதித்தும் இந்த அரசு தன்னுடைய வருமானத்தை வருவாயைப் பெருக்கிக் கொண்டு இருக்கிற அதே சூழ்நிலையில் - அன்றைக்குக் கூட சில உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். இந்த வரி வசூலிப்பில் கண்டிப்பாக இருக்க வேண்டும்; இதிலே தீவிரமாக முயற்சிகள் வேண்டும்; திறமையாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னார்கள். நான் அன்றைக்குச் சொன்னதை மீண்டும் இங்கே நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

**ஆயத்தீர்வை மீதான வரிவிதிப்பை எதிர்த்து வழக்கு**

இந்தியாவில் தயாரிக்கப்படுகிற வெளிநாட்டு மதுவின் மீதான 1981 - லிருந்து, அந்த அதிபர்கள் 1989 ஆம் ஆண்டு முடிய செலுத்த வேண்டிய ஆயத் தீர்வை மீதான வரி 57.46 கோடி ரூபாய். அவர்கள்செலுத்த வேண்டிய ஆயத்தீர்வை மீதான விற்பனை வரிதான் இந்த 57 கோடி ரூபாய். இந்த வரியை வசூலிக்க 1989லேயே நடவடிக்கை எடுக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது, அவர்கள் நடவடிக்கையை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு அரசுக்கு சாதகமாக அமைந்தது. எனவே அவர்கள் உச்சநீதி மன்றத்திற்குத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீட்டிற்குச் சென்றார்கள். உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றதே தவிர இடைக்கால தடையாணை விதிக்கப்படவில்லை. இடைக்காலத் தடையாணை இல்லையென்றால் அந்தவரியை வசூலித்து இருக்கலாம். வரி வசூலிக்கப் படவில்லை. இதற்கிடையிலே அவர்களுக்கு ஏதுவாக திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்டுவிட்டது. இப்போதும் அவர்களுக்கு ஏதுவாகத்தானே - இதையெல்லாம் செய்ய வேண்டுமென்பதற்காகத்தானே தி.மு.க ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்? அவர்களுக்கு ஏதுவாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அப்போது கலைக்கப்பட்டது. அப்படி கலைக்கப்பட்ட பிறகு கவர்னருடைய ஆட்சி வந்தது. அந்த கவர்னர் பீஷ்ம நாராயண் சிங், கவர்னராக இருந்தபோது இந்தக் கோப்பு அவர்களுக்கு வந்தவுடன் அவர்கள் சொன்னார்கள்.

தடையாணைதான் இல்லையே, வரியை வசூலிக்கலாமே என்று கருதிப் பார்க்காமல், இது குறித்து உச்சநீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது, ஆகவே வசூலிக்க வேண்டாமென்று அவர், அவருடைய கருத்தை அதிலே, அந்தக் கோப்பிலே பதிய வைத்திருக்கிறார். கவர்னர் ஆட்சிக்குப் பிறகு 1991ல் நடந்த தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலே ஆட்சி அமைந்தது. அந்த ஆட்சி அமைந்த பிறகு கவர்னர் இடத்திலே இருந்த அந்தக் கோப்பு சுற்றி நிதி அமைச்சருக்கு வந்தது. நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அந்தக்கோப்பிலே 31.7.91ல் கையெழுத்திடுகிறார். இப்படி ஒரு நிலைமை இருக்கிறது என்று அவர் ஒன்றும் கருத்துச் சொல்லவில்லை. அவர் ஒன்றும் கருத்துச் சொல்ல முடியாது. அவரெல்லாம் எப்படிக் கருத்துச் சொல்ல முடியும்? நிதியமைச்சர் கருத்துச் சொல்ல முடியுமா? நிதியமைச்சர் கோப்பிலே கையெழுத்து

போடுகிறார். கையெழுத்துப் போட்டு முதலமைச்சருக்கு அனுப்புகிறார். 31.7.91ல் நாவலர் நெடுஞ்செழியன் நிதியமைச்சர் கையெழுத்துப் போட்டு முதலமைச்சருக்கு கோப்பினை அனுப்பி வைக்கிறார்.

### ஒரு வருடம் 4 மாதம் கழித்து ஜெயலலிதா கையெழுத்து

முதலமைச்சர் அந்தக் கோப்பினைப் பார்த்துவிட்டு, ஒரு வருடம் நான்கு மாதங்கள், பத்தொன்பது நாட்கள் கழித்து அதிலே கையெழுத்து இடுகிறார். என்ன கையெழுத்து. இவ்வளவு நாள் கழித்து என்ன [illegible] செய்கிறாரா? இல்லை. வெறும் கையெழுத்து. நிதியமைச்சர் என்ன கையெழுத்து இட்டாரோ, அதே கையெழுத்தை அவரும் இட்டார். எதற்கு நிதியமைச்சர் கையெழுத்து இட்டிருக்கிறார்? இப்போது வசூலிக்க வேண்டாம். வழக்கு முடியட்டும் என்று எழுதியிருக்கிறாரே கவர்னர். அதை ஏற்றுக் கொண்டுதான் நிதியமைச்சர் கையெழுத்து இட்டிருப்பதாகப் பொருள். அதையே திரும்பவும் முதலமைச்சரும் ஏற்றுக்கொண்டு. அவரும் கையெழுத்திடுகிறார். எனவே. அது வசூலிக்கப்படவேயில்லை. நம்முடைய ஆட்சி 1996 ஆம் ஆண்டு வந்தவுடன். அந்தக் கோப்பை எங்கெங்கோ சுற்றி. தேடிப்பார்த்து. கடைசியாக அதைப் பார்த்தபோது. இந்த வரியை வசூலிக்கச் சொல்லி உத்தரவிடப்பட்டது. அவ்வாறு வசூலிக்கச் சொல்லி உத்தரவிடப்பட்டதும் இந்த 57 கோடி ரூபாயைச் செலுத்த வேண்டியவர்கள் நம்மைச் சந்தித்து. தவணை முறையில் கட்டுகிறோம் என்றோ. அல்லது இரண்டு ஆண்டுக்காலம் தவணை கொடுங்கள் என்றோ யாரும் கேட்கவில்லை.

### தடையாணையை நீக்கிட உயர்நீதிமன்றம் செல்ல உத்தரவு

இதற்கிடையிலே உச்சநீதிமன்றத்தினுடைய ஆணையும் வந்து விட்டது. அந்த வரியைக் கட்டத்தான் வேண்டுமென்று உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பும் வந்துவிட்டது. இதில் நாம் கவனமாகப் பார்க்க வேண்டும். உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பும் வந்துவிட்டது. உடனடியாகக் கட்ட வேண்டுமென்று அவர்களுக்கு நோட்டீஸ் போனதும். சிட்டி சிவில் கோர்ட்டுக்குப்போய் ஸ்டே வாங்கிவிட்டார்கள். உச்சநீதிமன்றத்தினுடைய ஆணைக்கு சிட்டி சிவில் கோர்ட்டிலே ஸ்டே கொடுக்கப்பட்டது. வழக்கினை நடத்துங்கள்; தீவிரமாக நடத்துங்கள் என்று சொன்னேன். வழக்கும் நடத்தப்பட்டது. அதில், 30 ஆம் தேதியன்று தீர்ப்பு. தீர்ப்பு வரும் என்று எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தால் நீதிபதிசொல்லிவிட்டார், "மறுபடியும் மறு ஆய்வு செய்யப்போகிறேன்; தெளிவாக்கப்பட வேண்டியிருக்கிறது; மறுவிசாரணை நடத்தப் போகிறேன்" என்று சொல்லி விட்டார். சிட்டி சிவில் கோர்ட்டு நீதிபதி மறு விசாரணை நடத்தப் போகிறேன் என்று 'கம்ப்ளீட்டாக எல்லாவற்றையும் 'ரீ-ஓப்பன்' பண்ணப் போகிறேன் என்று சொல்லி. மீண்டும் வழக்கு நடைபெற்று [illegible] உங்களுக்கு [illegible] தடையாணையை நீக்கி அந்தத் தொகையை விரைவிலே வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் துறைக்கு ஆணையிட்டதோடு. சிட்டி சிவில் கோர்ட்டினுடைய தடையாணையை நீக்கிட உயர்நீதிமன்றத்திற்குச் செல்லுமாறு ஆணையிட்டுள்ளேன் [illegible] என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி ஒரு நிலைமை யாரும் எதையும் பொதுவாக முடிகிறது இன்றைக்கு நாட்டில். நான் எந்தத் துறையையும் குறை கூறவில்லை. ஆனால். இந்த 57 கோடி ரூபாய் அரசுக்கு வந்து சேர்ந்தால், எத்தனை நல்ல காரியங்களை எத்தனை எளியவர்களுக்கான திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச்சொல்கிறேன்.

### மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அலுவலகங்களுக்குக் கட்டடங்கள்

இதற்கடுத்து. மாவட்ட நிர்வாகத்தைப் பற்றி யாரும் அதிகம் பேசவில்லை. காரணம். மாவட்டம் மிகவும் நன்றாக இருக்கும்போது எதற்காகப் பேச வேண்டும் என்று. பேசாமல் விட்டுவிட்டீர்கள் என்றே கருதுகிறேன். மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில். இப்போது மிக முக்கியமாக. மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதுதான் இருக்கின்றது. ஏற்கெனவே இருந்த அரசால், நான்கைந்து புதிய மாவட்டங்கள் அன்றைக்கு உருவாக்கப் பட்டது என்றாலும்கூட. அதிலே எந்த மாவட்டத்திலும் கட்டடங்கள் கட்டப்படவில்லை. தூத்துக்குடிக்கு கட்டடம் கட்டப்படவில்லை. திருவண்ணாமலையில் கட்டடம் கட்டுவதற்கு முயன்று, அதிலே ஒரு தகராறு ஏற்பட்டு நின்றுவிட்டது. விழுப்புரத்தில் நாம்தான் கட்டி முடித்திருக்கிறோம். இந்த மாதம் அதனுடைய திறப்பு விழா நடைபெற இருக்கிறது. நாமே அறிவித்து, நாமேதான் கட்டி முடித்திருக்கிறோம். மற்றும் நான்கு மாவட்டங்களில் இடங்கள் பார்க்கப்பட்டிருக்கின்றன. அங்கெல்லாம் கட்டடங்கள் கட்டப்பட இருக்கின்றன.

இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் புதிதாகப் பலபேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அது உங்களுக்கு நன்றாகத் தெரியும். சிலபேர் மாற்றப்பட்டிருக்கிறார்கள். புதிதாக வந்தவர்கள், ஏற்கெனவே இருப்பவர் எல்லோரும், நம்முடைய அரசின் திட்டங்களை. இந்த நிதிநிலை அறிக்கையிலே நாம் சொல்லியிருக்கின்ற திட்டங்களை 'இம்ப்ளிமெண்ட்' - நடைமுறைப் படுத்துவதற்குத் தக்க அறிவுரைகளைப் பெறுவதற்கும். அவர்களுடைய கருத்துக்களை அரசு பெறுவதற்கும் ஏற்ற வகையில் ஜூன் மாத முதல் வாரத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு. போலீஸ் அதிகாரிகளுடைய மாநாடு நடைபெற இருக்கிறது. அந்த மாநாட்டில். நிதிநிலை அறிக்கையிலே 1996 - 97. 1997 - 98. 1998 - 99 இவைகளில் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் எவையெவை எஞ்சியிருக்கின்றனவோ. அவற்றை நிறைவேற்றவும். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். நமக்கு நாமே போன்ற திட்டங்களை நிறைவேற்றவும். மக்களுடைய அடிப்படை வசதிகளைப்பெற்றுத் தருவது [illegible] இந்த அரசினுடைய முக்கியமான குறிக்கோள் என்ற அந்தக் குறிக்கோளை நோக்கிப் பயணம் நடத்தவும் அந்த மாநாடு பெரிதும் பயன்படும் என்று கருதுகின்றேன்.



*சீர்திருத்தங்கள் மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கவும், அறிவை விசாலப்படுத்தவும், உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், சமத்துவத்தையும், சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப்படுத்தவுமே அமைய வேண்டும்.*

**- தந்தை பெரியார்**

எனவே, மாவட்ட நிர்வாகம் மற்றும் வணிகவரித்துறை நிர்வாகம் இவைகள் பற்றியெல்லாம் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிற உறுப்பினர்கள், அவைகளைத் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

- சட்டப்பேரவையில் 4.5.98 அன்று வணிக வரித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை. ★



*தென்புனல் காவிரி பாயும் வளமார் தஞ்சைத் தரணி இன்று மூன்று தனித்தனி மாவட்டங்களாக - நிர்வாக வசதிக்காகப் பிரிவுபட்டுள்ளது.*

*அவற்றுள் திருவாரூர் மாவட்டம் நடுநாயகமாக இலங்குகின்றது!*



# திருவாரூரும் திராவிட இயக்கமும்

**- திருவாரூர் கே.தங்கராசு**

*பிளவுபடாத தஞ்சை மாவட்டம் முற்றிலுமே திராவிடர் இயக்கக் கோட்டைதான் ஒரு காலத்தில் - பெரியார் அவர்களது கருஞ் சட்டைப் படை வீரர்களின் பாசறையாகவும் - பேரறிஞர் அண்ணாவின் போர் மறவர்களின் அணிவகுப்புக் கூடாரமாகவும் திகழ்ந்துள்ளது!*

*பிரிவுக்குப்பிறகு - சில பல பிளவுகள் ஏற்பட்டுள்ளதை மறைக்க இயலாது! திரு-ஆரூர் திருநகர் காவிரியின் பெருங்கிளை நதியாகிய வெட்டாற்றின் (வெட்டப்பட்ட ஆறு - அக்காலச் சோழ மன்னர்களின் நீர்ப்பாசன நுண்ணறிவுக்கோர் சான்று - கல்லணை போன்று!) சிறு கிளை நதியாகிய ஓடம்போக்கி எனும் சிற்றாறு இருகூறுகளாகப் பிரிக்க வடக்கில் அழகு கலை நயம் பொலியும் தியாகேசன் ஆலயமும் - தென்பால் வணிக வீதிகளும்; புகைவண்டி நிலையமும் பேருந்து நிலையமும் கொண்ட நகராட்சியாகும்.*

*சுற்றிலும் கழனிகள் - கன்னலும் - வாழையும் - செந்நெலும் தெங்கும் எங்கும் பொலியும் காட்சி, பார்வைக்கு மாட்சியாம்!*

*அந்நகரும் மாவட்டமும் தந்தை பெரியாரது கொள்கையின் பிடிப்பு தளராத கோட்டமென்றால் மிகையாகாது!*

*அக்காலத்தில் (ஏன், இன்றுங்கூட) பெருந்தொழில் வளம் ஏதுமற்ற மாவட்டத்தில் பெரும் பண்ணையார்களே (நிலப்பிரபுக்கள்) மிகுந்திருந்தனர்!*

*அவர்தம் பண்ணையில் உழைப்பதற்காகவே 'பகவான்' தம்மைப் படைத்திருப்பதாக நம்பி 'அடிமை வாழ்வை' ஏற்று நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்துவந்த சமுதாயத்தின் அடித்தட்டுத் தாழ்த்தப்பட்ட மக்களிடையே தந்தை பெரியார் அவர்களது சுயமரியாதைப் பகுத்தறிவுப் பிரச்சாரம் 'காட்டுத் தீ'யெனப் பரவியதில் வியப்பதற் கேதுமில்லை!*

*நிலப்பிரபுத்துவ வழிவழிவந்த சீமான்கள் நீதிக்கட்சியின்பால் தங்கள் ஆதரவை நல்கியதும் பெரியார் அவர்கள் நீதிக்கட்சிக்கு ஒருசமயம் தமது ஆதரவைத் தந்ததும் - அதன்வழி பெரியார் அவர்களது நீதிக்கட்சி ஆதரவுக்கு மட்டுமே தங்களது ஆதரவை நல்கிவந்த இராமானுஜம் (முதலியார்) ஸ்ரீதியாகராஜன் (முதலியார்) போன்றவர்கள் 1944 சேலம் மாநாட்டில் நீதிக்கட்சி 'திராவிடக்கழகமாக' மாற்றப்பட்டவுடன் பூனை வரக்கண்ட எலிகள் போல பாய்ந்தோடிவிட்டனர்; ஒருசில ராவ்பகதூர்கள் தலைமறைவு - "விடுதலை" வரும் அறிகுறி தென்பட்டவுடன் பேராயக்கட்சியில் (காங்கிரசு) சேர்ந்துவிட்டனர்!*

*என்றாலும் திருமிகு ஆறுமுகம் (நாடார்) திருவாளர்கள் த. சிங்கராயர், முத்துக்கிருஷ்ணன், தண்டவாளம் அரங்கராசு (இன்று திருவிடம் திங்களோடு நடத்திவரும் அர.திருவிடம் அவர்களது தந்தையார்) மற்றும் V.S.P. யாகூப் போன்றவர்கள் 'திராவிடர் கழகத்தின் தூண்களாக' நின்று களப்பணிகளைத் துணிவோடு ஆற்றியதை யாரும் மறுக்க முடியாது.*

*மேலே குறிப்பிடப்பட்டவர்களில் யாருமே சீமான் இல்லை! ஆறுமுகனார் சிறிது வசதிபடைத்தவர்; சிங்கராயர் சிறு-சிறு வணிகம் செய்தவர்; அரங்கராசு கடைவீதியில் ஆயத்த உடை அங்காடி நடத்தியவர் V.S.P. யாகூப் முழுநேர கழகப் பணியாளர்.*

*ஓடம்போக்கியாற்றின் தென்பகுதி விஜயபுரம் என்று அழைக்கப்பட்டது! அங்கு கடைத்தெருவின் நடுவில் உள்ள எல்லையம்மன் ஆலயத்திற்கு எதிரில் உள்ள சன்னிதியில்தான் பெரும்பாலான பொதுக்கூட்டங்கள் நடைபெறும். பெரியார், அண்ணா, காமராசர் போன்ற பெருந்தலைவர்களது கூட்டங்களும் நடக்கும் இடம் அதுவே!*

*ஆற்றின் வடபுறமான திருவாரூர் திராவிட இயக்கத் தொண்டர்களை நிரம்பக்கொண்டது என்றால் - தென்புறமுள்ள விஜயபுரம் காங்கிரசுக்காரர்களை அதிகம் உள்ளடக்கியது என்று கூறலாம்.*

*வணிகர் துரைசாமி (செட்டியார்), மிட்டாய்க்கடை சிவராமராவ், பொடிக்கடை அய்யாச்சாமி, வெற்றிலைப்பாக்குக் கடை பாவாடை (வன்னியர்), தியாகி சிங்காரவேல் - இவர் 1942 வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில மூன்றாண்டு சிறைத்தண்டனை பெற்று அலிப்புரம் (கல்கத்தா) சிறையில் வாடிய திருவாரூரின் ஒரே காங்கிரசுத் தியாகி!*

*திராவிட இயக்க - காங்கிரசுக் கட்சிக் கூட்டங்கள் மாதந்தவறாது மாறிமாறி எல்லையம்மன் சன்னதியில் நடைபெறும்! தவறாது குழப்பங்களும் ஏற்படும்!*

*இந்த நிலையில் 'திடீரென்று' வழமைக்கு மாறாகப் புதுக்குரல் ஒன்று இடியென வந்து அனைவரையும் தாக்கியது;*

*"பாராட்டிப் போற்றிவந்த*
*பழமை உலகம்*
*ஈரோட்டுப் பூகம்பத்தால்*
*இடியுது பார்"*

- என்ற முழக்கம்தான் அது! அந்த ஒலி பொதுவாக அனைவரையும் மிகமிகக் கவர்ந்தது. பண்டிதர்கள் இலக்கண இலக்கிய கவிதை நயத்துக்காகப் பாராட்டினார்கள்!

பாமரர்கள் இந்தக் குரலுக்குச் சொந்தக்காரரோடு தங்களை இணைத்துக் கொள்ளத் துடித்தார்கள். கழகத்தோழர்கள் தங்களுக்கு மிகப்பெரிய போர்வீரர் கிடைத்து விட்டதாகச் செம்மாந்து நடந்தார்கள்.



காங்கிரசுக்காரர்கள் இம்மாதிரி எழுதிட நம்மில் எவருமில்லையே என்று ஏங்கினார்கள்.

அந்தக் குரலுக்குரியவர் - புதுக்கவிதையின் 'பிதாமகரான' இன்றைய தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்தான்! 'கவிதையல்ல' என்ற தலைப்பில் அவர் வெளியிட்டுள்ள புதுக்கவிதை நூலில் இதுபோன்று நிரம்பக் காணலாம்!

உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் போதே 'முரசொலி' கையெழுத்து ஏட்டை நடத்தியவர் - கல்வியை முடித்து ஈரோட்டில் தந்தை பெரியார் அவர்களது குடியரசு - விடுதலை - ஏடுகளின் துணையாசிரியராக இருந்து பயிற்சி முடித்தபின் திருவாரூர் வந்து 'முரசொலி' வாரஏட்டை 'கருணாநிதி' அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டார்; அந்த அச்சகம் கருணை எம்.ஜமால் என்ற முஸ்லிம் நண்பருடையது. அவர் பெயருக்கு முன்புதான் கருணை இருக்கிறதே தவிர மிகுந்த கண்டிப்புக்காரர்!

காலணா குறைந்தாலும் அச்சிட்ட வாரஏட்டைக் கொடுக்க மாட்டார். முழுத்தொகையும கட்டிவிட்டுத்தான் ஏடுகளை எடுத்து ஊர்களுக்கு அனுப்பிட முடியும்!

பின்னாளில் அவர் தீவிர தி.மு.க.வாதியாகி திருவாரூர் நகரமன்றத் தலைவருமானார் என்பது வேறு!

பிறகென்ன! முரசொலி வார ஏடு! முற்றிலும் புதிய நடையிலான உணர்ச்சிப் பிரவாகப் பேச்சு! நடிகவேள் எம்.ஆர்.இராதாவுக்காக எழுதி உடன் நடித்த 'தூக்குமேடை' நாடகப் பிரவாகம்! அண்ணாவின் 'ஓர்இரவு', 'வேலைக்காரி' நாடகங்கள் ஆண்டுக் கணக்கில் தஞ்சை இராமநாதன் அரங்கில் நடந்ததோடு - தந்தை பெரியார் அவர்களின் சூறாவளி சுற்றுப்பயணம் பிரிக்கப்படாத தஞ்சை மாவட்டத்தில் திராவிட இயக்கம் இல்லாத பட்டி (பட்டின - பட்டணங்களைப் பற்றிவாழும் சிறு குடியிருப்பு) தொட்டி (நகரங்களை - பேரூர்களைத் தொற்றி வாழும் சிற்றூர்) எங்கும் பரவிட நடிகவேள் எம்.ஆர்.இராதா திருவாரூரிலேயே முகாமிட்டு தனது 'விலோ' (விதவையின் கண்ணீர்), 'இழந்த காதல்', 'லட்சுமிகாந்தன்' போன்ற நாடகங்களில் நடித்ததோடு மறைந்த சட்டப்பேரவைத் தலைவர் சி.பி.சிற்றரசு அவர்களைக் கொண்டு எழுதிய 'போர்வாள்' என்ற மாபெரும் உணர்ச்சிக் காவிய நாடகத்தைத் தயாரித்து அதனை சிற்றரசு உடன் நடிக்க திருவாரூரிலே அரங்கேற்றினர்.

பாவலர் பாலசுந்தரம் அவர்களது 'பராசக்தி' நாடகம் ஓர்புறம்; கலைஞர் தீட்டிய 'மந்திரிகுமாரி' நாடகம் ரத்தினம் கம்பெனியாரால் ஓர்பக்கம்; 'சாந்தா அல்லது பழனியப்பன்' நாடகம் R.V.கோபால் கம்பெனியால் ஓர்பக்கம் நடந்தபடி, இப்படி எங்கெங்கு காணினும் பகுத்தறிவு சுயமரியாதைப் பிரச்சாரம் பொங்கு காவிரிப்புனல் தோற்றிடும் விதமாக நெடும் பிரவாகமெடுத்து ஓடியது!

இவற்றுடன் பட்டுக்கோட்டை K.V.அழகிரிசாமி அவர்களது வெண்கல நாத முழக்கம்! பேராசிரியர் க.அன்பழகன், இரா.நெடுஞ்செழியன், டார்பிடோ A.P.ஜனார்த்தனம், S.D.விவேகி, பாவலர் பாலசுந்தரம், குடந்தை S.K.சாமி மற்றும் நூற்றுக்கணக்கானவர்களது பகுத்தறிவுப் பிரச்சாரம், இத்தனைக்கும் மேலாக பாவேந்தர் பாரதிதாசன அவர்களது பகுத்தறிவுப்பாடல்களை விஜயபுரம் கணபதி, S.K.சாமி போன்றவர்கள் தங்கள் இயக்கத்திற்காகப் பாடிய பாடல்கள் உள்ளபடியே 'ஈரோட்டு பூகம்பத்தை'யே உண்டாக்கி விட்டது.

இடையே 1947 ஆகஸ்ட் 15ல் நாடு விடுதலையடைந்து விட்டதை ஒரு சமாதானமாகக் கூறிக்கொண்டு அதுவரை திராவிடர் கழகக் கூட்டங்களில் 'கலகம்' விளைப்பது, எதிர்மேடை போடுவது என்ற நிலையில் இருந்த நூற்றுக்கணக்கான காங்கிரசுக்காரர்கள் திராவிடர் கழகத்தில் ஒட்டுமொத்தமாக இணைந்துவிட்டார்கள்.

கேட்டால், 'சுதந்திரம்' வாங்கித்தருவது ஒன்றுதான் காங்கிரசுக் கட்சியின் வேலை; அது முடிந்துவிட்டது (சுதந்திரம் வந்துவிட்டது). காங்கிரசுக்கு வேலை இல்லை அதைக் கலைந்து விடலாம் என்ற காந்தியடிகளின் கூற்றை எடுத்துக்காட்டி இனி எங்கள் வேலையெல்லாம் ஆண்டாண்டுகாலமாக அடிமைப்பட்டு சதிவழக்குகளில் வீழ்ந்து வாழ்வையே மாய்த்துக் கொண்டுவாழும் கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக உழைப்பதே சரியாகும் - அதற்கு தந்தை பெரியார் அவர்களையும் அவர்களது தன்மானக் கொள்கைகளையும் விட்டால் வேறு வழியே இல்லையென்று அடித்துச் சொன்னார்கள்!

எனவே இப்போது ஏறத்தாழ எதிர்ப்பு என்பது சிறிதுமின்றி 'இயக்கம்' நாடெங்கும் பரவியது போல தஞ்சைத்தரணியில் பல மடங்கு வேகமாகப் பரவியது. அதனில் இன்றைய திருவாரூர் மாவட்டம் முதலிடம் வகித்தது!

திராவிட இயக்கத்தின் தாக்கம் இன்னும் முற்றாகக் குறையாத காரணத்தால் தென்மாவட்டங்களைப் போல சாதி-மதப் போரில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாது - இன்றைய நீர்வரத்துக் குறைந்த காவிரிபோலத் திருவாரூர் மாவட்டம் அமைதியாகக் காட்சி தருகிறது! ★



# கலைஞர் கருணை



## திரு. அ. அசோகன், எம்.எல்.ஏ., அவர்களுடன் ஓர் சந்திப்பு

அரசு மூலமான பணிகளாகட்டும்; கட்சிகள் மூலமான பணிகளாகட்டும்; இப்படியுமில்லாமல் பல்வேறு சமூக அமைப்புகள் மூலம் நடத்தப்படும் பணிகள்தானாகட்டும் - எல்லாவற்றிலும் முன்னால் நின்று தொகுதி மக்களால் போற்றிப் புகழப்படுபவராகத் திகழ்கிறார், திரு.அ.அசோகன், எம்.எல்.ஏ., அவர்கள்.

தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும், அதிக வாக்குகள் வித்தியாசத்தில் பெருவெற்றி பெற்றிருக்கிறார் இவர்; 34,437 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி வாகை சூடியிருக்கிறார்.

துருதுருப்பான இளைஞராக இருக்கிறார், அசோகன். இதுமட்டுமே அவருடைய பெயருக்கும், புகழுக்கும் காரணமா? அவரையே சந்தித்துப் பேசலாம் என்று வீடு தேடிச் சென்றோம். கமலாலயம் குளத்தின் மேல்கரையில் நிற்கின்ற தியாகராசர் கோயிலின் நெடிய கோபுரத்தின் எதிர்சாரியில் உள்ள சிறிய வீடு அவருடையது.

"வாங்கண்ணே!" என்று இன்முகத்தோடு கரம்கூப்பி நம்மை வரவேற்றார் அசோகன். "நல்லவேளை...நாளைக்கு வந்திருந்தீங்கன்னா நான் கிடைச்சிருக்க மாட்டேன்" என்றார், பலத்த சிரிப்போடு.

"நாளைக்கு என்ன - எதுனா வெளியூர்ப் பயணமா ?" என்று கேட்டோம்.

"சட்டசபை நடந்துகிட்டிருக்குதில்லே, போவேணாமா ?"

"ஓ!"

"என்ன சாதாரணமா ஓங்கிறீங்க ? ஒருநா போகலைன்னா என்ன கெட்ரும்னு சில பேராட்டம் நீங்களும் நினைக்கலாம். எம்.எல்.ஏ. எல்லாரும் பதவியேத்துகிட்டப்ப முதல் நபரா நான்தான் பதவியேத்துகிட்டேன். அதேமாதிரி...அன்னையிலேர்ந்து இன்னைய வரைக்கும் ஒருநாள் கூட தவறாமெ சட்டசபைக்குப் போய்வர்ற எம்.எல்.ஏ.வுல முதல் ஆளாவும் நான்தாண்ணே இருக்கேன்!"

"உள்ளபடியே பெரிய விஷயம்தான்" - என்று பாராட்டிவிட்டு நாம் பேசத்தொடங்கும் முன்பாக அவரே ஆரம்பித்தார் -

"தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலே இருக்கிற ஆதிதிராவிடர் நலம் மற்றும் மாநில விழிப்புக் கண்காணிப்புக் குழு உறுப்பினராவும் நான் இருக்கேன்..." - என்று பெருமையோடு சொல்லிக்கொண்ட அசோகன், தான் சட்டமன்ற உறுப்பினர் ஆனதிலிருந்து திருவாரூருக்கும் தமது சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் அன்று வரை செய்துமுடித்துள்ள சாதனைகளை அடுக்கிக்கொண்டே போனார்.

மாவட்டத் தலைநகரான திருவாரூரில் ரூ.5.50 கோடி செலவில் ரயில்வே கீழ்ப்பாலம் கட்டப்படுகிறது ; நகரின் மையப் பகுதியில் ஓடும் ஓடம் போக்கி ஆற்றின் குறுக்கே ஒரு கோடி ரூபாய் மதிப்பில் பாலம் கட்டப்படவிருக்கிறது

திருவாரூரில் இருக்கின்ற அரசு பொதுமருத்துவமனையில், சிகிச்சை வசதிக்காகவும், புதிய கட்டடங்கள், படுக்கை வசதி போன்றவற்றுக்காகவும் அரசு மூலம் ரூ.1 கோடியே 25 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டிருக்கிறது.

அரசு அலுவலகங்கள் கட்டுவதற்காக ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிட அனுமதி பெறப்பட்டிருக்கிறது.

திருவாரூர் ஒன்றியத்திலிருக்கின்ற திருநெய்ப்பேர், புதூர், கொட்டாரக்குடி, புலிவலம் ஆகிய இடங்களில் உள்ள அரசுப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட ரூ.25 இலட்சம் அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

ஆண்டி பாளையம், புதூர், பெருங்குடி ஆகிய இடங்களில் துணைச் சுகாதார நிலையங்கள் கட்டுவதற்காக ரூ.13.50 இலட்சம் பெறப்பட்டு வேலைகள் நடந்துவருகிறது.

### திருவாரூர் மாவட்டத்தில் மக்கள் நல்வாழ்வுப் பணி

| | |
|---|---|
| ★ மாவட்ட மருத்துவமனை | 1 |
| ★ வட்ட மருத்துவமனை | 8 |
| ★ ஆரம்பச் சுகாதார நிலையங்கள் | 39 |
| ★ துணைச்சுகாதார நிலையங்கள் | 10 |
| ★ கிராமப்புற வைத்திய சாலை (சித்த மருத்துவம்) | 23 |
| ★ பாலிடெக்னிக் | 2 |



**இலட்சிய வெற்றிக்குப் பதவி ஒரு கருவியே தவிர, பதவியே இலட்சியம் ஆகிவிட முடியாது!**

**- கலைஞர்**

கொரடாச்சேரி மக்கள் நீண்ட நாட்களாக, அங்குள்ள உயர்நிலைப்பள்ளியை மேனிலைப் பள்ளியாக ஆக்கவேண்டும் என்று கேட்டு வந்தனர்; அக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து திருவாரூரில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியும், மகளிர் கல்லூரியும், பல் தொழில்நுட்பக் கல்லூரியும் கட்டப்படவிருக்கிறது.

"ஏதேது...ஏராளமாதான் செய்துகிட்டுவர்றீங்க; அதான் மக்கள் பாராட்றாங்க" - என்று நாம் வியப்புடன் கூற,

"அட, பாதிதாங்க சொல்லியிருக்கேன்; இன்னம் நெறயா சொல்லவேண்டியிருக்குது; செய்ய வேண்டியிருக்குது. மக்கள் பாராட்றாங்கன்னா...நான் நம்ம கட்சிக்காரவங்க - மத்த கட்சிக்காரவங்கன்னு வித்தியாசம் பார்க்காம...நம்ம தொகுதி மக்கள்னு பொதுப்பார்வையோட அவர்கள் குறைகளை உணர்ந்து நடவடிக்கை எடுக்கிறதாலதாங்க. தலைவர் கலைஞர்கிட்ட நான் கத்துகிட்ட பாடம் இது. உதாரணத்துக்கு அப்படி ஒண்ணு சொல்றேன் கேளுங்க - கீவளூர் யூனியன்ல முப்பத்திக்கோட்டகம்னு ஒரு கிராமம் இருக்கு; கிட்டத்தட்ட தீவு மாதிரிதான் அது. லேசுல யாரும் போய்வர முடியாது. துக்கம் விசாரிக்கப் போனாகூட...இக்கரையிலேயே நின்னு விசாரிச்சுட்டுத் திரும்பிடற மாதிரிதான் நிலைமை இருந்தது. இத்தனைக்கும், கம்யூனிஸ்ட் அதிகமுள்ள கிராமம் அது. நான் அதையெல்லாம் பார்க்காமெ...அரசாங்கத்தெ வலியுறுத்தி ஒண்ணரைக் கோடி ரூபாய்ல ஒருபாலம் கட்டவெச்சென்; அந்த குக்கிராமத்துக்குத் தார் ரோடு போடவும் தலைவர் கலைஞர் கருணையால ஏற்பாடு பண்ணீட்டேன். இப்பிடி நல்லது செஞ்சா மக்கள் பாராட்டமாட்டாங்களா என்ன!"

மேலும் தன்னுடைய சாதனைப் பட்டியலைத் தொடர்ந்தார், அசோகன்.

இவருடைய முயற்சியால் - அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ரூ.1 கோடி செலவில் நவீன கிராமம் அமைக்கத் திருவாரூர் ஒன்றியம் புலிவலம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

சமத்துவபுரம் அமைத்திட அலிவலம் கிராமம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.



*திருவாரூர் - பேரறிஞர் அண்ணா சாலையில் உள்ள ரயில் பாதையில், கீழ்ப்பாலம் அமைக்கும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.*



கொரடாச்சேரி பேரூராட்சியில் குழந்தைகள் பூங்கா அமைகிறது.

பத்தூர், பத்தூர் மேல்கரையினை இணைத்திட வெட்டாற்றின் குறுக்கே பாலம் அமைத்திடக் கோரப்பட்டுள்ளது.

கீழ்வேளூரை வட்டத் தலைநகர் ஆக்கி, அங்கே ஒரு புதிய தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. கீழ்வேளூர் - ஓர்குடி கிராமச்சாலை, வரும் நிதியாண்டில் ரூ.42 இலட்சம் செலவில் தார்ச்சாலையாக அமைக்கப்படவுள்ளது.

திருவாரூர் தொகுதி முழுவதும் 10,814 ஆதிதிராவிடர் குடிசைகளுக்குக் கடந்த ஆண்டில் ஒற்றை மின்விளக்கு வசதி செய்து தரப்பட்டது.

## திருவாரூர் மாவட்டத்தில்...

*24 மணி நேரமும் செயல்படும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் - 5.*

*அவை; மக்கள் தொகையுடன் -*

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளிக்கோட்டை | - | 36,166 |
| 2. | முத்துப்பேட்டை | - | 36,889 |
| 3. | பூந்தோட்டம் | - | 21,134 |
| 4. | திருவீழிமிழலை | - | 20,034 |
| 5. | சித்தமல்லி | - | 33,544 |

திருவாரூர் நகர் முழுவதும் சோடியம் வேஃபர் விளக்குகள் போடப்பட்டிருக்கிறது.

தொகுதி முழுவதும் கிராமக் குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

திருவாரூர் தொகுதியில் இராதாமங்கலம், வடகரை, வடக்குப் பனையூர், மாணலூர், கீழப்படுகை, குன்னியூர், திருநெய்ப்பேர், காவனூர், காவாலக்குடி, தேவர்கண்டநல்லூர், முசிரியம், காப்பணாமங்கலம், கல்லிக்குடி, அலிவலம், நெடுங்காட்டாங்குடி, ஒடாச்சேரி ஆகிய 16 கிராமங்களில் கால்நடைகள் நலம்பெறப் பார்வைக் கிளைநிலையங்கள் அமையவிருக்கின்றன.

இதுவரை விண்ணப்பித்த அனைவருக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா தரப்பட்டு வருகிறது.

அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்திருக்கிறார்கள்.

"இதெல்லாம் சரி, சட்டமன்ற உறுப்பினருக்குன்னு ஒரு நிதி, தொகுதி மேம்பாட்டுக்கு அரசு மூலம் கொடுத்திருக்காங்களே - அதுல என்னவெல்லாம் செய்யத் திட்டமிட்டிருக்கீங்க ?"

"புதுசா உருவான மாவட்டம்க இந்தத் திருவாரூரு; ஏராளமா செய்ய வேண்டியதிருக்கு. கொஞ்சம் கொஞ்சமாத்தானே செய்யணும் ? எம்.எல்.ஏ. நிதியில ஒரு ஐம்பது இலட்சம் ரூபாயை செலவிட்டுத் தொகுதி பூரா...பரவலா...பல நல்ல காரியங்கள் செய்யிறதுன்னு திட்டமிட்டுருக்கேன்..." - இவ்வாறு உறுதிமிக்க குரலில் தொடங்கி அவர் தெரிவித்த பணிகள் இவை:

"திருவாரூர் ஒன்றியம் திருநெய்ப்பேர் அரசு மேல்நிலைப்பள்ளி, புதூர் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள்; கொடிக்கால் பாளையம், கொட்டாரக்குடி, அடியக்கமங்கலம், அலிவலம், புலிவலம், சூரனூர், புதூர், திருநெய்ப்பேர், செருகுடி ஆகிய கிராமங்களிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளுக்குச் சமையல் கூடம் மற்றும் குடிநீர் வசதிகள்; கீழ்வேளூர் அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு வகுப்பறைக் கட்டடங்கள்.



*தேசிய நெடுஞ்சாலை சீரமைப்பு*

மேல அனக்குடி ஆதிதிராவிடர் சாலை மேம்பாடு.

கீழ்வேளூர் ஒன்றியம் கோகூர் ஊராட்சியில் வெட்டாற்றின் குறுக்கே நடைப்பாலம்; வலிவலம் ஊராட்சி வெள்ளையாற்றின் குறுக்கே நடைப்பாலம்.

கொரடாச்சேரியில் குழந்தைகள் பூங்கா.

திருவாரூர் தியாகராசர் ஆலய நான்கு மடவளாகத்திலும் குடிநீர்க்குழாய்கள்; கமலாலயத் திருக்குளத்தின் நான்கு கரைகளிலும் சிமெண்ட் இருக்கைகள் அமைத்தல்; திருக்குளம் தூர்வாருதல், வடிநீர்க்குழாய் வசதி செய்தல்.

அரசு மருத்துவமனையில் வேன் நிறுத்துவதற்குக் கொட்டகை கட்டித்தருதல்.

"சரி, வேற என்னவெல்லாம் இந்தத் தொகுதிக்கு நீங்க செய்யிறதா இருக்கீங்க ?" -



“கீழ்வேளூர்லேயிருந்து கொரடாச்சேரி வரைக்கும் பல கோடி ரூபாய் செலவில அழகான உறுதிமிக்க அகலச் சாலை போடணும்; திருவாரூர்ல துணை மின்நிலையம் ஒண்ணு அமைக்கணும்; தலைவர் கலைஞர் அரசு ஒதுக்கீடு பண்ணிக் கொடுத்திருக்கிற பதினஞ்சி கோடி ரூபாய்ல, இந்தத் திருவாரூர் தொகுதியில தொகுப்பு வீடுகள், பள்ளிக் கட்டடங்கள், கிராமச் சாலைகள் எல்லாம் செய்தாக வேண்டியிருக்கு. இன்னொரு முக்கியமான வேலை என்னன்னா...பல கோடி ரூபாய் செலவிட்டாவது இந்தத் திருவாரூர் நகர்ல பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றியாகணும்!”

3 ஊராட்சி ஒன்றியங்களும், 2 பேரூராட்சிகளும், ஒரு நகராட்சியும் உடையதான திருவாரூர் சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினர் திரு.அ.அசோகன் அவர்கள், உண்மையான ஒரு செயல்வீரருக்கே உரிய மிடுக்கோடு இதைத் தெரிவித்தார்.

சில ஆண்டுகளுக்குமுன், கீழவெண்மணி கிராமத்தில், சிலர் வைக்கோல் போரில் போட்டுத் தீயிட்டுக் கொளுத்திக் கொலை செய்யப்பட்ட கொடூரச் சம்பவம் நினைவிருக்கிறதா ? அதிலிருந்து தப்பி உயிர்மீண்ட ஓர் இளைஞருக்குத் தனது தங்கையை மணம் முடித்துக் கொடுத்திருக்கிறார் இவர். கழக இளைஞரணியில், மாவட்ட அமைப்பாளராக இருந்து அரும்பணியாற்றி வருகிறார்.

தொகுதி மக்களில், யார்-என்ன கேட்டுக் கடிதமெழுதினாலும் உடனுக்குடன் பதில் எழுதிவிடுகிறார்.

ஆந்திர மாநில மக்கள் புயல் சீற்றத்திற்கு ஆளாகி அவதிப்பட்டபோது, ‘எக்ஸ்னோரா’ அமைப்பின் சார்பில் ஏராளமான பொருட்களும் நிதியும் சேகரித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மூலம் அனுப்பிவைத்திருக்கிறார்.

திருவாரூரில், சுக்கனாறு குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த ஆய்வு மேற்கொள்ளுமாறும் - இந்தப் புதிய மாவட்டம் பொருளாதார மேம்பாடுபெற, பல பெரிய தொழிற்சாலைகள் அமைக்கவேண்டுமென்றும் சட்டப்பேரவையில் அண்மையில் குரல் கொடுத்திருக்கிறார்.

‘சேவைமுகாம்’ நடத்தி, ஆரூர்ப் பெரியகோயிலில் உழவாரப் பணி நடத்திய சிறப்பும் இவருக்கு உண்டு.

- பி.எல்.ஆர்.



# திரு.வி.க.வும் கலைஞரும் !

சிந்துபாடும் அருவியெனச்
சிதம்பரனார் பெருகிவந்தால்
வண்டுபாடும் தமிழ்த்தென்றல்
வாராமல் இருந்திடுமோ?
தாய் அகத்தில் சுரக்கின்ற உணர்வோடு
தாலாட்டு மொழியினிலே - விடுதலைக்குப்
போராடி வெற்றிகண்ட
மாவீரர் - அவர், என்
திருவாரூர்ப் பிறந்ததனால்,
‘திரு.வி.க.’ ஆகிவிட்டார்! நானோ...
திரு.மு.க. ஆகவில்லை;
தி.மு.க. ஆகிவிட்டேன்!

- கலைஞர்

(உலகத் தமிழ் மாநாட்டுக் கவியரங்கில் பாடியதிலிருந்து)

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906



தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23












**நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.**

**அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.**

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98


## இந்த இதழில்...


★ மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் புகழாரம் ........ 2
★ மாண்புமிகு முதலமைச்சர் பிறந்தநாள் செய்தி ........ 3
★ அரசு ஆணைகள் ........ 4
★ காயிதே மில்லத் பிறந்தநாள் விழாவில் கலைஞர் ........ 6
★ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு ........ 9
★ கல்வி சிறக்கும் திருவாரூர் ........ 17
★ தமிழர் தளபதி சர் ஏ.டி.பன்னீர்செல்வம் ........ 20
★ காவலர் கடமை ........ 26
★ கலைஞர் கவிதைகளில் மரங்கள் ........ 28
★ கலைஞரின் தமிழ் ........ 31
★ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் முதலமைச்சர் அறிவிப்புகள் ........ 33
★ திருவாரூர் மாவட்டத்தில் பால்பெருக்குத் திட்டங்கள் ........ 36
★ பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் ........ 38
★ காவிரித் தாயின் கால்படும் இடங்கள் ........ 40
★ கால்நடை மருத்துவக் கல்லூரி கட்டடத் திறப்புவிழா - கலைஞர் உரை ........ 41
★ குறைகள் இருந்தால் அதைத் திருத்திக்கொள்ளும் ஆட்சி, விழுப்புரம் விழாவில் கலைஞர் ........ 44
★ திருச்சியில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி கலைஞர் உரை. ........ 47


### திருக்குறள்

**"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை"** - குறள்

**பெ**ற்றோர் - வாழ்க்கைத் துணை - குழந்தைகள் என இயற்கையாக அமைந்திடும் மூவர்க்கும் துணையாக இருப்பது இல்லறம் நடத்துவோர் கடமையாகும். (கலைஞர் உரையிலிருந்து)


**தமிழரசு**

**திருவள்ளுவர் ஆண்டு 2029**
**வைகாசி - ஆனி**
**ஜூன் 1-15, 1998**
**மலர் : 28 இதழ்: 23**


**முதல் பக்க அட்டையில்...**

**செ**ன்னையில் - கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் தலைமையகக் கட்டடத்திறப்பு விழாவில் மேதகு ஆளுநர் செல்வி மீ.பாத்திமா பீவி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் ஆகியோர்.

**கடைசிப் பக்க அட்டையில்...**

**வி**ழுப்புரம் - மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டடத் திறப்புவிழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மற்றும் அமைச்சர் பெருமக்கள்.

# "பல்கலைக்கழகங்களின் மேலான வளர்ச்சிக்கு முதலமைச்சர் கலைஞர் பாடுபட்டு வருகிறார்!"

- மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் புகழாரம்!



சென்னை மாதவரம் பால் பண்ணை வளாகத்தில் ரூ.1 கோடியே 60 இலட்சம் செலவில் அமைந்துள்ள, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் தலைமையகக் கட்டடத்தினை, 26.5.98 அன்று மேதகு தமிழக ஆளுநர் செல்வி. பாத்திமா பீவி அவர்கள் தலைமையில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்தார்.

இவ்விழாவில் மேதகு தமிழக ஆளுநர் செல்வி. பாத்திமா பீவி அவர்கள், தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

"கல்வி, மனித வாழ்க்கையில் ஒரு முக்கியப் பங்கினை வகிக்கிறது. நம் நாட்டின் வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும், நன்மைக்கும் மற்றும் அமைதியான சமூகநிலைக்கும் கல்வி ஒரு நம்பிக்கையூட்டும் கருவியாகும். உண்மையான அறிவை வளர்த்தால்தான், கல்வியின் நோக்கம் - அதாவது தரம் பார்த்து அணுகும் முறை மற்றும் சமப்படுத்தப்பட்ட மனநிலையை உருவாக்குதல் ஆகியவற்றாலேயே ஈடேறும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

வருங்காலம் நமது கைகளில்தான் உள்ளது. எனவே, ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்குவதில் நாம் நமது வலிமை மற்றும் பலவீனத்தைக் கருத்தில் கொண்டு அதற்கேற்பத் திட்டமிட வேண்டும்.

பல்லாயிரமாண்டுக் கால - நம் பாரம்பரியமும், மதிப்பும் இந்தியாவின் மாபெரும் சக்தியாகத் திகழ்கிறது.

நிகழ்காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ பாரத சமுதாயம் எவ்வளவு தான் நாகரீகமாக மாறினாலும், அது நமது ஒழுக்கம் மற்றும் கலாச்சார மதிப்பை இழந்துவிடக் கூடியதாக இருந்திடல் கூடாது.

## கல்வி அவசியம்

மனிதநேயம் மற்றும் சரிநிகரான சமுதாயத்தை உருவாக்க மனிதனுக்குக் கல்வி மிகவும் அவசியம் ஆகிறது. தொழில் கல்வி பயின்று, வேலை பார்ப்பவர்களில் இந்தியா உலகத்தில் 3-வது இடம் வகிக்கிறது.

நாம் தற்போது ஏழ்மையை ஒழிக்கப் பாடுபட்டுக் கொண்டு இருக்கிறோம். கல்வியறிவுக் குறைவுதான் ஏழ்மைக்கு முக்கியக் காரணமாகும். கல்வி நிறுவனங்களை நடத்தத் திறமை வாய்ந்த வல்லுனர்கள் தேவைப்படுகிறார்கள்.

இவர்களால்தான் கிராம மக்களை முன்னேற்றும் வகையில் திறம்படச் செய்யமுடியும். கல்வி பயின்றவர்கள் கிராம மக்களுக்குப் பணிசெய்யவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

## பல்கலைக்கழகங்கள்

இன்றைய இளைய தலைமுறையினர் இந்தப் பணியில் ஈடுபட வேண்டும். இளைய தலைமுறையினர் இந்தியாவை வளமாக உருவாக்கும் பொறுப்புணர்ச்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்ல இந்தியப் பல்கலைக்கழகங்கள் பெரிதும் உதவுகின்றன. மாணவர்களுக்குக் காலச் சூழ்நிலைக்கு ஏற்றபடி புதிய தொழில்நுட்பங்களைச் சொல்லிக்கொடுக்க வேண்டும். அப்படி சொல்லிக் கொடுத்தால்தான் நாம் நல்ல இடத்தைப் பிடிக்க முடியும். கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டம் இன்னும் பழமை வாய்ந்த நிலையில் உள்ளது.

## கல்வியில் மாற்றம்

காலச்சூழ்நிலைக்கு ஏற்றபடி கல்வியில் மாற்றம் கொண்டுவர வேண்டும். ஆசிரியர்கள், தாங்கள் பயிற்றுவிக்கும் திறனை அதிகப்படுத்த வேண்டும். இதை இந்தியா முழுவதும் கொண்டுவரவேண்டும். பல்கலைக் கழகங்களில் இதை உடனடியாகக் கொண்டு வர முடியாவிட்டாலும் குறைந்தபட்சம் ஆரம்பப் பள்ளிகளிலாவது அமல்படுத்த வேண்டும்.

## கலைஞருக்குப் பாராட்டு

பல்கலைக்கழக வளர்ச்சி முன்னேற்றம் ஆகியவற்றுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சிறப்புடன் பாடுபட்டு வருகிறார். அவருக்கு எனது பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எனது உறுதுணையும், ஒத்துழைப்பும் என்றும் உண்டு.

இவ்வாறு மேதகு ஆளுநர் செல்வி பாத்திமா பீவி அவர்கள் பேசினார்.



நிர்ணயிக்கப்படாததும், நாமே நிர்ணயித்துக் கொள்ள முடியாததுமான இயற்கையான மனித ஆயுட் காலத்தில் எழுபத்தி நான்கு ஆண்டுகளைக் கடந்து எழுபத்தி ஐந்தில் நான் அடியெடுத்து வைக்கிற நாள் இந்த - சூன் மூன்றாம் நாளாகும். நான் பிறந்த பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ் மொழியும் தமிழர் உரிமையும் காத்திட மூண்டெழுந்த இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் 1938 சூன் மூன்றாம் நாள் தான் தொடங்கப்பட்டது என்பதையும் அந்நாளில் அப்போர்க்களத்து இளஞ்சிப்பாய்களில் ஒருவனாக என்னை இணைத்துக் கொண்டு பொதுவாழ்வில் புகுந்தேன் என்பதையும் எண்ணிடும்போது எத்துணை இன்ப அலைகள் இதயத்தில் மோதுகின்றன.

பாச உணர்வும், அன்புப் பிணைப்பும் கொண்ட நேசமிகு பெரியோர்களும், தாய்மார்களும், என் உயிரினுமேலான உடன்பிறப்புக்களும், இதனை என் பவள விழா ஆண்டு எனக் கூறி வாழ்த்துகின்றனர்.



# கலைஞரின் பவள விழாச் செய்தி...

இந்திய நாட்டு சுதந்திரப் பொன்விழா ஆண்டின் நிறைவையும் - என்னைத் தலைவனாக ஏற்றுக் கொண்டுள்ள இந்தக் கழகத்தின் பொன்விழா ஆண்டின் முகப்பையும் இணைத்துக் கொண்டுள்ளது என் பவளவிழா என்கிற போது, ஓர் உணர்ச்சிப் பிரவாகம், பெருமிதம், என்னுள்ளத்தைக் கொள்ளை கொள்ளத்தான் செய்கிறது.

உலக அளவில் சமாதானத்தையும் - நாட்டின் ஒற்றுமையையும் - சமுதாய அளவில் அறிவியல் எழுச்சியையும் - அதன் தாக்கமாக அமைதிசூழ் வளமிகு - எதிர்காலத் தலைமுறையையும் உருவாக்கிட, மனிதநேய அடிப்படையில் அமைந்திட வேண்டிய வலிமைசேர் மாளிகையின் அடித்தளத்துக் கற்களில் ஒருவனாக இருக்கிறோம் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு, அவ்வாறு இருப்போர் அனைவரையும் என் உடன்பிறப்புக்களாகக் கருதி என் பொதுவாழ்வுப் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறேன்.

இந்தப் பயணத்தில் இடர், துயர், இன்பம், துன்பம், எதிர்ப்பு, ஆதரவு, ஏச்சு, பேச்சு, இழிவு, பழி என எத்தனையோ விதவிதமான நிகழ்வுகளை எதிர்கொள்ளும்போது என்னை ஆளாக்கிய பெரியாரையும், அரவணைத்து வழி நடத்திய அண்ணாவையும் நினைத்துக் கொண்டு - இலட்சியத்தில் இம்மியளவும் சறுக்கல் இல்லாமல் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டிருக்கிறேன்.

அறுபது இலட்சத்துக்கு மேற்பட்ட கழக உடன்பிறப்புக்களையும் - அன்பெனும் அமுதூட்டி ஆதரவுக் கரம் நீட்டித் துணை நிற்கும் கோடிக்கணக்கான தமிழ்ப் பெருமக்களையும் - அரசியலுக்கும் கட்சிப் பிரச்சினைகளுக்கும் அப்பாற்பட்டு வாழ்த்தி அருளுகின்ற அனைத்து நெஞ்சங்களையும் - தூய துணைகளாகக் கொண்டு எழுபத்தி நான்கு ஆண்டுகளைத் தாண்டி விட்டோமே என்ற மலைப்புடன் திரும்பிப் பார்க்கிறேன். என் விழிகள் மட்டும் விரிந்திடவில்லை - பெருமூச்சு காரணமாக என் சுவாசப்பைகளும் விரிந்திடுகின்றன.

இந்தத் துணைகள் என்றும் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் - இருக்க வேண்டுமென்ற வேண்டுகோளுடன் - எஞ்சியுள்ள பயணத்தைத் தொடருகிறேன். என் கடன், பணி செய்து கிடப்பதே.

## பிளஸ் டு தேர்வில், மாநில அளவில் முதல் 3 இடங்கள் பெற்ற

## மாணவ மாணவியருக்குக் கலைஞர் பாராட்டு

**1998** ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நடைபெற்ற 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுத் தேர்ச்சியடைந்த மாணவ, மாணவியர் 13.6.98 அன்று தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றார்கள்.

தமிழகப் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியரிடையே ஆர்வத்தை வளர்த்திட வேண்டுமென்னும் நோக்கத்துடன் 10ஆம் வகுப்பிலும், 12ஆம் வகுப்பிலும் தமிழை ஒரு பாடமாகவாவது எடுத்துப் படித்து, அதிக மதிப்பெண்கள் பெற்று, அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மொத்த மதிப்பெண்களில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் 3 இடங்களைப் பெறும் மாணவ, மாணவியரின் உயர் கல்விச் செலவுகளை அரசே ஏற்கும் திட்டத்தினை 1996ஆம் ஆண்டு முதல் இந்த அரசு அறிமுகப்படுத்திச் செயல்படுத்திவருகிறது.

இத்திட்டத்தின்படி, கடந்த ஏப்ரல் திங்களில் நடைபெற்ற மேல்நிலைத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பின்வரும் மாணவர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து, அவர்கள் தொழிற்கல்வி உட்பட எந்த வகையான கல்வியைப் பெற விரும்பினாலும், அதற்குரிய செலவு முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்குமெனக் கூறி, அதன் அடையாளமாக ஒவ்வொருவருக்கும் 5,000 ரூபாய் வழங்கினார்.

| பெயர் | மதிப்பெண்கள் | தரம் | பள்ளி முகவரி |
|---|---|---|---|
| செல்வி. சி.சத்யா | 1176 | முதல் இடம் | அவிலா கான்வென்ட் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, வேலாண்டிபாளையம், கோயம்புத்தூர். |
| செல்வன்.ஏ.சண்முகசுந்தரம் | 1170 | இரண்டாம் இடம் | எம்.எஸ்.பி.எஸ்.என். நினைவு மேல்நிலைப்பள்ளி, திண்டுக்கல். |
| செல்வன் கே.பிரதீப் | 1169 | மூன்றாம் இடம் | டி.ஏ.வி.மெட்ரிகுலேஷன்மேல்நிலைப்பள்ளி, கோபாலபுரம், சென்னை - 86. |

மேலும், செல்வி. ஜி.தனலட்சுமி, சென்னையில் உள்ள ஜெனரல் கரியப்பா மேல்நிலைப்பள்ளியில் தொழிற்கல்வி பாடப்பிரிவில் வரைவாளர் (கட்டம்) பாடத்தில் 600-க்கு 594 மதிப்பெண்கள் பெற்று அப்பாடத்தில் மாநில முதன்மையுடன் சிறப்பான தேர்ச்சியைப் பெற்றுள்ளார்.

வறுமைச் சூழ்நிலை மிகுந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்த போதிலும் மிகவும் முயன்று படித்துச் சாதனை புரிந்துள்ள செல்வி.ஜி.தனலட்சுமியைப் பாராட்டி, ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி இம்மாணவிக்கும் உயர்கல்விச் செலவு முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கும் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறி, அதன் அடையாளமாக 5,000/- ரூபாய் வழங்கினார்.

மாவட்ட அளவில் அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மொத்த மதிப்பெண்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ மாணவியருக்கும், இதே போல அவர்களின் உயர் கல்விக்கான முழுச் செலவினையும் தமிழ்நாடு அரசே ஏற்கிறது. அரசின் இந்த உதவியைப் பெறும் தகுதி வாய்ந்த 87 மாணவ மாணவியரின் பட்டியல் தனியே வெளியிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு முதல்வர் கலைஞர், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர். க.அன்பழகன் ஆகியோருடன் பிளஸ் டு தேர்வில் சிறப்பிடம் பெற்ற மாணவ மாணவிகள்.






## தமிழகத்தில் உள்ள 1,228 காவல் நிலையங்கள்

## ஒவ்வொன்றிற்கும் நிலையான முன்பணம்

## ரூ.5,000/- அனுமதி : கலைஞர் ஆணை

**கா**வல் நிலையங்களில் ஏற்படும் சில்லறைச் செலவினங்களுக்குப் போதுமான முன்பணம் ஒதுக்கப்பட வில்லையென்பதால், இனிமேல் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஆண்டுக்கு ரூ.5,000/- இதற்கென ஒதுக்கப்படும் என 25.5.1998 ஆம் தேதி சட்டமன்றப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த அறிவிப்பிற்கிணங்க, தற்போது தமிழகத்தில் உள்ள 1,228 காவல் நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் நிலையான முன்பணம் ஆண்டிற்குத் தலா ரூ.5,000/- வழங்கிட கலைஞர் அவர்கள் 13.6.1998 அன்று ஆணையிட்டுள்ளார்.

பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படும் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் உணவுப்படி ரூ.25ஐ ரூ.35/- ஆக உயர்த்தியும், முதல்நிலை மற்றும் தலைமைக் காவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் உணவுப்படி ரூ.30ஐ ரூ.40/- ஆக உயர்த்தியும் வழங்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

## சத்துணவுத் திட்டம்:

## ஒவ்வொரு குழந்தைக்கும் வாரம் ஒரு முட்டை வழங்க முதலமைச்சர் கலைஞர் ஆணை

**இ**ந்த ஆண்டின் நிதி நிலை அறிக்கையைத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் வைத்து உரையாற்றியபோது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சத்துணவுத் திட்டத்தில் 1989 முதல் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் முட்டை, இனி வாரம் ஒருமுறை வழங்கப்படும் என அறிவித்தார். அந்த அறிவிப்பின்படி ஜூன் 1 ஆம் தேதி முதல் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்துச் சத்துணவு மையங்களிலும் சத்துணவு சாப்பிடும் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் வாரம் ஒரு முட்டை வீதம் வழங்கிட அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் எழுபத்தி மூன்று இலட்சம் குழந்தைகள் பயனடைவர். இதன் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 45 கோடி ரூபாய் செலவாகும்.

## அதிக அளவில் விதவைப் பெண்களுக்கு உதவித் தொகை :

## விதிகளைத் தளர்த்தி முதல்வர் கலைஞர் ஆணை

**ந**லிந்த பிரிவைச் சார்ந்த - ஆதரவற்ற முதியோர், உடல் ஊனமுற்றோர், விதவைகள், வேளாண்மைத் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. அதனை 21.4.1998 முதல் மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் என உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

விதவைப் பெண், கணவனால் கைவிடப்பட்ட மனைவி ஆகியோருக்கு 18 வயதிற்கு மேற்பட்ட வாரிசு இருந்தால், இந்த உதவித்தொகை கிடைக்காது என்று ஏற்கெனவே விதிகள் இருக்கின்றன. இந்த விதிகள் தளர்த்தப்பட வேண்டுமென்று, 23.4.98 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் சமூகநலத் துறை மானியக் கோரிக்கையின்போது, உறுப்பினர்கள் பலரும் கேட்டுக்கொண்டார்கள். முதல்வர் கலைஞர் அவர்கள், இந்தக் கோரிக்கையினை ஏற்று, தகுதியின் அடிப்படையில் அனைத்து ஆதரவற்ற விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மாதம் ரூ.150 உதவித்தொகை பெறுவதற்கு ஏற்ப, 18 வயதிற்கு மேற்பட்ட வாரிசு இருந்தால் உதவித்தொகை கிடைக்காது என்ற விதிமுறையை நீக்கி ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையினால் மறுமணம் செய்யாத விதவைப் பெண்கள், 5 ஆண்டுகளுக்கு மேலாகக் கணவனைப் பிரிந்து வாழும பெண்கள், விவாகரத்து பெற்றவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் ஆகியோர்க்கு 20 வயது நிரம்பிய வாரிசுகள் இருந்தாலும் அவர்கள் முதியோர் உதவித்தொகை பெற வழி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, இந்த ஆண்டு முதல், அதிக அளவிலான பயனாளிகள், முதியோர் உதவித்தொகை பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இலவச தொழிற்கல்வி

**இ**துவரை பட்டதாரிகள் அல்லது பட்டயதாரிகள் (டிப்ளமோதாரர்கள்) இல்லாத ஆண்டு வருமானம் ரூ.25 ஆயிரத்துக்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் முதன் முதலாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக்குகளில் தொழிற்கல்வி பயிலும் மாணவர்கள் 500 பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும், 500 மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் இலவச கல்வித் திட்டம் வழங்கப்பட்டது. இந்த திட்டம் கடந்த 2-5-97 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன்பிறகு கடந்த 24-9-97 முதல் இந்த எண்ணிக்கை இரு பிரிவுகளுக்கும் தலா 1000 என உயர்த்தப்பட்டது. தற்போது இந்த உச்சவரம்பு முற்றிலும் அகற்றப்பட்டு இந்த தகுதிகள் வாய்ந்த பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அனைவரும் பயன்பெற மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் உத்தரவிட்டுள்ளார். ★



## மனித நேயப்பயிரை - மதநல்லிணக்கப் பயிரை யாரும் வேலி தாண்டி வந்து அழிக்கவிடாமல் காப்போம் !

### - காயிதேமில்லத் பிறந்தநாள் விழாவில் கலைஞர் உரை

“கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களை நான் மிக மிக நெருங்கி அறிந்தவன், அவரோடு பழகுகின்ற இனிய வாய்ப்பைப் பெற்றவன், அவருடைய அன்பு மழையில் நனைந்தவன், அவருடைய எளிமையை ரசித்தவன், அவருடைய அறிவைப் புகழ்ந்து பாராட்டியவன், இன்றைக்கும் பாராட்டிக்கொண்டிருப்பவன், அவருடைய ஆற்றலை வியந்து போற்றியவன்.

ஒருமுறை உலக நிகழ்ச்சிகள் சிலவற்றை அறிஞர் அண்ணா அவர்களோடு நாங்கள் எல்லாம் அமர்ந்து பகிர்ந்துகொண்டிருந்த வேளை - அப்பொழுது நாஞ்சிலார் அண்ணா அவர்களிடம் பேசும்பொழுது, இஸ்ரேலுக்கும், இஸ்லாமிய நாட்டிற்கும் ஏற்பட்ட உறவு முறிகின்ற சில நிகழ்ச்சிகளைப் பற்றி பேசிய நேரத்தில், நாஞ்சிலார் இஸ்ரேல் பக்கத்திலுடைய நியாயத்தை எடுத்துச் சொன்னார்.

அப்பொழுது அண்ணா சொன்னார், “என்னதான் நியாயம் அங்கே இருந்தாலும், என்னிடத்திலே இஸ்ரேலா, இஸ்மாயிலா என்று கேட்டால், எனக்கு இஸ்மாயில்தான் வேண்டும். இஸ்ரேலைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்” என்று சொன்னார். அந்த அளவிற்குக் கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களிடத்திலே அவ்வளவு அன்பினை பதிய வைத்திருந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அதைப்போலவே தந்தை பெரியார் அவர்கள், காயிதேமில்லத் அவர்களுடைய குணங்களிலே சொக்கிப் போய் அவரைத் தன்னுடைய அருமைத் தோழராக ஏற்றுக்' கொண்டவர்.

இன்றைக்குக் காயிதேமில்லத் அவர்கள் இல்லை என்றாலுங்கூட, அவர் இல்லாத குறையை இங்கே நாம் இன்றைக்கு உணர முடிகின்றது.

### தமிழ்மொழியே இந்தியாவின் பொது மொழியாக வேண்டும் என்று முழங்கியவர்

ஆனால் - அரசியல் சாசனம் எழுதப்பட்ட அந்த நேரத்தில் இந்தியாவினுடைய பொதுமொழி பற்றிய வினாக்குறி தோன்றியபோது, அந்த அரசியல் நிர்ணய சபையிலே “இந்தியாவினுடைய பொதுமொழியாக என்ன மொழி இருக்கவேண்டும் ?” என்று கேட்டபோது, “இலக்கிய வளத்தால், கலை நயத்தால், தொன்மையால் எல்லா வகையிலும் வளம் பெற்ற மொழியான தமிழ் மொழிதான் இந்தியாவினுடைய பொதுமொழியாக இருக்க வேண்டும்” - என்றுரைத்தார் கண்ணியத்தினுடைய காவலர் காயிதே மில்லத் அவர்கள்.

அவர் இந்த நாட்டுப் பற்றில் எவ்வளவு அரும் பெரும் சிகரமாகத் திகழ்ந்தார் என்பதற்கு ஒன்றிரண்டு நிகழ்ச்சியை மாத்திரம் உங்களுக்குக் குறிப்பிட நான் விரும்புகின்றேன்.

இந்தியா - பாகிஸ்தான் இரு நாடுகளாகப் பிரிந்த பிறகு, 1948-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான் அவர்களை காயிதேமில்லத் அவர்கள் சந்தித்த அந்த நேரத்தில் லியாகத் அலிகான் சொன்னார்; “இந்தியாவில் வாழும் நாலரைக் கோடி இஸ்லாமியரின் நினைவை பாகிஸ்தான் என்றென்றும் மறவாது” என்று.

அதைக் கேட்டதும் காயிதேமில்லத் உடனடியாகச் சொன்ன பதில்; “முன்கதைகளை எல்லாம் மறந்துவிடுங்கள், நாம் அன்னியராகி ஆறுமாதங்களாகி விட்டன. எங்கள் சர்க்கார் எங்களை நியாயமாக நடத்தும் என்பதில் எங்களுக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. அவசியப்பட்டால்



எங்கள் உரிமைகளை சத்தியப் பாதையில் போராடிப் பெற்றுக்கொள்ள எங்களுக்கு உறுதி உண்டு. எங்கள் நிலைக்காக நீங்கள் இரங்க வேண்டாம்” என்று பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான் அவர்களிடத்திலே சொன்னவர் கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்கள்.

### வரலாற்றில் இடம் பெறத்தக்கவர்

பாகிஸ்தான் பிரதமர் தொடர்ந்து கேட்டார்; “இருக்கட்டும், உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்கள், எது வேண்டுமானாலும் செய்கிறேன்” என்று லியாகத் அலிகான் கேட்டார்.

அப்போது காயிதேமில்லத் அவர்கள் கூறிய வார்த்தைகள் வரலாற்றில் இடம் பெற வேண்டியவை. அவர் சொன்னார்; “எங்களுக்கு வேறு ஒன்றும் செய்யவேண்டாம். ஒன்றை மாத்திரம் செய்யுங்கள். எங்கள் நாட்டில் எது நடந்தாலும் எங்களுக்காக கவலைப்படாமல் உங்கள் நாட்டில் வாழும் சிறுபான்மை இந்து மக்களின் நன்மைக்கு ஆவன செய்திட வேண்டுகிறேன். எக்காரணம் கொண்டும் எத்தகைய இடையூறும் அங்குள்ள இந்துக்களுக்கு நீங்கள் இழைக்கக் கூடாது. இது ஒன்றே நீங்கள் எங்களுக்காகச் செய்ய வேண்டிய உதவி” - என்று கூறிய அந்த கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்கள் இன்றைக்கு இல்லை.

### எல்லோரும் சகோதரர்கள்

இன்றைக்கு அவர் இல்லை என்றாலுங்கூட அவருடைய பெயரால் எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதி ஒன்று உண்டு; மேற்கொள்ள வேண்டிய சூளுரை ஒன்று உண்டு; அதுதான் மத நல்லிணக்கம். அதுதான் மனிதநேய உணர்வு. அதற்காகத்தான் அவர் பாடுபட்டார்.

பெரியாரும், காயிதே மில்லத்தும், அறிஞர் அண்ணாவும், பெருந்தலைவர் காமராசரும் வாழ்ந்த காலத்தில் தமிழகத்தில் இந்துக்கள் - முஸ்லிம்கள் எல்லோரும் சகோதரர்களாகத்தான் வாழ்ந்தோம். இன்றைக்குக்கூட அப்படித்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

ஒரு மரத்திலே இருக்கின்ற கிளையில் சில புல்லுருவிகள் தோன்றலாம். அந்தப் புல்லுருவிகளை வெட்டுவதற்காக ஆயுதமெடுத்தால் மரத்தையே வெட்டுவதாகப் பொருள் அல்ல. புல்லுருவி எடுக்கப்பட்டால் மரம் மேலும் வளம் பெறும் என்பதற்காகத்தான் புல்லுருவிகளை வெட்டுவதற்காக முனைகிறோம்.

களை எடுப்பதற்காகச் செல்பவனைப் பார்த்து “பயிரை அழிக்க வருகிறாயா ?” - என்று கேட்பது பைத்தியக்காரத்தனம். களை எடுக்கப்பட்டால்தான் பயிர் செழிக்கும் என்பதை உணர்ந்தவர்கள் நாம்.

### ஆயிரங்காலத்துப் பயிர்

இந்தப் பயிர் சாதாரணப் பயிர் அல்ல. கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத்தும், தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பெருந்தலைவர் காமராசரும், இவர்களெல்லாம் பாடுபட்டு வளர்த்த பயிர். ஆயிரங்காலத்துப் பயிர். நம்முடைய மத ஒற்றுமைப் பயிர். மத நல்லிணக்கப் பயிர். நம்முடைய மனித நேயப்பயிர்.

அந்தப் பயிரைக் காப்போம், காப்போம், யாரும் வேலிதாண்டி வந்து அந்தப்பயிரை அழிப்பதற்கு அனுமதியோம், அனுமதியோம் - என்ற சூளுரையை கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களின் பிறந்த நாளில் மேற்கொள்வோம்”.

- மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 5-6-98ல் நடைபெற்ற காயிதேமில்லத் அவர்களின் 103-வது பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரையிலிருந்து.

## கலைஞர் ஆட்சியில் விவசாயிகள் நலன்

- இந்தியாவிலேயே முதன் முதலாக விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்.
- விவசாயிகளுக்கு இந்த ஆண்டு 44 கோடி ரூபாய் நிலவரி ரத்து. வரி செலுத்தியவர்களுக்கு அடுத்த ஆண்டு ஈடு செய்யப்படும்.
- விவசாயிகளின் குறுகியகாலக் கூட்டுறவுக் கடன், மத்திய காலக் கடனாகவும் - மத்தியகாலக் கடன், நீண்டகாலக் கடனாகவும் நீட்டிப்பு. அபராத வட்டித் தொகை 50 கோடி ரூபாய் தள்ளுபடி.
- நெல் கொள்முதல் விலை : குவிண்டாலுக்கு

| | 1995-96ல் கடந்த ஆட்சியில் | 1997-98ல் கலைஞர் ஆட்சியில் |
|---|---|---|
| மோட்டா ரகம் | ரூ.360 | ரூ.415 |
| சன்ன ரகம் | ரூ.375 | ரூ.445 |
| போக்குவரத்து இடைநிகழ் செலவு | ரூ.5 | ரூ.35 |
| கொள்முதல் அளவு | 1½ லட்சம் டன் | 18 லட்சம் டன் |

- மத்திய அரசு நிர்ணயம் செய்த விலையை விட கலைஞர் அரசு ரூ.35 அதிகம் தருகிறது.
- நெல் கொள்முதலில் இதுவரை 18% வரை ஈரப்பதம் மட்டுமே அனுமதிக்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு 20% வரை ஈரப்பதம் அனுமதி.
- விவசாயிகள் விளைபொருள் விற்பனைக்கு வசதியாக எந்த ஆண்டுமே இல்லாத அளவிற்கு, இவ்வாண்டு 926 நேரடி கொள்முதல் நிலையங்கள்.
- கரும்பு விலை நிர்ணயம்:- ஒரு டன்னுக்கு

| | | |
|---|---|---|
| 1995-96ல் | கடந்த ஆட்சியில் | ரூ.560 |
| 1996-97ல் | மத்திய அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச விலை | ரூ.459 |
| கலைஞர் ஆட்சியில் நிர்ணயித்த | குறைந்தபட்ச விலை | ரூ.599 |
| 1997-98ல் மத்திய அரசு நிர்ணயித்த | குறைந்தபட்ச விலை | ரூ.484.50 |
| கலைஞர் ஆட்சியில் நிர்ணயித்த | குறைந்தபட்ச விலை | ரூ.660 |
| | அதிகபட்ச விலை | ரூ.846 |

- கரும்பு பயிர்க்கடன் ரூ.45,000 லிருந்து ரூ.55,000 ஆகவும், இதர பயிர்களுக்கு ரூ.25,000 லிருந்து ரூ.35,000 ஆகவும் உயர்வு.
- 1996 டிசம்பரில் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்புக்கு நிவாரணமாக 55.15 கோடி ரூபாய் 10 இலட்சம் விவசாயிகள் பயன்பெறுகிறார்கள்.
- 1997 நவம்பரில் விவசாயிகளுக்கு உட்பட வெள்ள நிவாரண நிதி 59 கோடி ரூபாய்.
- இயற்கைச் சீற்றத்தால் ஆடு இறந்தால், 1000 ரூபாய்; மாடு இறந்தால் 5000 ரூபாய்; கன்று இறந்தால், 3,000 ரூபாய் நிவாரணம்.
- சென்னை, மதுரை, திருச்சி, பொள்ளாச்சி ஆகிய 4 மண்டலங்களிலும் உள்ள 200 ஏரிகளைத் தூர்வார ரூ.20 கோடியில் பணிகள்.
- காவிரிப் பாசன வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகளுக்கு கடந்த ஆண்டில் 12 கோடி ரூபாய்; இவ்வாண்டில் 20 கோடி ரூபாய்.
- இராமநாதபுரம் மாவட்டம் நாராயணகாவேரி, ரகுநாதகாவேரி, சங்கரத்தேவன் பாசனக்கால்வாய்களில் 7.41 கோடி ரூபாய் செலவில் தூர் எடுத்து புனரமைக்கும் பணிகள். இதனால் கமுதி, கடலாடி, முதுகுளத்தூர் மற்றும் சாயல்குடி பகுதிகளில் 22,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.
- யூரியா உர விற்பனை வரி 4% லிருந்து 2% ஆக குறைப்பு.
- உணவு உற்பத்தி :
  1995 - 96ல் 68 இலட்சம் மெட்ரிக் டன்.
  1997 - 98ல் 95 இலட்சம் மெட்ரிக் டன்.
- நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வயதின் அடிப்படையில் வழங்கப்படும் ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாயில் இருந்து 150 ஆக உயர்வு.

# வரலாற்றிலேயே முதன் முதலாகக் காவிரி டெல்டா பகுதிகளில் பாசனக் கால்வாய்களில் தூர்வாரும் மாபெரும் செயல் திட்டம்

## கலைஞர் அரசின்

சீரிய முயற்சியால் ஆசியாவிலேயே சிறந்த பாசன அமைப்புள்ள டெல்டா பகுதிகளில் தூர்வாரும் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெறுகின்றன. இதனால் டெல்டா பகுதியின் பொருளாதாரம் உயர்வதுடன் விவசாயிகளின் வாழ்விலும் வளம் கொழிக்கும்.





திருவாரூர் - ஓடம்போக்கி ஆற்றில் தூர் வாரும் பணி

- தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களிலுள்ள காவிரி டெல்டா பகுதிகளில் ஆண்டாண்டு காலமாக மண்மூடி, காட்டாமணக்குப் புதர்களால் அடைபட்டுக் கிடந்த பாசனக்கால்வாய்களில் தூர்வாரும் பணிக்குக் கடந்த ஆண்டு ஒதுக்கீடு 12 கோடி ரூபாய், இவ்வாண்டு ஒதுக்கீடு 20 கோடி ரூபாய்.
- மேலும், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு 7.5 கோடி ரூபாய்.
- கடலூர் மாவட்டத்திற்கு இப்பணிக்கு இவ்வாண்டு ஒதுக்கீடு 3 கோடி ரூபாய்.

- 294 பொக்லைன், ஜேசி.பி., புல்டோசர் ஆகிய நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி போர்க்கால அடிப்படையில் தூர்வாரும் பணிகள்.
- கடந்த ஆண்டில் ஆறுகள், வடிகால்கள் மற்றும் பாசன வாய்க்கால்களில் 2110 கி.மீ. தூரத்திற்குப் பணிகள் முடிக்கப்பட்டன.
- இவ்வாண்டில்:

| | | |
|---|---|---|
| ஆறுகள் | 480 | கி.மீ. |
| வடிகால்கள் | 1050 | கி.மீ. |
| பாசன வாய்க்கால்கள் | 300 | கி.மீ. |
| | 1830 | கி.மீ. |

- இத்துடன், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 1500 கி.மீ. தூர்வாரும் பணிகள்.
- மொத்தம் 5440 கி.மீ. தூர்வாரும் பணிகள்.

**விவசாயிகளுக்கு நன்மைகள்:**

ஆறுகளிலும் - கால்வாய்களிலும் தடையில்லா நீரோட்டத்தின் வாயிலாக, பாசனநீர்ப் பகிர்வு உறுதியளிக்கப்படுகிறது.

மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்குச் சேதங்கள் தடுக்கப் படுகின்றன.








# அரசுத் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவீர் !

**மாவட்ட ஆட்சியர்கள் - காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் முதலமைச்சர் கலைஞர் உரை**

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் - காவல் துறை அதிகாரிகளின் இரண்டுநாள் மாநாடு 5.6.98 அன்று தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் தொடங்கியது.

1996 ஆம் ஆண்டில் அமைந்த இந்த ஆட்சியில் இரண்டு ஆண்டுகள் முடிவடைந்து - இப்போது 1998-99 ஆம் ஆண்டிற்கான திட்டங்களை நிறைவேற்றத் தொடங்கும் வேளையில் - கடந்த காலச் செயல்பாடுகள் குறித்து ஆராயவும், அடுத்து நாம் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்துத் திட்டமிடவும் இங்கே கூடியுள்ளோம்.

1998-99 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை 27.3.98 அன்று சட்டப்பேரவையில் வைக்கப்பட்டு, செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

அந்தத் திட்டங்களுக்கெல்லாம் உரிய அரசாணைகள் 15.6.98க்குள் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டு, அதற்கேற்ப உரிய நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு அவை அன்றாடம் அறிவிக்கப்பட்டும் வருகின்றன.

## சட்டம் - ஒழுங்கு

அரசு வகுக்கும் திட்டங்களின் பயன்கள், எதிர்பார்ப்புக்கு ஏற்ப மக்களைச் சென்று சேர வேண்டும். அதற்குரிய வகையில் சட்டம் ஒழுங்கு நிலை மாநிலத்தில் முழுமையாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்பதை இந்த அரசு மிக முக்கியமானதாகக் கருதுகிறது. மாநிலம் முழுவதும் சட்டம் ஒழுங்கு நிலை பராமரிக்கப்படுவதற்கு மாவட்ட ஆட்சியரும் காவல்துறை அதிகாரிகளும் இணைந்து செயலாற்றிட வேண்டும்.

புலனாய்வுத் துறையின் மூலமும், வருவாய்த் துறையினர் மூலமும் வரும் தகவல்களை மாவட்ட ஆட்சியரும் காவல் துறை அதிகாரிகளும், உடனுக்குடன் பரிமாறிக் கொள்வதுடன், அவற்றின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து - உறுதியுடன் செயல்படுத்திடல் வேண்டும்.

சமுகத்தில் ஒரு சிலர் செய்யும் தவறுகளுக்கு - அரசும் நிர்வாகமுமே பழிகளைச் சுமக்க நேரும் என்பதனை மறந்துவிடக்கூடாது.

இந்த உண்மையினை உணர்ந்து, நாட்டின் சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டுவதில் இந்த மாநிலத்தின் நிர்வாகத்தில் முக்கியப் பொறுப்பினை ஏற்றிருக்கக்கூடிய மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை அதிகாரிகளும் தங்களுடைய கடமைகளைப் பொறுப்புடன் ஆற்றுவதன் மூலம் இந்த அரசுக்குப் பெருமை சேர்ப்பதுடன் தங்களுடைய புகழையும் மதிப்பையும் உயர்த்திக்கொள்ளுதல் வேண்டும்.

கடந்த பல மாதங்களாகத் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலை சீரியமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதற்காக நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த ஆண்டில் இதுவரை ஐந்து இடங்களில் துப்பாகிச் சூடுகள் நிகழ்ந்துள்ளன. கடந்த பத்து ஆண்டுகளில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டைப் பார்க்கும் போது இது மிகமிகக் குறைவானதாகும். எனினும் இந்த எண்ணிக்கையும் குறையுமேயானால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்.

10.9.97 அன்று நடைபெற்ற காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் கூட்டத்தில் காவலில் இருக்கும்போது கைதிகள் மரணமடைவதைத் தடுக்க வேண்டும் என நான் கேட்டுக்கொண்டேன். குற்றங்கள் ஒன்றிரண்டு கண்டுபிடிக்கப்படாவிட்டாலும் பரவாயில்லை; கைதிகளைத் துன்புறுத்தும் பழக்கத்தைக் காவல்துறை கைவிட வேண்டுமென நான் அப்பொழுது குறிப்பிட்டேன். அந்த என் வேண்டுகோளை மனதில் கொண்டுக் காவல்துறை சீரிய முறையில் செயல்பட்டுள்ளது.

## காவல் கைதிகள் நிலை

கடந்த ஆறு மாதங்களில் தமிழகத்தில் உள்ள காவல்நிலையங்களில் காவல் கைதி மரண நிகழ்ச்சி எதுவும் நடைபெறவில்லை என்ற செய்தியை அறிந்து மிகுந்த மனநிறைவடைகிறேன். இதே நிலை தொடர்வதற்குத் துணை நிற்க வேண்டுமென்று காவல்துறை நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

1997 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்குப் பின், தென்மாவட்டங்களில் வகுப்புக் கலவரங்கள் எதுவும் நிகழவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல்துறை அதிகாரிகளும் திறம்படச் செயல்பட்டதன் காரணமாகவே இந்த நிலையினை நம்மால் எய்திட முடிந்துள்ளது.





கோவை குண்டு வெடிப்பிற்குப்பின், காவல்துறை அங்கு தமது பணிகளைத் திறம்பட நிறைவேற்றியதன் மூலம் அப்பகுதியில் சட்டம் ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## தீவிரவாதத்தை ஒடுக்குவோம்

தீவிரவாதத்திற்கு இந்த அரசு சிறிதும் இடம் தராது. எந்தப் பக்கமிருந்து தீவிரவாதம் தலைகாட்டினாலும் அதனை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவதில் உறுதி பூண்டுள்ளோம்.

அதன் காரணமாகத்தான் தீவிரவாதத் தடுப்புச் சட்டம் ஒன்றை அண்மையில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றியுள்ளோம். தீவிரவாதிகள் எந்த மதத்தினராயினும், அவர்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும் என்று காவல்துறை அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஏதும் அறியாத அப்பாவி மக்கள் எந்த விதத்திலும் பாதிப்புக்கு ஆளாகக்கூடாது என்பதிலும் காவல்துறையினர் கண்ணும் கருத்துமாய்ச் செயலாற்றிடவேண்டும்.

ஒரு குற்றவாளி தண்டனையிலிருந்து தப்பிவிடுவதை விட, ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது என்பது நீதியின் அடிப்படைத் தத்துவமாகும்.

ஊழலற்ற, ஒளிவுமறைவு இல்லாத திறமையான நிர்வாகத்தை (Administration - free from corruption, transparent and efficient) வழங்கிட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் தலையாய குறிக்கோளாகும்.

இந்த இரண்டாண்டு காலத்தில் இக்குறிக்கோளை உறுதி செய்து நிறைவேற்றுவதற்கான எல்லா முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. என்றாலும் ஒரு சில அரசியல் கட்சிகளும், பத்திரிகைகளும், இந்த அரசின் மேல்மட்டத்தில் ஊழல் இல்லை; கீழ் மட்டத்தில் ஊழல் முழுமையாக அகற்றப்படவில்லை என்று சொல்லிவருகின்றன. இந்த விமர்சனத்தில் துளியேனும் உண்மையில்லை என்று ஒதுக்கி விடுவதற்கில்லை.

கீழ் மட்டத்தில் (at the cutting edge level) தவறுகள் நடக்குமாயின் அது மாவட்ட ஆட்சியாளர்களின், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்களின் பணித்திறனுக்கு விடப்பட்ட சவாலாகக் கருதி, அதனைத் தடுத்து நிறுத்திட வேண்டும்.

நான் எல்லா அதிகாரிகளையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஒரு சில அதிகாரிகள் முடிவுகள் எடுப்பதில் காலதாமதம் செய்கின்றனர் என்ற கருத்து எனது கவனத்திற்கு வந்துள்ளது. உரிய முடிவைத் தக்க நேரத்தில் மேற்கொள்ளத் தவறுவது, பல்வேறு தீய விளைவுகளுக்கு வழி வகுத்துவிடும். எனவே இந்த மெத்தனப் போக்கு உடனடியாகக் கைவிடப்பட்டாக வேண்டும்.

## ஊழலைவிடக் கொடுமையானது

அதைப்போலவே எங்கே தவறு நடந்துவிடுமோ என அஞ்சி, எதையும் செய்யாமல் காலத்தைக் கழிப்பதும் கொடுமையானதாகும். ஊழலைவிடக் கொடுமையானது, கடுமையானது - தனக்கு விதிக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதிலிருந்து தப்பிக்க முயற்சி செய்வதாகும் (Escaping from responsibilities).

எனவே, ஒரு பொறுப்பில் ஒரு அலுவலர் எவ்வளவு காலம் இருந்தார் என்பது பெருமை அல்ல; எப்படிப் பணி ஆற்றினார், எவ்விதம் தன் பொறுப்புக்களை நிறைவேற்றினார் என்பதுதான் பெருமை தருவதாகும். எனவே இனி பணித்திறன் மதிப்பீடு (Performance Assessment) இந்தத் திசையில்தான் அமையும்.

## வளர்ச்சித் திட்டங்கள்

இந்த அரசு 1996ஆம் ஆண்டில் பொறுப்பேற்றது முதல் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் தலையாய கவனம் செலுத்திவருகிறது.

## குடிநீர்த் திட்டங்கள்

தமிழக மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு அரசு முன்னுரிமை அளித்து 1996-97 ஆம் ஆண்டில் 154 ஊரகக் குடியிருப்புப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதியும், 1997-98 ஆம் ஆண்டில் 4,500 குடியிருப்புகளில் நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு குறைந்த அளவு 40 லிட்டர் வீதம் குடிநீர் கிடைக்கும் வகையில் 250 கோடி ரூபாய் செலவில் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## குடியிருப்புகளுக்குக் குடிநீர்

1998-99 ஆம் ஆண்டில் அந்த நிதி ஒதுக்கீடு 30 கோடியாக உயர்த்தப்பட்டு 5,398 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட உள்ளது.

கிராமப்புற பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்குவதில் இந்த அரசு முன்னுரிமை செலுத்துவதுடன் நகர்ப்புறப் பகுதி வாழ் மக்களுக்கும் குடிநீர் வழங்குவதில் கடந்த இரண்டாண்டுகளாக மிகுந்த அக்கறையுடன் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

மாவட்ட ஆட்சியர்கள் குடிநீர்த் தட்டுப்பாடு காணப்படும் இடங்களை முன்னதாக அறிந்து அப்பகுதிகளின் குடிநீர்த் தேவைகளை உடனடியாகவும், விரைந்தும் நிறைவு செய்திடக்கூடிய வகையில் செயலாற்றிட வேண்டும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின் வாரியம், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் அலுவலர்களுடன் இருவாரங்களுக்கு ஒருமுறை கலந்தாய்வு செய்து, குடிநீர்த் திட்டச் செயல்பாட்டில் இடையூறுகள் இருப்பின் அவற்றை உடனடியாகக் களைந்திட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.



## ஆதிதிராவிட இனமக்களுக்குத் தொகுப்பு வீடுகள்

தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையில் 13.5.96 அன்று நிலுவையாக இருந்த பணிகளின் கணக்கெடுப்பின் படி, 83,487 தொகுப்பு வீடுகள் கட்டப்படாமல் இருந்தன.

தொகுப்பு வீடுகள் கட்டுவதில் இந்த அரசு தந்த ஊக்கம் காரணமாக, இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 1,66,420 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. மேலும் 44,899 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவை அனைத்தையும் 30.9.98க்குள் கட்டி முடித்திட சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அனைத்து முயற்சிகளையும் முனைப்புடன் மேற்கொள்ள வேண்டும்.

இவற்றை உடனடியாகக் குறித்த காலத்திற்குள் கட்டி முடிக்கவும், அத்துடன் இந்த ஆண்டில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள 60,000 தொகுப்பு வீடுகளையும் உரிய காலத்தில் கட்டி முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

கிராமங்கள், அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்டதாக வளர்ச்சி பெற வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அரசு கடந்த ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்னும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியது.



அத்திட்டத்தின்படி கிராமப் பகுதிகளை உள்ளடக்கிய 212 சட்டப்பேரவை தொகுதிகளில் - ஒரு தொகுதிக்கு ஆண்டுக்கு ஒரு ஊராட்சி மன்றம் என்ற விகிதத்தில் தேர்வு செய்யப்பட்டு, கடந்த ஆண்டில் 212 ஊராட்சிகளில் 51.86 கோடி ரூபாய் செலவில் 36,289 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் 18,970 பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த கன மழையும், 98 ஜனவரியில் பாராளுமன்றத் தேர்தலையொட்டி தேர்தல் ஆணையம் விதித்த தற்காலிகத் தடைகளும் பணிகளை முடிப்பதில் ஏற்பட்ட கால தாமதத்திற்கான முக்கியக் காரணங்கள் என்றாலும் இவற்றை விரைந்து முடித்திட மாவட்ட ஆட்சியர்கள் தனிக்கவனம் செலுத்திட வேண்டும்.

## அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களை விரைவில் தேர்வு செய்க

நடப்பு ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு 75 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இந்த ஆண்டிற்குரிய அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களை விரைவில் தேர்வு செய்து உடனடியாகத் திட்டப்பணிகளைத் தொடங்கி, குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகள் அனைத்தையும் முடிப்பதற்கு மாவட்ட ஆட்சியர்கள் முனைந்து செயலாற்றிட வேண்டும்.

## நமக்கு நாமே திட்டம்

இத்திட்டத்தில் கடந்த ஆண்டில் 2,698 கிராமங்களில் 5,311 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவைகளில் 2,336 பணிகள் 100 சதவீதம் மக்கள் பங்குடன் செயல்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சிய 2,975 பணிகள் மக்கள் பங்குடன் அரசு நிதியையும் சேர்த்து செயல்படுத்தப்பட்டன.

மொத்தம் எடுத்துக்கொள்ளப்பட்ட 5,311 பணிகளில் இதுவரை 3,897 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்தப் பணிகளுக்கான மொத்த மதிப்பீடு 23.90 கோடி ரூபாயாகும். இதில் 8.28 கோடி ரூபாய் மக்கள் பங்காகப் பெறப்பட்டுள்ளது.

இந்த நமக்கு நாமே திட்டத்திற்கு இந்த ஆண்டின் நிதி ஒதுக்கீடாக அரசு 10 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

இதை ஒரு சாதாரணத் திட்டமாகக் கருதாமல் சமூக, பொருளாதார மாற்றத்தைக் கிராம மக்களிடையே ஏற்படுத்தும் ஒரு கருவியாக மதித்து (Instrument for Socio Economic Change) மக்களின் நேரடி ஈடுபாட்டுடன் இத்திட்டத்தை செம்மையாகச் செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முயற்சி செய்யவேண்டும்.

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்த அரசு அறிவித்த மற்றொரு புதிய திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டமாகும்.

கடந்த ஆண்டில் இத்திட்டத்திற்கு 58.75 கோடி ரூபாய் நிதி அளிக்கப்பட்டது.

மொத்தம் 4901 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டதில், 2,076 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டுக்கான பணிகளை இந்த நிதியாண்டின் முடிவுக்குள் முழுவதுமாக நிறைவேற்றி முடிக்கக்கூடிய வகையில் கால அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்த கால அட்டவணைப்படி, பணிகள் அனைத்தும் முடிவடைதற்கு உரிய நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் தனிக்கவனம் செலுத்தி நிறைவேற்றிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டுகளுக்குரிய ஒதுக்கீடுகள் மூலம், தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்களிலும் தனிக்கவனம் செலுத்தி, அவை அனைத்தையும் 30.9.98க்குள் நிறைவேற்றி முடித்திட மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

## அனைத்துக் கிராமங்களிலும் மனுநீதித் திட்டம்

மனுநீதித் திட்டம் பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டமாகும்.

இத்திட்டம் மூன்றாண்டு காலத்திற்குள் அனைத்துக் கிராமங்களிலும் நடத்தப்பட வேண்டும் என்ற அளவில் செயல்படுத்தப்படுகிறது.

மூன்று ஆண்டு காலத்திற்குள் எல்லாக் கிராமங்களிலும் இத்திட்டத்தை நடத்த முடியாத சூழ்நிலை இருக்குமானால், அருகருகே உள்ள கிராமங்களைச் சேர்த்து இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம், எல்லாக் கிராமங்களிலும் 3 ஆண்டு காலச் சுழற்சியில் மனுநீதித் திட்டம் செயல்படுத்தப்படக்கூடிய சூழ்நிலையை உறுதிசெய்ய வேண்டும் என, 14.10.97 அன்று வருவாய்த் துறையின் மூலம் அனைத்து மாவட்ட ஆட்சியருக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ள விவரத்தை இங்கு நினைவுபடுத்துவதுடன், இந்த மனுநீதித் திட்டம் தவறாமல் நடத்தப்பட வேண்டும் என்றும், மனுநீதி நாள் நடந்த ஒரு மாத காலத்திற்குள் மனுதாரர் வழங்கிய மனுவின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இறுதி முடிவுகள் அறிவிக்கப்படுவதை மாவட்ட ஆட்சியர்கள் அனைவரும் உறுதி செய்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கப்படக்கூடிய கோரிக்கை அல்ல எனப் பலமுறை பதிலளித்தும், திரும்பத் திரும்ப வைக்கப்படும் கோரிக்கைகள் கணிசமான அளவுக்கு உள்ளன என்பதை நான் அறிவேன். எனவே இதுபோன்ற கோரிக்கைகளின் மீது, துணை ஆட்சியர் நிலைக்குக் குறைவில்லாத அலுவலர் ஒருவர் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு உண்மை நிலையைக் கண்டறிவது அவசியம். பொதுமக்களின் எந்தக் கோரிக்கையையும் அலட்சியப்படுத்தப்படுதல் கூடாது. கோரிக்கையை எடுத்த எடுப்பிலேயே நிராகரித்திடவும், கூடாது. மாவட்ட ஆட்சியரின் பணித்திறனில், பொதுமக்களின் கோரிக்கைகளில் எத்தனைக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன என்ற மதிப்பீடும் அடங்கும்.

**குற்றவாளி தண்டனையிலிருந்து தப்பிவிடுவதை விட, ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதே நீதியின் அடிப்படை!**

## குறைகளோ குற்றச்சாட்டுகளோ இன்றி குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும்

பொது விநியோகத் திட்டத்தினைச் சீரமைக்கும் நோக்கத்துடனும் குடும்ப அட்டைகள் இல்லாதவர்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்குடனும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணி தொடங்கப்பட்டு தற்போது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடந்துவருகிறது. இந்தக் குடும்ப அட்டைகள் வழங்கும்பணி தொடங்கப்பட்டு தற்போது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடந்துவருகிறது.

இந்தக் குடும்ப அட்டைகள் வழங்கும் பணிகளில் குழப்பங்களும் குற்றச்சாட்டுகளும் இல்லாத வகையில் - நியாயமான முறையில் - தகுதிவாய்ந்த மக்கள் அத்துணைப் பேருக்கும், குடும்ப அட்டைகள் வழங்கப்படுவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்ப அட்டைகள் வழங்குவதில் உள்ள பிரச்சினைகளைப் பல்வேறு பத்திரிகைகள் வரிசைப்படுத்தி உள்ளன. அவற்றில் நியாயமானவைகளையும், கவனத்தில் கொள்ள வேண்டியவைகளையும் கருத்தில் கொண்டு, குறைகளோ குற்றச்சாட்டுகளோ எதுவும் இல்லாமல், குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும்.

நியாயவிலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் கிடைப்பது இல்லை என்றும், கடையில் தேவையான பொருள்கள் இருப்பு இல்லை என்றும், சில நேரங்களில் எடை குறைவாகவும், தரமற்ற அரிசி வழங்கப்படுவதாகவும், சில கூட்டுறவுச் சங்கங்களில் போதிய பண வசதியில்லாததால் உரிய நேரத்தில் பொருள்கள் வழங்கப்படுவதில்லை என்றும், சில நேரங்களில் கடைகள் மூடியிருப்பதாகவும் புகார்கள் உள்ளன.

பொதுமக்களுக்கு வழங்கத் தேவையான அரிசி, கோதுமை, சர்க்கரை அனைத்துப் பொருள்களும் சிவில் சப்ளைஸ் குடோனில் போதுமான ஒதுக்கீடு உள்ளது.

மண்ணெண்ணெயும் போதுமான ஒதுக்கீடு உள்ளது.

பொதுவிநியோகத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம் சீராக நடைபெற வேண்டும் என்பதிலே அரசு மிகவும் அக்கறை கொண்டுள்ளது.

குடும்ப அட்டைதாரர்களுக்குத் தேவையான பொருள்கள் அனைத்தும் எல்லா நாட்களிலும் நியாய விலைக் கடைகளில் இருக்கவேண்டும் என்பது முக்கியமான கட்டளையாகும்.

இந்த ஆணையை நிறைவேற்றுவதில் எந்த ஒரு அதிகாரியும் எந்த ஒரு பகுதியிலும் சுணக்கம் காட்டக்கூடாது.

## எந்தப் புகாரும் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும்

எந்தப் பொருளாவது எடை குறைவாகக் கொடுக்கப்பட்டால், புகார் செய்வதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அந்தப் புகாரும் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும்.

அதே போன்று, அறிவிக்கப்பட்ட விடுமுறை நாட்களைத் தவிர மற்ற நாட்களில் கட்டாயமாகக் கடைகள் திறக்கப்பட்டிருக்க வேண்டும். இதிலே எந்தவிதமான தொய்வும் இருக்கக் கூடாது.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொதுவிநியோகத் திட்டத்தை சிறப்பாக, எவ்வித குறைகளுக்கும், குற்றச் சாட்டுகளுக்கும், விமர்சனத்திற்கும் கிஞ்சிற்றும் இடமின்றிச் செயல்படுத்த வேண்டும்.

சிவில் சப்ளைஸ் குடோனிலிருந்து நியாயவிலைக் கடைக்கு பொருள்கள் சென்று சேரும் வரை எந்த இடத்திலும் எடைக் குறை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மிக முக்கியமான கடமையாகும்.

இது சரிவரச் செயல்படுத்தப்பட்டால் மற்ற குறைபாடுகள் தானாகவே கட்டுபடுத்தப்படும் என்று கருதுகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொது விநியோக முறைத் திட்டச் செயல்பாட்டினை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை கடைவாரியாகத் தீவிர ஆய்வு செய்து, பொது விநியோக முறைத்திட்டச் செயல்பாட்டில் எந்தக் குறைபாடும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.



## சிறுசேமிப்பு இலக்கினை எய்துக

சிறுசேமிப்புத் திட்டம் மாநில அரசின் நிதி திரட்டும் முயற்சிகளின் முக்கியக் கூறாக விளங்குகிறது.

இத்திட்டத்தின் நிகர வசூலில் 75 விழுக்காடு தொகை மத்திய அரசினால் மாநில அரசுக்குக் கடனாக வழங்கப்படுகிறது.

நடப்பு ஆண்டில் சிறுசேமிப்புத் திட்டத்தின் மூலம் 1,400 கோடி ரூபாய் வசூல் இல்லாத இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் சமூக அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் தேவைப்படும் பெருமளவிலான நிதி ஆதாரத்தைக் கருத்தில் கொண்டு, இலக்கினை எய்தும் முயற்சியில் மாவட்ட ஆட்சியர்கள் தீவிரமாக ஈடுபட்டிட வேண்டுமென்று நான் வலியுறுத்திட விரும்புகிறேன்.

## சமத்துவபுரப் பணிகள்

இந்திய சுதந்திரப் பொன்விழாவை ஒட்டி, தமிழக அரசு அறிவித்துச் செயல்படுத்தி வருகின்ற சமத்துவபுரம் திட்டம் குறித்து அனைவரும் நன்கு அறிவீர்கள்.

கடந்த ஆண்டில் அறிவிக்கப்பட்ட 50 சமத்துவபுரங்களையும் 15.8.98-க்குள் அமைத்து முடித்திடுமாறு அரசினால் அறிவுறுத்தப்பட்டுள்ளதனை நினைவுபடுத்துகிறேன். இப்பணியில் எந்தவிதச் சுணக்கமுமின்றி உடனடியாக நிறைவேற்றி, தமிழக மக்களிடையே சாதி, மத உணர்வுகள் அகன்று சமத்துவ நெறிகள் தழைக்கக்கூடிய சூழ்நிலைகள் பெருகி வளர்ந்திட உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அறிவு, பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கிறது இயற்கையிலேயே! இருக்கும் அறிவு தெளிவு பெற - பகுத்தறிவு பெருக கல்வி கேள்வி மிகவும் முக்கியம்.**

**- கலைஞர்**

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களது மாவட்டத்தில் இந்த நிதியாண்டில் நடைபெற இருக்கும் வளர்ச்சிப் பணிகள், சமூக நலப் பணிகள் பற்றிய விவரங்களைத் துறைவாரியாகத் தொகுத்து, பத்திரிகை யாளர்களுக்கு விவரங்கள் தரலாம்.

மாதம் ஒரு முறையாவது பத்திரிகையாளர் களின் கூட்டத்தைக் கூட்டி மாவட்டத்தில் நடைபெறும் முக்கியமான வளர்ச்சித் திட்டங்களுடைய முன்னேற்றம் குறித்து, மக்களுக்குத் தெரிவிக்கும் வகையிலே விவரங்கள் தரலாம். அதேபோல மாதந்தோறும் ஆற்றிய சமூக நலப்பணிகள் பற்றிய விவரங்களும் பத்திரிகையாளர்களுக்குத் தரலாம்.

இதுமட்டும் அல்லாமல் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையிலிருந்து வரக்கூடிய விளம்பரச் சுவரொட்டிகள் மற்றும் அறிவிப்புகள், ஏடுகள் சரியான முறையில் மாவட்டத்தில் உள்ள பல பகுதிகளுக்கும் சென்று அடைகின்றனவா என்பதையும் பார்க்கவேண்டும்.

## சத்துணவுத் திட்டத்தின் முழுப் பொறுப்பு

சத்துணவுத்திட்டத்தின் முழுப்பொறுப்பும் மாவட்ட ஆட்சியரையே சாரும். 1989-ல் மாதம் இருமுறை முட்டை வழங்கும் திட்டம் இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு, இப்பொழுது 1.6.98 முதல் வாரம் ஒருமுறை முட்டை வழங்கும் திட்டம் செயல்முறைக்கு வந்துள்ளது. முட்டை வழங்கும் திட்டம் முறையாக - நிறைவாகச் செயல்படுத்தப்பட மாவட்ட ஆட்சியரின் தீவிரமான கண்காணிப்பு மிகவும் அவசியம்.

மாவட்ட ஆட்சியர், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் துணை ஆட்சியர் நிலை அதிகாரிகள் ஒரு இடத்திற்கு முகாம் செல்லும்போது, நேரே அந்த இடத்திற்குச் சென்று பணி முடித்து மீண்டும் தலைமை இடத்திற்குத் திரும்புவது நல்ல பயனைத் தராது. முகாம் செல்லும்போதும், திரும்பும்போதும் எங்கெல்லாம் பணிகள் நடைபெறுகின்றனவோ, எங்கெல்லாம் நியாய விலைக்கடை, சத்துணவுக் கூடம் உள்ளதோ அங்கெல்லாம் இறங்கி ஆய்வு செய்யவேண்டும். ஆய்வு செய்யும்போது பயனாளிகளை விசாரிக்க வேண்டும். பொதுமக்களிடம் விசாரிக்க வேண்டும். விசாரிக்கும் பொழுது பல விவரங்கள் தெரியவரும். அவற்றின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு குறைகளைக் களைய வேண்டும். அப்படிச் செய்தால்தான், மக்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் மீது நம்பிக்கை வளரும். குறிப்பாக ஆதிதிராவிடர்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளையும், பள்ளிகளையும், உணவு விடுதிகளையும் தவறாமல் மாவட்ட ஆட்சியர் தொடர்ந்து ஆய்வுசெய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் அங்கே நிலவும் அடிப்படை வசதிகள் பற்றிய நிலை தெரியவரும்; அதன்மீது உருப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் வசதியாக இருக்கும்.

இந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை அதிகாரிகளும் இந்த அரசு செயல்படுத்தும் திட்டங்கள் முழு அளவில் வெற்றிகளை ஈட்டுவதற்குத் தக்க வகையிலும் - நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலை முழுமையாகப் பராமரிக்கப்படுவதற்கு உகந்த வகையிலும், கருத்துக்களை வழங்கி உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்."

- இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார்.



## மன்னார்குடி திருக்கோயில்

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள மன்னார்குடி, ஒய்சாள மன்னர்களின் தலைநகராக இருந்தது என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள். தட்சிண துவாரகை, செண்பகாரண்யம் ஆகிய புராணப்பெயர்களும் இவ்வூருக்கு உண்டு.

மன்னார்குடியில் உள்ள அருள்மிகு இராசகோபாலசுவாமி திருக்கோயிலும், வடுவூரில் உள்ள அருள்மிகு கோதண்டராமசாமி ஆலயமும் குறிப்பிடத் தக்கவைகளாகும்.

இராசகோபாலசுவாமி கோயிலில் அக்காலத்தில் சமணர்கள் இருந்த தற்கான ஆதாரங்கள் உள்ளன; இப்போது வைணவக் கோயிலாகத் திகழும் இதில் 16 கோபுரங்கள், 7 பிரகாரங்கள், 17 மீட்டர் உயரம் உள்ள ஒற்றைக்கல்லால் ஆன கருங்கல் தூண், அக்காலத்துப் பாவை விளக்குகள் ஆகியவை உள்ளன.

இந்தக் கோயிலில் இருக்கும் கருட வாகனம், ஆங்கிலேய அதிகாரி ஒருவரால் செய்து கொடுக்கப் பட்டதெனச் சொல்லப் படுகிறது.

1970களில், இவ்வூரைச் சேர்ந்த மன்னை நாராயணசாமி அவர்கள் தமிழ்நாடு அரசு அமைச்சரவையில் அமைச்சராக இருந்த காலத்தில், அவரால் மன்னார்குடி பெற்ற பலன்கள் ஏராளம்!

### திருவாரூர் மாவட்டத்தில்...

★ நெட்டிவேலைப்பாட்டில், கோயில் போன்ற உருவங்கள் அமைப்பதில் திருத்துறைப்பூண்டி வட்டாரம் சிறந்து விளங்குகிறது; நவராத்திரி கொலுப் பொம்மைகளும் இப்பகுதியில் அதிகம் அழகுடன் செய்யப்படுகின்றன.

★ கைத்தறித் தொழிலும் ஓரளவுக்குத் திருவாரூர் மாவட்டத்தில் பரவலாகக் காணப்படுகிறது; நன்னிலம் வட்டாரத்தில் பட்டு லுங்கி தயாரிக்கப்படுகிறது!

★ திருவாரூர் மாவட்டம் - சிறந்த பல நாதசுர மேதைகளும், தவில் வித்வான்களும், இசை மேதைகளும், நடனக் கலைவாணர்களும் இன்னபிற கலைவல்லாரும் பிறந்து பெருமைபெற்ற மாவட்டமாகும்.

★ திருவாரூர் மாவட்டத்தில் உள்ள எட்டுக்குடி, எண்கண் ஆகிய ஊர்களில் அமைந்திருக்கும் அருள்மிகு முருகன் திருக்கோயில்கள் புகழ்பெற்றவை.

★ விருந்து உபசரிப்பில் திருவாரூர் மாவட்ட மக்கள் சிறந்து விளங்குகின்றனர். திருமண வீட்டிற்கு வருவோர்க்கு மட்டுமல்ல; சாவு வீட்டிற்கு வருவோர் முன்னும் வெற்றிலைப்பாக்குத் தட்டு வைக்கிறார்கள். காபி- வெற்றிலைப் பாக்குப் பழக்கம் பெரும்பாலானோரிடம் உள்ளது.

★ நாடகக் கலையின் முன்னோடியான சம்பந்த முதலியார் பிறந்த 'பம்மல்', புகழ்பெற்ற எழுத்தாளர் துரைசாமி ஐயங்கார் ஆகியோர் பிறந்த 'வடுவூர்' ஆகியவை இந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஊர்கள் தான்.

★ ★ ★



# கல்வி சிறக்கும் திருவாரூர்

'தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு'

என்றார், உலகப் பொதுமறையாம் குறள் தந்த திருவள்ளுவர்.

இந்தவகையில், அந்த மூன்றின் நிலைக்களனாக விளங்குவதனாலே தான் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நான்காம் முறையாக நாடாளும் பெரும் பொறுப்பினை ஏற்றுச் சிறப்படைந்து வருகிறார்.

சிலபேர் - 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' காக்கும் பொறுப்பிலிருக்கின்ற கலைஞருக்குள்ள துணிவும் தூங்கிடா இயல்பும் எமக்குத் தெரியும்; ஆனால்...ஒன்று "அவர் ஒரு பட்டதாரியல்லவே" என்று சொல்லாமலே சொல்லித் தலையைச் சொறிந்திடக் கூடும்.

பூமிதான இயக்கத்தாலே புவிமெச்ச வாழ்ந்த வினோபாபாவேயை நமக்குத் தெரியும். அவர் படித்தார்; பட்டம் பெற்றார். ஆனால் முடிவாக என்ன செய்தார் தெரியுமோ?

'என்னுடைய அறிவுத் தகுதியினை நிர்ணயிக்கும் தகுதி இந்தத் தாள்களுக்கோ, இன்னொருவருக்கோ இல்லை!' என்று கூறி, அவ்வளவு சான்றிதழ்களையும் கிழித்தெறிந்து விட்டார்.

### உலகானுபவம்

ஆகவே, கல்விநலம் என்பது வெறும் படிப்பினாலே மட்டும் அமைவதில்லை; உலகானுபவத்தாலும் அமையும்.

'பள்ளிக்கூடம் இல்லாத ஊருக்குப்
பயணம் போறேண்டா - அங்கே
படிக்க வேண்டியது நெறயா இருக்கு
படிச்சிட்டு வாறேண்டா'

- என்று அந்தக் காலத் திரைப்படப் பாடல் ஒன்று உணர்த்துவது இதைத்தான்.

அதே நேரத்தில் இன்னொன்றையும் தொடவேண்டிய கடமை நமக்குண்டு; பள்ளிப் படிப்போ பகட்டுப் பட்டமோ



கலைஞர் அவர்கள் திருக்குவளையில் தொடக்கக் கல்வி பயின்ற பள்ளி



கலைஞர் அவர்கள் திருவாரூரில் 5-ஆம் வகுப்பில் சேர்ந்த பாடசாலை

இன்றி, எல்லோராலும் அனுபவப் படிப்பை அத்தனை எளிதிலே பெற்றுவிட முடியாது!

கலைஞரைப் போலச் சிலரால்தான் - மிகமிகச் சிலரால்தான் அத்தகைய 'அற்புதங்களைச்' செய்துகாட்டிட இயலும் - இயல்கிறது.

சின்னவயதில் கல்விமேல் அவருக்கிருந்த ஆர்வம் பெரிது; இதனாலேதான் அவர்கள் குடும்பமே திருக்குவளை கிராமத்திலே இருந்து திருவாரூருக்குக் குடிபெயர்ந்த சம்பவமும் நிகழ்ந்தது.

## படிப்பதற்குப் போராட்டம்

1936ஆம் ஆண்டு, ஆரூரில், தியாகராசர் ஆலயத்தினருகே இருந்த கழக உயர்நிலைப்பள்ளியில், 5ஆம் வகுப்பில் சேர்ப்பதற்காக அவர் அழைத்துச் செல்லப்பட்டார். அந்தப் பாடசாலையில் தலைமையாசிரியராக அப்போது இருந்த கஸ்தூரி ஐயங்கார் என்பாரோ, ஏதேதோ காரணங்களைக் காட்டி அவ்வகுப்பில், சிறுவனாயிருந்த கலைஞரைச் சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டார்.

அவரிடம் பேசித் தோற்றார்கள் இவருடைய பெற்றோர்.

கலைஞரோ விடுவதாயில்லை; ''ஐந்தாம் வகுப்பில் இங்கே என்னைச் சேர்த்துக் கொள்ளாவிட்டால், எதிரே உள்ள கமலாலயம் குளத்தில் குதித்து உயிர்துறப்பேன்" என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லிவிட்டு அங்கேயே உட்கார்ந்து போராடத் தொடங்கிவிட்டார்!

அவருடைய பிடிவாத குணம் கண்டு அதிர்ந்துபோன தலைமையாசிரியரே முடிவில் பின்வாங்க நேர்ந்தது; ஐந்தாம் வகுப்பிலே அமோகமாக அன்றைக்கே சேர்த்துக் கொள்ளப்பட்டார் கலைஞர்!

அனேகமாக அவர் தொடங்கி வெற்றி கண்ட முதல் போராட்டமாக இந்தச் சம்பவம்தான் இருக்கக்கூடும்!

பிறகு - அவரோடு சேர்ந்து தாய்மொழிப்பற்றும், தணியாத தமிழினப் பற்றும், தாய்நாட்டுப் பற்றும் வளர்ந்திடலாயின.

## ஏடும் பெருமையும்

இதன் விளைவாகத்தான் - 'தமிழ் மாணவர் மன்றம்' அவரால் தொடங்கப்பெற்றது; 'மாணவர் நேசன்', 'முரசொலி' ஆகிய ஏடுகள் முகிழ்த்தன.

எனினும் - படிப்பிலும், ஒழுக்கத்திலும் கலைஞர் நெறிதவறாமலே இருந்து வந்தார். 1940 முதல் 1945 வரை அந்தத் திருவாரூர் கழக உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து வந்த பெரும்புலவர் சி.முத்துகிருட்டின நாட்டார் அவர்களே இதுபற்றிப் பிற்காலத்தில் எழுதிய கவிதை இது:

"பேரும் புகழும் பெரிதும் பெற்ற
திருவா ரூரெனும் செழும்பதி யதனில்
உயர்ந்து விளங்கிய உயர்நிலைப் பள்ளியில்
ஐம்பதாம் ஆண்டு ஆதற்கு முன்னர்
தமிழா சிரியனாய்த் தமிழ்ப்பணி புரிந்தேன்;

அன்று நிலவிய ஒன்பதாம் வகுப்பில்
கலைஞர் கருணாநிதி கற்றிடல் ஆனார்
என்பால் பெரிதும் அன்புகொண்டுள்ளார்
அப்போது பயின்ற மாணவர் தம்முள்
கருணா நிதியே என் கருத்தினுக் கேற்ற
மாணவ ராக மதிக்கப் பெற்றார்!

சீரிளமைப் பருவத்தே செந்தமிழ் மொழியில்
பெரிதும் பற்றொடு பேசவும் எழுதவும்
வருதல் தன்னையே வழக்கமாகக் கொண்டுளார்
அதன்பய னாக அந்த வகுப்பிலே
"மாணவர் நேசன்" என்னும் பெயரோடு
ஏடு ஒன்று முதலில் எழுந்தது
அந்நல் ஏடு அடுத்துச் சின்னாளில்
துண்டுத் தாளாய்த் தோன்றி வளர்ந்தது;

வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய தமிழகம் வாழ்க குறள்நெறி
வாழிய கருணா நிதியும் வாழ்கவே!"

## இப்போதுள்ள கல்விக்கூடங்கள்

இப்போது திருவாரூர் மாவட்டத்தில் உள்ள மொத்த மேனிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 42 ஆகும். இதில் அரசினர் மேனிலைப் பள்ளிகள் 24; அரசின் உதவியோடு நடத்தப்படும் மேநிலைப்பள்ளிகள் 13; ஆதி திராவிடர் நலத்திட்ட மேநிலைப்பள்ளி 1; மெட்ரிகுலேஷன் பள்ளிகள் 4 ஆகும்.

உயர்நிலைப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 91; இதில் அரசினர் உயர்நிலைப் பள்ளிகள் 56; அரசின் உதவியோடு நடத்தப்படும் உயர்நிலைப் பள்ளிகள் 35 ஆகும்.



புலிவலம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.2.80 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் கட்டப்படும் பாடசாலைக் கூடுதல் கட்டடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையிடல்.

நடுநிலைப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 118; ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் 76; அரசின் உதவியோடு நடத்தப்படும் நடுநிலைப் பள்ளிகள் 35; நகராட்சி நடுநிலைப் பள்ளிகள் 6; ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளி 1.

இம்மாவட்டத்தில் இருக்கின்ற ஆரம்பப்பள்ளிகள் 683; ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகள் 578; அரசு உதவியோடு நடத்தப்படும் ஆரம்பப் பள்ளிகள் 70; நகராட்சி ஆரம்பப் பள்ளிகள் 9; ஆதிதிராவிடர் நலத் திட்ட நடுநிலைப்பள்ளிகள் 26.

இவ்வாறாக, புதிய மாவட்டமாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட திருவாரூர் மாவட்டம் இப்போது கல்வி சிறக்கும் மாவட்டமாகக் களைகட்டி வருகிறது.

திருவாரூர் அரசினர் கல்லூரி மாணவர் இல்லம்



தொழில் கல்லூரி (Professional College) ஒன்றும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் - திருவாரூரில் ஒன்றும், மன்னார்குடியில் ஒன்றுமாக இரண்டும், தொழில் பயிற்சி நிலையங்கள் (ITI) இரண்டும் இருக்கின்றன.

★ ★ ★

திருவாரூர் மாவட்டம் :

### *கல்வி நிலையங்கள்*

- *திரு.வி.க. அரசு கலைக்கல்லூரி - திருவாரூர்.*
- *அஞ்சலை அம்மாள் மகாலிங்கம் பொறியியற் கல்லூரி - கோவில் வெண்ணி, நீடாமங்கலம் வட்டம்.*
- *மன்னார்குடி ராஜகோபாலசாமி அரசு கலைக்கல்லூரி - மன்னார்குடி.*
- *செங்கமலத்தாயார் மகளிர் கல்லூரி - மன்னார்குடி*

திருவாரூர் மாவட்டம் :

# தமிழர் தளபதி சர் ஏ.டி.பன்னீர்செல்வம்

நீதிக்கட்சியின் வரலாறு, தனியொரு நூலாகவே தொகுக்கப்படும் அளவிற்கு மிக நீண்டதாகும்.

தஞ்சை மாவட்டத்தில் அக்கட்சியின் ஆணிவேராகத் திகழ்ந்த தளபதி சர்.ஏ.டி.பன்னீர்செல்வத்தின் வரலாறு பற்றி உணர்த்துவதே இந்தக் கட்டுரை.

பன்னீர்செல்வத்தின் முன்னோர் 1811ஆம் ஆண்டு வாக்கில்தான் திருவாரூரை அடுத்த செட்டியாபுரத்தில் நிலம் வாங்கிக் காலூன்றினார்கள். மிகவும் செல்வச் செழிப்புள்ள சுமார் 200 ஏக்கர் நிலம் உடைய கத்தோலிக்க கிறித்துவக் குடும்பம் இவர்கள் குடும்பம். அதில் அன்பும் பண்பும் கொண்டு செல்வச் செறுக்கின்றி அடுத்தவர் மெச்ச வாழ்ந்த தாமரைச் செல்வம், இரத்தினம் அம்மையார் ஆகியோரின் இரண்டாவது மகனாகப் பிறந்தவர்தான் நாம் மறக்கவியலாப் புகழ்கொண்ட பன்னீர் செல்வம். அவர் பிறந்தது 1.6.1888-ல்.

மூத்தவர் செபாஸ்டின் திருச்செல்வம் இரண்டுபேரும் கற்பதில் ஆர்வத்தோடிருந்தனர். அப்போதெல்லாம் செட்டியாபுரம் பகுதியில் கல்வி வசதி பெற வழியில்லை; ஆகவே, தஞ்சாவூரில் வழக்கறிஞராக இருந்த தம் தமையனார் வீட்டில் தங்கிப் படிக்க வகைசெய்தார் தந்தையார்.



**காதல் திருமணம்**

தஞ்சைப் படிப்பு முடித்தபின் திருச்சிராப்பள்ளியில் உள்ள புனித வளனார் பள்ளியில் பன்னீர்செல்வத்தின் படிப்புத் தொடர்ந்தது. கல்லூரியில் இடைநிலைப் படிப்பு படித்துக்கொண்டிருக்கும் போதே அவருக்கும் பெரும்பண்ணையூரைச் சேர்ந்த முத்துசாமி என்பாரின் மகள் பொன்னுப்பாப்பாளுக்கும் திருமணம் நடந்தேறியது. இது காதல் திருமணம்.

மருத்துவக் கல்விமேல் ஆர்வத்தோடிருந்த திருச்செல்வம், அயர்லாந்திற்குப் போனார்; பன்னீர்செல்வத்திற்குக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் இடம் கிடைத்தது.

இருவருமே இவ்வாறு இங்கிலாந்தில்தான் படித்தனர். எனினும், வெவ்வேறு இடங்களிலேயே தங்கிப் படித்தார்கள். பின்னர் 'கிரேய்ஸ்-இன்' (Grays Inn)னில் சட்டம் படிக்கலானார் பன்னீர் செல்வம். அந்நாட்டு நாகரிகப்படி உண்ணவும் உடுத்தவும் பேசவும் இவருக்குப் பழக்கமேற்பட்டது. சட்டப்படிப்பிற்குத் தேவையான வாதத்திறமை மிகவும் உடையவரானார்; எனினும் கல்வி மீதான கவனம் குறைந்திடப் பெறவில்லை.

இதற்கிடையே தமிழகத்தில் அவர் மனைவிக்கொரு பெண் குழந்தை பிறந்தது; மேரி என்று அக்குழந்தைக்குப் பெயரிடப்பட்டது. இச்செய்தி செல்வத்திற்குப் பெரும் மகிழ்வளித்தது.

26.1.1912-ல் இலண்டனில் சட்டக் கல்வியை நிறைவுற முடித்துப் பட்டம் பெற்றார் பன்னீர்செல்வம். இதற்கடுத்த வாரமே அதற்கான பட்டியலில் கையொப்பமிட்டு, முழுத்தகுதியும் பெற்றார். பிறகு அதே ஆண்டு மார்ச்சுத் திங்களில் தமிழகம் திரும்பி 23-ஆம் நாளன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகவும் பதிவு செய்துகொண்டார்.

20.11.1916-ல் 'நீதிக்கட்சி' தொடங்கப்பட்டது. முகமதியர், கிறித்தவர், பிராமணரல்லாத மற்ற சமயத்தாரிடையே சகோதரத்துவத்தை நிலைநிறுத்துவதே இக்கட்சியின் முக்கியக் கொள்கை. ஏ.டி.பன்னீர்செல்வம் உடனே இதில் உறுப்பினரானார். 1918-ல், தஞ்சையில் பிராமணரல்லாதார் மாநாடு நடத்தி அம் மாவட்டத்தையே அக்கட்சியின் கோட்டை ஆக்கினார்.

இவ்வகையில் - த.வே.உமாமகேசுவரம் பிள்ளை, பட்டுக்கோட்டை வேணுகோபால் நாயுடு, நெடும்பலம் ஆர்.சாமியப்ப முதலியார், குடந்தை கந்தசாமி மூப்பனார், நாகை வி.பி.வி.காயாரோகணம் பிள்ளை, ஐ.குமாரசாமிப் பிள்ளை ஆகியோரும் செல்வத்திற்கு உறுதுணையாயினர்.

எல்லோரிடமும் பேதம் பாராட்டாமல் பழகிடும் பண்பு பன்னீர்செல்வத்துக்கு இருந்தது. நடுத்தர உயரமும், கறுத்த மேனியும், அகன்ற நெற்றியும், வட்டமுகமும் முறுக்கு மீசையும் உறுதிமிக்க அவருடைய கம்பீரத் தோற்றமும், கணீரென்ற சொல்லாற்றலும் எல்லோரையும் கவர்ந்திழுப்பதாக இருந்தது. தஞ்சை மாநகரில் இருந்த பல்வேறு பொது அமைப்புகளும் அவரை விரும்பியழைத்துக் கவுரவித்தன. பல அமைப்புகளில் அவர் தலைவராகவும் ஆனார்.

**நகரசபைத் தலைவர்**

இத்தகைய செல்வாக்குடைய செல்வம் 1918ஆம் ஆண்டில் தஞ்சாவூர் நகராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பதவியில் மிகச் சிறப்பாகப் பணிபுரிந்ததன் காரணமாகத் தஞ்சை வட்டக் கழகம், தஞ்சை மாவட்டக் கல்விக் குழு ஆகியவற்றிலும் உறுப்பினராக்கப்பட்டார். 1922 முதல் 1924 வரை தஞ்சை மாவட்ட உயர்நிலைக் கல்விக்குழுவின் தலைவராகவும், பிறகு தஞ்சை மாவட்டக் கல்விக்குழுத் தலைவராகவும், தஞ்சை மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவராகவும், தஞ்சை மாவட்டக் கழகத் துணைத் தலைவராகவும் கூட அவர் பதவி வகித்தது உண்டு. இதனாலெல்லாம் தஞ்சை மாவட்டத்தில் கல்வி தழைத்தது. இவர் நிர்வாகக் காலத்திலேதான் 'திருவையாறு சமஸ்கிருதக் கல்லூரி', 'அரசர் கல்லூரி' எனப் பெயர் மாற்றம் பெற்றுச் சிறந்தது. இந்தச் சமயத்திலேதான் அதாவது 1927ல் தந்தை பெரியார்-செல்வம் சந்திப்பும் தோழமையும் ஏற்பட்டது. இந்திய அரசியலை ஆராய வந்த சைமன் கமிஷனே, தஞ்சையில் இவர் நிர்வாகச் சிறப்பு கண்டு பாராட்டியது. லஞ்ச ஊழலற்ற நிர்வாகம் எனப் புகழ்ந்தது.

மிகப்பெரும் செல்வச் செழிப்புள்ள குடும்பத்தைச் சேர்ந்தவரானாலும் மற்றவர் துயர்கண்டு, தானும் துன்புறும் குணமுடையவராக இருந்தார் பன்னீர்செல்வம். வாடி வருவோரின் வாட்டம் போக்கும் குணம் பெற்றிருந்ததாலோ



என்னவோ, குடும்ப நிர்வாகமெல்லாம் அவர் மனைவி பொன்னுபாப்பாளிடமே இருந்தது. இருப்பினும் கணவன் மீது பெரிதும் பாசம் கொண்டிருந்தார். அவருடைய தந்தையாரும் தன் மகளின் நிர்வாகத் திறன் கண்டு 132 ஏக்கர் நிலம் வாங்கி அவர் பெயரில் எழுதிவைத்தார்.

செல்வத்தின் தயாள சிந்தை காரணமாகவோ அல்லது சொத்து சேர்ப்பதில் நாட்டமின்றி இருந்ததாலோ என்னவோ அவருடைய கடைசிக் காலத்தில் இந்தப் பெரும் சொத்து அவரிடம் இருந்ததாகத் தெரியவில்லை. பிற்காலத்தில் இலண்டனில் படித்துவந்த தன் மகனுக்குக் காரை விற்றுப் பணம் அனுப்பியிருக்கிறார், செல்வம்.

பன்னீர்செல்வமும் பொன்னுபாப்பாளும் குறைவற்ற மக்கட் செல்வம் பெற்றிருந்தனர்; எட்டுக் குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள் அவர்கள். அவர்களில் இருவர் மட்டும் கொழுந்திலேயே கருகிப் போயினர்.

அவருடைய அண்ணன் திருச்செல்வம் - பெரும் சொத்திற்கு அதிபதியானாரே தவிர, பிள்ளைப் பேறு அடைந்தாரில்லை.

**தேடிவந்த பதவிகள்**

நீதிக்கட்சியின்பால் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த செல்வம், தஞ்சை மாவட்டக் கழகத்திற்காகக் கட்டப்பட்ட கட்டடத்திற்குப் 'பனகல் கட்டடம்' என்றே பெயரிட்டார். அங்குதான் தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் இப்போது இயங்கி வருகிறது.

கடும் உழைப்புக்குச்சொந்தக்காரரான செல்வம், தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராக மட்டுமல்ல; நீதிக் கட்சியின் தஞ்சை மாவட்டத் தலைவராகவும் திகழ்ந்தார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

நாளடைவில் பெரிதும் உடல் நலிவுற்ற பொன்னுபாப்பாள் 12-4-1934ல் இறந்து போனார்; அதற்கு முன் தம் பெயரிலிருந்த சொத்தையெல்லாம் தம் மக்கள் பெயரில் எழுதிவைத்து, தனது கணவரே அவர்களின் காப்பாளராக இருக்குமாறு குறிப்பிட்டிருந்தார்.

1930ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பெரும்பான்மை பெற்ற நீதிக்கட்சியர், பி.முனுசாமிநாயுடு தலைமையில் அமைச்சரவை அமைத்தனர். இத்தேர்தலில் திருச்சி-தஞ்சை கிறித்துவத் தொகுதியில் நீதிக்கட்சி வேட்பாளராக நின்று பன்னீர்செல்வம் பெரும் வெற்றி பெற்றார். அந்த ஆண்டும் அதற்கு அடுத்த ஆண்டும் இலண்டனில் நடைபெற்ற 2 வட்ட மேசை மாநாடுகளிலும் இந்திய கிறித்துவர்கள் சார்பாகச் செல்வமும் கலந்துகொண்டார்.

கல்வியின் பொருட்டும், பணியின் பொருட்டும் - தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி சென்னை இலண்டன் என்று சுற்றிய அவர் 1-4-1938 அன்றுதான் தம் குடும்பத்தோடு சில காலம் வந்து தங்கினாார். அக்கிராமத்தார் அனைவருடைய சொத்துக் கணக்கையும் எடுத்து ஆவணங்களாக்கினார். ஆதிதிராவிட மக்களுக்கெல்லாம் பேருதவி புரிந்தார்; குளம் வெட்டினார்; புனித தெரசாள் கோயில் கட்டினார்; ஏழை எளிய மக்கள் மருத்துவ வசதி பெறச்செய்தார்; இவ்வளவுக்கும் பிறகே, கிராம மக்கள் சம்மதத்தோடு செட்டியாபுரம் என்ற அச்சிற்றூரின் பெயரைச் செல்வபுரம் என்று அவர் மாற்றினார்.

இங்கிலாந்தில் படித்துவிட்டுத் திரும்பினார் அவர் மகன் ஜார்ஜ்; அவர் வைத்த கைகாட்டி தான் 'செல்வு புரம்' என ஒரெழுத்துப் பிழையோடு இன்றும் அங்கே காணப்படுவதாகும்.

**செல்வம் போதும்**

சாதிமத வேறுபாடுகளைக் கண்டித்து வந்த, நீதிக்கட்சியில் அங்கம் வகித்த பெரியவர்களே சர்.பிட்டி தியாகராசச் செட்டியார், டாக்டர் சி.நடேச முதலியார், சர் ஆர்.கே.சண்முகம் செட்டியார், ராஜா சர் முத்தையா செட்டியார், என்றெல்லாம் தம் பெயரோடு தம் சாதிப் பெயரையும் ஒட்டவைத்துக் கொண்டிருந்த காலம் அது!

அக்காலத்திலேயே ஏ.டி.பன்னீர் செல்வம் என்று மட்டுமே கையெழுத்திட்டு வந்த பெருமையுடையவர் செல்வம் ஒருவரே! மக்களெல்லாம் செல்வம் என்றே இவரைக் குறிப்பிட்டு மகிழ்வார்கள்.

17-2-1929ல் செங்கற்பட்டில் நடந்த சுயமரியாதை இயக்க மாநாட்டில் அவ்வியக்கத்தினர் தமது பெயருக்குப் பின்னால் சாதிப் பெயரைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது என ஒரு தீர்மானம் கூறியது. பெரியாரும் ஊ.பு.சவுந்தரபாண்டிய நாடாரும்கூட இனி அப்படிச் சேர்க்கமாட்டோம் என்று உறுதி கூறினார்கள் மறுநாள் நடைபெற்ற பிராமணரல்லாதார் மாநாட்டிற்குச் செல்வமே தலைமை தாங்கினார்.

தமிழகத்தில் 1-4-1937ல் கே.வி.ரெட்டி தலைமையில் அமைந்த நீதிக்கட்சி இடைக்கால அமைச்சரவையில் செல்வம் நிதி-உள்துறை அமைச்சராகப் பதவியேற்றார்.

அடுத்த நான்காம் மாதமே 14-7-1937ல், தமிழ்நாட்டில் புதிய அமைச்சரவை அமைந்தது. அதன் முதலமைச்சர் பொறுப்பேற்றார், சி.ராஜகோபாலாச்சாரியார். இதுகண்டு நீதிக்கட்சியினரும் சுயமரியாதை இயக்கத்தாரும் இனி நடக்கக்கூடாததெல்லாம் நடந்துவிடுமோ என்று அஞ்சினார்கள். அதற்கேற்பவே, அடுத்த மாதமே 11-8-1937ல் - ஆறு, ஏழு, எட்டாம் வகுப்புகளில் இந்தி கட்டாயப் பாடமாகும் என்று அறிவித்தார் 'ராஜாஜி'.

தமிழ் நாடெங்கும் போராட்டங்கள் வெடித்தன; பலரும் இந்தி எதிர்ப்புக் களம் புகுந்து

சர்.ஏ.டி. பன்னீர் செல்வத்தைப் பற்றி
ஏ.ஆர். முதலியாருடைய குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர். கிருஷ்ணசாமி "பார்லிமெண்டேரியன்" என்ற ஒரு புத்தகம் எழுதினார். அதிலே அவர் குறிப்பிடுகிறார். ஏ.டி.பன்னீர் செல்வத்தைப் பார்த்துக்கேட்டார்களாம். நீங்கள் நல்ல பார்லிமெண்டேரியன் என்று சொல்கிறார்களே, திடீரென்று ஒரு நாள் ஆளும் கட்சியிலேயிருந்து ஏழைகளுக்கு எல்லாம் இலவசமாக வீடு கட்டித்தரப்படும் என்று சொன்னால் என்ன செய்வீர்கள் ? என்று கேட்டார்களாம். அவர் உடனே சொன்னாராம், "அது மாத்திரம் போதாது, வீட்டுக்கு 200 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொல்வேன்" என்று பன்னீர்செல்வம் சொன்னராம். இதுதான் நல்ல பார்லிமெண்டேரியனுக்கு அழகு என்பார்கள்.

*- கலைஞர்*
*(சட்டப்பேரவை உரையிலிருந்து)*

**திருவாரூர் மாவட்டம்**

## ஊரகத் தொழில்

அ) கிராமப்புற நூற்பு நிலையங்கள் - 6 - மன்னார்குடி, நீடாமங்கலம், பேட்டை, திருத்துறைப்பூண்டி, இருள்நீக்கி மற்றும் இனான்குடி.

ஆ) ஆதிதிராவிடர் பாய்முடையும் சங்கம் - திருப்பாலக்குடி

இ) கிராமப்புற நூற்பு நிலையங்கள் - பெரம்பூர் மற்றும் நீடமங்கலம் ஆகிய இடங்களில் அமைத்திட (1997-98ல்) உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் போர்க்கால அமைச்சரவை ஏற்பட்டது; இந்திய அமைச்சருக்கு உதவியாக இருந்த ஆலோசனைக் குழுவில், செல்வம் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார். இது நடந்தது 10-1-1940ல் ஆகும். இச்செய்தி நீதிக்கட்சியினர் அனைவரையும் அகமகிழச் செய்வதாக இருந்தது.

இதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. அச்சமயத்தில் நீதிக்கட்சியினர் திராவிட நாடு கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர். இந்தியா சுதந்திரம் பெற்றால் ஆரிய நாடு, பாகிஸ்தான், திராவிட நாடு என்றே இந்நாடு பிரிக்கப்படவேண்டும் எனப் பிரச்சாரம் செய்துவந்தார் பெரியார். இக்கருத்து வலுப்பெறப் பன்னீர்செல்வம் இங்கிலாந்து பயணம் உதவும் என எல்லோரும் நம்பினர்.

கைதாயினர். ஆனால், வாக்குவன்மை மூலமே வெல்லமுடியும் என்ற நம்பிக்கையுடையவரான செல்வம்-கிளர்ச்சி, மறியல், போராட்டம் எதிலும் ஈடுபடவில்லை; அதேநேரத்தில் தமிழகமெங்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்துவந்தார்.

இந்தி எதிர்ப்பைப் பொறுத்தமட்டில் தந்தை பெரியாரின் பணி, அக்காலத்தில் சிறப்பிடம் பெற்றது. கடுங்காவல் தண்டனையும் இரண்டாயிரம் ரூபாய் அபராதமும் விதித்தது அரசு. பெல்லாரி சிறைக்குக் கொண்டுசெல்லப்பட்டார் தந்தை பெரியார். இதையொட்டி வந்த பெரியார் பிறந்தநாள் விழாக் கூட்டங்கள் 'அவரை விடுதலை செய்ய வேண்டும்' என்று அரசை எச்சரிக்கும் கூட்டங்களாக நடைபெற்றன. சென்னையிலும் வேலூரிலும் நடைபெற்ற கூட்டங்களுக்குச் செல்வமே தலைமையேற்றுத் தரையதிர முழங்கினார்.

இந்தி எதிர்ப்பு விவாதத்தில் அவர் ஒருமுறை சட்டப்பேரவையில் பேசிக்கொண்டிருந்த போது ஓர் காங்கிரஸ் உறுப்பினர் எழுந்து - "பெரியார் என்கிறீர்களே, அப்படியென்றால் யார் ?" என்று கேட்டார்; செல்வம் சட்டென்று "அப்படியென்றால் மகாத்மா என்று அர்த்தம்" என்றார்.

### இருவரும் ஒருவரும்

ஒருமுறை சட்டமன்றத்தில் முதலமைச்சராயிருந்த ராஜாஜி - "சோமசுந்தர பாரதியார், ஈ.வெ.ரா. ஆகிய இரண்டு பேர்தானே இந்தியை எதிர்க்கிறார்கள் ?" என்று கேட்டபோது "நீங்கள் ஒருவர்தானே இந்தியை ஆதரிக்கிறீர்கள் ?" என்று சூடாகப் பதிலுக்குக் கேட்டார் செல்வம்.

"1920 முதல் நீதிக்கட்சி அரசு புரிந்த பணிகளை, இன்னும் ஐம்பதாண்டுகள் ஆனாலும் காங்கிரஸ் அரசால் செய்யமுடியாது" என்று சட்டமன்றத்திலேயே எடுத்துரைத்தார் அவர்.

அக்கூட்டத்தில்தான் செல்வம், ஏ.துரைசாமி முதலியார், ராஜா சர் முத்தையா செட்டியார் ஆகிய மூவரும் துணைத் தலைவராகவும், கி.ஆ.பெ.விசுவநாதம் பொதுச் செயலாளராகவும், அண்ணா அவர்கள் வட்டார அமைப்பாளர்களில் ஒருவராகவும் நியமிக்கப்பட்டார்கள். பெரியாரின் எண்ணப்படி சி.பாசுதேவ் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

பெரியார் விடுதலையான பின், சி.என்.அண்ணாதுரை, பொ.வேதாசலம், சி.டி.நாயகம், குமாரசாமிப் பிள்ளை ஆகியோரைச் செயற்குழு உறுப்பினர்களாக நியமித்தார்.

### ராஜாஜி அமைச்சரவை பதவி விலகியது

இதற்குப் பிறகு 21-2-1940ல் மாநில ஆளுநரின் ஆணைப்படி கட்டாய இந்தித் திணிப்புக் கைவிடப்பட்டது.

இரண்டாம் உலகப்போருக்கு இந்தியர்கள் ஆங்கில அரசுக்கு ஆதரவளிக்கக்கூடாது என்று காங்கிரசார் முடிவு செய்திருந்தனர். அதே சமயம் நீதிக்கட்சி அவர்களுக்கு ஆதரவளிப்பது என முடிவு செய்தது. இதைப்பற்றி விளக்கித் தமிழகமெங்கும் பெரியார், செல்வம், அண்ணா போன்றவர்கள் செய்த பிரச்சாரத்தின் பலனாக இராணுவத்தில் எண்ணற்ற தமிழர்கள் சேரலாயினர்.

இங்கிலாந்து நாட்டிற்குப் பணியாற்றச் செல்லவிருக்கும் செல்வத்துக்கு வழியனுப்பு விழா விருந்தளிக்கப் பலரும் 'நான்-நீ' என்று போட்டி போட்டுக்கொண்டு முன்வந்தார்கள்.

### கடைசிக் கடிதம்

பம்பாய்க்குச் சென்று, அங்கிருந்து விமானத்தில் கராச்சிக்குப் போய்ச்சேர்ந்தார் செல்வம். அங்கே ஒருநாள் தங்கிய அவர், தனது பயணம் பற்றி, தந்தை பெரியாருக்கு 29-2-1940ல் ஒரு கடிதம் எழுதினார். அதுவே அவர் எழுதும் கடைசிக் கடிதமாக இருக்கும் என்று அப்போது தவறிப் போய்க்கூட யாரும் எண்ணிப் பார்க்கவில்லை.

அப்படிப் பயணமானபோது அவர் வங்கிக் கணக்கில் வெறும் 15 ரூபாய் 2 அணா மட்டும் தான் இருந்தது.

ராஜா சர் முத்தையா செட்டியாரிடம் ரூ.3000 கடன் வாங்கிக் கொண்டே அவர் புறப்பட்டிருந்தார். பிற்காலத்தில், அவர் மகன் ஜார்ஜ் முயற்சியால் கிடைத்த பயணத் தொகையால்தான் அந்தக் கடன் அடைக்கப்பட்டது.

1-3-1940 அன்று காலையில் 'அனிபால்' என்கிற இராணுவ விமானம் செல்வத்தை ஏற்றிக்கொண்டு கராச்சியைவிட்டுப் புறப்பட்டது; காலை 5 மணியளவில் பறக்கத் தொடங்கிய அவ்விமானம் பத்தரை மணியளவில் 'ஜிவானி' விமான நிலையத்தை அடைந்தது; அரைமணி நேரம் கழித்து அங்கிருந்து வானில் பறந்த விமானம், அன்று மாலை 5 மணிக்குள் ஷார்ஜா விமான நிலையத்தை அடைந்திருக்க வேண்டும்; ஆனால் அப்படிச் சென்று சேரவில்லை!

### உறுதியான மரணச் செய்தி

வேறுபல விமானங்கள் மூலமும் கப்பல்கள் மூலமும் தேடப்பட்டது. பின்பு பன்னீர்செல்வம் பயணம் செய்த அனிபால் விமானம் ஓமான் தீபகற்பத்தின் அருகே வளைகுடாவில் விபத்துக்குள்ளாகி விழுந்துவிட்டது; அதிலிருந்த யாருமே உயிர்தப்பவில்லை என்கிற கொடிய செய்தி மறுநாள் உறுதிப்படுத்தப்பட்டது! உற்றார் உறவினர் மட்டுமல்ல; தமிழகமே இச்செய்தி கேட்டுக் கதி கலங்கிக் கண்ணீர் வடித்தது!

### பிறந்தநாள் விழா

1-6-1988 அன்று சர்.ஏ.டி.பன்னீர்செல்வத்தின் நூற்றாண்டுப் பிறந்தநாள் நிகழ்ச்சிகள் தமிழ் நாடெங்கும் கொண்டாடப்பட்டன. திருவாரூரிலும், திருச்சியிலும், சென்னையிலும் நடைபெற்ற இவ்விழாக்கள் திராவிடர் கழகத்தின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் கொண்டாடப்பட்டன. கலைஞர், பேராசிரியர், மன்னை திரு. ப.நாராயணசாமி, திரு-அ.க.அ.அப்துல் சமது, திரு.கி.வீரமணி ஆகியோர் அவ்விழாக்களில் பங்கேற்று செல்வத்தின் சிறப்புகளை எடுத்து விளக்கினார்கள்.

- பி.எல்.ராஜேந்திரன்





# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

திருவாரூர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உதவிகள் :

வீட்டுமனைப் பட்டா 1,601 பேர்களுக்கு வழங்கப்பட்டன. இதற்கான செலவுத் தொகை ரூ.37,00,182.

ஆறு ஆதிதிராவிடர் கிராமக் குடியிருப்பு மற்றும் சுடுகாட்டுக்கு ரூ.6,41,619 செலவில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இலவசத் தையல் இயந்திரம் ரூ.2,41,200 செலவில் 134 பேர்களுக்கு வழங்கப்பட்டது.

இலவசச் சலவைப்பெட்டி ரூ.13,541 செலவில் 11 பேர்களுக்கு வழங்கப்பட்டன.

வசதி செய்தல், சுடுகாட்டு கப்பிச்சாலை அமைத்தல் போன்ற பணிகள் ரூ.18,62,124 செலவில் செய்யப்பட்டன.

19 ஆதிதிராவிடர் உழவு மாட்டுக் கடன் பெற ரூ.57,000 மான்யம் வழங்கப்பட்டது.

மேலும் வன்கொடுமை தடுப்புச் சட்ட நிவாரணம் ரூ.42 பேர்களுக்கு ரூ.2,62,500 வழங்கப்பட்டது.

உணவு விடுதியில் தங்கிப் பயிலும் 1,633 மாணவ, மாணவிகளுக்கு ரூ.31,56,600 உணவிற்காக வழங்கப்படுகிறது.

ஆதிதிராவிட நலத்துறைப் பணிகள் செம்மையாக நடைபெற மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழுக்கள், வன்கொடுமை கண்காணிப்புக்குழு, கொத்தடிமை, பாடநூல் விநியோகக் கண்காணிப்புக் குழுக்கள், விடுதி மாணவ மாணவியர் தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளன.



கல்வி உதவித்தொகையாக 20,824 பேர்களுக்கு ரூ.37,90,548 வழங்கப்பட்டது.

இலவசச் சீருடை 4,794 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

ஆதிதிராவிட நலப்பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் 4,452 மாணவ மாணவிகளுக்கு ரூ.3,89,664 செலவில் புத்தகங்கள் குறிப்பேடுகள் வழங்கப்பட்டன.

பொது பள்ளிகளில் 9 மற்றும் 10ஆம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிட மாணவர்கள் 8651 பேர்களுக்கு ரூ.7,78,734 செலவில் இலவசப் புத்தகம் வழங்கப்பட்டது.

குறிப்பேடுகள் 4 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் 32,208 மாணவ மாணவிகளுக்கு ரூ.15,31,100 செலவில் வழங்கப்பட்டன.

இதுதவிர பள்ளி கட்டடங்கள், பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல், விடுதி கட்டடங்கள் கட்டுதல் புதுப்பித்தல். ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர் கிருஸ்தவக் குடியிருப்புகளுக்குக் குடிநீர்

திருவாரூர் மாவட்டத்தில் சமத்துவபுரம் அமைக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள் அலிவலம் மற்றும் நொச்சியூர் ஆகும்.

ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் 40 ஆதிதிராவிடர்கள், 25 பிற்பட்ட வகுப்பினர், 25 மிகப் பிற்பட்ட வகுப்பினர் மற்றும் 10 இதர வகுப்பினர் வீட்டு மனைபெறத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஒவ்வொருவருக்கும் 5 சென்ட் வீட்டு மனை இலவசமாக வழங்கப்படும்.

வீடுகட்ட ரூ.35,000ம் மானியமும், கூட்டுறவுத் துறை மூலம் ரூ.10,000 கடனும் வழங்கப்படும்.

சமத்துவபுரத்தில் 30 அடி தார்ச்சாலைகள், மின்வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, பள்ளி, விளையாடுமிடம், நியாய விலைக்கடை, தொலைக்காட்சிப் பெட்டி ஆகிய வசதிகள் உண்டு.

அலிவலத்தில் அனைத்துத் துறையிலும் பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

திருவாரூர் மாவட்டம் :



# பறவைகள் சரணாலயங்கள்



திருவாரூர் மாவட்டத்தில் பறவைகள் சரணாலயங்கள் இரண்டு அமையவிருக்கின்றன. ஒன்று வடுவூர், மற்றொன்று உதயமார்த்தாண்டபுரம். வடுவூர், திருவாரூர் மாவட்டத்தின் மேற்கு எல்லையாகும். இங்குள்ள 316 ஏக்கர் ஏரியில் உன்னி கொக்கு, முக்குளிப்பான், கரண்டி மூக்கன், சிறவி, நமக்கோழி, பாம்புதாரா போன்றவைகளும் வேறு பல வெளிநாட்டுப் பறவைகளும் படைபடையாய் வருகின்றன.

அந்த ஏரியின் பரப்பளவு 1356 ஏக்கர், கொள்ளளவு 38.88 மில்லியன் கன அடி, கரைமட்டம் 27.20 மீட்டர், கரையின் நீளம் 1200 மீட்டர். நான்கு மதகுகள் கொண்ட வடுவூர் ஏரியைச் சுற்றியுள்ள அடர்ந்த காடுகள் இந்தப் பறவைகளுக்கு ஏற்ற வகையில் பெரிதும் உதவுவதாகத் தெரிகிறது.

தமிழ்நாடு அரசு : வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இப்பகுதி விரைவிலேயே முறைப்படி பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட உள்ளது. இதேபோல் உதயமார்த்தாண்டபுரமும் விரிவாக்கம் பெறும்.

அதன்பின் சுற்றுலாப் பயணிகள் வருகை இப்பகுதியில் அதிகரிக்கும். எனவே அதற்கேற்ற வகையில் அதன் சுற்றுப்புறத்தில் வசதி வாய்ப்புக்கள் உண்டாக்குவதைப் பற்றி, மாவட்ட நிர்வாகம் பெரிதும் முனைந்திருக்கிறது.

---



## திருவாரூர் எழுத்தாளர் கலைஞர்

அந்தக் காலத்தில் கலைஞரைத் திருவாரூர் முரசொலி எழுத்தாளர் என்றால்தான் பலபேருக்குத் தெரியும்.

தந்தை பெரியார் அவர்களின் 'குடிஅரசு' ஏட்டில் கலைஞர் வேலைக்குப் போய்ச்சேர்ந்த போது, 13.10.1945 ஏட்டில் வெளிவந்த விளம்பரம் இது :

திருவாரூர் முரசொலி எழுத்தாளர் தோழர் மு.கருணாநிதி அவர்களின் தற்கால முகவரி :

மு.கருணாநிதி
C/o. குடிஅரசு ஆபீஸ், ஈரோடு.






திரு.வி.க. அரசு கலைக்கல்லூரி

கலைககல்லூரி - அண்ணாசிலை

திருவாரூர் சந்திப்பு புகைவண்டி நிலையம்

தென்னை அணிவகுக்கும் கிராமப்புரச்சாலை

வாழைக்கேற்ற மண்வளம்

கோடை வெப்பம் தணிக்கக் குளிரிளநீர்

அங்காள பரமேஸ்வரி கோயில்

மன்னை - இராசகோபால சுவாமி ஆலயக் கல்தூண்

திருவாரூர் மாவட்டம்:

# காவலர் கடமை

சட்டம் - ஒழுங்கு எவ்விதச் சோதனைக்கும் ஆளாகாத மாவட்டமாக இருக்கிறது திருவாரூர் மாவட்டம்.

திருவாரூர் காவல் மாவட்டம் 19.8.96 முதல் பிரிக்கப்பட்டு, செம்மையாகச் செயல்பட்டு வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருந்து 23 காவல் நிலையங்களும் தஞ்சை மாவட்டத்தில் இருந்து 2 காவல் நிலையங்களுமாகப் பெற்று, 25 காவல் நிலையங்கள் அடங்கியதாக உள்ள இந்த மாவட்டத்தில், சட்டம் ஒழுங்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலில் சீரும் சிறப்புமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு.எம்.இராம சுப்பிரமணியம் தலைமையில் ஒரு கூடுதல் கண்காணிப்பாளர், 6 துணைக் கண்காணிப்பாளர்கள், 22 காவல் ஆய்வாளர்கள், 45 உதவி ஆய்வாளர்கள், 236 தலைமைக் காவலர்கள், 264 முதல்நிலைக் காவலர்கள் மற்றும் 17 இரண்டாம் நிலைக்காவலர்களுடன், 25 காவல் நிலையங்கள் மற்றும் தனிப்பிரிவுகளும் திருவாரூர் மாவட்டத்திலே இயங்கிவருகின்றன.

### மகளிர் காவல் நிலையம்

இது தவிர - பெண் உதவி ஆய்வாளர் ஒருவர், 5 பெண் தலைமைக் காவலர்கள் மற்றும் 5 பெண் முதல் நிலைக் காவலர்களுடன் மன்னார்குடியில் பெண் காவல் நிலையம் இயங்கிவருகிறது.

திருவாரூர் நகரத்திலும், மன்னார்குடி நகரத்திலும் போக்குவரத்துப் பிரிவுகள் தனிப்பட அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஓராண்டுக்குள்ளாகவே - மாவட்டக் குற்றப்பிரிவு, மாவட்டத் தனிப்பிரிவு, மாவட்டக் குற்ற ஆவணக்கூடம், தீண்டாமை ஒழிப்புப் பிரிவு, கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் சேமப்படைப் பிரிவுகள் ஆகியவைகளும் உருவாக்கப்பட்டு, திறம்பட இயங்கிவருகின்றன.

### உடனடி நடவடிக்கை

திருவாரூர் நகரக்காவல் கட்டுப்பாட்டு அறை, வான்செய்தி பொருத்திய வாகனத்தில் அதிரடிப்படையினர் 24 மணி நேரமும் மிகுந்த விழிப்புடன் செயலாற்றி வருகிறார்கள்.

திருவாரூர் நகரில் கள்ளச்சாராயம் விற்பனை செய்தல், சூதாட்டம் நடத்துதல், தனியே செல்லும் பெண்களைக் கேலி செய்தல் மற்றும் கலவரம் நடக்கும் இடங்கள் போன்ற தகவல்களைத் தொலைபேசி எண் 100க்கு தகவல் கொடுத்தால் போதும்; தகவல் கொடுத்த 2 நிமிடத்துக்குள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த 100 என்ற எண்ணுக்கு போன் செய்தால் கட்டணம் கிடையாது, தகவல் கொடுப்பவரின் பெயர் விவரம் எல்லாம் இரகசியமாகவே வைத்துக் கொள்ளப்படும்.

திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையத்தைச் சேர்ந்த பல்வேறு கொலை மற்றும் கொலை முயற்சிகளில் சம்பந்தப்பட்டு, இதுவரையில் காவல் துறையினரால் கைது செய்யப்படாமல் தலைமறைவாக இருந்து வந்த 7 முஸ்லீம் இளைஞர்கள் பயங்கர ஆயுதங்களுடன் - திருவாரூர் நகருக்கு அருகில் இருக்கும் மருதப்பட்டினம் கிராமத்தில் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர்.

கடந்த 6.12.97ஆம் தேதி திருச்சி இரயில்வே நிலையச் சந்திப்பில் நின்றுகொண்டிருந்த 'பாண்டியன் எக்ஸ்பிரஸ் ரயிலில்'



விளமல் - கல்லுப்பாலம் அருகே ரூ.70,000 பெறுமானமுள்ள 'சூடாயில்' கடத்திய லாரிகளைப் பிடித்த திருவாரூர் காவலர் படை.





திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கூட்டிய பல்துறை அலுவலர்கள் ஆய்வுக்கூட்டம்

வெடிகுண்டு வெடித்த சம்பவத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர்; மேலும் சென்னை அண்ணா மேம்பாலம் அருகில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்திலும் சென்னை அண்ணாசாலை டிவிஎஸ்அருகில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடிப்பதற்கு முன்பு காப்பாற்றப்பட்ட சம்பவத்திலும் சென்னை துணை போலீஸ் கமிஷனர் திரு.மாசாணமுத்து அவர்களுக்கு வெடிகுண்டு பார்சல் அனுப்பிய ஜிகாத் கமிட்டியின் மாநிலத் தலைமை நிலையச் செயலாளரும் முஸ்லீம் தீவிரவாதியுமான அலி அப்துல்லா கொரடாச்சேரி அருகில் உள்ள அத்திக்கடையில் கத்தியுடன் கைது செய்யப்பட்டது. திருவாரூர் மாவட்டக் காவல் துறையின் திறம் மிக்க நடவடிக்கைக்கோர் சான்றாகும்.

கடந்த பிப்ரவரியில் கூத்தாநல்லூர் அருகே உள்ள லெட்சுமாங்குடியில் இந்துக்கள் - முஸ்லீம்களிடையே துளிர்விட்ட கலவரம் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரால் ஓரிரு நாட்களிலேயே அடக்கப்பட்டு, அதன் வேகம் அக்கம்பக்கத்து ஊர்களுக்குப் பரவாமலும், இனக்கலவரமாக வளராமலும் தடுக்கப்பட்டது.

திருவாரூர் நகரில் தியாராசர் கோயிலில் உள்ள ஆழித்தேரோட்டம் நடைபெற்றபோது, எவ்விதச் சிறு அசம்பாவிதம்கூட நடக்காமல் காவல்துறையினரால் பாதுகாப்புச் செய்யப்பட்டிருந்தது.

### மதுக் குற்றங்கள்

திருவாரூர் காவல் மாவட்டம் தொடங்கிய நாளில் இருந்து 16 கார்களும், 3 லாரிகளும், 4 வேன்களும், 46 மோட்டார் சைக்கிள்களும், மதுக் குற்றங்களில் ஈடுபட்டதாகக் கைப்பற்றப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

1997ஆம் ஆண்டு 10,425 மதுக்குற்ற வழக்குகளும், 1998ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முடிய 7.051 வழக்குகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலும், மதுக்குற்றங்களைக் கண்டுபிடிக்க இம்மாவட்டத்தில் உள்ள பேரளம் காவல் நிலையச் சரகம் வேலங்குடி கிராமத்தில் ஓர் உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் 4 காவலர்களைக் கொண்டு மதுவிலக்குச் சோதனைச் சாவடி தொடங்கப்பெற்றுள்ளது; இவர்கள், வண்டி வாகனங்கள் மூலம் மதுக்கடத்தலைத் தடுக்கச் சோதனை செய்யப்பட்டு வருகிறது.

திருவாரூர் மாவட்டத்தில் 'ரௌடி'களின் நடவடிக்கைகளும், கட்டைப் பஞ்சாயத்து முறைகளும் முற்றிலுமாகத் தடுக்கப் பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை விடுதலைப் புலிகள் உட்படத் தீவிரவாதிகளின் நடமாட்டத்தைத் தடுக்க - பேட்டை, தில்லைவளாகம் ஆகிய இடங்களில் சோதனைச் சாவடிகள் தொடங்கப்பெற்று ஊடுருவல் இல்லாமல் தடுக்கப்பட்டு வருகிறது. ●



அச்சுத மங்கலம் சத்துணவு சமையற்கூடம்

### தீயணைப்பு நிலையங்கள்

திருவாரூர் மாவட்டத்தில் மொத்தம் 10 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன.

- திருவாரூர்
- குடவாசல்
- நன்னிலம்
- கொரடாச்சேரி
- வலங்கைமான்
- மன்னார்குடி
- நீடாமங்கலம்
- கோட்டூர்
- திருத்துறைப்பூண்டி
- முத்துப்பேட்டை

ஆகிய இடங்களில் அத்தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன.

# கலைஞர் கவிதைகளில் மரங்கள்



- பூவிதழின் மென்மையிலும் மென்மையான
  புனித உள்ளம். அன்பு உள்ளம்.
  அரவணைக்கும் அன்னை உள்ளம்! அவர் (அண்ணா)
  மலர் இதழ்கள் தமிழ்பேசும் -
  மா, பலா, வாழையெனும் முக்கனியும் தோற்றுவிடும்.
  விழிமலர்கள் வேலாகும் வாளாகும்
  தீங்கொன்று தமிழ்த்தாய்க்கு வருகுதென்றால்!...

- நரிகள் உள்ள காடெல்லாம், நயவஞ்சகர் உலவும்
  நாடெல்லாம் காவல், காவல்! அந்தப் படைகளுக்கு
  இராவணன், காலம்காட்டும் சேவல், சேவல்!

- வெற்றி வேந்தனுக்கோர் தம்பி வீடணன்...
  வேங்கை மரத்துப் புல்லுருவி
  அண்ணனைச் சாய்த்துவிட்டு அரசாளக்
  காத்திருப்போன்!

- மலையோரம் மரத்தோரம் மறைந்திருந்து
  எலிபோலப் போரிட்டான் எதிரி இராமன்!

- எனைக் கொன்றவன் என்தம்பி,
  பனைமரத் தோளுடையான்!...

- மகிழம்பூ பிள்ளைதரும் பேரின்பம் மறுக்கின்ற
  காவியமும் இலக்கியமும் கள்ளி என்பேன்,
  கவைக்குதவாக் காட்டுச் கள்ளியென்பேன்!...

- ...தென்னம் பாளை தெறித்ததுபோல்
  சிரித்து நின்றார் மாதரெல்லாம்

- தாழை மடலை எதிர்ப்புறமாய்த் தடவுதற்கும்
  அஞ்சுகின்ற கோழை நீ!
  வாழைமரம் வெட்டுதற்கும் வாள்பிடிக்கத் தெரியா
  மோழை! வந்தவழி போ!...

"மாண்புமிகு
முதலமைச்சர் கலைஞர்
அவர்களின்
பவளவிழா
நாளையொட்டித்
தமிழகமெங்கும்,
கோடானு கோடி
மரக்கன்றுகள்
நடப்பட்டன".

\- செய்தி



- தருவே! உருவே! திங்கட் குளிரே!
  தருவே! நிழலே! நிழல்தரு சுகமே!...

- சந்தன மரங்கடைந்து சிலைசெய்து,
  வெந்தழல் நிறமெடுத்து இதழ்பொருத்தி,
  இந்திர வில்லனைய புருவத்தின் கீழ்
  எழில்நீல மணியிரண்டை இமைக்குள் பதித்துச்
  செந்தமிழ் மணக்கின்ற திருவாயை
  அசையச்செய்து
  சந்ததம் புகழ்பாடும் பான்மையிலே
  உயிரூட்டிக் கொண்டுவந்த அற்புதமாம்!...

- வம்பென்றால் விலக்கிடுவேன்-கவிஞரிடை
  வம்பென்றால் களித்திருப்பேன்...தமிழ்க்
  கம்பெடுத்துச் சொற்சிலம்பம் ஆடிடுவீர்; கவி
  அம்பெடுத்துத் தாக்கிக் கொள்வீர்...

- ஒட்டுமா பழம்உறவு? எனக் கேட்பீர்!
  ஒட்டுமாம் பழ உறவு!
  ஒட்டு மாம்பழ உறவு சேலத்தில் இயற்கை!...

- ...தென்னம்
  பாளை வடிக்கும் கண்ணீர்தான் மதுச்சாறு;
  வாழை வடிக்கும் கண்ணீரோ பால்ஆகும்;
  ஏழை வடிக்கும் கண்ணீரோ வேல்ஆகும் -
  வாள்ஆகும்!

- கந்தா கடம்பா கருப்பா முனியா என்று
  கருவேல மரத்தடியில் மிராசுதார் போடும்
  கூச்சல்...

- ஆலிட்ட விழுதுபோல அங்கங்கே பரவிடும்!
  அதனாலே...
  தாழிட்டுத் தடுத்திடுவீர் உட்பகையை!...

- பனைவெல்லம் போலினிக்கும் பாதருவார்!...

- நாவற் பழமென நல்லகவி உதிர்த்திடுவார்!...

- வேருக்குள் தூங்கும் பலாக்கனி நாங்களய்யா
  பாருக்குள் எம்போலப் பாவையுண்டா?...

- சேர்வராயன் மலைக் கனியும்
  சேலத்து மாங்கனியும்
  செந்தமிழர் பெற்றுமகிழ்ந்தாலும் என்
  செம்மாதுளைக் கவிக்கிணையோ!...

- புன்னைமரம் நிழல் விரிக்கத்-தமிழ்
  அன்னைமடி சுகம் அளிக்க
  சென்னைநகர் ஒளிதெறிக்க
  முன்னைஇருள் விலக்குதற்கு
  முயல்கின்ற தமிழரசு!

- அன்பு - 'ஆல்'
  அறநெறி - 'ஆல்'
  கல்வி - 'ஆல்'
  உழவு - 'ஆல்'
  தொழில் - 'ஆல்'
  கலைப்பெருக்கு - 'ஆல்'
  ஆறுதலைப்பும் 'ஆல்' என்று முடிவதனால்
  'ஆல்' களின் நடுவே நானோர் அரசானேன்!

- குயில்கூட்டம் பாடுகின்ற கோலச் சோலையிலே
  கோட்டான்கள் காட்டுக் கூச்சல் கேட்டிடவோ?
  மானாடும் பொழில்-மயிலாடும் பூங்கா-
  மந்திகளின் ஒய்யார மண்டபமாய் மாறுவதோ?...

- ஒதியமிலார்-முருங்கைக் கொம்பு
  ஒடிபட்டுச் சிதறுதல்போல்-பகை
  முறிபட்டுப் பஞ்சாய்ப் போகும்!...

- ஊன் கலந்து உயிர் கலந்து
  தேன் கலந்த பலாச்சுளைபோல்-
  தித்திக்கும் தமிழே!...

- சில நாடுகளில்...
  ஏனோ தெரியவில்லை
  ஜனநாயக ஆலமரம்
  அந்த மண்ணில் விழுதுவிடுவதேயில்லை!
  அடிமரத்தை வெட்டித்தான்
  ஆணிவேரையும் பிடுங்கிவிட்டார்களே!

- இலட்சியமென்பது,
  எட்டிப்பறித்திடும் மல்லிகையல்ல!
  ஏறிப்பறித்திடும் மாங்காயும் தேங்காயுமல்ல!
  எதிர்நீச்சல்! எரிமலைமேல் கொடிநாட்டல்!

தொகுப்பு : பி.எல்.ஆர்.



# திருக்கோளிலி

## (திருக்குவளை)

*மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் பிறந்த ஊரான 'திருக்குவளை', புராணப் புகழ்பெற்றதாகும். தேவாரத்தில் அவ்வூர் பற்றிக் காணப்படும் செய்தி இது.*

**தல விளக்கம்:** காவிரி தென்கரைத்தலம்; திருக்குவளை என வழங்கப்படுகிறது. சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. பிரம்மன், அகத்திய முனிவர் வழிபட்டது. நவக்கிரகங்கள் ஒரு சேர வந்து பூசித்ததால் 'கோளிலி' எனப் பெயர் பெற்றது. பிரமதபோவனம், கதகாரண்யம், தென்கயிலை முதலான பெயர்களும் உண்டு.

'அந்தரத்தில் தேர்ஊரும்
அரக்கன்மலை அன்றெடுப்பச்
சுந்தரத்தன் திருவிரலால்
ஊன்றஅவன் உடல்நெரிந்து
மந்திரத்தை மறைபாட
வாள்அவனுக் கீந்தானும்
கொந்தரத்த மதிச்சென்னிக்
கோளிலிஎம் பெருமானே !'

**தெளிவுரை:** வானத்தின்கண் தேரில் ஊர்ந்து சென்ற இராவணன் கயிலைமலையை எடுத்தபோது, ஈசன் அழகிய தன் திருப்பாத விரலால் ஊன்ற, உடல்நெரிந்து துன்புற்றுச் சாம கீதத்தை ஓதினான். அதனைக் கேட்டு மகிழ்ந்து மந்திரவாளை அவ்வரக்கனுக்கு வழங்கியவன் பிறைசூடிய கோளிலிப் பெருமான்.



*ஒரே வரிசையில் நவக்கிரகங்கள் - திருக்குவளை ஈசுவரன் கோயில்*

சுந்தரமூர்த்தி நாயனார்க்குக் குண்டையூர் கிழார் வேண்டுகோளின்படி பெற்ற நெல்முட்டைகளைப் பூதங்களைக் கொண்டு திருவாரூரில் சேர்ப்பித்த திருத்தலம்.

| | | |
|---|---|---|
| சுவாமி | : | பிரமபுரீஸ்வரர், கோளிலி நாதேஸ்வரர் |
| அம்பிகை | : | வண்டார் பூங்குழலி |
| தலவிருட்சம் | : | தேற்றா மரம் |
| தீர்த்தம் | : | விநாயக தீர்த்தம், சக்தி தீர்த்தம், அகத்திய தீர்த்தம், இந்திர தீர்த்தம், சந்திரநதி, மணிகர்ணிகை. |
| பண் | : | பழந்தக்க ராகம் |

திருஞானசம்பந்தரின் தேவாரத்தில் திருக்கோளிலி (திருக்குவளை) பற்றிப் பாடல் சில உண்டு; அவற்றுள், உதாரணத்திற்கு இதோ ஒரு பாடல்:

### சிங்காரமான ஊர்

திருவாரூர் மாவட்டத்தில் அழகான சிற்றூர்களில் ஒன்று 'திருக்கோளிலி'. திருக்குவளை என்றும் அதனை அழைப்பார்கள். திருவாரூரிலிருந்து பதினைந்தாவது மைலில் உள்ள கிராமம். அங்கேதான் எங்கள் குடும்பம். எழில் நிறைந்த திருக்குளம். குளத்தைச் சுற்றிச் சோலை! எதிரே சிவன் கோயில்! மேற்கு எல்லையில் முனியன் கோயில்! தெற்கெல்லையில் ஐயனார் கோயில்! இவையெல்லாம் நான் கண்ட திருக்குவளை.

இப்போது அந்த அழகில் முக்கால் பகுதி குறைந்துவிட்டது. என் தந்தையார் காலத்திலே மிகச்சிங்காரமாக இருந்த ஊர் அது!

**- கலைஞர்**

- 'நெஞ்சுக்கு நீதி' முதல் பாகத்திலிருந்து-

* * *



# கலைஞரின் தமிழ்

## - தாமரைமணாளன்

இருபத்தைந்து வருடங்களுக்கு மேற்பட்ட பத்திரிகைத்துறை அனுபவமிருந்ததாலும் - பல்வேறு தலைவர்களுடைய புகழோங்கிய கால கட்டங்களில் நானும் ஊடாடி - பத்திரிகைகளில் பணிபுரிந்த வாய்ப்பு இருந்தும்.

எந்தப் பெரிய தலைவர்களுடனும் அதிக நெருக்கத்துடன் நான் பழகவில்லை. விதிவிலக்கு இருவர். காமராஜர் - எம்.ஜி.ஆர். இவர்களின் விஷயத்திலும் அரசியல் நெருக்கம் கிடையாது. பத்திரிகையாளனாகும் முன்னே காமராஜர் பேரில் - அவருடைய தூய தியாக வாழ்வில் ஏற்பட்ட பக்தி ஈடுபாடு. எம்.ஜி.ஆரோடு அவருடைய படங்கள் சிலவற்றிற்குத்திரைக்கதை,வசனம் எழுதும் பணி செய்த பழக்கம். இந்த இருவரும் முதல்வர்களாக இருந்தபோது நான் தேடிப்போய் பார்த்ததே இல்லை, அதேபோல், இன்றைய தமிழகத்தின் தலைசிறந்த தலைவரோடும், என் நெருக்கமும் அந்த நிலையில் உள்ளதுதான்.

அவர்தான், கலைஞர்.

அவரோடு நான் பேசிப்பழகிய சந்தர்ப்பங்களை விரல்விட்டு எண்ணி விடலாம்.

ஒருமுறை, நானும் திரு.மணியனும் 'இதயம் பேசுகிறது' இதழுக்காக அவரைப் பேட்டி காணச் செல்வதாக இருந்தோம். நான்தான் தொலைபேசியில் கலைஞரிடம் அனுமதி கேட்டேன்.

"பேட்டி காண வருவது யார் ?" விசாரித்தார்.

"நானும், திரு.மணியனும்".

"இரட்டைக் குழல் துப்பாக்கியா ?" கேட்டுவிட்டு சிரித்தார். (என்னவோ, எங்கள் காகிதத் துப்பாக்கிக்குப் பயப்படுபவர்போல்! ஏ.கே.47-க்கே ஈடுகொடுக்கும் அவரா ? எங்களுக்கு உற்சாக மூட்ட, அப்படி 'ஜோக்' அடித்தார்.)

1989-ல் அவர் மீண்டும் தமிழக முதல்வராக பொறுப்பேற்ற சமயம், நான் குடியிருக்க வசதியான வீடு இல்லாமல் 40 கி.மீ. தொலைவிலுள்ள புறநகர்ப்பகுதியில் தங்கி சென்னைக்கு வந்து போய்க் கொண்டிருந்தேன். (இப்போதும்தான்). அதைக் கண்டறிந்த ஒரு நண்பர் (சினிமா டைரக்டர் சி.பி.கோலப்பன் என்று நினைவு) "நீங்க சீனியர் பத்திரிகையாளர், இப்படி சென்னைக்கு தொலைதூரத்திலிருந்து வந்து போய்க்கொண்டிருக்கிறீர்களே. ஒரு மனு எழுதிக் கொண்டு கலைஞரைப் போய் சந்திப்போம். உடனடியாக ஏதாவது அரசாங்க குடியிருப்பு வசதி செய்வார். அவரைத் திட்டுகிற பத்திரிகையாளர்களுக்கேகுடியிருப்பு வசதி செய்து கொடுத்திருக்கிறார்" என்றார். மனுகூட நான் தயாரித்தேன்.

ஆனாலும் ஒரு தயக்கம். கூச்சமா ? 'எப்படிப் போய்க் கேட்பது என்ற குழப்பமா ?' நாளது வரை புரியவில்லை. போகவே இல்லை! இப்படி ஒதுங்கியிருந்தாலும், அவரை அறிந்து கொள்வதற்கு அது ஒரு தடை அல்ல. கோபுரத்தின் மாட்சியை, அதன் உள்ளிருப்பவர்களைவிட, விலகியிருந்து பார்ப்பவர்கள், அதிகமாக ரசிக்க முடியும்.

'வாசுகியில்' ஆசிரியர் பொறுப்பேற்ற பின், தொலைவிலிருந்தே கலைஞரின் ஓர் அபூர்வத் தனித்தன்மையை கண்டுணர்ந்து வியக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அதுதான், தமிழ் இலக்கியத்தில் அவருக்கு உள்ள ஆழமான லயிப்பு.

அவரிடம் ஒருமுறை அரசியல் சம்பந்தமாக ஒரு கட்டுரை எழுதக் கேட்டேன். கோவை மாநாட்டுப் பிரச்சினைகளில் மிகவும் மும்முரமாக இருந்ததால், எங்கள் பிரதிநிதிகளால் அவரை அணுகி கட்டுரையைப் பெற முடியவில்லை.

சில நாட்கள் கழித்து, மீண்டும் ஒரு பத்திரிகை விஷயத்துக்காக அவரைத் 'தொந்தரவு' செய்ய விரும்பினேன். அது உண்மையிலேயே, அவருக்குத் தொந்தரவான வேலைதான். அவர் எழுதிய எண்ணற்ற கவிதைகளிலிருந்து ஒரே ஒரு பக்க அளவுக்குள் 'மாணிக்க வரிகளை'த் தேர்ந்தெடுத்துத் தரும் சிரமமான பணி.

*அடடா! பாண்டியன் சபையில்*
*கண்ணகி வீசிய சிலம்பின்*
*மாணிக்கப் பரல்கள் துள்ளி எழுந்து*
*பாண்டியன் நெடுஞ்செழியனின்*
*வாயை அடைத்தது போல், அவர்*
*தேர்ந்தெடுத்துத் தந்த மாணிக்க*
*வரிகள் என்னை மட்டுமல்லாது,*
*தமிழ்கூறும் நல்லுலகத்து வாசகர்கள்*
*அனைவரையுமே பிரமிப்பில்*
*வாயடைக்கச் செய்து விட்டன.*
*ஆம்; இதுவரை 'வாசுகி'யில்*
*வெளியான 'மாணிக்க வரிகள்'*
*பகுதிகளில் மகத்தான வரவேற்பைப்*
*பெற்றது, கலைஞரின்*
*'மாணிக்க வரிகள்' தாம்!*

இதை நான் பெற விரும்பிய வேளையிலும், அவர் முன்னை விட மிகமிக நெருக்கமான அரசியல் பிரச்சினைகளுக்கு இடையே பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தார்.

ஆனாலும் என் ஆர்வம் என்னை உந்தியது. நிருபர் ஒருவரிடம் என் வேண்டுகோளை, கடிதமாக எழுதிக் கொடுத்து அனுப்பினேன். 'அறிவாலயத்தில்' அரசியல் பிரச்சினைகளுக்காக அவரிடம் பதில் பெற எண்ணற்ற நிருபர்கள் காத்து நின்று கொண்டிருக்க 'ஒரு இளைஞன்' 'வாசுகி'யிலிருந்து தமிழுக்காக வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் உடனடியாக வரவழைத்துப் பேசியதோடு, உடனடியாக ஒரு மாலை நேரத்தைக் குறிப்பிட்டு, தன் இல்லத்துக்கே அந்த இளைஞனை வரும்படி கூறினார். அது மட்டுமல்ல; ஒவ்வொரு வினாடியும் அவரை அரசியல் பிரச்சினைகள்

பற்றி இழுத்துக் கொண்டிருக்கும்போது, தமிழ் இலக்கியத்துக்காக அந்தத் தலைவர் சுமார் 2 மணி நேரம் பொறுமையாகத் தன் நூல்களைத் தானே புரட்டி 'மாணிக்க வரி'களைத் தேர்ந்தெடுத்துத் தந்தார்.

அடடா! பாண்டியன் சபையில் கண்ணகி வீசிய சிலம்பின் மாணிக்கப் பரல்கள் துள்ளி எழுந்து பாண்டியன் நெடுஞ்செழியனின் வாயை அடைத்தது போல், அவர் தேர்ந்தெடுத்து தந்த மாணிக்க வரிகள் என்னை மட்டுமல்லாது, தமிழ்கூறும் நல்லுலகத்து வாசகர்கள் அனைவரையுமே பிரமிப்பில் வாயடைக்கச் செய்து விட்டன. ஆம்; இதுவரை 'வாசுகி'யில் வெளியான 'மாணிக்க வரிகள்' பகுதிகளில் மகத்தான வரவேற்பைப் பெற்றது, கலைஞரின் 'மாணிக்க வரிகள்' தாம்!

அவற்றைப் போற்றியவர்கள் எல்லாருமே தி.மு.க.வினர் தான் என்று கூறமுடியாது. கழகத்துக்குச் சம்பந்தமே இல்லாத பல தமிழ் நெஞ்சங்களும் வியந்து வியந்து எழுதியிருந்தார்கள். அப்போதுதான் எனக்கு ஓர் உண்மை புலப்பட்டது.

கலைஞர் என்ற தலைவர் வேண்டுமானால், தி.மு.கழகத்தின் தனி உடமையாக இருக்கலாம்.

ஆனால் அவருடைய தமிழ் இலக்கியம், கட்சி எல்லைகளைத் தாண்டி தமிழ் நெஞ்சங்களையெல்லாம் ஈர்த்து அரசோச்சுகிறது.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாது இந்திய அரங்கிலும், ஏன் உலகநாடுகளிலும்கூட - பல இலக்கியவாதிகள் அரசியலில் தலைமைப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். (முன்னாள் பாரதப் பிரதமர் நேருஜிகூட எழுத்தாளர் தான்) ஆனாலும், வேறு எவரும் தன் அரசியல் பிரச்சினைகளுக்கு மத்தியிலும், கலைஞரைப் போல - ஒரு தவமாக இலக்கியத்தைப் பேணி வளர்க்கவில்லை. அந்த அம்சத்தில் உலகத்திலேயே, தனி வரலாறு படைத்தவர் கலைஞர்தான்; கலைஞர் ஒருவர் மட்டுமே!

எனவே, அவருடைய இலக்கியத் தமிழை ரசிக்கும் இந்தத் தமிழ் நெஞ்சத்தின் ஓர் ஆவல் -

சிறந்த இலக்கியவாதி ஒருவரின் தலைமையில் ஒரு குழு அமைத்து கலைஞரின் இலக்கியத்திறன் மிக்க படைப்புகளை மட்டும் தனியாகத் தொகுக்க வேண்டும். அவருடைய எழுத்துக்களில் கலந்திருக்கும் 'நடப்பு அரசியல்' விஷயங்களைப் பிரித்துவிட்டு, இலக்கிய வலிமை பெற்ற பகுதிகளை மட்டும் தொகுக்கும் இலக்கியத்தெளிவுள்ளம் கொண்டவர்கள் அப்பணியை நிறைவேற்றினால், பிற்காலத் தமிழ்ச் சந்ததியருக்கு ஓர் அரிய தமிழ்ச்செல்வம் கிடைக்கும். மற்றவர்கள் அப்பணியைச் செய்ய முடியாமல் மலைத்து நின்றால், கலைஞரேதான் அதைச் செய்ய வேண்டும். அவரால் முடியும்!

- ***"உள்ளத்தைக் கிள்ளியவர்கள்"*** என்ற நூலிலிருந்து.




*"திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டத்தில், பாமணி உரத்தொழிற்சாலை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1971 அன்று தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறை மூலம் நிறுவப்பட்டுள்ள உரத்தொழிற்சாலை இதுமட்டுமேயாகும்.*

*இந்த தொழிற்சாலை திருவாரூரிலிருந்து 30 கிலோ மீட்டரில் அமைந்துள்ளது. இதில் போடப்பட்டுள்ள மூலதனம் ரூ.27.22 இலட்சம். இங்கு 124 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.92.02 இலட்சம் ஊதியமாக வழங்கப்படுகிறது.*

*1996-97இல் பாமணி உரத் தொழிற்சாலையின் உற்பத்தி 22,880 மெட்ரிக் டன் ஆகும்.*





★ **பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தீவிரமாகக் கண்காணித்துத் தடுக்கவேண்டும்;**

★ **ஆகஸ்டு 15-ந் தேதிக்குள் மாநிலத்தில் 50 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட வேண்டும்;**

★ **எல்லாத் தரப்பு மக்களின் ஒத்துழைப்புடன் மக்கள் இயக்கமாக மாற்றி சுதந்திரப் பொன்விழா ஆண்டு முடிவிற்குள் தீண்டாமையை அறவே நீக்க நடவடிக்கை !**

*சென்னை - தலைமைச் செயலக வளாகம் - நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் - காவல்துறை அதிகாரிகளின் இரண்டு நாள் மாநாடு 6-6-98 அன்று நிறைவுற்றது. நிறைவுரையாற்றிய பின், இம் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்களிடம் வழங்கினார். அவை வருமாறு:*

சிறைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்துவது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இதற்கு வேண்டிய கூடுதல் நிதியை அளிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

மதில் சுவர்களை உயர்த்துதல், மதில் சுவர் மீது மின்கம்பி அமைத்தல், பார்வையாளர்கள் அறைகளை மேம்படுத்துதல், குளோஸ் சர்க்யூட் டிவி.(Close Circuit T.V.)அமைத்தல் ஆகிய பணிகள் விரைந்து செய்யப்படும். பாளையங்கோட்டை சிறையை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

குற்றங்களைக் கண்காணிக்கும் பணி தீவிரப்படுத்தப்படும். இதில் மாவட்ட கண்காணிப்பாளர்களின் பணி மாதந்தோறும் ஆய்வு செய்யப்படும். கணிப்பொறியில் குற்றவாளிகளைப் பற்றிய அனைத்து தகவல்களும் (Data Base) பதிந்து வைக்க நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டது.

### காவல்துறையை நவீனப்படுத்த ஆய்வு

காவல்துறையை நவீனப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டன.

குற்ற விவரங்கள் (Crime Data) வாகனங்கள் பற்றிய விவரங்கள், குற்றப்பத்திரிகை விவரங்கள் (Data on Punishment Role) ஆகியவற்றை உடனுக்குடன் கணிப்பொறி மூலமாகப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

சென்ற ஆண்டு 1,500 வாக்கி-டாக்கி கருவிகள், 840 நுண்ணலைக் கருவிகள் 6 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்டன. இவை பயனுள்ளவையாக இருப்பதால், மேலும் இவற்றைத் தேவையான அளவு வாங்க இந்த ஆண்டு நிதிஒதுக்கீடு செய்யப்படும்.

காவலர்களுக்கான வீடுகள் கட்டும் பணி ஆய்வு செய்யப்பட்டது. இப்பணிகளையும், காவலர் வீடுகளை பழுது பார்க்கும் பணிகளையும் விரைந்து செய்யும்படியும், இந்த ஆண்டு 4,000 வீடுகள் கட்டி முடிக்கவேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது.

காவலர் குடியிருப்புகளில் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்குவதிலும், மேம்படுத்துவதிலும் சிறப்புக் கவனம் செலுத்தும்படி காவல்துறை உயர் அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டனர்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத்தீவிரமாகக் கண்காணித்து இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

### கள்ளச்சாராயத்தை முழுமையாக ஒழிக்க நடவடிக்கை

கள்ளச்சாராயத்தை முழுமையாக ஒழிக்க அனைத்து மாவட்டத்திலும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. முதல் கட்டமாக செங்கல்பட்டு காவல் மாவட்டம் முழுவதும் கள்ளச்சாராயம் இல்லாத மாவட்டமாக மாற்றிட D.I.G., S.P. முதலிய அலுவலர்கள் முயற்சி செய்து வெற்றியடைய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

காவல்நிலைய சாவுகள் இல்லை என்ற நிலை தொடர வேண்டும்.

காவல்நிலையங்களை, காவல்துறை கண்காணிப்பாளர்கள் மாதந்தோறும் ஆய்வு செய்து பணிகளை மேம்படுத்த வேண்டும். மேலும், அடிக்கடி காவல் நிலையங்களுக்குச் சென்று (visit) அப்பகுதியில் உள்ள பிரச்சினைகளைக் கண்டறிந்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.

சில கிராமங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு குவளை என்றும், மற்றவர்களுக்கு ஒரு குவளை என்றும் இரு குவளைகள் வைத்து டீ கடைகளில் தேனீர் கொடுக்கும் பழக்கம் இருந்து வருகிறது.

சுதந்திரப் பொன்விழா ஆண்டில் இக்கொடிய பழக்கம் நீக்கப்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் எடுக்கவேண்டும் என்றும், இக்கொடிய பழக்கத்தை அகற்றிட இதை ஒரு மக்கள் இயக்கமாக எல்லாத் தரப்பு மக்கள் ஒத்துழைப்புடனும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செய்திடவேண்டும் என்றும், தேவைப்படும் இடங்களில் சட்டத்தின் துணையுடன் இக்கொடிய பழக்கத்தை நீக்கிட மாவட்ட ஆட்சித்தலைவர்கள் நடவடிக்கை எடுத்து இந்தப் பொன்விழா ஆண்டு முடிவதற்குள் இக்கொடிய பழக்கத்தை அறவே நீக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

தொகுப்பு வீடுகளுக்குப் பயனாளிகள் தேர்வு செய்வதில் சில ஊராட்சிகளில் சில தவறுகள் நடப்பதாக மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

பயனாளிகள் தேர்வு செய்வதில் தவறுகள் நடக்காமல் தடுத்திட பயனாளிகளுக்கு பட்டா கிடைத்த முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது.

**தொகுப்பு விடுகள் வழங்குவதில் தவறு நடந்தால் நடவடிக்கை**

தொகுப்பு வீடுகள், சமுதாயத்தில் மிகவும் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்படுகிறது. அதில் எந்தத் தவறும் நடப்பதற்கு அனுமதிக்கக்கூடாது என்றும், இதில் தவறு செய்யும் ஊராட்சிகள் மீது தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தின்படி மாவட்ட ஆட்சித்தலைவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சாதி மற்றும் மதக் கலவரங்களினால் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு ரூபாய் இரண்டு இலட்சம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

இது மாநில நிதி ஒதுக்கத்திலிருந்து செய்யப்படவேண்டிய பணி என்ற அடிப்படையிலும், உடனடியாக நிவாரணத் தொகை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்த்திடவும் மாநில நிதி ஒதுக்கீட்டிலிருந்து (Budget allocations) நிதி ஒதுக்கீடு செய்யப்படுமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

கிராம சபைகள், பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலே முக்கியமான இடத்தைப் பெறுகிறது. கிராம சபை, அந்தக் கிராமத்திலுள்ள வாக்காளர்கள் கூடி, ஊரின் பொதுத் தேவைகள் பற்றி விவாதித்து செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் பற்றி முடிவெடுக்க வேண்டிய நிலையில் உள்ளது.

**கிராம சபை கூட்டம் நடத்த விதிகளில் திருத்தம்**

மாநாட்டில், கிராம சபைகள் கூட்டம் நடத்துவதற்குப் போதிய "கோரம்" வருவதில்லை; அதாவது, மொத்த வாக்காளர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வருவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதைக் கணக்கில் கொண்டு, சென்ற கூட்டத்தொடரில் சட்டப்பேரவையில், கொண்டுவரப்பட்டுள்ள திருத்தத்தின் மூலம், மொத்த வாக்காளர்களில் 10 சதவிகிதத்தினர் கிராம சபைக்கு வந்தாலே கூட்டம் நடத்தலாம் என்ற வகையிலே விதிகளில் திருத்தம் செய்ய வழி செய்யப்பட்டுள்ளது.

கிராம சபைக் கூட்டங்கள் கூட்டுவதை செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதை, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்**

ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் அனைத்திற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விரைவில் வழங்கப்பட வேண்டும் என்று அரசு கருதுகிறது.

ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட மொத்தம் 3,032 குடியிருப்புகளில், ஏற்கெனவே 465 குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 1998-99ஆண்டு மேலும் 750 ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு ரூ.38 கோடி செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட மீதமுள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் இரண்டாண்டுகளுக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தப்படும்.

மாவட்டங்களில் போதுமான பொறியாளர்கள் இல்லாமையால், குடிநீர் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளதாக சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குறிப்பிட்டனர். இப்பிரச்சினைத் தீர்க்கும் பொருட்டு 100 உதவிப் பொறியாளர்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நேரடியாகத் தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டது.

பம்மல், அனகாபுத்தூர், நாகல்கேணி ஆகிய பகுதிகளில் தற்போது 6 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிதண்ணீர் வழங்கப்படுவதாக மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

*"இப்போது, இங்கே இந்த மேடையிலே நான் அமர்ந்து, உங்களிடையே உரையாற்றுகின்ற நேரத்தில், இந்திய மார்க்சிஸ்ட் கட்சியின் தலைமையகத்தில் இருந்து ஒரு கடிதம் வந்தது. யாரைப்பற்றி என்று நான் குறிப்பிட விரும்பவில்லை. இதுகுறித்து தலைமைச் செயலாளர் அவர்கள் அவரைத் தனியாக அழைத்துப் பேசிக் கொள்ளலாம் என்று அதைச் சொல்லாமல் விட்டுவிடுகிறேன். ஒரு மாவட்டத்திலே புதிதாகப் பொறுப்பேற்றிருக்கிற ஒரு கலெக்டர், அலுவலகத்திற்குள் வருகின்றவர்களை, "வாடா, போடா" என்றும், ஒரளவுதான் தமிழைக் கற்றுக் கொண்டவராக இருந்ததால், "வாடா, போடா" என்று சொல்லியிருக்கலாம்; ஆனால் ஆங்கிலத்திலும் "கெட் ↓ அவுட்" என்று சொல்லியிருக்கிற அளவிற்கு ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் நடந்துகொண்டார் என்பதை ஒரு புகாராக, இது உரிய நேரம் என்று கருதி இந்திய மார்க்சிஸ்ட் கட்சியின் தலைமைச் செயலகத்திலிருந்து வந்த அந்தக் கடிதத்தை நான் படித்து அதை நம்முடைய தலைமைச் செயலாளரிடம் கொடுத்திருக்கிறேன். அவர், உரியவரை அழைத்து தனியாகப் பேசுவதாகச் சொல்லியிருக்கிறார். நாமா? நாமா? என்று யாரும் கேட்டுக்கொள்ளத் தேவையில்லை. அதைப் பேசியவர் உணர்வார் என்று கருதுகிறேன். அதைத் திருத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவருக்கும் இதைச் சொல்லத் தேவையில்லை. யாராவது அப்படிப்பட்ட மனப்பாங்கை வளர்த்துக் கொண்டிருந்தால், அதைவிட்டுவிட்டுத் தோழமை உணர்ச்சியோடு எல்லோரிடமும் பழகியாக வேண்டும்."*

**- கலைஞர்**

*(6-6-98 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆற்றிய நிறைவுரையிலிருந்து)*



*"இப்போதுள்ள விஞ்ஞான வளர்ச்சியில் எவ்வளவோ, முன்னேற்றங்கள் வந்துள்ளன. கார்டில் எழுதி, கவரில் எழுதி, இங்கேயிருந்து பதிலைப் பெற்று, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால் அதற்கு ஒருவார காலமாகும். அதனால், தொலைபேசியிலே நீங்கள் தொடர்பு கொண்டு என்ன செய்யவேண்டுமென்று கேட்டு அறிவுரைகளைப் பெறலாம். அவைகளைப் பெற்றவுடன், நடவடிக்கை எடுத்தால், போட்டி போட்டுக்கொண்டு ஒவ்வொரு கிராமமாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் பணியாற்றுகின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்தத் தீண்டாமைக் கொடுமையை ஒழிக்க முற்படுவீர்களேயானால், நாம் நம்முடைய காலத்திலே மாபெரும் சாதனை செய்தவர்களாக இருப்போம்."*

**- கலைஞர்**

*(6-6-98 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆற்றிய நிறைவுரையிலிருந்து)*

உடனடியாக பம்மல், அனகாபுத்தூர், நாகல்கேணி ஆகிய பகுதிகளில் லாரி மூலமாகக் குடிதண்ணீர் வழங்க முடிவு எடுக்கப்பட்டது.

நிரந்தரத் தீர்வு காண செம்பரம்பாக்கம் ஏரி பகுதியிலிருந்து குடிநீர் ஆதாரம் ஏற்படுத்திட ஆய்வு செய்யவும் முடிவெடுக்கப்பட்டது.

இந்தப் பகுதிகளுக்குக் குடிதண்ணீர் வழங்க என்ன செலவானாலும் உடனடியாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட ஆறுகளில் குடிநீர் ஆதாரங்கள் அமைந்துள்ளன. எந்தெந்தப் பகுதிகளில் குடிநீர் ஆதாரங்கள் உள்ளனவோ அதைச் சுற்றி ஒரு அரை கிலோ மீட்டர் தூரத்திற்கு மணல் குவாரி எடுக்கக் கூடாது என்று ஆணையிடப்படும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உரிய பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருப்பதால், பணிகள் பட்டியல் கேட்டு எல்லா உறுப்பினர்களுக்கும் கடிதம் அனுப்புவதென்று முடிவு செய்யப்பட்டது.

எப்பொழுது கடிதம் அனுப்பப்பட்டது, எப்பொழுது சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து பதில் வந்தது என்ற விவரங்களைத் தொகுத்து முதலமைச்சருக்கு அனுப்ப வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பணிகளை நிறைவேற்றுவதற்கு, மாவட்ட ஆட்சியருக்கும் பொறியாளர்களுக்கும் என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளனவோ, அவை அனைத்தும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கும் பொருந்தும்.

மாவட்ட ஆட்சியர்கள் தீவிர நடவடிக்கை எடுத்து 1997-98 வரையிலான அனைத்து நிலுவைப் பணிகளையும் 30-9-98க்குள் முடிக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர்கள் கள ஆய்வினை முனைப்போடு மேற்கொண்டு அனைத்து குடிநீர் மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகளையும் ஆய்வு செய்யவேண்டும். மேலும் நடப்பு ஆண்டில் மழைக் காலங்களில் பணியை செயல்படுத்துவதில் உள்ள சிரமங்களையும் கவனத்தில் கொண்டு அனைத்து நடப்பாண்டு திட்டப் பணிகளையும் திட்டமிட்டு குறிப்பிட்ட கால அட்டவணைப்படி இந்த நிதி ஆண்டிலேயே முடிக்கப்பட வேண்டும்.

சிறுசேமிப்பு இலக்கு இந்த ஆண்டு ரூபாய் 1,400 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 1,500 கோடி வசூலித்தால் மத்திய அரசிடமிருந்து மாநில அரசு சுமார் ரூபாய் 1,000 கோடி கடனாகப் பெறலாம். இந்தத் தொகை மாநிலத்தில் பல வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இதில் போட்டி மனப்பான்மையை வளர்த்துக் கொண்டு, சிறுசேமிப்புத் திட்டத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள இலக்கை எய்திட எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடைபெறும் நியாயவிலைக் கடைகளில் பணியாளர்கள் தவறு செய்தால் அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதில் காலதாமதம் மற்றும் சில நிர்வாகப் பிரச்சினைகள் இருப்பது பற்றி மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவு அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையின் அடிப்படையில், உடனடியாக தவறு செய்யும் பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**ஆகஸ்ட் 15-க்குள் 50 சமத்துவபுரங்கள்**

"சமத்துவபுரம்" மிகுந்த எதிர்பார்ப்புடன் அறிவிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். எனவே, இதன் அடிப்படைக் குறிக்கோளை உணர்ந்து இந்தத் திட்டத்தை இந்த ஆண்டில் வெற்றிகரமான செயலாக்கத்தின் மூலம் 1998 ஆகஸ்டு 15க்குள் 50 சமத்துவபுரங்கள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

வறுமைக் கோட்டுக்குக் கீழ்வாழும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு வீட்டுமனைகள் வழங்குவதோடு, பயனாளிகள் வீடுகள் கட்டுவதற்குத் தேவையான உதவிகளை வழங்கிடவும், அவர்கள் வீட்டுப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளை உருவாக்கிடவும் மாவட்ட ஆட்சியர் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

மூவலூர் மூதாட்டி நினைவு ஏழைப் பெண்கள் திருமணத்திற்காக 10,000 நிதியுதவித் திட்டத்தில் சிறு தவறும் நடக்காமல் எச்சரிக்கையாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பார்த்துக் கொள்வதோடு இதில் இடைத் தரகர்கள், தவறுகள் செய்யும் அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு மாவட்ட ஆட்சியர்கள் - காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. ★

# திருவாரூர் மாவட்டத்தில் பால் பெருக்குத்துறை

**ஆர். பாலகிருஷ்ணன், பிஎஸ்சி,**
துணைப் பதிவாளர் (பால்வளம்), திருவாரூர்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தீராவேட்கையைத் தீர்க்க வழிகோலுவதுதான் பால் பெருக்குத்துறை. வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டு, பட்டி தொட்டி எல்லாம் பால் உற்பத்தியைப் பெருக்கி, தரமான பாலுக்கு நிறைவான விலை என்ற கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது; வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்களின் வாழ்வில் ஒளி பிறக்கக் "கறவை மாடுகளைப் பேணுதல்" என்பதை மக்கள் மனதில் துணைத்தொழில் என்ற உணர்வைப் போக்கி, இது ஒரு தலையாய தொழில் என்ற பேருணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக அரசால் வகுக்கப்பட்ட செயல்திட்டங்கள் செயலாக்கம் பெற, பயனாளிகளைப் பயனுள்ள முறையில் அரசுத் திட்டங்கள் சென்றடைய வென்றே துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகம் திருவாரூரில் தொடங்கப்பட்டது.

"சோழநாடு சோறுடைத்து" என்ற மொழியை மெய்ப்பிக்கும் நஞ்சை மகள் கொஞ்சி விளையாடும், மனுநீதிச்சோழனின் தலைநகராம் திருவாரூரைத் தலைமை இடமாகக் கொண்டு, திருவாரூர் மாவட்டத்தைச் செயல் எல்லையாகக் கொண்டு திருவாரூர் துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகம் செயல்படுகிறது.



ஆலம் விழுதுகளாய் ஆயிரம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இம்மாவட்டத்தில் நிறைந்திருக்க வேண்டும்! - என்பது குறிக்கோள். இம்மாவட்டத்தில் 20 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது செயல்படுகின்றன.

இச்செயல் சீர்பெறக் காரணமானவர் - திருவாரூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்கி வைத்த திருவாளர் இராஜரெத்தினம் என்பார் ஆவார். இவருடைய செயல்திறன் மூலம் 47 கறவைக் களங்களை அமைத்து பால் உற்பத்தி செய்ய வழிவகுத்தார். மன்னார்குடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தைக் "காந்தியின் தொண்டன்" திருவாளர் சுவாமிநாத கொத்தனார் தொடங்கிவைத்தார்; அவரே 150 கறவைக் களங்களை அமைத்து, பால் உற்பத்திக்கு வித்திட்டார். இவ்வண்ணமே நன்னிலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 28 கறவை மையங்களையும், நீடாமங்கலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 77 கறவை மையங்களையும் எடமேலையூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 43 கறவை மையங்களையும் கொண்டு பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

மற்ற சங்கங்கள் 15 கறவைக் களங்களில் பால் எடுத்துவருகிறது. "பால் பெருக்கும் திட்டம்" என்றால், பெரியவர் "கோரியனை" மறக்க முடியாது. குஜராத்தில் அவர் கண்ட திட்டமோ வருவாய் கிராமத்திற்கு ஒரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என்ற "அமல் திட்டம்".

ஆனால் இங்கு பால் கூட்டுறவாளர்கள் தழுவி நின்றதோ பறந்து விரிந்த பல வருவாய்க் கிராமங்களின் பாலினைக் கொள்முதல் செய்ய ஆலமரம் போன்ற ஒரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம், ஏனெனில், எண்ணிக்கையில் 20 செயல்படும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள். ஆனால் சங்கங்கள் கொண்டுள்ள கறவைக் களங்களின் எண்ணிக்கை 360 ஆகும். 360 கறவைக்களங்களும் ஒவ்வொரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமாகச் செயல்படும் தன்னிறைவு உண்டு.

குடவாசல் ஒன்றியம், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், வலங்கைமான் ஒன்றியம், நன்னிலம் ஒன்றியம் ஆகியவற்றில் வருவாய்க் கிராமங்கள் வாரியாகப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" என்ற அடிகளை மெய்ப்பிக்கும் வகையில் தஞ்சாவூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் பால் உற்பத்தியாளர் நலன் மற்றும் நுகர்வோர் நலன் காத்து, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தரமான பாலைக் கொள்முதல் செய்து, தரமான பாலை விற்பனை செய்துவருகிறது. பால் உற்பத்தியாளர்களுக்கு வேண்டிய தீவனம், பசும்புல் கரணைகள், கால்நடை மருத்துவ வசதி, சினை ஊசிபோடுதல் போன்ற பணிகளையும் செய்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களைச் செயல் எல்லையாகக் கொண்டுள்ளது.

"கொள்வதும் மிகைகொளாது கொடுப்பதும் மிகைகொடாது" என்ற கம்பனின் வார்த்தைகளை நெஞ்சிலே நிறுத்தி, பால் உற்பத்தியாளர்களிடத்தில் தன்னிறைவை ஏற்படுத்தி, பொருளாதார மேம்பாடு அடைய தஞ்சாவூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் சீரிய பணி ஆற்றி வருகிறது. திருவாரூர் மாவட்டத்தில் சராசரியாக 10,000/- லிட்டர் பால் தினந்தோறும் தஞ்சாவூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. திருவாரூர் மாவட்டத்தில் நாள்தோறும் சராசரி பால் உற்பத்தி 23,000 லிட்டர் ஆகும்.



திருக்குவளைக்கு - கலைஞர் அவர்களின் அழைப்பிற்கிணங்க வந்து, அந்நாள் முதல்வர் திரு.எம்.பக்தவத்சலம் அவர்கள் திறந்துவைத்த தாய்சேய் நல விடுதி.



பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் எய்தும் நிகர லாபத்தில் 50 சதவிகிதம் மீண்டும் பால் வழங்கும் உறுப்பினர்களுக்குப் பிரித்து வழங்கப்படுகின்றன. இலாபத்தில் உறுப்பினர்கள் எடுத்துள்ள பங்கிற்கு இலாப ஈவுத்தொகை வழங்கப்படுகிறது. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஈட்டும் இலாபம் தனியாரைச் சென்றடையாது. சமதர்மச் சமுதாயத்தின் திறவுகோல் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என்றால் மிகையாகாது.

தனியார் பிடியில் இருந்து விடுபட்டு, பால் உற்பத்தியாளர்கள் நலன் காத்திட புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்திட வேண்டும். இப்பணிக்குத் தஞ்சாவூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மூன்று மேற்பார்வையாளர்களைத் தனிப்பட ஒதுக்கீடு செய்துள்ளது.

செயலற்ற சங்கங்கள் 18 உள்ளன. கலைத்தலில் உள்ள சங்கங்களின் எண்ணிக்கை 66 ஆகும். கலைத்தலில் உள்ள சங்கங்களைப் புதுப்பிக்கவும், செயலற்ற சங்கங்களைச் செயல்படுத்தவும், திருவாரூர் மாவட்டம் ஆறு சரகங்களாகப் பிரிக்கப்பட்டு, திருவாரூர், மன்னார்குடி திருத்துறைப்பூண்டி, நீடாமங்கலம், வலங்கைமான், நன்னிலம் ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு ஆறு முதுநிலை ஆய்வாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். துணைப்பதிவாளர் (பால்வளம்) திருவாரூர் அலுவலகம் நான்கு பிரிவு உதவியாளர்களையும், ஒரு கூட்டுறவு சார் பதிவாளரையும் கொண்டுள்ளது.

தட்டச்சர், ஈப்பு ஓட்டுநர், கண்காணிப்பாளர் பதவிகள் நிரப்பப்பட வேண்டும். மேற்கண்டுள்ள பணியாளர்களைக் களத்தில் இறக்கி வெண்மைப் புரட்சி கண்டிட இலக்கு நோக்கிச் செலுத்திடத் துணைப்பதிவாளர் (பால்வளம்) தலைமை அலுவலராக உள்ளார்.

இம்மாவட்டத்தில் பால் பெருக்குத்துறை மூலம் இவ்வலுவலகம் 1998 - 99 ஆம் ஆண்டில் 60,000 லிட்டர் அன்றாடப் பால் உற்பத்தி பெருக்கிட அனைத்து வியூகங்களையும் வகுத்து, பால் பெருக்குத்துறையின் சிறப்பு - ஆணையர் சென்னை - 51 அவர்களால் வழிகாட்டப்பட்டு, செவ்வனே முயற்சித்துவருகிறது.

'ஆவின்' பால், குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை பருகும் ஒரு சிறந்த உணவு. குழந்தை பிறக்கும்போது, தாய்ப்பால் உணவுப் பொருளாகிறது. ஆனால் பெரியோர்க்கு இறக்கும் வரையில் ஆவின் பால் தொடர்ந்து உணவுப் பொருளாகிறது என்பது உண்மைதானே!

பெருக்குவோம் பால் உற்பத்தியை!

நாடுவோம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை! •

---

திருவாரூர் மாவட்டம் : **தொழிற்சாலைகள்**

- தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகத்தின் (TNSC) நவீன அரிசி ஆலை - திருவாரூர்.
- தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகத்தின் நவீன அரிசி ஆலை - சுந்தரக்கோட்டை - மன்னார்குடி வட்டம்.
- நவீன அரிசி ஆலை - மன்னார்குடி
- ஆரூரான் சர்க்கரை ஆலை - வடபாதிமங்கலம்

திருவாரூர் மாவட்டம்:

# பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம்!

'டான்வா' திட்ட அங்கம் - 2

திருவாரூர் மாவட்டத்தில் 1995 - 96ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 25 - 45 வயது உள்ள திருமணமான சிறு/குறு பண்ணை மகளிருக்கு விவசாயப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன் விவரம் வருமாறு:



### இத்திட்டத்தின் நீண்ட கால நோக்கங்கள்

1) சிறு,குறு பண்ணைகளில் உணவு உற்பத்தியைப் பெருக்குதல்.

2) பண்ணை மகளிரின் ஆக்கப் பூர்வமான பங்கினை அறிந்து கொள்ளுதல்.

3) சிறு,குறு பண்ணைகளில் உற்பத்தியைப் பெருக்குவதில் பண்ணை மகளிரின் முழுத் திறனையும் பயன்படுத்துதல்.

### குறுகிய கால நோக்கங்கள்

★ பொருத்தமான விவசாயத் தொழில் நுட்பங்களையும், முறைகளையும் பண்ணை மகளிர் தேர்ந்தெடுக்கப் பயிற்சி அளித்தல்.

★ பயிற்சி பெற்ற பண்ணை மகளிர், பயிற்சி பெறாத பண்ணை மகளிருக்குப் பயிற்சி அளித்தல்.

★ நடைமுறையில் உள்ள விவசாய விரிவாக்கப் பணிகளைச் சிறு,குறு பண்ணை மகளிர் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை அதிகப்படுத்துதல்.

★ விவசாய விரிவாக்கப் பணிகளைத் திறமையாகப் பயன்படுத்த பண்ணை மகளிரைப் பயிற்றுவித்தல்.

★ வேளாண்மைத் துறையில் பெண் விரிவாக்க அலுவலர் எண்ணிக்கை அதிகப்படுத்துதல்.

### பண்ணை மகளிர் தேர்ந்தெடுக்கப்படுவதன் விதிமுறைகள்

★ சிறு/குறு பண்ணை மகளிர்.

★ திருமணம் ஆனவர்கள்.

★ வயது - 20 லிருந்து 45க்குள்.

★ சொந்தமாகவோ சாகுபடியிலோ சொந்தமாக நிலம் உள்ளவர்கள்.

★ கற்றுத்தரும் செயல்முறை விளக்கங்களைக் கடைப்பிடித்து பிறருக்கு எடுத்துச் சொல்லவும் திறமை உள்ளவர்கள்.

### கிராமப்புறப் பயிற்சி

ஒவ்வொரு கிராமப்புறப் பயிற்சியிலும் 25 பண்ணை மகளிருக்கு விவசாயம் 10 தொழில்நுட்பங்கள் தொடர்ந்து 5 நாட்களுக்குக் கற்றுத்தருவதுடன் செயல்முறை விளக்கங்களாகவும் செய்து காட்டப்படுகிறது.

### பண்ணை மகளிர் கருத்தரங்கு

4 கிராமப்புறப் பயிற்சிகள் முடிந்தவுடன் ஒரு பண்ணை மாதிரி கருத்தரங்கு நடத்தப்படுகிறது. இக்கருத்தரங்கில் பண்ணை மகளிர் ஒவ்வொருவரும் தங்கள் அனுபவங்களைக் கூறவும்,விவசாயம் தொடர்பான சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளவும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

### பண்ணை மகளிர் கருத்தரங்கு

4 கிராமப்புறப் பயிற்சிகள் முடிந்தவுடன் ஒரு பண்ணை மகளிர் கருத்தரங்கு நடத்தப்படுகிறது. இக்கருத்தரங்கில் பண்ணை மகளிர் ஒவ்வொருவரும் தங்கள் அனுபவங்களைக் கூறவும்,விவசாயம் தொடர்பான சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளவும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

### தொடர் நடவடிக்கைப் பணி

தொடர் நடவடிக்கைப் பணியில் கிராமப்புறப் பயிற்சி பெற்ற ஒவ்வொரு பண்ணை மகளிரும் 10 பண்ணை மகளிருக்குப் பயிற்சி அளிக்கின்றனர்.



### சிறப்புப் பயிற்சி

கிராமப்புறப் பயிற்சி பெற்ற பண்ணை மகளிரிலிருந்து அதிக ஆர்வமுள்ள பண்ணை மகளிர்களைத் தேர்வு செய்து கால்நடைத்துறை, தோட்டக்கலைத்துறை, விதைச்சான்றுத்துறை, விளைபொருள் விற்பனைத்துறை ஆகிய துறை நிபுணர்களைக்கொண்டு ஐந்து நாட்கள் பயிற்சியும், ஒரு நாள் சுற்றுலாவும் அழைத்துச்சென்று, பண்ணை மகளிருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பண்ணை மகளிர் பயிற்சித் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் –

- கிராமப்புறப் பயிற்சியில் - 375 கிராமப்புறப் பெண்களும்
- பண்ணை மகளிர் கருத்தரங்கில் - 375 கிராமப்புறப் பெண்களும்
- சிறப்புப் பயிற்சியில் - 90 கிராமப்புறப் பெண்களும்
- தொடர் நடவடிக்கைப் பயிற்சியில் - 4500 கிராமப்புறப் பெண்களும்

பயிற்சி பெற்றுப் பயன் அடைந்துள்ளனர்.

பண்ணை மகளிர் பயிற்சித் திட்டத்தின் மூலம் திருவாரூர் மாவட்டத்தில் நெற்பயிரில் எழுபது சதவிகிதம் கூடுதல் மகசூல் பெற்றுப் பயிற்சி பெற்ற பண்ணை மகளிர் பயனடைந்து உள்ளனர். ★

## திருவாரூர் மாவட்டம்:

காவிரி வடி நில, துணைக் கோட்டத்தில், திருவாரூர் மாவட்டத்தின் நன்னிலம், குடவாசல் வட்டங்கள் அடங்கும் பகுதியில் உள்ள 37,337 ஏக்கர் நிலங்கள் அரசலாறு, நாட்டாறு மற்றும் நண்டலாறு ஆகிய ஆறுகளின் மூலம் பாசனம் பெறுகின்றன.

திருவாரூர் மாவட்டத்திற்குட்பட்ட, பேரளம் துணைக்கோட்டத்தின் பராமரிப்பில் உள்ள ஆறுகள், வடிகால்கள் மற்றும் வாய்க்கால்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

ஆறுகள், வடிகால்களும் திருவாரூர் மாவட்டத்தில் அவை பயணம் செல்லும் தூரங்களும் பற்றிய விவரம் வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| அ. | அரசலாறு | : | 46 கி.மீ. |
| ஆ. | நாட்டாறு | : | 37 ” |
| இ. | நூலாறு | : | 18 ” |
| ஈ. | வாஞ்சியாறு | : | 20 ” |
| உ. | நண்டலாறு | : | 11 ” |
| ஊ. | தென்கோரையாறு | : | 12 ” |
| எ. | வடகோரையாறு | : | 11 ” |

- கடைசி மூன்றும் வடிகால்கள் ஆகும்.

பாசன வாய்க்கால்கள் : 98 எண்கள் 204.78 கி.மீ. ஆகும்.

மேற்கண்ட ஆறுகள், வடிகால்கள் மற்றும் வாய்க்கால்களில், நெய்வேலி காட்டாமணக்குச் செடிகள், காடுகள் போல வளர்ந்துள்ளதாலும், பாசன ஆதாரங்கள் நீண்ட பல ஆண்டுகளாகத் தூர்வாரிப் பராமரிக்கப்படாததாலும், சில சமூக விரோத சக்திகளின் ஆக்கிரமிப்புகளாலும், தூர்ந்து போய், விவசாயக் காலங்களில் சரிவர தண்ணீர் கிடைக்காததாலும் மழைக்காலங்களில் வெள்ள நீர் வடியாமலும்,



பயிர்கள் சேதமடைந்து, விவசாயிகள் இருவழிகளிலும் பாதிப்புக்குள்ளாகி நட்டமடைகிறது. இதைத் தவிர்க்க அரசு எடுத்த சீரிய முயற்சிகள் காரணமாக, திருவாரூர் மாவட்டத்தில், பேரளம் துணைக் கோட்டத்திற்கு உட்பட்ட ஆறுகள், வடிகால்கள் மற்றும் வாய்க்கால்களில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின், வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலமாகவும், பொதுப் பணித்துறையின், "இயந்திரங்களைக் கொண்டு தூர் அகற்றும் பணிகள்" மூலமாகவும், தூர் அகற்றிச் சீர் அமைக்கும் பணி, 1997-98 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. அவற்றில் 1.7.98 முதல் கீழ்க்கண்டவாறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

# காவிரித்தாயின் கால்படும் இடங்கள்



### வேலை வாய்ப்பு உறுதித்திட்டம்

பேரளம் துணைக்கோட்டத்தில் 18.60 கி.மீ. நீளமுள்ள, 6 வாய்க்கால்களில், 2291 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் வாயில் ரூ.10,28,000 மதிப்பீட்டில், தூர் அகற்றும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 88 கி.மீ. நீளமுள்ள 19 வாய்க்கால்களில் 7550 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் வாயில், ரூ.53,25,000 மதிப்பீட்டுப் பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளன.

மேலும் 34.30 கி.மீ. நீளமுள்ள 6 வாய்க்கால்களில் 2710 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற ரூ.19,82,000 மதிப்பீடுகள் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

மேலும் 62.70 நீளமுள்ள 13 வாய்க்கால்களில், 6105 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற ரூ.34,20 ,000 க்கு மதிப்பீடுகள் தயாரித்து, மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு பட்டியலும், ஒப்புதல் கிடைத்தவுடன் பணிகள் செய்து முடிக்கப்படும்.

இயந்திரங்கள் கொண்டு, பொதுப்பணித்துறையின் மூலம் தூர் அகற்றும் பணிகள் வருமாறு:

பேரளம் பிரிவில் 4.80 கி.மீட்டரில் ஆறுகளும் 27.80 கி.மீ. நீளத்தின் வடிகால்களும் 7.00 நீளத்திற்கு வாய்க்கால்களிலும் இயந்திரங்கள் கொண்டு, ரூ.65,90,000 மதிப்பீட்டில் தூர் அகற்றும் பணிகளுக்கு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, பணிகள் துவக்கப்பட உள்ளன. இதன் 14.860 ஏக்கர் நிலங்கள் முழுமையாகப் பாசன வசதி பெறுவதுடன் மழை, வெள்ளக்காலங்களில் பாதிப்புகள் மிகவும் குறைந்துவரும்.

இதுவரை முடிக்கப்பட்ட பணிகள் மூலம் வடிகால்கள், வாய்க்கால்களில், தூர் அகற்றி, அகலப்படுத்திக் கொடுத்துள்ளதால் விவசாயிகள் மிகவும் பயன் அடைந்துள்ளதால், அவர்கள் நேரிடையாகவும் ஊராட்சி மன்றங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றியும் தங்களது நன்றியையும் பாராட்டுக்களையும் அரசுக்குத் தெரிவித்துவருகின்றனர். ★

# கால்நடை மருத்துவக் கல்லூரியிலும் இந்த ஆண்டு முதல்

# கிராமப்புற மாணவர்களுக்குப் பதினைந்து சதவிகித இடஒதுக்கீடு

## கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் தலைமையகக் கட்டடத்தைத் திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் உரை

"தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் தலைமையகக் கட்டடத்தைத் திறந்துவைக்கின்ற அரிய வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த நல்ல விழாவிற்குத் தமிழக ஆளுநர் அவர்கள் தலைமையேற்று உரையாற்றியிருக்கின்றார். அவர் இந்த விழா நிகழ்ச்சிக்கு ஒப்புதல் அளித்து தலைமையேற்க வருகை தந்ததற்காகத் தமிழக அரசின் சார்பிலும், இந்த மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பிலும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தப் பல்கலைக்கழகம் 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20-ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டதாகும். இந்தப் பல்கலைக்கழகம் சென்னை மாநகரத்தில் தொடங்கி வைக்கப்பட்டபோது, அன்றைக்கு ஆளுநராக மேதகு அலெக்சாண்டர் அவர்கள் இருந்தார். இன்றைக்கு இந்தப் பல்கலைக்கழகத்தின் தலைமையகக் கட்டடத்தைத் திறந்து வைக்கின்ற நேரத்தில் நம்முடைய அம்மையார் செல்வி பாத்திமா பீவி அவர்கள் ஆளுநராக இருப்பது மிகமிகப் பொருத்த முடையதாகும்.

ஏனென்றால் நாட்டில் மத ஒற்றுமை தேவை என்று நாம் விரும்புகின்ற நேரத்தில், அன்றைக்குக் கிறித்தவ மதத்தைச் சேர்ந்த அலெக்சாண்டர் கவர்னராக இருந்தார். இன்றைக்கு இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த பெருமாட்டி பாத்திமா பீவி அவர்கள் தமிழக ஆளுநராக இருக்கின்றார். எப்போதுமே தமிழ்நாடு இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவரையும் சமத்துவமாகக் கருதுகின்ற ஒரு மாநிலம் என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டுகின்ற வகையில் இந்த இரு நிகழ்ச்சிகளும் இன்றைக்குக் காட்சி தருகின்றன.

### ஆசியாவிலேயே முதல் பல்கலைக்கழகம்

அன்றைய தினம இந்தப் பல்கலைக்கழகத்தைத் தொடங்கிவைத்தபோது ஆசியாவிலேயே கால்நடை மருத்துவத்திற்காக அமைக்கப்படுகின்ற முதல் பல்கலைக்கழகம் என்கின்ற சிறப்புச் செய்தி நாடெல்லாம் வெளியிடப்பட்டது. அத்தகைய சிறப்புக்குரிய இந்தப் பல்கலைக்கழகத்தை அதனுடைய தலைமையகத்தை மாதவரத்தில் திறந்துவைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். ஒருவேளை, மாடு - வரம் என்பதுதான் மாதவரம் என்று திரிந்து ஆயிற்றோ என்று எனக்கு விளங்கவில்லை. அத்தகைய மாதவரத்திலே இந்தப் பல்கலைக்கழகத்தின் தலைமையகம் உருவாகியிருப்பது எல்லா வகையிலும் சாலச் சிறப்புடைய ஒன்றாகும்.

சற்றொப்ப ஒரு கோடியே அறுபது இலட்சம் ரூபாயில் இந்த அழகான ரம்யமான கட்டடம் - நவீனமான கட்டடம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கட்டடத்தை உருவாக்கிய அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டில் 94-ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின் படி பசுமாடுகளுடைய எண்ணிக்கை 90 இலட்சம், எருமைகளுடைய எண்ணிக்கை 29 இலட்சம், செம்மறியாடுகளுடைய எண்ணிக்கை 56 இலட்சம், வெள்ளாடுகளின் எண்ணிக்கை 58 இலட்சம், பன்றிகளின் எண்ணிக்கை 6 இலட்சம், கோழிகளின் எண்ணிக்கை 3 கோடியே 70 இலட்சம். தொடர்ந்து அந்த எண்ணிக்கை வளர்ந்து வருகின்றது. இவ்வாறு வளர்ந்துவருகின்ற கால்நடைகள் மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்வதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

இங்கே அமைச்சர் பேசும்போது, கால்நடைகள் மீது நான் கொண்டுள்ள கருணையின் காரணமாக இந்த மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டதாகக் குறிப்பிட்டார். அதில் ஒரு பாதிதான் உண்மை. ஒரு பாதி உண்மையல்ல. கால்நடைகளை வளர்ப்பதற்காகவும், கால்நடைகளுக்கு வருகின்ற நோய்களைத் தீர்ப்பதற்காகவும் மருத்துவப் பல்கலைக்கழகம் என்றாலும்கூட, அவைகளை வளர்த்து மக்களுக்கு உணவாக்கிக் கொள்வதற்காகவும் அதற்கான அறிவுபூர்வமான ஆராய்ச்சிகளைச் செய்வதற்காகவும், அவைகளை மேலும் மேலும் எப்படி ஊட்டமாக வளர்க்கலாம் என்பதற்காக அப்படி வளர்த்து எப்படிச் சாப்பிடலாம் என்பதற்காகவும்தான் இந்தப் பல்கலைக்கழகம் தன்னுடைய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

### மனிதன் வாழ்வதற்கு !...

உலகத்தில் ஜீவகாருண்யத்தைப் பற்றிப் பேசும்போது, அதிலே முழுமையாக நாம் நம்மை ஈடுபடுத்திக் கொண்டு விடமுடியாது. ஏனென்றால் உலகத்தின் இயல்பே ஒரு ஜீவனை வதைத்துத்தான் இன்னொரு ஜீவன் வாழ வேண்டியிருக்கின்றது. மனிதர்களே கூட மனிதர்களை அடிக்கின்ற காலமிது. ஆனால், ஒரு உயிரைக் கொன்று இன்னொரு உயிர் வாழவேண்டிய தவிர்க்கமுடியாத நிலை இருக்கின்றது. உயிர்களை வதைக்கக் கூடாது, கொல்லக்கூடாது என்று வள்ளுவர் காலத்திலிருந்து போதிக்கப்படுகின்ற ஒரு அறிவுரை, அன்புரை என்றாலும் கூட மனிதன் வாழ்வதற்குத் தாவரங்கள் மாத்திரம் போதுமானதாக இல்லை. மனிதன் தாவரங்களோடு நின்றுவிடக்கூடாதா ? காய்கறிகளோடு நின்றுவிடக்கூடாதா ? என்ற இந்தக் கேள்வி எழாமல் இல்லை.

இங்கே வந்திருக்கின்ற அமைச்சர்களிலேயே மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வீராசாமி சைவம்தான். ஆனால் பக்கத்தில் இருக்கின்ற அமைச்சர்கள் தமிழ்க்குடிமகனோ, சுந்தரமோ அல்லது செங்குட்டுவனோ, நானோகூட சைவர்கள் அல்ல. வீணாக நாங்கள் மிருகங்கள் மீது அன்பு கொண்டவர்கள், கருணை கொண்டவர்கள் என்றெல்லாம் சொல்லி மக்களை ஏமாற்ற நான் விரும்பவில்லை.

ஒருமுறை ஒரு பெரியமனிதருக்கும், எனக்கும் ஒரு தர்க்கமே நடந்தது. அப்போது நான் பதினைந்து அல்லது பதினாறு வயது மாணவன். அந்த மகான் அன்பு என்பதைப் பற்றி உரையாற்ற

ஒரு மண்டபத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அப்போது அவர் சொன்னார்: "ஆண்டவன் உயிர்களைக் கொன்று தின்பதற்காக உயிர்களைப் படைக்கவில்லை" என்று சொன்னார். அப்படி சொன்னபோது நான் கேட்டேன். "அப்படியானால் ஆண்டவன் சிங்கத்திற்காக, புலிக்காக எந்த உயிரைப் படைத்தார் ?" என்று கேட்டேன். இதெல்லாம் விதண்டாவாதம் என்று பதில் வந்ததே தவிர, சரியான பதில் அந்த மகானிடமிருந்து எனக்குக் கிடைக்கவில்லை.

மகான் தொடர்ந்து பேசும்போது, இன்னொன்றைச் சொன்னார். "காய்கறிகளைத் தின்றால்கூட பாவமல்லவா என்று கருணாநிதியைப் போன்ற குதர்க்கவாதிகள் கேட்கக்கூடும். ஏனென்றால் மரங்களுக்கும் உயிர் இருக்கிறதே, அதை ஒடித்துச் சாப்பிடலாமா என்று கேட்பார்கள். முருங்கைக்காயைப் பறித்தால் மரம் சாவதில்லை. மாங்காயைப் பறித்தால் மரம் சாவதில்லை. எனேவே இது பாவமில்லை" என்று சொன்னார். நான் அப்போது மாணவப் பருவம் - துடிப்பான பருவம். நான் எழுந்து கேட்டேன். "கீரைத்தண்டை அடியோடு பிடுங்கி சாம்பார் வைக்கிறார்களே, அப்போது என்ன சாகிறது ?" என்று கேட்டேன். எனவே, உலகத்தில் உயிர்வாழ, மனித சமுதாயம் தனக்குக் கீழாக உள்ள கால்நடைச் சமுதாயத்தைத் தின்றுதான் வாழ வேண்டியிருக்கின்றது.

### நாட்டின் பொருளாதார வளமும் கால்நடைகளும்

ஒரு நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதார வளம் இவைகளெல்லாம்கூட கால்நடைகளைப் பொருத்தே இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இங்கே எனக்குத் தரப்பட்ட இந்தப் பல்கலைக்கழகத்தினுடைய குறிப்பிலே கூட, 89 ஆம் ஆண்டு இறைச்சி உற்பத்தி 3.33 இலட்சம் டன். 97,98 ஆம் ஆண்டு இது 4.4 இலட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன அர்த்தம் ? இந்த இறைச்சி எங்கிருந்து வந்தது ? இறைச்சி என்று தனியாக ஒரு பொருளா ? கற்கண்டு போல, சர்க்கரை போல ? அல்ல. ஆகாயத்தில் இருந்து குதித்த பொருளா ? அல்ல. இறைச்சி என்பது மாட்டிலிருந்து, ஆட்டிலிருந்து எடுக்கப்பட்டதுதான். அந்த உயிர் கொல்லப்பட்டால்தான் இறைச்சி கிடைக்கும். அந்த இறைச்சி கிடைத்தால்தான் பல உயிர்கள் வாழ முடியும். அப்படி வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால்தான் ஒரு நாட்டின் பொருளாதாரமே இந்த இறைச்சியின் வாயிலாக வளம் பெற முடிகிறது. வலுப்பெற முடிகிறது.

மீன் உற்பத்தி கூட 89 ஆம் ஆண்டில் 3.61 இலட்சம் டன்னாக இருந்தது 97-98 ஆம் ஆண்டில் 4.49 இலட்சம் டன்னாக அதிகரித்திருக்கிறது என்றெல்லாம் எனக்குத் தரப்பட்ட குறிப்புகள் கூறுகின்றன.

இவைகளெல்லாம் மற்ற உயிர்களைக் கொன்று தின்று அதன் மூலமாக வாழக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதற்காக, ஒரு நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு இவைகளெல்லாம் தேவை என்பதற்காகத்தான் தரப்பட்டுள்ள குறிப்புகள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இந்தப் பல்கலைக்கழகத்தைப் பொருத்தவரையில் இந்த அரசின் சார்பில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மாத்திரம் வெளிநாடுகளில் இத்தகைய பயிற்சிகளைப் பெறுவதற்குப் பதினான்கு தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆய்வுப் பயணத்தை மேற்கொள்ள அரசால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றார்கள். ஐதராபாத்திலுள்ள தேசிய வேளாண் ஆராய்ச்சி மற்றும் மேலாண்மைக் கழகத்தில் 30 கலைப்புல உறுப்பினர்கள் இந்த அரசின் உதவியால் பயிற்சி பெற்றிருக்கின்றார்கள். அத்துடன் கணிப்பொறியை இயக்குவதற்கும் நானூற்று ஐம்பது அலுவலர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த அரசைப் பொருத்தவரையில் இங்கே நண்பர்கள் பேசினார்கள்; அதிலும் குறிப்பாகச் சட்டமன்ற உறுப்பினர் தண்டாடு தீர்ந்தால் போதும் என்ற வகையில் ஒரு கோரிக்கையை வைத்துவிட்டு நிம்மதியாகப் போய் உட்கார்ந்துவிட்டார். ஆனால்



சென்னை - மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சிங்காரவேலர் சிலையை 11.6.98 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்தார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரும் ஏராளமான பொதுமக்களும் இவ்விழாவில் பங்கேற்றனர்.



இந்த அரசைப் பொருத்தவரையில் தமிழ்நாட்டில் கடந்த காலத்திலும் சரி, இப்போது இந்த இரண்டாண்டு காலத்திலும் சரி; எத்தகைய திருப்புமுனைகளை உருவாக்கியிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

### மாணவர்களின் கோரிக்கை ஏற்பு!

பட்டதாரிகளே இல்லாத குடும்பத்தில் இருந்து வருகின்ற மாணவர்கள் தொழிற் கல்லூரியில் - அது மருத்துவக் கல்லூரியானாலும் அல்லது இஞ்சினியரிங் கல்லூரியானாலும், வேளாண் கல்லூரியாக இருந்தாலும் எந்தத் தொழிற் கல்லூரியானாலும் அல்லது இந்தக் கால்நடை மருத்துவமாக இருந்தாலும், ஒவ்வொன்றிலும் பட்டதாரிகளே இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த பத்து முதல் நிலை மாணவர்கள் வருவார்களேயானால் அவர்களுக்கு இலவசமாகவே தொழிற்கல்வி முழுமையாக வழங்குகின்ற திட்டத்தை 96-ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி வருகின்ற அரசு இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் இந்த அரசு ஒன்றுதான் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. இந்தத் திட்டத்திற்குக் கால்நடை மருத்துவக் கல்விக்குத் தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு மாணவனுக்கும், ஆண்டுக்கு 16 ஆயிரத்து 362 ரூபாய் வழங்கப்படுகிறது என்பதையும் நான் கூற விரும்புகின்றேன்.

அது மாத்திரம் அல்ல; நகர்ப்புறத்தில் இருக்கின்ற மாணவர்களுக்காக மாத்திரம் அல்லாமல், கிராமப்புறத்தில் இருக்கின்ற மாணவர்களையும் முன்னேற்றும் நடவடிக்கையாகக் கடந்த ஆண்டு பொறியியல் கல்லூரியில் கிராமப்புற மாணவர்களுக்கென்று பதினைந்து சதவிகிதம் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு அதை மேலும் விரிவாக்கி இன்ஜினியரிங் கல்லூரி மாத்திரம் அல்ல, மருத்துவக் கல்லூரி, பல் மருத்துவம், கால்நடை மருத்துவம், சித்த மருத்துவம், சட்டக் கல்லூரி, வேளாண்மை ஆகிய மற்ற தொழில் கல்விகளிலும் விரிவுபடுத்திட இந்த ஆண்டு முதல் இந்த அரசு ஆணையிட்டிருக்கிறது என்பதையும் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதன் பயனாக இந்த ஆண்டு முதல் பதினைந்து சதவிகிதம் கிராமப்புற மாணவர்கள் இந்தப் பல்கலைக் கழகத்திலும் சேர்க்கப்படுவார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கால்நடை மருத்துவக் கல்லூரியைப் பொருத்த வரையில் கல்விக்குரிய பயிற்சிக் கட்டணம் ஒரு பருவத்திற்கு 1,500 ரூபாய் என்றிருந்தது. இதைக் குறைக்கவேண்டுமென்று மாணவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று அந்தத் தொகையை 26.9.97 முதல் ஆயிரம் ரூபாயாக இந்த அரசு குறைத்திருக்கிறது என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ரூ.25 இலட்சம் வைப்புநிதியில் பட்டுக்கோட்டை அழகிரி அறக்கட்டளை

பட்டுக்கோட்டை அழகிரி அறக்கட்டளை உங்களுக்குத் தெரியும். பட்டுக்கோட்டை அழகிரி பெயரால், பெரியார் பெயரால், அண்ணா பெயரால், காமராஜர் பெயரால் பல பேருந்துகளுக்குப் பெயர் வைக்கப்பட்டு, அவைகளெல்லாம் அகற்றப்பட்டால் தமிழ்நாட்டில் குமுறி எழுந்துள்ள சாதிக் கலவரங்கள் நிற்கும் என்று அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தில் எடுத்த முடிவுக்கு இணங்க, அவ்வாறு அகற்றப்பட்ட பெயர்களில் ஒன்று பட்டுக்கோட்டை அழகிரியின் பெயர். அப்படி அந்தப் பெயர் பேருந்து போக்குவரத்துக் கழகத்திலிருந்து அகற்றப்பட்டாலும் அதற்கு ஒரு அறக்கட்டளை உருவாக்கப்பட்டு "பட்டுக்கோட்டை அழகிரி அறக்கட்டளை" என்ற பெயரால் 25 இலட்சம் ரூபாய் வைப்புநிதியை ஏற்படுத்தியுள்ளது இந்த அரசு.

திருவாரூர் மாவட்டம்:

## திருவாரூர் மாவட்டத்தில் தீவிர போலியோ சொட்டு மருந்து திட்டம்

7.12.98 அன்று நடைபெற்ற முகாம் மூலம் உதவி பெற்ற பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை (சதவீதத்தில்)

| | | |
|---|---|---|
| நகர்ப்புறம் | - | 98.7% |
| கிராமப்புறம் | - | 98.5% |

18.1.98 அன்று நடைபெற்ற முகாம்களில்

| | | |
|---|---|---|
| நகர்ப்புறத்தில் | - | 100.6% |
| கிராமப்புறத்தில் | - | 103.7% |

இந்தத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தில் பயிலும் சிறந்த மாணவர்களுக்கு கல்லூரிக் கட்டணம், பாடப்புத்தகம், விடுதிக் கட்டணம் ஆகியவற்றிற்கு உதவித் தொகை வழங்கப்படும் என்று ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் 1500-க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் படிக்கின்றார்கள். எனக்கு முன்னால் உரையாற்றியவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல் அதிலே 368 பேர் பெண்கள். 34 சதவிகிதம். பெண்களுக்கு 33 சதவிகிதத்திற்கு மேல் தரப்பட வேண்டும் என்ற அந்தக் கொள்கையை இந்தியாவிலேயே முதன் முதலாக நிறைவேற்றிய மாநிலம் தமிழ்நாடு. நிறைவேற்றிய அரசு இந்த அரசு.

கடந்த காலத்தில் 89-90 ஆம் ஆண்டிலேயே வேலைவாய்ப்புகளில் பள்ளி ஆசிரியர் பதவிகளில் பெண்களுக்கு 33 சதவிகிதம் தரப்பட வேண்டும் என்று ஆணையிட்ட அரசு இந்த அரசாகும். அதற்கொப்ப இந்தப் பல்கலைக் கழகத்தில் கூட இருக்கின்ற 1,500 மாணவ மாணவியர்களில் 34 சதவிகிதம் - அதாவது 368 மாணவியர் கல்வி பயின்று வருவது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். வரவேற்கத் தக்க ஒன்றாகும் என்பதை எடுத்துக்கூறி, இந்தப் பல்கலைக்கழகத்தினுடைய தலைமையகத்தைத் திறந்துவைத்ததில் மிகுந்த மகிழ்ச்சியுற்று, அதிலும் இந்த விழா நிகழ்ச்சிக்கு நம்முடைய கவர்னர் செல்வி பாத்திமா பீவி அம்மையார் அவர்கள் வருகை தந்து சிறப்பித்திருப்பது மேலும் இந்தத் திறப்பு விழாவிற்கு ஒரு சிகரம் வைத்ததைப் போல அமைந்திருக்கிறது என்பதை எடுத்துக்கூறி, அவர்களையும் அரசின் சார்பாக, உங்கள் சார்பாக மீண்டும் மீண்டும் வரவேற்கின்றேன்.

- இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாதவரத்தில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் தலைமையகக் கட்டடத்தைத் திறந்துவைத்து 26.5.98 அன்று உரை ஆற்றினார்.



# விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டடத் திறப்பு விழாவில் கலைஞர் உரை

**வி**ழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 8-6-98 அன்று திறந்துவைத்து 10,500 பயனாளிகளுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இவ்விழாவில் ஆற்றிய உரை வருமாறு:

"இன்று காலையில் இந்த மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி பகுதியில் நடைபெற்ற சர்க்கரை ஆலை திறப்பு விழா; அதையொட்டி பல்வேறு அரசு கட்டடங்கள் திறப்பு விழா நிகழ்ச்சிகள் ஏறத்தாழ 50 கோடி ரூபாய் செலவில் பல்லாயிரக் கணக்கான பயனாளிகளுக்கு உதவிகள் வழங்குகின்ற விழாவைத் தொடர்ந்து இதே மாவட்டத்தில் இந்த மாலை நேரத்தில் ஏறத்தாழ 37 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவிலான பல்வேறு நலத்திட்டப் பணிகள் மக்களுக்கு அர்ப்பணம் செய்யப்படுகின்ற நிகழ்ச்சிகள் இணைக்கப்பட்டு - இந்த நிகழ்ச்சியில் சிகரம் வைத்தது போல இந்த மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலகக் கட்டடமும் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்தை "மயன் மாளிகை போல இருக்கிறது" என்று சட்டப்பேரவை உறுப்பினர் த.மா.காவைச் சேர்ந்த சிவராஜ் குறிப்பிட்டார். நான் மயன்மாளிகையைப் பார்த்ததில்லை. அவர் மகாபாரதத்தில் பார்த்ததாகச் சொன்னார்.

ஏற்றம், எழுச்சி, எழில், வலிவு, பொலிவு இத்தனையும் குலுங்கத்தக்க வகையில் இந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மாளிகையை அமைத்துள்ள பொறியாளர்களுக்கும், பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகனுக்கும், இதற்காக அல்லும் பகலும் அரும்பாடுபட்ட போக்குவரத்துத்துறை தம்பி பொன்முடிக்கும் இந்த மாவட்டத்து மக்கள் நன்றிக்கடன் பட்டிருக்கிறார்கள்.

எனக்கு ஒரு பொறாமை. இந்த மாவட்டத்தின் அமைச்சர் பொன்முடி இந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை நம்முடைய தம்பி துரைமுருகன் சொன்னதைப் போலப் பதினொரு மாத காலத்தில் திட்டமிட்டு இவ்வளவு விரைவில் அமைத்திருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். இங்கே உரையாற்றிய சிவராஜ் உள்பட அனைவரும் குறிப்பிட்டார்கள். ஐந்தாண்டு காலத்திற்கு முன்பு அறிவிக்கப்பட்ட கட்டடம், இங்கே அமைக்கப்படும், அமைக்கப்படும் என்றெல்லாம் சொல்லப்பட்டு ஐந்தாண்டு காலம் இருந்த ஆட்சியிலே கும்பகர்ண தூக்கம் போட்டவர்கள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் இருந்துவிட்டு, இன்றைக்கு 2 ஆண்டுக்கால ஆட்சியிலே கடந்த ஆண்டு திட்டமிட்டு இந்த ஆண்டு இந்தக் கட்டடம் திறந்துவைக்கப்படுகின்றதென்றால், இதிலே எனக்கு என்ன பொறாமை என்று கேட்டால் - தஞ்சை மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து நாகை மாவட்டம் என்றும், தஞ்சை மாவட்டம் என்றும், நான் வளர்ந்த திருவாரூரைத் தலைநகரமாகக் கொண்டு திருவாரூர் மாவட்டம் என்றும் மூன்று மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டன.

### நாகை - திருவாரூர் மாவட்டத்திற்கு விரைவில் கட்டடம்

ஏற்கெனவே தஞ்சை மாவட்டத்திற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் இருக்கின்றது. நாகை மாவட்டத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு அங்கேயும் கட்டடம் கட்டப்படவில்லை. திருவாரூர் மாவட்டத்திற்கும் இடம் தேர்வு செய்யப்பட்டு கட்டடம் கட்டப்படவில்லை.

அங்கே ஒரு அமைச்சர், இந்த மூன்று மாவட்டங்களையும் ஆதிக்கம் செலுத்துகின்ற அமைச்சர் ஒருவர் இருக்கிறார். அவர்தான் தம்பி கோ.சி.மணி. அமைச்சர்கள்தான் என்னைக் கேட்டுக்கொள்வது வாடிக்கை. நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன். பொன்முடியைப் பார்த்தாவது தயவு செய்து திருவாரூர் மாவட்டத்திலும், நாகை மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடங்களை விரைவிலே அமைத்துத் தருவதற்குத் தம்பி கோ.சி.மணி முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று உங்களின் சார்பாக நான் அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

### ரூ.2 கோடியில் ஆயுதப்படை வளாகம்

எழிலார்ந்த ஒரு கட்டடத்தை மிகக் குறைவான மாதங்களில் திட்டமிட்டு அனைவரும் பாராட்டத்தக்க வகையில் அமைத்துள்ள இந்தப் பாங்கினை நான் மிகமிகப் பாராட்டுகிறேன். போற்றிப் புகழ்கிறேன். இன்றைக்கு 4 கோடி ரூபாய் செலவில் இந்தக் கட்டடம் அமைந்திருக்கிறது. இத்துடன் 21 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட விழுப்புரம் மாவட்ட நீதிபதி குடியிருப்புக் கட்டடமும் இன்றைக்குத் திறக்கப்பட்டுள்ளது. 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கா.குப்பம், ஆயுதப்படை வளாகமும் இன்றைக்குத் திறக்கப்படுகிறது. 25 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள திண்டிவனம் அரசு மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடமும் இன்றைக்குத் திறக்கப்படுகிறது.

30 இலட்ச ரூபாய் செலவில் அனந்தபுரம், தருவாட்சி, தும்பூர், மணம்பூண்டி, நல்லான்பிள்ளைபெற்றாள் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களின் திறப்புவிழாவும் இன்றைக்கு நடைபெற்றுள்ளது.



7 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள திண்டிவனம் ஆய்வு மாளிகை கட்டடத்தின் திறப்பு விழாவும், ஐந்து இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கீழ்ப்பெரும்பாக்கம் அரசு உயர்நிலைப்பள்ளி வகுப்பறைக் கட்டட திறப்பு விழா, 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசுக் கல்லூரி வகுப்பறைக் கட்டடத் திறப்புவிழா, 'தாட்கோ' மூலம் 45 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கப்பூர், பில்லூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள 2 ஆதிதிராவிட நலப்பள்ளிகளின் திறப்புவிழா, 27 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சாலமேடு பெண்கள் விடுதி கட்டடத் திறப்புவிழா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஏறத்தாழ ஆறரைக் கோடி ரூபாய் செலவில் செஞ்சி அனந்தபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கும் திட்டத்தின் தொடக்க விழா, 17 பள்ளிக் கட்டடங்கள், 27 நியாய விலைக்கடை கட்டடங்கள், 3 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், ஆதிராவிட மக்களுக்காக-பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக 96 தொகுப்பு வீடுகள், ஒரு நூலகக் கட்டடம், ஒரு பால் குளிரூட்டும் கட்டடம், 3 சத்துணவுக் கூடங்கள், 4 சமையல் அறைக் கட்டடங்கள் உள்பட 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 170 புதிய கட்டடங்கள் - ஆகமொத்தம் 15 கோடியே 94 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பல்வேறு துறைக்கான கட்டடங்கள் இந்த விழாவிலே திறந்துவைக்கப்பட்டுள்ளன.

### பத்தாயிரத்துக்கு மேல் பயனாளிகள்

ஏறத்தாழ பத்தாயிரத்து ஐநூறு பயனாளிகளுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் இன்றைக்கு வழங்கப்படுகின்றன. எல்லோருக்கும் வழங்க நேரமில்லை என்ற காரணத்தால் அடையாளமாகச் சிலருக்கு மட்டும் மேடையிலே வழங்கப்பட்டிருக்கிறது. விழா முடிந்த பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணைக்கு இணங்க மாவட்ட அதிகாரிகள், நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்கள் அவர்களுக்கெல்லாம் உரிய முறையில் அந்தப் பயனாளிகளுக்கு எல்லாம் அந்தத் திட்ட உதவிகளை வழங்கவிருக்கிறார்கள்.

ஒன்றை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். தம்பி பொன்முடி பேசும்போது, இந்த வட்டாரத்திற்காக, இந்த மாவட்டத்திற்காக இவ்வளவு காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொன்னார். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், காலையிலும் சரி, இப்போதும் சரி, தம்பி சம்பத் உள்பட அனைவரும் மேலும் கோரிக்கைகளை வைத்தாலும்கூட இதுவரையில் நிறைவேற்றப்பட்டுள்ள கோரிக்கைகள் எவையெவை என்பதை எண்ணிக் காட்டினார்கள். இதைத்தான் மனதிலே வைத்துக்கொண்டு பொன்முடி இங்கே சொன்னார். அரசின் சார்பில் இவ்வளவைச் செய்கிறார்கள். ஆனால் நாம்தான் சில நேரங்களில் நன்றி காட்டத் தவறிவிடுகிறோம் என்று குறிப்பிட்டார்.



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உலகச் சுற்றுப்புறச் சூழல் நாளினையொட்டி 5. 6. 98 அன்று தலைமைச் செயலக வளாகத்தில் சந்தன மரக்கன்று மற்றும் வேப்பமரக் கன்றினை நட்டார்.

### நான் இருக்கிறவரை பணிகள் தொடரும்

நான் ஒன்றைத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் நன்றி காட்டினாலும் சரி, காட்டாவிட்டாலும் சரி; என்னுடைய கடமை; நான் இருக்கின்ற வரையில் இந்தப் பணிகள் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்று மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐந்தாண்டுக் காலம் கட்டப்படாமலேயே கேட்பாரற்றுக் கிடந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை ஓராண்டுக் காலத்தில் கட்டி முடித்திருக்கிறோம். இதற்குப் பரிசு என்ன தெரியுமா? மாநிலங்களவையிலே இன்றும் வெளிநடப்புச் செய்கிறார்களாம், இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று.கேட்டால் சொல்வார்கள் - 'நாங்கள் ஐந்தாண்டுக் காலம் கட்டாமல் வைத்திருந்த கலெக்டர் ஆபீஸை ஏன் கட்டினாய்? ஆகவே இந்த ஆட்சியை டிஸ்மிஸ் செய்' - என்று இந்த புத்திசாலிகள் சொல்வார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

'நாங்கள் நினைக்கவே எடுத்துக்கொள்ளாத பேருந்து நிலையத்தைக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டுகிறார்களே, இவர்களுடைய ஆட்சி இருக்கலாமா? ஆகவே கலைக்க வேண்டும்' - என்று சொல்லுகிறார்களா? என்று எனக்குத் தெரியவில்லை. மக்களுக்காக அல்லும் பகலும் அனவரதமும் சிந்தித்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு ஆட்சி இந்த மாவட்டத்தில் மட்டும் அல்ல; பல்வேறு மாவட்டங்களில், நேற்று நான் திருச்சி சென்றேன். அங்கேயும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் தி.மு.க. சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல; த.மா.கா. சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், [illegible] எல்லாம் அங்கே பேசும் போது எவ்வளவு திட்டங்கள் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் திருச்சி மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை எல்லாம் தொகுத்துச் சொல்லிப் பாராட்டினார்கள்.

இவ்வளவு திட்டங்களும் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு ஆட்சியில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில குறைகள் இருக்கலாம். குறைகள் வேறு; குற்றங்கள் வேறு. குறைகள் இருந்தால் அதைத் திருத்திக் கொள்ளக்கூடிய ஆட்சி உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஆட்சி. குற்றங்கள் இருந்தால் அதைத் திருத்தவே முடியாது என்று எனக்குப் பட்டால், நானே பதவியை விட்டு விலகிவிடுவேன் என்ற அந்த உறுதியையும் நான் உங்களுக்குத் தருவேன்.

## சட்டம் ஒழுங்கு எங்கே கெட்டுவிட்டது?

குற்றங்கள் மலிந்த ஒரு ஆட்சியை ஐந்தாண்டுக் காலம் அனுபவித்த மக்கள் தமிழ்நாட்டு மக்கள். அந்த ஆட்சிக்கு உரியவர்களாக இருந்தவர்கள்தான் இன்று டெல்லிப் பட்டணத்தை வலியுறுத்திச் சொல்கிறார்கள், பார்! பார்! தமிழ்நாட்டிலே பாகிஸ்தான் ஊடுருவல் இருக்கிறதென்று. பாகிஸ்தான் ஊடுருவலாம்; சட்டம் ஒழுங்கு அமைதி கெட்டு விட்டதாம்.

பாகிஸ்தான் ஊடுருவல் எங்கே இருக்கிறதென்று வாஜ்பாய்க்குத் தெரியாதா? அது காஷ்மீரில் இருக்கிறதா? அல்லது விழுப்புரத்தில் இருக்கிறதா? என்று வாஜ்பாய்க்குத் தெரியாதா? தெரியும் அவருக்கு. காஷ்மீரிலே இல்லாத பாகிஸ்தான் ஊடுருவல் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்தில் இருக்கிறது. அதற்காகவே காஷ்மீரத்தில் தினம்தினம் களம் அமைகின்றது. ரத்தக்குளம் உருவாகிறது; இது காஷ்மீரத்தின் அன்றாட நடவடிக்கை!

அசாம் மாநிலம் கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு, ஒரு செய்தியைத் தந்தது. மாநிலத்திலுள்ள பல்வேறு பாலங்கள் எல்லாம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு, போக்குவரத்தே இல்லாத சூழ்நிலை அசாம் மாநிலத்தில் ஏற்பட்டிருக்கின்றது என்று.

அங்கெல்லாம் சட்டம் ஒழுங்கு அமைதி வாழ்கின்றதாம்! தமிழகத்திலே வாழவில்லையாம்! இங்கே மதுரையில் கள்ளழகர் வைகையிலே இறங்கும் திருவிழா, இலட்சக்கணக்கான மக்கள் புடைசூழ நடைபெறுகின்றது. எந்தவித அசம்பாவிதமும் இல்லை - ஆனால் இங்கே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாம். இங்கே திருக்கோவில் குடமுழுக்குகள் எல்லாம் தினந்தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எந்தவிதமான அசம்பாவிதமும் இல்லை. ஆனால் இங்கே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாம்!

பக்கத்திலுள்ள ஆந்திர மாநிலத்தில் ஊரடங்குச் சட்டம் ஏன்? அத்தகைய வன்முறை! மதக் கலவரம்! அதன் காரணமாக, ஊரடங்கு சட்டம் போட்டுக் கலவரத்தை அடக்க வேண்டிய சூழ்நிலை. 7 பேர் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகியுள்ளனர். பலபேர் காயமடைந்து இருக்கிறார்கள் என்ற செய்தி. ஆந்திராவின் ஒரு பகுதியே கலவரப் பகுதியாக இருக்கிறது. ஆனால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று கூறி, இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று எண்ணுகின்றவர்கள், குறிப்பாக எதைச் சொல்லுகிறார்கள் என்றால் - அவர்களையும் அறியாமல் மக்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்கள், தொடர்ச்சியாகக் கிடைத்துக் கொண்டிருப்பதைத் தடுக்கவேண்டும் என்ற தீய நோக்கத்தோடு அவர்கள் செயல்படுகிறார்கள்.

நான் உங்களைக் கேட்பதெல்லாம் - உங்களுக்கு, உங்கள் சந்ததியினருக்கு, உங்கள் வாரிசுதாரருக்கு, உங்கள் மக்களுக்கு, உங்களுடைய எதிர்காலத்திற்குத் தேவையான திட்டங்களைத் தருகின்ற ஒரு ஆட்சி நிலைக்க வேண்டுமா? வேண்டாமா? என்ற கேள்விக்கு நீங்களே விடை காணுங்கள்".

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார். ★


# கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்,

கும்பகோணம்.

**மற்ற வணிக வங்கிகளைவிட வைப்புத்தொகைகளுக்குக் கூடுதல் வட்டி வழங்குகிறோம்.**

நகைக்கடன்; அரிசி மில், மாவுமில், எண்ணெய் மில், ஆயத்த ஆடைகள் தயாரித்தல் போன்ற பண்ணை சாராக் கடன்களும் - வீடு கட்ட, வீடு வாங்க, மருத்துவச் செலவு, கல்விச் செலவு போன்றவற்றிற்கு அடமானக் கடன்களும் வழங்குகின்றோம்.

*கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியில் சேமிப்பீர்! பயனடைவீர்!*

எஸ். நீலமேகன் எம்.ஏ.,
தனி அலுவலர்






# சமத்துவபுரம் மூலம் பெரியார், அண்ணா, காமராசர், காயிதேமில்லத் விரும்பிய சமத்துவம் உருவாக்கப்படும் !

## திருச்சிராப்பள்ளி விழாவில் முதலமைச்சர் கலைஞர் உரை

*திருச்சிராப்பள்ளி-தெப்பக்குளம் பிஷப் ஹீபர் மேநிலைப்பள்ளி வளாகத்தில் 7.6.98 அன்று மாலை ரூ.40 கோடியே 37 இலட்சம் செலவிலான சமத்துவபுரம் திட்டத் தொடக்க விழா, புதிய கட்டடங்கள் திறப்பு விழா, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சிறப்புற நடந்தது.*

*மாண்புமிகு கூட்டுறவு - உணவுத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வைகுமூர்த்தி வரவேற்றுப் பேசினார்.*

*புதிய திட்டங்களைத் தொடங்கிவைத்தும், அடிக்கல் நாட்டியும், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசினார். அப்போது அவர் கூறியதாவது :-*

*" இங்கே நான் திறந்து வைத்துள்ள திட்டங்களின் அடிக்கற்கள் காணப் படுகின்றன. நான் மாவட்ட ஆட்சித் தலைவரையும், அதிகாரிகளையும் கேட்டுக்கொள்வது, இந்த அடிக்கற்களை அதற்கான உரிய இடங்களில் பதிய வைத்து, அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன என்பதை விரைவில் அறிவிக்கவேண்டும்.*

### சொன்னதைச் செய்வோம்

*'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்பது எனக்கு மட்டும் அல்ல; அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் உரிய சொற்றொடர் ஆகும். மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி ஆகியவற்றில் உள்ள மக்கள் பிரதிநிதிகளும் உச்சரிக்கக் கூடிய, உள்ளத்தில் பதிய வைத்து உச்சரிக்க கூடிய சொற்றொடர்தான் அது.*

*இவ்வளவு பெரிய திட்டங்கள் பற்றி விளம்பரப்படுத்தப் படவில்லை என்று முன்னாள் மத்திய மந்திரி முரசொலிமாறன் இங்கே கூறினார். விளம்பரப்படுத்துவது என்பது புகழை எடுத்துக்காட்ட அல்ல. இந்தத் தொகுதி மட்டும் அல்லாமல் இதைப்பார்த்துப் பிறதொகுதி மக்களுக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தவும், அதிகாரிகளும் தங்கள் பகுதிகளில் இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தவும் விளம்பரம் பயன்படும். பூக்கடைக்கும் விளம்பரம் தேவைப்படும் காலம் இது. முரசொலிமாறன் பேசியது போல் செய்தித்துறை கூர்மையாகக் கவனித்து பணியாற்றினால்தான் அரசுக்கு மட்டும் அல்ல, மக்களுக்கும் திட்டங்களின் செயல்பாடுகளைத் தெரிந்து கொள்ள முடியும். விளம்பரமும் தேவைதான்.*

ஒன்று படாதவரை யாருக்கும் நல்வாழ்வு இல்லை;
ஒன்றுபட்டுவிட்டால் நமக்கு இணை யாரும் இல்லை.

- காயிதேமில்லத்

### சமத்துவபுரம்

கல்லக்குடியிலும், பண்ணைப் பட்டியிலும் ஒவ்வொன்றும் ரூ.1 கோடி செலவினதாக சமத்துவபுரம் தொடங்கப்பட உள்ளது. இந்தியாவில் எங்கும் இல்லாத அளவு எல்லாப் பிரிவு மக்களும், எல்லா ஜாதி மக்களும் சமத்துவபுரத்தில் வீடுகளைப் பெற்றுச் சமமாக வாழ்வதுதான் சமத்துவபுரம்.

கடந்த ஆண்டு வேலூர் மாவட்டம் பொய்கை கிராமத்தில் சமத்துவபுரத்துக்கு அடிக்கல் நாட்டினேன். அதை இன்னும் சில நாட்களில் திறந்துவைக்க இருக்கிறேன். அங்கு வீடுகளைப் பெற ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், செட்டியார், முதலியார் போன்ற மேல்மட்ட ஜாதியினர், ஏன் - அய்யர் குடும்பத்தினரும் கேட்டுள்ளனர்.

பொதுவான தெரு, மின்விளக்குகள் ஆகியவை அரசு செலவிலேயே செய்து கொடுக்கப்படுகிறது. மேலும் அவரவருக்குத் தேவைப்படும் வசதிகளை, அவர்களே செய்துகொள்ளலாம். மின்சார மீட்டர் பொறுத்த ஆகும் செலவு ஆயிரம் ரூபாயையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்று நேற்று ஆணை பிறப்பித்து இருக்கிறேன்.

இதுபோன்ற சமத்துவபுரம் ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடங்கப்படும். இதனால் மதமோதல்கள் அகலும், ஜாதி வேற்றுமை ஒழிக்கப்படும். பெரியார், அண்ணா, காமராஜர், காயிதேமில்லத் ஆகியோர் விரும்பிய சமத்துவம் இதன் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைக் கல்லக்குடியிலும், பண்ணைப்பட்டியிலும் மாவட்ட ஆட்சித் தலைவரும், அதிகாரிகளும் விரைவில் முடிக்கவேண்டும்.

### திருமண உதவித் திட்டம்

8-வது படித்த ஏழைப் பெண்களுக்கு மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித்திட்டத்தின் கீழ் 1989-ல் ரூ.5 ஆயிரம் வழங்கினோம். இடையில் 5 ஆண்டுகள் அது கிடப்பில் போட்டப்பட்டது.

1996-ல் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு ரூ.5 ஆயிரம் உதவித்தொகையை ரூ.10 ஆயிரம் ஆக உயர்த்தி 61 ஆயிரம் பெண்களுக்கு வழங்கினோம்; இது பயனாளிகளுக்குப் போய்ச் சேரவேண்டும்.

நெல்லுக்கு இறைத்த நீர் சிறிது புல்லுக்கு போனால் பரவாயில்லை. ஆனால் முழுவதும் புல்லுக்கே பாய்ந்தால் பொறுத்துக் கொள்ள முடியாது. சில சமூக விரோதிகள், இடைத்தரகர்கள் அந்த உதவித்தொகையைத் தங்கள் பைக்கு மாற்ற எண்ணுகிறார்கள்.

அதை நான் மன்னித்தாலும், இறைவன் என்று ஒருவன் இருந்தால் மன்னிக்கமாட்டான். அது ஏழைகளுக்கு ஊற்றும் பால்; அதை எடுக்க நினைத்தால் அதுவே பாசானமாக மாறும்.

இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கும் வை.மூர்த்தி நல்ல முறையில் பணிகளைக் கவனித்துவருகிறார். அமைச்சர்கள் திரு.நேரு, திரு.செங்குட்டுவன் ஆகியோரும் இந்த மாவட்டத்தின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டு உள்ளனர்.

மாநகராட்சி மேயர் புனிதவல்லி பழனியாண்டி அவர்கள் ஏழை, எளியவர் வீடு கட்டுவதற்கு அப்ருவல் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்துள்ளார். அந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு நல்ல முடிவு அறிவிக்கப்படும்".

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறினார்.

### அமைச்சர்கள்

விழாவில் மாண்புமிகு முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன், மாண்புமிகு அமைச்சர்கள் திரு.ஆர்க்காடு வீராசாமி, திரு.கோ.சி.மணி, திரு.தமிழ்க்குடிமகன், திரு. செங்குட்டுவன், திரு.ரகுமான்கான், மாநகராட்சி மேயர் புனிதவல்லி பழனியாண்டி மற்றும் பலர் பேசினார்கள்.

### பாய்லர் ஆலைக்குக் கேடயம்

முன்னதாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சிறுசேமிப்புத் திட்டத்தில் அதிக வசூல் செய்ததற்காக பாய்லர் ஆலை கூட்டுறவுச் சங்கத்துக்குக் கேடயம் பரிசு வழங்கினார்.

சமத்துவபுரத்துக்காக பாய்லர் ஆலை சார்பில் ரூ.1 இலட்சத்துக் கான காசோலையை பாய்லர் ஆலை பொது மேலாளர் இராமநாதன் மாண்புமிகு முதலமைச்சரிடம் வழங்கினார். ●

விவேகம் என்னும் வெள்ளி முளைத்து,
சாதிப்பித்து எனும்
சனி தொலைந்தால்தான்
சமத்துவம் எனும் ஞாயிறு தோன்றும் !

- கலைஞர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906





தமிழரசு
16 – 30, 1998 ரூ.3





**நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.**

**அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.**

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98


## இந்த இதழில்...


| | | |
|---|---|---|
| ★ | நடப்பாய் வாழி காவிரி | 2 |
| ★ | ஆலயங்களின் பணிகள் - முதலமைச்சர் கலைஞர் | 9 |
| ★ | அறந்தழைக்க அரும்பணிகள் | 12 |
| ★ | குமாரசாமி ராஜா | 17 |
| ★ | கலைஞர் ஆட்சியில் விருதுநகர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் | 20 |
| ★ | அரசு ஆணைகள் | 30 |
| ★ | விழியில் இருட்டு மொழியில் வெளிச்சம் - கவிஞர் சாமிபழனியப்பன் | 33 |
| ★ | நினைவாற்றலைப் பெருக்கும் வல்லாரை - டாக்டர் பி.பாலசுப்பிரமணியம் | 36 |
| ★ | எங்கள் ஊர்ப் பிரச்சினை | 37 |
| ★ | காமராஜர் பற்றிக் கவியரசு கண்ணதாசன் | 42 |
| ★ | தொழில்துறையில் முதலிடம் பெறும் மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவோம் - முதலமைச்சர் கலைஞர் | 43 |
| ★ | ஆப்டிகல் பைபர்கேபிள் தொழிற்சாலை | 46 |


### திருக்குறள்

*மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்*
*வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.*

இல்லத்திற்குரிய பண்புகளுடன், பொருள் வளத்துக்குத் தக்கவாறு குடும்பம் நடத்துபவள், கணவனின் வாழ்வுக்குப் பெருந்துணையாவாள்.

கலைஞர் உரையிலிருந்து...


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2029
ஆனி - ஆடி
ஜூன் 16-30, 1998
மலர்: 28 இதழ்: 24


**முதல் பக்க அட்டையில்...**

தூர்வாரும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் பார்வையிடுதல்.

**கடைசிப் பக்க அட்டையில்...**

திருவேற்காடு கருமாரியம்மன் ஆலயத்தில் 75 இணைகளுக்குத் திருமணத்தை மாண்புமிகு முதலமைச்சர் நடத்தி வைத்தல்.





# நடப்பாய் வாழி காவிரி

## கவியரசர் இளந்தேவன்

பூவிரித்துப் பூ மணக்கும் கா விரித்து, தமிழகத்தின் புகழ் விரித்து நடந்து செல்லும் நதி நங்கை காவிரி. நீர் என்றால் அது காவிரி என்றும்; நிலம் என்றால் அது சோழமண்டலம் என்றும்; மன்னன் என்றால் அவன் சோழன் என்றும் எண்ணிப் போற்றுகிற மரபு, காவிரிக்கும், கவின்மிகு தமிழகத்திற்கும், ஆளும் அரசுக்கும் அமைந்த உறவை எடுத்துக் காட்டுவதாகும்.

*தண்ணீரும் காவிரியே!*
*தார்வேந்தன் சோழனே!*
*மண்ணாவதும்*
*சோழமண்டலமே!*

- என்னும் பழம்பாடல் - ஓடும் நதிக்கும், வாழும் நிலத்திற்கும், ஆளும் அரசுக்கும் அமைந்த நெருக்கத்தை சுருக்கமாகக் கூறும் சூத்திரம் போல் அமைந்துள்ளது.

### காவிரியா ? காவேரியா ?

கா(சோலை) விரித்துச் செல்வதால் காவிரி என்பது சரி. காவேரி என்பது ஏன் ? கானல் வரிப் பாடலில் இசைக்காக இளங்கோ 'காவேரி' என்று நீட்டினார். அந்த இன்னிசை ஒலியும் காவிரிக்குச் சொந்தமானது. பொன்னி என்னும் புனைபெயரும் காவிரிக்கு உண்டு. பொன் துகளை வாரிவருவதால் அப்பெயரா ? மண்ணைப் பொன்னாக்கும் மகிமையால் அப்பெயரா ? காரணம் எதுவாயினும் காவிரிக்குப் பொன் என்னும் பெயரும் - இருக்கிறது; இனிக்கிறது!

### காவியங்களில் காவிரி

சேரன் இளங்கோ இசைத்த செந்தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம். அந்தச் சேரமன்னர் குலக்கொழுந்து சோழ நாட்டுக் காவிரியின் புகழைச் சொல்லி மகிழ்ந்ததைப் போல் வேறு எந்தக் கவிஞனும் பாடிப் பரவசப்பட்டதில்லை. சிலப்பதிகாரத்தில் உள்ள முப்பது காதைகளில் பன்னிரு காதைகளில் காவிரி பேசப்படுகிறாள். மொத்தம் 21 இடங்களில் காவிரி பற்றிய குறிப்புகளைக் காணலாம். ஆற்றுவரிப் பாடல்களில் கோவலனும், மாதவியும் காவிரியின் புகழை மாற்றி மாற்றி இசைக்கிறார்கள்.

*மருங்கு வண்டு சிறந்தார்ப்ப*
*மணிப்பூ வாடை யது போர்த்துக்*
*கருங்கயற் கண் விழித்தொல்கி*
*நடந்தாய் வாழி காவிரி*



*பூவார் சோலை மயிலாடப்*
*புரிந்து குயில்கள் இசைபாடக்*
*காமர் மாலை அருகசைய*
*நடந்தாய் வாழி காவிரி*

இந்த வைரவரிகள் மாதவியின் காதல் வரிகளில் காணப்படும் காவிரியைப் பற்றிய வருணனை வரிகளாகும்.

'நடந்தாய் வாழி காவிரி' என்னும் தொடர் நாமறிந்த நற்றமிழ்த் தொடரல்லவா!

சிலம்போடு இணைவைத்து, இரட்டைக் காப்பியங்களில் ஒன்று - என்று பேசப்படும் மணிமேகலைக் காப்பியத்தில் 7 இடங்களில் காவிரியைக் குறித்த குறிப்புகளைக் காணலாம்.

வேதங்களில் மிகப் பழையதாகிய 'ரிக்' வேதத்தில் காவிரியைக் காணலாம். பிற்காலத்தெழுந்த இலக்கியங்களிலும், புராணங்களிலும் காவிரியின் புகழைக் கண்டு மகிழலாம்.

காவிரியின் புகழைப் பாடக் காவேரிப்புராணம் என்னும் தனிநூலே உள்ளது. வடமொழியில் எழுதப்பட்ட 'பிரம்மகைவர்த்தம்' என்னும் நூலின் அடிப்படையில் அமைந்த இந்த நூலை மொழிபெயர்த்துத் தந்தவர் திருச்சிற்றம்பல முனிவர் என்பவர்.

கங்கையைப்போல் காவிரிபோல் கருத்துக்கள் ஊறும் உள்ளம் எங்கள் உள்ளம் என்று பாவேந்தர் பாடுகிறார், ஆழ்வாரோ - 'கங்கையிற் புனிதமாய காவிரி என்று (கங்கையினும் மிக்க புனிதமுடையது காவிரி) காவிரியின் தெய்வத்தன்மையை வியந்து பாடுவார்; விதந்து ஓதுவார்!



## சோழ மண்டலம்

- தமிழ் நாட்டின் மிகப் பெரிய ஆறு காவிரி ஒன்றே ஆகும்.
- தமிழ்நாட்டின் 34% நிலப்பகுதி காவிரிப் படுகையில் அமைந்து உள்ளது.
- தமிழகத்தின் கால்வாய்ப் பாசனத்தில் 85% காவிரி ஆற்றையே நம்பி உள்ளது.
- தன் உணவு உற்பத்திக்கு காவிரியையே பெரிதும் சார்ந்துள்ளது தமிழகம்.

இந்தப் புள்ளி விபரங்கள் சொல்லுகின்ற உண்மை என்ன ?

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் என்றென்றும் காவிரியே' - இதுதான் அந்த உண்மை. இதுதான் தமிழர்களின் இதயகீதம். தமிழ் மொழியின் சொற் களஞ்சியத்தைப் போல, தமிழகத்தின் நெற்களஞ்சியமும் உலகம் போற்றும் உயர்வை உடையது.

தமிழகத்தின் நெற்களஞ்சியம் - சோழ மண்டலம். **"முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகனை"** அரிய தமிழால் பாடிய அருணகிரியார் - "ஏழ்தலம் புகழ் காவிரியால் விளை சோழமண்டலம்" - என்று போற்றுகிறார். சோழ மண்டலத்தின் வளம் காவிரியின் நலத்தைப் பொருத்தே அமைகிறது.

சோழனின் மகவு சோழநாடு. அந்தச் சோழ நாட்டை அவனருளால் வளர்க்கும் தாய் காவிரி என்னும் பொருள்பட -

*"வாழி யவன்றன் வளநாடு*
*மகவாய் வளர்க்கும் தாயாகி*
*ஊழியுய்க்கும் பேருதவி*
*ஒழியாய் வாழி காவிரி"*

- என்று பாடிப் பரவுகிறது சிலப்பதிகாரம்.

சோழ மன்னர்களுக்கும் காவிரிக்கும் உள்ள தொடர்பு காலத்தால் முற்பட்டது. சோழ மன்னர்கள் 'பொன்னி வளவன்' என்று பெயர் சூட்டிக் கொண்டார்கள். அந்தச் சோழமண்டலத்தைக் காப்பது காவிரி; அந்தக் காவிரியைக் காப்பவர் சோழமன்னர்கள் என்பதால் காவிரிக் காவலர் என்ற பெயரையும் அவர்கள் பெற்றார்கள்.

காவிரியைக் காப்பது சோழரின் கடமை என்னும் மரபு மன்னர் ஆட்சிக் காலத்தில் அன்று விளங்கியது போலவே மக்களாட்சி, காலத்தில் இன்றும் துலங்குகிறது. அந்தச் சோழ மண்ணின் மைந்தராகிய கலைஞர் தமிழகத்தின் முதலமைச்சர் என்னும் முறைமையால் மண் ஆளும் உரிமையாலும், மண்ணின் மைந்தராம் மரபாலும் காவிரிக் காவலராய் விளங்குகிறார். கலைஞர், காவிரி நீரில் தமிழர்க்குள்ள உரிமையை நிலை நாட்டுவதில் மட்டுமல்ல, இன்னொரு வகையிலும் காவிரிக் காவலராய் விளங்குகிறார். எப்படி ?

## காவிரியின் நடைபாதை

காவிரி ஆறு கருநாடாக மாநிலத்தின், குடகு மாவட்டத்திலுள்ள, மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடரைச் சேர்ந்த பிரம்மகிரி மலையில் 'தலைக்காவிரி' என்னும் இடத்தில் தோன்றுகிறது. மலைப்பகுதிகளையும், கருநாடக மாநிலத்தின் தக்காணப்பீடபூமி பகுதியையும், கடந்து மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு மேல் தமிழ்நாட்டின் எல்லைக்குள் நுழைகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உற்பத்தியாகும் ஹேமாவதி, ஹேராங்கி, லக்ஷ்மணதீர்த்தம், கபினி, சுவர்ணவதி போன்ற முக்கியமான சில துணை நதிகள் கருநாடகத்தில் காவிரியில் கலக்கின்றன. பீடபூமியின் உட்பரப்பில் தோன்றும் சிம்ஷா, அர்க்காவதி ஆகிய ஏனைய துணை நதிகள் காவிரியாற்றின் இடப்பக்கத்தில் சேருகின்றன.

கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியைக் கடக்கும்போது இந்த ஆறு மேட்டூருக்குக்கீழே தெற்கு நோக்கித் திரும்புகிறது. பவானி, நொய்யல், அமராவதி போன்ற துணை நதிகள் ஆற்றின் வலப்புறமாகக் கலக்கின்றன. அமராவதி ஆறு காவிரியுடன் சேர்ந்த பின்னர் காவிரி கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்கக் கடலில் கலக்கிறது. கருநாடக மாநிலத்தின் குடகு மாவட்டத்தில் மலைச்சரிவுகளையும், பீடபூமியின் செங்குத்தான சரிவுகளையும் கடந்த பின்னர், கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதியை ஆழ்ந்து குறுகி ஒடுங்கிப் பாய்ந்து கடக்கிறது. பவானி காவிரியுடன் சேர்ந்த பின்னர் காவிரியின் அடிமட்ட வாட்டமும் ஆழமும் வரவரக் குறைந்து ஆறு விரிவடையத் தொடங்குகிறது. திருச்சி மாவட்டத்தில் மேல் அணைக்கு மேல்புறத்தில் அது 2 கி.மீ. அளவிற்கும் அகன்று காணப் படுவதால் அது "அகண்ட காவிரி" என அழைக்கப்படுகிறது. ஆற்றின் வேகம் குறைகின்ற காரணத்தால் வெள்ளத்தில் கலந்துவரும் வண்டல்மண் படிய ஆரம்பிக்கிறது. ஆற்றுப்படுகை மணல் மேடிட்டு, வண்டல் படிந்து ஆறு பிரிவுபட ஆரம்பிக்கிறது. மேல் அணையில் இருபெரும்பிரிவுகளாகப் பிரிந்து வட பிரிவு கொள்ளிடம் என அழைக்கப் படுகிறது. கல்லணைப் பகுதியில் காவிரியாறு மீண்டும் காவிரி, வெண்ணாறு என இரண்டாகப் பிரிகிறது. கல்லணையைக் கடந்து செல்லும் காவிரி, வெண்ணாறு ஒவ்வொன்றும் மேலும் பல கிளை



களாகவும், அக்கிளைகள் மேலும் பல சிறு கிளைகளாகவும் உட்கிளைகளாகவும் பிரிவதால் இவை 36 கிளை நதிகளாக, காவிரி டெல்டா பகுதியில் பரவிப் பாய்ந்து சுமார் 125 கி.மீ. விரிவுக்குள் கடலில் கலக்கின்றன. காவிரியாறு, இறுதியில் ஒரு குறுகிய ஓடையாக, பூம்புகாருக்கு அருகில் வங்கக் கடலில் கலக்கிறது.

காவிரியின் மொத்த நீளம் 800 கி.மீ. ஆகும். இதில் 320 கி.மீ. கருநாடக மாநிலத்திலும், 64 கி.மீ. கருநாடக, தமிழ்நாடு மாநிலங்களிடை எல்லையாகவும் 416 கி.மீ. தமிழ்நாட்டிலும் அமைந்துள்ளது.

## நடைக்கு வந்த தடை

காவிரி டெல்டா பகுதியில் காவிரி ஆறு, வெண்ணாறு, குடமுருட்டி, அரசலாறு, மன்னியாறு, வீரசோழனாறு, நந்தலாறு, முடிகொண்டான் ஆறு, சிறுமலைராஜன் ஆறு, வெட்டாறு, கோரையாறு, பாமினி ஆறு, வெள்ளையாறு, ஓடம்போக்கியாறு, அரிச்சந்திரா நதி போன்ற 36 ஆறுகளும், ஆழியனாறு, கோணங்கடங்கலாறு, ஆனந்தக் காவிரி, கோண வாரி ஐம்புகாபுர வாரி, வல்ல வாரி, முதலை முத்து வாரி, கண்ணனாறு, பாட்டுவனாச்சியாறு போன்ற நூற்றுக்கணக்கான வடிகால்களும், மொத்தம் சுமார் 1500 கிலோ மீட்டர் தூரம் காவிரி டெல்டா பகுதியில் பாய்கின்றன. இவைகளின் மூலம் சுமார் 10 இலட்சம் ஏக்கர் பழைய நஞ்செய்ப் பகுதி பாசன வசதி பெறுகின்றது. இவையெல்லாம் பல ஆண்டுகளாக, தூர் வாரப்படாமல் வண்டல் படிந்து கரையோரப் பகுதிகளில் மண்மேடிட்டும், செடி கொடிகள் குறிப்பாக நெய்வேலி காட்டாமணக்கு மண்டியும், ஆங்காங்கே ஆக்ரமிப்புகளும் எல்லாம் சேர்ந்து நீர்வழிப்போக்கைப் பெரிதும் தடுத்து, அதனால் விவசாயத்திற்கு, போதிய நீரை வழங்க இயலாமலும், வெள்ளக்காலங்களில் வெள்ளம் விரைவில் வடியாமல் கரைகளில் பெரும் உடைப்பு எடுத்தும் இலட்சக்கணக்கான ஏக்கர் பயிர்களை மூழ்கடித்து உயிர்ச்சேதம் மற்றும் பொருட் சேதங்களை உண்டாக்கின.

பாசன நீரைப் பங்கிடுவதற்கு சுமார் 30,000 பாசன வாய்க்கால்கள் 22335 கி.மீ. நீளத்திற்கு அமைந்துள்ளன. இந்த வாய்க்கால்கள் எல்லாம் மேலே கூறிய ஆறுகள் வடிகால்களைப் போலவே தூர்ந்து போயும், நெய்வேலி காட்டாமணக்கு மண்டியும், ஆக்ரமிப்பாலும் பாசன நீரை முழுமையாக வழங்க முடியாமல் விவசாய காலங்களில் பெரும் பிரச்சினையாக ஆகிவிடுகின்றன.

கல்லணையிலிருந்து கல்லணைக் கால்வாய் மூலம் சுமார் 2.50 இலட்சம் ஏக்கர் புதிய நஞ்சைப் பகுதி பாசன வசதி பெறுகின்றது. இந்தக் கல்லணைக் கால்வாயில் மற்றும் அதன் கிளைக் கால்வாய்களில் தூர் வாரப்படாமல் செடிகொடிகள் மண்டிப் பாசன நீரை பாங்காகப் பங்கிடுவதற்கு இடையூறுகள் இருக்கின்றன.

கல்லணைக்குக் கீழ் காவிரி டெல்டா பாசனம் மூன்று பெரும் பிரிவுகளை கொண்டு செயல்படுகிறது. அவை காவிரி வடிநிலப் பகுதி, வெண்ணாறு வடிநிலப் பகுதி, கல்லணைக்கால்வாய் வடிநிலப் பகுதி என்பனவாகும்.

இதில் காவிரி வடிநிலப் பகுதியில் 4,93,837 ஏக்கரா நிலங்களும், வெண்ணாறு வடிநிலப் பகுதியில் 4,96,814 ஏக்கரா நிலங்களும் பாசனம் பெறுகின்றன. மேற்படி வடிநிலைப் பகுதிகளில் நீர்ப் பாசனம் 1668 கிலோ மீட்டர் நீளம் உள்ள 38 ஆறுகள், 23822 கிலோமீட்டர் நீளமுள்ள 29881 பாசனக் கால்வாய்கள் மூலமாக நடைபெறுகிறது.

கல்லணைக்கால்வாய் வடிநிலைப் பகுதியில் 227471 ஏக்கரா நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இங்கு நீர்ப்பாசனம் 2300 கிலோமீட்டர் நீளம் உள்ள கால்வாய்கள் மூலமாகவும் 696 கண்மாய்கள் மூலமாகவும் நடை பெறுகிறது. இந்த பரந்துகிடக்கும் பாசனக் கட்டமைப்பு தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம், புதுக்கோட்டை ஆகிய நான்கு மாவட்டங்களைக் கொண்டது.

## பாசன நலன்கள் பாதிப்பு

மேற்குறிப்பிட்டுள்ள பாசனக் கட்டமைப்புகள் அனைத்தும் கடந்த பல ஆண்டுகளாகத் தூர்வாரப்படவில்லை. கரைகள் பலப்படுத்தப்படவில்லை. ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் பராமரிப்பு நிதி மேற்படி கட்டமைப்புகளில் உள்ள நீரொழுங்கிகள், தலைமதகுகள், அணைகள், கலுங்குகளைச் செப் பணிடவே போதுமானதாக இல்லை. மேலும், பஞ்ச காலங்களில் நீர் பற்றாக் குறையினாலும், வெள்ளக் காலங்களில் பயிர்கள் நீரில் மூழ்கியதனாலும் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு விவசாயிகள் பொருளாதாரத்தில் வலுவிழுந்து விட்டனர். இதனால் அரசு ஆண்டுந் தோறும் கால்வாய்களைத் தூர் வார குடிமராமத்துத் திட்டத்தில் கொடுத்துவந்த 4/7 பங்கைப் பெற்று பணி செய்ய முன்வராததினால் அத்திட்டம் பயனற்றுவிட்டது. இதனால் கால்வாய்கள் தூர் வாரும் பணியும் பாதித்துவிட்டது, மேலும் நெய்வேலி காட்டாமணக்கு என்னும் செடி ஆறுகள், வடிகால்கள், கால்வாய்கள், ஏரிகளில் அதிக அளவில் பரவி, பாசனக் காலங்களில் நீரின் வேகத்தைத் தடுப்பதுடன் வண்டல் படிவதையும் துரிதப்படுத்திவிட்டது. அதேபோல் வெள்ளக் காலங்களில் நீர் வடிவதைத் தாமதப்படுத்தி நெற்பயிர்கள் நீரில் மூழ்கடித்து பயிர்களை அழுகச் செய்தும் விளைச்சலைப் பெரிதும் பாதிப்படையச் செய்தும் விவசாயிகளைப் பெருந் துன்பத்துக்கு ஆளாக்கி விட்டன.



ஆக மொத்தத்தில் பல ஆண்டுகளாகப், பாசன நீரைப் பங்கிடுவதிலும் வெள்ளத்தை விரைவில் வெளியேற்றுவதிலும் காவிரி டெல்டா பகுதியில் பெரும் சிரமங்கள் இருந்து வருகின்றன.

1996ஆம் ஆண்டு வெள்ளச் சேதங்களை பார்வையிட வந்த மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் மேலே உள்ள பெரும்பிரச்சினைகளுக்கு, ஆறுகள், வடிகால்கள், வாய்க்கால்கள் எல்லாம் சரியானபடி தூர் வாரி செடிகொடிகள் மற்றும் காட்டாமணக்குகளை அகற்றி



அகலமும் ஆழமும் ஆக்கி கரைகளைப் பலப்படுத்தி பாசன வாய்க்கால்களையெல்லாம் அதேபோல் தூர் வாரிச் செப்பனிட்டால் ஒரு முடிவு காண இயலும் என்று உணர்ந்து, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுடன் கலந்து ஆலோசித்து பிறகு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தனர். பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்த முதலமைச்சர் அவர்கள் ஏப்ரல் '97 முதல் வாரத்தில், ரூ.10 கோடியை உடனடியாக ஒதுக்கீடு செய்து வழங்கினார்கள்.

### தூர் வாரும் பணி - 1997

ஏப்ரல் '97 கடைசி வாரம் தொட்டு ஜூன் '97 கடைசி வாரம் வரை இருமாதங்களில் ஆறுகள், வடிகால்கள், வாய்க்கால்கள் மற்றும் குளங்களில் இயந்திரங்களைக் கொண்டு தூர்வாரும் பணிகள் மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டன. இப்பணிகளை விவசாயிகள் மற்றும் பொதுமக்கள், சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சித்துறை அமைப்பில் உள்ள ஏனைய மக்கள் பிரதிநிதிகள் எல்லோரும் ஒன்றுபோல் பாராட்டினார்கள்.

1997 இல் 936 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஆறுகள், வடிகால்களிலும், 1170 கிலோ மீட்டர் நீளத்திற்கு வாய்க்கால்களிலும், 74 கண்மாய்களிலும் ரூ.12.75 கோடி செலவில் தூர் வாரப்பட்டது.

இதன் மூலமாகக் கீழ்கண்ட பலன்களை நேரடியாகக் காண முடிந்தது.

1. தூர் வாரப்பட்ட பகுதிகளில் பாசனத்திற்கு நீர் துரிதமாகத் சேதமின்றி, தேக்கமின்றிச் சென்றடைந்தது.
2. தூர் வாரும் பணி முடித்து குறுவை சாகுபடிக்காக ஜூன் 12, 1997இல் தண்ணீர் திறந்து விட்டதால் விவசாயிகள் குறுவைப் பயிரில் மிகுந்த விளைச்சலும் லாபமும் பெற்றனர். அரசாங்கமும் பொது விநியோகத்திற்குத் தேவையான நெல்லையும் கொள்முதல் செய்ய முடிந்தது. அரசாங்கம் விவசாயிகள் குறுவையில் உற்பத்தி செய்த நெல் அனைத்தையும் நியாய விலை கொடுத்து வாங்கியதால் விவசாயிகளுக்கு நியாயமான விலையும், விலைப்பாதுகாப்பும் கிடைத்துப்பலன் அடைந்தனர்.
3. தூர் வாரப்பட்ட பகுதிகளில் வெள்ள நீர் துரிதமாக வடிந்தது. தேக்கம் ஏற்பட்டுப் பயிர்கள் நீரில் மூழ்கும் அபாயம் தவிர்க்கப் பட்டது.
4. தூர் வாரப்பட்ட பகுதிகளில் தூர் வாரப்பட்ட மண்ணைக் கொண்டு கரைகளைப் பலப்படுத்தியதால் டிசம்பர் 1997இல் ஏற்பட்ட வெள்ளத்தினால் கரை உடைப்பு ஏற்படவில்லை. வெள்ளச் சேதமும் இல்லை.

எனினும் 1997 டிசம்பரில் பெய்த பெருமழையால் வெள்ளம் ஏற்பட்டு தூர் வாரப்படாத ஏனைய பகுதிகளில் சேதம் ஏற்பட்டது. எனவே, இந்த ஆண்டு அரசாங்கம் அரசாணை எண்.158 நாள் : 7-4-98ன் படி ரூ.20 கோடி தூர் வார ஒதுக்கியது. இதன்படி 480 கிலோ மீட்டர் நீளமுள்ள ஆறுகளிலும், 1050 கிலோ மீட்டர் நீளமுள்ள வடிகால்களிலும், 300 கிலோ மீட்டர் நீளமுள்ள வாய்க்கால்களிலும் 74 கண்மாய்களிலும் தூர் வார திட்டமிடப்பட்டுப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்றன.

காவிரி டெல்டாவில் உள்ள எஞ்சிய அனைத்து ஆறுகளிலும், வடிகால்களிலும், கால்வாய்களிலும், ஏரிகளிலும் தூர் வாரும் பணி, கரைகள் பலப்படுத்தும் பணி முடியும்வரை இந்த சிறப்பு நிதி ஒதுக்கீடும், பணியும் ஆண்டுதோறும் தொடரப்பட வேண்டும். இதைக் கண்கூடாகக் கண்ட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நடப்பு ஆண்டில் (1998-99) தூர் வாரும் பணியைத் தொடர்ந்து செய்வதற்கு ரூ.20 கோடியை வழங்கினார்கள்.

எந்தெந்த ஆறுகளில், வடிகால்களில், பாசன வாய்க்கால்களில், குளங்களில் முன்னுரிமை கொடுத்து இப்பணிகளெல்லாம் செய்யப்பட வேண்டும் என்பதற்கு தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் கூட்டங்கள் ஏற்பாடு செய்து பொது மக்கள், விவசாயிகள், சட்டமன்ற- நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சித்துறையைச் சார்ந்த பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் ஒன்றியத் தலைவர்கள் மற்றும் ஏனைய



அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை அதிகாரிகள், பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆகிய எல்லோரது கருத்துக் கணிப்புகளும் பெறப்பட்டன. அதன் அடிப்படையில் இவ்வாண்டு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இப்பணிகள் எல்லாம் மே '98 முதல் வாரத்தில் தொடங்கப்பட்டன. சென்ற ஆண்டில் எடுக்கப்பட்ட ஆறுகள். வடிகால்கள், வாய்க்கால்கள் எல்லாம் இவ்வாண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டு சென்ற ஆண்டுப் பணிகள் தொடர்ச்சியாக இவ்வாண்டுப் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாண்டு காவிரி ஆறு, வெண்ணாறு, வெட்டாறு, முடிகொண்டான் ஆறு, திருமலைராஜன் ஆறு, கடப்பாறு, அரிச்சந்திரா நதி போன்ற ஆறுகளும், புதுப்பாண்டி ஆறு, பழம்பாண்டி ஆறு, கழுமலை ஆறு, தூரியாறு, மின்னியாறு போன்ற வாய்க்கால்கள், வடிகால்களும் மற்றும் 73 ஏரிகளும் தூர்வாரும் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாண்டு, விவசாயிகள் சீர்காழிப் பகுதியில் 'குள்ளக்காரு' சாகுபடி தூர்வாரும் பணிக்காக தள்ளி வைத்துள்ளனர். 'குள்ளக்காரு' பகுதி சுமார் 6800 ஏக்கர் பரப்பாகும். தெற்குராஜன் ஆறு, புதுமண்ணியாறு, அவைகளின் 'ஏ' மற்றும் 'பி' பிரிவு கிளை வாய்க்கால்கள் எல்லாம் முழுமையாக தூர் வாரி கரைகள் பலப்படுத்தப்படும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

### தூர் வாரிய தூயவரே வருக!

தூர்வாரும் பணிகளை நேரில் பார்வையிட முடிவுசெய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22-6-98 அன்று காலை 8-35 மணிக்கு விமானம் மூலம் திருச்சிராப்பள்ளி வந்தார். ஒரு வரலாற்றுச் சிறப்புள்ள பணிக்கான வருகை அது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் அவரது துணைவியார் திருமதி தயாளு அம்மையார் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா.வீராசாமி அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்களும், உயர் அதிகாரிகளும் வந்தனர்.

திருச்சி விமான நிலையத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு ஆகியோர் வரவேற்றனர். அங்கிருந்து தஞ்சை வரை முதலமைச்சர் அவர்களுக்கு வழிநெடுக அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தஞ்சை மாவட்ட எல்லையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இராமநாதன், இ.ஆ.ப, மாலையணிவித்து வரவேற்றார்.

பல்வேறு வரவேற்புகளைத் தொடர்ந்து, முதலாவதாகத் திருவையாறில் நடை பெறும் தூர்வாரும் பணியைப் பார்வையிட முதலமைச்சர் சென்றார்.

### மக்களின் மகிழ்ச்சி

திருவையாறு, வீரமாங்குடியில் - முதலமைச்சர் தூர்வாரப்பட்ட தூரியாற்றைப் பார்வையிட்டார். அப்போது திரண்டுவந்த மக்கள் முதலமைச்சர் கலைஞர் அவர்களை வாயார வாழ்த்தினார்கள். ஆண்டாண்டு காலமாக தூர்வாராமல் கிடந்த ஆறு - கலைஞரின் ஆணையின் பேரில் தூர் வாரப்பட்டது குறித்து தங்கள் மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்தார்கள். சிலர் ஆற்றுக்குள் இறங்கி ஆனந்தக் கூத்தாடினார்கள்.

அங்கிருந்து புறப்பட்ட முதலமைச்சர் நண்பகல் 12 மணியளவில் வாழ்க்கை கிராமத்தில் - மன்னியாற்றில் நடைபெற்ற தூர்வாரும் பணியைப் பார்வையிட்டார். ஆழப்படுத்தப்பட்ட ஆறு, உயர்த்தப்பட்ட கரைகள், உற்சாகம் ததும்பும் விவசாயப் பெருமக்கள் - இந்தக் காட்சிகளுக்கு நடுவே முதலமைச்சர் - இவ்வாறு காணும் இடமெல்லாம் களிப்பு களிநடனம் புரியக் கண்டோம்.

56 கி.மீ. நீளமுள்ள மன்னியாறு முழுவதும் தூர்வாரும் பணி முடிவுற்றதைக் கண்டு மகிழ்ந்த முதலமைச்சர் அவர்கள் பிற்பகல் 1-10 மணியளவில் கோவிலாச்சேரியில் - பழவாறு தூர்வாரும் பணியைப் பார்வையிட்டார். இந்தப் பணியால் பயன்பெறும் பாசனப் பரப்பு 3983 ஏக்கர் ஆகும்.

1-30 மணிக்கு, திருப்பனந்தாள் வந்த முதலமைச்சர், ஆர்ச் பாலத்திலிருந்து பணி முடிவடைந்திருந்த மன்னியாற்றுப் பரப்பைப் பார்வையிட்டார்.

### அரசன் நிலையில் நின்று - முதலமைச்சர் கலைஞர் மேற்கொண்ட அற்புதத் திட்டம்

*"தஞ்சையில் தரணியில் மேற்கொள்ளப் பட்டு வரும் தூர்வாருகின்ற பணி முதல்வர் கலைஞர் அவர்கள் அரசன் நிலையில் நின்று மேற்கொண்ட அற்புதத் திட்டம்" - என்று 'தினமலர்' நாளிதழ் இயக்குநர் கே.வெங்கட்ராமன் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் பாராட்டியுள்ளார்.*

*இதுகுறித்து அவர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எழுதியுள்ள பாராட்டுக் கடிதத்தில் கூறியிருப்பதாவது:*

*"தஞ்சைத் தரணியில் ஆறுகள், வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தால் விவசாயிகள் வாழ்வு மட்டுமல்ல; நாட்டின் பொருளாதாரமும் தழைத்தோங்கும்.*

*காவிரி நீர்ப் பிரச்சினை என கர்நாடகாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, காலத்தை வீணடித்தது போதும். கிடைக்கும் தண்ணீரை அப்படியே முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள தங்களது மாபெரும் தூர்வாரும் பணித்திட்டம் பாராட்டுக்குரியது.*

*மன்னர்கள் காலத்தில் நடந்த பணி இது என்று கூறுகின்றனர். எனக்கு தெரிந்தவரை நீண்டகாலம் இந்தப் பணி தஞ்சையில் நடக்கவில்லை.*

*அரசன் ஸ்தானத்தில் தாங்கள் இந்த அற்புதத் திட்டத்தை அமல்படுத்தியதில் மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டம் தொடர சட்டமாகக் கொண்டுவர வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.*

பிற்பகல் மயிலாடுதுறையிலிருந்து மங்கைநல்லூர் சென்று வீரசோழனாறு தூர்வாரப்பட்டு, பணி முடிவடைந்ததைப் பார்வையிட்டார். பாசனத்திற்கு மிக இன்றியமையாததும், இதுவரை எவரும் எப்போதும் செய்திராததுமாகிய



தூர்வாரும் பணியை முறையோடு செய்ததற்காக வேளாண்குடியினர் அனைவரும் மகிழ்ச்சியோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

திருவாஞ்சியத்திலும், திருவிடைச் சேரியிலும் புத்தாற்றில் தூர்வாரப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு நெடுஞ்சேரி - பெரும்பண்ணையூர் பகுதியில் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டார். பெரும் பண்ணையூர் - நீதிக்கட்சித் தலைவர் சர்.ஏ.டி.பன்னீர் செல்வத்தின் சொந்த ஊர் என்பது நினைவுகூரத்தக்கது.

நாள்முழுதும் காவிரித் தாய் நடந்து செல்லும் பகுதிகளின் மேம்பாடு நடந்து வருவதைப் பார்வையிட்ட பொன்னியின் செல்வர் கலைஞர் அவர்கள் மாலையில் திருவாரூர் அருகில் உள்ள காட்டூரில் உள்ள தமது அன்னையார் அஞ்சுகம் அம்மையார் அவர்களின் சமாதிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திவிட்டு திருவாரூர் சென்று தங்கினார்.

### இரண்டாம் நாள் பயணம்

காலை 8.45 மணிக்கு திருவாரூரிலிருந்து புறப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புலிவலத்தில் உள்ள வாழைவாய்க்காலில் தூர்வாரும் பணியைப் பார்வையிட்டு தொடர்ந்து மாங்குடியில் பாண்டவையாற்றில் நடைபெறும் பணிகளைப் பார்வையிட்டார். அடுத்து கச்சநகரம், சோழாவதியாற்றில் நடைபெறும் பணிகளைக் கண்ட கலைஞர் அவர்கள் திருக்குவளையில் தாம் பிறந்த இல்லத்திற்குச் சென்றார். முதல்வர் பிறந்த இல்லம் முத்துவேலர் நூலகத்தையும், அஞ்சுகம் படிப்பகத்தையும் கொண்டு அறிவாலயமாக விளங்குகிறது.

தமது வரலாற்றையே தமிழ்மொழியின் வரலாறாகவும், தமிழகத்தின் வரலாறாகவும் ஆக்கிக் கொண்ட தலைவர் கலைஞர் அவர்களின் பல்வேறு புகைப்படங்களை முதல்வருடன் செய்தியாளர்கள் கண்டுகளித்தார்கள். பிறந்த இல்லத்திற்கு வரும்போது தங்களது உணர்வுகள் எப்படி உள்ளன என்று செய்தியாளர்கள் கேட்டபோது - ''பிறந்த மண்ணுக்கு வரும்போது அலைமோதும் இந்தப் பசுமையான நினைவுகளை, மன உணர்ச்சிகளை தழுதழுத்த குரலில் தான் உங்களிடம் கூறமுடிகிறது" - என்று பதில் கூறினார் கலைஞர்.

பின்பு வெள்ளத்திடலில் தெற்குவழிப் பாசன வடிகால் தூர்வாரும் பணியையும், தொடர்ந்து எட்டுக்குடியில் வடக்கு காட்டாறு வடிகால் தூர்வாரும் பணிகளையும் பார்வையிட்டார்.

வழியெங்கும் பொதுமக்களின் வரவேற்பையும், வாழ்த்துக்களையும் பெற்று வந்தார் முதலமைச்சர். முதல்வர் பிறந்த திருக்குவளையில் ஊர்ப் பொதுமக்கள் உள்ளம் பூரிக்க வரவேற்பை வழங்கி மகிழ்ந்தார்கள்.

இதற்குமுன் எந்த முதலமைச்சரும் சென்றிராத குறுகிய கிராமத்துப் பாதைகளிலும், முதலமைச்சர் கலைஞரின் பயணம் தொடர்ந்தது. அடுத்து அவர் பார்வையிட்டது திருவாய்மூரில் தெற்குக் காட்டாற்றில் நடைபெற்று வந்த பணிகளை.

தொடர்ந்து தென்கரை ஈசனூரில் சீராவட்டனாறு, ஆலங்குடியில் அரிச்சந்திரா நதி, கொக்கலடி பாமணியில் அடப்பாறு, பாண்டிபாலத்திலிருந்து மரைக்கா கோரையாறு, தம்பிக்கோட்டை கீழக்காட்டில் பாமணியாறு, வீரக்குறிச்சியில் நசுவினி ஆறு, ஒரத்தநாடு குருமண் தெருவில் காரிமுத்து ஏரி வடிகால் ஆகிய இடங்களில் முழுமூச்சோடு நடைபெற்று வந்த பணிகளை முதலமைச்சர் பார்வையிட்டார்.

### கல்லணையில் காவிரி நீர்திறப்பு

காவிரிக்குக் குறுக்கே கல்லணை கட்டி, சோழ மண்டல வேளாண்மைக்குப் புத்துயிர் கொடுத்தான் சோழ மாமன்னன் கரிகால் பெருவளத்தான். அவனுக்குப் பிறகு காவிரி நடந்து செல்லும் பாதையிலிருந்த தடைகளை அகற்றி, காவிரிப் பாசனத்திற்கு உயிரோட்டத்தை அளித்திருக்கிறார் கலைஞர். அவரே தமது திருக்கரங்களால் கல்லணை மதகுகளைத் திறந்து, காவிரியை **'தடம் பார்த்து நடந்து செல்க'** என்று அனுப்பி வைத்தார். ஆம்! பாசனத்திற்குக் கல்லணையிலிருந்து காவிரி நீரைத் திறந்துவைத்தார், அந்தக் காவிரிக் காவலர்.

தொடர்ச்சி - 41 ஆம் பக்கம்





# ஆலயங்களின் பணிகள் பக்தர்களின் மனம் மகிழும் அளவிற்கு நடைபெற வேண்டும்!

*திருவேற்காடு கருமாரி அம்மன் கோயிலில் 75 இணைகளுக்குத் திருமணத்தை நடத்திவைத்து, கலைஞர் உரை*

இன்றையதினம் அறநிலையத் துறையின் சார்பாகவும் நம்முடைய அன்பிற்குரிய தவத்திரு ராமதாசு அடிகளார் மேற்கொண்ட பெருமுயற்சியின் காரணமாகவும் அவரோடு ஒத்துழைத்த அறங்காவல் குழுவினர்களின் ஆர்வத்தின் காரணமாகவும் இங்கே 75 மணமக்களுக்கு மணவிழா நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கின்றது. இந்த மணமக்களைப் பற்றிக் குறிப்பிடும்போது தம்பி துரைமுருகன், ஜோடிகள் ஜோடிகள் என்றே சொன்னார். நல்ல தமிழில் இணை என்று தமிழ்க்குடிமகன் சொன்னது போலச் சொல்லி இருக்கலாம். ஆனால் ஏதோ இரண்டு ஜோடி வேட்டி, இரண்டு ஜோடி வளையல் என்று சொல்வதைப் போல, நானும் ஒருமுறையாவது திருத்திக்கொண்டு இணை என்று சொல்வாரா என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் அதற்கு இணைந்து வருவதாகத் தெரியவில்லை. ஜோடிகள், ஜோடிகள் என்றே குறிப்பிட்டார்.

ஜோடிகள் அல்ல இவர்கள் - இணைகள். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமேயானால் இல்வாழ்விலே அடியெடுத்து வைக்கும் மணமக்கள். இந்த 75 இணை - இந்த 75 இணை மணமக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்று உங்கள் அனைவரோடும் சேர்ந்து நானும் வாழ்த்துகிறேன்.

### கோவில்களுக்குச் சென்றிருக்கிறேன்

மேடைக்கு வந்ததும் நண்பர் சுதர்சனம், எம்.எல்.ஏ., அவர்கள் என்னைப் பாரர்த்து 'இப்போதுதான் கோவிலுக்கு முதன்முதலாக வருகிறீர்களா' என்று கேட்டார். நான் அவரிடத்தில் பதில் சொன்னேன். தம்பி துரைமுருகன் சொன்னதைப் போல - இது முதன்முறை அல்ல, எத்தனையோ முறை எத்தனையோ கோவில்களுக்குச் சென்றிருக்கிறேன் என்று அவரிடம் நான் குறிப்பிட்டேன். மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திற்குச் சென்றிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் நான் பிறந்த ஊர் திருக்குவளையே பெரிய பாடல் பெற்ற ஸ்தலம்.



சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய ஸ்தலம் திருக்குவளை. அந்த திருக்குவளையிலே உள்ள கடவுளுக்குச் சரியான - மிகத் தூய்மையான தமிழ்ப் பெயர் - அந்த அம்மனை வண்டமரும் பூங்குழலாள் என்ற அழகிய தமிழிலேதான் அழைப்பார்கள். எவ்வளவு அழகான தமிழ் நயத்தோடு வைக்கப்பட்ட பெயர் அது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அந்தக் கோவிலைச் சார்ந்துள்ள வீதியில் ஒரு குடும்பத்திலே பிறந்தவன் நான். அதற்குப் பிறகு நான் படிக்க வந்த இடம் - திருவாரூர் - அதுவும் பாடல் பெற்ற



ஆலயங்களிலே ஒன்று. பிறந்த ஊரிலே, திருக்குவளையிலே உள்ள ஆலயத்திற்கும் நான் சென்றிருக்கிறேன். பிறகு நான் வளர்ந்த ஊரான திருவாரூரிலே உள்ள ஆலயத்திற்கும் நான் சென்றிருக்கிறேன்.

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் முன்பு நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த போது இரண்டாவது முறையோ அல்லது மூன்றாவது முறையோ நான் முதல்வராக இருந்தபோது - பந்தலிட்டு நடைபெற்ற ஒரு பெரிய இலக்கிய விழாவில் கலந்து கொண்டு "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி" என்ற தலைப்பில் ஏறத்தாழ ஒரு மணி நேரம் உரையாற்றியிருக்கிறேன். மதுரை முத்து அவர்களைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பெரியார் காலத்திலே, அண்ணா காலத்திலே, ஏன் என்னோடும், இந்த இயக்கத்தினுடைய தளகர்த்தராக வாழ்ந்தவர், விளங்கியவர். தீவிர சுயமரியாதைக்காரர். அவர் என்னை அழைத்துக் கொண்டு - பழனி திருக்கோவிலுக்கு இருவரும் சென்றிருக்கிறோம். அங்கே வந்திருந்த பக்தர்களையெல்லாம் கண்டு பேசியிருக்கிறோம். அவர்களுடைய குறைகளையெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கிறோம்.

**என்னைக் கவர்ந்த சிற்பங்கள்**

தமிழ்நாட்டிலே உள்ள ஆலயங்களில் உள்ள சிற்பங்கள் என்னை மிகவும் கவர்ந்தவை. குறிப்பாக மதுரைக்கு அருகிலே உள்ள அழகர்கோவில் சிற்பங்களைப் பற்றி நான் பல நண்பர்களிடம் பேசி மகிழ்ந்திருக்கிறேன். நெல்லை மாவட்டத்தில் கிருஷ்ணாபுரம் என்கிற ஊரிலே உள்ள கோவில் சிறபங்களை நான் பல முறை சென்று பார்த்துப் பரவசப்பட்டிருக்கிறேன். அந்த அளவிற்குத் தமிழகத்தின் திருக்கோயில்களிலே உள்ள சிற்பக்கலை என்னைக் கவர்ந்திருக்கின்றது. இந்தக் கோவில்கள் எப்படி ஒரு காலத்தில் இயங்கின, எப்படி இயங்க வேண்டும் என்ற கருத்துக்களை ஆன்மீகக் க்ருத்துடைய பல பெரியவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

ஆலயங்களின் வருமானம் ஆலயத்திலே இருக்கின்ற ஆண்டவனுக்கு மாத்திரமே செலவிடப்படாமல், அந்த ஆண்டவனால் படைக்கப்பட்டதாகக் கூறப்படும் மக்கள் எனக் கருதப்படுகின்ற அனைவருக்கும் அவர்களுடைய நல்வாழ்விற்காகவும், அந்தத் தொகை செலவிடப்பட வேண்டும் என்பதைப் பல ஆன்மீகப் பெரியவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

அதன் காரணமாகத்தான் கோயிலைச் சார்ந்த இடங்களில் இளைஞர்கள் கல்வி கற்கின்ற இடங்கள் - இதுபோன்ற நல்ல காரியங்கள் நடைபெறுகின்ற நிகழ்வுகள் எல்லாம் அந்தக் காலந்தொட்டு நடைபெற்றே வந்திருக்கின்றன. இடைக்காலத்தில் இவைகள் எல்லாம் நின்று போயிருக்கலாம்.

**மீட்கப்பட்ட கோயில் சொத்துக்கள்**

அந்தக் கோயில்களை இடைக்காலத்திலே பயன்படுத்திக் கொண்டவர்கள் ஆண்டவன் பெயரால் - ஆண்டவனையும் ஏமாற்றி, மக்களையும் ஏமாற்றிக் கொண்டு பல பேர் இருந்திருக்கிறார்கள் என்பதை மறைக்கத் தேவையில்லை. அதனால் தான் ஆண்டவனுடைய சொத்துக்கள் கோவில்களுக்குரிய உடமைகள் இவைகள் எல்லாம் பலரால் கவரப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்டு இந்த இரண்டாண்டு கால ஆட்சியில் நம்முடைய 'அறநிலையத்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் மேற்கொண்டுள்ள முயற்சியின் காரணமாகவும் அவருக்கு அரசு தந்துள்ள ஒத்துழைப்பின் காரணமாகவும் இந்த இரண்டாண்டு காலத்தில் மாத்திரம் கோவில் சொத்துக்கள் - நிலம் போன்றவை, வீட்டுமனை போன்றவைகள் எல்லாம் 125 கோடி ரூபாய் மதிப்புடைய சொத்துக்கள் மீட்கப்பட்டிருக்கின்றன என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த மணிவிழா நிகழ்ச்சியிலே உங்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மணவிழாக்கள் 1982 ஆம் ஆண்டு முதல், இது போன்ற திருக்கோவில்கள் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன.



இங்கே எடுத்துக்காட்டப்பட்ட - அரசு சார்பிலே நடத்தப்படும் ஏழையெளிய பெண்களுக்காக வழங்கப்படும் பத்தாயிரம் ரூபாய் நிதியில் நடத்தப்படும் திருமணங்கள் வேறு.

**ஏழைப் பெண்களுக்குத் திருமண நிதி உதவி**

தம்பி வேணு அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல 89 - 90 ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது ஏழையெளிய வீட்டுப் பெண்களுக்கு அந்தப் பெண்கள் எட்டாவது வரை படித்திருந்தால், அந்தப் பெண்ணின் திருமணத்திற்காக ஐயாயிரம் ரூபாய் அரசாங்கம் நிதியாக வழங்கும் என்று அறிவித்து அவ்வாறு வழங்கப்பட்டது. பிறகு ஆட்சி கலைக்கப்பட்டு இன்னொரு ஆட்சி வந்தது உங்களுக்குத் தெரியும். அந்த ஆட்சியில் இந்தத் திருமணத் திட்டம் மும்முரமாக ஆர்வமாகத் தொடரப்படவில்லை.

பிறகு 96ஆம் ஆண்டு நான் மீண்டும் முதலமைச்சராக வந்தபிறகு அந்த ஐயாயிரம் ரூபாய் என்பதை பத்தாயிரம் ரூபாயாக உயர்த்தி இதுவரையிலே அறுபதாயிரத்திற்கும் மேற்பட்ட ஏழையெளிய வீட்டுப் பெண்களுக்கு நிதி உதவி தந்திருக்கிறோம். இந்த ஆண்டும் பெருந்தொகை - பல்லாயிரக்கணக்கான திருமணங்களை நடத்திக்கொள்கின்ற அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இது வேறு.

ஆனால் அறநிலையத்துறையின் சார்பாக 82ஆம் ஆண்டு முதல் 96ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் இந்தத் திருக்கோவில்கள் மூலம் நடத்தப்பட்ட இலவசத் திருமணங்களின் எண்ணிக்கை 14 ஆண்டு காலத்தில் 1,171. இந்த 14 ஆண்டுக் காலத்தில் 1,171 திருமணங்களில் கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியிலே நடைபெற்ற திருமணங்களின் எண்ணிக்கை 294. ஆனால் இந்த இரண்டாண்டுகளில் மாத்திரம், இந்த ஆட்சியில் திருக்கோவில்களில் நடைபெற்ற திருமணங்களின் எண்ணிக்கை 1,031.

இந்த அளவிற்கு ஏழையெளிய மக்களுடைய வாழ்க்கையிலே விளக்கேற்றி வைக்க வேண்டுமென்பதற்காகத் திமுகழக அரசு இந்த அரசின் சார்புடைய அறநிலையத்துறை எந்த அளவிற்கு அக்கறை கொண்டுள்ளது என்பதை நீங்கள் புரிந்துகொள்ளலாம்.

இந்தத் திருமணத்திலேகூட அவர்களுக்கு - மணமக்களுக்கு இந்த மணவிழாவை நடத்திக்கொள்கிற செலவுகளை இந்தத் துறை ஏற்றுக்கொண்டுள்ளது என்பது மாத்திரமல்ல. இங்கே இந்த ஆலயத்தில் மணமக்களுக்கு ஒவ்வொரு இணைக்கும் 3,000 ரூபாய் பெறுமானமுள்ள சீர்வரிசையும் தரப்படுகின்றது. இது அவர்களுக்குக் கருமாரியம்மன் என்ற தாய் வீட்டிலிருந்து தரப்படுகின்ற சீர்வரிசை என்று அவர்கள் மகிழ்ச்சியோடு எண்ணிக்கொண்டு அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

**'ஆலயம்' விரோதமான சொல் அல்ல**

ஆலயங்களுக்குத் திமுகழக ஆட்சி எதிரானதல்ல. ஆனால் சில பேர் அத்தகைய ஒரு தவறான பிரச்சாரத்தை நாட்டில் செய்துகொண்டிருக்கிறார்கள். 'ஆலயம்' என்ற வார்த்தை எங்களுக்கு எதிரான வார்த்தை என்றால், நான் எங்களுடைய கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு 'அண்ணா அறிவாலயம்' என்ற பெயரை வைத்திருக்க மாட்டேன். ஆகவே 'ஆலயம்' என்ற சொல் எங்களுக்கு விரோதமான சொல் அல்ல.

சில பேர் கூட, என்ன ஆலயம் என்று பெயர் வைத்திருக்கிறீர்களே என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குச் சொன்ன பதில், நான் 'ஆலயம்' என்ற சொல்லையே வெறுப்பவன் அல்ல என்பதுதான். ஆலயத்தில் தவறுகள் நடந்தால் அதைக் கண்டிப்பவன்; தவறுகள் நடைபெறக் கூடாது என்று கருதுபவன்.

மனித சமுதாயத்திலே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கொள்கை உண்டு. எனக்கென்று ஒரு கொள்கை உண்டு. என்னுடைய கொள்கையை மற்றவர்கள் மீது நான் திணிக்க விரும்பவில்லை. எடுத்துச் சொல்லலாம். விளக்கலாம். ஏற்றுக் கொண்டால் மகிழலாம். ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவர்கள் வழியிலே அவர்கள் செல்ல அனுமதிக்க வேண்டுமே தவிர, அதைத் தடுத்து நிறுத்துவது தகாது என்பது என்னுடைய கொள்கை.

அந்தக் கொள்கையின் அடிப்படையிலேதான் எந்தவொரு கருத்தையும் பிறர் மீது திணிக்கக் கூடாது என்பது எங்களுடைய இயக்கம் கொண்டிருக்கின்ற கொள்கையாகும். அந்தக் கொள்கையின் அடிப்படையிலே இயங்குகின்ற அரசுதான் என்னுடைய தலைமையிலே இயங்குகின்ற திமுகழக அரசாகும்.

**ஓடாத தேரை ஓட்டிக்காட்டினேன்**

இந்த அரசுக்கு ஆலயங்களை எல்லாம் அகற்ற வேண்டுமென்ற எண்ணம் இருக்குமேயானால், இருபதாண்டு காலம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 47 முதல் 67 வரையில், திருவாரூர் தேர் ஓடாமலே இருந்தது. நான் முதலமைச்சராக ஆன பிறகுதான் ஓடாமல் இருந்த திருவாரூர் தேரை ஓட்டிக் காட்டினேன். இன்னமும் அது ஓடிக் கொண்டிருக்கின்றது.

நான் முதலமைச்சராக இருந்தபோதுதான் சென்னையிலே கபாலீஸ்வரர் கோவில் தெப்பக்குளம் தூர்ந்து கிடந்ததைத் தூர் வாருவதற்காகச் சீரணிப்படையோடு சென்று தூர் வாருகின்ற பணியைத் தொடங்கி வைத்திருக்கிறேன். எனவே ஆலயங்களின் காரியங்கள் அந்த ஆலயங்களை ஏற்றுக்கொண்டிருக்கின்ற பக்தர்களின் மனம் மகிழ்கின்ற அளவிற்கு நடைபெற வேண்டும் என்பதிலே எனக்கு மாறுபாடான கருத்து கிடையாது.

அதற்கெல்லாம் உச்சமாக, இன்றைக்கு ஆலயங்கள் இப்படிப்பட்ட பணிகளைச் செய்கின்றன என்பதை எண்ணும் போது, நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அந்த மகிழ்ச்சிக்கு மிக முக்கியமான காரணம் அறநிலையத்துறையின் சார்பிலும் நம்முடைய ராமதாசு அடிகளார் அவர்களின் பெருமுயற்சியின் காரணமாகவும் இன்றைக்கு நடைபெற்றிருக்கின்ற 75 இணைகளுக்கான இந்தத் திருமணங்கள்தான் என்பதை எடுத்துக்கூறி இன்றைக்கு நம் முன்னிலையிலே திருமணம் செய்துகொண்டுள்ள இந்த மணமக்கள் வாழ்வாங்கு வாழ்ந்திட வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

*- முதலமைச்சர் கலைஞர் அவர்கள்*
*சென்னையை அடுத்துள்ள திருவேற்காடு*
*கருமாரியம்மன் கோயிலில் 18-6-98 அன்று*
*75 இணைகளுக்குத் திருமணம் நடத்திவைத்து, அலுவலக*
*நுழைவு வாயில், அர்ச்சகர் குடியிருப்பு ஆகியவற்றைத்*
*திறந்துவைத்து, இசைக் கலைஞர்களுக்கான குடியிருப்புக்*
*கால்கோள் விழாவைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை.*

* * *

# அறந்தழைக்க அரும்பணிகள்

## இந்து சமய அறநிலையத்துறையின் ஈராண்டுச் சாதனைகளில் சில...

**மா**ண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் உயரிய வழிகாட்டுதலில், மக்கள் நல மேம்பாட்டிற்காகப் பல வழிகளிலும் பாடுபட்டு வரும் சமுதாய நல நிலையங்களாக நம் திருக்கோவில்கள் திகழ்ந்து வருகின்றன.

### இலவசத் திருமணங்கள்

சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை எளிய இந்து மக்களுக்குத் திருக்கோவில்களின் சார்பில் இலவசமாகத் திருமணம் நடத்திவைக்கும் திட்டம் சிறப்புறச் செயல்படுத்தப்படுகிறது.

இந்த இலவசத் திருமணத்திட்டத்தின் கீழ் 1996 டிசம்பர் முதல் இதுவரை மொத்தம் 1,031 இணைகளுக்கு தலா ரூ.3,000 வீதம் ரூ.30,93,000 செலவில் இலவசத் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டிருப்பது அறநிலையத் துறையின் மகத்தான சாதனையாகும்.



### திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை செய்வதை நடைமுறைப்படுத்துதல்

திருக்கோயில்களில் வடமொழியிலேயே அருச்சனை செய்யப்பட்டு வந்த நிலையில், அரசின் அறிவிப்பினைத் தொடர்ந்தும், உச்ச நீதி மன்றத் தீர்ப்புரையின் அடிப்படையிலும், திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை செய்வதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இன்றைய நிலையில் 4,331 திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை செய்வது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழில் அருச்சனை செய்வதை நெறிப்படுத்துவதற்கு அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின்படி, தமிழகத் திருக்கோயில்களில் ஒரே மாதிரியான 108 தமிழ் அருச்சனை போற்றிகளைப் பயன்படுத்த குழுவின் பரிந்துரையின் தமிழ்த் திருமுறை நூல்களின் சொற்களைக் கொண்டு 108 போற்றிகள் தயாரித்து அச்சிடப்பட்டு வருகிறது. தமிழில் 2,326 இலட்சார்ச்சனைகளும், 14 கோடியருச்சனைகளும் நடத்தப்பட்டுள்ளன.

திருமுறைப் பதிகங்கள், திருப்பாவை, திருவெம்பாவை பாசுரங்கள், திருமுருகாற்றுப்படை, நாலாயிர திவ்யப்பிரபந்தம் போன்ற பக்தி இலக்கியங்களில் குறிப்பிட்ட பதிகங்கள் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுப் பதிக்கப்படுகின்றன.

ஒலிபெருக்கிக் கருவிகள் மூலம் பக்திப் பாடல்கள் காலை-மாலை வேளைகளில் 1517 திருக்கோயில்களில் ஒலி பரப்பப்படுகின்றன.

தேவாரம், திருவாசகம், திருவெம்பாவை, திருப்பாவை, திருக்குறள், நாலாயிர திவ்யப்பிரபந்தம் போன்ற நூல்களின் கருத்துக்களைத் தக்க சான்றோர்கள் - தமிழறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவுகள் 612 திருக்கோயில்களில் நடத்தப்படுகின்றன.

### தமிழ்ப்புலவர்கள் நியமனம்

தமிழகத் திருக்கோயில்களில், இந்து சமயக் கருத்துக்களைப் பரப்புதல், சமயப் பிரச்சாரம் செய்தல், தலவரலாறு தொகுத்தல், திருக்கோயில் வரலாறுகளைப் பற்றிப் பக்தர்களுக்குக் கூறி வழிகாட்டுதல், சமயத் திருமறை நூல்களைப் பற்றி விரிவுரையாற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் இதுவரை 133 தமிழ்ப்புலவர்கள் பணியமர்த்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 110 தமிழ்ப் புலவர்கள் பணியில் சேர்ந்துள்ளனர்.



இவர்களுக்குத் தொகுப்பூதியமாக மாதந்தோறும் ரூ.1500 திருக்கோயில் நிதியிலிருந்து அளிக்கப்படுகிறது.

### ஒரு காலப் பூசைத்திட்டம்

நலிந்த நிலையில் உள்ள 1000 திருக்கோவில்களில் ஒரு காலப் பூசைத்திட்டத்தை அறநிலையத் துறை மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படுத்தி வருகிறது.

பொதுமக்கள் தம் பங்காக ரூ.2500 மட்டும் திரட்டித் தந்தால், எந்தத் திருக்கோவிலுக்காக அத்தொகை வழங்கப் பட்டதோ அந்தத் திருக்கோவிலுக்கு அறநிலையத்துறை தன் பங்காக ரூ.22500 செலுத்தி, அக்கூடுதல் தொகை ரூ.25000 அத்திருக்கோவிலின் பெயரில் நிரந்தர வைப்பு நிதியாக ஏற்படுத்தப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகை ஒரு கால பூசைக்காக வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்படி, ஏற்கெனவே 6260 திருக்கோயில்களுக்கு வைப்புநிதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில், 1000 திருக்கோயில்களுக்கும் வைப்புநிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### கருணை இல்லம்

21 திருக்கோயில்களில், கருணை இல்லங்கள் (அன்பு இல்லம்) தொடங்கப்பட்டு, சுமார் 25 ஆண்டுகளில் 870 சிறுவர் மற்றும் சிறுமியர்கள் சேர்ந்து பயன்பெற்று வருகின்றனர்.

கடந்த 2 ஆண்டுகளில், 22 திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டு, 341 சிறுவர்-சிறுமியர்கள் பயனடைந்துள்ளனர்.

கருணை இல்லச் சிறுவர்/சிறுமியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.600 வீதம் உணவு வகைக்கு செலவிடப் பட்டு வருகிறது. இதைத் தவிர உடைகள்/உறைவிடம்/மருத்துவ உதவி/பாடநூல்கள் அளித்தல் ஆகியவை இலவசமாகத் திருக்கோயில் நிதி மூலம் செய்யப்படுன்றன.

### தலவரலாறு வெளியிடுதல்

தமிழகத் திருக்கோயில்களின் தொன்மை மிக்க வரலாற்று விபரங்களை, பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், திருக்கோயில்களின் அருமை பெருமைகளை விளக்கும் தல வரலாறுகள்/தல புராணங்கள், பிள்ளைத் தமிழ், கலம்பகம் போன்றவை தயாரித்து வெளியிடுதல் திட்டத்தின் அடிப்படையில் 11-6-1998 அன்று மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு விழாவில் தமிழகத் திருக் கோயில்களுக்கான 504 தலவரலாறுகளும்,7 தல புராணங்களும், 2 பிள்ளைத் தமிழ் நூல்களும், 2 கலம்பக நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

### ஓய்வூதியத் திட்டம்

திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற அர்ச்சகர்கள்/பட்டாச்சாரியர்கள்/ஓதுவார்கள்/வேதபாராயணர்கள்/இசைக் கலைஞர்கள் ஆகியோர்களுக்கு மாதம் ரூ.350 வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. 9-8-1996 முதல் ஓய்வூதியம் ரூ.500 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், தற்போது கூடுதல் 701 ஓய்வுபெற்ற பணியாளர்கள் ஓய்வூதியம் பெற்றுப் பயனடைகின்றனர்.



### திருக்கோயில் பணியாளர் நலன்

திருக்கோயில்களில் பணியாற்றும் ஊழியர்களின் நலனைப் பேணிக் காப்பதற்கும் அவர்களது ஊதியத்தைச் சீரமைப்பதற்கும் நால்வர் குழு அரசால் அமைக்கப்பட்டது. இக்குழு அரசிற்குச் சமர்ப்பித்த அறிக்கையினைப் பரிசீலனை செய்து ஆலய ஊழியர்களுக்கு 13-4-1998 அன்று அரசு பல சலுகைகளை அறிவித்துள்ளது. அவ்வறிவிப்பின்படி முதுநிலைத் திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.3.23 கோடி அளவிலும், முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.5.73 கோடி அளவிலும் சலுகை பல அரசால் வழங்கப்பட்டுள்ளன.

### தமிழ் இசைப் பள்ளிகள்

இளைய தலைமுறையினருக்கு முறையாக தமிழிசையைக் கற்பிக்க 8 சைவத் திருக்கோயில்களில் தொடங்கப்பட்ட தேவார இசைப் பள்ளியில் 93 மாணவர்களும், 7 வைணவத் திருக் கோயில்களில் தொடங்கப்பட்ட திவ்வியப் பிரபந்த இசைப்பள்ளியில் 98 மாணவர்களும் சேர்ந்து பயன்பெறுகின்றனர். உள்ளூர் மாணவர்களுக்கு ரூ.300 வீதமும், வெளியூர் மாணவர்களுக்கு ரூ.600 வீதமும் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

### நாதசுர இசைப் பயிற்சிப் பள்ளி

திருக்கோயில்களில் இசைக்கப்படும் இசைக் கருவிகளான நாதசுரம், தவில் போன்ற கருவிகளை முறையோடு பயில,

10 திருக்கோயில்களில் தொடங்கப்பட்ட நாதசுரம்/தவில் பயிற்சிப் பள்ளிகளில் 88 மாணவர்கள் சேர்ந்து நாதசுர இசையும், 50 மாணவர்கள் சேர்ந்து தவில் இசையும் பயின்று பயன் பெறுகின்றனர்.

### புத்தொளிப் பயிற்சித் திட்டம்

திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள்/பட்டாச்சாரியர்கள்/ஓதுவார்கள்/கிராமக்கோயில் பூசாரிகள் மற்றும் இசைக்கலைஞர்களுக்கு பூசை முறைகளை ஆகம விதிகளின்படி செய்திட வகை செய்யும் புத்தொளிப் பயிற்சித் திட்டம் தகுந்த வல்லுநர்களைக் கொண்டு ஓராண்டு காலத்திற்கு 23 மையங்களில் தொடங்கப்பட்டு, 378 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.



### நாதசுரம், தவில், தாளம் இசைக்குழு நியமனம்

நிதி வசதியற்ற புராதனமான திருக் கோயில்களில், நாதசுர மங்கள இசை மீண்டும் ஒலிக்கும் வகையில், முதற்கட்டமாக 26 புராதன திருக்கோயில்களில் நாதசுரம், தவில், தாளம் ஆகிய இசைக்குழு ஏற்படுத்தி, முறையே ரூ.1000, ரூ.750, ரூ.500 வீதம் ஊதியம் வழங்கிட, ஆலய மேம்பாட்டு நிதி வட்டியிலிருந்து ஒரு கோடி ரூபாய் தனி முதலீடு செய்து, அதன்மூலம் பெறப்படும் வட்டித் தொகையினை இத் திட்டத்திற்குப் பயன்படுத்த அரசு ஆணை பெறப்பட்டுள்ளது.

### திருக்கோயில் ஓவியங்கள், சிற்பங்கள், திருவிழாக்கள், ஒலி-ஒளி நாடா தயாரித்தல்

திருக்கோயில்களில் உள்ள ஓவியங்கள், சிற்பங்கள், நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் பிற முக்கிய அம்சங்களை ஒலி, ஒளி நாடா மூலம் தயாரித்து நிரந்தர கலையம்சமாகப் பாதுகாத்திட முதற்கட்டமாக ஆறு முதுநிலைத் திருக் கோயில்கள் தேர்வு செய்யப்பட்டு, கோயில் ஒன்றுக்கு ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டில் ஒலி-ஒளி நாடா தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ஆதிதிராவிடர் மிகவும் பிற்படுத்தப்பட்டவர் குடியிருப்புகளில் உள்ள இத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

திருப்பணி - திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி மூலம் இத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதியில் உள்ள 50 கோயில்கள் தேர்வு செய்யப்பட்டு, கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் நிதியுதவி அளித்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

### குடமுழுக்கு விழாக்கள்

தமிழகத்தில் உள்ள பாடல்பெற்ற, மங்களாசாசனம் செய்யப் பெற்ற, சரித்திர முக்கியத்துவம் வாய்க்கப் பெற்ற திருக்கோயில்களில் முதற்கட்டமாக 1000 திருக் கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யப்படும் என அரசால் அறிவிக்கப்பட்டது. அவ்வறிவிப்பிற்கிணங்க 1996, 1997, 1998 மே மாதம் வரை 988 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன. 1993 முதல் 1995 முடிய மொத்தம் 435 திருக்கோயில்களில் மட்டுமே குடமுழுக்கு விழா நடத்தப் பட்டுள்ளதை ஒப்பிட்டு நோக்கும்போது 1996 முதல் 1998 மே மாதம் வரையிலும் நடைபெற்ற குடமுழுக்கு விழாக்கள் மிகவும் அதிகமாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### திருப்பணி மற்றும் இதர வேலைகள்

1996 முதல் 1998 மே மாதம் வரையிலும் மொத்தம் 1086 திருப்பணி மற்றும் இதர வேலைகள் நடைபெற்றுள்ளன. இவ்வேலைகளுக்கு ரூ.1580.25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1993 முதல் 1995 வரையிலும் திருப்பணி மற்றும் இதர வேலைகள் எண்ணிக்கை 1145 மட்டும். இவ்வேலைகளுக்கு ரூ.1263.78 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

### கிராமக்கோவில் பூசாரிகள் ஒய்வூதியம்

அறநிலையக் கட்டுப் பாட்டில் இல்லாத, கிராமப் புறத்தில் உள்ள திருக் கோவில்களில் பணிபுரிந்த ஒய்வு பெற்ற பூசாரிக்கு மாதம் ரூ.500 வீதம் ஒய்வூதியம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 622 நபர்கள் பயன் பெறுகின்றனர்.

### சிறப்பு வழிபாடு

தீண்டாமை ஒழிப்பை வலியுறுத்தும் வகையில் தமிழகத் திருக்கோவில்களில் ஆண்டுதோறும் விடுதலை நாள், அறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய நாட்களில் சிறப்பு வழிபாடு பொது விருந்து திருக்கோவில்களின் நிதியில் இருந்து நடத்தப்படுகிறது.

1997 ஆகஸ்ட் திங்கள் 15-ம் நாளிலிருந்து 31ஆம் நாள் வரை தமிழகத் திருக்கோவில்களில் மொத்தம் 630180 பொதுமக்களுக்கு சுதந்திரத் திருநாள் பொன்விழா பொது



***திருக்கோயில்களில் உள்ள ஓவியங்கள், சிற்பங்கள், நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் பிற முக்கிய அம்சங்களை ஒலி, ஒளி நாடா மூலம் தயாரித்து நிரந்தர கலையம்சமாகப் பாதுகாத்திட முதற்கட்டமாக ஆறு முதுநிலைத் திருக்கோயில்கள் தேர்வு செய்யப்பட்டு, கோயில் ஒன்றுக்கு ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டில் ஒலி, ஒளி நாடா தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.***

விருந்து அளிக்கப்பட்டது. அதற்கு ரூ.47,076,690-05 திருக்கோவில் நிதியில் இருந்து செலவு செய்யப்பட்டது.

### 1998-99 நடப்புநிதியாண்டில் நிறைவேற்றப்படவுள்ள திட்டங்கள்

★ திருவாரூர் உலோகத்திருமேனிகள் பாதுகாப்பு மற்றும் பார்வை மையத்திற்கு ரூ.49.45 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடம் கட்டப்பட உள்ளது. நடப்பு ஆண்டில் இதற்காக ரூ.20 இலட்சம் செலவிடப்படும்.

★ புதியதாக உருவாக்கப்படவுள்ள அரியலூர், திருவள்ளூர், நாமக்கல், கரூர், திருவாரூர், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்படவுள்ள 8 உதவி ஆணையர் அலுவலகங்களுக்கு, புதியதாக 8 மாருதி வேன்கள் ரூ.29 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

★ தமிழ்நாட்டில் உள்ள 30,000 கல்வெட்டுக்களில் உள்ள குறிப்புகளை அச்சிட்டுப்புத்தகமாக வெளியிடப்பட உள்ளது. முதல்கட்டமாக, நடப்பு ஆண்டில் 10,000 கல்வெட்டுக்களில் உள்ள குறிப்புகளை அச்சிட்டுப் புத்தகமாக வெளியிட ரூ.8.25 இலட்சம் செலவிடப்படும்.

★ நிலை-3ல் 100 செயல் அலுவலர் பணியிடங்கள் மற்றும் நிலை-4ல் 100 செயல் அலுவலர் பணியிடங்கள் ஆக மொத்தம் 200 பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப் படும். இதற்காக ஆகும் செலவு ரூ.114.17 இலட்சமாகும்.

★ உதவி ஆணையர் நிலையில் உள்ள 7 திருக்கோயில் பணியிடங்களைத் துணை ஆணையர் நிலைக்கும், செயல் அலுவலர் நிலை-1ல் உள்ள 16 திருக்கோயில் பணியிடங்களை உதவி ஆணையர் நிலைக்கும், செயல் அலுவலர் நிலை-2ல் உள்ள 7 திருக்கோயில் பணியிடங்களை செயல் அலுவலர் நிலை-1க்கும், செயல் அலுவலர் நிலை 3ல் உள்ள 10 திருக்கோயில் பணியிடங்களை நிலை 2க்கும், செயல் அலுவலர் நிலை 4ல் உள்ள 8 திருக்கோயில் பணியிடங்களைச் செயல் அலுவலர் நிலை 3க்கும் நிலை உயர்வு செய்யப்படும். இதற்கு ஆகும் செலவினம் ரூ.8.14 இலட்சமாகும்.

★ திருக்கோயில்களில் தணிக்கை நிலுவைகளைக் குறைக்கப் புதியதாக 50 தணிக்கை ஆய்வர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இதற்காக ஏற்படும் செலவினம் ரூ.27.68 இலட்சமாகும்.

★ பழனி, அருள்மிகுதண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் ஒரு புதிய கூடுதல் ஆணையர் பதவி ஏற்படுத்தப்படும். இதற்காகும் செலவினம்ரூ.1.68 இலட்சமாகும்.

★ அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் இல்லாத ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்கள் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்காக 100 திருக்கோயில்களுக்கு ரூ.12.50 இலட்சம் நிதி உதவி வழங்கப்படும்.

★ இந்துசமய அறநிலையத்துறையில் உள்ள 10 மண்டல இணை ஆணையர் அலுவலங்களில் ரூ.10 இலட்சம் செலவில் 'கணிப்பொறி' வசதி செய்யப்படும்.

★ தற்போது ஆண்டுதோறும் திருக்கோயில் திருப்பணிக்காக வழங்கி வரும் அரசு மானியம் ரூ.45 இலட்சத்திலிருந்து, ரூ.75 இலட்சமாக உயர்த்தப்படுகிறது.

★ பாடல்பெற்ற மற்றும் மங்களாசாசனம் பெற்ற 50 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு செய்யப்படும்.

★ ரூ.2.40 இலட்சம் செலவில் மங்களாசாசனம் மற்றும் பிரசித்தி பெற்ற சரித்திரப்புகழ் வாய்ந்த 20 திருக்கோயில்களில் நாதசுரக் கலைஞர்கள் பணியிடம் ஏற்படுத்தப்படும்.

★ ரூ.21 இலட்சம் செலவில் 99 திருக்கோயில்களில் கூடுதலாக 100 ஓதுவார்கள் நியமனம் செய்யப்படுவர்.

★ 10 திருக்கோயில்களில் ஒலி-ஒளி நாடா தயார் செய்யப்படும். இதற்காகும் செலவு ரூ.11 இலட்சமாகும்.

★ 1000 திருக்கோயில்களில் ஒருகால பூசை நிதியுதவித் திட்டம் கூடுதலாக ஏற்படுத்தப்படும். இது வகைக்கு ரூ.225 இலட்சம் செலவு ஏற்படும்.

★ திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை செய்யப்படும்.

★ நகைகள் மதிப்பீட்டிற்கு உயர்மட்டக்குழு ஏற்படுத்தப்படும்.

★ திருக்கோயில்களில் வழிபடுவோர் தங்குவதற்காக 50 தங்கும் விடுதிகள் கட்டப்படவுள்ளன.

★ ரூ.3.10 இலட்சம் செலவில் சைவத்திருமுறை ஆகமங்கள் மற்றும் வைணவ திவ்யப் பிரபந்தப் பயிற்சி மையம் ஏற்படுத்தப்படும்.

★ புதிதாக காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், கும்பகோணம், கடலூர் ஆகிய இடங்களில் உற்சவ விக்கிரகங்கள் பாதுகாப்பு மையங்கள் கட்டுவதற்கு பகுதி-2 திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த வகைக்கு ரூ.20 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட, 20 திட்டங்களுக்கும் மொத்தம் ரூ.588.92 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# ம ணிக்கணக்கில் நிறைவேறும் மக்களின் தேவைகள் !

## கலைஞர் அரசு அறிவித்த "நமக்கு நாமே" திட்டம் - கனவுகளை நனவாக்குகிறது

### "நமக்கு நாமே" திட்டத்தின் ஆற்றல் - நடைமுறை நிரூபணம்

*'இந்து' நாளிதழிலிருந்து...(15. 6. 98)*





கேட்பதற்கு விநோதமாக இருக்கலாம்; ஆனாலும் உண்மையிலும் உண்மை! ஒற்றை மெழுகுவர்த்தி, நூறு மெழுகுவர்த்திகளுக்கு ஒளியூட்டுவதுபோல், உன்னதச் செயல் ஒன்று தொடர்ந்து வரும் உயரிய செயல்களுக்கெல்லாம் தூண்டுதலாக அமையும் என்பது நிரூபணம்.

திருச்சி - மணிகண்டம் ஊராட்சி ஒன்றியத்தின் சேதுராப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட மக்கள், தங்கள் கிராமத்தில் கால்நடை மருத்துவத் துணை நிலையம் ஒன்றைத் தொடங்க வேண்டும் என்று ஒருமித்த குரலில் மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டனர்.

இதனை, "நமக்கு நாமே" திட்டத்தின்கீழ் செயல்படுத்த இயலும் என்றும் அதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்த மறுகணமே, நிலக்கிழார் திரு.ஆர்.மூர்த்தி, தன்னுடைய நிலத்தை, கால்நடை மருத்துவமனை கட்டுவதற்கு இலவசமாகத் தர முன்வந்தார். உடன் மாவட்ட ஆட்சியர் 10 மூட்டை சிமெண்ட் வாங்குவதற்காக ரூ.1300-ஐ அன்பளிப்பாக வழங்குவதாகத் தெரிவித்தார். ஊராட்சித் தலைவர் திரு.ராமு, செங்கற்கள் இலவசமாக வழங்குவதாகவும், உள்ளூர் மக்களின் பங்காக ரூ.25,000 வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

தொடர்ந்து திரு.ஆறுமுகம், ரூ.10,000 அன்பளிப்பாகத் தருவதாகவும், அடித்தளம் அமைப்பதற்கான கருங்கற்களை வழங்குவதாக திரு.வளன்கன்னி என்பவரும் அந்த இடத்திலேயே அறிவித்தனர். தேவையான கொத்தனார்களையும் ஆண், பெண் வேலையாட்களையும் ஏற்பாடு செய்து தருவதற்கு கட்டட மேஸ்திரி திரு.பி.கே.மூர்த்தி முன்வந்தார். நாகமங்கலம் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு.கருப்பையா மூன்று மரக்கதவுகளையும், ஆறு சன்னல்களையும் அன்பளிப்பாக வழங்கிட முன்வந்தார். அடித்தளத்திற்கு சரளைக்கற்களை அளிப்பதாக திரு.சக்திவேல் தெரிவித்தார். லாரி உரிமையாளரான திரு.அழகிரிசாமி, கட்டடம் கட்டத்தேவையான மணலை எடுத்து வர தன்னுடைய லாரியை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்தார். உள்ளூர் மக்களின் உற்சாகத்தைக் கண்ட மணிகண்டம் ஒன்றியத்தின் கால்நடை மருத்துவர் டாக்டர் சுந்தரராசன், மருத்துவமனைக்குக் தேவையான மேசை, நாற்காலிகள், மின் விசிறி ஆகியவற்றிற்கான தொகையைத் தருவதாக உறுதி கூறினார். பொதுமக்களிடமிருந்து வரவேற்பும், அமோகமான ஆதரவும் வந்ததால், உடனடியாகக் கால்கோள் நிகழ்ச்சியை நிகழ்த்த விரும்பினர்.

மக்களின் அமோக ஆதரவால் அரசின் உதவியுடன் கிராமத்து மக்களின் நீண்ட நாள் கனவு இரண்டே மணி நேரத்தில் நனவானது.





**இந்த "நமக்கு நாமே" திட்டம், தமிழகத்தின் உயிர்நாடிகளான பட்டிதொட்டிகள் கிராமப் பகுதிகளை வளமிக்கதாகவும் வசதிமிக்கதாகவும் ஆக்கிட மக்களும் மாநில அரசும் உழைப்பையும் உரிய நிதியையும் வழங்கிடத் தயாராக இருப்பதற்கு உயர்ந்ததோர் எடுத்துக்காட்டாகும்.**



# குமாரசாமி ராஜா

*முன்னாள் தமிழக முதல்வர் திரு.குமாரசாமி ராஜா அவர்கள் நூற்றாண்டு விழாவை யொட்டி இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது.*

பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ராஜபாளையத்தில் - 8.7.1898ல் பிறந்தவர்தான் பூ.ச.குமாரசாமி ராஜா அவர்கள். இப்போது விருதுநகர் மாவட்டத்தில் இவ்வூர் உள்ளது.

குமாரசாமி ராஜாவின் தந்தையார் பூசப்பாடி சஞ்சீவராஜா; குமாரசாமி ராஜா பிறந்த எட்டாவது நாளே ஈன்ற அன்னையார் முத்தம்மாள் இயற்கை எய்தினார். இவர்கள் குடும்பம் சுமார் 400 ஆண்டுக் காலத்திற்கு முன்பு - அதாவது கிருஷ்ண தேவராயர் காலத்தில் இராசபாளையத்திற்குக் குடிபெயர்ந்து வந்ததாகும்.

குமாரசாமி ராஜாவின் வாழ்க்கை இளமையிலிருந்தே தனித்தன்மை வாய்ந்தது. அவருடைய இளமை வாழ்க்கை உள்ளத் துணிச்சலையும், உறுதிப்பாட்டையும் தடைகள் வரினும் தளராது தயங்காது செல்லும் ஊக்கத்தையும் அவருக்கு அளித்தது. எட்டு நாள் குழந்தையாக இருக்கும் போதே தாயை இழந்தார். மூன்று வயதிலேயே தந்தையை இழந்தார். உடன்பிறந்தார் யாருமில்லை. அவருடைய தந்தைக்கும் உடன்பிறந்தார் இல்லை. எனவே தமது வம்சத்தின் ஒரே குலக் கொழுந்தாய் தந்தைவழிப் பாட்டியின் பாராமரிப்பில் வளரலானார். அருமைப் பேரனை அகலவிடாது அருகே வைத்துக் கொள்ள, பாட்டி முயன்றாலும் பேரனுக்கோ துள்ளலும், துடிப்புமாக தோழர்களோடு விளையாடுவதிலேதான் விருப்பம் இருந்தது. இந்தச் சுதந்திர உணர்வே இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பிற்காலத்தில் ஈடுபடுவதற்கு ஆதாரமாக அமைந்தது.



தொடக்கக் கல்வியை உள்ளூரில் முடித்து, உயர்நிலைப் பள்ளிக் கல்விக்காக திருவில்லிப்புத்தூர் சென்றார். படிப்பை விட விளையாட்டிலேதான் அவரது திறமை வெளிப்பட்டது. அந்த இளம் பருவத்திலேயே பாடப் புத்தகங்களை விட நாளிதழ்களில் நாட்டம் அதிகம் ஏற்பட்டது.

அன்னிபெசன்ட் அம்மையாரின் 'ஹோம் ரூல்' இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு அரசியலில் அடியெடுத்து வைத்தார்.

அவரது வெடிப்புறப் பேசும் தன்மையும், வனப்புமிக்க வாலிபத் தோற்றமும், எவருக்கும் உதவும் ஈரநெஞ்சும் மாணவர்கள் நடுவேமட்டுமல்லாமல் மக்கள் மத்தியிலும் அவருக்குப் பெரும் செல்வாக்கைப் பெற்றுத்தந்தன.

1919-ல் அவர் திருவில்லிபுத்தூரில் தமது உயர்நிலைப் பள்ளிக் கல்வியை நிறுத்திவிட்டு இராஜபாளையத்திலேயே தங்கத் தொடங்கினார். அந்த ஆண்டு அவரது வாழ்வில் மறக்க முடியாத ஆண்டு - அண்ணல் காந்தியடிகளை அவர் சந்தித்த ஆண்டு!

காந்தியடிகளைக் கண்டதும், அவரால் கவரப்பட்ட குமாரசாமி ரௌலட் சட்டத்தை எதிர்த்து சத்தியா கிரகத்தில் ஈடுபட்டார். காங்கிரஸ் இயக்கம் அவரது மூச்சும் பேச்சும் ஆனது.

1912-ஆம் ஆண்டில் அவருக்குத் திருமணம் நடந்தது. 1919ல் மனைவி மறைந்தார். 1920, மே மாதத்தில் அவர் மறுமணம் செய்துகொண்டார்.

காங்கிரஸ் பணிகளிலே தம்மை முழுதும் ஈடுபடுத்திக் கொண்ட குமாரசாமி மதுவிலக்கு பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டார். தீண்டாமை ஒழிப்பு, தமது பகுதியிலே குடிசைத் தொழிலாகக் கதரை வளர்ப்பது ஆகியவற்றில் அவரது பணிகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

ஒவ்வொரு அரசியல் தொண்டரையும், சமூகத் தொண்டரையும் ஆதரிக்கும் புகலிடமாக அவரது இல்லம் விளங்கியது.

கூட்டுறவுத் தத்துவத்தில் நாட்டம் கொண்டிருந்த குமாரசாமி பல கூட்டுறவு அமைப்புகளின் தலைவராக விளங்கினார். இன்று புகழ்பெற்று விளங்கும் பூபதி ராஜா கூட்டுறவு வங்கியைத் தொடங்கிய பெருமை இவரையே சாரும். 1924 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தக் கூட்டுறவு வங்கி, இன்று மகத்தான வளர்ச்சி பெற்று குமாரசாமி ராஜா அவர்களின் உழைப்பையும், முயற்சியையும் உலகிற்கு அறிவித்து நிற்கிறது. இராஜபாளையம் பஞ்சாயத்து தலைவராகவும், தாலுகா கழகம் மற்றும் மாவட்டக் கழகம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் பல்லாண்டு காலம் அவர் பணிபுரிந்துள்ளார்.

1932-ஆம் ஆண்டு அன்னியர் ஆட்சியை எதிர்த்துப் போரடியமைக்காக ஓராண்டு சிறைத் தண்டனை பெற்றார். இந்திய அரசியல் வரைபடத்தில் இராஜபாளையத்திற்கு ஒரு தனி இடம் பெற்றுத் தந்தது குமாரசாமி ராஜா அவர்களின் தியாகத் தலைமையேயாகும். எண்ணமும், சொல்லும், செயலும் அவரிடத்தில் ஒன்றாகவே விளங்கின. இந்த மகத்தான பண்பே அவரை மாபெரும் தலைவராக ஆக்கியது.

1934 ஆம் ஆண்டு காங்கிரஸ் பேரியக்கம் முதன் முதலாகச் சட்டசபைக்குப் போட்டியிட்ட போது மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியின் வேட்பாளராக குமாரசாமி ராஜா நின்றார். தேர்தலில் அவர் பெற்ற வெற்றி ஈடுஇணையில்லாதது. பதிவான வாக்குகளில் 98.5 சதவிகிதம் வாக்குகளை அவர் பெற்றார்.

1936 ஆம் ஆண்டு காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்டுச் சட்டமன்ற உறுப்பினரானார்.

1938 - இல் 40 வது தமிழ்நாடு அரசியல் மாநாடு நடைபெற்றபோது வரவேற்புக் குழுவின் தலைவராக இருந்து குமாரசாமி ராஜா அரும்பணியாற்றினார்.

திரு.காமராஜ் அவர்களும், திரு.ஆர் கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் அந்த வரவேற்புக் குழுவின் செயலாளர்களாக விளங்கினார்கள். காங்கிரசின் தேசிய மாநாடு போல அது அமைந்தது. அப்போதைய முதலமைச்சர் திரு.ராஜாஜி அவர்களும் ஏனைய அமைச்சர்களும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.



முன்னாள் முதலமைச்சர் பி.எஸ்.குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழா
நினைவு மண்டபம் மற்றும் திருமண மண்டப அமைப்புப் பணிகளை
மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ.முல்லைவேந்தன்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.க.முத்துசாமி,
மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கிருஷ்ணன் ஆகியோர் பார்வையிடுகிறார்கள்.

1939 - இல் இரண்டாம் உலகப் பெரும் போர் நடைபெற்றவேளையில், இந்தியாவின் மீது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் போர் முயற்சிகளைத் திணித்தபோது காங்கிரஸ் அரசுகள் பிரிட்டிஷ் இந்திய அரசோடு ஒத்துழைக்க மறுத்தன. எனவே, சட்டசபைகளும், அமைச்சரவைகளும் கலைக்கப்பட்டன. குமாரசாமி ராஜா சட்டமன்ற உறுப்பினர் பதவி இழந்தார்.

தனி நபர் சத்தியாகிரகத்தில் பங்கு கொண்டதால் ஒன்பது மாதச் சிறைத் தண்டனையும், 300 ரூபாய் அபராதத் தொகையும் விதிக்கப்பட்டார். சிறைச்சாலையில் கூட தனித்து ஒதுங்கியிராமல் சமையலறைப் பொறுப்பேற்று மற்றவர்கு வயிறார உணவூட்டி மகிழ்ந்தார்.

விடுதலைக்குப் பிறகு மறுபடியும் உள்ளாட்சி நிர்வாகம், மற்றும் கூட்டுறவு இயக்கங்களில் ஈடுபட்டார். மாணவர்களுக்கான 'ஸ்கௌட்' இயக்கம் இவரைப் பெரிதும் கவர்ந்தது. சென்னை, அடையாற்றில் தலைமையகம் கொண்டிருந்த 'இந்துஸ்தான் ஸ்கௌட் அசோசியேஷனுக்குத்' தலைவராக விளங்கினார்.

1946 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருவில்லிப்புத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு உறுப்பினராகப் போட்டியின்றித் தேர்வு பெற்றார்.

திரு.டி.பிரகாசம் தலைமையில் அமைந்த அமைச்சரவையில், வேளாண்மைத்துறை அமைச்சுப் பொறுப்பு அவரைத் தேடி வந்தது. முதலமைச்சர் பிரகாசம் அவர்களுக்கும் இவருக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமையின் காரணமாக 1947-பிப்ரவரியில் குமாராசாமி ராஜா அமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.

1949-ஏப்ரலில், திரு.குமாரசாமி ராஜா அவர்கள் சென்னை மாநில முதலமைச்சராகப் பதவியேற்றார். அவரது அமைச்சரவை ஒரு மகிழ்ச்சிகரமான குடும்பத்தைப் போல விளங்கியது. தமது அமைச்சரவையின் உறுப்பினர்களிடம் காட்டிவந்த அன்பும், மதிப்பும், அவர்கள் இவரிடம் காட்டிவந்த அன்பும் - மதிப்பும் குறிப்பிடத்தக்க அளவில் அமைந்திருந்தன.

அவரது ஆட்சிக் காலத்தில் அவர் கொண்டுவந்த மிகப்பெரிய சீர்திருத்தம் நிர்வாகத் துறையிடமிருந்து நீதித்துறையைத் தனியே பிரித்ததாகும். இவ்வகையில் முன்னோடியாக விளங்கி ஏனைய மாநிலங்களும் பின்பற்ற வழிவகுத்தார்.

ஒரு முடிவை அவர் எடுத்த பிறகு, எதற்காகவும் யாருக்காகவும் அதிலிருந்து பின்வாங்க மாட்டார். அபத்தமான கோரிக்கைகளை தமக்கு வேண்டியவர்கள் வைத்தாலும் அப்போதே கண்டித்தார். சட்டத்தையும், நீதியையும் கண்களாக மதித்த ராஜா அடுத்த தேர்தலைப் பற்றி நினைத்ததில்லை. எனவே, 1952-ல் ஜனவரி மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவர் தோற்கடிக்கப்பட்டார்.

இயல்பாகவே கலையிலும், கலாச்சாரத்திலும் பேரார்வம் கொண்டவர் குமாரசாமி ராஜா. ஆகவே தீவிர அரசியலிலிருந்து தம்மை விடுத்துக் கொண்டவுடன், அந்தக் கலைகளை வளர்ப்பதற்காகக் காந்தி கலை மண்டபத்தைத் தோற்றுவித்தார். அவருடைய இல்லமும் உடைமைகளும் அந்த மன்றத்திற்கே வழங்கப்பட்டன.

மன்ற வளர்ச்சிக்கான பணிகளில் அவர் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தபோது, ஆளுநர் பதவி அவரைத் தேடி வந்தது. காந்தி கலை மன்றத்தை விட்டுப் பிரிய மனமில்லாமல் இருந்தாலும் நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க 1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒரிசா மாநில ஆளுநராகப் பதவியேற்றார்.

இரண்டாண்டுகளுக்கு மேல் அப்பணியில் இருந்த திரு.குமாராசாமி ராஜா உடல்நலம் சீர்குலைந்ததன் காரணமாக அந்தப் பதவியிலிருந்து விலகினார்.

இராஜபாளையம் திரும்பிய திரு.ராஜா, காந்தி கலை மன்றத்தின் வளர்ச்சிப் பணிகளில் முழுமூச்சாக ஈடுபட்டார்.

1941-ல் அவர் சிறையிலிருந்து வெளியான போதிருந்தே சர்க்கரை நோயின் கடுமை தொடங்கியிருந்தது. இடையில்லாத பொதுநலப் பணிகளால், கடுமையான உழைப்பால் அவர் உடல், சீர்கேடு அடைந்தது. 14-3-1957 அன்று ஐதராபாத்திலிருந்து சென்னை திரும்பிய திருராஜா 15-3-1957 அன்று காலையில் வழக்கம்போல் நண்பர்களைக் காணப் புறப்பட்டார். காலை 9.00 மணிக்கு, திடீரென மயக்கமுற்று சென்னை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் அன்று மாலை 7.00 மணிக்கு மாரடைப்பு கா, காரணமாக உயிர் நீத்தார்.

மறுநாள் அவரது பூத உடலுக்கு இராஜபாளையத்தில் இந்தியத் திருநாடே அஞ்சலி செலுத்தியது.

1978ல் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.சஞ்சீவரெட்டி அவர்கள் அமரர் குமாரசாமி ராஜா அவர்களின் திருவுருவச் சிலையை இராஜபாளையத்தில் திறந்து வைத்தார்.

8.7.98 அன்று முன்னாள் முதலமைச்சர் பிஎஸ்.குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழா விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், ஜவஹர் திடலில், தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்புடன் நடைபெறுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் சிங்கராஜா கோட்டை ராஜாக்கள் சங்கம் கட்டியுள்ள பிஎஸ்.குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழா திருமண மண்டபம், திருமண மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள குமாரசாமி ராஜா திருவுருவச்சிலை, புதுப்பிக்கப்பட்டுள்ள காந்தி கலை மன்றம், நூல் நிலையம், பிஎஸ்.குமாராசமி ராஜா திருவுருவப்படம் ஆகியவற்றைத் திறந்து வைத்து, குமாரசாமி ராஜா நினைவிடத்தில் அணையா ஜோதி ஏற்றி விழாப்பேருரையாற்றுகிறார்கள்.

இந்திய சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டில் குமாரசாமி ராஜா அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. நாட்டுக்கும், மொழிக்கும் பாடுபட்ட நல்லோரை, அவர்களது நினைவை, போற்றிப் பாராட்டும் கலைஞர் அவர்கள் அரசின் சார்பில் குமாராசாமி ராஜாவின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது பொருத்தமானது. போற்றிப்புகழத்தக்கது. ★

# கலைஞர் ஆட்சியில் விருதுநகர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

*உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்.*
*வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்.*

**ச. கிருஷ்ணன், இ.ஆ.ப.,** மாவட்ட ஆட்சித் தலைவர்

- என்றார் மகாகவி பாரதியார் அவர்கள். அவ்வகையில் அரசு மக்களின் நல் வாழ்வுக்காக நல்ல பல திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் பயன்கள் காலதாமதமின்றி விரைவாக மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற கொள்கையில் அரசு உறுதியாக இருக்கிறது.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு துறைகளின் மூலமாக அரசின் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்களுக்கு விரைவாகச்சென்றடைந்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

அரசு பொறுப்பேற்றவுடன் சமூகநலத்துறையின் வாயிலாக ஏழை மகளிருக்கு திருமண உதவியாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்திற்கு 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி ஆணை வெளியிட்டது. இதன்பேரில் விருதுநகர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் இந்நாள் வரை 2,059 பேருக்கு ரூ.2,05,90,000 வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.1,83,60,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூ.67,20,000 அதிகம் ஆகும். விதவை திருமண உதவித் திட்டத்தின் கீழ் 9 பேருக்கு ரூ.55,000 வழங்கப் பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.40,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விதவை மகள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் சென்ற நிதி ஆண்டு வரை 75 பேருக்கு ரூ.1,96,000 வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு ரூ.1,50,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அஞ்சுகம் அம்மையார் கலப்பு திருமண உதவித்திட்டத்தின் கீழ் 22 பேருக்கு ரூ.2,70,000 வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.1,70,000 நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

ஆதரவற்ற பெண் திருமண உதவித் திட்டத் தின் கீழ் 6 பேருக்கு ரூ.17,000 வழங்கப் பட்டுள்ளது. நடப் பாண்டில் இத்திட்டத்திற்கு ரூ.10,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



விதவை, கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் ஊனமுற்றோருக்கு மொத்தம் 130 பேருக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கப் பட்டுள்ளது.

பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் இதுவரை 966 பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

**வி**ருதுபட்டி என்று முன்னாளில் அழைக்கப்பட்ட விருது நகரைத் தலைநகரமாக கொண்ட விருதுநகர் மாவட்டம் 1985 ஆம் ஆண்டு மார்ச் 15 நாள் உருவாக்கப்பட்டது. இம்மாவட்டம் அருப்புக்கோட்டை, சாத்தூர், விருதுநகர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம் ஆகிய ஆறு சட்டப்பேரவைத் தொகுதிகளையும் சிவகாசி நாடாளுமன்றத் தொகுதியையும் கொண்டது. இதன் பரப்பளவு 4,243,2 ச. கி.மீ. மக்கள் தொகை 15,65,037.

குமாரசாமி ராஜா, காமராஜர் ஆகிய முதலமைச்சர்களை தமிழ்நாட்டுக்கு அளித்து பெருமை கொண்ட மாவட்டம் இது. சென்னை மாகாணம் என்றப் பெயரை தமிழ்நாடு என பெயர் மாற்றக் கோரி தனது இன்னுயிரை இழந்த வீரர் சங்கரலிங்கனார் தோன்றிய மாவட்டம் இது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஆட்சியில் இம்மாவட்டம் அடைந்த வளர்ச்சி விவரங்கள் இவ்விதழில் இடம் பெறுகின்றன.



டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டத்தின் கீழ் 15.034 கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.30,06,800 வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டிற்கு 17 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விதவைத் தாய்மார்கள் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் 2,258 மாணவர்களுக்கு ரூ.83,500 மதிப்புள்ள இலவச பாடநூல் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு 65 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விருதுநகர் அரசு குழந்தைகள் காப்பகத்தில் 180 ஆதரவற்ற குழந்தைகள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு உணவு, உறைவிடம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இலவச பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

### மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

### ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்

விருதுநகர் மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் 1996-97 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.518.73 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 1,580 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் ரூ.593.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, 903 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

*விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர், திரு.ச.கிருஷ்ணன் இ.ஆ.ப அவர்களைச் சந்தித்தபொழுது, மாவட்ட வளர்ச்சி பற்றி அவர் குறிப்பிட்டவை :*

"**க**டந்த ஆண்டை ஒப்பிடுகையில், சட்டம் - ஒழுங்குப் பிரச்சினை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, இவ்வாண்டில், வளர்ச்சித் திட்டங்களை முடுக்கி விட்டு, விரைந்து பணியாற்றிடும் வகையில் திட்டமிடடுச் செயல்படுத்தி வருகிறோம்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப் பட்டுள்ள "நமக்கு நாமே" - திட்டத்தைப் பொறுத்தவரையில், நல்ல ஈடுபாட் டோடு, பொதுமக்கள் பங்கேற்கின்றனர். ஜோகில்பட்டி என்ற கிராமத்தில் மாறுகால், வரத்துக்கால் சீரமைப்பு போன்ற பணிகளில் அரசோடு பங்கேற்று செயல்படுத்துவதில் கிராம மக்கள் அதிக அக்கறை காட்டிப் பணியாற்றினர். பள்ளிக் கட்டடங்கள், ஆதிதிராவிட மாணவர் விடுதிகள் போன்ற பொதுக் காரியங்களுக்கு மனமுவந்து இனாமாக நிலம் தர முன் வருகின்றனர். மறவன் குளம் என்ற பகுதியில், 40,50 ஆண்டுகளாகத் தூர் வாராமல் கிடந்த குளம் கிராம மக்களின் ஒத்துழைப் பில் சீரமைக்கப்பட்டது. முத்துராமலிங்க புரம் என்ற ஊரில், மேனிலைப்பள்ளி மேம்பாட்டிற்கு, கிராமமக்கள் மனமுவந்து நிதியுதவியளித்துள்ளனர்.

சிவகாசிக்கு அருகில் ஆனையூர் என்ற கிராமத்தின் குடிநீர்த் திட்டம் பொதுமக்களின் முழு ஒத்துழைப்போடு நிறைவேற்றப்பட்டது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு ஏழைப்பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தில் முறைகேடுகள் ஏதும் நடந்துவிடாமல் மிகுந்த முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். அதனடிப்படையில், திருமண நாளுக்கு முன்னர் விண்ணப்பிக்கும்பொழுது, உரிய சான்றிதழ்கள் அனைத்தையும் இணைக்க இயலாவிட்டால், முதலில் விண்ணப்பத்தையும், அழைப்பிதழையும் இணைத்து மனுச் செய்துவிட்டுப் பின்னர் உரிய சான்றிதழ்களைக் கொடுத்தால் போதுமானது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இவ்வுதவித் தொகைகள் பொதுமக்கள் கூடுகின்ற ஏதாவதொரு பொதுநிகழ்ச்சியில் வழங்கப்படுகின்றன. அதேபோன்று இலவசப் பட்டாக்கள், தொழில்கருவிகள் போன்றவற்றையும் பொதுமக்கள் முன்னிலையில் வழங்குவதை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ் 85 பள்ளிகள் உள்ளன. இவற்றில் சுமார் 4,500 குழந்தைத் தொழிலாள மாணவர்கள் பயிலுகின்றனர். இத்தகையோர் பள்ளியில் பயிலுவதை ஊக்குவிக்கும் நோக்கில், இப்பள்ளிகளில் சத்துணவுத் திட்டத்தை விரிவு படுத்தியுள்ளோம்.

குழந்தைத் தொழிலாளர் நிதித் திட்டத்தின் கீழ், தையல்கருவிகள், தொழில் கருவிகள், தளவாடங்கள், விளையாட்டுச் சாதனங்கள் வழங்கிடும் வகையில், ஒவ்வொரு பள்ளிக்கும் தலா ரூ.10,000 வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காவல்துறைக் குடியிருப்புகளில், அடிப்படை வசதிகள் குறித்த குறைபாடுகளைக் களையும் அடிப்படையில் அப்பகுதிகளுக்கு நேரில் சென்று, காவலர்களின் குறைகள் கேட்கப்பட்டன. பொதுப்பணித்துறை, நகராட்சி, மின்துறை அலுவலர்களுடன் அவ்விடத்திலேயே விவாதித்து தெருவிளக்கு, குடிநீர் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வகை செய்யப்பட்டது. அரசு ஆணையின்படி தனித்தனி மின்மீட்டர்கள் பொருத்தும் பணியில் நிலவிய இடர்ப்பாடுகள் களையப்பட்டன.

வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு குளம் அல்லது ஒரு ஊரணி அல்லது கசிவுநீர்க்குட்டை எனும் அடிப்படையில், ஒவ்வொன்றிற்கும் ரூ.2.5 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சம் வரை செலவிட உத்தேசித்துள்ளோம்.

இரா.பரதன்
துணை இயக்குநர்



## இந்திரா ஆவாஸ் யோஜனா

இத்திட்டத்தின் கீழ் 1996-97ஆம் ஆண்டு ரூ.455.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு1884 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் ரூ.416.215 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 589 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் 718 தொகுப்பு வீடுகள் எடுக்கப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது.

## வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் ஆண்டு ரூ.727.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, மொத்தம் 934 பணிகள் முடிக்கப்பட்டன. 1997-98 ஆம் ஆண்டில் ரூ.1087.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 706 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. 160 பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. 1998-99 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் ரூ.1,087.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1996-97ஆம் ஆண்டில் ரூ. 219.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, அதன் மூலம் 3,660 பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது. 1997-98ஆம் ஆண்டில் ரூபாய் 223 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, அதன் மூலம் 2,729 பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.223 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

## சுயவேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் ஆண்டில் 407 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். 1997-98 ஆம் ஆண்டில் 331 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 1998-99 ஆம் ஆண்டில் ரூ.38.004 இலட்சம் செலவில் 800 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1997-98 ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.198.25 இலட்சம் ஆகும். மத்திய ஊரக சுகாதாரத் திட்டத்தின் கீழ் 525 கழிவறை கட்டும் பணிகளும்,7 பள்ளிக் கட்டடங்களும், 110 தொகுப்பு வீடுகளும், 27 சாலைப் பணிகளும் போன்ற 111 பணிகள் எடுக்கப்பட்டு 38 பணிகள் முடிவடைந்துவிட்டன. மீதி பணிகள் நடைபெற்று வருகின்றன.

1998-99 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 6 சட்டமன்றத் தொகுதிகள் அடங்கிய வெள்ளூர், பாளையம்பட்டி, மகாராஜாபுரம், கிருஷ்ணாபுரம், காயில்பட்டி, ஆலடிப்பட்டி ஆகிய 6 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கென அரசு ரூ.216.818 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

## நமக்கு நாமே திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1997-98 ஆம் ஆண்டில் இம் மாவட்டத்தில் பாலவநத்தம், கன்னிசேரிபுதூர், ஜோகில்பட்டி, நல்லாங்குளம், உலக்குடி, கிருஷ்ணப்பேரி, ஊமத்தம்பட்டி, அப்பைநாயக்கன்பட்டி, குன்னூர், திருவண்ணாமலை, வடக்கு தேவதானம், கிருஷ்ணாபுரம் ஆகிய 12 கிராமங்ககள் தேர்வு செய்யப்பட்டு, ரூ.13 இலட்சம் செலவில் 93 பணிகள் எடுக்கப்பட்டு 87 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

1998-99 ஆம் ஆண்டில் ஆவுடையாபுரம், சத்திரப்பட்டி, சான்சாபுரம், வலையப்பட்டி, ஆணையூர், பிள்ளையார் நத்தம், சத்திரப்பட்டி, சத்திரம்புளியங்குளம், மண்டப சாலை, நாலூர், தூலக்கரை ஆகிய கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ.27,45,000 செலவில் பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் ஆண்டில் ரூ.184 இலட்சங்கள் நிதி பெறப்பட்டு மொத்தம் 115 பணிகள் 465 ஹெக்டேர் மற்றும் 153 கி.மீட்டர் அளவில் மேற்கொள்ளப் பட்டன.

1997-98 ஆம் ஆண்டில் ரூ.115 இலட்சம் நிதி பெறப்பட்டு 57 பணிகள் 21.60 ஹெக்டேர் மற்றும் 13 கி.மீட்டருக்கு மேற்கொள்ளப்பட்டன.



## விருதுநகர் மாவட்டம்

| | | |
|---|---|---|
| தலைநகர் | : | விருதுநகர் |
| பரப்பு | : | 4,243.2 ச.கி.மீ. |
| மக்கள் தொகை | : | 15,65,037 |
| ஆண்கள் | : | 7,84,912 |
| பெண்கள் | : | 7,80,125 |
| வளர்ச்சி விகிதம் (1981-91) | : | 15.92% |
| எழுத்தறிவு | : | 8,52,680 |
| மக்கள் நெருக்கம் (ச.கி.மீ.) | : | 63 |

**நகராட்சி : 6**

இராசபாளையம், அருப்புக்கோட்டை, சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர், சாத்தூர்.

**சட்டபேரவைத் தொகுதிகள் : 6**

அருப்புக்கோட்டை, சாத்தூர், விருதுநகர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், இராசப்பாளையம்

**பாராளுமன்றத் தொகுதி :1**

சிவகாசி

**வருவாய் நிர்வாகம்**

**கோட்டங்கள் : 2**

அருப்புக்கோட்டை, சிவகாசி

**வட்டங்கள்: 7**

ஸ்ரீவில்லிபுத்தூர், இராசபாளையம், சாத்தூர், அருப்புக்கோட்டை, சிவகாசி, விருதுநகர், திருச்சுழி (காரியப்பட்டி புதிய தாலுகாவாக அரசு அறிவித்துள்ளது.

**டவுன் பஞ்சாயத்துக்கள் :10**

திருத்தங்கல், வந்திராமிருப்பு, சேத்தூர், மம்சாபுரம், சுந்தரபாண்டியம், காரியப்பட்டி, செட்டியார்பட்டி, வ.புதுப்பட்டி, எஸ்.கொடிகுளம், மல்லாங்கிணறு.

**ஊராட்சி ஒன்றியம்: 11**

அருப்புக்கோட்டை, விருதுநகர், காரியப்பட்டி, திருச்சுழி, நரிக்குடி, இராசபாளையம், ஸ்ரீவில்விபுத்தூர், வந்திராமிருப்பு, சிவகாசி, வெம்பக்கோட்டை, சாத்தூர்

**கல்வி**

பள்ளிகள் 1,416 (அரசு மற்றும் தனியார்), கல்லூரிகள் 11

**தொழிற்சாலைகள்**

மாவட்டம் முழுமையும் சுமார் 3,932 தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகள் உள்ளன. லித்தோ பிரஸ் 120 உள்ளன. இவைதவிர சென்னை சிமெண்ட் ஆலை மற்றும் தமிழ்நாடு சிமெண்ட் ஆலை போன்றவையும் குறிப்பிடத்தக்கன.

**மழையளவு**

சராசரி 811.7 மி.மீ.

**ஆறுகள்**

அர்ஜுனா ஆறு, குண்டாறு, வைப்பாறு மற்றும் கௌசிக ஆறு

**குறிப்பிடத்தக்கோர்**

குமாரராசாமி ராஜா (ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் முதல் முதலமைச்சர்,) காமராசர்.

**வழிபாட்டிடங்கள்:**

ஆண்டாள் ஆலயம், ஸ்ரீவில்விபுத்தூர்; ரமண மகரிஷி பிறந்த இடம். திருச்சுழி; மாரியம்மன் ஆலயம், இருக்கன்குடி; அய்யனார் கோயில், இராசபாளையம்; வத்திராயிருப்பு அருகில் அர்சுனாபுரம் கிராமத்தையொட்டி நல்லதங்காள் கோயில்.

**சிறப்புகள் . :**

சிவகாசி, பட்டாசு/தீப்பெட்டித் தொழில் மூலம் "இந்தியாவின் ஜப்பான்" என்று அழைக்கப்படுகிறது.

**வரலாறு**

முற்காலத்தில் பாண்டியர்கள் மற்றும் நாயக்கர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. 1985 மார்ச் 15 ஆம் தேதி இம்மாவட்டம் உருவாக்கப்பட்டது.

**அமைவிடம்**

கிழக்கில் இராமநாதபுரம் மாவட்டம்; வடக்கில் மதுரை, சிவகங்கை; தெற்கில் தூத்துக்குடி, திருநெல்வேலி, மேற்கில் கேரள மாநிலம்.

---

1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.46 இலட்சங்கள் நிதி பெறப்பட்டு 51 பணிகள் 155 ஹெக்டேர் மற்றும் 3 கி.மீட்டருக்கு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## வேளாண்மைத்துறை

வேளாண்மைத்துறையின் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறுத் திட்டங்களை உருவாக்கி விவசாயிகளின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை எடுத்து திட்டங்களை சிறப்புற அரசு செயல்படுத்தி வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் 1996-97 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையின் மூலம் விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் மாநில திட்டங்களுக்கு அரசு ரூ.1,51,43,800 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2,501 விவசாயிகள் பயன்பெற்றுள்ளார்கள்.

மைய அரசு திட்டங்களுக்கு ரூ.17,17,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2,107 விவசாயிகள் பயன்பெற்றுள்ளார்கள்.

மைய மாநில அரசுகள் பங்கேற்கும் திட்டங்களுக்கு ரூ.54,25,200 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 13,545 விவசாயிகள் பயன்பெற்றுள்ளார்கள். மொத்தத்தில் விவசாயத் திட்டங்களுக்கு ரூ.2,22,70,700 நிதி ஒதுக்கப்பட்டு, இதன் மூலம் 18,153 விவசாயிகள் பயன்பெற்றுள்ளார்கள்.

1997-98 ஆம் ஆண்டில் மாநில திட்டங்களுக்கு ரூ.1,89,00,970 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 12,097

விவசாயிகள் பயன்பெற்றுள்ளார்கள். மைய அரசுத் திட்டங்களுக்கு ரூ.14,77,500 நிதி ஒதுக்கப்பட்டு, இதன் மூலம் 2,498 விவசாயிகள் பயன்பெற்றுள்ளார்கள்.

மைய மாநில அரசுகள் பங்கேற்கும் திட்டங்களுக்கு ரூ.56,10,200 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.2,58,00,667 ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன் மூலம் 32,378 விவசாயிகள் பயன்பெற்றுள்ளார்கள்.

1996-97 ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி 26,369 ஹெக்டேரில், 1,17,052 மெட்ரிக் டன். தானியங்கள் உற்பத்தி 22,657 ஹெக்டேரில், 32,526 மெட்ரிக் டன். பயறு வகைகள் உற்பத்தி 21,836 ஹெக்டேரில், 7,858 மெட்ரிக் டன். பருத்தி உற்பத்தி 33,491 ஹெக்டேரில் 26,483 மெட்ரிக் டன். கரும்பு 3,759 ஹெக்டேரில் 25,140 மெட்ரிக் டன். கடலை உற்பத்தி 12,246 ஹெக்டேரில், 13,183 மெட்ரிக் டன். எள் உற்பத்தி 5,687 ஹெக்டேரில், 3,181 மெட்ரிக் டன். சோயா மொச்சை 103 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, 49 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மொத்தத்தில் 1,28,241 ஹெக்டேரில் பயிர் வகைகள் பயிரிடப்பட்டுள்ளன.

1997-98 ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி 37,338 ஹெக்டேரில் 1,75,078 மெட்ரிக் டன். தானியம் உற்பத்தி 25,290 ஹெக்டேரில் 44,952 மெட்ரிக் டன். பயறு வகைகள் உற்பத்தி 25,095 ஹெக்டேரில் 9,562 மெட்ரிக் டன்.

பருத்தி 38,578 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, 71,879 மெட்ரிக் டன்னும், கரும்பு 2,951 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, 26,559 மெட்ரிக் டன்னும், கடலை 13,605 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, 12,380 மெட்ரிக் டன்னும், எள் 6,023 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, 1,788 மெட்ரிக் டன்னும், சூரியகாந்தி 3,189 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு 1,317 மெட்ரிக் டன்னும், சோயா மொச்சை 67 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, 54 மெட்ரிக் டன்னும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் நெல் 62 ஹெக்டேரிலும், தானியம் 403 ஹெக்டேரிலும், பயறு வகைகள் 504 ஹெக்டேரிலும், பருத்தி 1,570 ஹெக்டேரிலும், கரும்பு 478 ஹெக்டேரிலும், கடலை 228 ஹெக்டேரிலும், எள் 237 ஹெக்டேரிலும் மொத்தத்தில் 3,482 ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்

விருதுநகர் மாவட்டத்தில், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் கீழ் ரூ. 779.31 இலட்சம் நிதி செலவிடப்பட்டு, 211 குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் வாயிலாக 1,95,453 பேர் பயனடைந்துள்ளனர்.

### தமிழ்நாடு மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் விருதுநகர் மாவட்டத்தில் 1996 ஏப்ரல் திங்கள் முதல் 1998 மே திங்கள் முடிய விவசாயத்திற்காக 958 புதிய மின் இணைப்புகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

குறைந்த மின் அழுத்த தொழில் நிறுவனங்களுக்காக 1,057 புதிய மின் இணைப்புகளும், 539 கூடுதல் மின்பளு இணைப்புகளும், 22 உயர் அழுத்த மின் இணைப்புகளும், 2,263 குடியிருப்புகளுக்கு புதிய மின் இணைப்புகளும், 197 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு மின் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. புதிதாக 5,357 தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளன.

குறைந்த மின் அழுத்தத்தை நிவர்த்தி செய்வதற்காக 4 புதிய துணை மின் நிலையங்கள் ரூ.586.78 இலட்சம் செலவிலும், 3 புதிய கப்பாசிட்டர்கள் ரூ.30 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன.

5 துணை மின் நிலையங்களில் மின் மாற்றியின் திறனை உயர்த்திட ரூ.287.52 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.





மாவட்டத்தில் 4 இடங்களில் 38 கிலோ மீட்டர் நீளத்தில் ரூ.394 இலட்சம் மதிப்பில் புதிய மின் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

குறைந்த மின் அழுத்தந்தை சரி செய்யும் வகையில் 20 கிராமங்களில் ரூ.35.5 இலட்சம் செலவில் மின் மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இராசாபாளையத்திற்கு ரூ.503 இலட்சம் செலவில் 23 மின் மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. சிவகாசி நகரில் ரூ.590 இலட்சம் செலவில் 20 மின் மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன.

### மாவட்டத் தொழில் மையம்

விருதுநகர் மாவட்டத்தில் 1996-97, 1997-98 ஆம் ஆண்டில் மாவட்டத்தொழில் மையத்தின் மூலம் 4,413 பேருக்கு சிறு தொழில் துவங்க தற்காலிகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 3,311 பேருக்கு சிறு தொழில் துவங்க நிரந்தர சான்றிதழ் பதிவு செய்யப்பட்டு அதன் மூலம் 11,633 பேருக்கு வேலைவாய்ப்பும், 1,000 பேருக்கு குடிசைத்



தொழில் செய்ய சான்றிதழ் பதிவு செய்யப்பட்டு, அதன் மூலம் 1,116 பேருக்கு வேலை வாய்ப்பும், 710 பேருக்கு கைவினைத் தொழில் துவங்கச் சான்றிதழ் பதிவு செய்யப்பட்டு அதன் மூலம் 742 பேருக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளன.

பாரதப் பிரதமரின் ரோஜ்கர் யோஜனா திட்டத்தின் கீழ் 1,062 பேருக்கு தொழில் துவங்க ரூ.540.94 இலட்சம் மதிப்பீட்டில் மானியத்துடன் கூடிய கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மின் தங்கிய பகுதிகளில் தொழில் துவங்குவதற்காக 40 பேருக்கு மாநில மூலதன மானியம் மற்றும் சிறப்பு மூலதன மானியமாக ரூ.89.93 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 417 பேருக்கு குறைந்த மின் அழுத்த மின் மானியமாக ரூ.143.33 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 62 பேருக்கு ஜெனரேட்டர் வாங்குவதற்கு மானியமாக ரூ.19.08 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் குடிசைத்தொழில் துவங்க 38 பேருக்கு ரூ.5.29 இலட்சம், கைவினைத் தொழில் துவங்க 20 பேருக்கு ரூ.1.07 இலட்சம், சிறு தொழில் துவங்க 84 பேருக்கு ரூ.368.28 இலட்சம் கடனுதவி வங்கி மூலம் வழங்கப்பட்டுள்ளன.

### மாவட்ட மறுவாழ்வு மையம்

மாவட்ட மறுவாழ்வு மையத்தின் மூலம் 1996-97, 1997-98 ஆம் ஆண்டில் பார்வையுள்ளவர், பார்வையற்றவரை திருமணம் செய்து கொள்ளும் திட்டத்தின் கீழ் 3 பேருக்கு ரூ.30 ஆயிரம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

கடும் உடல் ஊனமுற்றோர்/மனவளர்ச்சி குன்றியோருக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 160 பேருக்கு ரூ.2,52,000 நிதி வழங்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமானவரை உடல் ஊனம் அல்லாதோர் திருமணம் செய்து கொள்ளும் திட்டத்தின் கீழ் 3 பேருக்கு ரூ.15 ஆயிரம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 6 பேருக்கு ரூ.7,200 நிதி வழங்கப்பட்டுள்ளது.

1 ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை பயிலும் ஊனமுற்ற மாணவ,மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 886 மாணவ, மாணவிகளுக்கு ரூ.3,59,275 வழங்கப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர்க்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டத்தின் கீழ் 207 பேருக்கு பஸ் பாஸ் வழங்கப்பட்டு அதற்காக ரூ.66,139 செலவிடப்பட்டுள்ளது.

மூன்று சக்கர வண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 107 பேருக்கு மூன்று சக்கர வண்டி வழங்கப்பட்டு, அதற்காக ரூ.2,67,500 செலவிடப்பட்டுள்ளது.

சக்கர நாற்காலி வழங்கும் திட்டத்தின் கீழ் 10 பேருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டு, அதற்காக ரூ.15,500 செலவிடப்பட்டுள்ளது.



வெம்பக்கோட்டை நீர்த்தேக்கம்

பார்வையற்றோருக்கு கருப்புக் கண்ணாடி வழங்கும் திட்டத்தின் கீழ் 40 பேருக்கு கருப்புக் கண்ணாடி வழங்கப்பட்டு, அதற்காக ரூ.4 ஆயிரம் செலவிடப் பட்டுள்ளது.

காது கேளாதோருக்கு காதொலி கருவி வழங்கும் திட்டத்தின் கீழ் 117 பேருக்கு காதொலி கருவி வழங்கப்பட்டு, அதற்காக ரூ.1,17,000 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது.

பார்வையற்றோருக்கு பிரெய்லி கடிகாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 5 பேருக்கு பிரெய்லி கடிகாரம் வழங்கப்பட்டு, அதற்காக ரூ.2,750 செலவிடப்பட்டுள்ளது.

பார்வையற்றோருக்கு மடக்கு ஊன்றுகோல் வழங்கும் திட்டத்தின் கீழ் 39 பேருக்கு மடக்கு ஊன்றுகோல் வழங்கப்பட்டு, அதற்காக ரூ.3,425 செலவிடப்பட்டுள்ளது.

காலிப்பர் கருவி வழங்கும் திட்டத்தின் கீழ் 34 பேருக்கு காலிப்பர் கருவி வழங்கப்பட்டு, அதற்காக ரூ.43,600 செலவிடப்பட்டுள்ளது.

ஊன்றுகோல் வழங்கும் திட்டத்தின் கீழ் 11 பேருக்கு ஊன்றுகோல் வழங்கப்பட்டு, அதற்காக ரூ.6,600 செலவிடப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர் பள்ளி மானியத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் சிவகாசி சி.எஸ்.ஐ. காதுகேளாதோர் பள்ளி மற்றும் மன வளர்ச்சி குன்றியோர் பள்ளிக்கு மானியத்தொகை ரூ.3,63,168 வழங்கப்பட்டுள்ளது.

இளம்பிள்ளை வாத தடுப்பு மற்றும் தீவிர மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் 254 பேருக்கு ரூ.1,34,300 செலவிடப் பட்டுள்ளது.

## மாவட்ட பிற்பட்டேர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

மாவட்ட பிற்பீட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலமாக 1996ஆம் ஆண்டு மே திங்கள் முதல் இதுநாள் வரை 39,274 மாணவ, மாணவிகளுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. 4,638 பேருக்கு ரூ. 53.95 இலட்சம் செலவில் இலவச வீட்டுமனைப்பட்டாக்களையும், 978 பேருக்கு இலவச சலவைப் பெட்டிகளையும், 26 பேருக்கு இலவச சவரக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், இத்துறையின் மூலம் 1996-97 ஆம் ஆண்டில் உயர்நிலைக்கல்வி, மேல்நிலைக்கல்வி, இலவச பட்டப்படிப்பு, இலவச தொழிற்கல்வி பயிலும் 31,472 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ. 75.66 இலட்சம், 1997-98 ஆம் ஆண்டில் 33,263 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.82.52 இலட்சம் வழங்கப்பட்டது.



மேலும் 1996-97 மற்றும் 1997-98 ஆகிய ஆண்டில் புதிதாக 3 மாணவர்கள் விடுதியும், 3 மாணவியர்கள் விடுதியும் துவங்கப்பட்டு, மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

## தாட்கோ

விருதுநகர் மாவட்டத்தில் தாட்கோ மூலமாக 1996-97, 1997-98 ஆம் ஆண்டில் 46 பேருக்கு உழவு மாடு வாங்குவதற்காக 1,38,000யும், 132 பேருக்கு டயர் வண்டி மாடு வாங்குவதற்காக ரூ.14,24,250யும், 21 பேருக்கு ஆயில் எஞ்சின் வாங்குவதற்காக ரூ.1,43,000யும், 5 பேருக்கு மின்சார மோட்டார் வாங்குவதற்காக 25 ஆயிரம் ரூபாயும், 3 பேருக்கு விசைத் தெளிப்பான் வாங்குவதற்காக 9 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 178 பேருக்கு தொழில், விவசாயம் மற்றும் வாகனங்கள் வாங்க கடன் தொகையாக ரூ.84,60,157 வழங்கப்பட்டுள்ளது.

சுய வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டத்தின் கீழ் படித்த 182 இந்து ஆதிதிராவிட மாணவ, மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அதற்காக ரூ.8,04,400 செலவிடப் பட்டுள்ளது.

துப்புரவுப் பணியாளர் பயிற்சி த்திட்டத்தின் 40 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, அதற்காக ரூ.95,600 செலவு செய்யப்பட்டுள்ளது. துப்புரவுப் பணியாளர் திட்டத்தின் கீழ் துப்புரவுப் பணியில் ஈடுபடுவோர் மற்றும் அவரது குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் வகையில் 113 பேருக்கு ரூ.8,50,650 ரூபாய் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

சிறு தொழில் திட்டத்தின் கீழ், சிறு தொழில் துவங்க 50 பேருக்கு கடன் தொகையாக ரூ.50 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ், பெண் குழந்தைகள் தொடர்ந்து படிக்கும் பொருட்டு, 1,431 மாணவிகளுக்கு உதவித்தொகையாக ரூ.7,75,000 வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பட்டியலினத்தோர் நிதி முன்னேற்றக் கழகத் திட்டத்தின் கீழ் வாகனங்கள் வாங்குவதற்காக கடனாக 6 பேருக்கு ரூ.22,09,681 வழங்கப்பட்டுள்ளது.

## பொதுப் பணித்துறை

விருதுநகர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை (கட்டடம், கட்டுமானம் பராமரிப்பு) மூலமாக 1996-97 ஆம் ஆண்டில் பொதுப்பணிகளுக்காக ரூ.7,24,000 நிதியும், கல்வித்துறை பணிகளுக்காக ரூ.14,10,000 நிதியும், மருத்துவத்துறை பணிகளுக்காக ரூ.18 இலட்சம் நிதியும், பிற்பட்டோர் நலத்துறையின் பணிகளுக்காக ரூ.14,40,000 நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, செலவிடப்பட்டுள்ளது.

1997-98 ஆம் ஆண்டில் பொதுப்பணி பணிகளுக்காக ரூ.87,35,000 நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது. பிற்பட்டோர் நலத்துறைக்காக ரூ.23,70,000 நிதி ஒதுக்கீடும், மருத்துவத்துறை பணிகளுக்காக ரூ.78,16,000 நிதி ஒதுக்கீடும், கல்வித்துறை பணிகளுக்காக ரூ.38,12,000 நிதி ஒதுக்கீடும், செலுத்துத் தொகை வேலைகளுக்காக ரூ.27,22,000 நிதி ஒதுக்கீடும், சமூக நலத்துறைப் பணிகளுக்காக ரூ.15,04,000 நிதி ஒதுக்கீடும், வீட்டு வசதி பணிகளுக்காக ரூ.1,45,000 நிதி ஒதுக்கீடும் பெறப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டிற்கு பொதுப்பணிகளுக்கு ரூ.2,30,14,000, பிற்பட்டோர் நலத்துறை பணிகளுக்காக ரூ.93,60,000, கல்வித்துறை பணிகளுக்காக ரூ.4,37,000, சமூகநலத்துறை பணிக்காக ரூ.65 இலட்சம், ஆக மொத்தம் ரூ.3,93,11,000 நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

## உலக வங்கி நிதி திட்டம்

சிவகாசி வட்டம், வெம்பக்கோட்டை கிராமத்தில் வெம்பக்கோட்டை நீர்த்தேக்கம் சீரமைப்பு மற்றும் புதுப்பிக்கும் பணி 1996-97 ஆம் ஆண்டு ரூ.28 இலட்சத்தில் தொடங்கப்பட்டு 60 சதவீதம் பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். இதனால் 3,280 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும்.





குல்லூர்சந்தை நீர்த்தேக்கம்

சாத்தூர் வட்டம், கோல்வார்பட்டி கிராமத்தில் கோல்வார்பட்டி நீர்த்தேக்க திட்டம் சீரமைப்பு மற்றும் புதுப்பிக்கும் பணி 1996-97ஆம் ஆண்டு, ரூ.29 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு, கால்வாய் புதுப்பிக்கும் பணி 30 சதவீதம் முடிவுற்றுள்ளது. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். இதனால் 1821 ஹெக்டேர் நிலங்கள் பாசன உறுதி பெறுகின்றன.

அருப்புக்கோட்டை வட்டம் குல்லூர்சந்தை கிராமத்தில் குல்லூர்சந்தை நீர்த்தேக்கம் சீரமைப்பு மற்றும் புதுப்பிக்கும் பணி 1996-97 ஆம் ஆண்டு ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. விரைவில் முடிக்கப்படும் 1,170 ஹெக்டேர் நிலங்கள் இதனால் பாசன உறுதி பெறுகின்றன.

திருச்சுழி வட்டம், அத்திக்குளம் கிராமத்தில் கிருதுமால் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு மற்றும் இடது வலது புற வாய்க்கால் அமைக்கும் பணி ரூ.347 இலட்சம் மதிப்பீட்டில் 96-97ல் பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்புதிய திட்டத்தில் இப்பகுதியில் 8 கண்மாய்களின் கீழ் உள்ள 1,255 ஹெக்டேர் நிலங்கள் பாசன உறுதிபெறுகிறது.

### திட்டப் பணிகள்

- ஏரிகள் தூர்வாரும் பணிகள் 1997-98

திருச்சுழி வட்டம் அம்பநேரி கண்மாய் ஆயக்கட்டு 95.26 ஹெக்டேர், ரூ.10 இலட்சத்தில் தூர்வாரும் பணிகள் முடிவுற்றன.

சிவகாசி வட்டம், புதுக்கோட்டை கிராமம் புதுக்கோட்டை கண்மா 150.92 ஹெக்டேர் ரூ.10 இலட்சத்தில் தூர்வாரும் பணிகள் முடிவுற்றன.

சாத்தூர் வட்டம் நென்மேனி கிராமம் நென்மேனி கண்மாய் 169.22 ஹெக்டேர், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணிகள் முடிவுற்றன.

அருப்புக்கோட்டை வட்டம் பரளச்சி கிராமம் பரளச்சி கண்மாய் 192.96 ஹெக்டேர் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

சிவகாசி வட்டம் திருத்தங்கல் கிராமம் திருத்தங்கல் பெரிய கண்மாய் 53.87 ஹெக்டேர் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடிவுற்றன.

இராஜபாளையம் வட்டம் அயன்கொல்லங் கொண்டான் கிராமம் அயன்கொல்லங் கொண்டான் பெரிய கண்மாய் 355.33 ஹெக்டேர், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் விரைவில் துவங்கப்படுகிறது.

சாத்தூர் வட்டம் கோல்வார்பட்டி கிராமம் கோல்வார்பட்டி கண்மாய் 273 ஹெக்டேர், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

திருவல்லிபுத்தூர் வட்டம் சுந்தரபாண்டியம் கிராமம் சுந்தரபாண்டியம் புதுக்கண்மாய் 107.65 ஹெக்டேர், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. விரைவில் முடிக்கப்படும்.





மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்

### சிறப்பு சிறுபாசனத் திட்டம்

### நாபார்டு நிதி உதவித் திட்டம்

சாத்தூர் வட்டம் பாப்பாக்குடி கிராமத்தருகில் புதிய கண்மாய் அமைக்கும் பணி, ரூ.45.10 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. பாசன வசதிபெறும் நிலப்பரப்பு 83 ஹெக்டேர் ஆகும்.

சிவகாசி வட்டம் அழகாபதி கிராமத்தருகில் உப்போடை ஆற்றின் குறுக்கே அணை கட்டும் பணி, ரூ.62 இலட்சம் மதிப்பீட்டில் பணி துவங்கப்பட்டுள்ளன. இதனால் சிவகாசி வட்டத்தில் எரிச்சநத்தம் கண்மாய் மற்றும் நான்கு கண்மாய்களுக்கு பாசன உறுதியளிக்கிறது.

### பெரிய பாசனத்திட்டம்

சாத்தூர் வட்டம் இருக்கண்குடி கிராமம் அருகே இருக்கண்குடி நீர்த்தேக்க திட்டம் அமைக்கும் பணி ரூ.2870 இலட்சம் நிதி ஒதுக்கி, 1992ல் அரசாணை வழங்கப்பட்ட இத்திட்டத்தின் பிரதான பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ராஜபாளையம் வட்டம் சாஸ்தாகோவில் அருகே நகரியார் ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க, ரூ.797 இலட்சம் நிதி ஒதுக்கி, 16-6-98ல் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

### நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை

விருதுநகர் மாவட்டத்தில் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின் மூலம் 1996-97, 1997-98 ஆகிய ஆண்டில் ரூ.147.18 இலட்சம் செலவில் பாலங்கள் கட்டுதல் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ரூ.53.50 இலட்சம் செலவில் 32 சிறுபாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ரூ.981 இலட்சம் செலவில் 172 கி.மீ. தூரத்திற்கு சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

1998-99 ஆம் ஆண்டில், ரூ.176.10 இலட்சம் செலவில் பல்வேறு சாலை மேம்பாட்டுப்பணிகளும், ரூ.425 இலட்சம் மதிப்பில் 161 கி.மீ. தூரத்திற்கு சாலைப் புதுப்பிக்கும் பணியும், நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.532 இலட்சம் செலவில் சாலை மேம்பாட்டுப் பணிகளும் நடைபெற்று வருகிறன.



சமுதாயக் கிணறு

● ● ●

# அரசு ஆணைகள்

## காவலர் நல்வாழ்வு நிதி

**1995-ஆம்** ஆண்டில் தமிழ்நாடு காவல்துறைப் பணியாளர்கள், தனித்தன்மை வாய்ந்த அறுவை சிகிச்சை/சிகிச்சை பெறுவதற்கு நிதி உதவியைக் கடனாகவும், மானியமாகவும் வழங்குவதற்கு ஏதுவாக - "தமிழ்நாடு காவலர் நல்வாழ்வுத் நிதித் திட்டம்" (Tamil Nadu Police Health Fund Scheme) ஒன்று அமைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு அரசு ரூ.50 இலட்சம் ஒட்டு மொத்தத் தொகையாக வழங்கியது. அண்மையில் இத்திட்டத்திற்கு ஆண்டு மானியமாக ரூ.30 இலட்சம் அரசால் அளிக்கப்பட்டது.

25-5-1998 அன்று சட்டப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கை நிறைவேறும் சமயம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு காவலர் நலநிதித் திட்டத்திற்கான ஆண்டு மானியம் ரூ.30 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக உயர்த்தப்படும் என அறிவித்தார். அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு காவலர் நலநிதி ஆண்டு மானியத்தை ரூ.30 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டொன்றிற்குக் கூடுதல் செலவினம் ரூ.20 இலட்சம் ஆகும்.

## சென்னிமலை ஒன்றியம் : குடிநீர்த் திட்டம்

ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியத்திலுள்ள வாய்க்கால்புதூர் குடியிருப்புக்கான குடிநீர்த் திட்டத் திற்கு ரூ.4.15 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இக் குடியிருப்பில் தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவு 10 லிட்டருக்குக் குறைவாக உள்ளதால், தனி குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இக்குடியிருப்பில் 150 மி.மீ.விட்டம் உள்ள 156 மீட்டர் ஆழமுள்ள ஆழ்துளைக் கிணறு அமைக்கப் பட்டுள்ளது. இக்குழாய் கிணற்றிலிருந்து 800 மீ. நீளம் கொண்ட நீருந்துக் குழாய் மூலம் 10,000 லிட்டர் கொள்ளளவுடன் அமைக்கப்படவுள்ள, மேல்நிலைத் தொட்டிக்கு நீர் ஏற்றப்பட்டு 500 மீ. நீளமுள்ள பகிர்மானக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படும். இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும். முடிக்கப்பட்ட பின் கிராமப் பஞ்சாயத்திடம் பராமரிப்புக் காக ஒப்படைக்கப்படும்.

## பெருந்துறை ஒன்றியத்தில் புதிய குடிநீர்த் திட்டம்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை ஒன்றியத்திலுள்ள மந்திரிபாளையம் குடியிருப்புக்கான குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.3.69 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இக்குடியிருப்பில் தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவு 10 லிட்டருக்குக் குறைவாக உள்ளதால் ஆழ்துளைக் கிணறு அமைத்து, தனி குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இக்குடியிருப்பில் 150 மி.மீ. விட்டம் உள்ள 202 மீட்டர் ஆழமுள்ள ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழாய்க் கிணற்றிலிருந்து 350 மீ. நீளம் கொண்ட நீருந்து குழாய் மூலம் 10,000 லிட்டர் கொள்ளளவுடன் அமைக்கப்படவுள்ள மேல்நிலைத் தொட்டிக்கு நீர் ஏற்றப்பட்டு, 500 மீ.நீளமுள்ள பகிர்மானக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படும். இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும். முடிக்கப்பட்டபின் கிராமப் பஞ்சாயத்திடம் பராமரிப்புக்காக ஒப்படைக்கப்படும்.

## காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள்

சட்டமன்றப் பேரவையில், 25-5-98ல் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிலம் உள்ள 40 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட இந்த அரசு முடிவெடுத்துள்ளது என்றும், இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அறிவிப்பு செய்தார்கள். மேற்கண்ட அறிவிப்பில் அடங்கிய 40 காவல் நிலையங்களுக்கு புதிய கட்டடங்களை கட்டுவதற்கு அரசின் நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ.6.40 கோடி ஆகும். 1998-99ல் ஒதுக்கப்பட்டுள்ள நிதி 1.6 கோடி ரூபாயாகும்.

## கேளிக்கை வரி

**தமிழ்நாடு அரசு, 1997-98ஆம் ஆண்டுக்குக் கேளிக்கை வரியின் பங்காக, உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.108.55 கோடி ஒப்படைத்துள்ளது. மே 1997 வரை வசூலிக்கப்பட்ட கேளிக்கை வரிக்கு ஒப்படைப்பு 70 சதவீதமாக இருந்தது. இந்த ஒப்படைப்பு 1.6.97 முதல் 90 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.**

## நாகப்பட்டினம் மாவட்டத்திற்கெனத் தனி நுகர்வோர் குறைதீர் மன்றம்

நாகப்பட்டினம் மாவட்டத்திற்கெனத் தனியாக மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் ஏற்படுத்த வேண்டுமெனச் சில தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் வேண்டுகோள் விடுத்திருந்தன. அதற்கேற்ப நாகப்பட்டினம் மாவட்டத்திற்கென் தனி மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் ஒன்று நாகப்பட்டினத்தில் அமைக்கப்படுகிறது. நாகப்பட்டினத்தில் நுகர்வோர் குறைதீர் மன்றம் அமைக்க மாவட்ட நீதிபதி நிலையில் ஒரு தலைவர் மற்றும் . பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு, புதிய அலுவலகம் தொடங்குவதற்குத் தேவையான உள் கட்டமைப்பும் ஏற்படுத்த பகுதி -2 திட்டத்தின் கீழ் ரூ.4.22 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப் பட்டுள்ளது.



## கல்வித் துறை துப்புரவுத் தொழிலாளர்களுக்குத் தொகுப்பு ஊதியம் உயர்வு

பள்ளிக் கல்வித் துறையில் உயர் நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளி களிலும் பகுதிநேரப் பணியாளர்களாகத் துப்புரவுத் தொழிலாளர்கள், பெருக்குப வர்கள், இரவு நேரக் காவலர்கள் ஆகியோர் தொகுப்பு ஊதியம் பெற்றுப் பணிபுரிந்து வருகிறார்கள். இப்பணியாளர்கள் 1.1.96 அன்று 210/- தொகுப்பூதியமாகப் பெற்று வந்தார்கள். இதனை 50/- ரூபாய் உயர்த்தி 260/- ரூபாயாக வழங்கிட அலுவலர் குழு பரிந்துரைத்தது. அப்பரிந்துரையைப் பரிவுடன் ஆய்வு செய்து 50/- ரூபாய் உயர்வுக்குப் பதிலாக 100/- ரூபாயாக உயர்த்தி 1.1.96 முதல் மொத்தம் 310/- ரூபாய் தொகுப்பூதியமாக வழங்கிட முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இதன்மூலம் தொகுப்பூதியம் பெறும் 13,000 பகுதி நேரத் துப்புரவுத் தொழிலா ளர்கள், பெருக்குபவர்கள், இரவு நேரக் காவலர்கள் பயன்பெறுவார்கள்.

## தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களில் 20 நேரடி கொள்முதல் நிலையங்கள்

**1998-99** ஆம் ஆண்டில் 20 நேரடி நெல்கொள் முதல் நிலையங்கள் மொத்தம் ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங் களில் கட்டப்படும். இதற்கென 1998-99 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின் கீழ் ரூ.58 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

### *நுகர்வோர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபாட்டுடன் செயல்படும் அமைப்புகளுக்குப் பரிசுகள்*

நுகர்வோர் விழிப்புணர்வை மக்களி டையே உருவாக்கி, நுகர்வோர் பாதுகாப்புப் பணிகளில் தீவிர ஈடுபாட்டுடன் செயல் படும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புக் களை ஊக்குவிக்கும் பொருட்டு, சிறப்பாகச் செயல்படும் முதல் மூன்று இயக்கங்களுக்கு முறையே முதல் பரிசாக ரூ.3,000-மும், இரண்டாவது பரிசாக ரூ.2,000-மும், மூன்றாவது பரிசாக ரூ.1,000-மும் இந்த ஆண்டு வழங்கப்படும். இத்தகைய இயக்கங்களுக்கு நிதிஉதவி அளிக்கவும், உரிய பயிற்சி அளிக்கவும், மாநில அளவில் நுகர்வோர் கல்வி குறித்து கருத்தரங்கு நடத்தவும் ரூ.2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு நிதியுதவி

**1998-99** ஆம் ஆண்டில், கரூர் மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கு ரூ.20 இலட்சம் விளிம்புத்தொகை நிதியுதவி வழங்கவும், சிறிய அளவிலான சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்க நடப்பு ஆண்டில் திண்டுக்கல் மாவட்டம் பாண்டியன் நகர் கூட்டுறவுப் பண்டகசாலை, திருவண்ணாமலை மாவட்டம், தேவிகாபுரம் கூட்டுறவுப் பண்டகசாலை, நாகை மாவட்டம் மயிலாடுதுறை கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, நீலகிரி மாவட்டம் இண்ட்கோ பணியாளர் கூட்டுறவு பண்டகசாலை மற்றும் கோவை மாவட்டம் பீளமேடு கூட்டுறவுப் பண்டகசாலை ஆகிய 5 பண்டகசாலைகளுக்கு மொத்தம் ரூ.3 இலட்சம் நிதியுதவி முடிவு செய்யப்பட்டுள்ளது.

நலிவுற்ற தொடக்க கூட்டுறவுப் பண்டக சாலைகளுக்கான - நிதியுதவி மற்றும் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோவை மாவட்டம் சூலூர் கூட்டுறவுப் பண்டகசாலை, மதுரை மாவட்டம் பசுமலை கூட்டுறவுப் பண்டகசாலை, திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி கூட்டுறவுப் பண்டகசாலை, திருச்சி மாவட்டம் பெருவளநல்லூர் கூட்டுறவுப் பண்டகசாலை, தூத்துக்குடி மாவட்டம் நாசரேத் கூட்டுறவுப் பண்டகசாலை ஆகிய 5 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு ரூ.1 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.5 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும். பெரிய அளவிலான சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்கத் திருவண்ணாமலை மாவட்ட மொத்தக் கூட்டுறவுப் பண்டகசாலை மற்றும் திருச்சி மாவட்டத்தில் ஸ்ரீரெங்கநாதன் கூட்டுறவுப் பண்டகசாலை ஆகிய இரண்டு பண்டகசாலைகளுக்கும் மொத்தம் ரூ.2.70 இலட்சம் நிதியுதவி வழங்கவும், நவீன சில்லறை விற்பனைக் கடைகள் அமைக்க முதுகுளத்தூர், திருக்காட்டுப்பள்ளி, செங்கல்பட்டு கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு மொத்தம் ரூ.6 இலட்சம் நிதியுதவி வழங்கவும் பகுதி-2 திட்டத்தின் கீழ் அரசாணைகள் வெளியிடப் பட்டுள்ளன.

### *கூட்டுறவு அச்சகங்கள் நவீனமயம் ரூ.8 இலட்சம் நிதியுதவி*

நடப்பாண்டில் தர்மபுரி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு அச்சகங்களை நவீனமயமாக்கத் தலா ரூ.4 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.8 இலட்சம் நிதியுதவி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

### *தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, கூட்டுறவு நகர வங்கிகளின் மகளிர் அங்கத்தினர்கள் கடன்பெறும் தகுதியை உயர்த்த ரூ.11.25 இலட்சம் நிதியுதவி*

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் அங்கத்தினர்களில் மகளிர் பங்கு மூலதன முதலீடு செய்வதற்குச் சிரமப்படுகிறார்கள். அங்கத்தினர்களின் கடன் வாங்கும் சக்தி, அவர்தம் பங்கு மூலதனத்தைப் பொறுத்தே உள்ளதால், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் உள்ள மகளிர் உறுப்பினர்களுக்குத் தேவையான பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதற்கு நிதியுதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வினத்தில் ஒரு நபருக்கு ரூ.250-க்கு மிகாமல் வட்டியில்லாக் கடனாக அளிக்கப்படும். இதன்படி, 1998-99 ஆம் ஆண்டில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் அங்கத்தினர்களாக உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.6.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

இத்திட்டத்தினால் 2,500 மகளிர் பயனடைவார்கள். இதற்கான அரசாணை சமீபத்தில் வெளியிடப்பட்டு உள்ளது. இதேபோன்று கூட்டுறவு நகர வங்கிகளில் உள்ள மகளிர் அங்கத்தினர்கள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு மகளிர் உறுப்பினருக்கும் தலா ரூ.500 வட்டியில்லாக் கடனாக வழங்க ரூ.5 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இதனால் 1,000 மகளிர் உறுப்பினர்கள் பயனடைவார்கள்.

### *பெண் உறுப்பினர்களுக்குப் பங்கு மூலதன உதவி*

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளிலும், மகளிர் உறுப்பினர்களின் கடன்பெறும் சக்தியை உயர்த்துவதற்காக அவர்தம் பங்கு மூலதனத்தை உயர்த்த நிதியுதவி அளிக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இவ்வங்கிகளில் உள்ள 200 மகளிர் உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் தலா ரூ.1,000-வீதம் ரூ.2இலட்சம் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படும்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் மூலம் மொத்தம் ரூ.1 கோடியே 22 இலட்சத்து 17 ஆயிரம் மதிப்பீட்டில் திட்டங்களைச் செயல்படுத்த பகுதி -2 திட்டத்தின்கீழ் அரசாணைகள் வெளியிடப்பட்டு உள்ளன.

### சத்துணவில் முட்டை

73 இலட்சம் குழந்தைகள் பயனடையும் வகையில், ரூ.45 கோடி செலவில், சத்துணவோடு வாரம் ஒரு முட்டை வழங்கப்படும்.

### இலவசத் தொழிற் பயிற்சி

இதுவரை பட்டதாரிகள்/ டிப்ளமோதாரர்கள் இல்லாத, ஆண்டு வருமானம் ரூ.25,000க்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப்பிற்படுத்தப் பட்ட வகுப்பைச் சார்ந்த, தகுதிவாய்ந்த மாணவர்கள் அனைவருக்கும் - எண்ணிக்கையில் உச்சவரம்பின்றி இவ்வாண்டு முதல், அரசு மற்றும் அரசு நிதிஉதவி பெறும் பாலிடெக்னிக்குகளில் இலவசத் தொழிற்பயிற்சி பெற அரசு ஆணை.

### ஓய்வூதியம் உயர்வு

ஆதரவற்ற முதியோர், உடல் ஊனமுற்றோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், வயது முதிர்ந்த வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியத் தொகை ரூ.100லிருந்து 21-4-98 முதல் ரூ.150 ஆக உயர்த்தி வழங்கிட ஆணை.

### முதியோர் உதவித் தொகை

23-4-98 அன்று வெளியிடப்பட்ட ஆணையின்படி, மறுமணம் செய்யாத விதவைப்பெண்கள், 5 ஆண்டுகளுக்கு மேலாகக் கணவனைப் பிரிந்து வாழும் பெண்கள், விவாகரத்துப் பெற்றவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் ஆகியோருக்கு 20 வயது நிரம்பிய வாரிசுகள் இருந்தாலும், அவர்கள் முதியோர் உதவித்தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### கூட்டுக் குடிநீர் திட்டம்

ஈரோடு மாவட்டத்தில் - அம்மாபேட்டை, அந்தியூர் ஒன்றியங்களிலுள்ள 190 கிராமக் குடியிருப்புகளுக்குக் காவிரியாற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொணரும் ரூ.21.26 கோடியிலான கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அரசு ஆணை.

### சிறப்புச் சிறுபாசனத் திட்டங்கள்

கோயம்புத்தூர் மாவட்டம், திருச்சி மாவட்டம், புதுக் கோட்டை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், தருமபுரி மாவட்டம், திண்டுக் கல் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், தேனி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் பொதுப்பணித் துறையின் சார்பில், சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களை நிறைவேற்றிட ரூ.13.56 கோடி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் கலைஞர் ஆணை.

### ஆதிதிராவிட மாணவர்-மாணவியருக்கு விடுதிகள்

ஆதிதிராவிட மாணவர்- மாணவியருக்கென நடப்பாண்டில் ரூ.75 இலட்சம் செலவில், 22 பள்ளி விடுதிகளும், ஒரு கல்லூரி விடுதியும் கட்டிட அரசு ஆணை.

### காவலர்களுக்கு உதவி

காவலர் குடியிருப்புகளின் பராமரிப்புக்கு ரூ.5 கோடி; ரூ.1.67 கோடியில் மின்விசிறியில்லாத 11,140 குடியிருப்புகளுக்கு மின்விசிறி இணைத்துக் கொடுத்திட அரசு ஆணை.

காவல் துறையினருக்குத் தற்பொழுது மானிய விலையில் 12 கிலோ அரிசியும், ரேஷன் கடை விலையில் 8 கிலோ அரிசியும் வழங்கப்படுவதற்குப் பதிலாக 20 கிலோ அரிசியையும் மானிய விலையிலேயே வழங்க அரசு ஆணை.

### போக்குவரத்து ஆணையர் அலுவலகம்

திண்டுக்கல், கரூர், பொள்ளாச்சி, விழுப்புரம் மற்றும் திருச்சி ஆகிய 5 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும், திருநெல்வேலியில் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்துக்கும் புதிய கட்டடங்கள் கட்ட ரூ.1.75 கோடிக்கு அனுமதியளித்து அரசு ஆணை.

### உள்ளாட்சிகளுக்கு நிதி

நடப்பு நிதியாண்டில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.392 கோடியே 40 இலட்சத்தில், இடைக்கால முதல் தவணையாக 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.34.81 கோடியும், மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ.7.73 கோடியும், ஊராட்சிகளுக்கு ரூ.34.81 கோடியும் ஒதுக்கி அரசு ஆணை.

### திரைப்படங்களுக்கு மானியம்

1996ஆம் ஆண்டில், குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ், ரூ.3 இலட்சம் வீதம் - 17 படங்களுக்கும், ரூ.5 இலட்சம் வீதம் - 8 படங்களுக்கும், ஆகமொத்தம் 25 படங்களுக்கு ரூ.91 இலட்சத்தை அரசு மானியமாக முதலமைச்சர் கலைஞரால் வழங்கப்பட்டது.

### பள்ளிகள் சீரமைப்பு

மதுரை, திண்டுக்கல், தேனி ஆகிய மாவட்டங்களிலுள்ள கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள், மாணவியர்க்குக் கழிப்பறை வசதிகள், குடிநீர் வசதிகள், ஆய்வுக்கூட வசதிகள் 58 ஆசிரியர் பணியிடங்கள் போன்றவற்றை உருவாக்க ரூ.70 இலட்சம் ஒதுக்கி அரசு ஆணை.

### மினிபஸ் மற்றும் நவீன ஓட்டுநர் தேர்வு வளாகம்

தொலைதூரக் கிராமப்புறங்களுக்கும் போக்குவரத்து வசதியளித்திடும் வகையில் தனியார் மினிபஸ்களுக்கு அனுமதியளித்திடும் திட்டத்தின்படி, இதுவரை 146 வழித்தடங்களுக்கு அரசு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முறையாக, வேலூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தருமபுரி, தஞ்சாவூர், காஞ்சிபுரம் ஆகிய 6 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் நவீன ஓட்டுநர் தேர்வு வளாகம் அமைக்க அரசு ஆணை.



# விழியில் இருட்டு மொழியில் வெளிச்சம்

*கவிஞர் சாமி பழனியப்பன்*

கண்போன்றது என்றால் மிகமிக இன்றியமையாதது -மிகவும் முக்கியமானது என்று பொருள். மனிதனுக்கு மிக முக்கியமானது கல்வி. கல்வியே மனிதனை வாழவாங்கு வாழவைப்பது. கல்வியின் சிறப்பை அதன் அவசியத்தை வலியுறுத்தாத இலக்கியங்கள் இல்லை. பொதுவாகக் கண்கள் எல்லாருக்கும் இருந்தாலும் 'கற்றவர் முகத்திலிருப்பனவே கண்கள்; கல்லாதார் முகத்திலிருப்பன புண்கள்" என்றார் திருவள்ளுவர்.

ஆனால், புலவர் பெருமக்கள் சிலர், ஊனக்கண்களை இழந்தாலும், ஞானக்கண் பெற்று, வரலாற்றில் காலங்கடந்து - காலத்தை வென்றாண்டு வாழ்கிறார்கள். இந்தக்காலத்தில் கண்களை இழந்தவர்களும் கற்றுத் தேர்வு - பெற பிரெய்லி எழுத்துக்கள், அதற்கேற்ற நூல்கள் வந்துள்ளன. இது விஞ்ஞான உலகம். அந்தக்காலத்தில் இந்த அளவிற்கு விஞ்ஞான வளர்ச்சி இல்லை என்றாலும் கண்ணிழந்தோர் சிலர் கவிஞர்களாக -கவியரசர்களாக விளங்கியிருக்கிறார்கள்.

கி.பி.எட்டாம் நூற்றாண்டில் பஷீர் அப்பாவும், பதினைந்தாம் நூற்றாண்டில் இரட்டையரும், பதினேழாம் நூற்றாண்டில் வீராகவக் கவிராயரும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் மாம்பழக் கவிச்சிங்க நாவலரும், தம்புகழ் நிறுவிய கவிஞர்களாக வாழ்ந்திருக்கிறார்கள். இவர்களைப் பற்றிய செய்திகள் நம்மை வியப்பில் ஆழ்த்துவன; நம் சிந்தைக்கு விருந்தாவன.

## பஷீர் அப்பா

பஷீர் அப்பா கி.பி. எட்டாம் நூற்றாண்டில் பிறந்தவர். அப்போது அரேபியாவிலிருந்து இந்தியா நோக்கிப் புறப்பட்ட மரக்கலங்களில் சில,புயலால் இந்தியாவின் மேற்குக்கரையில் ஒதுங்கின. அவற்றிலிருந்து இறங்கிய முஸ்லீம் குடும்பத்தினரில் சிலர் நெல்லை மாவட்டம் மேலப்பாளையத்தில் வந்து குடியேறினர். அவர்களின் வம்சாவழியில் பிறந்தவர் இவர் தந்தை உதுமான் லெப்பை என்பவர். தாய் உறவவா பீபி.

முஹியித்தீனுக்கு மூன்றாவது வயதில் அம்மைநோய் வந்தது. அவர் இரு விழிகளையும் இழந்தார். பெற்றோர் பெரிதும் மனம் வருந்தினர்.

ஒருநாள் உதுமான் லெப்பையின் குரு, சகாஸ் முகம்மது புதுமனை புகுவிழாவிற்கு வந்தார். பெற்றோர் பெரிதும் மனம் நொந்திருந்ததைக் கண்டு "குழந்தையைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். என்னிடம் கொடுத்துவிடுங்கள். நான் அவனை வளர்த்துப் பெரியவனாக்கிவிடுகிறேன்" என்று கூறினார். பெற்றோரும் மகிழ்ச்சியோடு குழந்தை முஹியித்தீனை அனுப்பிவைத்தனர்.

குரு, குழந்தை முஹியித்தீனின் முதுகில் விரலால் எழுதி எழுதி, வாயால் சொல்லும்படி கூறினார். இப்படியே குழந்தை முஹியித்தீனுக்கு திருக்குர்ஆன் முழுவதையும் கற்றுக் கொடுத்தார். முஹியித்தீனும் திருக்குர்-ஆன் முழுவதையும் கற்று அழகான ஒலியுடன் ஓதும் ஆற்றலும் பெற்றார்.

அப்போது சென்னை ராஜதானியை ஆண்டுக்கொண்டிருந்த நவாப் மஹ பூப்கான் மேலப்பாளையம் வந்தார். அங்கு திருக்குர்ஆனை மனனம் செய்த பல ஹாஃபீஸ்களையும் காணவிரும்பினார். அவர் விருப்பதிற்கிணங்க அனுப்பி வைக்கப்பட்ட ஹாஃபீஸ்களில் எட்டுவயதுச் சிறுவனான முஹியித்தீனும் ஒருவர்.

முஹியித்தீன் கண்ணிழந்தவராக இருந்தும், மிக அழகிய முறையில் குர்-ஆன் ஓதியதைக் கண்டு வியந்த நவாப், அவருக்குப் பல்வேறு பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.

பின்னர் முஹியித்தீன் தமிழிலும் நல்ல தேர்ச்சி பெற்றார். தக்க வயது வந்ததும் அவருக்குத் திருமணம் செய்துவைத்தனர். குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்ட அவர், பின்னர் ஞானகுருவிடம் தீட்சைபெற விரும்பினார். இதனை அறிந்த அவரது குருவான கோஸ முஹம்மது கடையநல்லூரிலிருந்த தம் குருவும், ஞானியுமான செய்கு உதுமான் ஆலிம் அவர்களிடம் முஹியித்தீனை அழைத்துச் சென்றார். விவரங்களைக் கூறினார். அப்போது அந்த ஆத்மஞானி, 'இவர் குருடர் அல்ல - கண்பார்வையிழந்தவராக இருந்தாலும் அகக்கண் உடையவர் என்று பாராட்டி, ஞானதீட்சை வழங்கினார்'. 'கலிஃபா' என்ற தலைமைப் பொறுப்பையும் பெற்றார். அன்றுமுதல் முஹியித்தீன் பஷீர் அப்பா ஆனார்.

பின்னர் பஷீர் அப்பா மேலப்பாளையம் திரும்பி, அங்கு பலருக்குத் தீட்சையளித்து அவர்களைச் சீடர்களாகப் பெற்றார். மேலும், பஷீர் அப்பா தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்து, 'நபிநாயகம்' மீது ஞானப்பனுவல் பலவற்றைப் பாடினார். பல்வேறு அற்புதங்களையும் நிகழ்த்திக் காட்டினார்.

கவிஞரும், மாமேதையுமான பஷீர் அப்பா அவரது 75-ஆம் அகவையில் இயற்கையெய்தினார்.

இவரை மேலப்பாளையம் கடையம் அருகே நல்லடக்கம் செய்தனர். முஸ்லீம்கள் இவரது ஞானப்பனுவல்களை இன்றும் பாடி மகிழ்கின்றனர். கவிஞர் பஷீர் அப்பாவின் சந்நிதியில் இன்றும் ஏராளமான மக்கள் கூடுகின்றனர். வழிபாடு செய்கின்றனர்.

ஆண்டுதோறும் 'உரூஸ் விழா' சிறப்பாக நடைபெறுகிறது. கவிஞர் பஷீர் அப்பாவின் காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு.

## இரட்டையர்கள்

இவர்கள் இருவரும் சோழவள நாட்டில் ஆடுதுறைக்கு அருகில் பிறந்தவர்கள். இருவரும் அத்தை மகனும், மாமன்மகனும் ஆவர். இருவரின் பெயர்களும் முறையே இளஞ்சூரியர் - முதுசூரியர். இருவரில் ஒருவர் கண்பார்வை இல்லாதவர்; இன்னொருவர் கால்களை இழந்தவர். எனவே, தனித்தனியே வாழமுடியாமல் இரட்டையராகவே - இணைந்து வாழ்ந்தனர். இவர்களுள், கால்கள் இல்லாதவரைக் கண் இல்லாதவர்

தோளில் சுமந்தும், கால்கள் இல்லாதவர் வழிகாட்ட இருவரும் பலவேறு இடங்களுக்கும் யாத்திரை மேற்கொண்டார்கள். வெண்பாவின முதலிரண்டு வரிகளை ஒருவர் சொல்ல, பின்னுள்ள இரண்டடிகளை இன்னொருவர் சொல்லி முடிப்பார்.

'கலம்பகத்திற்கு இரட்டையர்' என்று கற்றோர்கள் ஏற்றிப் போற்றும் வகையில் 'திருவாமர்த்தூர்க் கலம்பகம்', 'தில்லைக் கலம்பகம்', மற்றும் 'ஏகாம்பரநாதர் உலா' முதலிய செல்வங்களைத் தமிழுக்கு வழங்கியுள்ளனர்.

இரட்டையர்கள் யாத்திரை செல்லும்போது, ஆங்கூரில் சிவன் கோவிலைக்கண்டு, கண்ணுள்ளவர் -

*'ஆங்கூர்ச் சிவனே*
*அல்லாளி யப்பா*
*நாங்கள் பசித்திருக்க*
*ஞாயமோ?'...*

என்று பாட, இன்னொருவர் -

*'போங்காணும்*
*கூறுசங்கு தோல்முரசு*
*கோட்டோசை யல்லாமல்*
*சோறுகண்ட மூளியார் சொல்'*

- என வெண்பாவை முடித்தி ருக்கிறார். இதிலுள்ள உண்மை, கருத்தாழம், பொருட்சுவை, நகைச்சுவைகளை எண்ணிப்பாருங்கள். இது ஓர் எடுத்துக்காட்டு. இத்தகைய இரட்டையர் நூல்களைப் படித்து இன்புறுங்கள். இவர்கள் காலம் பதினைந்தாம் நூற்றாண்டு!

## வீரராகவர்

'அந்தகக்கவி வீரராகவர்' என்று பெயர் விளங்கும் இவர் பிறவிக்குருடர். இவர் பாலாற்றங்கரையின் காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள புதூரில் பிறந்தார். பிறவிக் குருடர். இவருக்குக் குழந்தைப் பருவத்திலேயே கல்வியறிவூட்ட, பெற்றோர் விரும்பினர். இதற்காகப் 'பொன்விளைந்த களத்தூர்' என்ற ஊருக்குக் குடியேறினர். இங்கு 'வெண்பாவிற்குப் புகழேந்தி' என்று பெருமைமிக்கவரும், 'நளவெண்பா'வை இயற்றியருளியவருமான அரும்புலவர் அவதரித்தார்.

இங்குதான் வீரராகவர் ஆரம்பக் கல்வியைச் செவிவழி கேட்டுப் பயின்றார். பின்னர் காஞ்சிமா நகருக்குச் சென்று அங்கு வாழ்ந்தார்.

தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கேட்டறிந்து, நெஞ்சமே ஏடாகக்கொண்டு கற்றுத்தேறினார்.

ஒருசமயம், கொங்கு நாட்டை ஆட்சிபுரிந்த வள்ளலுக்கு எழுதிய சீட்டுக்கவியில்,

*'ஏடாயிரம் கோடி எழுதாது*
*தன்மனத்தே*
*எழுதிப் படித்த விரகன்'*

- என்று தான் கற்றவித்தையை விளக்கியுள்ளார். சில ஆண்டுகளில் சிறந்த கவிஞராக விளங்கினார். கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியார், "இங்கொருவன் பல்கலை எய்திப் போய்க் கவியினார் இசைபெற்றானே' என்று சிறப்பித்துள்ளார்.

வீரராகவர் கவிஞராக மட்டுமல்ல. அவதானக் கலைஞராகவும் பயிற்சி பெற்றார். பின்னர். திருமணம் செய்து கொண்டார். இல்லறவாழ்வில் ஈடுபட்டார். பின்னர், தன் மாணாக்கன் ஒருவனைத் துணைக்கு அழைத்துக் கொண்டு சோழ, பாண்டிய நாடுகளுக்குச் சென்றார். வள்ளல் பலரின் அன்பையும், ஆதரவினையும் பெற்றார். பின்னர் இலங்கைக்குச் சென்று அப்போது அங்கு ஆட்சிபுரிந்த பரராசசேகரனின் அவைக்களத்தில் யானை, பொற்பந்தர், ஓர் ஊர் ஆகியவற்றைப் பரிசுகளாகப் பெற்றுத் திரும்பினார்.

வீரராகவர் 'சீட்டுக்கவி' எழுதுவதிலும் வல்லவர். சொற்சுவையும், கருத்தாழமும் ததும்பி வழியப் பாடுபவர். கயத்தாற்றில் ஆட்சிபுரிந்த அரசன் ஒருவன்மீது, 'உலா'ப் பாடினார்.

இவர் இயற்றிய 'சந்திரவாணன் கோவை', 'சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ்', 'திருக்கழுக்குன்ற மாலை', 'தியாகேசர் உலா' ஆகியவற்றை இயற்றியுள்ளார். மற்றும் பல தனிப்பாடல்களையும் இவர் பாடி இன்பத் தமிழுக்கு இனிய தொண்டு செய்துள்ளார்.

கவிஞர் வீரராகவனின் காலம் பதினேழாம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட பகுதியாகும்.

## மாம்பழக் கவிச்சிங்க நாவலர்

மன்னர் திருமலை நாயக்கரால் 'மாம்பழம்' என்று சிறப்பித்துப் பாராட்டப்பெற்ற 'சிறபக் கலைஞர்' மரபில் வந்தவர், மாம்பழக் கவிச்சிங்க நாவலர்.

அப்போது பழனியில் சிறப்புற வாழ்ந்த முத்தையா ஆச்சாரியின் இரண்டாவது மகனாக 1836-ஆம் ஆண்டில் பிறந்தவர். அவருக்குப் பெற்றோர் இட்டழைத்த பெயர் பழனியப்பன்.





தம் மூன்றாம் அகவையில் அவருக்கு அம்மைநோய் கண்டது. பின்னர் நோய் தணிந்தது. எனினும் அந்நோயினால் பழனியப்பனின் கண்கள் பறிபோயின.

முத்தையா ஆச்சாரி தினமும் காலையிலும் மாலையிலும் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய பதிகங்களை இசையோடு பாடி மகிழ்ந்து வழிபாடு செய்யும்போது, கண்ணிழந்த தன் மகன் பழனியப்பனுக்கு அவற்றைப் பயிற்றுவிப்பார்.

பழனியப்பனுக்கு ஐந்து வயதாயிற்று. அப்போது தன்மகன் கண்ணொளி இழந்தவனாதலால் அவனைப் பள்ளிக்கு அனுப்பாமல், தன் மடியிலேயே குப்புறக்கிடத்தி, தமிழ் எழுத்துக்களை அவன் முதுகிலேயே எழுதிக் கற்பித்தார்.

பிறகு பழனியப்பன் மாரிமுத்துக் கவிராயர் என்பவரிடம் முறையாகத் தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பயின்று, கவிபாடும் ஆற்றல் பெற்றார்.

வேதாந்த சித்தாந்த சாத்திரங்களையும் தக்காவழிக் கேட்டறிந்தார். தர்க்கம், சோதிடம், இசை முதலிய கலைகளிலும் பயிற்சி பெற்றார். சிறந்த சொற்பொழிவாளராகவும் விளங்கினார்.

வடமொழி வல்லுநர்களாக அப்போது திகழ்ந்த சுப்பராய பாரதியார், இராமசாமி அய்யர் ஆகியோரிடம் சென்று, வடமொழியும் கற்றுத் தெளிந்தார்.

பழனியப்பன் இளம் வயதிலேயே 'ஞானகாந்தம்' என்று புலவர் பெருமக்களால் பாராட்டப்பெற்றார்.

பழனியப்பன், முதன்முதலில் குமரகுருபரனையே தம் ஞானாசிரியனாகக் கொண்டு, பழனிப்பதிப்பகம், குமரகுரு பதிப்பகம், சிவகிரிப்பதிகம், திருச்செந்தில் பதிகம் எனும் நான்கு பதிகங்களையும் பாடினார். அவரது கவியின்பத்தில் மூழ்கித்திளைத்த அறிவறிந்த பெருமக்கள் அவரைத் 'தமிழ்ச்சக்கரவர்த்தி' என்றும், 'கலைஞான பீடம்' என்றும், 'நாமடந்தையின் நல்லிருக்கை' என்றும், 'நாவலர்' என்றும் பாராட்டினர்.

அப்போது பழனியாண்டவர் திருக்கோயில் அறநிலைய ஆட்சிக்குழுத் தலைவராக இருந்த பாப்பம்பட்டி பெருநிலக்கிழார் திரு.வேங்கடசாமி நாயக்கர் மாம்பழக்கவியின் பெரும்புலமையையும், கவியாற்றலையும் அறிந்து அவரைப் பாராட்டி, அவருக்குப் பல்வேறு வகையிலும், ஆக்கமும், ஊக்கமும் கொடுத்தார்.

மாம்பழக்கவி திரு.வேங்கடசாமி நாயக்கரின் ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கும் முறையில், அவரைப் புகழ்ந்து 'வேட்டைப் புகழ்ச்சி', 'புலிப் பவனி', 'குறவஞ்சி, 'கீர்த்தனை', 'சீட்டுக்கவி' ஆகியவற்றைப் பாடினார்.

மாம்பழக்கவி தமது 17-வது வயதில் இராமநாபுரத்திற்குச் சென்று, அப்போது மன்னராக இருந்த முத்துராமலிங்க சேதுபதியையும், அவரது இளவலும் தமிழ்ப்புலவருமாயிருந்த பொன்னுச்சாமித் தேவரையும் பாராட்டிப் பாடினார். அவ்வள்ளல்கள் இவரது புலமையை வியந்து, மாம்பழக்கவியைத் தம் அவைப்புலவராக அமர்த்தினர். அப்போதுதான் அங்கு மாம்பழக்கவிக்கு 'கவிச்சிங்கம்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கினர்.

கற்ற புலவர் பெருமக்களும், நாவன்மை படைத்தோரும் கவிச் சிங்கத்தின் சொல்லாற்றலை - பேச்சுத் திறமையைக் கண்டு வியந்து, இவரை நாவலர் என்று பாராட்டினார்.

இராமநாதபுரம் மன்னர் சேதுபதி மீது 'ஒருதுறைக் கோவை' பாடி மாம்பழக்கவிச்சிங்க நாவலரும் பதினாயிரம் பொன் பெற்றார்.

மாம்பழக் கவிச்சிங்கம் கண்ணிழந்த போதிலும், தமிழன்னைக்குப் பல கவியாரங்களைச் சூட்டி மகிழ்ந்தார்.

பின்னர் மாம்பழக் கவிச்சிங்கம், உடல்நலக்குறைவுற்று, தேவர்கள் இருவரிடமும் விடைபெற்று வந்து, 'சந்திரவிலாசம்' என்ற நூலைப் பாடினார்.

மாம்பழக் கவிச்சிங்கம், தமது 21-ஆம் வயதில் திருமணம் புரிந்து, இல்வாழ்க்கையை இனிது நடத்தினார்.

பிறகு கவிச்சிங்க நாவலருக்கு மேகநோய் கண்டது. அதன்பின் அந்நோயினின்றும் மீண்டும் சிலகாலம் சுகவாழ்வு வாழ்ந்தார். வாழ்நாள் இறுதிவரை கவிமழை பொழிந்தார்.

இறுதியில்

*'என்னபிழை யான்செய்*
*திருந்தாலும் எண்ணாமல்*
*அன்ன பிழையெல்லாம்*
*அகற்றியின்னே - நின்று மலர்ப்*
*பாதநிழல் நல்கியெனைப்*
*பாவித்துக் கொள்சமயம்*
*நீதருக னேநம்பி னேன்'*

- என்று பாடியவாறே இம்மண்ணுலகைப் பிரிந்தார்.

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் இயற்றியனவாக, கிடைத்த 1508 பாடல்களைத் தொகுத்து மார்க்கயன்கோட்டை பழனிச்சாமி ஆச்சாரி நூலாக வெளியிட்டுள்ளார். பின்னர் 1908 - ஆம் ஆண்டில் மாம்பழக் கவிச்சிங்க நாவலர் இயற்றியருளிய பிரபந்தத் திரட்டின் 'முதற்பாகம்' என்னும் பெயரில் வெளியிடப்பட்டுள்ளது.

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் மறைந்து அவரது தூய பாமாலைகள் தாய்த்தமிழுக்குச் சூட்டிய வாடாமலர் மாலைகளாக இன்னும் திகழ்கின்றன, என்றும் திகழும்!

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் 19-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் வாழ்ந்தனர்.

• • •

## இரு கை எழுத்து

*நம்மில் அநேகருக்கு வலக்கை ஒன்றினால் மட்டுமே எழுதமுடியும். சிலர் இடக்கைப் பழக்கம் உடையவர்களாக இருப்பதும் உண்டு. ஆனால், இரண்டு கைகளால் ஒரே சமயத்தில் இரண்டு மொழிகளிலும் எழுதும் ஆற்றல் பெற்றிருந்தார் ஜேம்ஸ் கார்பீல்ட் என்பவர். இவர் அமெரிக்காவின் இருபதாவது ஜனாதிபதியாக இருந்தவர். பலருக்குக் கடிதம் எழுதும்போது ஒரே சமயத்தில் லத்தீன் மொழியில் வலதுகையாலும், கிரேக்க மொழியில் இடதுகையாலும் எழுதுவாராம்!*

*- நன்றி: கலைக்கதிர்*

# நினைவாற்றலைப் பெருக்கும் வல்லாரை

- டாக்டர் பி.பாலசுப்பிரமணியன்

**வ**ல்லாரை, கொடியினத்தைச் சார்ந்தது; வல்லாரைக்கு மண்டுகபரணி, மதிவல்லி, பரணி, விவேகவல்லி, சோமவல்லி, சரசுவதி, மகோஷதி, கியுதவனகா எனப் பல பெயர்கள் உண்டு. ஆங்கிலத்தில் இதனை 'இன்டியன் பென்னி வொர்ட்' (Indian Penny Wort Herb) என்பர். இலத்தீனில் இதனை 'ஹைடிரோ கோடில் ஏஷியாடிக்' என்பார்கள். உருது, சமஸ்கிருதத்தில் 'பிரம்மி' எனக் கூறுவர்.

## சிறப்பியல்புகள்

இதன் உருவம், பிறப்பு, தன்மை முதலியவை மிகவும் சிறப்புடையது. புத்தியையும் நினைவாற்றலையும் பெருகச் செய்ய நமது முன்னோர்கள் சில பச்சிலைகளை முன்னரே கண்டுபிடித்திருக்கிறார்கள். வல்லாரை சர்வசாதாரணமாக ஈரத்தரையில் கொடியாகப் படர்ந்து வளரும்; இதன் சுவை முள்ளங்கியிலையின் சுவை போலத் துவர்ப்பாக இருக்கும். இதன் தண்டுகள் லேசாயிருந்தால் சற்று செஞ்சாயலான பச்சையாக இருக்கும். உலர்ந்தால் பசுமை நிறம் மாறித் தெரியும்.

சித்த வைத்தியத்திலும், ஆயுர் வேதத்திலும் இது மருந்தாகவும், காயகல்பமாகவும் பயன்படுகிறது. இதனைப் பற்றிப் பல நூல்களில் பலவிதமாக எழுதி இருக்கிறார்கள். யூனானி முறையில் இதனை விஷக்கடி, தோல் வியாதிகளுக்கு மருந்து செய்து கொடுக்கப்படுகிறது. இதனை சொரி, சிறங்கு, படை, குட்டம், விஷக்கடி, மதுமேகம் போன்ற நோய்களுக்கு மருந்தாகச் செய்து தரலாம். மூளைக்கு வலிமையையும் ஞாபகச் சக்தியையும் தருகிறது; இரத்தத்தைத் தூய்மை செய்யும் குணமும் இதற்கு உண்டு.

பசுவின் பாலில் வேடு கட்டி ஆவி பிடித்து உலர்த்தி, மருந்து செய்து கொடுத்தால், தீய குணங்கள் நீங்கிவிடும். வல்லரையுடன் கூட்டுச் சரக்குகள் சேர்த்து சூர்ணம், நெய், லேகியம், மணப்பாகு, தைலம் முதலியன செய்யலாம்.

## காமாலை உசிதம்

வல்லாரை இலைச்சாறு வராகன் எடை ஒன்று, கீழ்க்காய் நெல்லிச்சாறு வராகன் எடை ஒன்று, பசுவின் பால் அல்லது தயிர் கால் ஆழாக்கு ஆகிய இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து பருகச் செய்யவேண்டும். இவ்விதம் நாள்தோறும் இரண்டு, மூன்று வேளை சாப்பிட்டால் காமாலை நோய்கள் தீரும்.

## வல்லாரை சூர்ணம்

சுத்தி செய்த வல்லாரை சூர்ணத்துடன் வசம்பு கூட்டி சூர்ணம் செய்து காலை, மாலை தினம் இரண்டு வேளைகள் சாப்பிட்டால் புண்கள், தேமல், சொரி, சிரங்கு குணமாகும். நினைவாற்றல் கூடும். இரத்தம் சுத்தமாகும். மருத்துவரின் ஆலோசனைப்படி சாப்பிடவேண்டும்.

## குட்ட நிவாரணச் சூர்ணம்

ஆங்கில மருத்துவர் பலர் வல்லரையைக் குட்ட நோய்க்கு உபயோகித்து நற்பெயர் பெற்றிருக் கிறார்கள். இதனைப் பதம் பண்ணும் முறையாவது :-

இந்த வல்லாரைச் செடியைச் சேகரித்துக் கொடியை நீக்கி இலையை மட்டும் தரித்து ஒரு பக்கம் பரப்பி நிழலில் உலர வைத்து நன்றாக உலர்ந்த பின்பு நேர்மையாய் தூய்மை செய்து, ஒரு புட்டியில் நன்றாய் மூடி வைத்துக்கொள்ள வேண்டும். இதில் ஒரு நேரத்திற்கு 2½ முதல் 4 குன்றிமணி எடை நாளொன்றுக்கு மூன்று வேளை தக்க துணை மருந்தில், அதாவது நெய்யில் அல்லது தக்க இளகத்தில் கொடுக்க வேண்டும். இப்படி கொடுத்து வரும்போது மேற்படித்தூளைப் புண்களில் தூவினாலும் அல்லது உடனே இலையைப் பறித்து சிதைத்து வைத்துக் கட்டினாலும் நன்மை உண்டாகும். இவ்வாறு செய்து சில வாரங்கள் கழிந்தபின், நோயாளி பல விதத்திலும் நலம் பெறுவான். வல்லாரை சூர்ணத்தை உள்ளுக்கு உபயோகம் செய்தால் (30 நாட்கள் தினசரி காலை மாலை) தகுந்த அனுபானத்தினால் கொடுத்தால் தோல் நோய்கள் குணமாகும்.

## கருப்பம் காக்கும் சூர்ணம்

சுத்தி செய்த சுக்கு தூள் 70 கிராமுடன் உலர்ந்த வல்லாரையிலையைத் தூய்மை செய்து 140 கிராம், ஏலரிசி 20 கிராம், மிளகுத்தூள் 15 கிராம், கல்லுப்புத்தூள் 20 கிராம், வாதுமை நெய் அல்லது பசுவின் நெய் 90 கிராம்.

மேற்கண்ட தூள்களை எல்லாம் ஒன்றாய்க் கலந்து வாதுமை நெய் அல்லது பசு நெய் சிறுகச் சிறுக விட்டு நெய்ப்பசை உண்டாக்கி கண்ணாடிப் புட்டியில் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

200 மி.கி. முதல் 500 மி.கிராம் வரை ஒரு வேளைக்குச் சாப்பிட வேண்டும். அதனால் உண்டாகும் பலன்களாவன :

## நோய்கள்

கருப்பத்தில் உள்ள குழந்தை அதிக அறிவும், அதிக நினைவாற்றலும் பெறும் தன்மை உண்டாகும். (மருத்துவரின் ஆலோசனைப்படி, அளவுப்படி தினம் இரு வேளை தரவேண்டும்.) வீண் கவலை நீங்கும், ஆரோக்கியம் தரும், உடல் உறுதி பெறும், மனக்களிப்பும் தரும் காய கல்பமாகப் பயன் தரும்.

## பெருநோய் சூரணம்

சுத்தி செய்த வல்லாரைத் தூள், பரங்கிப் பட்டை சூர்ணத்தூள், வசம்புத்தூள் தனித்தனியே 80 கிராம் சம அளவு எடுத்து, சர்க்கரைத்தூள் 100 கிராம் கலந்து வைத்துக்கொண்டு காலை, மாலை தினசரி இருவேளை 30 நாள் நெய்யில் சாப்பிட்டால் - மேற்படி பெருநோய் குணம் உண்டாகும். மற்றும் கிரந்தி, சிரங்கு, மேகநோய் குணமாகும் இது அனுபவ முறையாகும். ●



'தமிழ்நாடு' என்று பெயர் வைத்திருப்பதற்குக் காரணம் - தமிழை நாடு தமிழ்க் கலாச்சாரத்தை நாடு தமிழ்ப் பண்பை நாடு தமிழ் உணர்ச்சியை நாடு தமிழ் இலக்கியத்தை நாடு தமிழின் உயர்வை நாடு என்பதற்குத்தான். தமிழ்நாடு என்பதை ஒரு நிலத்தின் பெயராகக் கருதாதீர்கள்; நமக்கு நாமே சொல்லிக் கொள்ளும் அறிவுரை என்று கருதுங்கள்.



# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை :**

**மே**ல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம் தேவந்தவாடி கிராமத்தில்,

1. சுமார் 20 ஆண்டுகள் நர்ஸ் குவார்ட்டர்ஸ் சப்சென்டர் மின்இணைப்பு இல்லை.
2. 93-94ல் கட்டி முடிக்கப்பட்ட ஊராட்சி மன்றம் - மின் இணைப்பு இல்லை.
3. பள்ளிக் கட்டடத்திற்குக் கடந்த ஓராண்டாக - மின் இணைப்பு இல்லை.
4. தொலைக்காட்சிப் பெட்டி இதுநாள் வரை வழங்கப் படவில்லை.

மேற்கண்ட குறைகளை நிவர்த்தி செய்யுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

க.மு.தனசேகரன்
வளத்தி வழி, செஞ்சிவட்டம்,
கடலூர் மாவட்டம்.

**தீர்வு :**

**தே**வந்தவாடி கிராமத்தைச் சேர்ந்த திரு.க.மு.தனசேகரன் என்பவர் தெரிவித்துள்ள பிரச்சினைகளுக்குக் கீழ்க் கண்டவாறு அறிக்கையினைச் சமர்ப்பிக்கிறேன்.

தேவந்தவாடி கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் மின்இணைப்பு சுகாதாரத் துறையினரால் மின் இணைப்பு பெற வேண்டியிருப்பதால், சுகாதார ஆய்வாளர் அவர்களுக்கு விரைவில் மின் இணைப்பு பெறவும், மின் இணைப்பு பெறப்படாமைக்கு விளக்கத்தினையும் அளிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது எனப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேவந்தவாடி ஊராட்சியில் ஊராட்சி மன்றக் கட்டடம் ஒயரிங் செய்யப்பட்டுள்ளது. தேவனூர் இளநிலை மின் பொறியாளர் அவர்களுக்கு மின் இணைப்பு விண்ணப்பம் அனுப்பித் தொகையும் செலுத்தப்பட்டுவிட்டது. தேவந்தவாடி ஊராட்சி மன்றத் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டு இம்மாத இறுதிக்குள் மின் இணைப்புப் பெற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேவந்தவாடி ஊராட்சியின் பள்ளிக் கட்டடம் புதியதாகக் கட்டி ஒயரிங் முடிக்கப்பட்டு, தற்போது மின் வாரியத்திற்கு தேவனூர் இளநிலை மின்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பம் அளித்து, அதற்கான தொகையும் செலுத்தப்பட்டுவிட்டது. இம்மாதம் மார்ச்'98க்குள் மின்இணைப்பு பெறப்பட்டுவிடும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேவந்தவாடி ஊராட்சியின் தொலைக்காட்சி மிகவும் பழுதடைந்த காரணத்தால் பழுது நீக்கம் செய்ய திண்டிவனம் தொலைக்காட்சி தொழில்நுட்ப மேற்பார்வையாளர் அவர்களிடம் அனுப்பப்பட்டுள்ளது. முக்கிய உதிரி பாகங்கள் கிடைக்கப்பெறாததால் பழுதுநீக்கம் செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இன்னும் 15 தினங்களுக்குள் பழுதுநீக்கம் செய்து, தொலைக்காட்சிப் பெட்டியினை இயங்கவைக்கிறேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்
மேல்மலையனூர்

**பிரச்சினை :**

**எ**ங்கள் ஊர் ராஜாஜி மாவட்டம் பரமத்தி. வேலூர் வட்டத்தில் ஒரு முக்கியமான ஊர் பரமத்தி. மன்னர் ஆட்சிக் காலத்தில் விஸ்வநாத நாயக்கர் ஆட்சி செய்து வந்துள்ளார். அவர் வாழ்ந்த கோட்டையும், கோட்டையண்ணன் கோவிலும் அவர் கட்டிய கோதண்ட ராமர் கோவிலும் உள்ளது. அந்தக் கோவிலுக்கு அருகில் விக்டோரியா மகாராணியின் சில்வர் ஜூப்லி கட்டடம் மிகச் சிறப்பாகக் கட்டி அதில் அரசு அதிகாரிகள் பயணியர்கள் தங்க வாய்ப்பாக இருந்தது. இக்கட்டடத்தில் தேசியத் தலைவர்கள் பலர் வந்து தங்கி உள்ளனர். குறிப்பாகக் கேரளாவில் முன்னாள் முதல்வர் நம்பூதிரிபாடு, தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜ், தியாகச்சுடர் பஜீவானந்தம், பேறிஞர் அண்ணா, சிலம்புச் செல்வர் ம.பொ.சி, முதல்வர் கலைஞர் இன்னும் நூற்றுக்கணக்கான தலைவர்கள் வந்து தங்கிய இடம் இப்பொழுது பழுதுபட்டு மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. விவரம் அறியாதவர்கள் அந்த இடத்தைக் கழிப்பிடமாக உபயோகித்து வருகிறார்கள். இக்கொடுமையைக் கண்டு சகிக்காமல் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களை அணுகிப் பலமுறை நான் முறையிட்டும் பயன் இல்லை. தற்சமயம் இந்த இடம் பரமத்தி பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டதாக ஆணையாளரும், சேர்மனும் எனது வேண்டு கோளுக்குப் பதில் தந்தனர். ஆகவே உடனடியாக அந்த இடத்தை பழுது பார்த்து மக்களுக்குப் பயன்படும் வகையில் அரசினர் நடவடிக்கை எடுத்து அந்தப் புனிதமான இடத்தின் பெயர் காக்கப்பட வேண்டுகிறேன்.

டாக்டர் ம.அருள்மணி
தலைவர்
தமிழ்நாடு காமராஜ் மக்கள் இயக்கம்
பரமத்தி

**தீர்வு :**

*பரமத்தி பேரூராட்சியைச் சேர்ந்த விக்டோரியா மகாராணியின் சில்வர் ஜூப்ளி கட்டடம் தற்போது பேரூராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கட்டடம் மார்ச்'97 முடிய ஊராட்சி ஒன்றியம் மூலம் பராமரிக்கப்பட்டு வந்தது. அப்போது மிகவும் பழுதடைந்திருந்தது. தற்போது அக்கட்டடம் சுத்தம் செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது எனப் பணிந்து சமர்ப்பித்துக் கொள்கிறேன்.*

*செயல் அலுவலர்*
தேர்வுநிலை பேரூராட்சி
பரமத்தி

**பிரச்சினை :**

கோவை மாவட்டத்திலுள்ள சிறுமுகை எங்கள் ஊராகும். இங்கு 13.3.98 முதல் நாளொன்றுக்கு 4 முதல் 6 மணி நேரம் வரை மின்சாரத் தடை ஏற்படுகிறது. இதனால் எங்களின் முக்கிய அலுவலர்கள் பல பாதிக்கப்படுகின்றன.

எங்களுக்கு ஒரு நாள் விட்டு ஒருநாள் குடிநீர் விநியோகம் என்ற திட்டப்படி குடிநீர் சீராக விடப்படுவதில்லை. மாறாக ஒருநாள் வந்தால் அதற்கு இரண்டுநாள் கழித்து பகலிலோ அல்லது இரவு 12 மணிக்கு மேற்பட்டோதான் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. எனவே - சீரான மின்சார விநியோகமும், குடிநீர் விநியோகமும் எங்களுக்கு கிடைக்கச் செய்து எங்கள் பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*ப.அன்பழகன்*
பொதுமக்கள் சார்பாக
சிறுமுகை, கோவை மாவட்டம்

**தீர்வு :**

*தமிழ்நாடு மின்சாரக் கட்டமைப்பில், மின்சார உற்பத்தியின் அளவைவிட, தேவை மிகுதியாகிவிட்டதால், கடந்த சில நாட்கள் மின்தட்டுப்பாடு இருந்து வந்தது. 20.4.98 ஆம் நாள் முதல் உயர்மின் அழுத்தத் தொழிற் சாலைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு 30% மின்வெட்டு அமல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மற்ற மின்நுகர்வோர்களுக்கு நிலைமை சீரடைந்துள்ளது என்பது தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.*

*மேற்பார்வைப் பொறியாளர்*
கோவை

**பிரச்சினை**

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி வட்டத்தில் உள்ளது, 24 கோட்டுப்பாக்கம் கிராமம். கிராமத்தின் மக்கள் தொகை 3,000-த்தைத் தாண்டியுள்ளது. இங்கு அரசு உயர்பள்ளி, அஞ்சலகம், கிராமியப் பகுதிநேர நூலகம், கால்நடை மருந்தகம், வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆகியவை இருந்தும், நல்ல சாலை வசதி இருந்தும் இதுவரை போக்குவரத்து வசதி குறை பாடகவே உள்ளது. 225 தடம் எண்ணில் செங்கம் - தெள்ளார் இவ்வூர் வழியாக எப்போதாவது வந்தாலும் அதனால் எந்தப் பலனும் இல்லை. தடம் எண்.208 எம். வருகிறது. விடிய வந்து இரவு நிற்கிறது. அதிலும் அதிகமான பலன் இல்லை. ஆகையால் டபிள்யூ 11 நகரப் பேருந்தை 4 நடைகளாவது கோட்டுப்பாக்கம் வரை நீட்டினால் பொதுமக்களுக்கு நன்மை கிடைப்பதுடன் வசூலும் இரட்டிப்பாகும். போக்குவரத்துக் குறையும் நீங்கும்.

*மு.வேதகிரி*
கோட்டுப்பாக்கம்
திருவண்ணாமலை மாவட்டம்



**தீர்வு :**

*கோரிக்கையினை ஆய்வு செய்ததில் கோட்டுப் பாக்கம் கிராமத்திற்கு மாவட்டத் தடங்கள் முறையே 208 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோட்டம் 1 மூலம் 2 நடைகளும் 252 தடத்தின் மூலம் 4 நடைகள் எனவும் ஆக மொத்தம் தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது.*

*மேலும் இத்தடத்தில் தற்போதுள்ள போக்குவரத்து நெரிசலுக்கு இதுவே போதுமானதாகும் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

*பொதுமேலாளர்*
தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம்
வேலூர்

**பிரச்சினை :**

நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம், வெண்மணச்சேரி ஊராட்சியில் சுமார் 6,000 பேர் வாழ்ந்துவருகிறோம். எந்த வசதியும் இல்லாத எங்கள் ஊரில் அடிப்படை வசதியான குடிநீர் வசதிகூட கிடையாது. ஓராண்டிற்குமுன் பக்கத்து ஊராட்சியான திருவாய்மூர் ஊராட்சியில் இருந்து கிணறு தோண்டித் தண்ணீர் எடுக்கப்பட்டு மேல்நிலைத் தொட்டி மூலம் கொடுக்கத் திட்டமிட்டு, அனைத்துப் பணிகளும் முடிந்து சோதனையும் முடிந்துவிட்டது. ஆனால் சோதனை மூலம் வந்த தண்ணீரைத் தவிர அதன்பின் தண்ணீர் வரவில்லை. அதிகாரிகளுக்குப் பல மனுக்கள் அனுப்பியும் எந்த நடவடிக்கையும் இல்லை. எனவே, நாங்கள் குளத்துநீரை குடித்து வருகிறோம். அதனால் எங்களுக்குக் காலரா மற்றும் பல தொற்று வியாதிகள் ஏற்பட்டு மிகவும் துன்பப்படுகிறோம். எனவே தயவு செய்து எங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

***ஊர்ப் பொதுமக்கள்***
**வெண்மணச்சேரி, நாகைமாவட்டம்**



**தீர்வு :**

*வெண்மணச்சேரி ஊராட்சி மக்களுக்குக் குடிநீர் வழங்கத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அமைக்கப்பெற்ற மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி பார்வை 2ல் கண்டுள்ள கடிதப்படி ஊராட்சி வசம் ஒப்படைக்கப் பெற்று அதன் மூலம் தற்போது பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*வி.ஆர்.வேதபுரி, பி.எஸ்.ஸி.,*
வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்)
நாகப்பட்டினம் மாவட்டம்



**பிரச்சினை :**

கரூர் மாவட்டம், தாராபுரம் பிரதான சாலையின் 16 கல் தொலைவில் அமைந்துள்ள பள்ளப்பாளையம் கிராமம் எங்கள் ஊராகும். இங்கும் அதைச் சுற்றியும் சுமார் 20 ஆயிரம் மக்கள் வசித்துவருகிறார்கள். இங்குள்ள அஞ்சல் நிலையத்திலுள்ள பொதுத் தொலைபேசி மூலமாகத்தான் ஏதாவது முக்கிய மற்றும் அவசரப் பிரச்சினைகளுக்கு செய்தி அனுப்பித் தொடர்பு கொண்டிருந்தோம். ஆனால், கடந்த அக்டோபர் மாதம் முதல் இங்கு ஒரு பொதுத் தொலைபேசியும் இயங்குவதில்லை. தீ விபத்து, இரவு நேரங்களில் மகப்பேறு மருத்துவத்திற்குக் கொண்டு செல்ல அவசர ஊர்தி அழைக்க, மற்றும் பல பிரச்சினைகளுக்கும் மக்கள் பொதுத் தொலைபேசி இயங்காததால் மிகவும் அவதிப்படுகின்றனர். எனவே தாங்கள் எங்களின் இந்த பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு (பொது தொலைபேசி இயங்கச் செய்யுமாறு) மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*ஊர்ப் பொதுமக்கள்*
பள்ளப்பாளையம் அஞ்சல்
கரூர் மாவட்டம்

**தீர்வு :**

*கரூர் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் உள்ள பொதுத் தொலைபேசி இயங்காததால் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கடிதம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு காசிப்பாளையம் இணைப்பகத்துடன் தொடர்புடைய தொலைபேசி எண்.85235ஐ 28.4.98 முதல் பள்ளிப்பாளையம் தொலை பேசிக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவ்வெண்ணைப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கரூர் தொலைபேசி இணைப்பகத்தைச் சேர்ந்த கோட்டப் பொறியாளர் தெரிவிக்கின்றார் என்றும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*திரு.சோ.அய்யா இ.ஆ.ப,*
மாவட்ட ஆட்சித்தலைவர்
கரூர் மாவட்டம், கரூர்.

**பிரச்சினை :**

*சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுக்கா, பெத்த நாயக்கன் பாளையம் ஒன்றியத்தைச் சார்ந்த பானியாபுரி (ஊராட்சி) கிராமம் எங்கள் ஊராகும். இங்கு சுமார் 3,000 பேர் உள்ளனர். இந்தக் கிராமத்தில் ஒரு போர்வெல் மோட்டார் (விசைப்பம்பு) இயங்கிவருகிறது. ஆனால் போதிய அளவு போர்வெல்லில் தண்ணீர் இருந்தும், அடிக்கடி குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டுவருகிறது. ஏற்கெனவே போரில் 7.5 (எச்.பி.) குதிரைத் திறன் உள்ள மின்மோட்டார் பொருத்தப் பட்டு இருந்தது. அந்த மோட்டார் பழுது ஆகிவிட்டதால், மாற்று மோட்டார் 5 (எச்.பி) குதிரைத்திறன் கொண்ட மோட்டார் பொருத்தப்பட்டது. அதிலிருந்து நீண்ட நேரம் மோட்டார் இயங்கவேண்டி இருப்பதாலும், தற்போது சில நேரங்களில் மின்சாரத் தடை ஏற்படுவதாலும் குறித்த நேரத்தில் போதிய குடிநீர் சப்ளை செய்ய முடியாத நிலை ஏற்படுவதால், குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. மற்றும் கைப்பம்பு சரியான பராமரிப்பு இல்லாமல் இருந்து வருவதால் மேலும் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட ஏதுவாக அமைந்துள்ளது. ஆகவே எங்கள் ஊருக்குக் குடிநீர்ப் பிரச்சினை தொடர்ந்து இருப்பதால் உடனடியாகப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, மேற்படி குறையைப் போக்க ஆவன செய்யுமாறு மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*எஸ்.எம். பழனிமுத்து*
சமூக சேவகர், பழனியாபுரி
ஆத்தூர்வட்டம், சேலம் மாவட்டம்

**தீர்வு :**

*சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், பழனியாபுரி ஊராட்சி குடிநீர்ப் பற்றாக்குறை தேவையை முன்னிட்டு நடவடிக்கை மேற்கொண்டு உடன் குடிநீர்த் தேவை சரிசெய்யப்பட்டது.*

*கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலரின் உத்திரவின்படி, பழனியாபுரி ஊராட்சி மன்றத் தலைவரிடம் நேரில் அனைத்து கைம்பம்புகளையும் உடன் பழுது நீக்கம்செய்து சரி செய்யப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.*

இனிவரும் காலங்களில் அனைத்துக் கைப்பம்புகளும், மின்மோட்டார்களும் பழுது ஏற்பட்டால் தாமதமின்றி நடவடிக்கை மேற்கொண்டு நிவர்த்திசெய்ய வேண்டுமென அனைத்து ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும், கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் நேரில் அறிவுரை வழங்கப்பட்டது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியம்,
பெத்தநாயக்கன்பாளையம்.

**பிரச்சினை :**

காமராஜர் மாவட்டம், ராஜபாளையம் தாலுக்கா, தளவாய்புரம் கிராமப் பகுதியில் சாயம்போடும் தொழில்கூடங்கள் சுமார் 60க்கு மேல் உள்ளது. இவைகளிலிருந்து வெளியேறும் கெமிக்கல் கழிவுகள் மிகவும் நச்சுத் தன்மை கொண்டவை. இந்தக் கழிவுகள் திறந்த வாய்கால்கள் மூலம் செட்டியார்பட்டிக் கிராமம் தொண்டைமான் குளத்தில் போய்ச் சேர்கிறது. கழிவுநீர் செல்லும் வார்கால் மூடப்படாதவைகளாகத் திறந்த நிலையில் உள்ளன. மேலும், சில இடங்களில் மீன் வாய்க்கால் வழியாகச் செல்கிறது. இந்தப் பகுதிகளில் பன்றிகள் அடைகின்றன. மேலும் கழிவு நீர் குளத்தில் போய்ச் சேர்வதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. அதில் சாகுபடியாகும் உணவுப் பொருள்கள் சுவை குறைவாக உள்ளது. குளங்களில் வளர்க்கப்படும் நவீன ரக மீன்கள் செத்துவிடுகின்றன. கழிவு நீர் செல்லும் பகுகளில் சுமார் 6 கிலோமீட்டர் சுற்றளவுப் பகுதிகளில் குடிநீர்க் கிணறுகளில் நீர் கெட்டுவிடுகிறது. இந்தச் சாயப்பட்டறைக் கழிவுகளில் அரசு மாசுக்கட்டுபாடு விதிகளுக்கு உட்பட்டு அமைக்கப்படவில்லை. இதனால் பல நோய்கள் ஏற்படவும் பொதுமக்களின் சுகாதாரம் பாதிக்கபடவுமான நிலை உள்ளது.

எனவே, சாயப்பட்டறை கெமிக்கல் கழிவுகளை மூடிய குழாய்களின் மூலம் ஊரிலிருந்து தொலைவிற்கு வெளியேற்றி பொதுமக்களின் சுகாதாரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப் பணிவுடன் வேண்டுகிறோம்.

இராஜபாளையம் (மேற்கு)
வட்டார காங்கிரஸ் சேவாதளம்,
சேர்மன்.

**தீர்வு :**

*தளவாய்புரம் மற்றும் செட்டியார்பட்டி கிராமங்கள், இராஜபாளையம் வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் அமைந்துள்ளன. இந்தக் கிராமங்களில் சுமார் 36 சிறிய அளவிலான சாயத் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. இவை அனைத்தும் மனித சக்தியைக் கொண்டு இயக்கப்படுபவை. இயந்திரமாக்கப்படவில்லை.*

*ஒவ்வொரு சாயப்பட்டறைகளிலிருந்தும் சுமார் 5,000 லிட்டர்கள் வரை தொழிற்சாலைக் கழிவு நீரானது உற்பத்தி செய்யப்பட்டுக் கழிவுநீர், கால்வாய் வழியாக வெளியேற்றப்படுகிறது. இந்தத் தொழிற்சாலைகளின் கழிவுநீரானது புகாரில் கூறியவாறு சுமார் 1 கிலோமீட்டர்*



*தொலைவில் அமைந்துள்ள தொண்டைமான் குளத்திற்குத் திறந்த கழிவுநீர் வாய்க்கால் வழியாகச் சுத்திகரிக்கப்படாமல் சென்றடைகின்றது. இத்தொழிற்சாலைகளின் மற்றொரு பகுதியான கழிவுநீரானது சுத்திகரிக்கப்படாமல் சுமார் அரை கிலோமீட்டர் தொலைவில் உள்ள தெப்பக்குளம் குளத்திற்குச் சென்றடைகிறது. மேற்குறிப்பிட்ட குளத்து நீரானது மழைக்காலத்தில் விவசாயத்திற்கு பயன்படுத்தப் பட்டது அறியப்பட்டது.*

*ஏற்கெனவே கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் சாயக்கழிவு நீரின் மாதிரி நீரானது கழிவுநீர்க் கால்வாய் மற்றும் தொன்டைமான் குளத்திற்கு அருகில் உள்ள கிணறு ஆகியவைகளில் இருந்து எடுக்கப் பட்டு வாரியத்தின் ஆய்வகத்தில் பகுப்பாய்வு செய்யப் பட்டது. அந்தக் கிணற்று நீரில் பி.ஓ.டி 35 மி.சி/லி, சி.ஓ.டி. 592 மி.கி./லி மொத்தம் டிஸ்ஸால்வ்டு சாலிட்ஸ் (Total Dissolved Solids) 3022 கி.கி./லி ஆகவும் இருப்பது அறியப்பட்டது. கழிவுநீர்க் கால்வாயில் உள்ள டிஸ்ஸால்வ்டு சாலிட்ஸின் அளவானது 3352 ஆகவும் இருப்பது அறியப்பட்டது.*

*இந்தப் பகுதியில் அமைந்துள்ள சாயப்பட்டறைகளுக்கு வாரியத்தின் அனுமதி பெறாமல் முறையான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்காமல் செயல்பட்டுக் கொண்டிருப்பதால் 1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் முகாந்திரம் கேட்கப் பட்டுள்ளது.*

*வாரியம் இச்சாயப்பட்டறைகளைத் தொடர்ந்து கண்காணித்து இவற்றின் மேல் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

திரு.கோ.ரெங்கசாமி, பி.இஎம்.டெக்.,
உறுப்பினர், செயலர்
தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்

✦ ✦ ✦ ✦



8 ஆம் பக்கத் தொடர்ச்சி

**பணிநிறைவில் மனம்நிறைவு**

நெல்லுக்கு இறைத்தநீர், நெய்வேலிக் காட்டாமணக்குச் செடிகளுக்குப் பாய்ந்து, வண்டலிட்ட பகுதியிலே மண்டியிட்டு, பாதை யறியாது பாழாகிப் போன பழைய கதை - இனித்தொடராது என்று உறுயளித்த முதலமைச்சர், தமது பயணத்தைத் தொடர்ந்து விளைந்த பயன்களையும், எதிர்காலப் பணிகளையும் ஓர் அறிக்கையில் அழகுறத் தெரிவித்தார். தூர்வாரும் பணியில் தொடர்புடைய அனைவருக்கும் நன்றி பாராட்டும் நயத்தக்க நாகரிகத்தின் விளக்கமாய் அது அமைந்தது. அது வருமாறு:

காவிரி டெல்டா பகுதியில் மொத்தம் 14,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாசன ஆதார நீர் வரத்துகளும், வடிகால் ஆதார வாய்க்கால்களும் இருக்கின்றன. இவை அனைத்திலும் 1934-ஆம் ஆண்டு மேட்டூர் அணை திறக்கப்பட்ட காலத்திலிருந்து அவ்வப்போது செய்யப்பட்ட குடிமராமத்து அளவிலான சிறுசிறு தூர் வாரும் பணிகளைத் தவிர பெரும் அளவிற்குத் தூர் வாரும் பணி பல்லாண்டு காலமாக நடத்தப்படவே இல்லை. அப்படி ஓர் தூர்வாரும் பணியை நிறைவேற்ற 154 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. இந்த 14,000 கிலோ மீட்டர் நீர்வரத்து மற்றும் வடிகால் வாய்க்கால்கள் "ஏ" மற்றும் "பி" என இரண்டு வகையாகப் பிரிக்கப்படும். இவை பொதுப்பணித்துறைக்கு உட்பட்டவை ஆகும் மற்றும் "சி", "டி" போன்ற சிறிய வாய்க்கால்கள் வேறு பல்வேறு துறைகளுக்கு உட்பட்டவை. தயாரிக்கப்பட்ட 154 கோடி மதிப்பீட்டு திட்டத்தில், முதல் கட்டமாக கடந்த ஆண்டு 10 கோடி ரூபாய் செலவில் ஆறுகளிலும், வடிகால்களிலும் "ஏ" மற்றும் "பி" பிரிவு பாசன கால்வாய்களிலும் இந்த ஆண்டு 20 கோடி ரூபாய் செலவில் ஆறுகளிலும், வடிகால்களிலும் "ஏ", "பி" போன்ற பாசனக் கால்வாய்களிலும் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டு பெரும்பகுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான தூர்வாரும் திட்டத்தில் மிச்சம் விடுபட்டுள்ள பிரிவுகளின் வேலையும் சில நாட்களில் முடிவடையும் தருவாயில் இருக்கின்றது.

பொதுவாக 154 கோடி ரூபாய் திட்டத்தில் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் 30 கோடி ரூபாய்தான் செலவழிக்க முடிந்திருக்கிறது. ஏனெனில் ஆறுகளிலும், வாய்க்கால்களிலும் தண்ணீர் வராத காலமான ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று மாத காலத்தில் இந்த பணியைத் தொடங்கி நிறைவேற்ற வேண்டும். இந்த ஆண்டு இந்தப் பணிகளுக்கு, திறந்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, மொத்தம் 607, பணிகளில் 508 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகளை 120 ஒப்பந்தக்காரர்கள் முறைப்படி ஒப்பந்தப் புள்ளிகளின் மூலம் ஏற்று நடத்தி வருகிறார்கள். மொத்தம் 1,478 கிலோ மீட்டர் நீளத்தில் 1363 கிலோ மீட்டர் நீளம் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் 99 : நீளம் 115 கிலோ மீட்டர்கள் ஆகும். சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் ஏறத்தாழ 4,000 கிலோமீட்டர் நீளத்திற்கு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதை யொட்டி, மீதமுள்ள 10,000 கிலோமீட்டர் நீளம் நீர்ப்பாசன மற்றும் வடிகால் வாய்க்கால்களில் பணிகள் ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்பட்டு, காவிரி டெல்டப் பகுதியில் முழுமையாக பாசன மற்றும் வடிகால்களை தூர்வாரும் பணி நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பணிகளை ஆர்வமுடனும், அக்கறையுடனும் நிறைவேற்றுவதற்கு அயராது உழைத்துவரும் உள்ளாட்சித் துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மைத்துறை அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும், பொறியாளர்களுக்கும் - நல்லெண்ணத்துடனும் நன்றிப் பெருக்குடனும் இப்பணிகள் நிறைவேற ஆதரவு தரும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் - நிறை குறைகளைச் சுட்டிக்காட்டி இந்த நல்லபணி நடந்திட ஊக்கப்படுத்திய பத்திரிகையாளர்களுக்கும் என் இதயமார்ந்த பாராட்டுக்களையும் நன்றியையும் வழங்கிடக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**பாசன வரலாற்றில் புதிய பொன்னேடு**

*படையெடுப்புகள் பல நடைபெற்ற வேளையிலும் பாதிக்கப்படாதது காவிரிப்பாசனம் என்று வரலாறு சொல்கிறது. அந்தக் காவிரியை மண்ணும், காட்டாமணக்குச் செடிகளும் மறித்து நின்றன என்பது வேடிக்கைதான். ஆனால் இந்த வேடிக்கை வாடிக்கையாகப் போனபோது விவசாயிகள் பட்ட வேதனைகள் கொஞ்சமல்ல. நெல்லுக்கு நீர் வரத்தில்லை, பெரு மழைக்காலத்திலோ, வெள்ளம் பாய்ந்து பயிர்கள் நீரில் மூழ்கும் பெருந்தொல்லை! இந்த நிலை நீடித்திருந்தால், 'சோழநாடு சோறுடைத்து' என்னும் பழமொழியே, கனவாய், பழங்கதையாய் மெல்லப் போயிருக்கும்.*

*294 பொக்லைன், ஜே.சி.பி. புல்டோசர் ஆகிய நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி போர்க்கால அடிப்படையில் நடைபெற்ற தூர்வாரும் பணிகளால், ஆறுகளும் கால்வாய்களும் ஆழமாயின; கரைகள் உயரமாயின.*

*மைசூரிலிருந்து காவிரிப்பூம்பட்டினம் வரை 492 கி.மீ. தொலைவுக்குக் காவிரிக்குக் கரையமைத்தான் சோழமன்னன் என்பது பழைய வரலாறு. பல்லாயிரக்கணக்கான மைல்கள் நீளமுள்ள ஆறுகள், கால்வாய், வடிகால்கள் ஆகியவற்றைத் தூர்வாரிக் கரை உயர்த்தினார் கலைஞர் என்பது இளைய வரலாறு.*

*உன்மையில் இன்று கலைஞரின் திருப்பணி காவிரிப்பாசன வரலாற்றில் ஒருபொன்னேடுதான்.*

**நடப்பாய் வாழி காவிரி!**

*'நடந்தாய் வாழி காவேரி' என்றார் இளங்கோ. அந்த நதி நங்கைக்கு, நடைபாதை அமைத்துத் தந்து 'நடப்பாய் வாழி காவேரி' என்று கல்லணை நீரைத் திறந்துவிட்டார் கலைஞர். இனி, கடைமடை வரையிலும் இடையூறில்லை; 'நடப்பாய் வாழி காவிரி' என நாமும் காவிரிக்கு வாழ்த்திசைக்கின்றோம்.*

| | | |
|---|---|---|
| கவியரசு<br>கண்ணதாசன்<br>பிறந்த நாள் :<br>ஜூன் 24 | **காமராசரை பற்றிக் கவியரசு கண்ணதாசன்** | பெருந்தலைவர்<br>காமராசர்<br>பிறந்த நாள் :<br>ஜூலை 15 |

# காமராசரை பற்றிக் கவியரசு கண்ணதாசன்

**கா**மராசருடைய பிறந்த நாளை நான் நினைவில் வைத்துக் கொண்டது போல், என் பிறந்தநாளையும் அவர் நினைவில் வைத்துக் கொண்டிருந்தார்.

அவருக்கும் எனக்கும் இடையே ஒரு இடைவெளி ஏற்பட்டிருந்த நாளில்கூட, ஜூன் 24ந்தேதி என்றால் முதல் டெலிபோன் அவரிடமிருந்துதான் வரும்.

ஜூலை 15-ந் தேதி என்றால் அவருக்கு முதல் மாலை என்னுடையதாக இருக்கும்.

✦ ✦ ✦



அவர் மறைந்தபின் ஏற்பட்ட சூன்யத்தில், கானல்நீர் போல என் ஆன்மா பறந்துகொண்டிருக்கிறது.

பக்தர்கள் வரும்போதெல்லாம் கோவில் சிலைக்கு முன்னால் கற்பூரம் எரிவதுபோல், பலர் பல விஷயங்களை நினைவுபடுத்தும் போதெல்லாம் என் நெஞ்சம் நெருப்பாய்க் கொதிக்கிறது.

இலட்சக்கணக்கான மக்கள், பேராசிரியர்கள் என்னைப் பாராட்டியிருக் கிறார்கள். அவர்கள் எந்த வார்த்தைகளால் என்னை அலங்கரித்திருக்கிறார்கள் என்பதை நான் மறந்துவிட்டேன்.

ஆனால், 'காட்டுக்கு ராஜா - சிங்கம், கவிதைக்கு ராஜா - கண்ணதாசன்' என என் தலைவன் புகழ்ந்து கூறிய அந்த மொழிகளை ஒரு கல்வெட்டாக என் நெஞ்சம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

நான் 'ராஜா'வோ இல்லையோ, நான் அடிபணியும் ஒரு சக்கரவர்த்தி எனக்குச் சூட்டிய மகுடம் அது.

அவரது புனிதமான இரு கரங்களால் அந்த மணிமகுடம் என் தலையில் வைக்கப்பட்டது.

✦ ✦ ✦

'கண்ணதாசன் கள்ளமில்லாதவன்; எதையும் வெளிப்படையாகச் சொல்லிவிடுகிறான்; வஞ்சகமில்லாத உள்ளம்; அவன் சொன்ன மாதிரிதான் எல்லாம் நடந்துகொண்டிருக்கிறது'. என்று காமராஜ் ஒருவரிடம் சொன்னதை, அந்த நண்பர் எனக்குச் சொன்னபோது, பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டிருக்கிறோம் என்ற மகிழ்ச்சியே எனக்குப் பெரு மகிழ்ச்சியாக இருந்தது.

காலம்பார்த்து அவரது தீபத்தைப் பிரகாசிக்கச் செய்ததில், எனக்கும் பங்குண்டு.



கடைசிவரை அதை மறக்காமல் இருந்தவர் அவர் ஒருவரே.

தமிழகத்தில் தேசியப் பாரம்பரியத்தின் அந்தக் கடைசி மணிமண்டபம் இடிந்து விழுந்தபோது என் உள்ளமும் உடைந்து விழுந்தது.

✦ ✦ ✦

ஜூலை 15 அவர் பிறந்த நாள். என்னைப் பொறுத்தவரை என் குலதேவதையின் திருநாள்.

அந்தத் திருநாளை நான் மௌனமாகக் கொண்டாடுவேன். காலையில் அவரது நினைவாலயத்தில் நான் மலர் மாலையைச் சாத்தப் போவதில்லை.

ஒரு கவிதையை எழுதிக் கற்பூரமாக்கப் போகிறேன்.

கற்பூரமாகிவிட்ட அவனது உடலோடு அந்தக் கவிதையும் சேர்ந்துகொள்ளட்டும்.

பறந்துபோன அவனது ஆவியோடு அந்த எழுத்துக்களும் பறந்து போகட்டும்.

இரண்டும் ஒன்றை ஒன்று சந்திக்கும் போது, அவன் என்னை நினைப்பான்.

- 'பத்திரிகையாளர் நெஞ்சில் காமராஜ்' என்ற நூலிலிருந்து








# இந்தியாவிலேயே முதலிடம் பெறுகின்ற அளவிற்கு, தமிழகத்தை தொழில்மயமான மாநிலமாக உருவாக்குவோம்

- முதலமைச்சர் **கலைஞர்**

**செ**ன்னையை அடுத்த திருப்போரூரில் ஸ்ரீராம் நிறுவனத்தின் வாகன பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை 25.6.98 அன்று மாலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர்' அவர்கள் திறந்து வைத்து ஆற்றிய உரை வருமாறு :

ஸ்ரீராம் வாகன பாகங்கள் தயாரிக்கும் இந்த நிறுவனம் டிட்கோ அதாவது தமிழ்நாடு தொழில்வளர்ச்சி நிறுவனத்தோடு இணைந்து இங்கே 21 கோடி ரூபாய் முதலீட்டில் இணைத் துறையில் வாகன பாகங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை தொடங்க 7.1.98 அன்று ஒப்பந்தம் செய்து கொண்டது.

இந்த புதிய தொழிற்சாலை வாகன பாகங்களான கார்புரேட்டர், சாக் அப்சர்வர், எஞ்சின் எரிபொருள் இன்செக்சன் போன்றவற்றிற்குத் தேவையான நுட்பமான பாகங்களை உற்பத்தி செய்ய இருக்கின்றது. ஸ்ரீராம் நிறுவனம், வாகனங்களுக்கு நிதிஉதவி செய்யும் தொழிலிலும் ஈடுபட்டுள்ளது. இதன் சார்பு நிறுவனமான ராம்பால் நிறுவனம், சூப்பர் சாக் அப்சர்வர், வாகன உதிரி பாகங்கள் செய்யும் தொழிற்சாலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டம் எனக்கு முன்னால் இங்கே உரையாற்றி யவர்கள் குறிப்பிட்டதைப் போல தொடக்கத்தில் ஏறத்தாழ 300 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளை வழங்க இருக்கிறது. காலகட்டத்திலே அது 500 ஆக வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திலே 21 கோடி ரூபாய் முதலீடு என்றாலும், இதிலே டிட்கோவின் பங்கு மூலதனம் 11 சதவீதம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மகிழத்தக்க, பாராட்டத்தக்க, வரவேற்கத்தக்க சாதனை**

இதில் பாராட்டத்தக்க சாதனை என்னவென்றால் இணைத் துறையில் அமைகின்ற இந்த தொழிற்சாலைக்கான ஒப்பந்தம் முடிந்த 7.1.98 முதல் 3 மாத காலத்திற்குள்ளாக கட்டி முடிக்கப் பெற்று, கடந்த ஏப்ரல் திங்களிலே சோதனை உற்பத்தியை இந்தத் தொழிற்சாலை தொடங்கிவிட்டது என்பது மகிழத்தக்க, பாராட்டத்தக்க, வாழ்த்தத்தக்க, வரவேற்கத்தக்க ஒரு சாதனை என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**வாகன உற்பத்தித் தொழிலில் இந்தியாவில் முதன்மை நிலையில் தமிழகம் உள்ளது**

தமிழகத்தில் புதிய-கார் தொழிற்சாலைகள் இன்றைக்கு உருவாகிக்கொண்டிருக்கின்றன. வாகன உற்பத்தித் தொழிலில் இந்தியாவிலேயே முதன்மையான நிலையிலே இன்றைக்கு தமிழகம் இருக்கிறது. தொழில்வளத்தில், தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலேயே மூன்றாவது இடத்திலே இன்றைக்கு இருக்கின்ற தமிழகம் கடந்த காலங்களிலே ஐந்தாவது இடத்திலே இருந்து நல்ல வேளையாக அது ஆறாவது இடத்திற்குப் போகாமல் மூன்றாவது இடத்திற்கு இப்போது கொண்டுவரப்பட்டு உள்ள சூழ்நிலையில், வாகன உற்பத்தித் தொழிலிலே இந்தியாவிலே முதன்மை நிலையிலே தமிழகம் இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

அமெரிக்க நாட்டினுடைய புகழ்பெற்ற ஃபோர்டு நிறுவனம் 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னைக்கு அருகிலே உள்ள

மறைமலை நகரில், ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் மோட்டார் கார்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை நிறுவி இருக்கிறது. அதைவிட வேகமாக அதற்குப் பிறகு தொடங்கப்பட்ட தென்கொரிய நாட்டைச் சேர்ந்த ஹுண்டாய் மோட்டார் நிறுவனம், 2,450 கோடி ரூபாய் செலவில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் கார்கள் உற்பத்தி செய்யும் புதிய தொழிற்சாலையைக் கட்டி முடித்து, சோதனை உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. வரும் அக்டோபர் மாதம் வாணிக நோக்கிலே உற்பத்தியைத் தொடங்க இருக்கிறது. தொடக்க விழாவிற்கான தேதியையும் அவர்கள் என்னிடத்திலே பெற்றிருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*கடலுக்காக அல்ல; கரையிலே இருக்கின்ற மக்களுக்காக அலை காற்றடிக்கிறது. விளக்கு ஏற்றினால், தன் எதிரிலே இருக்கிற இருட்டைப் போக்க ஒளி பயன்படுமே தவிர, அதன் அடியில் இருக்கின்ற நிழலைப் போக்க முடியாது! அதுபோல நம்மிடத்திலே இருக்கின்ற திறமை நமக்காக அல்ல; நாட்டு மக்களுக்காக! அந்த வகையில் நாம் ஒவ்வொருவரும் பணியாற்றுவோம்.*

- அறிஞர் அண்ணா

இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம், ஜப்பான் நாட்டு மிட்சுபிஸி தொழில் நிறுவனத்தோடு இணைந்து - திருவள்ளூர் அருகில் லேன்சர் மாடல் கார்களை உற்பத்தி செய்ய, 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய தொழிற்சாலையை நிறுவி வருகின்றது.

அசோக் லேலண்டு நிறுவனம் ஒசூரில் 630 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டுக்கு 10 ஆயிரம் சரக்கு வாகனங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்திருக்கின்றது.

### கார்களுக்கான உதிரி பாகங்கள் மிகுந்த அளவில் தேவைப்படும் சூழ்நிலை

இப்படி மிகப்பெரிய அளவில் கார்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் தமிழகத்தில் அமைந்து வருவதால், அந்தக் கார்களுக்கான தரமான உதிரி பாகங்கள் மிகுந்த அளவிலே தேவைப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. உதிரிதானே என்று யாரும் அலட்சியப்படுத்தக்கூடாது. உதிரிதான் மிக முக்கியமான ஒன்று.

### பழுதான காரை அண்ணாவுடன் சேர்ந்து தள்ளிச்சென்றேன்

உங்களுக்கு ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல வேண்டுமேயானால் ஒருமுறை பேரறிஞர் அண்ணா அவர்கள் நம்மோடு வாழ்ந்த அந்தக் காலத்தில், காஞ்சிபுரம் சென்றிருந்த நான் விடியற்காலை அண்ணா அவர்களோடு புறப்பட்டு - அண்ணா அவர்களும் நானும் இருவரும் விடியற்காலை 4 அல்லது 5 மணிக்கு காஞ்சிபுரத்தில் இருந்து புறப்பட்டு சென்னைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றோம். அப்பொழுது என்னுடைய வாகன ஓட்டுநர் ரங்கன், என்பவர் காரை ஓட்டிக் கொண்டிருக்கிறார்.

சென்னைக்கு மிக அருகிலே வந்துகொண்டிருந்தபொழுது மிக நல்ல மழை. அந்த மழையில் கார் திடீரென்று நின்றுவிட்டது. நின்றவுடன் எவ்வளவோ முயற்சித்தும் புறப்பட வழியில்லை. பிறகு ஓட்டுநர் கீழே இறங்கி காரின் முன்பகுதி - மட்கார்டு பகுதியைத் திறந்து ஏதேதோ அந்த இயந்திரத்திலே தன்னுடைய திறமையையெல்லாம் காட்டி, பழுது பார்க்கும் வேலையைச் செய்து கொண்டே இருந்தார். கார் நகருவதாக இல்லை. மறுபடியும் முன்பகுதியை மூடிவிட்டு, காரைத் தள்ளச்சொன்னார். அண்ணாவும், நானும் இருவரும் சேர்ந்து அந்தக் காரைத் தள்ளினோம்.

எங்கள் பலத்திற்கு எங்களால் முடிந்த அளவிற்கு காரை வெகுதூரம் தள்ளினோம். அப்பொழுதும் கார் இயங்க மறுத்துவிட்டது. அந்த நேரத்திலே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் எங்கேயோ சூட்டிங்கில் இருந்து வீட்டிற்குத் திரும்பவேண்டியவரை அழைப்பதற்கு அவருடைய கார் மாத்திரம் சென்று கொண்டிருந்தது. அந்தக் கார் டிரைவர் கீழே இறங்கி "என்ன அண்ணா என்ன ஆயிற்று" என்று கேட்டார். "இப்படி ஆகிவிட்டது. கார் புறப்படவில்லை" என்று சொன்னதும், "நான் இந்த காரிலே கொண்டு போய் உங்களை வீட்டிலே விட்டு விடுகிறேன்" என்று சொன்னார். அண்ணா சொன்னார்; "என்னதான் கோளாறு இருக்கிறது பாரேன்" என்றார். அவரும் காரைத் திறந்து பார்த்து எதுவும் புரியாமல் விழித்தார். பிறகு, கடைசியாகப்பார்த்தால் அதிலே உள்ள ஒரு ஸ்குரு, நட்டு ஒன்று காணவில்லை. அது எங்கே என்று தேடிப்பார்த்தால் கிடைக்கவில்லை. அது இருந்தால் இந்நேரம் கார் ஸ்டார்ட் ஆகியிருக்குமே, அது எங்கே என்று தேடிப்பார்த்து, கடைசியாகப் பார்த்தால், அது பழுது பார்த்த அவசரத்தில் என்னுடைய கார் டிரைவர் தன்னுடைய பாக்கெட்டிலேயே போட்டுக் கொண்டுள்ளார். பிறகு, அதை எடுத்து அதைப் போட்டு திருகி கார் புறப்பட்டது. நாங்கள் வீடு வந்து சேர்ந்தோம்.

### உதிரிபாகம் கூட காரில் மிகமுக்கியமானதுதான்

ஆக, ஒரு ஸ்குரு - உதிரிபாகம் ஒரு காரிலே எவ்வளவு முக்கியமானது என்பதற்காக இந்த நிகழ்ச்சியை நான் சொல்லுகின்றேன். அப்படிப்பட்ட உதிரி பாகங்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகளில் ஒன்றாக இது இன்றைக்கு தொடங்கப் பட்டிருக்கின்றது.

### உதிரிபாகங்கள் மூலம் தமிழகத்திற்கு ரூ.8,300 கோடி ஆண்டு வருமானம்

இந்தியாவிலேயே இந்த வாகனங்களுக்கான உதிரிபாகங்கள் தயாரிக்கின்ற தொழில்களில் ஏறக்குறைய 40 சதவீதத்திற்கும் மேல் நிறுவனங்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன. இந்த உதிரிபாகங்கள் செய்யும் தொழிலின் மூலம் தமிழகத்தில் கிடைக்கின்ற ஆண்டு வருவாய் 8,300 கோடி ரூபாய் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

புதிய கார் தொழிற்சாலைகள் தமிழகத்திலே தோன்றுவதன் மூலம், இன்னும் இரண்டு ஆண்டுகளில் இந்த 8,300 கோடி ரூபாய்



"

**இந்தியாவிலேயே வாகனங்களுக்கான உதிரிபாகங்கள் தயாரிக்கின்ற தொழில்களில் ஏறக்குறைய 40 சதவீதத்திற்கும் மேல் நிறுவனங்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன. இந்த உதிரிபாகங்கள் செய்யும் தொழிலின் மூலம் தமிழகத்தில் கிடைக்கின்ற ஆண்டு வருவாய் 8,300 கோடி ரூபாய்**

"

ஏறத்தாழ 16,000 அல்லது 17,000 கோடி ரூபாயாக உயரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அமைந்து வரும் புதிய கார் தொழிற்சாலைகள் நிலையான, தரம் மிக்க உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை இந்த புதிய கார் தொழிற்சாலைகள் ஊக்கப்படுத்துகின்றன. அந்தத் தொழிற்சாலைகளோடு இணைந்து அரசும், அரசினுடைய தொழில் வளர்ச்சி நிறுவனங்களும் ஊக்கப்படுத்த தயாராக உள்ளன.

### ஒளிவுமறைவற்ற அணுகுமுறைகள்

கழக அரசு தமிழகத்திலே தொழில் வளத்தைப் பெருக்கிட பல முயற்சிகளை 96-ஆம் ஆண்டு 4-வது முறையாக பொறுப்புக்கு வந்த பிறகு எடுத்து வருகின்றது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள் குறிப்பாக, ஒற்றை விலைப்புள்ளி முறை முற்றிலும் அகற்றப்பட்டுவிட்டது. உலக அளவில் திறந்த விலைப்புள்ளிகள் கோரப்படுகின்றன. தொழில் நேயத்தோடு ஒளிவுமறைவற்ற அணுகுமுறைகள் (Transparent Approach) பின்பற்றப் படுகின்றன.

முன்பெல்லாம் டிரான்ஸ்பரண்ட் என்பதற்கு பொருளே வேறு. ஒளிவுமறைவில்லாத அப்ரோச் இன்றைக்குத் தொழில் தொடங்கப்படுவதில் ஆர்வமிகுந்த வெளிநாட்டுக்காரர்களுக்கு தமிழகத்தில் தொழிற்சாலைகளை அமைப்பதற்குத் தேவையான அடிப்படை வசதி, இடம், தண்ணீர், மின்சாரம், கடன் வசதி ஆகிய அனைத்திற்கும் வாய்ப்புக்களைத் தருகின்ற பணிகள் இங்கே விரைப்படுத்தப்பட்டுள்ளன.

தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து அனுமதிகளும் - ஒரே இடத்தில் உடனுக்குடன் கிடைக்கும் ஒற்றைச் சாளர முறை (Single Window System) இப்பொழுது நீங்கள் அறிவீர்கள்.

### ஒற்றைச் சாளர முறையை அறிமுகம் செய்த முதல் மாநிலம் தமிழகம்

இந்த ஒற்றைச் சாளர முறையை இந்தியாவிலேயே அறிமுகப்படுத்திய ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்று நான் அல்ல 'பிஸினஸ் டுடே' என்ற பிரபலமான ஏடு பாராட்டி எழுதியிருக்கின்றது. இத்தோடு தொழில் தொடங்க முன் வருவோர்க்கு எந்த நிலையிலும் பிரச்சினையோ, தடையோ ஏற்பட்டாலும் அவர்கள் உடனுக்குடன் அரசை அணுக, சந்திக்க வாய்ப்புக்களும் அளிக்கப்பட்டுள்ளன. இப்பொழுதெல்லாம் தாராளமாக தொழிலதிபர்கள் எங்களைச் சந்திக்கலாம். பிரச்சினைகளை சொல்லலாம். எந்தவிதமான தடையும் கிடையாது. தாராளமாக வரலாம். இலவசமாகவே வரலாம்.

### இரண்டாண்டு காலத்தில் 33 தொழில்களுக்கான ஒப்பந்தங்கள்

கழக அரசின் இத்தகைய அணுகுமுறைகளின் காரணமாக உலகின் பல பகுதிகளில் இருந்தும், இந்தியாவின் பிற மாநிலங்களில் இருந்தும் தொழில் தொடங்க முனைவோர் பலர் வந்து கொண்டேயிருக்கின்றார்கள்.

33 புதிய தொழில்களுக்கான ஒப்பந்தங்கள் இந்த இரண்டாண்டுக் காலத்திலே ஏற்பட்டிருக்கின்றன. அந்த ஒப்பந்தங்கள் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் பல வெளிநாட்டுத் தொழில்நுட்பங்கள், தமிழக தொழில்துறையின் மேம்பாட்டிற்காக ஈர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வளர்ந்து வருகின்ற இந்தத் தொழில் மேலும் மேலும் மேம்பாடு காண்பதற்காகவும், செம்மையான அளவிலே இந்தத் தொழிற்சாலைகள் வளருவதற்காகவும் தமிழகம் முழுவதும் எப்படி இங்கே காஞ்சிபுரம் மாவட்டத்தின் ஆட்சித்தலைவர், சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல காஞ்சிபுரம் மாவட்டத்திலே மாத்திரமல்லாமல் தமிழகம் முழுவதும் தொழில் பூங்காக்கள் உருவாக்கப்பட்டு, தமிழகம் தொழில்மயமான ஒரு மாநிலம் என்பதையும், இந்தியாவிலேயே முதலிடம் பெறுகின்ற அளவிற்கு, அந்த நல்ல வாய்ப்பினை ஏற்படுத்த இதைப் போன்ற நிறுவனங்கள் சிறிய அளவிலே இன்றைக்கு தோன்றினாலும் கூட சிறுகக் கட்டி பெருக வாழ் என்பதைப் போல, பெரும் அளவிலே இவைகள் விரிவடைந்து நல்ல முறையிலே இயங்க வேண்டும் என்ற என்னுடைய இனிய வாழ்த்துக்களை, இதயமார்ந்த வாழ்த்துக்களை நிறுவனத்தாருக்கு தெரிவித்து, அவர்கள் சொன்னார்கள் இன்னும் பல தொழிற்சாலைகளை நான் அடிக்கல் நாட்ட வேண்டும், திறந்து வைக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். அதிலே எந்தவிதமான சந்தேகமும் உங்களுக்குத் தேவையில்லை. அடிக்கல் நாட்டுவேன், திறந்து வைப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

• • •

# ஆப்டிகல் பைபர் கேபிள் தொழிற்சாலை

சென்னையை அடுத்த மறைமலை நகரில் 24.6.98 அன்று 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு டெலிகம்யூனிகேஷன்ஸ் லிமிடெட் சார்பில் ஆப்டிகல் பைபர் கேபிள் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை:

இன்று தமிழ்நாடு டெலி கம்யூனிகேஷன்ஸ் லிமிடெட் சார்பில் ஆப்டிகல் பைபர் கேபிள் தொழிற்சாலையின் அடிக்கல் நாட்டு விழாவினை உங்களுடைய இனிய வாழ்த்துக்களோடு நடத்துவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் சொக்கலிங்கம் குறிப்பிட்டதைப்போல் இந்த ஆட்சியினுடைய காலத்தில்தான் மறைமலைநகர் உருவாக்கப்பட்டது. காடுமேடாகக் கிடந்த இந்த இடத்தைப் பண்படுத்தி, சென்னையினுடைய விரிவாக்கப் பகுதியாகவும் - தொழில்கள் வளருவதற்கு ஏற்ற தகுதியுடைய நிலமாகவும் இந்தப் பூமி மாற்றப்பட்டு - மறைமலைநகர் உருவாக்கப்பட்டு இன்றைய தினம் பல்வேறு தொழிற்சாலைகள் அமைவதற்கு வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இங்கே மறைமலைநகர் உருவான காரணத்தினாலேதான் 1,800 கோடி ரூபாய் முதலீட்டில் போர்டு கார் தொழிற்சாலை அமைத்திடவும், ஏறத்தாழ 600 கோடி ரூபாய் முதலீட்டில் 35 சிறிய, பெரிய தொழிற்சாலைகள் அமைந்திடவும் இன்றைக்கு 24 கோடி ரூபாய் முதலீட்டில் இந்த ஆப்டிகல் பைபர் கேபிள் தொழிற்சாலை அமைந்திடவுமான ஒரு சூழ்நிலை - வாய்ப்பு உருவாகியிருக்கின்றது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

### தமிழகத்தில் மிகச் சிறப்பாக செயல்படும் கார் தொழிற்சாலைகள்

கார் தொழிற்சாலை இன்றைக்கு இந்தியாவிலே, தமிழகத்திலே மிகச் சிறப்பான முறையிலே செயல்படுகின்றது என்பதற்கு சான்றாக இங்கே உருவாகின்ற போர்டு கம்பெனியின் கார் தொழிற்சாலையும், இதைவிட மிக வேகமாக, விரைவாக உருவாகிக் கொண்டிருக்கின்ற - திருப்பெரும்புதூரில், இருங்காட்டுக்கோட்டையில் உருவாகிக் கொண்டிருக்கின்ற ஹூண்டாய் கார் தொழிற்சாலையும் சான்றாக விளங்குகின்றன.

நான்காவது முறையாக, நான் 1996 ஆம் ஆண்டு கழக அரசில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது தொழிற் கொள்கையின் அடிப்படை நோக்கங்கள் சில வெளியிடப்பட்டன.

அவை :- இந்தியாவின் தொழில் மயமான மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை மீண்டும் அடைதல் வேண்டும். இந்தியா மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விரும்பும் இடமாக, தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும்; தொழில் முனைவோருக்கு உலகத் தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளைத் திட்டமிட்டு ஏற்படுத்த வேண்டும். தொழில் முதலீடுகளுக்குத் தடையை நீக்கி, விதிகளையும் நடைமுறைகளையும் எளிமையாக்க வேண்டும்; சுற்றுப்புற சூழலைப் பாதிக்காத வகையில் முன்னேற்றப் பணிகளை முடுக்கி விட வேண்டும். மிக முக்கியமாக ஒளிவு மறைவில்லாத வெளிப்படையான அணுகுமுறையுடன் முதலீட்டாளர்கள் விரும்பும் நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். மாநிலத்திலே உள்ள அளப்பரிய மனித சக்தியை தொழில் வளர்ச்சி ஏற்படுத்துவதற்கு உகந்தவாறு பயன்படுத்த வேண்டும். இவற்றின் அடிப்படையில், தொழில் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் மின் சக்தியை அதிக, அளவில் உருவாக்கி, அதை நல்ல முறையில் பகிர்ந்தளிக்கவும், சாலைகளை மேம்படுத்தவும், நவீன தகவல் தொடர்பு வசதிகளை ஏற்படுத்தவும், புதிய துறைமுகங்களை உருவாக்குகின்ற முயற்சிகளில் முயன்று ஈடுபடவும், இயங்கும் துறைமுகங்களை மேம்படுத்தவும், தொழில் பயிற்சி வசதிகளைச் செம்மைப்படுத்தவும், அகல ரெயில் பாதைப் பணிகளைத் துரிதப்படுத்தவும், ஆகிய இந்த மிக மிக முக்கியமான தேவைகளில் எல்லாம் தீவிரமான கவனத்தை இந்த அரசு செலுத்தத் தொடங்கி அதிலே முழு வெற்றியைப் பெறாவிட்டாலும் பெரும் வெற்றியைப் பெற்றுக் கொண்டிருக்கின்றது.




### ஏற்றுமதியில் 2 ஆண்டில் நிகழ்ந்த சாதனைகள்

தமிழகத்திலே உற்பத்தியாகும் பல்வேறு பொருட்கள் வெளிநாடுகளுக்கு இன்றைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த ஏற்றுமதியில் கடந்த இரண்டாண்டுகளில் - இந்த ஆட்சியில் மிகப்பெரிய சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. 1991-92இல் கடந்த ஆட்சியில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு 6 ஆயிரத்து 781 கோடி ரூபாய். 96-97ல் இந்த அரசு அமைந்த பிறகு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ.18,500 கோடி. 97-98 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு 20 ஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டி சாதனை படைக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

### அகில இந்திய அளவில் தமிழகத்திற்கான பெருமை

தமிழகத்தின் இந்த ஏற்றுமதி, அகில இந்திய அளவிலான ஏற்றுமதியில் 17 சதவிகிதம் என்பது தமிழகம் பெருமைப்படத்தக்க ஒரு செய்தியாகும்.

அரசு கடந்த இரண்டாண்டுகளாக உருவாக்கி வரும் புதிய தொழில் வளாகங்களைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கெனவே பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு நான் அந்தப் பொறுப்பை ஏற்ற நிலையில் பல தொழில் வளாகங்களை தமிழகத்திலே தொடங்கிட முயற்சி மேற்கொண்டு ராணிப்பேட்டை, ஓசூர் போன்ற இடங்களில் பெரும் அளவில் தொழில் வளாகங்கள் உருவானது உங்களுக்குத் தெரியும்.

அதற்குப் பிறகு வேறு பல இடங்களில் ஓசூரிலேயே இரண்டாவது கட்டம், ராணிப்பேட்டையில் இரண்டாவது, மூன்றாவது கட்ட தொழில் வளாகங்கள், அதைப்போல ஈரோடு மாவட்டத்தில், வேறு சில மாவட்டங்களில் பல தொழில் வளாகங்கள் உருவாகின.

இப்பொழுது புதிதாக இந்த இரண்டாண்டு காலத்திலே உருவான தொழில் வளாகங்களைப் பற்றி மாத்திரம் இப்பொழுது குறிப்பிட விரும்புகிறேன்.

திருப்பெரும்புதூரில் 2,469 ஏக்கர் பரப்பளவில், தொழில் வளாகம், இருங்காட்டுக்கோட்டையில் 1,829 ஏக்கர் பரப்பளவில் தொழில் வளாகம்; செய்யாறில் 600 ஏக்கர் பரப்பளவில் தொழில் வளாகம்; நெமிலியில் 2,429 ஏக்கர் பரப்பளவில் தொழில் வளாகம்; வடமங்கலத்தில் 1,408 ஏக்கர் பரப்பளவில் தொழில் வளாகம்; கடலூர் மாவட்டம், சிலம்பிமங்கலத்தில் தோல் பதனிடும் தொழில் வளாகம் 300 ஏக்கர் பரப்பளவில்; மாமண்டூர் - பழமத்தூரில் 860 ஏக்கர் பரப்பளவில் தொழில் வளாகம்; காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் 2,043 ஏக்கர் பரப்பளவில் தொழில் வளாகம்; வரதராஜபுரத்தில் 1,989 ஏக்கர் பரப்பளவில் தொழில் வளாகம் என்று கடந்த இரண்டாண்டுகளாக இந்த அரசு புதிய தொழில் வளாகங்களை அமைக்கும் முயற்சியிலே மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

உங்களுக்கு நான் சொல்ல வேண்டுமேயானால், ஒவ்வொரு நாளும் நான் கையெழுத்திடுகின்ற கோப்புகளில் பத்து அல்லது பதினைந்து கோப்புகளாவது ஒவ்வொரு தொழில் வளாகத்திற்கும் நிலம் கையகப்படுத்துகின்ற பணிக்கு நிதி ஒதுக்குகின்ற ஆணையிடுகின்ற கோப்புகள்தான் என்பதை நான் மிகுந்த பூரிப்போடு உங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

இந்தத் தமிழ்நாடு டெலி கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் - தமிழ்நாடு அரசின் டிட்கோவும், இந்திய அரசு நிறுவனமான டெலிகம்யூனிகேஷன்ஸ் கன்சல்டன்ட்ஸ் இந்தியா லிமிடெட் (டி.சி.ஐ.எல்.) நிறுவனமும் இணைந்த கூட்டு முயற்சியில் 1988-ஆம் ஆண்டில் உருவாக்கிய நிறுவனமாகும். தொலைத் தொடர்பு கேபிள்களை - கம்பிகளை உருவாக்குவதற்கென திட்டமிடப்பட்ட நிறுவனத்திற்காக 1989-90ஆம் ஆண்டில் கழக அரசு காலத்தில் - மறைமலை நகரில் பத்து ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 'எஸ்ஸெக்ஸ் குரூப்' எனப்படும் அமெரிக்க நிறுவனத்தின் கூட்டு முயற்சியோடு தொழிற்சாலை அமைக்கப்பட்டு செயல்படத் தொடங்கியது.

இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் அனைத்தும் தொலைத் தொடர்புத் துறையிலேயே பயன்படுத்தப்படுகின்றன. சிறந்த முறையில் தரமான பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் "ஐ.எஸ்.ஓ.9002" தரச் சான்றிதழ் இந்தத் தொழிற்சாலைக்கு கடந்த மார்ச்

மாதத்திலே வழங்கப்பட்டுள்ளது. 97-98இல் இந்த நிறுவனத்தின் வருமானம் சுமார் 42 கோடி ரூபாய். இதன் மூலம் கடந்த ஆண்டுகளில் இந்தத் தொழிற்சாலைக்கு ஏற்பட்டுவந்த நட்டம் முழுவதும் நேர் செய்யப்பட்டதோடு, ஒரு கோடி ரூபாய் அளவிற்கு நிகர இலாபத்தையும் இந்த நிறுவனம் ஈட்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது இந்தத் தமிழ்நாடு டெலிகம்யூனிகேஷன்ஸ் லிமிடெட் நிறுவனம் தொலைத் தொடர்பு கம்பிகள் தவிர, ஜப்பானைச் சேர்ந்த பியூஜிகுரா லிமிடெட் நிறுவனத்தோடு இணைந்து கண்ணாடி நுண்ணிழைக் கம்பிகளைத் தயாரிக்கும் - அதாவது ஆப்டிகல் பைபர் கேபிள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்கிறது. இத்தொழிற்சாலை அமைப்பதற்காக பியூஜிகுரா லிமிடெட் நிறுவனத்துடனான கூட்டு முயற்சி ஒப்பந்தம் 1996-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2ஆம் நாள் கையெழுத்திடப்பட்டது. சென்னையிலிருந்து 46 கிலோ மீட்டர் தொலைவில் ஜி.எஸ்.டி. சாலையில் மறைமலைநகர் தொழிற்பேட்டை வளாகத்தில் போர்டு மோட்டார் தொழிற்சாலைக்கு அருகில் இத்தொழிற்சாலைக்காக 10 ஏக்கர் நிலம் தமிழ்நாடு டெலிகம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலை - நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைகிறது. கடந்த மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட முறையான டெண்டர் நடைமுறைகளின் மூலம், உலகிலேயே ஆப்டிகல் பைபர் கேபிள் கம்பி உற்பத்தித் துறையில் முன்னோடி நிறுவனமாக விளங்கும், பின்லாந்து நாட்டைச் சேர்ந்த 'நெக்ஸ்ட்ரோம் டெக்னாலஜி' நிறுவனத்திடமிருந்து இத்தொழிற்சாலைக்குத் தேவையான தளவாடங்களைப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டின் இறுதியில் அதாவது நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் அந்தத் தளவாடங்கள் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 99-ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உற்பத்தி தொடங்க திட்டம்

ஈரோட்டைச் சேர்ந்த ஆர்.பீ.பீ.கன்ஸ்டிரக்ஷன்ஸ் இஞ்சினீயரிங் காண்ட்ராக்டர்ஸ் நிறுவனத்திடம் இந்தத் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் ஒப்படைக்கப்பட்டு, இன்றைய விழாவில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலை 99-ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உற்பத்தியைத் தொடங்குவதற்கு திட்டமிட்டுள்ளது. இத்தொழிற்சாலை 180 தொழிலாளர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பையும், 250 தொழிலாளர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் வழங்கும்.

கண்ணாடி நுண்ணிழைகளுக்குள் செலுத்தப்படும் லேசர் ஒளிக்கற்றை, எந்தவிதமான சேதமும் இல்லாமல் நெடுந்தூரம் பயணம் செய்கிறது. செய்தி விவரங்கள் பற்றிய சைகைகளால் தீவிரமடையும் இந்த ஒளியானது தொலைதூரத்தில் பெறப்பட்டு, பல மடங்கு ஆக்கப்பட்ட பின்னர் மீண்டும் ஒளி, ஒலி முதலிய வடிவிலான செய்திகளாக மாற்றப்படுகிறது. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் மூலப்பொருளான சிலிகான் எனப்படும் மணல் தமிழகத்தில் பெருமளவில் கிடைப்பதால் இந்தக் கண்ணாடி நுண்ணிழைத் தொழிலுக்கு நல்ல வாய்ப்பு உள்ளது.

நகரங்களுக்கு இடையேயான தொலைத் தொடர்புகளில் (நெட்வொர்க்) இப்படிப்பட்ட கண்ணாடி நுண்ணிழைக் கம்பிகள், ஏற்கெனவே தொலைத் தொடர்புத் துறையினரால் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள முக்கிய மாவட்டத் தலைநகரங்கள் இந்த கண்ணாடி நுண்ணிழைக் கம்பிகளால் இணைக்கப்பட்டுள்ளன. கண்ணாடி நுண்ணிழைக் கம்பிகள் தொலைத் தொடர்பு பணிகளில் மென்மேலும் பயன்படுத்தப்படும் சாத்தியக் கூறுகள் உள்ளன. ஏனென்றால், தொலைத் தொடர்புத் துறையில் இறுதியில் உள்ள 500 மீட்டர் தூரத்திற்கு மட்டுமே செப்புக் கம்பிகளைப் பயன்படுத்த வேண்டுமென்ற கட்டுப்பாடு உள்ளதால், இந்தக் கண்ணாடி நுண்ணிழைக் கம்பிகளின் தேவை மிக அதிகமாக உள்ளது. எனவே இதன் உற்பத்தித் துறையில் தனியார் நிறுவனங்கள் மிகுந்த ஆர்வத்துடன் நுழைகின்றன.

புதிய உத்திகளான இண்டெர்நெட், ஐ.எஸ்.டி.என், ஈ.டி.ஐ., மின்னணு வர்த்தகம் போன்றவற்றில் தகவல் அளிப்பதற்குத் தேவையான உன்னதமான சாதனமாக இந்தக் கேபிள்கள் பயன்படுகின்றன. எனவே, கண்ணாடி நுண்ணிழைக் கம்பிகளின் தேவை நமது நாட்டில் அதிகரிக்கும் வாய்ப்பு நிறைய உள்ளது. இந்தத் தேவையை வெற்றிகரமாக சந்திக்கவும் நிறைவேற்றவும் இந்தத் தொழிற்சாலை உதவும் என்று நான் நம்புகிறேன்.

எனவே இத்தகைய அரிய பல்வேறு பயன்களைத் தரத்தக்க இந்தத் தொழிற்சாலையை நாம் தொடங்குகிறோம். தொழிற்சாலையைத் தொடங்குகிறோம் என்று சொல்வதை விட தொழிற்சாலை வருவதற்கான அடிக்கல்லை நாட்டுகிறோம். எப்பொழுதுமே என்னை அழைக்கும்போது, அடிக்கல் நாட்டு விழாவென்றால் நான் உடனடியாக ஒப்புதல் தருவதில்லை. ஏனென்றால் அமைச்சர்கள் நாட்டிய பல அடிக்கற்கள் அப்படியே நின்று கொண்டிருக்கின்ற காட்சியை நாம் பல இடங்களில் காணுகிறோம். இந்தப் பக்கம் வருவோர் போவேரெல்லாம் அது யார் நாட்டிய அடிக்கல் என்று கேட்டு - அடிக்கல் வைத்தவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் - அதிலே இருக்கின்ற பெயரைப் பார்த்துவிட்டு - இவர் நாட்டிய அடிக்கல்லா? அது அப்படித்தான் என்று அடிக்கல்லை நாட்டியவரைத் திட்டிக்கொண்டு போவார்கள். அந்தச் சாபம் எனக்குக் கிடைக்கக்கூடாது என்பதற்காகவே பெரும்பாலும் அடிக்கல் நாட்டு விழாக்களை ஏற்றுக் கொள்வதில்லை.

ஆனால் ஒரு நம்பிக்கை, இன்றைக்கு அடிக்கல் நாட்டுகின்றவர்கள் வெகு விரைவிலே தொழிற்சாலையைக் கட்டிமுடித்து, இதன் திறப்பு விழாவிற்கு என்னை அழைப்பார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த அடிக்கல்லை நாட்டியிருக்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன். ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
[illegible] தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் [illegible] சாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906

217982

